# தாய்வீடு




THAIVEEDU NOVEMBER 2020 நவம்பர் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

ISSN 2369-3657




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
suren@bonafidemortgage.ca,
Office. 416-548-7475 Fax: 416-548-7496
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 456
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION «
REAL ESTATE «
FAMILY «
CORPORATE «
EMPLOYMENT «
WILLS & ESTATE «
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

RE/MAX ROYAL PROPERTIES
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905 209 8080
Dir. 416.803.7344
www.reon.ca

விசேட சலுகை விலையில்
SAVE UP TO $1350
SMART HOME MONITORING
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com
ROGERS

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

www.inayam.net
தகவல் விளக்கம்
எழுசி நிகழ்வுகள்
மரண சடங்கு நிகழ்வுகள்
இணையம் மூலமாக
தெரிப்படுத்துங்கள்.
உங்களுக்கு அருகாமான
இடம், காலம், நேரங்களில் எனை
நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளவை
எனைத்தை முகப்புயில்
அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை
நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
முகப்புயில் inayam.net இல்
பதிவு செய்துகொள்வதன் மூலம்
எனை நிகழ்வுகளோடு போட்டிகள்
உருவாக்குவதைத் தவிர்த்துக்
கொள்ளுங்கள்.
உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக
நடந்தேறுவதற்கு மகத்தும்
மக்களின் அனுகூலம் முக்கியமானது.
இதைக் கருத்திற் கொண்டு
உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு
தளம் inayam.net
முயற்சி செய்யுங்கள்!
முற்றிலும் இலவசம்
inayam
416-400-6406
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

MLT
RENTALS FOR HOUSEPARTY
416-625-1826
647-955-1721
Chair, Round Table, Tent, Square Table
Cake Table & Etc.

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள்
வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu Sales Representative
Cell 416-450-6833
Home Life Top Star
Realty Inc. Brokerage
PHONE 905-209-1400 FAX 905-209-1403

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Uthayan Iyampillai
Sales Representative
Dir. : 416-827-1366
E-Mail : iuk2410@gmail.com
Website : www.iyamhomes.com
Century 21
Century 21 Green Realty Inc.,
Each Office Independently Owned & Operated
Off : 905-565-9565 Fax : 905-565-9522
6980 Maritz Dr. Unit 8, Mississauga ON. L5W 1Z3

Nadodi
EVENTS & TOURISM (India)
இந்தியாவில் உங்கள் இல்லதிருமணநிகழ்வு மற்றும் அனைத்து சுபநிகழ்வு சம்மந்தமான தேவைகள்
உல்லாசசுற்றுலா ஆன்மீகசுற்றுலா! மருத்துவ உதவிகள் வழி காட்டல்கள்
அனைத்துவிதமானவசதிகளுடன் கூடியதங்குமிடம் மற்றும் வாகனவசதிகள்
இவை அனைத்தும் உங்கள் நிதிநிலைக்குஏற்றாற் போல்
மிகசிறந்தமுறையில் செய்துதரப்படும்.
உங்கள் தேவைகள் அனைத்தும் எங்கள் சேவைகளில்
மிளிரட்டும்
- Thusiyanthan K
+91 9677089577
+91 9941030100
- nadodiind@gmail.com

நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க...
வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள அழையுங்கள்
தம்பி பிரபா (416) 645 3027
அதிகுறைந்த வட்டி வீதத்தில் ஆரம்பித்து
over $1 Million
வரை பெற்றுக்கொள்ளலாம்
TD Canada Trust
NATIONAL BANK
Manulife Bank
ICICI Bank
Scotiabank
B2B BANK
HomeEquity Bank
EQUITABLE BANK
MATRIX MORTGAGE GOLOBAL LIC# 11108

## ரொறன்ரோவில் தமிழர் பண்பாட்டு மையம்

ரொறன்ரோவில் தமிழர் பண்பாட்டு மையம் ஒன்று உருவாக இருக்கிறது என்ற செய்தி பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழர்கள் ரொறன்ரோவில் வலுவான இனமாக வேரூன்றி முப்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், எமக்கானதொரு பண்பாட்டு மையத்தை உருவாக்க வேண்டும் என்ற தொடர்முயற்சி இப்போது வெற்றி பெற்றிருக்கின்றது.

பலவினங்கள் கூடிவாழுமொரு வாழ்புலக் கட்டமைப்பில் ஒவ்வொரு சமூகமும் தனக்கான தனித்துவமான பண்பாட்டு மரபுகளையும் தாய்மொழியையும் பேண வேண்டியதாக இருக்கின்றது. அனைத்து இனங்களுக்கும் பொதுவான ஒரு தேசியப் பண்பாடு நிலவும் கனடா போன்ற வாழ்புலங்களின் பன்முகப் பண்பாட்டுத்தளத்தில் இவ்வாறான முன்னெடுப்பு மிகவும் இன்றியமையாதது.

தமிழருக்கு முன்னர் குடியேறிய பல இனத்தவரும் ஒன்றுக்கு மேற்பட்ட வலுவான பண்பாட்டு மையங்களை நிறுவியுள்ளனர்.

பன்முகப் பண்பாட்டுத்தளங்களில் ஓரினத்தின் அடையாளங்களைப் பேணும் நோக்குடன் அமைகின்ற பண்பாட்டு மையங்கள் எத்துணை பயனை நல்கும் என்பதைச் சுருக்கமாக நோக்குவோம்.

நாம் சமூகம்சார் தேவைகளை முன்னிட்டு அவ்வப்போது கூடுவதற்கானதொரு நிரந்தரமான இடத்தைப் பெறுகின்றோம். சமூகப்பயன் விளைவிக்கவல்ல நிகழ்வுகளைத் திட்டமிடுவதற்கும் நிகழ்வுகளை நடத்துவதற்குமான வலுவான தளமாக இது அமைகின்றது.

நிரந்தரமான நூலகம் ஒன்றை அமைத்து, எமது தாயக, புலம்பெயர் வரலாற்று ஆவணங்களைப் பேணிக்காத்து, தலைமுறைதோறும் வரலாற்றைக் கற்றுக்கொடுக்க முடியும்.

தமிழர், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய மூலவளங்களை ஆய்வு செய்வோர் பெற்றுக்கொள்வதற்காகச் சேகரித்து வைத்துக்கொள்ள முடியும்.

புலம்பெயர்ந்தோர் வரலாற்றைத் துல்லியமான வரலாற்றுப் பதிவுகளாக்கிப் பார்வையாளர்களுக்குரிய காட்சிக்கூடங்களை உருவாக்க முடியும்.

எமது பண்பாடு, மொழி, கலை என்பவற்றைப் புலம்பெயர்ந்தோருக்கே உரித்தான வகையில் கற்பிக்கும் புதிய நெறிகளை உருவாக்கி, புதிய தலைமுறையினர் எமது இனத்தின் வேர்களை அறிவதற்குரிய வாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

பிற நாடுகளில் வாழும் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணி, பண்பாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துதல் போன்ற பயன்மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

கனடாவில் வாழும் இனங்களின் தனித்துவத்தைப் பேணும் நோக்கில், அவர்களுக்காக வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற கனடாவின் பல்பண்பாட்டுக் கொள்கைக்கிணங்க இந்த நிலத்தை அரச அங்கீகாரத்துடன் மாநகரசபை வழங்கியுள்ளது.

பண்பாட்டு மையத்தை அமைப்பதற்கான அனைத்துச் செலவுகளையும் அரசு வழங்கப்போவதில்லை. கணிசமாக பங்கினை சமூகமே வழங்க வேண்டும். இதற்கு கருத்தொருமித்த சமூக இணைவு மிக முதன்மையானது.

இது எமக்குக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு. இதைப் பெரும்பயன் தரும் தளமாக மாற்றிக்கொள்வது சமூகத்தின் கைகளிலேயே இருக்கின்றது.

பண்பாட்டு மையத்துக்கான நிலத்தைப் பெறுவதில் பங்காற்றிய, தொடர்ந்தும் பல வழிகளிலும் பங்காற்றுகின்ற அனைவருக்கும் தாய்வீடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

■ ■ ■

முகப்பு ஓவியம்: ஜீவா


Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), பிருந்தாயினி(இலங்கை), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து). எஸ். தர்மதாஸ் - செல்வன் (இலங்கை),

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), சர்வேசன், துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com


Printed on recycled paper

# இலங்கையில் மீண்டுமொரு அரசியல்யாப்பு



- அ. கணபதிப்பிள்ளை

அரசியல் யாப்பின் 20வது சீர்திருத்தத்தினை ஒக்ரோபர் 22ம் திகதி மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளோடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

20வது சீர்திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் அதனை நீக்கவென வீதியிலிறங்கிப் போராடவேண்டிய காலம் வெகு தூரத்திலில்லை என்று எதிரணியினரால் எச்சரிக்கை விடப்பட்டாலும் வீதியிலிறங்கிப் போராட இனிவருஞ் சட்டங்கள் அனுமதிக்குமா என்பதற்கு ஆக்கப்படவிருக்கும் புதிய அரசியற்றிட்டம் பதில் சொல்லக் காத்திருக்கிறது.




## அமெரிக்க அதிபர் தேர்தல் - 2020

- பொன்னையா விவேகானந்தன்

நவம்பர் மாதம் 3ம் நாள் அமெரிக்க அதிபர் தேர்தல்.



## சாதிக் கோயில்களும் நவீன தீண்டாமைகளும்

- சுலோச்சனா

வேகமாக வளர்ந்துவரும் சாதிய ஒடுக்குமுறை.



## மத்தியகால இலங்கையில் பௌத்த மடாலயங்களும் சொத்துடைமை உறவுகளும்

- பேராசிரியர் அமரதாச லியனகமகே
தமிழில்: க. சண்முலிங்கம்.

ஒரு சிற்றரசின் நிலையை ஒத்தனவாய் மடாலயங்கள் இருந்தன.



## சித்தர்களின் சீனத் தொடர்பு பற்றிய செய்திகளின் நம்பகத்தன்மை

- பால. சிவகடாட்சம்

சீனத் தொடர்புடையவர்களாகக் சொல்லப்படும் சித்தர்கள் யார்?.


தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 80
நா. சுப்பிரமணியன்

தொன்மையைத் தேடி - தமிழ் நாட்டு மன்னர்கள் 84
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கனடாவில் தமிழர் பண்பாடு 89
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

இலெமூறியா அல்லது குமரிக்கண்டம் 90
அ. கணபதிப்பிள்ளை

கண்ணகி காற்சிலம்புக்காகக் காவு கொள்ளப்பட்ட ஈழப் பேரரசு! 92
மா. சித்திவிநாயகம்

உலகப் பேரரசுகள்: எழுந்த சாதனைகளும் வீழ்ந்த வேதனைகளும் 95
நிமால் நாகராஜா

சொல்லில் மறைந்தவள் 96
தேவகாந்தன்

பெயரிடு விழா 99
- டி.எச். லோறன்ஸ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பனிவிழும் பனைவனம் 105
செல்வம் அருளானந்தம்

மனிதன் படைத்த குரங்கு 109
வல்லிபுரம் சுகந்தன்

நினைக்கின்றோம்;. பேராசிரியர் செல்வா கனகநாயகம் 64
மைதிலி தயாநிதி

தொலைக்காட்சி நாடகத்தின் சில தயாரிப்பு நுணுக்கங்கள் 66
P. விக்னேஸ்வரன்

திருவள்ளுவர் பெண்ணியவாதியா? 71
குமார் புனிதவேல்

மனவியலும் முக்கூடற்பள்ளும் 73
சண்முகம் வெற்றிவேல்


Funded by the Government of Canada | Canada

மேலும் ஆக்க விபரங்கள் 6ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# இலங்கையில் மீண்டுமொரு அரசியல் யாப்பு

இலங்கையில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் எந்தவொரு அரசாங்கத்துக்கும் தமக்கு மக்களாணை கிடைத்துவிட்டது என்ற உணர்வு மேலோங்கி விடுகிறது. ஆட்சியை மாற்றுவது தான் இலங்கை மக்களுக்குத் தெரிந்த ஒன்றாக இருந்து வருவருகிறது. காலங்காலமாக மக்கள் ஏதோ சொல்ல நினைக்கிறார்கள். சாதாரண மக்கள் பார்வையில் இவர்கள் மூலமாவது இலங்கைக்குச் சுபீட்சம் கிடைக்காதா என்ற ஆதங்கத்தின் ஊமைமொழிதான் அது. ஆட்சியைக் கைப்பற்றிய அரசியல் வாதிகள் தம்மைப் பலப்படுத்துவதற்கான புதிய வேலியாக முதலில் அரசியலமைப்புத் திட்டத்தைத்தான் கையிலெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்பாக பதவியைப் பெற்ற அரசாங்கங்கள் மூன்று அரசியற்திட்டங்களின் உதவியுடன் ஆட்சியை நடத்தி வந்திருக்கின்றன. தேவையான பொழுதில் அரசியற்திட்டச் சீர்திருத்தத்தினைச் செய்துமிருக்கின்றன. 2020 ஆம் ஆண்டின் இராஜபக்ச சகோதரர்களது அரசாங்கம் சர்ச்சைக்குரியதாக எண்ணப்பட்ட அரசியல் யாப்பின் 20வது சீர்திருத்தத்தினை ஒக்ரோபர் 22ம் திகதி மொத்தமாகவுள்ள 225 அங்கத்தவர்களில் 156 பேரின் ஆதரவுடனும் 65 பேரின் எதிர்ப்புடனும் மூன்றில் இரண்டுக்கு மேல் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. அதன் மூலம் இராஜபக்ச அணியினர் தமக்கும் தம்மைச்சார்ந்தவர்களுக்கும் நன்மைகள் கிடைத்து விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். இதற்காக அவர்கள் பயன்படுத்திய உபாயங்கள் வழக்கமானவைதான் என்றாலும் மக்கள் கொடுத்த ஆணைக்கும் சனநாயகத்துக்கும் புறம்பான தெனவே பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கான ஆட்சிமாற்றத்தினைக் கொண்டுவருவதில் மக்கள் கருவியாகவே பயன்படுத்தப்படுகிறார்கள். சிறிய பெரிய முதலீட்டாளர்கள், பௌத்த பிக்குகள், இன வாத சிந்தனையாளர்கள், பூகோள அரசியற் பங்காளிகள் எனப் பெரிய கூட்டமே இலங்கையை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரை இலங்கையின் அரசியல் வாதிகள் எண்ணியிருந்தவைபோல கடைசி வரையிலும் தமது அரசியலையும் வாரிசு அரசியலையும் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்பது அவர்களைப் பொறுத்தவரையில் கசப்பான விடயமேயாகும்.

கோத்தபாய அரசு இம்முறை பலத்த கட்டுக்கோப்புடன் தமது அபிலாசைகளை நிறைவேற்ற வியூகங்களை வகித்திருந்தது. கோவிட்19 தொடங்கியிருந்தபொழுது அரசாங்கத்தை யாராவது விமர்சித்தால் கைது செய்யப்படுவார்களெனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்திருந்தது. அத்துடன் முக்கியமான இடங்களிலெல்லாம் இராணுவத்தின் சேவையினை உட்புகுத்தியது. ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை தொடர்பான தீர்மானத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டதாக அறிவித்தது. பாராளுமன்றத்தில் மூன்று சகோதரர்களிடமும் அவர்களின் மூன்று வாரிசுகளிகளிடமும் நிர்வாக அதிகாரங்களைத் தேக்கிவைத்துக் கொண்டு சர்வவல்லமை கொண்ட ஜனாதிபதி முறைக்கான 20ஆவது அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தத்தினை எதிர்கொண்டு வெற்றி கண்டது. மைத்திரிபால சிறிசேனவின் எதிர்ப்பு பெரும்பான்மை பலத்தைச் சிதறடித்துவிடும் எனக் கருதியிருந்ததால் எதிரணியிலிருந்த முஸ்லிம்களையும் தமிழ் சிங்களப் பாராளுமன்ற அங்கத்தவர்களையும் தங்களுக்குச் சார்பாகத் திசை திருப்பியதில் வெற்றியும் கண்டிருக்கிறது. இவையாவும் பதிய அரசியல் யாப்பொன்றைத் தமக்குச் சார்பானதாக உருவாக்கிவிடவேண்டும் என்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளாகவே கொள்ளப்படவேண்டும்.

பிரித்தானியர் ஆட்சியின் இறுதியில் 1947ல் கொண்டுவரப்பட்ட இலங்கையின் சுதந்திரச் சட்டம் 1948ல் இலங்கைக்குச் சுதந்திரத்தை வழங்கியதுடன் சோல்பரி (soulbury) அரசியலமைப்புச்சட்டத்தின் கீழ் 95 மக்களால் தெரிவு செய்யப்பட்டதும் 6 தேசாதிபதியால் நியமிக்கப்பட்டதுமான மொத்தம் 101 அங்கத்தவர்களுடன் இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்பான அரசாங்கம் ஆட்சியை நடத்தியது. செனற்சபையாகிய 30 பேர் கொண்ட மேல்சபையும் இணைந்த இரட்டைச்சபை ஆட்சிமுறை பிரித்தானியப் பாராளுமன்ற மரபை அடியொற்றியதாக அமைக்கப்பட்டிருந்தது. மனித உரிமைகளை மதித்து 29வது சரத்தானது எந்த இனத்தைச் சார்ந்த சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பளிக்கவேண்டும் என்ற அடிப்படை உரிமையானது அந்த அரசியற் திட்டத்தில் உட்புகுத்தப்பட்டிருந்தது. மலையகத் தமிழர்கள் 8 பேர் வரையிலும் வாக்குகளின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனாலும் இரட்டை அங்கத்தவர் மூன்று அங்கத்தவர் தொகுதிகளில் மூவின மக்கள் சிறுபான்மையாக வாழும் தொகுதிகளில் தமிழர்களுக்குப் போதிய இடஒதுக்கீடு இருந்ததனாலும் பாராளுமன்றத்தில் தமிழினச் சிறுபான்மையினரது உரிமைகள் புறக்கணிக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கையை அரசியற்திட்டம் கொடுத்திருந்தது. சட்டமாக்கப்பட்டபின்னரே அச்சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதாடமுடியும் என்ற பிரித்தானிய மரபைப் பேணும் நெகிழ்ச்சித் தன்மையான சோல்பரி போன்ற அரசியற்திட்டத்தில் சிறப்பான நீதித்துறையிருந்தாலன்றி நல்லாட்சியினை எதிர்பார்க்க முடியாது.

இலங்கையின் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைச் சிங்களவர்களே இரு சபைகளிலும் இடம்பெற்றிருந்ததனாலும் தேசாதிபதியும் சிங்களப் பெரும்பான்மையால் பரிந்துரை செய்யப்பட்டு வந்ததாலும் சிறுபான்மையினருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட மசோதாக்கள் மேற்சபையின் அனுமதியுடனும் தேசாதிபதியின் இறுதிக் கையொப்பத்துடனும் இலகுவில் சட்டமாக்கப்பட்டன. சிறுபான்மையினருக்கெதிரான சட்டங்கள் இயற்றப்பட்டபொழுது 29வது சரத்தினை முக்கியப்படுத்தி பித்தானியக் கோமறைக் கழகத்துக்கு மேல்முறையீடு செய்யப்பட்ட பொழுதிலும் ஒன்றில் பிரித்தானியா சரியானமுறையில் அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கவில்லை அல்லது இலங்கை அரசாங்கம் பிரித்தானியாவின் வேண்டுதலைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இத்தகைய புறக்கணிக்கும் போக்கினைத் தட்டிக் கேட்கும் விருப்பம் பிரித்தானியாவுக்கு இருக்கவில்லை. இப்பொழுதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடைநீக்கம் தொடர்பாக கடந்தகாலப் பிரித்தானியச் செயலர்களின் முடிவு தவறானதெனச் சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இதனை பிரித்தானிய அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்பது வல்லரசுகளின் இரகசியமாக மாறிக்கொண்டிருக்கிறது.

> **“20வது சீர்திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் அதனை நீக்கவென வீதியிலிறங்கிப் போராடவேண்டிய காலம் வெகு தூரத்திலில்லை என்று எதிரணியினரால் எச்சரிக்கை விடப்பட்டாலும் வீதியிலிறங்கிப் போராட இனிவருஞ் சட்டங்கள் அனுமதிக்குமா என்பதற்கு ஆக்கப்படவிருக்கும் புதிய அரசியற்திட்டம் பதில் சொல்லக் காத்திருக்கிறது.”**

1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்தினை அப்பட்டமான இனப்படுகொலை எனச் சுட்டிக்காட்டிய இந்திராகாந்தியின் தலைமையிலான இந்திய அரசாங்கம் இலங்கையைத் தட்டிக் கேட்கும் வரையில் அரசாங்கங்களின் ‘சிறுபான்மை அடக்குமுறை ஆட்சிக்கே’ அரசியற் திட்டங்கள் கருவிகளாக்கப்பட்டன. இந்தியத் தலையீட்டுக்குப் பின்பாகவே சர்வதேச அழுத்தத்தினாலும் இலங்கை அரசியற்திட்டத்தில் சீர்திருத்தம் கொண்டுவர முடியும் என்பதுவும் மதம் மொழி சார்ந்த சீர்திருத்தங்களுக்குச் சர்வசன வாக்கெடுப்பின் தேவை அவசியமற்றது என்பதுவும் எழுதாத சட்டமாக நடைமுறைக்கு வந்துவிட்டது. இதனாலேயே இலங்கை அரசாங்கங்கள் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளை இயலுமானவரை ஓரங்கட்டியும் ஏமாற்றியும் தந்திரோபாயத்தினூடாகச் சர்வதேசத்துடன் இணைந்து பயணித்து வருகின்றன. தமிழர்கள் தமக்கான நிரந்தர அரசியற் தீர்வுக்கும் சர்வதேசத்தின் கைகளை நம்பிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் ஒருபாகமாகவே இந்தியா வழங்கும் உதவிகள் சிறுபான்மையினர் நலன்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது என்ற உறுதிமொழியைப் பெற்றுக் கொள்ளும்படி தமிழ் மக்கள் கூட்டணியினரின் இந்தியப் பிரதமரிடம் விடுத்திருந்த கோரிக்கை தமிழருக்குக் கடந்தகாலம் கற்பித்த பாடம் என்பதனை விளங்கிக் கொள்ள முடியும்.

பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்குவந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சி இடதுசாரிக் கூட்டணி அரசாங்கம் 1970 மே மாதம் பாராளுமன்றத்தை அரசியற்திட்டச்சபையாக மாற்றியதுடன் 1972ல் இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசுக்கான பதிய அரசியற்திட்டத்தை ஆக்கியது. ஆதற்கு முன்னதாக 1971 ஒக்ரேபரில்

- அ. கணபதிப்பிள்ளை -

மேல்சபையினைப் பழைய அரசியற்திட்டத்திலிருந்து நீக்கி ஒருசபை ஆட்சிமுறையினை அறிமுகம் செய்தது. அதற்குக்கிடைத்த மக்களினதும் பிரித்தானியாவினதும் பாராமுகமான தன்மை குடியரசுக்கான புதிய முன்னெடுப்புக்குக் காரணமானது. புதிய அரசியற் திட்டமும் உருவாக்கப்பட்டது. புதிய அரசியற்திட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பொழுதில் பிரித்தானியாவும் இலங்கையை அங்கீகரித்த சட்டத்தை இயற்றியிருந்தது.

1972ன் அரசியற்திட்டமானது அடிப்படை மனித உரிமைகளுக்கான தனிப்பகுதியை உள்ளடக்கியிருந்தால் சிறந்த அரசியல் திட்டமாகப் பாராட்டப்பட்டது. இலங்கையில் சிறுபான்மையினர்கூடப் பிரதமராகலாம் என்ற அரசியற்திட்டத்தின் உள்ளடக்கத்தால் அதனை எதிர்த்த பிரித்தானியா முதலிய நாடுகள் வாயடைத்துப் போயின. அதேவேளை நிர்வாகத்துறை மனிதஉரிமைகளை மீறும்பொழுது அதனை எதிர்த்து நீதித்துறையில் போராடும் உபாயம் உள்ளடக்கப்படவில்லை என்ற குறைபாடும் காணப்பட்டது. இந்த அரசியல் திட்டத்தில் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டுமாயின் மொத்த அங்கத்தவரில் மூன்றில் இரண்டு பேரின் ஆதரவு தேவை என்ற வாசகத்தைக் கடுமையான விதி என்றே கருதப்பட்டது. அடுத்த 1977 தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி ஆறில்ஐந்து என்ற மிகப்பெரிய பெரும்பான்மையுடன் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இது பலருக்கும் வியப்பினைக் கொடுத்திருந்தாலும் முதல்முறையாகச் சிங்களவர்களும் தமிழர்களும் இனரீதியில் இரண்டுபட்டுவிட்டார்கள் என்பதனைத் துலாம்பரப்படுத்தியிருந்தது.

1972ம் ஆண்டின் அரசியல் திட்டத்தில் 2வது திருத்தத்தினைச் செய்ததனூடாக ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையினை அறிமுகஞ் செய்ததுடன் 1978 பெப்ரவரியில் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. 1978 செப்ரெம்பரில் புதிய அரசியற்திட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இவ்விதமான அரசியற் சீர்திருத்தங்களூடாக மக்களுக்கு நல்லது செய்வதாகக் காட்டிக் கொள்ளுவதும் பின்னர் அதனையே தமக்குத் தேவையான முறையில் அரசியற்திட்டமாக எழுத்தில் வரைந்து கொள்ளுவதும் காலங்காலமாக நடந்து வருகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது தேசியப்பாதுகாப்புக்கு அவசியமானது என்பதனை அரசாங்கம் அடிக்கடி வலியுறத்துவதனைக் காணமுடிகிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பாகத் தேசியப் பாதுகாப்பில் மைத்திரிபால சிறிசேனாவின் முடிவெடுக்கமுடியாத திறனைக் காரணங்காட்டி, அதிகாரம் பிரதமரிடையே பகிரப்பட்டிருந்ததால் இத்தகைய நிகழ்வு நடந்து விட்டதாக விசாரணைச் செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

20வது சீர்திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் அதனை நீக்கவென வீதியிலிறங்கிப் போராடவேண்டிய காலம் வெகு தூரத்திலில்லை என்று எதிரணியினரால் எச்சரிக்கை விடப்பட்டாலும் வீதியிலிறங்கிப் போராட இனிவருஞ் சட்டங்கள் அனுமதிக்குமா என்பதற்கு ஆக்கப்படவிருக்கும் புதிய அரசியற்திட்டம் பதில் சொல்லக் காத்திருக்கிறது.



kanapathipillai.a@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# அமெரிக்க அதிபர் தேர்தல் - 2020

# ‘மாற்றம் வேண்டும்’ மக்களின் விருப்பம் நிறைவேறுமா?

**- பொன்னையா விவேகானந்தன் -**

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வழமை போலவே எதிர்ப்பார்ப்புகள் எஃறியுள்ளன. எனினும் இந்தத் தேர்தலுக்கான எதிர்பார்ப்புகள் சற்றே அதிகம் என்றுதான் கூற வேண்டும்.

நவம்பர் மாதத்தில் வரும் முதலாவது திங்கள் கிழமைக்கு அடுத்துவரும் செவ்வாய் கிழமையில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறல் வேண்டும் என்ற வழமைக்கிணங்க இந்த ஆண்டு நவம்பர் மாதம் 3ம் நாள் தேர்தல் நடைபெறவுள்ளது.

பொதுவாகவே ஒரு ஜனாதிபதி, இரண்டாவது தவணைக்கான தேர்தலிலும் வெற்றி பெற்று எட்டு ஆண்டுகள் பதவியில் இருப்பதற்கு மக்கள் அனுமதிப்பர். கடந்த 28 ஆண்டுகளாக ஒவ்வொரு ஜனாதிபதியும் எட்டு ஆண்டுகள் பதவி வகித்து வந்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதி றொனால்ட் ட்றம்ப் பதவியேற்ற முதல் நான்கு ஆண்டுகளிலும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளான அமெரிக்க அதிபராக இருக்கின்றார். இவரைப் போன்று கடந்தகால ஜனாதிபதிகள் யாருமே இவ்வளவு கேலிக்குரிய விமர்சனங்களுக்கு உள்ளானதில்லை என்றே பலரும் கூறுகின்றனர். அமெரிக்காவில் வாழும் குடியேற்றக்காரரும் சிறுபான்மையின மக்களும் குடியரசுக் கட்சியையே வெறுக்கும் அளவுக்கு ஜனாதிபதி ட்றம்ப் அவர்களின் நடத்தைகள் கடுப்பை ஏற்படுத்தியிருந்தன.

குறிப்பாக, அமெரிக்க வாக்காளர்களிடையே தன் செல்வாக்கைத் தக்கவைக்கத் தவறியவராகவே ஜனாதிபதி ட்றம்ப் கருதப்படுகின்றார். இதனாலேயே இத்தேர்தல் பெரும் கவனிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

அமெரிக்காவில் அதிபர் பதவியை வகித்த 45 ஜனாதிபதிகளில் பத்துப் பேர் இரண்டாம் தவணைக்கான தேர்தலில் தோற்றிருக்கின்றனர். கடைசியாக 1992ல் திரு. பில் கிளின்டனிடம் தன் இரண்டாம் தவணைப் பதவியை இழந்தவர் ஜோர்ஜ் எச்.டபிள்யு. புஷ். இத்தடவை ஜனாதிபதி ட்றம்ப் இத்தேர்தலில் தன் பதவியை இழந்தால் 28 ஆண்டுகளின்பின் தன் இரண்டாம் தவணைப் பதவியை இழந்த 11வது ஜனாதிபதியாக இருப்பார்.

நாள்தோறும் அமெரிக்கத் தேர்தல் பற்றிய கருத்துக்கணிப்புகள் வகைதொகையின்றி வந்தவண்ணம் உள்ளன. பெரும்பாலான கணிப்புகளில் ஜனாதிபதி றொனால்ட் ட்றம்ப் பின்னடைந்தவராகவே காணப்படுகின்றார். கணிப்புகளில் முன்னிலை பெற்றிருக்கும் திரு.ஜோ பைடனுக்கும் இருவக்குமிடையேயான இடைவெளி பத்து விழுக்காட்டுக்குள்ளேதான் காணப்படுகின்றன. சி.பி.சி நடத்திய கடந்த 28ம் திகதிக்குரிய கருத்துக்கணிப்பில் 52.9 விழுக்காடு மக்கள் ஆதரவு ஜோ பைடனுக்குக் காணப்படுகின்றது. ஜனாதிபதி ட்றம்ப் அவர்களுக்கான மக்கள் ஆதரவு 44.7 விழுக்காடு.

தேர்தலுக்குச் சில நாட்கள் இருக்கும் நிலையில் வெளியாகிக் கொண்டிருக்கும் இந்தக் கருத்துக்கணிப்புகளுக்கு அமையவே முடிவுகள் இருக்குமா? எனக் கேட்டால் இருக்காமலும் போகலாம் என்பதே என் பதில்.

2016 நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆறு நாட்கள் முன்னர் ஹிலாரி கிளிண்டனே பெற்றி பெறுவார் எனக் கருத்துக் கணிப்புகள் அறுதியிட்டுக் கூறியிருந்தன. அன்றைய வெற்றி வாய்ப்புக்கான இடைவெளி இப்போதிருப்பதைவிடச் சிறிதாக இருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இருந்தும் அவரால் ஜனாதிபதி யாகிவிட முடியவில்லை. அதற்கு அமெரிக்கத் தேர்தல் முறையே காரணம்.



இக்கட்டுரையின் பிற்பகுதியில் இத்தேர்தல் முறை விரிவாகவே விளக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தல் தொடர்பில் மற்றுமொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எட்டாண்டு நிறைவில் வரும் தேர்தல்களில் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்கனவே ஜனாதிபதியாக பதவி வகித்திராத புதுமுகங்களாகவே இருப்பர். ஜனாதிபதி ட்றம்ப் கடந்த நான்காண்டுகள் பதவியில் இருந்தவேளை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தமை இத்தேர்தலை அதிக கவனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்தப் பதவிக்காலத்தில் இவருடைய ஆட்சியில் மக்கள் பெற்ற அனுபவங்களே வாக்களிக்கும் முடிவுகளைத் தீர்மானிக்க வுள்ளன.

அமெரிக்காவில் எப்போதுமே மாறிமாறி ஆட்சியில் அமரும் குடியரசுக்கட்சி, ஜனநாயகக் கட்சி என்பவற்றுக்கு நிரந்தமான ஆதரவுத்தளங்கள் உண்டு.

ஏபிரகாம் லிங்கன் நிறவெறிக்கு எதிராகவும் அடிமைமுறையை இல்லாதொழிப்பதற்குமான சட்டங்களைக் கொண்டுவந்தபோது அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களைச் சேர்த்த பழமைவாதக் கொள்கைகளைக் கொண்ட வெள்ளையர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். இத்தெற்கு மாநிலங்களே குடியரசுக்கட்சியின் நிரந்தர ஆதரவுத்தளங்களாக இன்றுவரை திகழ்கின்றன.

தாராளவாதப் போக்கையும் சற்றே இடது சாரிக் கொள்கைகளையும் கொண்டவர்களான ஜனநாயகக் கட்சியினரைப் பெரிதும் ஆதரிப்பவர்களாக அமெரிக்காவின் வடபகுதி வெள்ளையினத்தவரும் குடியேற்றவாளர்களும் கறுப்பின மக்களும் காணப்பட்டனர். எனினும் ஆட்சிக்காலத்தில் கட்சிகள் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு அமையவும் வேட்பாளர்களின் வாக்குறுதிகளுக்கு ஏற்பவும் வாக்குகளை அளிக்கும் வாக்காளர்களும் அமெரிக்காவில் கணிசமாக உள்ளனர்.

குடியேற்றவாளர்களும் சிறுபான்மையின மக்களும் விரும்பும் வகையில் ஓபாமா அரசு நன்மைகளையே செய்தது எனினும் பின்லாடன் கொல்லப்பட்டதைத் தவிர, பழமைவாதத் தரப்பினரை அவரால் பெரியளவில் திருப்திப்படுத்த முடியவில்லை என்பதே உண்மை. அதற்கான அவசியமும் ஓபாமா தரப்புக்கு இருக்கவில்லை. தீர்மானிக்கும் வாக்காளர்கள் கூட ஓபாமாவின் நாலாண்டு நிறைவில் ஜனநாயகக் கட்சியை வெறுத்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

குடியேற்றவாளரான ஒருவர் பிரபல இதழான ‘த கார்டியன்’ கட்டுடையாளருக்கு தெரிவித்த கருத்தில், ‘நான் எப்போதுமே ஜனநாயகக் கட்சியை ஆதரிப்பவள். ஆனால் றொனால்ட் ட்றம்ப், உள்நாட்டு வேலைவாய்ப்பைப் பெருக்கி எங்களை வளப்படுத்துவார் என நம்பினேன். அதனால் அவருக்கு வாக்களித்தேன். இத் தேர்தலில் நானும் என் கணவரும் ஜனநாயகக்கட்சிக்கு வாக்களிப்பதுடன், பலரையும் வாக்களிக்கத் தூண்டி வருகின்றோம்’ என்று குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி ட்றம்ப், தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளான உள்நாட்டு உற்பத்தி, உள்நாட்டு வேலைவாய்ப்பு, குடிவரவாளர் குறைப்பு என்பன கணிசமான அடித்தட்டு மக்களைக் கவர்ந்திருக்கின்றது என்பதை இப்பெண்மணியின் கருத்தினூடாக அறிய முடிகின்றது.

அத்துடன் கடந்த தேர்தலில் கணிசமான ஜனநாயகக் கட்சியின் வாக்காளர்களும் வாக்களிக்காது வீடுகளுக்குள்ளேயே இருந்து விட்டனர் என்றும் ‘த கார்டியன்’ தெரிவிக்கின்றது. இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்குரிய ஆதரவு இருபது விழுக்காடு அதிகரித்துள்ளதாகவும் குடியரசுக் கட்சியினுடைய ஆதரவு ஆறு விழுக்காடு குறைந்துள்ளதாகவும் ‘த கார்டியன்’ குறிப்பிடுகின்றது.

கடந்த தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் விட 30 லட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்ற றொனால்ட் ட்றம்ப் எப்படி அமெரிக்க அதிபரானார்? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அமெரிக்க அதிபர் தேர்தல் முறையைச் சற்றே விளங்கிக் கொள்ள வேண்டும்.

பலரும் கருதுவதைப்போல, அமெரிக்காவில் மக்கள் அளிக்கும் நேரடியான வாக்குகளை அதிகமாகப் பெற்ற வேட்பாளர் எப்போதுமே வெற்றி பெற்றவராகிவிட முடியாது. அவர், மாநிலங்களில் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் ‘தேர்வு செய்வோர் அவை (electoral college)’யில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் வாக்காளர் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த ‘தேர்வு செய்வோர் அவை’ (Electoral college) உறுப்பினர் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வவையை வாக்காளர் குழுக்கள் என வும் கருதலாம்.

*தொடர்தல் 6ம் பக்கம்*

# அமெரிக்க அதிபர்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

எடுத்துக்காட்டாக, அதிக மக்கள் தொகையைக் கொண்ட கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 'தேர்வு செய்வோர் அவை' உறுப்பினர்கள் உள்ளனர். அதே போல சிறிய ஐயோவா மாநிலத்துக்கு 6 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்குமாக 538 'தேர்வு செய்வோர் அவை' உறுப்பினர்கள் உள்ளனர். வெற்றி பெறும் வேட்பாளர் 270 உறுப்பினர்களின் ஆதரவை பெற்றிருக்க வேண்டும்.

தேர்தல் நடைமுறை தொடர்பில் திட்டமிடுவதற்கு முழுமையான சுதந்திரம் மாநிலங்களுக்கு இருக்கின்றன. எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானதொரு தெரிவு முறை இல்லை. அமெரிக்க மாநிலங்களில் பெரும்பாலானவற்றில் மாநிலத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி வேட்பாளருக்கு 'தேர்வு செய்வோர் அவை' யின் ஆதரவு முழுமையாகக் கிடைத்து விடுகின்றது.

எடுத்துக்காட்டாக, ஒரு மாநிலத்தில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஒரு வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அந்த மாநிலத்துக்குரிய தேர்வு செய்வோர் அவையின் அத்தனை உறுப்பினர்களின் ஆதரவும் விரும்பியோ விரும்பாமலோ வெற்றி பெற்ற வேட்பாளருக்கே சென்று சேரும்.

2000ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், திரு. ஜோர்ஜ் புஷ்க்கு எதிராகப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல் கோர், தேசிய அளவில் மக்கள் நேரடியாக அளித்த வாக்குகளில் பெரும் பான்மை பெற்றார். எனினும் மாநிலத்'தேர்வு செய்வோர் அவை' வாக்குகளைப் பெறும் போட்டியில் தோல்வியுற்றார். காரணம் புளோரிடா மாநிலத்தில் சர்ச்சைக்குரிய விதத்தில் மக்களின் வாக்குகள் திரு. புஷ் அவர்களுக்கு சற்றே அதிகமாகக் கிடைத்ததால் அந்த மாநிலத்துக்குரிய தேர்வு செய்யும் அவையின் 29 உறுப்பினர்களின் ஆதரவும் அவருக்குக் கிடைத்தது. இந்த 29 பேரில் பல குழுக்களுக்கு திரு. புஷ் அவர்களைக் பிடிக்காது என்ற போதிலும் அவர்கள் ஆதரவு அவருக்குக் கிடைப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

2016ல் நடைபெற்ற தேர்தலில் ஹிலாரி கிளின்டன், டொனால்ட் ட்றம்ப்பை விட 2.1 விழுக்காடு அதிக வாக்குகளைப் பெற்றும் தோல்வியடைந்தார். ஏனெனில், அத்தேர்தலில் ட்ரம்ப் 304 தேர்வு செய்வோர் அவை வாக்குகளையும், ஹிலாரி கிளின்டன் 227 தேர்வு செய்வோர் அவை வாக்குகளையும் பெற்றனர்.

எனவே, இந்த Winner takes all என்று சொல்லப்படும் மாநிலத்தின் வென்றவருக்கே அனைத்தும் என்பதிலும் மற்றும் தேர்வு செய்யும் அவை (Electoral College) முறையிலும் சீர்திருத்தங்கள் தேவை என அமெரிக்காவில் அப்போதிருந்தே பரவலான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டு வருகின்றன. ஆனால், தேர்தல்கள் எவ்வித மாற்றமும் இன்றி அதே முறையில்தான் தொடர்கின்றன. இந்த விதிமுறை நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

நியூயோர்க், கலிபோர்னியா போன்ற மாநிலங்கள் எப்போதுமே ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவானவை. தென்மாநிலங்கள் பொதுவாகவே குடியரசுக் கட்சிக்கு ஆதரவானவை.

ஏறக்குறைய 10 மாநிலங்கள் காலந்தோறும் மாறி மாறி வாக்களித்து இரு கட்சி வேட்பாளர்களையும் காலத்துக்கேற்பத் தெரிவு செய்துள்ளன. இதில் புளோரிடா மாநிலத்தில் கணிசமான குடியேற்றவாளர்களும் சிறுபான்மையினரும் இருப்பதால் தீர்மானிக்கும் மாநிலங்களின் பட்டியவில் புளோரிடா இருக்கின்றது. ஒஹாயோ, புளோரிடா, கொலராடோ விஸ்கான்சின், மிச்சிகன், போன்ற மாநிலங்கள் தீர்மானிக்கும் வாக்காளர்களைக் கொண்ட பட்டியலில் இருக்கின்றன. இந்த மாநிலங்களில் தேர்வு செய்வோர் அவையின் 96 வாக்காளர் குழுக்கள் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கையைக் குறிவைத்தே வேட்பாளர்கள் பரப்புரையில் ஈடுபடுகின்றனர்.

திரு. ஜோ பைடன் தேர்வு செய்வோர் அவையின் மொத்த வாக்காளர் குழுக்களின் எண்ணிக்கையான 538ல் 259 குழுக்களின் ஆதரவை உறுதியாகப் பெறுவார் எனக் கருத்துக்கணிப்பு கூறுகின்றது. அவர் வெற்றி பெறத் தேவையான 270 குழுக்களின் ஆதரவைப் பெறுவேண்டுமெனில் அரிசோனா அல்லது பென்சில்வேனியா மாநிலங்களில் ஒன்றை வென்றாலே போதுமானது என்கின்றனர் கணிப்பாளர்கள். அத்துடன் புளோரிடா, ஜோர்ஜியா, வடகரோலினா, ஒஹாயோ என்பன ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக இருப்பதாகவே கூறுகின்றனர்.

வெளிநாட்டு நலன்களுக்கு ஆதரவற்ற உலகத் தலைவர் யார்? என பி.பி.சி நடத்திய ஒரு கணிப்பில் வெளிநாட்டு நலன்களுக்கு ஆதரவில்லாதவர் என்ற வகையில் 83 விழுக்காடுகளைப் பெற்று முன்னிலையில் இருக்கின்றார் ஜனாதிபதி ட்றம்ப். இதுபோல் வெளிநாட்டவரின் வெறுப்பை எந்த அமெரிக்கத் தலைவர்களும் பெற்றதில்லை. அமெரிக்காவுக்கு வெளியே உள்ள நாடுகளின் வெறுப்பை அதிகளவில் பெற்றுக் கொண்டவராக திரு றொனால்ட் ட்றம்ப் காணப்படுகின்றார்.

உள்நாட்டில் திரு. ட்றம்ப் அவர்களுக்கு கணிசமான ஆதரவு இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. 'நாங்கள் கட்டும் வரிப்பணத்தை பயனுள்ளதாக்க வல்லவர் ட்றம்ப்' எனக் கருதும் குடியேற்றவாளர்களை நான் கண்டிருக்கின்றேன். பெரும் வணிக நாடான அமெரிக்காவில் வாழும் பெருவணிகர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் குடியரசுக் கட்சி எப்போதுமே கவனமாக இருந்துள்ளது. இதனடிப்படையில் அமெரிக்காவின் பெருவணிகர்களின் ஆதரவுத்தளம் எப்போதும் போல் குடியரசுக்குக் கட்சிக்குக் கைகொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதியாகப் பதவியேற்பவருக்கு முன்னால் ஏகப்பட்ட சவால்களைக் குவித்திருக்கின்றது சமகாலப் போக்குகள். கோவிட் தொற்றுநோய் ஏற்படுத்தியிருக்கும் பாரிய பொருளாதார வீழ்ச்சி நாட்டின் அடித்தளத்தையே ஆட்டி வைக்க வல்லது. சிறுபான்மையினரின் போராட்டங்கள் பலவும் உள்நாட்டில் வலுவடைந்த நிலையில் உள்ளன. அவற்றைக் கையாள்வதில் நீதியான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். உலக நாடுகளின் உறவுகளைப் பேணுவதிலும் புதிய அணுகுமுறைகளும் நெகழ்வுப் போக்குகளும் தேவை. ஏறக்குறைய பாரிய நெருக்கடியில் சிக்கியிருக்கும் நாட்டை பொறுப்பேற்கவிருக்கும் ஜனாதிபதி மக்கள் நலன் கருதிக் கடினமாகச் செயற்பட வேண்டியவராக இருக்கின்றார்.

அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டப்படி, ஜனவரி 20-ம் தேதி அமெரிக்க அதிபருக்கான பதவியேற்பு நாள் ஆகும். தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, வாஷிங்டன் நகரில் உள்ள தலைமைக் கட்டடத்தின் (U.S. Capitol Building) முன்றலில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் புதிய அதிபர் ஜனவரி 20 அன்று அதிகாரபூர்வமாகப் பதவியேற்கவேண்டும். பதவியேற்பு விழாவுக்குப் பிறகு, புதிய அதிபர் வெள்ளை மாளிகையில் தனது நான்கு ஆண்டுகாலப் பொறுப்பை ஏற்றுச் செயற்படத் தொடங்க வேண்டும்.

நவம்பர் 3ல் தேர்தல் முடிவடைந்தாலும் வாக்கு எண்ணிக்கைகள் முடிவடைந்து உத்தியோகபூர்வ முடிவை நாம் பெறுவதற்கு சிலவேளை சிலநாட்கள் ஆகலாம் என்கின்றனர். அஞ்சல்வழி வாக்குகள் சில மானிலங்களில் தேர்தலுக்குப் பின்னரே எண்ணப்படும். இம்முறை தொற்றுநோய் காரணமாக அஞ்சல்வழி வாக்குகள் அதிகமாகவே இருக்கிறது.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான உள்நாட்டுப் பொருளாதார நகர்வுகள், அரசியல் மாற்றங்கள், உலக அரசியல் முன்னெடுப்புகள் போன்றன, புதிய அதிபரையும் அவர் கடைப்பிடிக்கும் கொள்கைகளையும் சார்ந்தே அமையும். கட்சியின் கொள்கை அடிப்படையிலான முடிவுகள் உலக அளவில் பெரும் தாக்கத்தை உண்டாக்கவல்லவை.

ஓர் அதிபரின் இரண்டாம் தவணைக்கான தேர்தல் காலம் கடந்த காலங்களில் இவ்வளவு பரபரப்பாக இருந்ததில்லை. இந்தப் பரபரப்பை ஏற்படுத்தியவராகவும் திரு. றொனால்ட் ட்ரம்ப் அவர்களே திகழ்கின்றார்.

74 வயதான ட்றம்ப் அவர்களா, 78 வயதான ஜோ பைடன் அவர்களா புதிய அதிபர் என்பது நவம்பர் மாதத்தின் முதல் வார இறுதியில் தெரிந்துவிடும்.



*vivekanandan.p@thaiveedu.com*

**கோலங்கள்**

**அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,**
**Floor Decoration for Arangetram**
**Wedding and other Cultural Functions.**

**Bhamini: 647 294 0736, 416 491 6057.**

## வீட்டினுள்ளே...

**தேசம் - தேசியவாதம் - சோஷலிசம்** 8
ந. இரவீந்திரன்

**இந்தியத் தேர்தல் முறையில் மாற்றம் தேவை** 11
நெல்லை ஜெயசிங்

**என்று தீரும் இந்த இனவாதம்?** 15
த. சிவபாலு

**யுத்தம் சுகம் தரும்** 21
போல் ஜோசேப்

**மயில் நிலை ஆசனம்** 23
பாதுசா ஆனந்தநடராசா

**புகை அறிவுறுத்தும் கருவிகள்** 26
வேலா சுப்ரமணியம்

**குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்** 29
அகணி சுரேஸ்

**சமன் மீன்களின் மேல்நோக்கிய இறுதி யாத்திரை** 31
குரு அரவிந்தன்

**வறிய நாடுகளும் ஆபத்து மிகுந்த வாகனங்களும்** 33
சீலன்

**வாசிப்புக் கற்பித்தலுக்குச் சிறந்த அணுகுமுறை எது?** 34
என். கிருஷ்ணகுமார்

**சிறுவர் துஷ்பிரயோகத்தால் சிதைவடையும் எதிர்காலம்** 37
சி. நற்குணலிங்கம்

**பேசாப் பொருள்** 39
மாத்தளை சோமு

**அன்பின் அடையாளம் அன்னை தெரெசா** 41
எஸ். பத்மநாதன்.

**நினைவகலாத வண்ணக்கலவை ஆசை இராசையா** 42
திருச்செல்வம்

**தொல்காப்பியக் கடல் வித்துவசிரோமணி சி. கணேசையர்** 44
வே. விவேகானந்தன்

**மக்கள் கலைஞர் லோகாநந்தன்** 45
ப. ஸ்ரீஸ்கந்தன்

**அநீதிகளைக் கண்டிக்க மேடையேறிய வேதவல்லியின் நூற்றாண்டு!** 47
பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ்

**மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி** 53
மல்லியப்புசந்தி திலகர்

**அருச்சுனன் தபசு கூத்து நிகழ்த்து முறை** 51
ஞானம் லெம்பட்

**மலைகளும் அதை வரைய முற்படும் திலகரும்** 54
க. பத்திநாதன்

**இளவாலை எஸ். ஜெகதீசனின் 'தகவலில் தெரிந்தவை'** 56
ஜெகதீஸ்வரன்

**சார்லஸ் புக்கோவ்ஸ்கியின் அஞ்சல் நிலையம்** 58
தெளிவத்தை ஜோசப்

# COVID-19க்கான தீர்வு தெளிவானது

- முக மறைப்பொன்றை அணியுங்கள்
- உங்களின் வீட்டில் இல்லாதவர்களுடன் 2 மீ இடைவெளியைப் பேணுங்கள்
- உங்கள் வீட்டு அங்கத்தவர்களை மட்டும் உங்களின் நெருங்கிய தொடர்பில் வைத்திருங்கள்
- அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவுங்கள்



**பரவலைத் தடுத்தல் உங்களில் ஆரம்பிக்கிறது**
மேலும் அறிவதற்கு ontario.ca/coronavirus ஐப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# தேசம் - தேசியவாதம் - சோஷலிசம்

- ந. இரவீந்திரன் -

தேசம், தேசிய இனவிடுதலை எனப் பேசுவது சோஷலிஸ விரோதமானது எனக் கருதப்பட்டதொரு காலம் இருந்தது. அப்போது (நான்கு தசாப்தங்களுக்கு முன்னதாக) சோஷலிஸம் என்பது உன்னதமான ஒரு இலட்சியச் சமூகமாகவும் வென்றெடுத்துவிட இயலுமான ஒன்றாகவும் கருதப்பட்டிருந்தது. அதனாலேயே 'சோஷலிஸத் தமிழீழம்' ஒன்றை வென்றெடுப்போம் என இளைஞர் அமைப்புகள் களத்தில் இறங்கினர். காலாகாலமாக ஏகாதிபத்திய அடிவருடிகளாகச் செயற்பட்டு வந்த தமிழ் தலைவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி வென்றெடுக்கும் தமிழீழமும் சோஷலிஸத்தையே முன்னெடுக்கும் என்ற பிரகடனத்தை முன்னிறுத்த வேண்டியிருந்தது.

தமிழீழம் சாத்தியமற்ற ஒரு விடயம் என்ற புரிதல் எட்டப்பட்ட இன்று சோஷலிஸமும் எட்டாக்கனி என்பதாகவும் அப்படியொன்றும் உன்னதமான அமைப்பாக அதனைக் கருதிவிட இயலாதெனவும் கருதும் மனப்பாங்கும் வளர்க்கப்பட்டுள்ளது. விடுதலை இலட்சியங்கள் - புனிதங்கள் - உயர் விழுமியங்கள் என்பனவெல்லாம் வெறும் புலுடாக்கள் எனக் கூறி நாளைய உன்னதங்களை நாடி வெறுமைப்படாமல் இந்தக் கணமே உண்மையானது எனக் கண்டு இதனை அனுபவித்துக் களித்திருக்க வேண்டாமா என்று கேட்கப்படுகிறது. இத்தகைய சிந்தனைக்குரிய வாழ்முறையைப் போற்றுகிற அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் இந்த நவம்பர் மாதத்தில் இடம் பெறுகிறது. தன்னை எதிர்த்துப் போராடும் வேட்பாளர் சோஷலிஸத்தைக் கொண்டுவந்துவிடுவார் என்ற பூச்சாண்டியைத்தான் இரண்டாம் தடவை வெற்றிகொள்ள முனைகிற இன்றைய ஜனாதிபதி முன்வைக்கிறார்.

இத்தனை கெட்ட சொல்லாகச் சோஷலிஸத்தைச் சித்திரிக்கும் அமெரிக்காவைப் பின்பற்றி, அதன் அனுசரணையுடனேயே தமிழ் தேசியம் இலங்கையில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக்கூறும் மதியுரைஞர்கள் எம்மத்தியில் உள்ளனர். அமெரிக்கா உலக மக்களுக்கு மீட்சி தந்துவிடுமா - குறைந்தபட்சம் தமிழீழத்துக்குக் கதிமோட்சம் தந்துவிடுமா? தமிழ், முஸ்லிம், சிங்களத் தேசங்களாக ஒன்றுடன் ஒன்று மோதியபடி உள்ள இலங்கைக்கு அமெரிக்காவா சோஷலிஸமா மீட்சியைத் தர இயலும்?



## மோதும் தேசங்கள்:

இனத் தேசியங்களாகப் பிளவுபட்டன்றி இலங்கைத் தேசியத்துக்கு உட்பட்ட சகோதர இனங்களாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இயங்கிய எழுபதாம் ஆண்டுகளில் ஒன்றுபட்டுப் போராடிச் சோஷலிஸ அமைப்பை வென்றெடுக்கும் பொழுது வாழ்வாதார விருத்தியை எட்டுவதோடு இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும் எனும் நம்பிக்கை இருந்தது. இன ஒற்றுமை என்பது பொய்யான மயக்கும் தந்திரம், பேரினவாத அரசு சிறு தேசிய இனங்களைப் புறக்கணிக்கிறது என்பதனைப் புரிந்துகொண்டு தமிழ் தேசியம் தனி நாடாகப் பிரிந்து சென்றுவிட வேண்டும் என்ற கருத்து நிலை எண்பதாம் ஆண்டுகளில் மேலோங்கி வந்தது.

பிரிவினைவாதம் முறியடிக்கப்பட்டுள்ளது. பேரினவெறி சிறுதேசிய இனங்களை வன்மத்துடன் ஒடுக்கும் என்ற அந்தப் பிரிவினை வாதிகளது கருத்து வென்றுள்ளது. இப்போதும் பிளவற்ற இன ஒற்றுமையைப் பேச இயலுமா? இலங்கைக்குள் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையகத் தேசங்கள் ஒன்றுடன் ஒன்று வலுமையுடன் போராடிக் கொண்டிருக்கின்றன என்ற நிதர்சனத்தை எந்த இலட்சியவாதங்களாலும் மூடிமறைத்துவிட இயலாது. அதற்காக எழுபதாம் ஆண்டுகளில் இதே தேசங்களுக்குரிய மக்கள் இலங்கையர் என்ற ஒரே தேசத்து மக்களாகச் சோசலிஸத்தை வென்றெடுப்போம் என உறுதி கொண்டு போராடினார்கள் என்ற யதார்த்தத்தையும் எவரும் கவனங்கொள்ளாது இருந்துவிட இயலாது.

பிளவுபட்டிருப்பதும் மெய்யே - மெய்யே! ஒன்றுபட்டுப் போராட இயலாதென்பதும் பொய்யே - பொய்யே!

சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறை எங்கே, எப்படி இருக்கிறது என்பதற்குப் பூதக்கண்ணாடி வைத்தா பார்க்க வேண்டும்? தமிழ், முஸ்லிம் தேசங்களின் கோரிக்கைகளுக்குப் பணிந்துவிடாத வலுவான சிங்களத் தேசத்தின் அரசொன்று வேண்டும் என்ற மக்கள் தீர்ப்பைக் கோரித் தெளிவான சிங்கள அரசைத்தானே ராஜபக்ச சகோதரர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்தச் சிங்களத் தேசத்துடன் இணக்க அரசியலை மேற்கொள்கிற தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் உள்ளனர். அத்தகையவர்களை இனத்துரோகிகளாகக் கணித்து எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பதையே சிறுதேசிய இனங்களுக்கான பொதுப் பண்பாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தும் உள்ளது.

எதிரணியில் இருந்தபடியே 'துரோகம்' இழைத்த முஸ்லிம், மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் பற்றிய சர்ச்சை இன்று மேற்கிளம்பி வந்துள்ளது. ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் சிலவற்றைப் பிரதமருக்குப் பகிர்ந்தளித்த 19வது திருத்தம் அகற்றப்பட்டு ஒற்றை அதிகாரத்துடன் ஜனாதிபதி முறை பிரயோகப்பட ஏற்றதான 20வது திருத்தம் 'தனிச்சிங்கள அரசால்' (ஏற்கனவே அவர்களுடனுள்ள 'ஒத்தோடிகள்' இருந்த போதிலும்) நிறைவேற்ற இயலாததாக இருக்கும் நிர்ப்பந்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே 20வது திருத்தம் சட்டமாக இயலும் என்ற காரணத்தால் தனிச்சிங்களத் தூய்மைக்கு அப்பால் 'எதிரித் தேசங்களது' கலப்பையும் உள்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம்!

இருபதை ஆதரித்த மலையகத் தமிழ் அரசியல்வாதியை தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து தூக்கிவீசிவிட்டோம் என்று அந்த அமைப்பின் தலைவர் கூறிவிட்டார். இலங்கைத் தமிழ் தேசியம் தான் ஆண்டபரம்பரைக் கெத்துடன் எதிர்ப்பு அரசியலை நடத்தும் என்றில்லை, நாங்களும் அதே கெப்பருடன் என்று தவறுகளில் பங்குகோரும் பக்குவத்தை மலையகத் தேசியமும் எட்டிவிட்டதற்கான உதாரணம் இது. இந்தத் தலைவர் கடந்த வருடம் தொலைக்காட்சி விவாதம் ஒன்றின் போது சக பேச்சாளருக்கு மூஞ்சையில் தண்ணீரை அடித்து அந்தப் பக்குவத்தை ஏற்கனவே வெளிப்படுத்தி இருந்தவர். எதிரணித் தலைமை 20ஐ எதிர்த்து வாக்களித்து உள்ள நிலையில் தனியொருவர் மறுத்தோடியது தவறுதானே எனச் சொல்லப்படலாம். இந்த அமைப்புக் கூடி விவாதித்து எடுத்த முடிவை அதன் உறுப்பினர் மீறியிருந்தால் அதன் தலைவர் தான் தோன்றித்தனமாக தூக்கியெறிந்து விட்டதாக கூறுவதற்கு நியாயமுள்ளது. அவ்வாறில்லாத செம்மறியாட்டு அமைப்பில் தப்பியோடும் ஆட்டை குற்றம் சொல்லிப் பயன் இல்லை. இப்படி நடந்த பின்னர் கூட அமைப்பைக் கூட்டிக் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர முயலாது ஒரு தலைவர் எதேச்சாதிகாரம் காட்ட இயலும் எனில் இத்தகைய மீறலும் இயல்பான ஒன்றே!

இத்தகைய காட்டுத் தர்பாருக்குப் பெயர் போன கூட்டமைப்பு இது போல முஸ்லிம் கட்சிகள் நடந்துகொள்ளவில்லையே என்ற குற்றச்சாட்டை முன்வைக்கிறது. கூட்டமைப்பின் பேச்சாளர், முஸ்லிம் கட்சித் தலைமைகள் இரட்டை வேடம் போடுகின்றன, தாம் எதிர்ப்பது போலக் காட்டிக்கொண்டு உறுப்பினர்கள் வாயிலாக இருபதை வெற்றிபெற வைத்துவிட்டனர் என்கிறார். அதன் பின்னரும் விலக்கிவிட முற்படாமல் சூழ் நிலையின் கைதிகள் நாம் எனத் தலைவர்கள்!

இருபதை ஆதரித்து வாக்களித்த முஸ்லிம் உறுப்பினர்கள் தமது கட்சி முடிவைத் தாம் மீறவில்லை என்பதனாலேயே கட்சியிலிருந்து தங்களை நீக்க இயலவில்லை என்கின்றனர். அவ்வாறெனில் இரட்டை வேடம் எனும் குற்றச்சாட்டு உண்மையா? எதிர்த்து வாக்களிப்பது என்ற கட்சி முடிவு

*தொடர்தல் 9ம் பக்கம்*



# தேசம் - தேசியவாதம்...

**8ம் பக்கத் தொடர்ச்சி...**

(அவ்வாறு தனித்தனியே அந்த கட்சிகளும் அப்படி முடிவெடுத்துவிட வில்லை) எதிரணிக்கு உரியது என்ற பொழுதிலும் முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதி முறை நீக்கப் படலாகாது என்ற முடிவுடனேயே கடந்த காலத்தில் செயற்பட்டு வந்துள்ளன. தமது கட்சிகளது அந்த முடிவுப் பிரகாரம் ஜனாதிபதி பலத்துடன் இருக்க வேண்டும் என்ற காரணத்தாலேயே திருத்தத்தை ஆதரித்தோம் என்பது 'தப்பி யோடிய ஆடுகள்' கூற்று!

தமிழ் தலைமைகள் இவைகுறித்து மக்கள் அபிப்பிராயத்தை அறிந்தனரா? முஸ்லிம்களது பொது உணர்வைப் புரிந்து கொள்ள முயன்றிருக்கிறார்களா? முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஜனாதிபதி முறையின் சில சாதகங்கள் குறித்த கரிசனை உடையவர்கள் என்பதனாலேயே சூழ்நிலையின் கைதிகள் என்று தலைவர்கள் சொல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் எனும் புரிதலின்றி முஸ்லிம் தேசத்தை மீண்டும் எதிரி நிலைக்குத் தள்ளுவது ஆரோக்கியமான அரசியல் முன்னெடுப்பாகாது!

## தேசிய வாதங்களைக் கடத்தல்:

தேசங்கள் ஒவ்வொன்றும் தத்தமது நலன்களை வென்றெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உடையன. இதனைப் போதிய அளவு கவனங்கொள்ளாமல் ஒட்டுமொத்த விடுதலையில் சமத்துவத்தை வென்றெடுத்துவிட இயலுமெனக் கருதிய எழுபதாம் ஆண்டுகளின் நிலைப்பாட்டில் இப்போதும் இருந்துவிட இயலாது. அதேவேளை பிளவுபட்ட தேசியவாத மோதல்கள் எந்தவொரு தேசிய இன நலனையும் வென்றெடுக்க இடந்தராது என்ற அனுபவத்தையும் கண்டடைந்திருக்கிறோம்.

தமிழினத் தேசியம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய பொழுது முஸ்லிம் தேசியத்துடன் வலுவான ஐக்கியத்தைப் பேண வேண்டும் என்ற புரிதலின்றித் தவறுகள் சிலவற்றை இழைத்திருந்தது. அதைப் பயன்படுத்திய பேரினவாத அரசு முஸ்லிம் தேசியவாதத்தை ஈழத் தமிழருக்கு எதிரான ஒரு ஆயுதமாக்கிக் கொண்டது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் முஸ்லிம் தேசத்தின் மீதான பேரினவாத ஒடுக்குமுறை மிகக் கொடூரமாக வெளிப்பட்டு வந்ததைக் காண்கிறோம்.

இத்தகைய சூழலில் முஸ்லிம் தேசியவாதிகள் சிலர் தமிழ் தேசியவாத சூழ்ச்சிகளுக்கு ஆட்படாமல் சிங்கள அரசுக்கு ஒத்துழைக்கவே விரும்புகிறோம் என்று வெளிப்படையாக சொல்வதையும் காண்கிறோம். அதன்பொருட்டே இருபதை ஆதரித்தோம் என்ற தர்க்கம் கூட முன்வைக் கப்பட்டிருந்தது. சிறு தேசிய இனங்கள் தமக்குள் ஒன்றுபட இயலாவகையில் தேசியவாத முடக்கங்கள் இயங்கும் பாங்குடையன என்பதனையே இத்தகைய செயற்பாடுகளில் இருந்து கண்டுணர இயலுமாகிறது.

இங்கேதான் எமக்கான மீட்சி எங்கே சாத்தியம் என்ற தேடல் அவசியப்படுகிறது. மற்றவரை எதிரியெனக் கணித்து மோதியவரை அழிவுகளையே சந்தித்து வந்துள்ளோம் தேசங்களாக இயங்க அவசியமுடைய அரசியல் - பொருளாதார நிதர்சனத்தைக் கவனங்கொள்கிற அதேவேளை தேசியவாத முடக்கங்களுக்கு ஆட்படாமல் பிறர் நலன் குறித்த புரிதலுக்கு இடமளித்து மீட்சிக்கான அமைப்பாக்கத்தை வென்றெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிங்கள மக்கள் மத்தியில் மீட்சிக்குரிய அமைப்பாக சோஷலிஸம் உள்ளது என்ற புரிதல் வலுவுடன் உள்ளது. அதன் காரணமாகவே 'இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு' என்ற சொல்லாடலை அரசியல் யாப்பு ஒப்புக்கேனும் சொல்ல நேர்ந்தது. சோஷலிஸத்தின் அடிப்படை வந்தமைய வேண்டுமாயின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருப்பது அவசியமானதாகும். அதிகாரத் தரப்பாரிடம் அதற்கான புரிதல் இல்லை என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. மக்கள் விடுதலையை முன்னிறுத்தி இயங்குகிற இடதுசாரிகளில் பெரும்பாலானவர்களிடமும் கூட சுயநிர்ணய உரிமை குறித்த அக்கறை ஏற்படாதிருப்பது மிகப்பெரும் துரதிர்ஷ்டம். சுயநிர்ணய உரிமையைக் கெட்ட சொல்லாகக் காட்டியவாறே சோஷலிஸத்தை வெற்றி கொண்டுவிட இயலும் என்ற வாதம் அர்த்தமற்ற ஒன்று.

சுயநிர்ணய உரிமை குறித்த புரிதலை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தத் தவறிய குற்றம் பாரதூரமானது. ஆதிக்க சக்தி தமிழ் தேசியத்தை ஒடுக்கும் யுத்தத்தை முன்னெடுத்த பொழுது போராடும் அணியை அழிப்பதை முன்னுரிமைப் படுத்துவதை விடவும் சுயநிர்ணய உரிமையை முதலில் வழங்கியாக வேண்டும் என வலியுறுத்தி இருக்கவேண்டும். வலியுறுத்தவில்லை என்பதற்கு அப்பால் யுத்தம் தீவிரமாக முனைப்பாக்கம் பெற வேண்டும் என்பதையே சிங்கள இடதுசாரிகளில் பெரும்பாலானோர் முன்வைத்தனர் என்ற வரலாற்றுத் தவறு பாரதூரமானதொன்றாகும்.

இதன் பெறுபேறு என்னவாக அமைந்தது என்பதும் மறைபொருளாகத் தான் உள்ளது. யுத்தத்தை முடித்து வைத்தது இந்தியா. அதற்குக் கைமாறாக இலங்கையின் இறைமை இந்தியாவிடம் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. இலங்கையைக் கபளீகரம் செய்யும் பொருட்டாகவே முப்பது வருட யுத்த வளர்ச்சிக்கான பின்புலக் களத்தை வலுவுடன் வழங்கி இந்தியா செயற்பட்டிருந்தது. அந்தத் தேவை முடிந்தபோது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இலங்கையின் அதிகாரத்தரப்புடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டது.


சிங்களப் பேரினவாதிகள் சிலர் தாம் வெற்றிபெற்றதான கற்பிதத்துடன் இந்தியா எமது நாட்டைக் கட்டுப்படுத்த இயலாது என்று கொக்கரிப்பதுண்டு. மக்களுக்கும் இறைமையை நாடு இழந்துவிட்டது என்ற புரிதல் இல்லை. ஆட்சியாளர்களுக்கு இந்தியாவை மீறிச் செயற்பட இயலாத எல்லை பற்றித் தெளிவாகத் தெரியும். தமது வரையறை பற்றி அலட்டிக் கொள்வதை விட மக்கள் மீது தமது அதிகாரத்தை வலுப்படுத்துவதே அவர்களுக்கான அக்கறை.

அவர்களும் சரி உலக மேலாதிக்கத்தால் வளத்தை ஒட்ட உறிஞ்சும் அமெரிக்காவும் சரி சோஷலிஸம் கெட்ட சொல் என பிரசாரம் செய்ய அவசியம் உண்டு. ஆதிக்கங்களைத் தகர்த்து விடுதலையை வென்றெடுக்க வேண்டிய தேசங்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் சோஷலிஸம் கெட்டவிடயமாக இருக்க இயலுமா? உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் சோஷலிஸம் மிகப் பயனுள்ளது என்பதனாலேயே சுரண்டிக் கொழுக்கும் அதிகாரக் கும்பலால் வெறுக்கப்படுவதாக உள்ளது.

இது, இருவேறு உலகத்து இயற்கை நியதி!

raveendran.n@thaiveedu.com







நாம் அனைவரும் நினைத்துப்
பார்ப்பதற்கென ஒரு நாள்
இருக்கிறது

எல்லாப் பின்னணிகளையும்
கொண்ட ஒன்ராறியோவாசிகள்
எமது நாட்டுக்குப் பெருமையுடன்
பணியாற்றியுள்ளனர்.

இந்த நினைவு நாளில், நமது
பெருந்தகையாளர்களுக்கு
மரியாதை செலுத்த எங்களுடன்
இணைந்திடுங்கள்.

நவம்பர் 11
ontario.ca/RemembranceDay





ஒன்டாரியோ அரசால் செலவு
செய்யப்படுகிறது

பொப்பி மலரின் வடிவமைப்பானது கனடிய படையணியினதும்
தனனாட்சியுடையை அரசினதும் வரத்தக முத்திரை குறியீட்
என்பதுடன்
அதன் உரிமத்தின் அனுமதியுடன் இது பயன்படுத்தப்படுகின்றது.

Ontario

COMMITTED TO EXCELLENCE

Ravi Kana Broker

Call me now to get your HOME SOLD 416-725-7284

21



CENTURY 21
Percy Fulton Ltd.
BROKERAGE

Hall of Fame
Centurion Award Winner
1999-2019

2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200

*Independently Owned And Operated* ™ Registered Trademarks of Century 21 Real Estate LLC Used Under License.
Not intended to solicit buyers or sellers currently under contract.

Ravi Kana
Broker
Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com

# இந்தியத் தேர்தல் முறையில் மாற்றம் தேவை

- நெல்லை ஜெயசிங் -

மக்கள் தொகை பெருகியுள்ள இன்றைய காலகட்டத்தில் மக்கள் அனைவரும் நேர டியாக ஆட்சியில் பங்குபெறுவதென்பது நடைமுறைச் சாத்தியம் இல்லாத நிலை யில், அதனை நிறைவேற்ற தமக்கான பிரதிநிதிகளை தேர்வு செய்கின்ற முறை மைக்கு பெயர்தான் தேர்தல். வாக்குரிமை உள்ள நாடுகளில் மட்டுமே இது சாத்தி யமாகும். உலக நாடுகளில் நடைபெறும் பல்வேறு பட்ட தேர்தல் முறைகளில் மக் களுக்கான உண்மையான பிரதிநிதித்து வம் கிடைத்தால் மட்டுமே அங்கு உண் மையான ஜனநாயகத்தை காண முடியும். இன்றைய காலகட்டங்களில் நடைபெற்று வரும் தேர்தல் முறைகளில் உண்மையான சனநாயகம் நிலைநிறுத்தும் படுகிறதா? மக்கள் பிரதிநிதித்துவம் மக்களின் எண் ணிக்கைக்கு ஏற்ப கிடைக்கப் பெறுகிறதா? இவை பற்றி ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இந்தியா உட்பட ஏராளமான நாடுகளில் பிரித்தானிய தேர்தல் முறைமையே பின் பற்றப் பட்டு வருகிறது. அதாவது அளிக் கப்பட்ட வாக்குகளில் 50%க்கு மேல் பெற் றவர் என்ற நிலை இல்லாமல் போட்டியா ளர்களில் அதிக வாக்குகள் பெறுபவரை தேர்ந்தெடுக்கும் முறையாகும். குறைந் தளவு அரசியல் ஈடுபாடும், குறைந்தளவு மக்கள் தொகையும், சிறிய எண்ணிக்கை யிலான கட்சிகளும் இருந்த ஆரம்பகால கட்டங்களில் இத்தேர்தல் முறை நியாய மானதாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று அதிக அளவிலான மக்களின் அர சியல் ஈடுபாடும் பலதரப்பட்ட சமூகங்கள் பரந்துபட்டு வாழும் நிலையில் இத்தகைய தேர்தல் முறைகளால் எல்லோரும் பிரதி நிதித்துவம் பெறுகின்ற உண்மையான சன நாயகத்தை நிலை நிறுத்த இயலாது. தற்போதைய தேர்தல் முறையில் 10 - 12% வாக்குகள் மட்டுமே பெற்றவர் வெற்றி பெறும் சூழ்நிலை உள்ளது. அதாவது வெற்றி பெற்ற வேட்பாளர் பெற்ற வாக்கு களை விட அவர் பெறாத வாக்குகளே அதிகமாக இருக்கும். கடந்த காலங்களில் இந்தியா, பிரிட்டன், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற தேர்தல் முடிவு களை கூர்ந்து கவனித்தால் மக்களுக்கான பிரதிநிதித்துவம் எந்தளவு கிடைக்கவில்லை என்பதை காணலாம்.

## இந்திய தேர்தல் முடிவுகள்:

இன்றைய தேர்தல் முறையில் வாக்களித்த மக்களுக்கான பிரதிநிதித்துவம் சரிவரக் கிடைக்கவில்லை என்பதற்கு இந்தியாவில் கடந்த காலங்களில் நடந்த தேர்தல் முடி வுகள் தெளிவாக காட்டுகின்றன. உதாரண மாக கடந்த 2014ல் நடந்த இந்திய நாடா ளுமன்ற தேர்தலில் 31.34% விகிதத்துடன் 17,16,60,230 வாக்குகளைப் பெற்ற பார திய ஜனதா கட்சி 282 இடங்களைப் பெற 10,69,35,942 வாக்குகளையும் 19% என்ற விகிதத்தையும் பெற்ற காங்கிரஸ் 44 இடங் களை மட்டுமே பெற முடிந்தது. இதே போன்று தமிழக சட்ட சபைக்கான 2011ம் ஆண்டு தேர்தலில் 51.93% வாக்குகளைப் பெற்ற அ.தி.மு.க. 203 இடங்களைப் பெற, 39.53% வாக்குகளைப் பெற்ற தி.மு.க. கூட்டணி வெறும் 31 இடங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதே போன்று வரலாற்று சிறப்புமிக்க 1967 ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்ட சபைக்கான தேர்தலில் 40.69% விகிதத்து டன் 62,30,556 என்ற எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற தி.மு.க. 137 இடங்களைப் பெற, 41.10% விகிதத்துடன் 62,93,378 என்ற வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 51 இடங்களை மட்டுமே பெற்று ஆட்சியை இழந்த சனநாயக முரண் பாட்டை காணலாம். எனவே இவ்வாறு பிரதிநிதித்துவ சபைகளுக்கு தேர்ந்தெடுக் கப்படும் தேர்தல் முறையில் பரவலாக மக்களின் பிரதிநித்துவம் நிராகரிக்கப் படு கின்ற போக்கையே காணமுடிகிறது.

## பிரித்தானிய தேர்தல் முடிவுகள்:

மேற்குறிப்பிட்ட தேர்தல் முறையை பல நாடுகளில் விரிவு படுத்திய பெருமை பிரித் தானியாவிற்கு உண்டு. அந்த நாட்டிலும் கூட இதுபோன்ற குறைபாட்டைக் காண லாம். 2005ஆம் ஆண்டு நடைபெற்ற பிரித்தானிய தேர்தலில் 95,52,436 என்ற எண்ணிக்கையும் 35.02% விகித வாக்குக ளையும் பெற்ற தொழிற்கட்சி 355 இடங் களைப் பெற, கன்சர்வேடிவ் எனப்படும் பழமைவாத கட்சி 87,84,915 வாக்குகளை யும் வாக்களிப்பில் 32.04% விகிதத்தையும் பெற்ற போதும் 198 இடங்கள் மட்டுமே பெற முடிந்தது. மேலும் 2015 தேர்தலில் 4.07% வாக்குகளைப் பெற்ற SNP கட்சி 56 இடங்களைப் பெற 7.09% வாக்குகளைப் பெற்ற லிபரல் கட்சி 8 இடங்களை மட் டுமே பெற முடிந்தது. அதைவிட UK INDEPENDENCE PARTY 12.09% வாக்கு களைப் பெற்ற போதும் 1 இடம் மட்டுமே பெற முடிந்தது. எனவே பெருமளவு மக் களின் விருப்பத்திற்கு உரிய பிரதி நிதித் துவம் இத்தேர்தல் முறையில் பெற முடி யவில்லை என்பதையே மேற்படி தரவுகள் காட்டுகின்றன.



1978ல் அரசியல் அமைப்பு சட்டம் திருத்தப் படும் வரை இலங்கையிலும் இதே வகை யான தேர்தல் குறைபாடு நீடித்தது. உதா ரணமாக 1970 தேர்தலில் 18,39,979 எண் ணிக்கையிலான வாக்குகளையும் 36.86% வீதத்தையும் பெற்றிருந்த இலங்கை சுதந் திரக் கட்சி 91 இடங்களைப் பெற்றது. 37.91% வீத வாக்குகளையும் 18,92,525 வாக்குகளையும் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சியை விட அதிக வாக்குகளைப் பெற்றபோதும் 17 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. எனவே இவைகளை அவதானிக்கும் போது உண் மையான மக்களாட்சி தத்துவம் குழி தோண்டி புதைக்கப்படும் நிலைமையை காண முடிகிறது. எனவே கட்சிகள் பெறும் வாக்கு விகிதத்திற்கு ஏற்ப அக்கட்சிகளுக் கான பிரதிநிதித்துவம் ஆட்சி மன்றங்களில் இது போன்ற தேர்தல் முறையில் கிடைக் கப்போவதில்லை என்பது தெளிவாக தெரி கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இது போன்ற குறைபாடுகள் என்பது நாடாளுமன்ற தேர் தல், மாநில சட்டசபைக்கான தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் என அனைத்து இடங்களிலும் காணப்படு கின்றன. இந்திய தேர்தல் வரலாற்றில் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் எந்த ஒரு கட்சியும் 50% வீதத்திற்கு மேல் பெற் றதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக ஒரு அமைப்பின் கொள் கையானது பெரும் பகுதி மக்கள் மீது திணிக்கப்படும் நிலை உருவாகும். இதற்கு இன்றைய பாஜக ஆட்சியின் செயல் பாட்டை ஆதாரமாகக் கூறலாம். கடந்த தேர்தலில் 37% வாக்குகளை மட்டுமே பெற்ற பாஜக மக்களின் விருப்பு வெறுப் புகளை கருத்தில் கொள்ளாது தனது RSS சித்தாந்தங்களை சட்டமாக்கி நடை முறைப்படுத்தும் போக்கை கொண்டிருப் பதை காணலாம். இதனால் எதிர்காலத்தில் தேசத்திற்கு பாதிப்பு ஏற்படலாம்.

## விகிதாசார தேர்தல் முறை:

இவ்வாறு தொகுதி முறையிலான தேர்தல் முறையில் உள்ள குறைபாட்டை நீக்க இந்தியா போன்ற நாடுகள் முன்வர வேண் டும். இதற்கு நம் கண்முன்னே இருக்கும் தீர்வு விகிதாசார தேர்தல் முறையாகும். இது மக்கள் பிரதிநிதித்துவத்திற்கான சிறப் பான ஏற்பாடாக கருதப்படுகிறது. பல இன, மத, மொழி கொண்ட இந்தியாவிற்கு இது அவசியமான ஒன்றென ஆய்வாளர் கள் நெடுங்காலமாக கூறிவருகின்றனர்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறை என்பது பரந்துபட்ட தேர்தல் மாவட்டங்களின் அடிப் படையில் கட்சிகள் பெற்ற வாக்கு விகி தத்திற்கு ஏற்ப பிரதிநிதிகளை தெரிவு செய்திடும் முறையாகும். விகிதாசார பிரதி நிதித்துவ தேர்தல் முறை மூலம் இன, மத, மொழி, ஜாதி வேறுபாடுகள் பெரு மளவு குறைய வாய்ப்பு உண்டு. தனி மனிதர் இங்கே முன் நிறுத்தப்படுவ தில்லை, கட்சிகளே பெருமளவு முன் நிறுத்தப்படும். ஜாதிய வாதம் தலை விரித்தாடும் இந்தியா போன்ற நாடுகளில் பல தரப்பட்ட சமூகத்தவர்கள் வாழும் நிலையில், மக்கள் தமக்குரிய சரியான பிரதிநிதித்துவத்தை பெற இன்றைய தேர் தல் முறையை அகற்றி, மாற்றாக விகி தாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை மையை இந்தியா போன்ற நாடுகள் கொண்டு வர வேண்டும். இதன் வாயிலாக உண்மையான சனநாயக பெரும்பான்மை நிலைநிறுத்தப்படும்.

## இலங்கையில் விகிதாசார தேர்தல்:

மேற் கூறப்பட்ட குறைபாட்டை போக்கும் வகையில் இலங்கையில் 1978 இல் அர சியல் அமைப்பு திருத்தம் கொண்டு வரப் பட்டு இன்றுவரை விகிதாசார பிரதிநிதித் துவ தேர்தல் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதனடிப் படையில் இலங்கை முழுமையும் 22 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள் ளன. மாவட்ட வாக்காளர்கள் கட்சி அல் லது குழுக்களின் அடிப்படையில் தமது விருப்ப வாக்குகளைப் பதிவு செய்வார்கள். அதன் பின்னர் கட்சிகள் பெற்ற வாக்கு களின் அடிப்படையில் 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வாவதுடன் தேசிய அளவில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் மேலும் 29 பேர் தேர்வாக இறுதியில் 225 பேர் பாரா ளுமன்ற பிரதிநிதிகளாவர். அறுதிப் பெரும் பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரத மராவார். எனவே இதன் வாயிலாக ஆரோக் கியமான அரசாங்கம் அமைய விகிதா சார தேர்தல் முறை சிறந்தது என்பதை இலங்கை தேர்தல் முறை நமக்கு தெரி யப்படுத்துகிறது.

இந்திய தேர்தல் முறை இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். இந்தியாவில் நாடா ளுமன்ற தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையில் பல பேர் ஒரு தொகுதியில் போட்டியிடுகின்றனர். அவர்களில் 30% விகித வாக்காள மக்கள் தமக்குரிய பிரதி நிதித்துவத்தை இழக்கும் முறை விகிதா சார தேர்தலில் ஏற்படாது. நடைமுறையில் இதனை பார்த்தோமேயானால் இலங்கை யில் 2015ல் நடந்த நாடாளுமன்ற தேர்த லில் 45.66% விகிதமும் 50,98,916 என்ற எண்ணிக்கையிலான வாக்குகளையும் பெற் றிருந்த ஐக்கிய தேசிய கூட்டணி 106 இடங்களை பெற, சுதந்திரக்கட்சி கூட்டணி 42.38% விகிதமும் 47,32,664 என்ற எண் ணிக்கையிலான வாக்குகளையும் பெற்று 95 இடங்களை பெற முடிந்தது. கொழும்பு, கண்டி, நுவரெலியா போன்ற மாவட்டங் களில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் வாழும் மலையக தமிழ் சிறு பான்மையினரும் இதன் வாயிலாக தமக் கான பிரதிநிதித்துவத்தை பெற முடிந்துள் ளது. எனவே இன்றைய இந்திய தேர்தல் முறையில் மாற்றம் என்பது விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை கொண்டு வருவதாகும். இதன் மூலம் சாதிய மோதல்கள், சாதியின் பெயரால் நடைபெறும் கொடூரங்கள், சமூக கொடு மைகள் குறைய வாய்ப்பு கிடைக்கும். அதிகப்படியான மக்களின் ஆதரவு பெற்ற

*தொடர்தல் 12ம் பக்கம்*

# இந்திய தேர்தல்...

**11ம் பக்கத் தொடர்ச்சி...**

கட்சியின் ஆட்சி ஏற்படும். எனவே குறை பாடு கொண்ட இன்றைய தேர்தல் முறை யில் மாற்றம் செய்து விகிதாசார பிரதி நிதித்துவத்தை நோக்கி இந்திய சனநா யகம் செல்ல வேண்டியது மிகவும் அவசி யமாகும்.

இந்தியாவில் மாநிலங்கள் அவைக்கு மட் டும் விகிதாசார அடிப்படையிலேயே கட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அதாவது அந்தந்த மாநில மக்களின் தொகைக்கு ஏற்பவே இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. உதாரணமாக மக்கள் தொகை யும் சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகம் உள்ள உத்தரப் பிரதேசத்திற்கு 31 பிரதி நிதித்துவமும் அதைவிட குறைவான மக் கள்தொகை கொண்ட தமிழ்நாட்டிற்கு 18 பேர் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது தங்கள் மாநில சட்ட மன்றங் களில் பெற்றுள்ள இடங்களின் அடிப்படை யில் மாநிலங்கள் அவைக்கு உறுப்பினர் களை கட்சிகள் தெரிவு செய்யலாம் என் பதாகும். எனவே இதேபோல் நாடு முழு வதற்குமான தேர்தலின் போது விகிதாசார தேர்தல் முறையை பின்பற்றும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதன் வாயிலாக பெருவாரியான மக்களின் பிரதிநிதிகளை கொண்ட ஆட்சி முறை ஏற்பட வாய்ப்பு உருவாகும். அதுவே ஆரோக்கியமான ஜனநாயமாக அமையும்.

## இந்திய தேர்தலில் வேறு சில குறைபாடுகள்:

### குற்றப் பின்னணி உள்ள ஆட்சியாளர்கள்:

இந்திய தேர்தலில் குற்றப் பின்னணி உள்ளவர்கள் பெருமளவு போட்டியிடும் போக்கை காணமுடிகிறது. இன்றைய மாநில முதல்வர்களில் 35% பேரும் MP, MLAக்களில் 36% பேரும் குற்ற பின் னணி உடையவர்கள் என கண்டறியப்பட் டுள்ளது. ஆளும் உத்தரப்பிரதேச அமைச் சரவையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் மீது குற்றவியல் வழக்கு இருப்பதாக கண்டறி யப்பட்டுள்ளது. பிரதிநிதித்துவ சபைக ளுக்கு தெரிவானவர்களில் பலர் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல், லஞ்ச ஊழல், சொத்து குவிப்பு என பல்வேறு குற்றச் சாட்டுகளுக்கு உள்ளானவர்களாக இருக் கின்றனர். இவ்வாறு குற்ற வழக்கு உள்ள வர்களை தேர்தலில் போட்டியிட அனும திப்பது இந்திய மக்களாட்சி முறையை பலவீனப்படுத்துவதாகும். இத்தகையோர் தேர்தலில் போட்டி இடுவதை தடுக்கும் வகையில் தேர்தல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

### இந்திய தேர்தல் ஆணையம்:

இந்திய குடியரசு தலைவர் தொடங்கி கிராம பஞ்சாயத்து வரை அனைத்து அமைப்புகளுக்குமான தேர்தல்களை நடத் திட அரசியல் அமைப்பு சட்டப்படி மத்தி யிலும் மாநிலத்திலும் தேர்தல் ஆணை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் நேர்மையாக விருப்பு வெறுப்பின்றி எவ்வ மைப்பையும் சாராமல் நடந்து கொள்ள வேண்டுமென அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் பெருமளவிற்கு ஆட்சியாளர்களுக்கு சாதகமாகவே இவர் கள் நடந்து கொள்கின்றனர். இதனால் இந்திய தேர்தல் ஆணையத்தின் மீது அண்மைக்காலங்களில் மக்களும் எதிர்க் கட்சிகளும் பெரும் அதிருப்தியை தெரி வித்து வருவதை காணலாம். இவர்களின் ஒரு சார்பு செயல்பாடுகள் ஜனநாயக மாண்புகளை பலவீனமாக்கிவிடும். தேர்தல் ஆணையமானது தன்னாட்சி பெற்ற சுதந் திரமான அமைப்பு என கூறப்பட்ட போதும் நியமனத்தின் போது தங்களுக்கு சாதக மாணவர்களை ஆட்சியாளர்கள் தெரிவு செய்வதால் அவர்களுக்கு சாதகமாக நடக்க முற்படுகின்றனர். எனவே தேர்வு முறையில் அரசியல் தலையீடு இல்லாத நிலையை உருவாக்க வேண்டும்.

### தேர்தல் செலவு:

உலகிலேயே தேர்தலுக்காக அதிக செலவு செய்திடும் நாடு இந்தியாவாகும். ஒப்பீட் டளவில் அமெரிக்க தேர்தல் செலவை விட இந்திய தேர்தல் செலவு 30% அதி கமாகும். தேர்தலை நடத்த ஆணையம் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 6500 கோடி செலவிட்டுள்ளது. கட்சிகள் செல விடுவது அதை விட பல மடங்காகும். நாடாளுமன்ற தொகுதிக்கு போட்டியிடும் ஒருவர் அதிகபட்சமாக 70 இலட்சம் செலவிட அனுமதிக்கப்படுகிறார். ஆனால், ஒருவர் 10 கோடிக்கு மேல் செலவிடுவ தாக அறியப்படுகிறது. 2014ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போது 35000 கோடியும், கடந்த 2019 தேர்தலுக்கு 5775 கோடி மட்டுமே செலவிட்டிருக்க வேண்டிய நிலையில் வேட்பாளர்கள் 50,000 கோடி வரையும் செலவிட்டுள்ளதாக டெல்லி ஆய்வு நிறுவனம் ஒன்று கூறுகிறது. ஓட் டுக்கு பணம் கொடுப்பதும் ஓட்டுக்கு பணம் வாங்குவதும் குற்றம் என தேர்தல் விதி கூறிய போதும், ஓட்டுக்கு பணம் கொடுக்கும் போக்கு வளர்ந்தே வருகி றது. தினக் கூலிகள் அதிகம் வாழும் நாடு இந்தியா. இதனை பயன்படுத்தும் அரசியல் வாதிகள் உள்ளூராட்சி தேர்தல் வரைக்கும் கூட மக்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை முறை கேடாக பெற்று வரும் நிலை இந்தியாவில் சக ஜமாகிவிட்டது. தேர்தலின் பின்னர் போட்ட பணத்தை தேடிக்கொள்ளலாம் என்ற எதிர் பார்ப்பில் கறுப்பு பணம் தண்ணீராக செல விடப்படுகிறது. இந்திய தேர்தல் ஆணை யமும் இதனை ஒத்துக்கொண்டு தடுக்க முடியவில்லை என்ற உண்மையையும் ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தகைய முறை யற்ற நிலைமை இருப்பதால் சேவை செய்ய எண்ணம் கொண்ட பணபலம் இல் லாதவர்களால் தேர்தலில் போட்டியிட முடி யாத நிலை காணப்படுகிறது. அரசியல் என்பது பெருமளவு சொத்து சேர்க்கும் துறையாக மாற்றப்பட்டுவிட்டது. இதனை தடுக்க ஆணையம் நடுநிலையுடன் செயல் படுவதுடன் கடுமையான தண்டனைகளை வழங்கவும் முன்வர வேண்டும்.

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்:

வாக்குச்சீட்டு முறையை பயன்படுத்தி வந்த இந்தியா பல கட்ட சோதனைக்குப் பின் னர் 2004 முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை நாடாளுமன்றம் மற்றும் சட்ட சபை தேர்தல்களில் பயன்படுத்தி வருகிறது. பல நாடுகள் இம்முறையில் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் நம்பகத் தன்மை குறைவு என காரணம் கூறி பயன் படுத்துவதை தவிர்த்து வருகின்றன. இன் னும் சில நாடுகள் மின்னணு இயந்திரங் களை பயன் படுத்தி பின்னர் இடை நிறுத்தி உள்ளன. அரசியல் அமைப்புக்கு இது எதிரானதென ஜெர்மன் நீதித்துறை குறிப்பிட்டமையால் 2009 முதல் அந்நாடு வாக்குச்சீட்டு முறையை மீண்டும் பயன் படுத்தி வருகிறது. இந்தியாவிலும் பல கட்சிகளும் அரசியல் ஆய்வாளர்களும் மின்னணு இயந்திர பயன்பாட்டை எதிர்த்து வருகின்றனர். அதில் நம்பகத்தன்மை இல்லை என்ற போதும் அதனை நிரூ பிக்க முடியாதிருக்கினறனர். இந்தியாவில் எழுத படிக்கத் தெரியாதோர் என பல கோடி பேர் இருக்கின்றனர். டிஜிட்டல், மின் னணு பயன்பாட்டை அறிந்திராத பல கோடி ஏழைகள் வாக்குச்சீட்டு முறையை பெரிதும் விரும்புகின்றனர். கல்வி மற்றும் தொழில் நுட்பத்தில் அபரிதமான வளர்ச்சி உள்ள அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, கனடா என ஏராளமான ஜனநாயக நாடு களில் இன்றுவரையும் வாக்குச்சீட்டு முறை யும் நடைமுறையில் இருக்கிறது. எனவே இந்திய தேர்தல் ஆணையம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பயன்பாட்டை மறு பரிசீலனை செய்வது அவசியமாகும்.

### கட்சி தாவல்:

இந்திய அரசியலில் சொத்து குவிப்பு என் பது சர்வசாதாரணம் என்ற நிலை இருந்து வருகிறது. சேவை என்ற நிலை தாண்டி செல்வத்தை அபரிமிதமாக குவிக்கலாம் என்பதால் நாணயம், நேர்மை மறைந்து கடும் போட்டிக்களமாக அரசியல் மாறி விட்டது. அதன் காரணமாக தேர்ந்தெடுக் கப்பட்ட எதிர்க் கட்சிகளிலிருந்து ஆளும் கட்சிக்கு மாறும் போக்கும் வளர்ந்து வரு கிறது. எனவே இதனை தடுக்கும் நோக் கத்துடன் 1985இல் கட்சி தாவும் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி ஒரு வர் கட்சியிலிருந்து விலகினால் அல்லது கட்சி கொறடா உத்தரவை மீறி நடந்து கொண்டால் உறுப்பினர் பதவி இழப்பார் என கூறப்பட்டது. எனினும் ஒரு கட்சியி லிருந்து 2/3 பேர் விலகி வேறு கட்சியில் இணைந்தால் அது கட்சி பிளவாக கருதப் படுவதுடன் கட்சி தாவலாக கருதப்படாது என கூறப்படுகிறது. இதனால் இதனை பயன்படுத்தி ஆளும் கட்சி எதிர்க் கட்சி உறுப்பினர்களிடம் பண பேரம் பேசி அவர் களை கட்சி தாவச் செய்வது இந்தியாவில் நடந்து வருகிறது. உதாரணமாக கோவா மாநிலத்தில் பாஜக, 15 உறுப்பினர்கள் உள்ள காங்கிரஸிலிருந்து 10 உறுப்பினர் களை தமது கட்சியில் இணைத்து ஆட் சியை தன் வசமாக்கியுள்ளதை காணலாம். கட்சி மாறுவோர் அமைச்சர் பதவியும் பெற்று வருகின்றனர். இது போன்று சுய நலத்திற்காக மக்கள் அளித்த விருப்ப வாக்குக்கு மாறாக கட்சி மாறுவது குறிப் பிட்ட தொகுதி மக்களுக்கு செய்கின்ற துரோகமாகும். இது ஆட்சி கவிழ்ப்புக்கும் அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாத நிலை ஏற்படுவதற்கும் வழிவகுக்கும். இலங்கை யில் கட்சி தாவல் தடைச்சட்டம் இல்லாத தால் பலர் தேர்தலின் பின்னர் பதவி சுகத் திற்காக கட்சி மாறி வருவதையும் காண லாம். எனவே இந்தியாவில் கட்சி தாவல் தடைச்சட்டம் கடுமையாக்கப்படும் வகை யில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இந்தியா உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு. மற்றைய நாடுகளுக்கு முன் உதார ணமாக மக்களாட்சியின் மாண்புகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமை யும் அதற்கு உண்டு. கட்சிகள் தமது சுயநல எண்ணத்தை கைவிட்டு காலத் திற்கு உகந்த மாற்றங்களை அரசியல் அமைப்புக்கள் ஊடாக படிப்படியாக நிறைவேற்ற முன்வர வேண்டும்.



jeyasingh@thaiveedu.com

**JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.**

*"We provide reliable year around Tax and Accounting services."*

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Starting from
$24.90 Plus tax

Phone: **(647)- 351- 5622 / (416)- 722-5338** Fax: **(647)- 351- 5620**
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
**jmaccfinancial@gmail.com**

mia sarees

Timeless Elegance

Unique Collections

Latest Trends

Bridal Selections Pure Silk Sarees Soft Silks Casual & Fancy Sarees



25 Karachi Drive, unit 18
Markham, ON
Tel: 647-339-4642

www.miasarees.com

miasarees

TRUE HAIR
REPLACEMENT

LET US MAKE YOU FEEL
YOUNGER AND MORE CONFIDENT
WITH VISIBLE RESULTS FOR YOUR HAIR LOSS.

WE USE ONLY TOP-QUALITY HUMAN HAIR
BEING IN THE BUSINESS OVER 30 YEARS WE TAKE GREAT PRIDE IN OUR WORK.
LET US TRANSFORM YOUR LOOK!!!

பண்டிகைக் காலப் பரிசாக உங்கள்
அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.

CALL US TO BOOK YOUR FREE CONSULTATION
416-492-7873



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# என்று தீரும் இந்த இனவாதம்?

**- த. சிவபாலு -**

‘இனப் பாகுபாடு’ என்ற சொல் இனம், நிறம், வம்சாவளி, தேசிய அல்லது இனத் தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு வேறுபாடு, விலக்கு, கட்டுப் பாடு அல்லது விருப்பத்தேர்வைக் குறிக் கும்.

1948ல் ஐ.நா.வால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைப் பிரகடனத்தின் இரண்டா வது வாசகம் பின்வருமாறு: ‘இந்த பிரக டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு அனைவருக்கும் உரிமை உண்டு, இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எந்த வேறுபாடும் இல்லாமல். மேலும், ஒரு நபர் சொந்த மான நாடு, பிரதேசத்தின் அரசியல், அதிகார வரம்பு அல்லது அனைத்துலக அடிப்படையில், அது சுயாதீனமாக இருந் தாலும், நம்பிக்கையாக இருந்தாலும், சுயராஜ்யமற்றதாக இருந்தாலும், இறை யாண்மையின் வேறு எந்த வரம்பின் கீழும் வேறுபாடு காட்டப்படலாகாது.’ என வரை யறுக்கின்றது.

ஆனால், பாகுபாடு காட்டப்படும் நிலைமை இன்றும் பல நாடுகளிலும். சமூகங்களிலும் தீராத, தீர்க்கப்படாத ஒன்றாக உள்ளது. இனம், நிறம், வயது, சமயம், பாலினம், தொழில் போன்ற பல் வேறு நிலைகளில் பாகுபாடு காட்டப்படு வதும் ஒதுக்கப்படுவதும் இன்றும் இடம் பெறுவதனைக் காண முடிகின்றது.

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு*

- குறள்: 734

என வள்ளுவப்பெருந்தகை காண விழைந்த நாட்டை இன்றும் காண முடியாத நிலை உலகில் உண்டு.

1945ல் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பு போரில்லா உலகைக் காண உருவான அமைப்பாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால் இன்றும் அந்த நிறுவ னம் கையாலாக தன்மையைக் கொண்ட தாக அமைவதற்கு அந்த நிறுவனத்தில் மேலாண்மை செலுத்தும் வல்லரசுகளே காரணம் என்பதனைச் சுட்டிக்காட்ட முடி யும்.

உலகின் பலபாகங்களிலும் இனவாத அரக்கத்தன்மைக்குச் சாவுமணி அடிக்க வேண்டும் என்னும் நோக்குடன் பல நிறு வனங்கள் செயற்பட்டு வருகின்றன. உலகை ஆட்டிப்படைத்த இனத்துவேஷம் கொண்ட ஹிட்லர் அணியின் ஃபாசிஸ சித்தாந்தத்தை அடியோடு களைய வேண் டும் என்னும் நோக்கில் நடத்தப்பட்ட இரண்டாம் உலக யுத்தத்தின் பயனாக 1945ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பட்டயம் ஐக்கிய நாடுகள் அமையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது உலகில் உள்ள நாடுகள் அனைத் தாலும் பின்பற்றப்படல் வேண்டும் என் னும் கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை மனித உரிமைகள் பட்டயத்தின் முதலா வது சரத்தின் வாசகம் கூறுகின்றது.

மனித உரிமைகள் பட்டயம் எழுதப்பட்டு 72 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ‘பழய குருடி கதவைத்திறவடி’ என்று இருப்பதால் நாம் மனித உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கோஷத்தை கைவி டாமல் மேலும் இறுகப் பற்றிப் பிடிக்க வேண்டிய தேவை உள்ளது. இனத்துவே ஷம், வகுப்புவாதம், இனஒதுக்கல் என் பன பணிஇடங்கள், பொது இடங்கள், பாடசாலைகளில் தனது விசுவரூபத்தைக் காட்டுகின்றன. ஹிட்லரின் ஃபாசிஸ பட்ட றைக்குள் சிக்கித்தவித்த யூத இனத்தினர் தம் நிலையை மறந்து ஹிட்லர் செய்த அதே தவறைச் செய்பவர்களாக பாலஸ் தீனியர் மீது தமது மேலாண்மையை, அராஜகத்தைக் கட்டவிழ்த்து யாரும் தட் டிக்கேட்காத நிலையில் செயல்படுவது எந்தவகையில் நியாயமானது?

அவர்களது எச்சசொச்சங்கள் அவர்களுக்கு எதிராகப் போராடியோர், பாதிப்புக்குட் பட்டோர் எல்லாம் இன்று இனவாதத்தின் உச்சியில் இருந்து அராஜகம் செய்வதை யாரும் தட்டிக்கேட்க முடியாதவர்களாக இருக்கும் நிலை வெள்ளிட மலை. மக் கள் உலகின் பலபாகங்களிலும் அவதிப் படுவதனைக் கண்டு மனவேதனை கொள் வதனை விட வேறு எதுவும் செய்ய முடி யாது என்பது பலரது மட்டுமல்ல பல நாட்டு அரசுகளினதும் ஆதங்கமாக இருந்து வருகிறது. ‘தட்டிக்கேட்க ஆள் இல்லையானால் தம்பி தண்டப்பிரதண் டம்’ என உலகில் நிலைமை மோசம-டைந்து வருகிறது.

ஒரு பின்லாடனையும் அவனது சகாக்க ளையும் பிடிப்பதற்காக ஒரு நாட்டையே அழிவுக்குள்ளாக்கிய அமெரிக்க ஏகாதி




பத்திய சண்டியரின் அடாவடித்தனத்தை யாரும் தட்டிக்கேட்க முடியாவில்லை. சாடிக்கேற்ற மூடியாக அமெரிக்க அரசின் மேலாதிக்கப் போக்கு ஏனைய பல நாடு களை அழிவுப்பாதையில் இட்டுச் செல் வதனை காண்கின்றோம். பல நாடுகளில் உள்நாட்டுப் போர்களைத் தூபமிட்டு வளர்த்துவிட்டு அந்த நாடுகளையே அழித் தொழிக்கும் கைங்கரியத்தை அமெரிக்க அரசு மேலைநாடுகளின் ஆதரவோடு செய்துவருகிறது. ‘சீனாவில் ஜனநாயகம் இல்லை, ரஷ்யாவில் ஜனநாயகம் இல்லை, அங்கு மனித உரிமைகள் பின்பற்றப்படு வதில்லை’ எனப் பிதற்றிக்கொண்டு உல கின் பலபாகங்களிலும் தமது அராஜகத் தைக் கட்டவிழ்த்து விடுகின்ற நிலையைக் காண்கிறோம்.

எந்தவித ஈவிரக்கமுமின்றி ஆஃப்கான் மக்களைக் கொலை செய்வதோடு கைப் பற்றப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற ஆஃப்கான் அரசுக்கு விசுவாசமாக இருந் தவர்களையும் ஆஃப்கானிய போர்வீரர்க ளையும் தமது கியூபாவின் இராணுவத ளத்திற்குக் கொண்டு சென்று சித்திர-வதை செய்யப்பட்டமையை வெளிச்சம் போட்டுக் காட்டியமையால் அங்கிருந்து பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ‘ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி’ என் பதாக உள்ளது அமெரிக்கா மேற்கொள் ளும் நடவடிக்கைகள். விரும்பியோ விரும் பாமலோ கனடாவும் அமெரிக்காவின் செயல்கள், சொற்களுக்கு ‘ஆமாம்’ போடும் ஆசாமியாக இருந்து வருகிறது என்பது கனடிய விவகாரங்களைப் பார்க் கும் போது புலனாகும். நாங்கள் போராட மாட்டோம், எமது போர்வீரர்கள் நடுநி லையாளர்களாக அமைதி காக்கத்தான் போகிறார்கள் என்று சொன்ன கனடிய பாதுகாப்பு அமைச்சர் அங்கு கனடிய போர்வீரர்கள் தலிபான் அரசாங்கத்தின் இராணுவச் சிப்பாய்களை அதுவும் ஆயத் தங்களைக் கைவிட்டுச் சரணடைந்தவர்

*தொடர்தல் 16ம் பக்கம்*

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2010 - 2019)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# என்று தீரும்...

**15ம் பக்கத் தொடர்ச்சி...**

களை அமெரிக்க இராணுவத்திடம் கையளிக்கும் கையாலாகாத்தனத்தை மூடி மறைக்க முனைந்து பாராளுமன்றத்திற்கு உள்ளே ஒரு கதையும் வெளியே இன்னொரு கதையும் எனத் தடம் புரண்டு பேசியதை, எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் நன்றாகப் பதம்பார்த்ததை மறந்து, இன்று பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுகின்றோம் என்று பிதற்றுவது எவ்வளவுக்கு நியாயமானது? மக்கள் இதற்கு விருப்புத் தெரிவித்தார்களா? அது ஜனநாயக தார்மீக அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவா என்பதைத் தெளிபடுத்துவார்களா? அல்லது மனித உரிமை மீறல் என்பதனை அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

பின்லேடன் கும்பல் செய்த செயலுக்கு உலகில் உள்ள அத்தனை முஸ்லிம்களும் காரணிகளா? அல்லது அது அமெரிக்காவின் எண்ணெய்வள நாடுகளை அடிமைப்படுத்த வேண்டும் என்னும் ஏகாதிபத்தியக் கொள்கையின் பிரதிபலிப்பா?
தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாகக் கொண்டுவந்தவர்களை ஈவிரக்கமின்றி கொடுமைப்படுத்தியதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியோர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களை மறந்து விட முடியாமா?

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது அமெரிக்காவில் வாழ்ந்த ஜப்பானியர்களின் குடும்பங்களைத் தனிமைப்படுத்தி அவர்களது வீடுகளையும் உடமைகளையும் கையகப்படுத்தி அவர்களை அடிமைகளிலும் கேவலமாக நடத்தியது அமெரிக்க, கனடிய அரசுகள். இன்று அதற்காக மன்னிப்புக் கோருகின்றார்கள். அவ்விதமே இந்த நிலத்தின் மைந்தர்களான பூர்வகுடியினரை விரட்டி கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்த இரத்தக்கறை படிந்த வரலாறு இந்த இருநாடுகளின் பெருமையாகுமா? விலங்குகளின் தோல்களைப் பெற்றுக் கொண்டு அதற்காகத் துணிகளைத்தருகின்றோம் என சின்னம்மை, சின்னமுத்துப் போன்ற பல்வேறு நோய்களைப் பரப்பி இந்நாட்டின் மூத்த குடியினரை அழித்த வெள்ளைப் பிரபுக்களின் கபடத்தனத்தை மறந்துவிட முடியுமா?

செப்டம்பர் 11, 2001ல் அமெரிக்க இரட்டைக்கோபுரங்கள் விமானத்தால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கனடி யமண்ணில் உள்ள இந்துக்கோயில்கள் தாக்கப்பட்டதனையும் பள்ளிவாசல்களுக்குத் தீயிட்டுக் கொழுத்தியதனையும் பார்க்கும்போது கனடாவில் மனித உரிமைகள் மீறப்படுவதில்லை, உலகில் அதி உன்னத நாடு கனடா என்று எப்படிச் சொல்ல முடியும்?

2006.02.07ல் ரொறன்ரோவில் இனத்துவ சமத்துவத்துக்கான அமைப்பினால் மேற் கொள்ளப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துரை தெரிவித்த இனத்துவ சமூகங்களின் தொடர்பு அதிகாரியும் ஆலோசகருமான மயூரிஸ் பேணர் அவர்களும் கனடா இனத்துவ தொடர்பகத்தின் நிறைவேற்று அதிகாரி கலாநிதி கெரன் மொக் அவர்களும் இனத்துவேசம் கனடாவில் காணப்படுகின்றமையை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டுள்ள போதும், பதிவு ஆதார அடிப்படையில் மிகக் குறைந்தளவே எனக் காட்ட முற்பட்டதனை, திரு. பட்டேல் அவர்களும் கலாநிதி கனகசூரியர் அவர்களும் வகுப்புவாதம் என்பது ஒரு இனத்துக்குள்ளேயே காணப்படுவதனையும் வகுப்புவாதம், இன ஒதுக்கல் என்பனவற்றிற்கு எவ்வாறு நாம் முகம் கொடுக்க வேண்டும் என்பதனையும் எடுத்து விளக்கி, கனடாவில் நியமனங்கள், வேலைத்தலங்களில் கூடியளவு இனத்துவேசம் காணப்படுவதனை சுட்டிக் காட்டினர்.

கனடிய அரசினால் ஒதுக்கப்படுபவர்கள் வந்தேறுகுடிகள் மட்டுமல்ல, இந்நாட்டில் பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் ஆதிகுடி இனத்தினரையும் அரசு ஒதுக்கித் தள்ளுகின்றது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக உள்ளது. கனடிய குடியியல் மற்றும் பாரம்பரிய பண்பாடு அலுவல்கள் அமைச்சரான டயானி புல்போட் அவர்கள் பூர்வகுடிகளின் பிரச்சினைகள் உண்டு என்பதனை ஒப்புக்கொண்டுள்ள போதும், அவற்றைத் தாம் 2017க்கு முன்னர் தீர்த்துவிடுவோம் என ஜெனீவாவில் மனித உரிமைகள் நிறுவனத்தில் (2007) குறிப்பிட்டது கருத்திற்கொள்ளத்தக்கது. 'A Canada for All' என்ற மாயையை மக்கள் முன் வைத்து அரசியல் கலப்படம் செய்யும் அரசியல்வாதிகள் தாம் இனவாதத்தை குறைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக்கொள்வது வெறும் ஏமாற்றுவித்தை ஆகும்.

எரிக்கா லோசன் என்னும் இளம் ஆபிரிக்க கனடியர் 'தென் ஆபிரிக்காவில் இனத்துவேசம் இன்றும் காணப்படுகின்றது. சில இடங்களுக்கு கறுப்பர்கள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. உலகெங்கும் ஜனநாயகத்தின் பெயரால் மனிதக் கொலைகளைச் செய்யும் அமெரிக்காவிலும் அதற்குத் துணைபோகும் கனடாவிலும் இனத்துவேசம் பெருமளவில் உண்டு, என்பதனைச் சுட்டிக்காட்டினார். இவர்களால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதனை எப்படி நம்ப முடியும் அல்லது பாதுகாக்கத்தான் முடியுமா என்று கேட்கும் அவர், கனடாவிற்கு குடிவரவாளர்கள் தேவை; ஆனால் ஆசிய ஆபிரிக்கரின் வருகையை அவர்கள் வெறுப்புத் தோடு கல்வித்தகைமை அடிப்படையில் இனஒதுக்கலை பின்பற்ற அவர்கள் முயல்வது வெளிப்படையே, எனவே நாம் இதற்கு எதிராகப் போராட ஒன்றிணைதல் வேண்டும்' எனக்குறிப்பிட்டார்.

ரொறன்ரோ கல்விச்சபை உறுப்பினர் போலின் லிங் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது (2006) 'இனவாதத்தை ஒருநாளில் ஒழித்துவிட முடியாது. அது படிப்படியாக அகற்றப்பட வேண்டியது. அதற்கு நாம் எல்லோரும் இணைந்து செயற்படவேண்டும்' எனக்குறிப்பிட்டமையும் கனடாவில் இனத்துவேசம் உண்டு என்பதனை வெளிக்கொண்டு வருகின்ற ஒரு கூற்றாயாம்.

இன்று பலஸ்தீனியர் மீது பயங்கரவாத முலாம் பூசப்பட்டு அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல் அவர்களை ஈவிரக்கிமின்றிக் கொன்று குவித்து வருகின்றது. ஐ.நா.வினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைக்கூட உதாசீனம் செய்து தான் நினைத்ததை நிறைவேற்ற பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஜெருசலேம் திருத்தலத்துக்குள்ளேயே புகுந்து அடாவடித்தனம் செய்கிறது. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஏதும் செய்ய லாயக்கற்றவர்களாக இருப்பது விந்தையாக உள்ளது. உலகின் பெரிய சண்டியனுக்கு எதிராக யாரும் வாய்திறக்க அஞ் சுவதனையே இது எடுத்துக்காட்டுகின்றது. இஸ்ரேல் செய்யும் அடாவடித்தனத்தைத் தட்டி நிறுத்தவேண்டிய தேவை எல்லா உலகநாடுகளுக்கும் உண்டு என்பதனை யாரும் மறுக்க முடியாது. சண்டியனின் பிழையைச் சரி என்று சொன்னால் அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் நிலைமை எப்போ மாறுகின்றதோ அப் போதுதான் உலகின் சமத்துவம், சமாதானம், நீதி நிலவும். இல்லையேல் வலியாரை மெலியார் வதைக்கும் நிலையே தொடரும்.

ஒக்ரோபர் 14, 1973ல் பிறந்தவர் ஜோர்ஜ் ஃபுளொயிட் என்னும் ஆபிரிக்க அமெரிக்கர். டெறக் சூவன் என்னும் நகர்காவலரால் நடுவீதியில் வைத்துக்கழுத்து நசுக்கப்பட்டு மே 25, 2020 அன்று கொல்லப்பட்டுள்ளார். அதற்கு உடந்தையாக அவரோடு வந்த காவலர்களும் இருந்துள்ளனர். 20 டொலர் கள்ளத்தாளைக் கொடுத்தார் என்னும் குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டு கைவிலங்கிடப்பட்டார். அதன் பின்னர் அவரை நிலத்தில் வீழ்த்தி கழுத்தை நசுக்கிக் கொன்றுள்ளனர். அதுவும் பட்டப்பகலில், பலர் முன்னிலையில். பாதிக்கப்பட்டவர் 'மூச்சுத் திணறுகின்றது என்னை விடுங்கள்' என மன்றாடியுள்ளார். இந்த நிகழ்வு அமெரிக்காவில் ஆபிரிக்க அமெரிக்கரை மட்டுமல்ல, ஒடுக்குமுறைக்கு எதிரானவர்களை ஒண்றுகூடித் திரண்டெழச் செய்தது. அமைதியைப் பாதுகாக்கும் நீதியை நிலைநாட்டும் நகர்காவல் படையினர் இந்த அநீதியான செயற்பாட்டில் ஈடுபட்டனர். அவர் உயிர் போவதற்கு காரணமானவர் ஒரு வெள்ளையினப் பொலீசார் என்பது உலகம் அறிந்த விடயம். நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் இவற்றை நொடிப்பொழுதில் உலகறிய வைத்தன.

கனடாவின் எட்மண்டன் நகரில் செப்டம்பர் 20, 2020 அன்று மாட்டி பவுடன் என்னும் கறுப்பு இனத்தவர் ஏழுமுறை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். முன்னர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதால் பொலீசாரோடு முரண்பட்டு மறியலுக்குச் சென்று விடுதலை பெற்றவர். அவரிடம் ஆயுதம் இருப்பதாகத் தகவல் கிடைத்த தாக பொலீசார் குறிப்பிட்டுள்ளனர். அவரிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை என அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர். ஏழுமுறைகள் சுட்டதற்கான காரணத்தைப் பொலீசார் கூறவில்லை. அதிகாரம் கையில் இருப்பதனால் தாம் நினைத்தவற்றைச் செய்யலாம் என்பது அதிகார வர்க்கத்தின் நினைப்பும் செயற்பாடாகவும் தொடர்கின்றது.

மறதி நோயினால் பாதிக்கப்பட்டுத் மூளை தடுமாறிய நிலையில் இருந்த இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 62 வயது சௌத்ரி என்பவரை, கையில் கத்தி வைத்திருந்தார் என்பதற்காக விசாரணை ஏதுமின்றி 22 யூன் 2020 அன்று பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர். குடும்பத்தவர்கள் அவரைச் சமாதானப்படுத்துகின்றோம் என்று சொல்லியும் எதனையும் செவிமடுக்காது வீட்டினுள் நுழைந்து சுட்டுக்கொன்றமை குடும்பத்தவர்களை விசனம் அடையச் செய்துள்ளது.

என்னதான் அகதிகளை ஏற்றுக்கொள்ளுகின்றோம், எமக்குத் தேவையான வேலையாட்களை வரவேற்கின்றோம் என்றாலும் கனடாவில் வெள்ளை இனத்தினரின் எண்ணிக்கையை விட மற்றைய இனத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளும் ஒரு இரகசிய திட்டம் அரசினால் இயக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது என்பதும் கருத்திற்கொள்ளத் தக்கது. மனித இனம் உள்ளவரை இனத்துவம் என்பது ஒழியப் போவதில்லை, இனங்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்தாவிட்டாலும் இனரீதியாக அழிவு ஏற்படாமல் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பது முக்கியமானதாகும். இனம், மதம், மொழி என்னும் அடிப்படையில் மனிதரை மனிதர் அழித்துக்கொள்ளும் அநாகரீகம் அழிந்து போரில்லா உலகம் காணப்பட வேண்டும். மக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், நீதி நிலை நாட்டப்பட வேண்டும்.

*புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரோடு*
*சாய்ப்போம்*
*பொதுஉடைமைக் கொள்கை திசை*
*எட்டும் சேர்ப்போம்*
*புனிதமோடு அதை எங்கள் உயிர்*
*என்று காப்போம்*
*இதயம் எலாம் அன்பு*
*நதியினில் நனைப்போம்*
*இது எனது என்னும் ஓர்*
*கொடுமையைத் தவிர்ப்போம்*

என்னும் பாரதிதாசனின் கனவு உலகில் பலிக்கும் நாள் எந்நாளோ என ஏங்குறும் உலகில் அமைதி நிலவுமா அல்லது அழிவுகள் தவிர்க்கப்படுமா என்பதே பாதிப்பிற்கு உள்ளாகும் நெஞ்சங்களின் ஏக்கமாகும். மக்கள் சக்தியே மகத்தானது. மக்கள் எழுச்சிபெறும் போதுதான் இத்தகைய இன ஒதுக்கல், இனபேதம் போன்றவற்றை அழிக்க முடியும்.

sivapalu@thaiveedu.com



***தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# RESIDENTIAL SECOND MORTGAGES FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY

Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS



## PURCHASE AND REFINANCE

- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down (some conditions may apply)



"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE

**T. Antony Ponrajah**
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

**416.457.0651**
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
**Tel: 416.431.5115**

# Sky Route Courier Services

## Worldwide & Domestic Courier Service

◙ Compare ◙ Save ◙ Send

♦LOCAL ♦PROVINCIAL ♦NATIONAL ♦INTERNATIONAL

" Lot Cheaper Than You Think"

upto **70% Discount from Major Courier Companies**

**416.297.7368**

**www.skyroutecourier.com**

**Affordable Courier Rates For Individuals and Businesss**

285 Milliken Blvd, unit 30
Scarborough, ON
Off: 416-297-7368

EXPRESS DELIVERY

# BUYING OR SELLING

## Residential, Commercial, Land & Investment Properties

### For Sellers:

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- WIll pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

SATHY & NITHY REAL ESTATE TEAM



### For Buyers:

- Will find the home in any area within your budget
- Get you the lowest mortgage. rate

**NITHY**
**SATHYAKUMAR**
Sales Representative
**Dir: 416.728.2454**
Email: realtornithy@gmail.com

**SATHY**
**SIVASUBRAMANIAM**
Broker
**Dir: 416.624.5044**
Email: realtorsathy@gmail.com

**16th Avenue / 9th Line** $1,550



FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

**Morningside / Finch** $1,200



FOR LEASE — BEDROOMS:1+1 WASHROOMS:1

**Pharmacy Ave/Lawrence Ave** $1,600



FOR LEASE — BEDROOMS:3 WASHROOMS:1

**Victoria Park / Ellesmere** $2,000



FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

**Rossland/Wilson** $599,900



FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

**Crowder Blvd / Leslie St** $549,900



FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:2

**Simcoe/Britannia** $509,000



FOR SALE — BEDROOMS:4 WASHROOMS:3

**Yonge/Front** $659,000



FOR SALE — BEDROOMS:1+1 WASHROOMS:1

**King/Blue Jays** $699,000



FOR SALE — BEDROOMS:1 WASHROOMS:1

**Lawrence Ave E/Orton Park** $699,000



FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

**Finch / Victoria Park** $759,000



FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:2

**Hoover Park/Tenth Line** $769,900



FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

**Brock/Hwy 2** $799,000



FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

**Dufferin/Summeridge** $889,000



FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

**Markham/Sheppard** $799,000



FOR SALE — BEDROOMS:4+2 WASHROOMS:3

**Pharmacy/N.Eglinton** $838,000



FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

RE/MAX Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800

Web: realtorsathy.com

# சாதிக் கோவில்களும் நவீன தீண்டாமைகளும்

**- சுலோச்சனா -**


அண்மையில் கிளிநொச்சியில் உள்ள பெரிய பரந்தனில் உள்ள பிள்ளையார் கோவிலொன்றில் பாடசாலையில் உயர் தரம் படிக்கும் மாணவர் ஒருவரை நவராத்திரி காலத்தில் தேவாரம் பாட நிர்வாகத்தினரால் அனுமதி வழங்கப்பட வில்லை என்ற விவகாரம் ஊடகவியலாளர் ஒருவரினால் வெளிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த பிரச்சினை சமூக விவகாரமாக மாறியது. கோயில் நிர்வாகத்தினருக்கு சமூக அழுத்தங்கள் உருவாக, குறித்த பிரச்சினை தொடர்பில் அவர்கள் பொறுப்புக் கூற வேண்டிய நிலை உருவானது. ஆனால், குறித்த பிரச்சினை இப்பொழுது கையாளப்பட்டுக் கொண்டிருக்கும் முறைமை அந்த மாணவருக்கோ அவருடைய குடும்பத்தினருக்கோ நீதியானதாக இருப்பதற்குப் பதிலாக ஆதிக்க சாதியைச் சேர்ந்த அக் கோயிலின் நிர்வாகத்தினரை மென்மையாக அணுகும் போக்கே நிலவுகின்றது. அதே நேரம் பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த அக்குடும்பத்தை இப்பிரச்சினைக்குப் பின் நெருக்கடிக்கு உள்ளாக்கும் போக்கும் தொடர்கின்றது.

இப்பிரச்சினையைப் பற்றிச் சற்று விரிவாகப் பார்க்கலாம். பெரிய பரந்தனில் உள்ள ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த குடும்பமொன்றை பல காலமாக அங்கிருக்கும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த தரப்பினர் பல்வேறு வகையான ஒடுக்குதல்களுக்கும் பாரபட்சங்களுக்கும் உள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அவர்களின் மூத்த தலைமுறை தொடக்கம் இன்றிருக்கும் இளைய தலைமுறை வரை வேறு வேறு வடிவங்களில் ஒடுக்குதல்கள் தொடர்கின்றன. மிக அண்மைக் கால சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்தால், வன்னியில் இறுதி யுத்தம் முடிவடைந்தமைக்குப் பின்னர் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீளக் குடியமர்ந்தார்கள். யுத்தத்திற்குப் பின்னரான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் செயற்பாடுகளில் 'சாதி' நுட்பமான வகையில் செயற்பட்டிருந்தது. ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் நிர்வாக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவர்களுக்கிருக்கும் நெருக்கங்களையும் பலங்களையும் பிரயோகித்து உட்கட்டமைப்புசார் வசதிகளான வீடமைப்பு, வீதி புனரமைப்பு, மின்சார வசதிகள் போன்ற வற்றை தமக்கே முதன்மையானதாகக் கிடைக்கும் வழிகளை உண்டாக்கினர். எண்ணிக்கைக் கணக்கிற்கு ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களின் விபரங்களைப் பயன்படுத்திக் கொள்ளுபவர்கள், தந்திரமாக அவர்களை பின்தள்ளி, அவர்களையும் சேர்த்தே பயன்படுத்தி தம்மை வளப்படுத்திக் கொண்டனர்.

அபிவிருத்தி சார் நிகழ்ச்சித் திட்டங்கள் இன்றும் தமிழ்ப் பிரதேசங்களில் சாதி அடிப்படையிலான இயங்குமுறையைக் கொண்டிருக்கின்றன. வெளித் தோற்றத்திற்கு அனைவருக்குமானதாகத் தெரியும் இவ் அபிவிருத்திகள் மேற்சொன்ன முறைகளில் ஆதிக்க சாதிகளின் கைகளில் சென்று சேர்வதாக வரலாற்று ரீதியிலாகக் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒடுக்குமுறையை விளங்கிக் கொள்ளவும் அதனை எதிர்க்கும் பொறிமுறைகளையும் உரையாடல்களையும் நமது சமூகத்தில் உருவாக்குவதற்குப் பெரிய தடையாகவிருப்பது நம் சமூக மனநிலை மற்றும் சாதிய ஒடுக்குமுறை. கடந்த காலங்களைப் போல் நேரடியாக விளங்கிக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக அது தன்னை உருமாற்றம் செய்து கொண்டு நவீன வடிவங்களை எடுத்துள்ளது. ஆகவே 'எங்கே சாதி இருக்கிறது காட்டுங்கள்?' என்று அது ஏதோ கட்டி வைக்கப்பட்ட இடம் போல் கேள்வி கேட்கும் பலர் நம் சமூகத்தில் உண்டு. குறைந்த பட்சம் ஒடுக்குமுறையை உணராமல் இருப்பதுகூட பரவாயில்லை, ஆனால், அதனை நியாயப்படுத்துவதும் மறைக்க உதவுவதும் பெருங்கொடுமை. அநீதி.

இவ்விடத்தில் பெரிய பரந்தனைச் சேர்ந்த அந்த மாணவர் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெளிக்கொண்டு வந்து பேசியது, பெரும்பாலான நேரங்களில் உறைந்து கிடைக்கும் நம் சமூகத்தின் பொதுப்புத்தியை ஓங்கி அறைந்துள்ளது. அம்மாணவர் நடந்த சம்பவம் தொடர்பில் விபரித்ததாவது,

*'வணக்கம், நான் பிள்ளையார் கோயிலுக்கு வந்தனான். தேவாரம் பாடோனும் என்று ஆசையா வந்தனான். இன்றைக்கு சரஸ்வதி பூசை என்று எல்லோருக்கும்*



*தெரியும். சகலகலாவல்லி மாலை பாடோனும் என்று ஆசையா வந்தனான். என்னைத் தேவாரம் பாட வேண்டாம், வெளியில போ என்று கலைச்சுவிட்டிட்டினம். உண்மையா சரியான கவலையாக் கிடக்கு. நாங்கள் தேவாரம் பாடிறதே ஒருத்தருக்கும் பிடிக்கிறேல்ல. எங்கட குடும்பத்தையே முழுசா புறக்கணிக்கிறது. என்ன பிரச்சினை என்று இதுவரைக்கும் தெரியாது. எல்லாரும் சாதி என்று தான் சொல்லினம், ஆனால் எனக்கு அது வடிவா தெரியேல்ல. ஆனால் அதோ முக்கிய பிரச்சினையோ வடிவா தெரியேல்ல. சில பேர் சொல்லினம் படிப்பில பொறாமையென்று, நல்லாப் படிக்கிறோமாம், அதால பொறாமையாம் என்று நிறையக் கதைகள் சொல்லிக்கொண்டிருக்கினம். உண்மையில எனக்கு மனவருத்தமா இருக்கிது. ஆனால் இவையள எதிர்த்துக் கதைக்கிறதுக்கு இங்க ஒருத்தரும் இல்லையெண்டுறதுதான் முக்கிய பிரச்சினை.*

***இன்றைக்கு என்ன காரணம் சொல்லி உங்களைத் திருப்பி அனுப்பிச்சினம்? என்ன சொல்லிச்சினம்?***

*நீ இதில் தேவாரம் பாடாதை, வெளியில போ, அவ்வளவுதான் தலைவர் சொன்னவர். அவர் சமாதான நீதவானும் கூட.*

***இதுக்கு முதல் எத்தனை தடவை இப்படியான சம்பவம் நடந்தது?***

*நாலைஞ்சு தரத்துக்கு மேல நடந்திருக்கு, ஆனா நான் ஊருக்குள்ள பிரச்சினை, வெளியில சொல்லக்கூடாது சொல்லக் கூடாது என்று இருந்தால் இப்படியே ஒதுக்கிக்கொண்டு தான் இருப்பினம். (இந்த உரையாடலின் எழுத்து வடிவம் விதை குழும இணையத்திலிருந்து எடுக் கப்பட்டிருக்கிறது)*

இந்தக் காணொலியைப் பலரும் முகநூலில் பகிர்ந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சிறியளவிலான அழுத்தைத் தொடர்ந்து அரச அதிகாரிகளும், சில மத அமைப்பினரும் கோயில் நிர்வாகத்தினருக்கும் குறித்த குடும்பத்தினருக்கும் இடையில் சமரசம் செய்யும் வேலைகளில் இறங்கினர். இறங்கிய இந்தத் தரப்புகள் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் தரப்பிலிருந்து ஒடுக்குபவர்களைக் கேள்வி கேட்பதையோ அல்லது அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்க வேண்டிய சரியான நீதியையோ பெற்றுக் கொடுக்க முன்நிற்கவில்லை. பதிலாக இணங்கிப் போதல், கை குலுக்குதல், இதற்குப் பின் இப்படி நடக்கக் கூடாது என்று மென்மையாகச் சொல்லுதல் என்றவாறு பிரச்சினையைக் கையாளுகிறார்கள். இதுவொரு நீதியா? இந்த இடத்தில் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தின் மனோநிலையிலிருந்து நாம் சிந்திக்க வேண்டும்.

*'இந்த நிகழ்வு அச்சாதிய ஒடுக்குமுறையை வெளிக்கொண்டு வந்த ஒரு சம்பவம் மட்டும் தான். அந்தக் குடும்பத்தில் இப்போதிருக்கும் அம்மம்மா காலத்திலும் அவருக்கு நினைவு தெரிந்த காலத்திலுமிருந்தே அவர்கள் சாதிய ஒடுக்குமுறைகளை அனுபவித்து வருகிறார்கள். இன்றும் கோயிலில் ஒரு மேசையைப் போட்டு இதற்கு அப்பால் வருவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. ஒரு தடவை அம்மாணவரின் தாயார் கோயிலில் இருந்த மணியொன்றை அடித்தமைக்காக அதைப் பாவிக்கக் கூடாதென்று மடப் பள்ளியில் கிடாரத்தால் மூடி வைத்திருந் திருக்கிறார்கள். நேர்த்திக்காக மாலை கொண்டு சென்றால் 'வேண்டுமென்றால் வாசலில் வைத்து விட்டுப் போ அல்லது வீட்ட கொண்டு போ' என்று ஏசியிருக் கிறார்கள். மாலையைக் கொண்டு சென்ற தன் மகன் அழுவாரைப் போல் நின்றதை அந்தத் தாய் நினைவு கூர்ந்தார். கோயிலில் பூசைகள் நடந்து கொண்டிருக்கும் போதும், வேறு சந்தர்ப்பங்களின் போதும் பல்வேறு தடவைகள் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களை உச்சத் தொனியில் கண்டபடி பேசுகிறார்கள் நிர்வாகத்தினர். அதை ஊரார் வாய் மூடிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தடவை அந்த அம்மம்மாவை அடிக்குமாற்போல் பேசிக் கொண்டு வந்ததையும் சொன்னார்கள், பல தடவைகள் இக்குடும்பம் தொடர்பில் நிர்வாகத்தினர் நடந்து கொண்ட முறைகள் அப்பட்டமான சாதிய வன்மமே. ஆனால், யாரும் எதிர்த்து நின்று அக் குடும்பத்திற்குக் கோயில் என்ற பொது நிறுவனத்திலும் ஊரிலும் கிடைக்க வேண்டிய சுயமரியாதையையும் சமத்துவத்தையும் பெற்றுக் கொடுக்கப் போராடவில்லை. நிலைமையை மாற்றவில்லை. யுத்தத்தின் பின் ஆறு வருடங்களாக மின்சாரமின்றித் தன் மகன்களை படிக்க வைக்கப் பட்டபாட்டைப் பற்றிச் சொன்னார்.' (மேற்கோள் இடப்பட்ட பகுதி விதை குழுமம் பாதிக்கப்பட்ட குடும்பத்தை நேரடியாகச் சந்தித்து உரையாடிய விடயங்கள் தொடர்பான குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது).*

இந்தப் பிரச்சினைகளுக்கு எது தீர்வாக இருக்க முடியும்? அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சமத்துவத்தையும் சமூக மரியாதையையும் உறுதிப்படுத்துவதும் சாதிய வன்மங்களின் நவீன வடிவங்களைக் களைந்தெறிய வேண்டியதும் தான் தீர்வாக இருக்க முடியும். அதற்காக அந்தக் குடும்பத்திற்குப் பக்கபலமாக இருப்பதும் ஆதிக்கத் தரப்பின் சாதிய வன்மத்தை எதிர்ப்பதும் சமூக நீதியுள்ள அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும். ஏனென்றால் சாதிய ஒடுக்குமுறைகள் பாடசாலைகள், கோயில்கள் தொடக்கம் பல்வேறு சமூக நிறுவனங்களில் ஊடும் பாவுமாகப் பின்னிப் பிணைந்தே வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு நோய்க் கொடி. இன்றும் சாதிப் பெயர்களைச் சொல்லிப் பிள்ளைகளை ஏசும் ஆசிரியர்கள் இருந்து வருகிறார்கள். பாரபட்சம் காட்டும் நிர்வாகங்கள் இருக்கின்றன, பொது வசதிகளைத் தாமதப்படுத்துதல், அல்லது ஏதோவொரு வகையில் கிடைத்தாலும் அதைச் சரியாகப் பயன்படுத்தும் வாய்ப்பை இல்லாது செய்தல் அல்லது பராமரிப்பைச் செய்யாமலிருப்பது, கல்வியிலிருந்து விலகிச் செல்லும் மாணவர்களை மீள இணைப்பது தொடர்பில் போதிய அக்கறையின்மை என்று பல்வேறு வகையான சாதியின் பின்னணிகளின் நோய்க் குணங்களை குணமாக்காமல் விட்டு, ஒடுக்குமுறை சமூக வழமையாக மாற்றம் பெற்று விட்டது.

சில காலங்களுக்கு முன் சிறுபான்மைத் தமிழர் மகாசபை நூற்றியிரண்டு கோயில்களை இன்னமும் தீண்டாமை கடைப்பிடிக்கும் கோயில்களாகப் பட்டியலிட்டிருந்தது. ஆனால் ஆழமாக ஆய்வு செய்தால் சில நூறு கோயில்களாவது இன்னமும் அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டியிருக்கும். ஆனால் நாம் நமக்குள்ளே இருக்கும் சாதிய நோயுடன் வாழப் பழகுவோம் என்ற மனநிலைக்கு வந்து சேர்ந்து விட்டோம். ஆனால் உண்மையான அளவில் நம் சமூகம் அதன் புற ஒடுக்குதல்களை எதிர்க்க முடியாமையின் அகக் காரணங்களில் சாதியமும் பெண் ஒடுக்குமுறையும் பெரியதொரு பங்கை ஆற்றுகின்றன. அவற்றை நீக்காமல் நம் சமூகம் எவ்வளவு முயன்றாலும் அது தன்னை ஒடுக்குபவர்களிற்கு எதிராகத் தன்னை ஒழுங்கமைத்துப் போராட முடியவே முடியாது.

sulosana@thaiveedu.com

■ ■ ■



நியூ
# ரங்கனாஸ் நகைமாடம்



சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்

தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்

புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்



647-702-2159 | MARKHAM & STEELES YELLOW BUILING

6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட

உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு

வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.



AATEK
HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280



- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280

# யுத்தம் சுகம் தரும்

**- போல் யோசேப் -**

உளவுத்துறையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து பாதுகாப்புத் துறையின் பல பிரிவுகளும் வேகமாக செயற்படத் துவங்கிக் கொண்டிருந்தன. உள்ளே நுழைந்த எதிரிகளும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. தங்களிடமுள்ள ஆயுதங்களை எந்த நேரத்தில் எப்படிப் பயன்படுத்தி, பாதுகாப்புப்படையின் பல துறைகளையும் சமாளிக்கும் வித்தையில் மிகவும் சிறப்பு நிபுணத்துவம் கொண்டவர்கள்.

இது ஒரு வித்தியாசமான யுத்தமுறை, எதிரி, பாதுகாப்புத் துறையைத் தாக்கி தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மட்டுமேதான் முதன்மையான இலக்கு. இந்த எதிரிகளின் நோக்கம் பாதுகாப்புத் துறையினை முழுமையாக அழிப்பதல்ல. ஒரு வரையொருவர் தாக்கி, பின்னர் சில சமரச முயற்சிகள், சில நாள் பேச்சு வார்த்தைகள், அது மட்டுமல்ல பாதுகாப்புத் துறையினை திசை திருப்பி தங்கள் பக்கம் இழுப்பதற்கான முயற்சிகளும்கூட நடைபெறும்.

எதிரிகளின் நோக்கமெல்லாம் இந்த தே(க)சத்தில் எங்களுக்கும் பங்குண்டு, உரிமையுண்டு, சில நாட்கள் வாழ்ந்து விட்டுப் போகிறோம். கடைசியில் எப்படியிருந்தாலும் ஓர் ஒப்பந்தத்திற்கு முடிவாக வந்தேயாக வேண்டும். அதென்ன வென்றால் இந்த யுத்தத்தில் எதிரிகள் நாங்கள் வென்று நீங்கள் தோற்றால் இருவரும் அழிவது உறுதி, ஆனால் நீங்கள் வெற்றிபெற்றால் எதிரிகள் மட்டுமே அழிவது நிச்சயம்.

'கொரோனா, கொவிட் என்று ஏற்கனவே குழம்பிப் போயிருக்கிற நேரத்தில இந்த ஆள் என்னமோ புதுக்கதை விடுகிறார்' என்று நீங்கள் முணுமுணுப்பதும், கொவிட் காலத்தில் இவரும் கொஞ்சம் குழம்பிப் போயிருக்கிறாரோ என்று சிலர் நினைப்பதும் எனக்குப் புரியாமல் இல்லை.


உடல் எனும் பல ரில்லியன் உயிரினங்கள் கொண்ட இந்த நாட்டில், சில ரில்லியன் பேர் பாதுகாப்புப் பணியில் மட்டுமே தங்களை ஈடுபடுத்திக் கொண்டேயிருக்கின்றனர். இந்த தேகத்தில் மட்டும் நாள் தோறும் பல மில்லியன் பேர் இறப்பதும் பல மில்லியன் பேர் பிறப்பதும் வாடிக்கையான நிகழ்வுதான். அதுமட்டுமல்ல நாள் தோறும் பல மில்லியன் கணக்கான எதிரிகள் உள்ளே நுழைவதும் அவர்களைத் தாக்கி அழிப்பதற்கான யுத்தத்தில் பல மில்லியன் போர் வீரர்கள் தங்களைப் பலியாக்கி தியாகங்கள் செய்வதும் கணப் பொழுதும் நடந்தேறும் ஒரு ஆரோக்கிய மான யுத்தகளம்.

ஆம். நீங்களும் நானும் ஆரோக்கியமாக வாழவேண்டுமென்றால் இந்த தேசத்தில் (தேகத்தில்) இந்தக் கட்டுரையினை நீங்கள் வாசித்து முடிப்பதற்குள் கிட்டத்தட்ட சில ரில்லியன் எதிரிகளும் பாதுகாப்புப் படையின் போர் வீரர்களும் இறப்பதும் பிறப்பதும் நுழைவதும் நடந்தேறியே ஆக வேண்டும். இதுதான் இயற்கையின் விதியும் நியதியும்.

நமக்குள்ளே நாளாந்தம் நடக்கின்ற ஒரு அழகான ஆரோக்கியமான போர்க்களத் திற்குள்ளே ஒரு சின்ன சுற்றுலா செல்லலாமா.

மனிதருக்குள்ளே யார் பெரியவன், யார் முக்கியமானவன், யார் தலைவன், யார் பணியாளன், இனப்பாகுபாடுகள், சாதி வித்தியாசம், நிறவெறி..., இப்படி பல குழறுபடிகள் உண்டு. ஆனால், இப்படி எந்த வேறுபாடுமின்றி சமத்துவமாய், பொதுவுடமைக் கோட்பாடு கொண்ட ஒரு தேசமாய் நம்தேகம். ஒருமுறை யார் பெரியவன், தலைவன் என்ற விவாதம் நடந்து கொண்டிருந்தது. நான்தானப்பா உங்கள் எல்லாரையும் இயக்கி ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்திருக்கிறேன் என்றது மூளை. இல்லையில்லை, நான் கருவறையில் உருவான ஐந்தாவது வாரத் திலிருந்தே துடித்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள் வாழ்வதற்கான வாழ்வாதாரமான இரத்தத்தை தந்து கொண்டிருக்கிறேன் என்று இதயம் திமிராகக் கூறியது. சுவாசப்பை சும்மா இருக்குமா இதயத்தை பார்த்து "டேய் பம்பு செட்டுக்குப் பிறந்த பயலே" என்று கவுண்டமணி பாணில 'இரத்தத்தை வாரி இறைக்கிறது மட்டும் தான் உன் வேலை. நான் மூச்சுவிடுவதால் நீ உயிர் வாழ்கிறாயா அல்லது நீ துடிப்பதால் நான் மூச்சுவிடுகிறேனா என்று ராஜா, பாப்பையா, பாரதிபாஸ்கர் என்று பட்டிமன்ற பிரபலங்கள் இல்லாமலே ஒரு பட்டிமன்றம் நடந்து கொண்டிருந்தது.

இப்படி ஆளுக்காள் ஒவ்வொரு உறுப்பும் தலைமைப் பதவிக்கு அமெரிக்க அதிபர் தேர்தலில் நடக்கும் கூத்துப்போல விவாதங்கள் சூடேறிக் கொண்டிருக்க கடைசி-



வரை எதுவும் பேசாமல் பொறுமையாய் அமைதியாய் இருந்த மலக்குடல், நான் சில நாட்கள் மௌனவிரதம் இருக்கப் போகிறேன். எனக்கு கொஞ்ச நாள் ஓய்வு தேவை என்று விண்ணப்பம் மட்டும் போட்டு விட்டு உங்களில் யார் தலைவன் என்று முடிவு செய்துவிட்டு வாருங்கள் என்றது.

மலக்குடலின் மௌனப் போராட்டம் வெற்றி பெற்றது. ஆம் சில நாட்களில் மலச்சிக்கல் ஏற்பட எல்லா உறுப்புகளும் மலக் குடலிடம் சரணாகதியாகிட தலைவா நீ தான் எங்கள் நிரந்தரத் தலைவன் என்று புகழாரம் சூட்டினர். இது ஒரு கற்பனையென்றாலும் உண்மையும்தான். உடலிலுள்ள பல ரில்லியன் கலங்களில் ஒரேயொரு கலம் மட்டும் தன் செயற்பாட்டையும் கட்டமைப்பையும் சிறிது மாற்றிக் கொண்டாலோ அல்லது உடலின் ஒழுங்கு முறைக்கு மாறாக செயற்பட்டாலோ அந்த மாற்றம் அதனைச் சுற்றியுள்ள கலங்களிலும் பிரதிபலிக்கும். பிறகு சில கலங்கள் இணைந்து ஒரு குழுவாகச் செயற்படத் தொடங்கும். இதற்கு ஆரம்பத்தில் உடலிலுள்ள உளவுத் துறையும் பாதுகாப்புத் துறையிலுமுள்ள வெள்ளை அணுக்களும் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கும். இந்த எதிர்ப்பை சமாளிக்க கலங்களிலுள்ள டிஎன்ஏக்கள் தங்களை எதிரிகள் போல காட்டாமல் இருப்பதற்கான அத்தனை திருகுதாளமும் செய்து அவற்றை ஏமாற்றி எந்த விதத்திலாவது தான் எதிரியல்ல என்பதை நிரூபித்து அதில் வெற்றியும் கண்டு தமக்கென உணவும் ஊட்டமும் பெற இரத்தக் குழாய்களையும் அதற்கான இணைப்புகளையும், உணர்வையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக்கொள்ளும் தொடங்கிவிட்டன.

அதற்குத் தேவையான Physical பௌதீக, Chemical இரசாயன, Biological உயரியல் ஆயுதங்கள் அனைத்தும் தயார் செய்யும் முக்கிலும் தொண்டையிலுமுள்ள Mucus Membrance என்ற சளிமென்சவ்வுப் படலம் தான் உடலின் முன்னணி பாதுகாப்புப் படையாகும் (Barrier Immune System).

அதையும் தாண்டி பல எதிரிகள் சுவாசப்பைக்குள்ளே சென்றாலும் அங்கும் இதேபோல அதி உயர் பாதுகாப்பு வலையமான மென்சவ்வுப் படலம் மிகவும் சக்தி வாய்ந்த இரசாயன ஆயுதமான சளியைச் சுரந்து எதிரியை மூழ்கடித்து திரட்டி உருட்டி சளியாக இருமல் எனும் பீரங்கி மூலம் அப்படியே கொலைவெறித் தாக்குதலை நடத்தி நம்மைப் பாதுகாக்கும் இருமல் நல்லதல்லவா!

தொண்டையிலிருந்து எதிரிகள் பலர் எப்பிடியோ தப்பித்து இரைப்பைக்குள்ளேயும் செல்வது வழக்கம், அவை பெரும் பாலும் இரைப்பையிலுள்ள அமிலத்தில் அமிலக்குளியல் எனும் தாக்குதலால் தப்பிப்பிழைப்பது அரிதான காரியம்.

இதேபோல நம் கண்ணீரும், உமிழ்நீரும் ஏதோ அழுவதற்கும், காறித்துப்புவதற்கும் என்று எண்ணிவிடாதீர்கள், அவையும் சில இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கும் எல்லைப் பாதுகாப்புப் படைதான்.

இப்படிப் பல எல்லைகளையும் தாண்டி டிமிக்கி கொடுத்துவிட்டு கள்ளப் பாஸ் நரம்புக் கேபிள் இணைப்புகளையும் பெற்று தனியாக ஒரு புதிய உறுப்பு உருவானது போலவும் அது ஒரு தனி நாடாகச் செயற்பட்டு புதிய குடிவரவாளர்களை வரவேற்று உள்வாங்கி ஒரு பலம் பொருந்திய தனித் தேசமாக தேகத்தில் செயற்படும். ஆம் அது வேறொன்றுமல்ல, உயிரைப் பலி கொள்ளப் போகும் புற்றுநோய்க் கட்டிதான் என்பது உடலுக்குத் தெரியாமலே நடக்கும் ஒரு சதிவேலை.

யாரோ புதுசா சில பயல்கள் உள்ளே நுழையுறமாதிரி நம்ம மூக்கு தகவல் அனுப்பிக் கொண்டேயிருக்கிறார், தொண்டையிலிருக்கும் நம்ம முதல் நிலை உளவுத்துறை அதிகாரி ரொன்சில் (Tonsils) அதை உறுதி செய்து எதிரிகளைப் பற்றிய ஓரளவு தகவல்களை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். அவை உள்ளே நுழையாமல் மூக்கிலும் தொண்டையிலும் வைத்து அவர்களைத் தாக்கி அழிக்க முடியுமா என்று பாதுகாப்பு அதிகாரிகளின் அவசரக் கூட்டம் நடந்து அதற்குத் தேவையான ஆயுத்தப் பணிக

போட், லஞ்சம், ஊழல், போன்றவற்றின் மூலம் குடிவரவு அதிகாரிகளையும். எல்லைப் பாதுகாப்பு படைவீரர்களையும் ஏமாற்றிவிட்டு பல எதிரிகள் கிருமிகள் உள்ளே நுழைவதும் நடக்கத்தான் செய்கிறது. சரி அது நம்ம நாட்டில இருக்கிற பேரினவாத ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளால் உயிர்பிழைக்க எப்படியோ தப்பித்து அகதிகளாய் புலம் பெயர்ந்து வந்தோம் அதுசரி, அதென்ன 'கள்ளப் பாஸ்போட்'. ஆம், சில நோய்க்கிருமிகள் குறிப்பாக பல வைரஸ் கிருமிகள் (கொரோனா உட்பட) இப்படி உள்ளே நுழைந்ததுவிடும். இது ஒரு பெரிய கதை.

நம்ம உடம்பில நாம் தாயின் கருவறையில் உருவாகும் போதே எங்களுக்குள் உருவாகி நாம் பூமிக்கு வந்ததும் பாதுகாப்பாய் வாழ அன்னை உருவாக்கி தந்த அற்புதமான பாதுகாப்புப் படைதான் Innate Immune System இதிலுள்ள In - உள்ளார்ந்த மற்றும் Nate - பிறப்பால் வந்த என்று பொருள் கொள்ளலாம். இவை தான் நம் தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அரசியலும் அணைகளும் இல்லாத வற்றாத நதிகளான இரத்தக் குழாய்களும் நிணநீர் குழாய்களும்.

இவற்றிற்குள்ளே ஓடுவது இரத்தமும், நிணநீரும் தான். இதிலே நம் உடலிலுள்ள பெரிய மற்றும் நுண்ணிய இரத்தக் குழாய்களை இடியப்பச் சிக்கலைப் போல எடுத்து நீட்டிவிட்டால் வரும் நீளம் ஒரு லட்சம் கிலோ மீற்றர்கள். ஆம் இந்த பூமியை இரண்டரை முறை சுற்றிவிடலாம். இவையெல்லாம். நீங்களும் நானும் ஆடு, மாடு, கோழி, பன்றி என்று தின்று உருவாக்கியவை அல்ல, கருவறையிலேயே அன்னை வடிவமைத்து இன்னும் நம்மோடு இருக்கும் விலைமதிப்பில்லாச் சொத்து.

குருதியிலும் நிணநீரிலும் உள்ள வெள்ளை அணுக்கள், பிளாஸ்மா என்ற புரதத்திரவம், மற்றும் நிணநீர்திரவம் இவைதான் நம் தேகத்தின் அதிஉச்ச பாதுகாப்புப் படைகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். இதிலுள்ள வெள்ளை அணுக்கள், ஏதோ வெள்ளை என்ற பேரைக் கேட்டு சமாதானப் புறாக்கள் என்று எண்ணிவிடாதீர்கள். ஏவுகணைகள், பீரங்கி, உளவுபார்க்கும் ரேடார் கருவிகள், செயற்கை - இயற்கை நுண்ணறிவுக் கருவிகள் (Natural and Artificial Intelligence), அமெரிக்காவின் B83 என்ற Bunker Buster thermonuclear Weapon போன்றவற்றைவிட மிகச்சிறந்த ஆயுதங்களையும், தற்கொலைப்படைகளையும் கொண்ட தேசம்தான் நம் தேகம்.

என்னடா நம்ம உடம்புக்குள்ளயா இத்தனையும் இருக்கு? ஆமாம். இன்னும் கண்டுபிடிக்காத, கண்டுபிடிக்கமுடியாத அதிசயங்களைக் கொண்டதுதான் இந்த உடம்பு. பிறகு ஏன் இவ்வளவு வியாதிகள் வருது? என்று கேட்கும் உங்கள் மைன்ட் வொய்ஸ் புரிகிறது. ஆம் இயந்திரம் என்னமோ அதிஉயர் தொழில் நுட்பங்களையெல்லாம் கொண்டதுதான். ஆனால் அதற்குப் போடும் எரிபொருள் தான் பிரச்சினையானது.

எரிபொருள் மட்டுமல்ல வெளியேறும் கழிவுகளும் தான். உள்ளே, வெளியே இரண்டையும் - ஆம், உள்ளே செல்லும் எரிபொருளும் வெளியேறும் கழிபொருளும் தான் அவை.

மூக்குவழியாகப் போகும் காற்று, வாய் வழியாகப் போடும் உணவு, சிறுநீர்த்து

*தொடர்தல் 22ம் பக்கம்*

# யுத்தம் சுகம்...

**21ம் பக்கத் தொடர்ச்சி...**

வாரம் மற்றும் மலவாசல் வழியே வெளியேறும் கழிவுகள் இவை நான்கும் நலத்தின் நான்கு வாசல்கள்.

நம் நோய் எதிர்ப்பாற்றல் ஏதோ வெளியிலிருந்து வரும் சக்தியல்ல, இந்த ஆற்றல் பெரும்பாலும் மேற்குறிப்பிட்ட நான்கு வாசல்களில் தான் தங்கியுள்ளது.

சரி, முதலில் நான் குறிப்பிட்ட பிறக்கும் போதே எங்களுடன் தொப்புள்கொடி உறவாய் வந்தநோய் எதிர்ப்புச் சக்தி (Innate Immunity) இது எப்போதும் அப்படியே இருந்துவிடாது. அந்த வெள்ளை அணுக்களுக்கும் ஆயுட்காலம் - பிறப்பு, இறப்பு எல்லாம் உண்டு. சிவப்பு குருதி அணுக்கள் (Red Blood Cells) இவை சுமார் 120 நாட்கள் ஆயுள் கொண்டவை. ஆனால் வெள்ளை அணுக்கள் வெறும் 10 முதல் 15 நாட்கள் ஆயுள் காலம் தான். கொஞ்ச நாட்கள் வாழ்ந்தாலும் நாம் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ தங்களைப் பலியாக்கி வாழும் வீரத்தியாகிகள்.

தேசத்தின் பாதுகாப்புப் படையில் எப்படி பல துறைகள் உள்ளதோ அதேபோல தேகத்திலும் வெள்ளை அணுக்களுக்குள்ளே பல பிரிவுகளுண்டு. 60 வீதமானவை நியூற்றோபில்ஸ் (Neutrophils) வகையைச் சார்ந்தவை. எதிரிகள் கிருமிகள் வடிவில், உள்ளே நுழைந்ததும் முதலில் இவைதான் எதிரிகளுக்கு 'முதல் எதிரிகள்'. முடிந்தவரை எதிரிகள் இவற்றைத்தான் குறிவைத்து தங்கள் தாக்கு தலைச் செய்து, இவற்றிற்குள்ளே புகுந்து தங்களைப் பெருக்கிக் கொள்ள முயற்சிக்கும்.

இதில், இந்த வகை வெள்ளை அணுக்கள் எவ்வளவு திடகாத்திரமானவை, தைரியமானவை, புத்திசாலித்தனமாவை, இவற்றின் கலச்சுவரின் (Cell Wall) உறுதித்தன்மை, இவற்றின் உள்ளே இருக்கும் இரசாயன ஆயுதங்களின் வலிமை என்பதைப் பொறுத்தே, கிருமிகளுக்கு எதிரான போரில் நமது ஆயுள்காலம் தீர்மானிக்கப்படுகிறது. வெல்லப் போவது யார் என்பதை முடிவு செய்வது நாம் மட்டுமேதான். ஏனென்றால் நமக்குள்ளே யுத்தத்திற்கு தயாராக இருக்கும் போர் வீரர்களின் உறுதித்தன்மை நாம் உண்ணும் உணவில்தான் பெரும்பாலும் தங்கியுள்ளது.

முதலில் உள்ளே நுழையும் எதிரிகளின் கலச்சுவரிலுள்ள 'நுண்ணுணர்வு (Sensor) கொண்ட புரதங்கள்', எவையெல்லாம் 'நோஞ்சான் வெள்ளை அணுக்கள்' என்பதை அறிந்துகொண்டு அவற்றின் கலச்சுவரை உடைத்து நுழைந்து முதலில் தங்களைப் பெருக்கிக் கொள்ளும் வேலையைத் தொடங்கிவிடும். பொதுவாக வைரஸ் கிருமிகளின் தாக்கத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் அவற்றை வெள்ளை அணுக்களுக்குள்ளே ஊடுருவல் செய்வதை தடுத்தாலே 90வீதம் வெற்றிதான். ஏனென்றால் வைரஸ் கிருமிகள் மற்ற உயிரினங்களைப் போல காதல், கல்யாணம், முதலிரவு, தாம்பத்தியம், பிள்ளைப்பேறு என்றோ, அல்லது சாதகப் பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தோ தங்கள் இனத்தை பெருக்கிக் கொள்பவை அல்ல.

உடலுக்குள்ளே நுழைந்ததும் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களுக்குள்ளே நுழைந்தால் மட்டுமேதான் அவற்றால் சில நாட்கள் உயிர் வாழ முடியும். இல்லையென்றால் நுழைந்த சில நாட்களில் இருக்க இடமன்றி, உணவின்றி, குருதியிலுள்ள பிளாஸ்மாக்களுக்குள்ளே மூழ்கி ஒரு நல்ல விடயத்தையும் செய்துவிட்டு மடிந்துபோகின்றன. கெட்டவைரசும் சில வேளை நமக்கு நல்லதையும் செய்யும் ஆம் இனியாரையும் 'கெட்ட கிருமி' என்று திட்டாதீர்கள், எப்படியென்றால் குருதியில் மடிந்துபோன கிருமிகள் தங்கள் நினைவாக நமக்குள்ளே 'நினைவுச் சின்னங்களான' புரதங்களை விட்டுச் செல்லும். இவை 'நோய் எதிர்ப்பான் புரதங்களான' அன்ரிபொடீஸ்களை (Antibodies) பிளாஸ்மாவான குருதி திரவத்தில் விட்டுச் செல்வதால் இவை மீண்டும் மீண்டும் இதே வைரஸ்கள் உள்ளே நுழையும் போது அவற்றை அடையாளம் கண்டு இலகுவாக தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டவை. ஆனால், உள்ளே நுழையும் வைரசின் புரதப்பதிவும், உள்ளே இருக்கும் நோய் எதிர்ப்பான் புரதங்களின் 'நினைவுப் பதிவும்' (Memories) ஒன்றாக இருக்கும் பட்சத்தில் இலகுவாக - கைதிகளை காவல்துறை அழைத்துச் செல்லும் போது பயன்படுத்தப்படும் கைவிலங்கு போல லொக் செய்து கிருமிகளை அழைத்துச் சென்று 'மாக்ரோபேஜஸ் (Macrophages) பெருவிழுங்கிகள்' என்ற வெள்ளை இனக் கலங்களிடம் ஒப்படைக்கும். இவை நம்ம பீமன் போல அப்படியே கிருமிகளை விழுங்கி கீமோக்கைன்ஸ் Chemokines என்ற நச்சுப்புகையினை கிருமிகள் மீது செலுத்தி சில விநாடிகளில் எந்த விசாரணையும் நீதிமன்றமுமின்றி மரணதண்டனை வழங்கும் நல்ல அரக்கர்கள்.

கிருமிகளை கண்டுபிடித்து கைது செய்யும் பணியில் மிக உதவியாக உளவு வேலைகளில் ஈடுபடும் ஒரு பிரிவினரும் இருக்கிறார்கள். டென்றிக்கலங்கள் (Dendric Cells) உறவு பார்க்கும் பணிக்கென தங்களிடம் சில கட்டமைப்புகளையும் (Sensors), உணர்வு வாங்கிக்கருவிகள், மற்றும் மற்றக் கலங்களோடு தொடர்பு கொண்டு எச்சரிக்கை செய்யவும் அற்புதமான தகவல் தொடர்பு சாதகங்களையும் கொண்டுள்ளது மட்டுமல்ல, எந்த இடத்தில் இப்போது கிருமிகள் இருக்கின்றனவோ அந்த இடத்தைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வலையத்தை உண்டாக்கி அங்கிருந்து தகவல் அனுப்பி தாக்கியழிக்கும் வெள்ளை அணுக்களை கவர்ந்திழுக்கும் தன்மையையும் கொண்டவை.

அடுத்து, இயற்கையான கொலைகாரக் கலங்கள் (Natural Killer Cells). ஆம், பேரைப் கேட்டாலே படுபயங்கரமாயிருக்கு, இவை லிம்போசைற் வகையை சார்ந்தவை. இவை கிருமிகளை நேரடியாகத் தாக்காது கிருமிகளால் பாதிக்கப்பட்டு, செயலிழந்த அல்லது ஊனமான கலங்களை தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை. இந்த செயலிழந்த கலங்கள் உடலுக்குள் தங்கி அவை நச்சுத்தன்மை கொண்டவையாக மாற வாய்புள்ளதை முன்கூட்டியே அறிந்து செயற்படும் ஒரு பாதுகாப்பு முறையாகும். அது மட்டுமல்ல, இந்த கலங்கள் இன்னொரு நல்ல பணியையும் செய்வது மிகவும் ஆச்சரியமானதாகும்.

உடலில் எங்காவது புற்றுநோய் ஆரம்பிக்கும் தன்மை இருந்தால் அந்த இடத்தை கண்டுபிடித்து, அந்த புல்லுருவிக் கலங்களை தாக்கி அழிக்கும் தன்மையும் கொண்டவை. ஆனாலும் சில நேரங்களில் இந்த புல்லுருவில் கலங்கள் தாங்களும் நல்லவர்கள் போல நடித்து தங்களைக் கொல்ல வரும் நல்ல இயற்கையான கொலைகாரக் கலங்களை ஏமாற்றி வெற்றி பெறுவதுமுண்டு.

இனிவரும் கட்டுரைகளில் இன்னும் பல விடயங்களையும் படிக்கப்போகிறீர்கள்.



*paul.joseph@thaiveedu.com*



# மயில் நிலை ஆசனம்

- பாதுசா ஆனந்தநடராசா -

மயில் நிலை ஆசனம் எமது கைகளில் உடம்பு முழுவ தையும் தாங்கிப் பிடித்துக் கொண்டு பயிற்சி செய்யும் ஒரு ஆசனம் ஆகும். ஆசனப் பயிற்சிகளில் முன்னேற்ற நிலையாளர்களால் செய்யப்படும் ஒரு ஆசனப் பயிற்சி ஆகவே இதைக் கரு-தலாம். இந்த ஆசனத்தில் உடலானது கைகளால் வயிற்றுப் பகுதிக்கு அழுத்தம் கொடுத்து கைகளில் உடல் பாரத்தை வைத்து நேர்கோட்டில் உடலை நீட்டி வைத்திருக்கும் தோற்றத்தை அளிக்கிறது. இந்தத் தோற்றமானது நீண்ட தோகையை உடைய மயில் நிற்பதைப்போன்று தோற் றமளிப்பதால் இந்த ஆசனம் 'மயில் நிலை ஆசனம்' எனப்பட்டது. இவ்வாச னத்தை செய்வதற்கு மன உறுதியும் உடலின் வலிமையும் தேவை. அத்துடன் உடலின் சமநிலைத் தன்மையைப் பேணு வதற்கும் சமநிலைத்தன்மையை உணர்ந்து வளர்த்துக் கொள்ளவும் இந்த ஆசனம் சிறந்ததொரு ஆசனமாகும்.

ஒவ்வொரு ஆசனமும் நமது உடலின் குறிப்பிட்ட இடங்களில் அழுத்தத்தை கொடுப்பதன் மூலம் உடம்பில் அந்த உடல் பகுதியானது அதிக பலனைப் பெறுகின்றது. அத்துடன் உயிர் சக்தியின் செயல்பாடு ஆனது அந்த இடத்தில் அதிகரிக்கப்பட்டு மற்றைய உடல் பகு திகளுக்கும் சீரான முறையில் ஏற்பட வழிவகுக்கிறது எனலாம். மயில் நிலை ஆசனத்தைப் பொறுத்தவரையில் வயிற் றுப் பகுதிக்கு அதிக அழுத்தம் ஏற்படு கிறது. இதனால் மணிப்பூரகச் சக்கரத்தின் செயல்பாடு ஆனது தூண்டப்படுவது உடன் உயிர் சக்தி ஓட்டமானது சுழற்சி முறையில் ஏற்படுகிறது. சுழற்சி முறை யில் ஏற்படும் உயிர் சக்தி ஓட்டமானது உடல் முழுவதற்கும் ஏற்படுவதற்கு இந்த ஆசனம் வழிவகுக்கிறது எனலாம்.

வயிற்றுப் பகுதியானது அதிக அழுத்தம் பெற்று, அதனால் வெப்பநிலையானது அதிகரிப்பதன் மூலம் கடினமான உண-வையும் எளிதாக சமிபாடு அடையச் செய்து, உணவுச் சத்துக்களை உறிஞ் சும் தன்மையும் அதிகரிக்கின்றது.

## பயிற்சிக்கு தயார்படுத்தல்:


வயிற்றுத் தசைகள், முதுகுத் தசைகள், தோள் பக்க தசைகள் ஆசன நிலையை அடைவதற்கு ஆதரவாக உள்ளன. முக் கியமாக மயில் நிலை ஆசனத்தில் முழங் கைகளில் உடல் பாரத்தை நிறுத்துவ தற்கு ஆதரவாக மேல் கூறப்பட்ட தசை கள் விளங்குகின்றன. எந்த ஓர் ஆசனத் தையும் பயிற்சி செய்ய முன்பு உடலை யும் மூச்சு நிலையையும் ஆறுதல் படுத் தியபின் பயிற்சி செய்ய வேண்டும். மயில் நிலை ஆசனத்திற்கு செல்வதற்கு முன் முழங்கால்களை மடித்து குதிகால்களை விரித்து இடுப்பை இருகால்களுக்கு நடு வில் வைத்து வீராசன (வஜ்ர) நிலையிலி ருந்து தொடங்க வேண்டும். இந்த ஆச னத்தை எளிமையான முறையில் அணு குவதற்கு, ஐந்து படிநிலைகளில் ஆச னத்திற்கு செல்லும் முறையை பின்வரு மாறு விளக்கியுள்ளோம். ஒவ்வொரு நிலை யிலும் எமது உடலை ஒழுங்குபடுத்தி சம நிலையை அடைந்தபின் ஒவ்வொரு நிலையிலும் உறுதியாக வைத்துக்கொண்டு அடுத்தஅடுத்த நிலைகளுக்கு சென்று ஐந்தாவது நிலையை அடையலாம். இத னால் இப்பயிற்சியை செய்யும்பொழுது ஏற்படக்கூடிய எதிர்மறைத் தாக்கங்களைத் தவிர்த்துக்கொள்ள முடிகிறது. எனவே இப்பயிற்சியை முயற்சி செய்யும்பொழுது மிகுந்த கவனத்துடன் பின்வரும் படிநி லைகளை பயன்படுத்தி பயிற்சி செய்ய வும்.










## ஆசனத்திற்கு செல்லும் முறை:

**முதலாவது படிநிலை:**

முழங்கால்களில் இருந்து, இரு முழங் கால்களையும் இரண்டு பக்கமாகவும் அகட் டிய நிலையில் வைத்து குதிகால்களில் இருக்கவும். இரண்டு கைகளையும் ஒருங் கிணைத்த நிலையில் முழங்கைகளை மடித்து வைத்து உள்ளங்கைகள் மேலே பார்த்தவாறு உடலுக்கு முன்பக்கமாக கைகளை வைத்திருக்கவும். இந்த ஆச னத்தைச் செய்வதற்கு கைகள் பலமான நிலையில் இருக்க வேண்டும். இந்நிலை யில் மூச்சை ஆழமாக உள்ளெடுத்து வெளியே விட வேண்டும்.

**இரண்டாவது படிநிலை:**

முன்புறமாக உடலைக் கொண்டு சென்று இடுப்பை உயர்த்தி உள்ளங்கைகளை இரண்டு முழங்காலுக்கும் இடையில் - கைவிரல்களை பின்னோக்கி வைத்த நிலையில் நிலத்தில் வைக்கவும். இந்நி லையில் முழங்கைகளை தொப்புள் பகு திக்கு கீழ்வயிற்றுப்பகுதியில் அழுத்தி வைத்துக் கொள்ளவும்.

**மூன்றாவது படிநிலை:**

மெதுவாக உடலை முன்நோக்கி நீட்டிய வாறு குனிந்து நெற்றியை நிலத்தில் வைக் கவும். இந்த நிலையில் வயிற்றுப்பகுதி முழங்கைகளால் நன்கு அழுத்தப்பட்டு இருக்கும். மூச்சு நிலையானது ஆழமாக உள்ளே எடுத்து வெளியே விட்டவாறு இருக்கும்.

**நான்காவது படி நிலை:**

மேல் குறிப்பிட்ட நிலையில் ஒருபக்க காலை பின்பக்கமாக நேராக நீட்டவும். பின், மெதுவாகக் கவனத்துடன் மறு காலையும் அவ்வாறு பின்பக்கமாக நீட்ட வும். இந்த நிலையில் முழங்கால்களை நேராக வைத்தபடி, கால் விரல்களை நன்றாக நிலத்திலே அழுத்தி வைத்து, குதிகால்களையும் ஒன்றாக சேர்த்து வைத் துக் கொள்ளவும். வயிற்றுப்பகுதியில் அழுத்தப்பட்டு இருக்கும் இரு முழங் கைகளில் இருந்தும் பக்கவாட்டில் உடல் நழுவி விடாமல் கவனித்துக்கொள்வது முக்கியம்.

இப்பொழுது உடல் பாரமானது கைகள், கால் விரல்கள், நெற்றிப்பகுதியில் இருக் கும். முழங்கைகளால் வயிற்றுத் தசைகள் அழுத்தப்பட்டு இருக்கும்.

**ஐந்தாவது படிநிலை:**

நாலாவது நிலையிலிருந்து மூச்சை உள்ளே இழுத்தவாறு தலையை மேலே உயர்த்தும் பொழுது, உடல்ப் பாரத்தை முன்னோக்கித் தள்ளவும். தலையை மேலே தூக்கிபின் கால்களை மேலே தூக் கும் பொழுது உள்ளே இழுத்த மூச்சுக் காற்றை அடக்கி வைத்தபடி கால்விரல் நுனிகளை சிறிது சிறிதாக முன்னோக்கி நகர்த்தி, பின்பு கால் பாதங்களை நிலத் திலிருந்து ஒவ்வொன்றாக மேலே கொண்டு வரவும். இவ்வாறு செய்கையில் எம்மால் உடம்பு முழுவதையும் இறுக்கி எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து பின் கால் களை நேராக தூக்க முடிகின்றது. பின்பு, ஆசனத்தில் நிலையாக நிற்கும் பொழுது மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட் டுக் கொண்டிருக்கலாம். இப்பொழுது உடல் பாரமானது இரண்டு கைகளிலும் வயிற்றுப்பகுதியில் அழுத்தம் கொடுத்த நிலையில் இருக்கும். உடலானது நேர் கோட்டில் இருப்பது போன்ற நிலையில் காணப்படும். இந்த நிலையே ஆசனத் தின் முழுமையான நிலையாகும்.

## ஆசனத்தில் நிலை கொள்ளல்:

தலையை முன்னோக்கி நீட்டி நேராக பார்த்த நிலையில் இருக்க வேண்டும். இவ்வாசனத்தில் உடலானது நிலத்துக்கு சமாந்தரமாக இருக்கும். உள்ளங்கைகள் நன்றாக நிலத்திலே அழுத்தியபடி, முழங் கைகளின் மேல் இருக்கும் வயிற்றுப் பகுதி நழுவி விடாமல், கவனத்தை ஒருநிலைப் படுத்தி எமக்கு முன்னால் இருக்கும் ஒரு பொருளில் பார்வையை வைத்தபடி இவ் வாசனத்தில் நிலைகொள்ளவும். முழங்கால் களை நேராக வைத்த படியும் தலையை மேல் நோக்கி தூக்கியும் வைத்திருக்க வேண்டும். கால்களையும் தலையையும் ஒரே அளவு உயர்த்தி வைத்திருக்கவும். உள்ளங்கைகள் நிலத்தில் அழுத்தப்பட்டு கைகளால் உடலைத் தாங்கிய நிலை யில் உடலானது சமமாக நீட்டம் பெற்று இருக்கும்.

## ஆசனத்தில் இருந்து வெளிவரும் முறை:

மூச்சை வெளியே விட்டவாறு பாதங்க ளையும், முழங்கால்களையும் நிலத்தில்

*தொடர்தல் 24ம் பக்கம்*

# மயில் நிலை...

23ம் பக்கத் தொடர்ச்சி...

வைக்கவும். முழங்கால்களில் இருந்த நிலையில் மணிக்கட்டுப் பகுதியை அசைத்து தளர்த்தவும்.

## மாற்று ஆசனம்:


மயில் நிலை ஆசனத்திற்கு மாற்று ஆசனமாக முதுகையும், கால்களையும், கழுத்துப் பகுதியையும், கைகளையும் ஓய்வுக்கு கொண்டுவருவதற்கு சிசு ஆசன நிலையில் ஓய்வெடுக்க வேண்டும். சிசு வாசத்தின் நிலைக்கு வருவதற்கு நெற்றியை நிலத்தில் வைத்து இரு கைகளையும் உடலுக்கு இரு பக்கமாக உள்ளங்கைகள் மேல் நோக்கியவாறு நிலத்தில் வைக்கவும். கால் பாதங்களை ஒன்று சேர்த்துவைத்து ஓய்வு எடுக்கவும் மூச்சை சீராக எடுத்து விடவும். எனவே இந்த ஆசனத்தின் மாற்று ஆசனமாக சிசு ஆசனத்தை கொள்ளலாம்.


## மூச்சின் தன்மை:

பயிற்சியின் படிநிலைகளில் மூச்சை ஆழமாக உள்ளிழுத்து வெளியே விடவேண்டும். தலையை உயர்த்தி உடலை முன் பக்கமாக நீட்டிக்கும் பொழுது மூச்சை உள்ளே எடுக்க வேண்டும். கால்களை பின்பக்கமாக நீட்டிக்கும் பொழுது மூச்சை ஆழமாக உள்ளிழுத்து சிறிது உள்ளே நிறுத்தி பின் மெதுவாக வெளியே விட வேண்டும். ஆசன நிலையில் மூச்சானது ஒரே மாதிரி ஆழமாக உள்ளெடுத்து வெளி விட்ட நிலையில் இருக்க வேண்டும். ஆசனத்தை விட்டு வெளிவரும் பொழுது மூச்சை வெளியே விட்டவாறு வரவேண்டும்.

## பயிற்சியின் கால அளவு:

ஆசன நிலையில் பத்து வினாடிகள் வரை



இருக்கலாம். இந்த ஆசன பயிற்சியில் முன்னேற்ற நிலையாளர்கள் ஒரு நிமிடம் வரை பயிற்சியில் நிலை கொள்ளும் நேரத்தை அதிகரிக்கலாம். இரண்டு முதல் மூன்று தடவை திரும்பவும் இந்தப் பயிற்சியைச் செய்யலாம்.

## பொதுவான தவறுகள்:

- தலையைக் கீழே தொங்க விடக் கூடாது.
- மேலுடம்பு பகுதியை மேல் நோக்கியோ முன்னோக்கியோ தூக்கக்கூடாது
- முழங்கால்களை மடித்து வைத்திருக்கக்கூடாது.
- மயில் நிலை ஆசனத்தில் இருக்கும் பொழுது கால்களை மேலதிகமாக மேலே தூக்கக்கூடாது.
- கால் விரல்களை நிலத்தில் வைத்திருக்கும் பொழுது முழங்கால்களை மடித்து வைத்திருக்கக் கூடாது.
- கீழ்நோக்கி பார்க்கக்கூடாது.

## ஆசனத்தின் பயன்கள்:

- இந்த ஆசனத்தில் கால்கள், கைகள், முதுகுத்தசைகள், வயிற்றுப்பகுதி, தோள்கள் மற்றும் கழுத்துப் பகுதி தசைகள் யாவும் இயக்கம் பெற்று பலம் பெறுகின்றன.
- உடலின் இயக்கத்திற்கு முக்கிய பங்கினை வகிக்கும் தசைகளின் இயக்கமானது வயிற்றுப்பகுதி நன்கு அழுத்தம் பெறுவதனால் இரத்த ஓட்டமானது நேரடியாக உடலின் சமிபாட்டு பாகங்களுக்கு கிடைக்கின்றன. இதனால் வயிற்றின் உள்ளுறுப்புகளில் அழுத்த நிலையானது அதிகரிக்கப்பட்டு உள்ளுறுப்புகள் யாவும் சீராக இயங்குகின்றன.
- தசைகள் மற்றும் நரம்புகள் சிறுநீரகங்களுடனும், சமிபாட்டு உறுப்புக்களுடனும் தொடர்பு உடையதாக இருப்பதனால் இவை புத்துயிர் அளிக்கப்பட்டு சுறுசுறுப்பு அடைகின்றன.
- கைகள் வயிற்றுப் பகுதிக்கு அழுத்தம் கொடுத்து, உடல் பாரம் கைகளிலும் வயிற்றுப் பகுதியிலும் இருப்பதனால் கை பகுதி தசைகள் நன்கு அழுத்தப்பட்டு வலிமை அடைவதனால் தோள் மூட்டுப் பகுதிகள், முழங்கை மூட்டுக்கள், கணுக்கை மூட்டுக்கள் உறுதி அடைவதுடன் இவற்றின் இயக்கமானது சீராக இருப்பதற்கு வழிவகுக்கிறது.
- கால் பகுதி தசைகள் நீட்டிக்கபடுவதனால் முழங்கால்கள், கணுக்கால்களில் ஏற்படும் வாதம் சம்பந்தமான நோய்களுக்கு இந்த ஆசனம் நல்லதொரு தீர்வாகிறது.
- சமிபாட்டு திறனின் வீரியத்தை அதிகரிக்க இந்த ஆசனம் உதவுவதால் வயிற்றுப் பகுதியின் செயல்பாடு துரிதப்படுகின்றது. அளவுக்கு அதிகமாக உண்ணுதல், கட்டுப்பாடில்லாமல் அடிக்கடி உண்ணும் பழக்கம் உடையவர்களுக்கு ஏற்படும் வயிற்று பிரச்சினைகளுக்கு இந்த ஆசனப் பயிற்சி தீர்வாக அமைகிறது.
- வயிற்றுப்பகுதியில் வெப்பநிலை அதிகரிப்பதால் நச்சுத் தன்மைகள் இல்லாமல் ஆக்கபடுவதோடு வயிற்றுப்பகுதியில் ஏற்படக்கூடிய பலவிதமான நோய்களான மலச்சிக்கல், சர்க்கரை நோய், மூல நோய் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கிறது.
- கல்லீரல், கணையம், மண்ணீரல் போன்றவற்றிற்கு புத்துணர்வு கிடைக்கிறது.
- கல்லீரலில் ஏற்படும் மந்தநிலை மற்றும் செயல்திறன் குறைந்து உணர்ச்சியற்று காணப்படும் தன்மைகளை குணப்படுத்துகின்றது.
- உடலில் அளவுக்கதிகமான காற்றை வெளியேற்றுவதுடன் பித்தநீர், சளி இவற்றையும் இல்லாமல் செய்கிறது.
- கை எலும்புகள் நரம்புகளுக்கு நன்கு அழுத்தம் கிடைப்பதனால் பலம் பெறுகின்றன. கால் எலும்புகள் நன்கு நீட்டிக்கப்படுவதனால் வாத பிடிப்புக்கள் குணமடைகின்றன.
- உயிர் சக்தி ஓட்டமானது தொப்புள் பகுதியில் உள்ள மணிப்பூரகச் சக்கரத்தில் செயல்படுவதனால் உடல் முழுவதும் சத்தி ஓட்டம் சீராக கிடைத்து புத்துயிர் அளிக்கும் ஆசனமாக மயிலாசனம் விளங்குகின்றது.
- நுரையீரலின் செயல்பாடு சீரான இயக்கத்தைப் பெறுகின்றது.

## மனதின் பயன்கள்:

- மனதை ஒருமுகப்படுத்தவும், திடமான முடிவுகளை எடுக்கும் தன்மையையும் அதிகரிக்கின்றது.
- உடல் மற்றும் மனதின் சமநிலைத் தன்மை பேணப்படுகின்றது.
- சோம்பேறித்தனத்தைப் போக்குகின்றது.
- குண்டலினி சக்தி எழுப்பப்படுகின்றது.

## உடல்நலம் கருதி செய்ய வேண்டியவை:

- எந்த ஒரு ஆசனப் பயிற்சியை செய்யும் முன்பு உடற்பயிற்சிகளை செய்து உடலை ஆசனப் பயிற்சிகளுக்கு தயார்படுத்த வேண்டும்.
- உணவின் பின் நான்கு மணி நேரம் இடைவெளியும், சிற்றுண்டிக்கு பின் இரண்டு மணி நேர இடைவெளியும் இருப்பது அவசியம்.
- பயிற்சிகள் செய்வதற்கு முன்பு மலசலத்தை வெளியேற்ற வேண்டும்.
- சவாசனம் நிலையில் உடலையும், மனத்தையும், மூச்சையும் ஆறுதல்படுத்தி அதன்பின் பயிற்சிகளை செய்ய வேண்டும்.

மயில் ஆனது நீண்ட தோகைகள் உடன் அழகான தோற்றத்தில் இருப்பது போன்று இந்த ஆசன நிலை ஒரு அழகான தோற்றத்தைக் கொடுக்கிறது எனலாம். இந்த ஒரு ஆசனமே குறைந்த அளவு நேரப் பயிற்சியிலும் அதிகமான பலனை கொடுக்கக்கூடிய சிறந்ததொரு ஆசனமாகும். மயிலாசனம் தொடர்ந்து பயிற்சியில் இருக்கும் பயிற்சியாளர்களுக்கும் சவாலாக விளங்கக்கூடிய ஒரு ஆசனம் ஆகும். உடல் வலிமை திடமான மனது இரண்டும் ஒருங்கிணைந்த அசையா நிலையில் சமநிலை குலையாது இருப்பதே மயில் நிலை ஆசனம். முயற்சி செய்து இந்த ஆசனத்தைச் செய்வதில் அதற்கான பலனை அடைய முடியும்.

pathusha@thaiveedu.com







## காக்கைச் சிறகினிலே மாத இதழ் முன்னெடுக்கும் ஆறாவது ஆண்டு

## கவிஞர் கி பி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு

# உலகத்தமிழ் அறிவியல் புனைவு சிறுகதைப் போட்டி 2021

**வள்ளுவராண்டு 2052**

- 2050களில் புவியில் தமிழர் வாழ்வு என்பது சிறுகதையின் மையக்கருவாக இருக்க வேண்டும்.
- போட்டிக்கான கால எல்லை: 03.01.2021
- போட்டி முடிவு: மார்ச்சு 2021இல் வெளிவரும்
- காக்கைச் சிறகினிலே இதழின் தொடக்க நெறியாளராகப் பணியாற்றி மறைந்த இலக்கியவாதி 'கி பி அரவிந்தன்' கனவின் மீதியில் எழும் புதிய தடமாக அமைகிறது இந்தப் போட்டி.
- பாரதி கண்ட "சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்ற கனவை நனவாக்கும் முயற்சிகளில் ஒன்று. உலகெங்கும் வியாபித்தவர்களாகி தொடரும் வாழ்வில் அடுத்தடுத்த தலைமுறையினர் எண்ணங்களைக் கொண்ட எழுத்துகளையும் படைப்புகளையும் ஊக்குவிக்கும் முகமாக இப் போட்டி அமைகிறது.
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழும் தமிழ் மக்களின் பூர்வீகம் – புலப்பெயர்வு அதன் நீட்சியென வாழத் தலைப்பட்ட வாழ்வினரது எதிர்காலக் கதைகளை பரவலாக எதிர்பார்க்கிறோம்.

நெறியாளர் **மதிப்புக்குரிய பத்மநாப ஐயர் (இங்கிலாந்து)**

நடுவர் குழு **மதிப்புக்குரிய பேராசிரியர் சு. இராமசுப்பிரமணியன் (இந்தியா)**
**மதிப்புக்குரிய பேராசிரியர் ச. சுகிர்தராஜா (இங்கிலாந்து)**
**மதிப்புக்குரிய எழுத்தாளர் திரு ரஞ்சகுமார் (ஆஸ்திரேலியா)**
**மதிப்புக்குரிய பேராசிரியர் சு. ஸ்ரீதரன் (அமெரிக்கா)**
**மதிப்புக்குரிய எழுத்தாளர் திருமதி கீதா மதி (ஆஸ்திரேலியா)**

**போட்டியின் விதிமுறைகள்**

1. அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர் தனது மின்னஞ் சலூடாக மட்டும் தனியாக இணைக்கப்பட்ட தனது சுயவிபரக் கோவையுடன் முழுப் பெயர், புனைவுப் பெயர், முகவரி, தொலைபேசி, செல்பேசி உள்ளிட்ட விவரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்கும் சிறுகதைகள் எழுத்தாளரின் சொந்தக் கற்பனை என்றும் இந்தப் போட்டிக்காகவே எழுதப்பட்டது என்றும் மின்னஞ்சலில் உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. போட்டியில் இடம்பெறும் சிறுகதை ஊடகங்களிலோ போட்டிகளிலோ பங்கேற்கவில்லை எனும் உறுதிமொழியை மின்னஞ்சலில் வழங்க வேண்டும். போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் வரையில் எந்த ஊடகங்களிலோ இணைய தொலைத் தொடர்பு சாதன வலைகளிலோ வெளியிடக் கூடாது.
3. ஒருவர் ஒரு படைப்பு மட்டுமே அனுப்ப வேண்டும்.
4. கதைக் கரு மற்றும் களம்–காலம் அறிவியல் தகுநல் தகைமையுடன் அமைதல். சிறுகதைக்கான தலைப்பு எழுத்தாளரது தெரிவு.
5. வார்த்தைகள் 1200 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் (காக்கை இதழில் 5 பக்கங்கள்). யூனிகோட் எழுத்துருவில் ஆக்கங்கள் அமைதல். சிறுகதை இணைக்கப்படும் மின்னஞ்சல் தலைப்பில் கவிஞர் கிபி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு 2021–'உலகத் தமிழ் அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டி' எனக் குறிப்பிடல்.
6. பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
7. பங்கேற்கும் போட்டியாளர்களுடன் அஞ்சல், தொலைபேசி, மின்னஞ்சல் விசாரிப்புகள் நடைபெறாது. முடிவுகள் அறிவிக்கபட்ட பிறகே உரிய தொடர்பாடல்கள் நடைபெறும்.
8. போட்டி முடிவு 2021 மார்ச்சு மாத இறுதியில் காக்கை குழுமத்தினால் முறைப்படி அறிவிக்கப்படும்.
9. போட்டி நிறைவு நாள்– 2021 சனவரி 03.
10. பரிசுக்குத் தெரிவாகும் சிறுகதைகளை காக்கை இதழ்க் குழுமம் உரிய முறைமையில் வெளியிடும்
11. இந்தப் போட்டிக்கான மின்னஞ்சல் முகவரி kipian2021kaakkaicirakinile@gmail.com

- **முதல் பரிசு : 10000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **இரண்டாவது பரிசு : 7500 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **மூன்றாவது பரிசு : 5000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **நான்கு ஆறுதல் பரிசுகள் : தலா 2000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **ஊக்கப் பரிசு : சான்றிதழ்**

**படைப்பு அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:**
***kipian2021kaakkaicirakinile@gmail.com***
**படைப்பு அனுப்பவேண்டிய கடைசி நாள்:**
03.01.2021

காக்கைச் சிறகினிலே
இதழ்க் குழுமம்

- kaakkaicirakinile@gmail.com
- www.facebook.com/kakkai.cirakinile
- kaakkai.in

*(நன்றி : இப்போட்டிக்கான பணப் பரிசினை வழங்கும் கிபி அரவிந்தன் குடும்பம் சார்பாக திருமதி சுமதி மற்றும் இலண்டன் துளிர் நண்பர்கள்)*

# புகை அறிவுறுத்தும் கருவிகள்

## (Smoke detectors)

**வீடும் விடியலும் - 172**

**- வேலா சுப்ரமணியம் -**

தீ விபத்து ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் எமது உயிர்களைக் காக்கும் தோழனாக செயற்படக் கூடியவை smoke detectors. அதாவது நெருப்பின் வேகம் அதிகரிக்க முன்னதாகவே இவை எமக்கு அத்தகைய ஆபத்தை அறிவுறுத்துவதால் நாம் எமது உயிர்களைப் பாதுகாக்கும் விதத்தில் வெளியேறவோ அல்லது மாற்று நடவடிக்கைகளை எடுக்கவோ வழிகோலுகின்றன. கனடிய பாதுகாப்புச்சபையின் விதிமுறைகளுக்கு அமையவும் (Canada Safety Council) கனடிய சுகாதார அமைச்சின் (Health Canada) நியமங்களுக்கு அமைவாகவும் ஒரு வீட்டில் உள்ள ஒவ்வொரு தளத்திலும் நல்ல நிலையில் இயங்கக் கூடிய ஆகக் குறைந்தது ஒரு புகை அறிவுறுத்தும் கருவியாவது பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்மாடிக் கட்டடங்களாக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு குடியிருப்பு அங்கத்திலும் (Each Apartment unit) இத்தகைய புகை அல்லது நெருப்பை அறவுறுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் மிக அவசியம். தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.

ஆனால், எம்மவர் மத்தியில் பலரிடமும் அலட்சியப் போக்கே காணப்படுகின்றது. பொரியல் செய்வதற்காகவும், சாம்பிராணி கொழுத்துவதற்காகவும், புகைப்பிடிப்பதற்காகவும் இயங்கிக்கொண்டிருக்கும் இத்தகைய கருவிகளை நிரந்தரமாக கழற்றி விடுவதும் அல்லது அதற்குரிய பற்றறிகளை கழற்றி விடுவதும் ஒரு பழக்கமாகவே காணப்படுகிறது. இவற்றைக் கண்டு பிடித்தால் அபராதம் விதிக்கப்படலாம் என்பது ஒருபுறமிருக்க, இத்தகைய அசட்டைத் தனம் சில வேளைகளில் விலை மதிக்க முடியாத உயிராபத்தைக்கூட ஏற் படுத்திவிடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே ஒவ்வொரு வீட்டுரிமையாளரும் ஒவ்வொரு தளத்திலும் குறிப்பாக படுக்கை அறைக்குச் சமீபமாகவும், சமையலறைக்குச் சமீபமாகவும் இத்தகைய கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்வதோடு அவற்றை கிரமம் தவறாது பராமரித்து வரவேண்டியதும் மிக அவசியமாகும்.

2016ம் ஆண்டு மார்ச் மாதம் 1ந் திகதியிலிருந்து புகையை அறிவுறுத்தும் கருவி வீட்டின் ஒவ்வொரு தளத்திலும் பொருத்தப்படவேண்டும் என்பது ஒன்ராறியோவில் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகையை தவறுகளினால் வருடா வருடம் எத்தனை பேரின் உயிர்கள் வீணாகப் பலியாகின்றன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

2018 தை மாதத்தில் 2 சிறுவர்கள் உட்பட நால்வர் Oshawa விலும் இருவர் Brighton லும் ஒருவர் Tottenham லும் பரிதாபமாக நெருப்பில் அகப்பட்டு இறந்துள்ளனர். 2017 பெப்பிரவரியில் ஒரே குடும்பத்தில் மூவர் Bramptonல் பலியாகி உள்ளனர். இன்னும் பலர் பல இடங்களிலும் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஒன்ராறியோ பொது வழக்குரைஞர் (Ministry of Solicitor General) அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் கீழ்க்காணும் பட்டியல் வருடாவருடம் தீயினால் ஏற்படும் இறப்புக்களை விளக்குகின்றது. இவற்றுள் 95 வீதத்திற்கு மேற்பட்டவை சாதாரணமாக மக்கள் வசிக்கும் குடியிருப்புக்களில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்டவை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**Ontario monthly fatal fires (excluding Federal/First Nations properties)**

| 2020 | Fires | Fatalities |
|---|---|---|
| January | 9 | 10 |
| February | 8 | 8 |
| March | 15 | 18 |
| April | 14 | 16 |
| May | 6 | 8 |
| June | 4 | 4 |
| July | 8 | 9 |
| August | 3 | 3 |
| September | 1 | 1 |
| October | 3 | 3 |
| November | - | - |
| December | - | - |
| **Total** | **71** | **80** |



ஏன் இத்தகைய அனர்த்தங்கள், தவறுகள் நடக்கின்றன?

### அறியாமை:

புகை அறிவுறுத்தும் கருவியின் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பது ஒரு முக்கிய காரணம். வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் இத்தகைய கருவிகள் ஏன் பொருத்தப்பட்டிருக்கின்றன. எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றி குடியிருப்போர் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம்.

### கவலையீனம்:

பலருக்கும் இது பற்றித் தெரிந்திருந்தாலும் இதனைப்பற்றி பெரிது படுத்தாது இருப்பது அல்லது அசமந்த போக்கு என்பது மற்றொரு புறம். அதாவது முக்கியம் என்று தெரிந்தாலும் சுவையான சமையலுக்காக இவற்றைக் கழற்றி விடுவார்கள். ஆனால் மீண்டும் பொருத்துவதில் அக்கறை காட்டுவதில்லை.

வீட்டில் சாம்பிராணி, தீபம் போன்ற பூசைகளுக்காகவும் பலர் இவற்றைக் கழற்றி விடுவதை அவதானித்திருக்கிறேன். மிக விரைவில் 'மேலே போவதற்கான' பிராத்தனையாக இது இருக்கும் என்பதை இவர்கள் கண்டு கொள்வதில்லை.

### பராமரிப்பு:

புதிய வீடுகளில் புகையறிவுறுத்தும் கருவிகள் வீட்டில் உள்ள பிரதான மின் இணைப்புடன் பொருத்தப்பட்டிருக்கும். இதனால் காலத்திற்குக் காலம் மின்கலங்களை (Batteris) மாற்ற வேண்டியிருக்காது. ஆனால் மின்னைப்பு இல்லாமற் போகும் பட்சத்திலும் இயங்குவதற்காக (Backup) பற்றரிகள் தேவைப்படலாம் அவற்றைக் காலத்திற்குக் காலம் மாற்றுதல் வேண்டும்.

பழைய வீடுகளில் மின்கலங்களில் இயங்கும் புகை அறிவுறுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு தடவை மின் கலங்களை மாற்றுவதில் கவனம் செலுத்தவேண்டும். கோடைகால, மாரிகால நேர மாற்றத்தின் போது தவறாது இவற்றை மாற்றுதல் சிறந்த நடைமுறையாக இருக்கும்.

புகையறிவுறுத்தும் கருவிகள் தூசு பிடித்துப் போவதால் அவை செயலற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன. மாதம் ஒரு முறையாவது இவற்றை Vacuum செய்து சுத்தப்படுத்தவேண்டியது மிக அவசியம்.

பலரும் இவற்றைச் சுத்தம் செய்யத் தவறுவதால் தற்போது வரும் புதிய கருவிகள் அவற்றில் தூசு பிடித்ததும் சத்தமிடும் விதத்தில் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். ஒரு வீட்டில் பொருத்தப் பட்டிருக்கும் புகையறிவுறுத்தும் கருவிகள் அல்லது காபனோரொக்சைட்டை அறிவுறுத்தும் கருவிகள் ஆயுட்காலம் வரைக்கும்

*தொடர்தல் 27ம் பக்கம்*



# புகை அறிவுறுத்தும்...

26ம் பக்கத் தொடர்ச்சி...

சரியாக வேலை செய்யும் என்று எதிர் பார்க்கக்கூடாது. இவை முதல் 5 வருடங் களுக்கு மட்டுத்தான் சரியாக இயங்க கூடியது என அதன் உற்பத்தியாளர்கள் அறிவுறுத்தி உள்ளதுடன் இதனைக் கண் காணிக்கும் பொருட்டு பொருத்தப்படும் திகதி அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கின் றன என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## இவற்றை எப்போது மாற்றுதல் வேண்டும்?


புகையறுவுறுத்தும் கருவிகளில் பச்சை நிற விளக்கு எரிந்து கொண்டிருப்பதை பலரும் அவதானித்திருக்கலாம். இது மின்வளம் இருப்பதை அறிவுறுத்துகிறதே தவிர அதன் செயற்பாட்டை உறுதிப்ப டுத்தவில்லை என்பதை கவனத்திற் கொள் ளவும். அவற்றில் இருக்கும் Test But-tonஐ அழுத்தினால் சத்தம் போடுவதை அவதானிக்கலாம். இதனை ஒரு அடிப் படை சோதனைமுறை என எடுக்கலாமே தவிர இது முற்றிலும் சரியான அல்லது உறுதியான சோதனைமுறை அல்ல என் பதைக் கவனத்திற் கொள்ளவும். Toronto தீயணைக்கும் படையினரின் அறிவுறுத்த லின் படி மாதம் ஒருமுறை Test Button மூலம் அவற்றை சுத்தம் செய்யும் போது சரிபார்த்துக் கொள்ளலாம் எனவும் வருடம் ஒரு முறையாது உண்மையான புகைமூலம் 'Burn and Smoke Without Flame' பரீட்சித் தல் அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள் ளது. மறுவார்த்தைகளில் கூறுவதனால் எம்மவர்க்கு இலகுவாகக் கிடைக்கக்கூ டிய பரீட்சைக்கான கருவி 'ஊது பத்தி' என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பொதுவாகக் கூறுவதானால் 10 வருடத் திற்கு ஒருமுறையாவது இத்தகைய கரு விகளை முற்றாக மாற்றி விடுதல் அவசி யம். பிரதான மின் இணைப்புடன் பொருத்தப்பட்டதாயினும் சரி, பற்றறியில் இயங்குபவையாக இருந்தாலும் சரி 10 வருடத்திற்கு ஒருமுறை மாற்றி விடுதல் சிறந்தது எனப் பல ஆராய்ச்சிகள் கூறு கின்றன. இவற்றில் இருக்கும் Sensor காலப்போக்கில் செயல் இழந்து போவதால் இவற்றை மாற்றுதல் அவசியமானது.




காத்திற்குக் காலம் மாகாண அரசோ மத் திய அரசோ மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு புதிய புதிய சட்டங்களைக் கொண்டுவந்தாலும் அவற்றை முழுமை யாகப் பயன்படுத்தி நலன்பெறும் பொறுப்பு குடியிருப்பாளர்களின் கையிலேயே தங் கியுள்ளது. ஒவ்வொரு தளத்திலும் புகை யறுவுறுத்தும் கருவி பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று 2006ல் கொண்டு வரப் பட்ட சட்டம் தற்போது ஒவ்வொரு படுக் கையறைக்கும் உரிய கட்டட நியமமாக மாற்றப்பட்டிருக்கிறது. தற்போது கட்டப் படும் புதிய வீடுகளில் இவற்றை அவ தானிக்க முடியும்.

ஒரு சிறிய அளவிலான பணத்தைக் காலத்






திற்குக்காலம் செலவழிப்பதன் மூலமும், ஒரு சிறிய நேரத்தை ஒதுக்கி இவற்றைப் பராமரிப்பதன் மூலமும் பல கோடி பெறு மதி மிக்க உயிர்களைக் காக்க ஒவ்வொ ருவரும் கவனம் எடுப்போம் என உறுதி கொள்வோமாக.

'Test your smoke alarms monthly with smoke. Models that have a test button also Need to be tested monthly with smoke be-cause the test button may only tell you that the buzzer works, and not necessarily that the smoke–sensing mechanism is func-tioning'



velasubramaniam@thaiveedu.com



# MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)

⇒ ரீபைனான்ஸ், Title Transfer, ரினிவல்

**MORTGAGE IN ANY SITUATION**

⇒ **Private 1st Mortgage** (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

# குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்

- அகணி சுரேஸ் -

## குடிசார் பொறியியல் - தோற்ற மும் வளர்ச்சியும்

இலங்கையில் உள்ள குடிசார் பொறியியற் திட்டங்களில் பிரமாண்டமான கட்டடத் தொகுதிகளின் கட்டுமான வேலைகள் முக்கியமானவை. முக்கியமாக கொழும்பில் பல உயர் கட்டடங்களின் கட்டுமான வேலைகள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் பல உயர் கட்டடங்கள் இருந்தாலும், அடையாளமாக இந்த இதழில் இலங்கையில் உள்ள சில உயர் கட்டடங்கள் பற்றி ஆராய்வோம்.

## தாமரை கோபுரம் (Lotus Tower):

தாமரை கோபுரம் (Lotus Tower) என்பது கொழும்பில் உள்ள 356 மீற்றர் உயரமான கோபுரமாகும் (தொலைத்தொடர்பு கோபுரம் அடங்கலாக). இந்தக் கட்டடம் 30,600 சதுரமீற்றர் பரப்பளவு கொண்டது. இந்தக் கோபுரத்திற்கு நான்கு நுழைவாயில்கள் உள்ளன. ஒரு தொலைத்தொடர்பு நிறுவனத்தின் அருங்காட்சியகமும், உணவகமும் தரைத்தளத்தில் (Ground Floor) உள்ளன. கோபுர மேடையில் ஆறுதளங்கள் உள்ளன. மேடையின் முதலாவது தளத்தில் ஓர் அருங்காட்சியகமும், இரண்டு


**பகுதி: 14**

கண்காட்சி அரங்குகளும் உள்ளன. இரண்டாவது தளம் 500 பேர் அமரக்கூடிய மாநாட்டு மண்டபமாகவுள்ளது. உணவகங்கள், அங்காடிகள் மூன்றாவது மாடியில் உள்ளன. நான்காவது மாடியில் 1000 இருக்கைகளைக் கொண்ட அரங்கம் உள்ளது. ஐந்தாம், ஆறாம் மாடிகளில் தங்கு விடுதி (ஹோட்டல்) உள்ளது. ஏழாவது மாடியில் நீர்ப்பூங்கா வடிவில் மேலிருந்து இயற்கையை ரசிப்பதற்கான கண்காணிப்பு மண்டபமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 16, 2019 வரையில் தெற்காசியாவில் உள்ள உயரமான கட்டடம் ஆகும். இது ஆசியாவில் உள்ள பதினோராவது உயரமான கட்டடம் ஆகும். உலகின் 19வது உயரமான கட்டடம் ஆகும். தாமரை கோபுரம் தகவல் தொடர்பு, கண்காணிப்பு, உடற்பயிற்சி வசதிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கட்டடத்தின் கட்டுமானச் செலவு 4,104.3 மில்லியன் ரூபா ஆகும். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் செப்ரெம்பர் 16, 2019ல் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கோபுரம் பெய்ரா ஏரியின் நீர்முனையில் உள்ளது.

ஐந்து தொடக்கம் பதின்மூன்று மாடிகள் உயரம் கொண்ட கட்டடங்களை நடு உயர்வு (mid Rise) கட்டடங்கள் என்றும், பதின்மூன்று மாடிகளை விட உயரமான கட்டடங்களை உயர் உயர்வு (High Rise) கட்டடங்கள் என்றும் வரையறை செய்வது வழக்கம். நாற்பது மாடிகளுக்கு மேற்பட்ட மாடிகளைக் கொண்ட கட்டடங்களை வானளாவ கட்டடங்கள் (skyscrapers) என்றும் அழைக்கப்படுவதுண்டு.

கட்டடத் திட்டங்களில் வடிவமைப்புப் பொறியியலாளர் (Design Engineer) திட்ட வடிவமைப்பு பணிகளில் முக்கிய பொறுப்பை வகிப்பார். கட்டமைப்பு மற்றும் புவித்தொழில்நுட்ப பொறியியலாளர்களுக்கு உயரமான கட்டமைப்புகள் குறிப்பிட்ட வடிவமைப்பு சவால்களை முன்வைக்கின்றன. குறிப்பாக நில அதிர்வு பாதிப்பு உள்ள பகுதியில் அமைந்திருந்தால் அல்லது அடிப்படை மண்ணில் அதிக சுருக்கத்தன்மை(compressibility) அல்லது சேற்று மண் போன்ற புவித்தொழில்நுட்ப ஆபத்துக் காரணிகள் இருந்தால், உயரமான கட்டமைப்புகளில் அவசரகாலங்களில் தீயணைப்பு வீரர்களுக்கு அவை கடுமையான சவால்களை முன்வைக்கின்றன. புதிய மற்றும் பழைய கட்டட வடிவமைப்பு, கட்டடத்தின் தரத்தைப் பொறுத்து எச்.வி.ஏ.சி (HVAC) அமைப்புகள் (வெப்பமாக்கல், காற்றோட்டம், குளிரூட்டல், தீயணைப்பு அமைப்பு, படிக்கட்டு, மின்யுயர்த்தி) போன்ற விடயங்கள் குறிப்பிடத் தக்க சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. பாதசாரிகளின் காற்று வசதி மற்றும் காற்று ஆபத்து தொடர்பான பிரச்சினைகள் கவனிக்கப்படுவதை உறுதிப்படுத்த ஆய்வுகள் பெரும்பாலும் தேவைப்படுகின்றன. குறைந்த காற்றழுத்தத்தை அனுமதிக்க,



அதிக பகல் ஒளியை தரையில் கடத்துவதற்கும், மேலும் மெல்லியதாகத் தோன்றுவதற்கும், பல உயர் கட்டடங்கள் வித்தியாசமான வடிவமைப்பைக் கொண்டுள்ளன.

தொடர்மாடிக் கட்டடங்கள் அதிக மக்கள் தொகை அடர்த்தி உள்ள பகுதிகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நன்மைகளைக் கொண்டுள்ளன. மேலும், உலகெங்கிலும் உள்ள அனைத்து அடர்த்தியான நகர்ப்புறங்களிலும் வீடமைப்பு வசதிகளின் தனித்துவமான விடயமாக மாறியுள்ளன. குறைந்த உயரமான மற்றும் ஒற்றை குடும்ப வீடுகளுக்கு மாறாக, தொடர்மாடித் தொகுதிகள் ஒரு சிறிய நிலப்பரப்பில் அதிகமான குடியிருப்பாளர்களைத் தங்க வைக்கின்றன. மற்றும், நகராட்சி உட்கட்டமைப்பின் விலையைக் குறைக்கின்றன.

நாட்டில் பெரும்பாலான உயரமான கட்டமைப்புகள் வணிக தலைநகர் கொழும்பில் அமைந்துள்ளன. மே 2017 நிலவரப்படி, தீவின் மிக உயரமான கட்டமைப்பு 350மீ உயரத்தில் உள்ள கொழும்பு தாமரை கோபுரம், மற்றும் 240 மீ (790 அடி) உயரத்தில் உள்ள ஆல்டேர் ஆகியன ஆகும்.

## ஆல்டேர் (Altair):

ஆல்டேர் என்பது கொழும்பில் உள்ள ஒரு குடியிருப்பு மற்றும் வணிக அபிவிருத்திக் கட்டடமாகும். இந்த கட்டடத்தில் 68 மாடி செங்குத்து கோபுரம் மற்றும் 63 மாடி சாய்வான கோபுரம் உள்ளது. 240 மீட்டர் உயரமான இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்பொழுது உயரமான கட்டடங்களில் ஒன்றாக இருக்கும். இந்த கட்டடம் பெய்ரா ஏரியின் கரையில் அமைந்துள்ளது.

இந்தக் கட்டடம் கொழும்பின் மையத்தில் அமைந்துள்ளது. ஒரு பகுதியில், நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் பாதசாரிகளுக்கு மட்டுமே உலாவக்கூடிய இடமாக மாற்றத் திட்டமிட்டுள்ளது. இந்தக் கட்டத்தின் கட்டடக் கலைஞர்களாக அமெரிக்கா நகரத்தில் இருந்து Moshe safdie of Safdie Associates நிறுவனம், சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளிலிருந்து Design Team 3 நிறுவனமும் பணியாற்றுகின்றன. வடிவமைப்புப் பொறியியலாளர் நிறுவனமாக Derby Design Dubai நிறுவனமும், இயந்திர பொறியியல் மற்றும் மின் பொறியியலாளர் நிறுவனமாக CKR Dubai, M& E Engineers நிறுவனமும் பணியாற்றுகின்றன.

சாய்ந்த கோபுரம் தட்டையான அடுக்குகளுடன் ஒரு தனித்துவமான கட்டமைப்பைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது, இது உள் நெடுவரிசைகள் தேவையில்லாமல் கட்டடத்திற்கு கட்டமைப்பு ஸ்திரத்தன்மையை சேர்ப்பது மட்டுமல்லாமல் பெரிய ஜன்னல்களுடன் ஊடுருவக்கூடிய மேற்பரப்பையும் அனுமதிக்கிறது. இது அதிகபட்ச காற்று ஓட்டம் மற்றும் ஒளியை அனுமதிக்கிறது. வெப்பம் மற்றும் குளிரூட்டலில் ஆற்றல் சேமிப்புக்கு பங்களிக்கிறது. மற்றும், பல்கனி(Balcony) வசதியையும் வழங்குகிறது.

கோபுரங்கள் வலுவூட்டப்பட்ட Concrete Piles, Raft Footing உடன் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் (Reinforced Concrete) மற்றும் Super Steel Structure உடன் கட்டப்படும். இலங்கையில் கொழும்பு அரிதாகவே குறிப்பிடத்தக்க பூகம்பங்களை அனுபவித்தாலும் (இது சர்வதேச கட்டடக் குறியீட்டின் கீழ் நில அதிர்வு மண்டலம் 0 (Seismic Zone 0) ல் வகைப்படுத்தப்பட்டுள்ளது), றிச்ரர் அளவுகோலில் 7 வரை பூகம்பங்களைத் தாங்கும் வகையில் ஆல்டேர்(Altair) கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஹவ்லாக் சிட்டி (Havelock City):

ஹவ்லாக் சிட்டி (Havelock City) என்பது கொழும்பில் உள்ள ஒரு பெரிய கலப்பு-பயன்பாட்டு ரியல் எஸ்டேட் திட்டமாகும். திட்டத்தின் குடியிருப்பு கூறு 8 குடியிருப்பு கோபுரங்களைக் கொண்டுள்ளது. மற்றும் திட்டத்தின் வணிக கூறு 46 மாடி அலுவலக கோபுரம் மற்றும் சர்வதேச தரத்திற்கு கட்டப்பட்ட ஒரு shopping Mall ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது அதன் கிளப்ஹவுஸ், 7 ஏக்கர் தோட்டம் மற்றும் திட்டத்தின் ஒட்டுமொத்த அளவு ஆகியவற்றிற்கு பிரபலமானது. இத்தொகுதி முதல் 4 குடியிருப்பு கோபுரங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

166 மில்லியன் அமெரிக்க டாலர் செலவில், 46 மாடி வணிக வானளாவிய கட்டடத்தில் 600,000 சதுர அடி அலுவலக இடமும், அங்காடிகள் (shopping Mall) 200,000 சதுர அடி இருக்கும்.

## Grand Hyatt Hotel கட்டடம்:

கிராண்ட் ஹையாட் (Grand Hyatt) கொழும்பில் உள்ள 47 மாடி ஐந்து நட்சத்திர ஹோட்டல். ஹோட்டலில் 475 விருந்தினர் அறைகளுடன் மேலும் 84 அறைகள் உள்ளன. இது இலங்கையின் முதல் ஹையாட் பிராண்டட் (Hyatt branded) ஹோட்டல் ஆகும். இது 753 அடி உயரம் உடையது.

இந்த திட்டத்தின் கட்டுமான வேலைகளிலும் பல சவால்கள் ஏற்பட்டன. நீர்மட்டத்துக்கு கீழே 2வது அடித்தளம் வருவதாலும், ஹோட்டலின் கடலுக்கு அருகாமையில் இருப்பதாலும், அகழ்வு வேலைக்கு முன்னர் Piling செய்ய வேண்டியிருந்தது. இந்த தடைகளைச் சமாளிக்க ஒரு நிலத்தடி நீர் வெளியேற்றல் முறையும் வடிவமைக்கப்பட்டது. மைய அகழ்வுப் பணிகள் கடல் மட்டத்திலிருந்து 3.28 மீட்டர் உயரத்தை எட்டியது, இதனால் கட்டடத்தின் நிலைத்தன்மையை (stability)

*தொடர்தல் 30ம் பக்கம்*

# குவலயம் ஆளும்

**29ம் பக்கத் தொடர்ச்சி...**

பராமரிக்க பக்கவாட்டு bracing தேவைப் பட்டது. கட்டடத்தின் தனித்துவமான வடி வமைப்பு காரணமாக கட்டுமானம் சவா லானது, இது 36மீx30மீ பிரதான Ball-rooom 8.2 மீற்றர் உயரத்துடன் கூடியது, இதனால் 3மீ ஆழத்தில் ஆர்.சி.சி (RCC) ஆழமான விட்டங்கள் (Beams) தேவைப் பட்டன.

உயரமான கட்டடம் பொதுவாக மக்கள் விரும்பும் அதிகபட்ச உயரத்தை விட உயரமானதாக வரையறுக்கப்படுகிறது. இத்தகைய கட்டடங்களில் உயர்த்திகளின் தேவை அதிகமாகத் தேவைப்படுகின்றது. இங்கு கல்வி வசதிகள், குடியிருப்புகள், ஹோட்டல்கள், அங்காடிகள், அலுவலக கட்டடங்கள் போன்றன இதில் அடங்கும். சமீபத்தில் தோன்றிய ஒரு வகை கலப்பு-பயன்பாட்டு கட்டடம் (Multi-purpose Building). இதில் குடியிருப்பு, அலுவல கம், ஹோட்டல் அல்லது வணிக இடம் ஆகியவை உள்ளன. உயரமான கட்ட டங்கள் கட்டப்பட்ட மிகப்பெரிய கட்டடங் களில் ஒன்றாகும், அவற்றின் அலகு செல வுகள் ஒப்பீட்டளவில் அதிகம் அவற்றின் வணிக மற்றும் அலுவலக செயல்பாடுக ளுக்கு அதிக நெகிழ்வுத்தன்மை தேவைப் படுகிறது.

உயரமான கட்டடங்களின் அடித்தளங்கள் மிக அதிக சுமைகளை தாங்குகின்றன. குறைந்த அளவிலான மாடிகளைக்கொண்ட தொழில் நுட்பங்கள் அதிக அளவிலான மாடிகளைக் கொண்ட கட்டடங்கள் கட் டுவதற்குப் பெரிய அளவில் பயன்படுத் தப்படுகின்றது. கட்டடங்களின் அடித்த ளங்கள் Piles, பாறைகள், கொங்கிறீற் தூண்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன.

அதிகபட்ச 100 ஆண்டு இடைவெளி காற்று



சக்திகள் இருப்பிடத்துடன் கணிசமாக வேறுபடுகின்றன. கண்டங்களின் உட்பு றங்களில் அவை பொதுவாக சதுர மீட்ட ருக்கு 100 கிலோகிராம் (சதுர அடிக்கு 20 இறாத்தல்) தரை மட்டத்தில் இருக் கும். கடலோரப் பகுதிகளில், சூறாவளி - புயல்கள் ஏற்படும் போது அதிகபட்ச சக்திகள் கொண்டதாக இருக்கும். இது ஒரு சதுர மீட்டருக்கு 250 கிலோகிராம் (சதுர அடிக்கு 50 இறாத்தல்) வரை இருக்கும். தரை உராய்வின் விளைவு குறைவதால் காற்றின் சக்திகளும் கட்ட உயரத்துக்கேற்ப அதிகரிக்கின்றன. உய ரமான கட்டடங்களின் அதிகபட்ச வடிவ மைப்பில் சூறாவளி காற்று சக்திகள் ஒரு சதுர மீட்டருக்கு 840 கிலோகிராம் (சதுர அடிக்கு 170 இறாத்தல்) என்பதாகக் கணிக்கப்படும்.

உயரமான கட்டடங்களில் உள்ள நீர் வழங் கல் (Plumbing) அமைப்புகள் குறைந்த உயரமுள்ள கட்டடங்களைப் போலவே இருக்கின்றன. ஆனால் உள்நாட்டு நீர் வழங்கல் அமைப்புகளுக்கு அழுத்தத்தைத் தக்கவைக்க மின்சார விசையியக்கக் குழாய்கள் மற்றும் தொட்டிகள் தேவைப் படுகின்றன. கட்டடம் மிகவும் உயரமாக இருந்தால், அந்த அமைப்பை மண்டலங் களாகப் (Zones) பிரிக்க வேண்டியிருக் கும், ஒவ்வொரு மண்டலங்களும் தனித்த னியான நீர் வளங்கும் இயந்திரம் (Pumb) மற்றும் தொட்டியைக்(Tank) கொண்டிருக்கும்.

குடிசார் பொறியியல் பற்றிய பல விட யங்களை இத்தொடர் கட்டுரை மூலமாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மன நிறைவடைகின்றேன். தொடர்ந்து உரை யாடுவோம். உங்கள் எண்ணக்கருத்துக்க ளையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

***உசாத்துணை:***


- https://en.wikipedia.org/wiki/List_of_tallest_structures_in_Sri_Lanka
- https://en.wikipedia.org/wiki/High-rise_ building
- https://www.maga.lk/portfolio-view/ grand-hyatt-colombo-4/


akani.suresh@thaiveedu.com





# சமன் மீன்களின் மேல்நோக்கிய இறுதி யாத்திரை

- குரு அரவிந்தன் -

நன்னீர் ஏரிகளுக்குப் புகழ் பெற்ற கனடாவின் மாகாணங்களில் ஒன்றான ஒன்ராறியோவில் நீர் நிலைகள் நிறையவே இருக்கின்றன. தாராளமாக மழை பெய்வதாலும், பனி கொட்டுவதாலும் கனடாவில் தண்ணீர் பஞ்சம் இதுவரை ஏற்பட வில்லை. இக்காலத்தில் சேகரிக்கப்படும் நன்னீர் ஆறுகள், நீரோடைகள், கால் வாய்கள் போன்றவற்றின் மூலம் ஏரிகளையும், கடலையும் நோக்கிச் செல்கின்றன. இந்த நீரோடைகளில் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் சமன் மீன்களைக் காணமுடியும். இந்த மீன்களின் தனித்துவம் என்னவென்றால் ஏரிகளில் இருந்து நீரோடை வழியாகப் படிப்படியாக மேலே பாய்ந்து உயரச் செல்வதுதான். இனப் பெருக்கத்திற்காக இவை ஏரிகளில் இருந்து நிரோடைகள் வழியாக மேல் நோக்கிச் சென்று பாதுகாப்பான இடத்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. நாங்கள் பிறந்தமண்ணை நோக்கிச் செல்வது போல, இந்த சமன் மீன்களும் கடல்கள், ஏரிகளில் இருந்து தாங்கள் பிறந்த இடத்தை மறக்காமல் மோப்ப சக்தியைக் கொண்டு, அந்த இடங்களை நோக்கிச் சென்று முட்டையிடுகின்றன. கடல்கள், ஏரிகளில் உள்ள எதிரிகளிடம் இருந்து தங்கள் இனத்தைக் காப்பாற்றவே இவை மேல் நோக்கிச் சென்று இப்படியான கடினமாக செயலைச் செய்கின்றன. இந்த அதிசயத்தை நேரடியாகச் சென்று பார்க்க இம் முறை சந்தர்ப்பம் கிடைத்தது. கொரோனா வைரஸ் பாதிப்புக் காலமென்பதால், வேலைத்தளத்திற்குச் செல்லாமல் வீட்டில் இருந்தே கணனி மூலம் வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததால், ஓய்வு நேரத்தில் இந்த மீன்களைப் பார்க்கச் சென்றேன். மீன்களின் செய்கைகளை ஒருநாள் அருகே உள்ள கிறடிட்றிவரிலும், பிறிதொரு நாள் ஹம்பர் றிவரிலும் சென்று பார்த்தேன்.

விடாமுயற்சிக்கு எடுத்துக்காட்டாக, தாயகத்தில் நாங்கள் ஸ்கொட்லாந்து மன்னன் ரொபேட் புறூஸின் வெற்றிக்குக் காரணமான சிலந்தி வலை பின்னிய கதையை உதாரணத்திற்குச் சொல்வதுண்டு. ஆனால் இங்கே இந்த சமன் மீன்களைப் பார்த்த போதுதான் அவற்றின் விடா முயற்சியை, தங்கள் இனத்தை, வருங்காலச் சந்ததியைப் பாதுகாக்க எவ்வளவு கடினமான முயற்சியில் ஈடுபடுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. நீர்வீழ்ச்சி போலத் தண்ணீர் கொட்டிக்கொண்டிருக்க, மேலே பாய்ந்து செல்வதற்கு அவை எத்தனை தடவை முயற்சி செய்தன என்பதைப் பார்த்த போது வியப்பாக இருந்தது. அவை நீர்மட்டம் உயரும்வரை காத்திருந்து, எப்படியும் விடா முயற்சியால் மேலே சென்று விடுமாம். அட்லாண்டிக் சமன், பசுபிக் சமன் என்று பல இனங்கள் இருக்கின்றன. அலாஸ்கா பகுதியிலும் வைல்ட்சமன் என்று ஒரு இனம் இருக்கின்றது. சமன் மீன்களுக்குக் கிடைத்த ஒரு கொடை என்னவென்றால், அவை கடல் நீரிலும், நன்னீரிலும் வாழக்கூடியன.

சுமார் 100 வருடங்களுக்குமுன் ஒன்ராறியோ ஏரியில் அட்லாண்டிக் சமன் மீன்கள் நிறையவே இருந்தன. ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து, காடுகள் அழிக்கப்பட்டதாலும், நன்னீர் நிலைகள் மாசுபடுத்தப்பட்டதாலும் சமன் மீனினங்கள் நாளடைவில் வெகுவாகக் குறைந்து விட்டன. 1998ம் ஆண்டளவில் ஒன்ராறியோ ஏரியில் சமன் மீன்களைக் காண்பது அரிதாகவே இருந்தது. 2006ம் ஆண்டு ஒன்ராறியோ ஏரி சுத்தம் செய்யப்பட்டதால் மீண்டும் சமன் மீன்கள் ஏரியில் பெருகத் தொடங்கின. முக்கியமாக சினூக், கோஹோ வகை சமன் மீன்களை மீண்டும் ஒன்ராறியோ ஏரியில் வளர்ப்பதற்கான திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி சமன் மீன்களை வளர்த்து ஏரியில் விடுவது, ஏரியை மாசற்றதாகப் பராமரிப்பது, இதைப்பற்றி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவூட்டுவது, மேற்கொண்டு ஆய்வுகளை நடத்துவது போன்ற திட்டங்கள் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.


அட்லாண்டிக் கரையோர சமன் மீன்களை அட்லாண்டிக் சமன் என்றே பொதுவாக அழைக்கிறார்கள். பசுபிக் சமன் மீன்களை கோஹோ சமன், சினூக் சமன், சும் சமன், பிங் சமன், சொக்கைசமன் என்று அழைக்கிறார்கள். கனடாவின் ஒரு பக்கத்தில் அட்லாண்டிக் சமுத்திரமும், மறுபக்கத்தில் பசுபிக்சமுத்திரமும் இருப்பதால் எல்லாவிதமான சமன்களையும் இங்கே காணமுடிகின்றது. அதனால்தான் இந்த சமன் மீன் வகைகளை ஒன்ராறியோ ஏரியிலும் காணமுடிகின்றது. சினூக் சமனை கிங்சமன் என்றும் அழைப்பதற்குக் காரணம் சுமார் 5 அடி நீளமானதாகவும் இவை இருக்கின்றன. கோஹோ சமனை சில்வர் சமன், கூக்நோஸ் சமன் என்றும் அழைப்பர். இனப்பெருக்க காலங்களில் இவை கடும்சிகப்பு அல்லது மண்ணிறமாக மாறிவிடுகின்றன. வடஅமெரிக்க சமன்களில் சொக்கை சமன்தான் அதிக ருசியானது என்று சொல்கிறார்கள். வாஷிங்டன் மாகாணக் கரையோரத்தில் இருந்து அலாஸ்காவரை உள்ள கடலில் இவற்றைக் காணமுடியும். இவற்றின் கண்கள் பெரிதாக இருப்பதால் இப்பெயரைப் பெற்றது. பிங்சமன்கள் எல்லாவற்றையும் விட உருவத்தில் சிறியனவாக இருப்பது மட்டுமல்ல, ஒன்றுவிட்ட ஒருவருடத்திற்குத்தான் இவை நன்னீர் நோக்கி வருகின்றன. ஹம்பாக் சமன் என்றும் இதை அழைப்பர். சும்சமனை டோக்சமன் என்றும் அழைப்பர். அட்லாண்டிக் சமன் எதிர்நீச்சல் போடும்போது, சுமார் 10 அடி உயரம் வரை பாயக்கூடியது. பசுபிக் சமன்களைப் போலல்லாது, இவை இனப் பெருக்கம் செய்ததும், அனேகமாகக் கடலையோ அல்லது ஏரியையோ நோக்கித் திரும்பிச் செல்கின்றன. வடஅமெரிக்காவின் ஐம்பெரும் வாவிகளிலும் சமன் இனங்கள் இருக்கின்றன.

செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இனப் பெருக்கத்திற்காக இவை ஆறுகளில் அல்லது நீரோடைகளில் மேல் நோக்கி நீந்திச் செல்வதைக் காணமுடியும். நீர்வீழ்ச்சி போன்ற சில இடங்களில் சமன் மீன்கள் கீழிருந்து மேலே துள்ளிப் பாய்ந்து செல்வதை அவதானிக்க முடியும். மேலே துள்ளிப் பாய்ந்து செல்லும் அழகை கிறடிட்வலி ஆற்றிலும், ஹம்பர் ஆற்றிலும் ஒக்ரோபர் இறுதி வாரத்தில் சென்று பார்த்து இரசிக்க முடிந்தது. இலவசமாகக் கிடைக்கும் இத்தகைய காட்சிகளைப் பார்ப்பதற்காகப் பாட சாலை மாணவ, மாணவிகள் நிறையவே வந்திருந்தனர். இக்காலத்தில் யோர்க்கில் ஹம்பர் றிவர், ரொறன்ரோவில் டொன் றிவர், ஸ்காபரோவில் ஹைலாண்ட் கிறீக், பிக்கறிங்கில் டவ்றின் கிறீக், மிசஸாகாவில் கிறடிட் றிவர் போன்றவற்றில் சமன் மீன்களைக் காணமுடியும். விரும்பினால் உங்களுக்கு அருகே உள்ள நீர்நிலைகளுக்குச் சென்று, சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்துப் பார்க்கலாம். உங்கள் நினைவுகளை மீட்டி, ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டுமானால், உங்களிடம் உள்ள செல்போனிலேயே அழகான படங்களை எடுக்க முடியும். நீர்நிலைகளின் சுற்றாடலில் நிறம் மாறி அழகாக நிற்கும் மரங்களும் படத்தில் அகப்படும்.

சமன் மீன்கள் உணவுக்காக அதிகம் பாவிக்கப்படுகின்றன. உலகிலே சீனா நாடுதான் அதிக கடல் உணவை ஏற்று மதி செய்யும் நாடாக இருக்கின்றது. நோர்வேயும், சிலிநாடும் தான் அதிக சமன் மீன்களை ஏற்றுமதி செய்கின்றன. நோர்வே 55 சதவீதமும், சிலி 25 சதவீதமும், கனடா 6 சதவீதமும் ஏற்றுமதி செய்கின்றன. போலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் அதிகம் இறக்குமதியும் செய்கின்றன. மனிதரின் இதயம் சம்பந்தமான நோய்களுக்கும், கொலஸ்ரோலை கட்டுப்படுத்தவும் சமன் உணவு உதவுகின்றது. மேலும் ஊட்டச்சத்தும், ஒமேகா-3 இருப்பதால் சருமத்திற்கு நல்லதாகவும், கண் பார்வைக்கு சிறப்பானதாகவும், எலும்புகளைப் பலப்படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியதாகவும் சமன் மீன் உணவு இருக்கின்றது. சமன் மீன்கள் இலையுதிர் காலத்தில் முட்டையிட்டு, டிசம்பர் மாதத்தில் குஞ்சுகள் பொரிக்கின்றன. 90 சதவீதமான சமன் மீன்கள் இனப்பெருக்கம் செய்தபின் இறந்து விடுகின்றன. 10 சதவீதமான சமன் மீன்கள் மட்டும் திரும்பவும், கடலுக்கோ அல்லது ஏரிக்கோ சென்று, மறு வருடம் திரும்பி வருகின்றன.

குஞ்சுகள் பொரித்ததும், எதிரிகளிடம் இருந்து தப்புவதற்காக அவை இரவு நேரத்தில் கடலையோ அல்லது ஏரிகளையோ நோக்கிப் பயணிக்கின்றன. இதில் இரண்டு சதவீதமான சமன் குஞ்சுகள் தான் எதிரிகளிடம் இருந்து தப்பிப் பெரிதாக வளருகின்றன. சராசரி மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் வரை வளர்ந்து கடலில் வாழும் சமன் மீன்கள் இனப் பெருக்கத்திற்காகத் தாங்கள் பிறந்த இடமான நன்னீர் தேடி மீண்டும் வருகின்றன. இலையுதிர் காலம் தொடங்கும்போது, நன்னீர் முகத்துவாரங்களில் அதிக சமன் மீன்களைக் காணமுடியும். சமன் மீன்கள், பொதுவாகப் பிங் நிற மாக இருந்தாலும், சில சமன்கள் அரேஞ்சு அல்லது சிகப்பு நிறமுடையனவாயும் இருக்கின்றன. நன்னீரில் மேல் நோக்கி வரும்போது, எதிர் நீச்சல் போடுவதாலும், நன்னீருக்கு வந்ததும் போதிய இரை கிடைக்காததால் சமன் மீன்கள் பட்டினி கிடப்பதாலும், முட்டையிட்டதும் வலு

இழந்து போவதாலும் அவை திரும்பிச் செல்ல முடியாமல் இறந்து போவதற்கான முக்கிய காரணங்களாகும். சமன் மீன்கள் சராசரி 10 தொடக்கம் 50 இறாத்தல் வரை நிறையுள்ளனவாக இருக்கின்றன. ஒன்ராறியோ ஏரிகளில் சராசரி 3 இறாத்தல் வரை நிறை உள்ள சமன்களே அதிகம் காணப்படுகின்றன. மனிதருக்கு மட்டுமல்ல, திமிங்கிலம், கடற்சிங்கம், டொல்பின், சீல் மற்றும் கரடிகளுக்கும், கழுகுகளுக்கும் பிடித்தமான உணவாகவும் சமன் மீன்கள் இருக்கின்றன. பொழுது போக்குக்காக கரையோரங்களிலும், படகுகளில் சென்றும் சமன் மீன்களைப் பிடிப்பவர்களும் உண்டு.



சில வருடங்களுக்கு முன் சான்பிரான்சிஸ்கோ சென்றபோது பியர்-39ல் சீல் இனங்களைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது சமன் மீன்களுக்கு அங்குள்ள பியர்-70 பிரபலமாக இருந்தது. இலையுதிர் காலத்தில் லட்சக்கணக்கான மீன்கள் சக்கிரமென்ரோ ஆற்றில் இனப்பெருக்கம் செய்வதுண்டு. யூலை மாதம் பிற்பகுதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம்வரை இப் பகுதியில் உள்ள பியர்-70 யின் சுற்றாடலில் மிகப் பெருந்தொகையான சமன் மீன்கள் நன்னீர் நோக்கிச் செல்வதுண்டு. சினூக், பிங்சமன், கோஹோ சமன், சும்சமன், சொக்கை சமன் போன்றவற்றை இப்பகுதியில் நிறைய இருந்தன. சமன் மீன்கள் பெருந்தொகையாக இருந்த இடத்தில் இப்பொழுது குறைந்து சென்றவருடம் சுமார் 60,000 மீன்கள் வரைதான் அப்பகுதியில் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. திடீரென ஏற்பட்ட சமன் மீன்களின் மறைவுக்குக் கலிபோர்ணியா பகுதியில் அடிக்கடி ஏற்படும் நில அதிர்வும், கடல் நீரில் கலக்கும் எண்ணெய்க் கழிவும், தங்கச் சுரங்கம் காரணமாக சமன் மீன்கள் முட்டையிடும் ஆற்றங்கரைகள், நன்னீர் தேக்கங்கள் பாதிக்கப் பட்டதும், அணைகள் கட்டப்பட்டு நீரோட்டம் தடுக்கப்பட்டதும் சில கரணங்களாக இருக்கலாம் என நம்புகிறார்கள். மீன்கள் குறைந்ததால், இப்பகுதி மீன்பிடித் துறைக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. மீன்பிடிப் படகுகளும் தரையில் துருப் பிடித்த நிலையில் தான் இருக்கின்றன.

***உசாத்துணை:***

- https://www.fws.gov/fisheries/fishmigration/atlantic_salmon.html
- https://fishingbooker.com/blog/types-of-salmon



*kuruaravindan@thaiveedu.com*

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE

## NESAN
416-908-5656

## Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit
New House Commitment, Pre-approval · Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

# வறிய நாடுகளும் ஆபத்து மிகுந்த வாகனங்களும்

**- சீலன் -**

காலநிலை மாற்றம் பற்றியும் சுற்றுச் சூழல் பற்றியும் உரக்கக் குரல் கொடுத்து வரும் செல்வந்த நாடுகள் இந்த பூமிப் பந்தின் ஆயுளைக் குறைப்பதனை தொழி லாகச் செய்து வருகின்றனவோ என்ற கேள்வி எழும் அளவிற்கு தவறுகளை இழைத்து வருகின்றன.

கார்பன் வெளியீட்டைக் குறைக்க வேண் டும், உலகம் வெப்பமயமாவதனால் பேர ழிவு ஏற்படப் போவதாக அதிகமாக பேசப் பட்டு வரும் நிலைமையில், செல்வந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்ட பாவனைக்கு ஒவ்வாத வாகனங்கள் ஆபிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மிகவும் மாசடைந்த, பயன்படுத்துவதனால் சுற்றுச் சூழலுக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடிய பழைய வாகனங்களை செல்வந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேறு வடிவில் கூறினால், செல்வந்த நாடு களின் மோட்டார் வாகன குப்பைகள் நகரீகமாக ஏற்றுமதி என்ற பெயரில் வறிய நாடுகளில் கொட்டப்படுகின்றன.

கடந்த 2015ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 14 மில்லியன் தரம் குறைந்த, பழைய வாகனங்கள் ஐரோப்பா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட பழைய வாகனங்களில் 80 வீதமானவை வறிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள துடன் அதிலும் அரைவாசிக்கு மேற்பட் டவை ஆபிரிக்க நாடுகளினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட வாகனங் களில் 80 வீதமானவை ஏற்றுமதி செய் யப்படும் நாடுகளில் காணப்படும் பாது காப்பு மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்களுக்கு அமைவாக பயன்படுத்தப்பட முடியாதவை என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வகை வாகனங்களினால் அதிகள வில் வாகன விபத்துக்கள் ஏற்படுவதுடன் சுற்றுச் சூழல் மாசடைவதற்கு பெரிதும் ஏதுவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

பழைய வாகனங்களை ஏற்றுமதி செய்வது குறித்து சில தர நிர்ணயங்கள் கட்டுப்பாடு கள் விதிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றாடல் திட்டம் வெளியிட் டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

உலகம் முழுவதிலும் கார் உரிமையாளர் களின் எண்ணிக்கை பெருமளவில் அதிக ரித்துள்ளது, வீதிகளில் சுமார் 1.4 பில்லி யன் கார்கள் செலுத்தப்படுவதுடன், இந்த எண்ணிக்கை 2040ம் ஆண்டளவில் இரண்டு பில்லியன் கார்களாக மாற்றமடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கார் இறக்குமதி தொடர்பிலான விதி முறை கள் மிகவும் பலவீனமாகக் காணப்படுவ தாக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் முன் னெடுக்கப்பட்ட ஆய்வின் போது ஆய்வா ளர்களினால் கண்டறியப்பட்டுள்ளது.

நெதர்லாந்திலிருந்து கப்பல் மூலம் ஆபி ரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெரும் எண்ணிக்கையிலான கார்கள் மற் றும் வேன்கள் மிகவும் பழையவை என்பது டன், சுற்றுச் சூழலுக்கு ஆபத்தானது என நெதர்லாந்து சுற்றுச்சூழல் மற்றும் போக்கு வரத்து நிறுவனம் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஏற்றுமதி செய்யப்பட்ட 14 மில்லியன் வாக னங்களில் 80 வீதமானவை வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு பொருத்த மற்றவை அல்லது சுற்றுச் சூழலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியவை என்பது தெரியவந்துள்ளது.

இதன்படி, குறித்த வாகனங்கள் சாதாரண மாக வெளியிடப்படும் கார்பன் அளவை விடவும் 90 வீதம் அதிகளவில் சுற்றுச் சூழ லுக்கு தீங்கு உருவாக்கக்கூடிய கார்பனை வெளியிடுவதாக தெரிவிக்கின்றது.

இந்த வகையான கார்கள் போக்குவரத்துச் செய்வதற்கு ஆபத்தானவை என்பதுடன் மாசடைந்தவை என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் வாக னங்களை சாலைகளில் பயன்படுத்தி போக் குவரத்துச் செய்யும் ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் அதிகளவு வீதி விபத் துக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின் றது.

இந்த வகை வாகனங்கள் நைட்ரிஜன் ஒக் சைட் என்னும் பொருளை அதிகளவில் வெளியிடுவதாகவும் இது சூழலுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடியது எனவும் ஆய் வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2017ம் ஆண்டில் உகண்டா நாட்டில் 20 ஆண்டுகள் பழமையான டீசல் வாகனங் களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வேயிலும் இவ்வாறான நிலைமை காணப்படுவதாகவும் பெரும்பாலான ஆபி- ரிக்க நாடுகளில் எத்தனை ஆண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என்ற விதிமுறையே கிடையாது எனவும் தெரி விக்கப்படுகின்றது.

எயார் பேக், என்டி லொக் போன்ற விலை உயர்ந்த வாகனப் பாகங்கள் அகற்றப் பட்டே விற்பனை செய்யப்படுவதாகவும் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இந்த உலக அரங்கின் அனைத்து நாடுக ளினதும் கூட்டுப் பொறுப்பு என்பதனை உணர்ந்து, இவ்வாறான நடவடிக்கைகளை மீளாய்வு செய்வது, ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கும் இறக்குமதி செய்யும் நாடு களுக்கும் நன்மையை ஏற்படுத்தும் என்ப தில் ஐயமில்லை.



***உசாத்துணை:***

• https://www.bbc.com/news/science-environment-54665545

■ ■ ■

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

# வாசிப்புக் கற்பித்தலுக்குச் சிறந்த அணுகுமுறை எது?

- என். கிருஷ்ணகுமார் -

## அறிமுகம்:

வாசிப்புத்தான் பிள்ளைகளுடைய எதிர் கால கல்விக்கான திறவுகோல். குறிப்பாக வாசிப்புத்தான் முறையியல் கல்விக்கான உயிர்நாடி. எனவே, எமது குழந்தைக ளுக்கு ஆரம்ப வகுப்புகளிலேயே வாசிக் கக் கற்றுக்கொடுப்பதால் பல நன்மை கள் கிடைக்கின்றன. அதாவது பிள்ளைக ளுடைய மூளையிலிருக்கும் எல்லா நரம் புகளும் நன்றாக இயங்கும் (Neuroligical advantages), கல்வியின் மூலம் நன்மை கள் கிட்டும் (Educattional advantages), உளவியல் ரீதியான நன்மைகள் (Psycho-logical advantages), சமூக நீதியிலான நன்மைகள் (Social advantages), சிறந்த மொழியாற்றலையும் கொண்டிருப்பார்கள் (Language advantages).

இவ்வாறான நன்மைகளை பிள்ளைகளி டத்தில் மிக ஆரம்பத்திலேயே ஏற்படுத்தி விட வேண்டுமாயின், எந்த அணுகுமுறை யைப் பின்பற்றி பிள்ளைகளுக்கு மொழிக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்ற புரிதல் எம்மத்தியில் இருக்க வேண்டும். இந்தக் கட்டுரையில் உலகில் மிகவும் பிரபல்யமான மொழிக்கற்பித்தலுக்கான அணுகுமுறைகளான முழுமை மொழி அணுகுமுறை (Whole Language Appro ach) மற்றும் எழுத்தொலி அணுகுமுறை (Explicit Phonics Approach) என்பன பற்றியே இங்கு நாம் சுருக்கமாக கலந் துரையாடப் போகின்றோம். இது பற்றிய விரிவான கலந்துரையாடல்களை கல்வித் துறைச் சார்தோர் மட்டுமன்றி பெற்றோர் கள் மற்றும் சமூகத்தினரும் முன்னெடுப்பது அவசியமானதாகும்.

## முழுமைமொழி அணுகுமுறை பற்றிய சுருக்கம்:

முழுமைமொழி என்பது வாசிப்பு மற்றும் எழுத்துக் கற்பித்தலுக்கான ஒரு போத னைக் கோட்பாடாகும். இதுபற்றி பல் வேறு கல்வியியலாளர்களும் தமக்கேற்ற விதத்தில் வரைவிலக்கணப்படுத்த முயற் சித்துள்ளார்கள். இதன்காரணமாக ஒரு குறிப்பிட்ட பொதுவான வரைவிலக்கண மொன்று இல்லை. எனினும், இதனை ஒரு மொழியில் பொருள் தரக்கூடிய வாக்கியங்களை உருவாக்குவதற்காக எவ்வாறு சொற்கள் ஒன்றுசேர்க்கப்படு கின்றன மற்றும் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை விளக்குவதனூடாக பிள்ளை களுக்கு வாசிக்கக் கற்றுக்கொடுக்கும் முறையாகும் என புகழ்பெற்ற merriam-webster dictionary வரைவிலக்கணப்படுத் துகின்றது. அதாவது பொருளுள்ள பிரதி யொன்றில் காணப்படும் முழு சொற்க ளையும் சொற்றொடர்களையும் கற்றுக் கொள்வதனை முன்னிலைப்படுத்திய வாசிப்பு மற்றும் எழுத்துக் கற்பித்தல் முறையாகும்.

மேலும் எளிமையாகக் புரிந்துக்கொள்ள வேண்டுமாயின், வாசிப்பு மற்றும் எழுத் துக்கற்பித்தல் தொடர்பாக முழுமை மொழி அணுகுமுறை பல முன்னிலைப்படுத்தும் விடயங்கள் அவதானித்தல் முக்கியமான-தாகும்:

வாசிப்புக் கற்றலில் பிள்ளைகள் வாசிக் கும் விடயத்தின் அல்லது பகுதியின் பொருளிலும் போதனை முறையிலுமே அவதானம் செலுத்த வேண்டும்.

- ஒரு சொல்லினுடைய முழுமையான பொருளிலேயே கவனம் செலுத்த வேண்டும். வாக்கியத்திலிருக்கும் தனி எழுத்தொலிகளில் அழுத்தம் கொடுக் கத் தேவையில்லை.
- வாசிக்கும்போது பொருள் உருவாக் கத்திலும் எழுதும்போது பொருளைப் புலப்படுத்துவதிலும் அவதானம் செலுத்த வேண்டும் எனக் கூறுகிறது.
- பிள்ளைகள் எவ்வாறு பேசக் கற்றுக் கொள்கிறார்களோ அதேபோல வாசிக் கவும் இயற்கையாகவே கற்றுக்கொள் வார்கள்.
- வாய்மொழி விருத்தியைப் போலவே பிள்ளைகள் வாசிப்பு மற்றும் எழுத்து என்பனவற்றையும் சூழலிலிருந்துக் கற்றுக்கொள்வார்கள்.
- வாசிப்பு ஆற்றலை ஒலிகளையும் குறி யீடுகளையும் தொடர்புபடுத்தி தனித் தனியாகப் பிரித்துக் கற்பித்தலாகாது. பிள்ளைகளின் வாழ்க்கையனுபவங்கள், பயனுள்ள செயற்பாடுகள் என்பவற்று டன் தொடர்புபடுத்தி கலந்துரையாடல் கள், கேட்டல், பேச்சு மற்றும் எழுத்து என்பவற்றினூடாகவே வாசிப்புக் கற் பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முழுமை மொழி அணுகுமுறையில் பிள் ளைகள் சொற்களைப் பார்த்ததுமே வாசிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக 'அம்மா' என்ற சொல்லை அம்மா என்று நேரடியாக வாசிக்கக் கற் பிக்க வேண்டுமெனவும், குறிப்பிட்ட இச் சொல்லிலுள்ள தனி எழுத்தொலிகளைச் சொல்லிக்கொடுக்கத் தேவையில்லையென் றும், பிள்ளைகள் அவற்றை தாமாகவே கற்றுக்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க் கின்றது. அதேபோல 'இது எங்கள் பாட சாலை' என்ற வாக்கியத்தை வாசிக்கக் கற்பிக்க வேண்டுமாயின், நேரடியாக இவ்வாக்கியத்தையே வாசிக்கக் கற்பிக்க வேண்டும். பிள்ளைகள் அவ்வாக்கியத்தின் பொருளை விளங்கி வாசிக்க வேண்டு மென இதன்மூலம் முழுமை மொழி அணுகுமுறை எதிர்பார்க்கின்றது.

## எழுத்தொலி அணுகுமுறை:

இது முழுமை மொழியிலிருந்து வேறுபட்ட வாசிப்புப் போதனை முறையாகும். எழுத்தொலி அணுகுமுறையானது எழுத் துக்களுக்குரிய சத்தங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கும் ஒரு கற்பித்தல் அணுகு முறையாகும். ஒரு வாக்கியத்தில் அல் லது சொல்லில் காணப்படும் தனித்தனி சத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்து, அச்சத்தங்களுக்குரிய வரிவடிவத்தை இணைத்துக் கற்பிக்க வேண்டும் என் பதை முன்னிலைப்படுத்துகின்றது. இதனை வரிவடிவத்தையும் அதற்குரிய ஒலி வடி வத்தையும் இணைத்துக் கற்பிக்கும் முறை யென எழுத்தொலி அணுகுமுறையை எளிமையாகக் கூறலாம். அத்துடன் தனி-யெழுத்துக்களை ஒன்று சேர்த்து குறிவி லக்கல் செய்வது (Decoding) எவ்வாறு, அதாவது எழுத்தொலிகளை ஒன்று சேர்த்து சொற்களாக வாசிப்பது பற்றியும் வலி யுறுத்துகின்ற ஒரு அணுகுமுறையாகும்.

உதாரணமாக: 'அம்மா' என்ற சொல்லை பிள்ளை வாசிக்க வேண்டுமாயின் குறிப் பிட்ட இச்சொல்லில் காணப்படும் அ, ம், மா ஆகிய மூன்று எழுத்துக்களையும் பிள்ளை தெரிந்திருக்க வேண்டும். அதா வது எழுத்தொலி அணுகுமுறையானது சொல்லில் காணப்படும் மிகச் சிறிய சத்தம், அதற்குரிய வரிவடிவம், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தொலிகளை ஒன்றுசேர்த்து சொற்களாக வாசித்தல் மற்றும் குறிவி லக்கல் என ஒவ்வொரு சிறிய ஆற்றலுக் கும் முக்கியத்துவம் வழங்கி கற்பிக்கும் ஒரு வாசிப்புக் கற்பித்தல் முறையாகும்.

இதனை ஒப்பிட்டுப் புரிந்துக்கொள்ள வேண்டுமாயின், முழுமை மொழி அணுகு முறையானது நேரடியாக சொல்லை வாசிக்கக் கற்றுக்கொள்வதனூடாக குறிப் பிட்ட அச்சொல்லிலிருக்கும் தனியெழுத் துக்களை பிள்ளைகள் சுயமாக கற்றுக் கொள்வார்கள் என்றும், பிள்ளைகள் தனி யெழுத்துக்களைக் கற்றுக்கொண்டதன் பின் அவ்வெழுத்துக்களைச் சேர்த்துச் சொற் களாக வாசிப்புத் திறனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், இவ்வாற்றல் படிப்படியாக வாக்கியம் மற்றும் பந்தி வாசிக்கும் நிலைவரை விருத்தியடைய வேண்டுமெனவும் எழுத்தொலி அணுகு முறை எதிர்பார்க்கின்றது.

## சுருக்கமான மதிப்பீடு:

பூமியில் மனித வரலாறு கிட்டத்தட்ட 6 - 7 மில்லியன் வருடங்கள் கொண்டது. இற்றைக்கு கிட்டத்தட்ட 5000 - 6000 வரு டங்களிற்கு முன்பே வரிவடிவம் தோன் றியிருக்கிறது. உலகம் தோற்றம் பெற்ற தற்கும் வரிவடிவம் தோற்றம் பெற்றதற் குமான கால இடைவெளி மிகப் பெரிய-தாகும். எனவே, எழுத்துக்களை வாசிப் பது என்ற விடயம் மனித மூளைக்குப் புதியது என்பது மனங்கொள்ளத்தக்கது. அது மட்டுமல்லாது எழுத்துக்களையோ அல்லது வாசிக்கும் ஆற்றலையோ சமூ கத்தினரிடமிருந்து கற்றுக்கொள்வது சாத் தியமாகாது. அதுமட்டுமல்லாமல் வாசிப் புக் கற்பித்தலானது நன்கு முறைமைப்ப டுத்தப்பட்டு கற்பிக்கப்பட வேண்டும் என ஆய்வுகள் கூறுகின்றன. அதேநேரம் கேட்டல் மற்றும் பேச்சுத் திறன்போல வாசிப்புத் திறனை இயற்கையாக அல் லது சமூகத்துடன் ஊடாடுவதன் மூலம் சுயமாகக் கற்றுக்கொள்ளவும் முடியாது.

வாசிப்புக் கற்பித்தலில் எழுத்துக்கள் மற் றும் அவ்வெழுத்துக்களுக்குரிய சத்தங் களை தனியாகக் கற்பிக்கக்கூடாது என முழுமை மொழி அணுகுமுறை கூறுகிறது. அது மட்டுமின்றி எழுத்துக் கற்பித்தல் தொடர்பாக வெளிப்படையாக குறிப்பிட வில்லை (Implicit). எனினும் எழுத்தொலி அணுகுமுறையை வெளிப்படையாகப் பின்பற்றிக் கற்பிக்கும்போதே எழுத்துக் குரிய ஒலிவடிவம், வரிவடிவம், ஒலிவடி வத்திற்கும் வரிவடிவத்திற்குமான தொடர்பு, எழுத்தை எழுதுவதற்கான திசைமுகம், உயிர்க்குறிகள் அமையும் இடம் என்பன தொடர்பாக பிள்ளைகளுக்குப் போதிய புரிதல் ஏற்படும். அத்துடன் குறிப்பிட்ட எழுத்தை துல்லியமாக இனங்காணவும் சரியாக அல்லது பிழையின்றி உச்சரிக்க வும், சரளமாக வாசிக்கவும் அவசியமாகும்.

முழுமை மொழி அணுகுமுறையானது சொற்களையும் அவற்றுக்குமான பொரு ளையும் கற்பித்தால் பிள்ளைகள் அதிலி ருக்கும் சிறிய கூறுகளான எழுத்தொலி-களை சுயமாக கற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றது. உதாரணமாக, அம்மா, அப்பா, அக்கா, பட்டம் ஆகிய சொற் களை உதாரணமாக எடுத்துக்கொள்ள லாம். வாசிப்புக் கற்பித்தலின்போது தனி-யெழுத்துக்களைக் கற்பிக்காமல் நேரடி யாக சொற்களை வாசிக்கச் செய்வதனூ டாக சொற்களைப் பிள்ளைகள் பகுத் தாய்ந்துக் கற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே குறிப்பி டப்பட்ட இச் சொற்களை ஒரு பிள்ளை வாசிப்பாரானால் அவரால் கற்பிக்கப்படாத மாமா, பாப்பா, படம் போன்ற சொற்க ளையும் வாசிக்கும் இயலுமையைப் பெற் றிருக்க வேண்டும். அதேபோல குறிப் பிட்ட சொற்களில் இருக்கும் எழுத்துக்க ளினாலான வேறு சொற்களை வாசிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நேரடியாக சொற்களை வாசிக்கக் கற்பிப்பது படங் களை வாசிக்கக் கற்பிப்பதற்கு (Picture reading) ஒப்பானது. பட வாசிப்பு முறை யானது ஆங்கில மொழியில் சில சொற் களை வாசிக்கவும் சீன மொழியை வாசிக் கவும் உதவும்.

உதாரணமாக:
Sight, Night, Might – ght = T 'ட்',
Knife – 'K' உச்சரிக்கப்படமாட்டாது ,
Psychology - P உச்சரிக்கப்படமாட்டாது,
Sick, Kick - ck = K என உச்சரிக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற சொற்களை வாசிக்கவேண்டு மாயின் சொற்களாகவே வாசித்து ஞாப கத்தில் வைத்திருக்க வேண்டும். தமிழ் மொழியில் எல்லா சத்தங்களுக்கும் தனித் தனியான குறியீடுகள் இருக்கின்றமை யால் பட வாசிப்பு (Picture reading/Sight reading) பொருத்தமானதல்ல. அதே நேரம் பிள்ளைகளுக்கு தெரியாத எழுத்துக்களைக் கொண்டமைந்த சொற்களை வாசிக்க வழங்குவது பொருத்தமானதாக இருக்குமா என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

வாசிப்புக் கற்பித்தலில் முழுமை மொழி அணுகுமுறையின் மூலம் சிறந்த பெறு பேறுகளை உருவாக்க முடியவில்லை

*தொடர்தல் 35ம் பக்கம்*



# வாசிப்புக்...

34ம் பக்கத் தொடர்ச்சி...

என்றும் குறிப்பிட்ட இம்முறையின் மூலம் எழுமாறான கற்றலே இடம்பெறுகின்றது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

## இலங்கையில் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் காணப்படும் முழுமைமொழி அணுகு முறைக்குரிய பண்புகள்:

இலங்கையில் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் எழுத்துக் கற்பித்தல் தொடர்பாக வெளிப்படையற்ற அல்லது தெளிவற்ற அறிவுறுத்தல்களே இடம்பெற்றுள்ளது. அத்துடன் 30 எழுத்துக்களையே கற்பிக்குமாறு அறிவுத்தல் வழங்கியுள்ளது. அவ் எழுத்துக்களில் எந்தவொரு மெய்யெழுத்தும் இடம்பெறவில்லை (ட, ப, ய, ம, ழ, ஈ, ர, ச, க, த, ந, ங, அ, ஆ, இ, எ, ஏ, ஞ, வ, ல, ற, ஐ, ள, ன, ண, ஒ, ஔ, உ, ஊ). அதேநேரம் பிள்ளைகள் அதிகமாக கற்றுக்கொள்ள இடர்படும் உயரிக்குறிகள் பற்றியும் உயிர்க்குறிகள் அமைந்துவரும் எழுத்துக்கள் பற்றியும் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்பட வில்லை. (சிங்கள மொழி ஆசிரியர் வழி காட்டியில் எழுத்துக்கள் மற்றும் உயிர்க் குறிகளை அட்டவணைப்படுத்தி அவற்றைக் கற்பிப்பதற்கான ஒழுங்குமுறையும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை ஒரு முன்னேற்றகரமான ஏற்பாடு என்றும் குறிப்பிட முடியும்). காரணம் பிள்ளைகள் ஏனைய எழுத்துகளையும், உயரிக்குறிகளையும் உயிர்க்குறிகள் அமைந்துவரும் எழுத்துக்களை சுயமாகக் கற்றுக்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பினாலாகும்.

எழுத்துக் கற்பித்தலுக்கென ஒரேயொரு பாடவேளையை மட்டுமே ஒதுக்கியுள்ளது. ஏனைய எழுத்துக்களைக் கற்பிக்க பாட வேளைகளை ஒதுக்காத அதேநேரம் அவை தொடர்பாக அறிவுறுத்தல்களையும் வழங்கவில்லை. ஏனைய எழுத்துக்களை பிள்ளைகள் சொற்கள் வாசிக்கும் பயிற்சியின்போது பகுத்தறிந்துக் கற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றது. முதலாவது எழுத்தை ஆசிரியர் வழிகாட்டியிலிருக்கும் 5வது செயற்பாட்டில் கற்பித்த பின்னர், மறுநாளே அதாவது 7வது செயற்பாட்டில் பிள்ளைகள் உயிர்க்குறிகள் அமைந்துவரும் எழுத்துக்கள் உள்ளிட்ட குறில் நெடில் எழுத்துக்களை (க, உ, ச, அ, த, கா, ஊ, சா, தா, ஆ) வாசிப்பார்கள் என்றும் மூன்றாவது நாள் 8வது செயற்பாட்டில் உயிர்க்குறிகள் அமைந்துவரும் கற்பிக்காத எழுத்துக்களாலான சொற்களையும் வாசிக்க வேண்டுமென(மூக்கு, ஆந்தை, சூரியன், காளான், விசிறி) எதிர்பார்க்கின்றது. உள்ளடக்கத்திற்கும் பொருளுக்கும் முக்கியத்துவம் வழங்கி கற்பிப்பதாலேயே எழுத்துக்களையே முழுமையாக கற்றிராத பிள்ளைகளுக்கு சொற்களை வாசிக்க வழங்கு இவ் அணுகுமுறையில் எதிர்பார்க்கப்படுகிறது. இது முழுமை மொழி அணுகு முறையில் காணப்படும் முக்கிய குறைபாடு இதுவெனலாம்.

'மாணவர்களுக்கு, எழுத்துக்களை படிமுறையாக வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் வழிப்படுத்துக. மற்றும் வரிவடித்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னர் ஆசிரியர் பின்வரும் படிமுறைகளில் வரிவடிவத்தை எழுதிக்காட்ட வேண்டும் என்பதனை நினைவில் கொள்ளுங்கள்' என்ற அறிவுறுத்தல் தவிர, எழுத்துக் கற்பிக்கும் படிமுறைகள் குறிப்பிடவில்லை. எனவே ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற வகையில் பாடத்திட்டமிடலைச் செய்து கற்பிக்கின்ற நிலைமையே நடைமுறையிலுள்ளது. இது ஒரு வெளிப்படையற்ற (Implicit) முறைமைப்படுத்தப்படாத முறையாகும்.

உயிர்க்குறிகள் கற்பித்தல் தொடர்பாக எதுவித அறிவித்தல்களையும் வழங்கவில்லை. எனவேதான் பிள்ளைகள் உயிர்க்குறிகளைக் கற்றுக்கொள்வதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். காரணம், தமிழ் மொழியில் உயிர்க்குறிகள் எழுத்திற்கு முன் (பெ, பை), பின் (பா), மேல் (பி, பீ), கீழ்(பு, பூ) மற்றும் முன்னும் பின்னும் (பொ, போ, பௌ) என ஐந்து நிலைகளில் அமைந்திருக்கிறது. மேல் வகுப்பு மாணவர்கள்கூட உயிர்க்குறிகள் அமைந்து வரும் எழுத்துக்களை வாசிக்கவும் எழுதவும் இடர்படுகின்றமையினை பாடசாலைகளில் காணலாம். இது ஆய்வுக்குரிய விடயமாகும்.

குழுச் செயற்பாடுகளின் மூலம் பிள்ளைகள் சகபாடிகளிடமிருந்து கற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றது. அதாவது 7வது செயற்பாட்டில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி மாணவர்களைக் குழுக்களாக்கி குறில் நெடில் எழுத்துக்களை வழங்கி, குறில் எழுத்துக்களுக்குப் பொருத்தமான நெடில் எழுத்துக்களை தெரிவுசெய்து வாசிக்க ஆசிரியரே வழிப்படுத்த வேண்டுமென கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. பிள்ளைகள் சுயமாக எழுத்துக்களைக் கற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்ப்பது முழுமை மொழியில் காணப்படும் இன்னொரு முக்கிய குறைபாடாகும்.

## முடிவு:

வாசிப்புக் கற்பித்தலுக்கு முழுமை மொழி அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட போதனை முறையைவிட வெளிப்படையான, முறைமைப்படுத்தப்பட்ட எழுத்தொலி கற்பித்தல் முறையே நல்ல விளைவுகளை ஏற்படுத்துகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது இவ் அணுகுமுறையினைப் பின்பற்றிக் கற்பிக்கப்பட்ட பிள்ளைகள் சிறப்பாக குறிவிலக்கல் செய்யும் ஆற்றலையும் வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன என ஐக்கிய அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ள National Reading Panel Report குறிப்பிட்டுள்ளது.

வாசிப்பு என்பது குறிப்பிட்ட வாசிப்புப் பகுதியினை புரிந்துக்கொள்ளும் ஒரு உயிர்ப்பான செயற்பாடாகும். ஆகவே வாசிப்புக் கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியர்கள் ஒரு அணுகுமுறையொன்றைத் தெரிவுசெய்ய வேண்டும். அதற்குப் பொருத்தமானது எழுத்தொலி அணுகுமுறையே என ஆய்வுகள் கூறுகின்றன. அதேநேரம் இவ் அணுகுமுறையினைப் பயன்படுத்தி நன்கு முறைமைப்படுத்தியும் வெளிப்படையாகவும் கற்பிக்கப்பட வேண்டுமெனவும் National Reading Panel Report கூறுகின்றன.

இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் வாசிப்புக் கற்பித்தலில் முழுமைமொழி அணுகுமுறையே பின்பற்றப்படுகிறது. தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் ஒவ்வொரு பெற்றோரும், வாசிப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும், கல்வித் துறைசார்ந்த ஏனையோரும் பிள்ளைகளின் வாசிப்புத்திறனை மிகவும் கூர்ந்து அவதானிக்க வேண்டியது கட்டாயமாகும். அதேநேரம் தேசிய ரீதியில் கலைத்திட்ட மறுசீரமைப்பொன்றும் இடம் பெற்று வருவதை அவதானிக்கின்றோம். எனவே தங்களுடைய பிள்ளைகளின் வாசிப்புத் திறனை மேம்படுத்த சரியான அணுமுறையொன்று பின்பற்றப்படுகிறதா என்பதை மிகவும் விழிப்புடன் அவதானித்து ஒரு சிறந்த முறைமை மாற்றத்திற்கு தங்களாலான பங்களிப்பை வழங்க முன் வருதல் வேண்டும்.



krishnakumar.n@thaiveedu.com

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



ART COURSES

BSID # 667561

| | |
|---|---|
| **Grade 10** | |
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAF3M |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCV4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

| | |
|---|---|
| **Grade 10** | |
| Tamil | LITBD1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Tamil | LITCU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Tamil | LITDU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

KINDERGARTEN TO GRADE 12
TUTORING & HOMEWORK HELP
Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

416.751.2011
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 288



# People don't plan to fail, but they do fail to plan

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

## நாளை நம் கையில்
## இன்றே செயற்படுங்கள்

- Super Visa Insurance
- Disability Income Insurance
- Critical illness Insurance
- Mortgage Insurance
- No medical exam Life Insurance
- Permanent Life Insurances
- Term Life Insurance
- Travel & Visitor Insurance
- RRSP Loan / Investment
- RESP



*As an Independent Insurance Broker,*
*I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** B.A.Sc.(Eng.), P.Eng.
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance 100% Refund

INDUSTRIAL ALLIANCE · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Canada Protection Plan · Foresters



HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell
Your Home
call me 24-7



Cell: 416 856 6900 **Kathir** Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

*With best compliments from*

## தோனம்ஸ் ஸ்ரூடியோஸ்
## GNANAMS STUDIOS

Since 1987

**Digital Prints from 16"x20" to 40"x60"**

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

**Bus: 416.750.8118**
www.gnanamsstudios.com



Digitally Redefined

2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 ( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)

## BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# சிறுவர் துஷ்பிரயோகத்தால் சிதைவடையும் எதிர்காலம்

- சி. நற்குணலிங்கம் -

சிறுவர் என்போர் பொதுவாக 18 வயதுக்கு உட்பட்டோர் என வரையறுக்கப்பட்டுள்ளது. உலக சனத்தொகையில் சிறுவர்கள் 180 கோடி. இலங்கையின் சனத்தொகையில் ¼ பகுதியினர் சிறுவர்கள். சிறுவர்களுக்கு பாதுகாப்பான, ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பது எல்லோரது கடமையாகும். சிறுவர் உலகம் சிறுவர் களுக்கே. இவர்கள் பெறுமதிமிக்க செல் வம். ஒவ்வொரு குழந்தையும் நல்ல நிலை யில் உலகிற்கு ஒப்படைக்கப்படுவது எல் லோரது பொறுப்பாகும். ஆனாலும் சிறுவர் கள் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படு கிறார்கள். சிறுவர் துஸ்பிரயோகம் என்பது, சிறுவர்களை அவர்களது இயல்புக்கும், தன்மைகளுக்கும் முரணான வகையில் தவறாகப் பயன்படுத்தப்படும் செயற்பாடா கும்.

சிறுவர் உரிமைகளுக்கும், சிறுவர் துஸ்பிர யோகத்துக்கும் தொடர்பு உள்ளது. சிறு வர் உரிமைகள் பலப்படுத்தப்படுமாயின் துஸ்பிரயோகம் குறைவடையும். உரிமை களை அனுபவிக்க வழிசெய்யாது, அவர் களது உரிமைகளை மதிக்காது புறந் தள்ளக் கூடாது. உரிமைகளை அறிந்து கொள்ள முதலில் வழி செய்ய வேண்டும். இவர்களது உரிமைகள் சரியாகப் பேணப் படாததால்தான் சட்டவிரோதமான துஸ்பிர யோக நடவடிக்கைகளில் ஏனையோர் ஈடு படத் தூண்டப்படுகிறார்கள்.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989-11-20இல் ஐ.நா. பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1990-09-20 இல் நடை முறைப்படுத்தப்பட்டது. இதில் இலங்கை தன்னை 1991-07-12இல் அங்கத்துவ நாடாக இணைத்துக் கொண்டது. சிறுவர் பற்றிய சமவாயத்தில் 40 உறுப்புரைகள் இவர்கள் பற்றியதாகும். பெற்றோரது பாதுகாப்பைப் பெற, பெற்றோரிடமிருந்து தம்மை தனி மைப்படுத்தாதிருக்க, கருத்தை வெளிப்ப டுத்த, சிந்திக்க, மனச்சாட்சிப்படி நடக்க, சமயம் ஒன்றைப் பின்பற்ற, போதிய கல்வி பெற, சுகாதார வசதிகள் பெற, ஓய்வெடுக்க, விளையாட, சித்திரவதை - குரூரமான தண்டனைகளிலிருந்து தவிர்த் துக்கொள்ள ஆகிய உரிமைகள் இவர் களுக்கானவையாகும். இவ் உரிமைகள் மீறப்படுவதுதான் துஸ்பிரயோகத்துக்கு வழி விடுகின்றது.

சிறுவர் துஸ்பிரயோகம் என்ற வார்த்தைக் குள் சிறுவர்களை கவனக்குறைவாக நடத் துதல், தேவையில்லாமல் கடிந்து கொள் ளல், சித்திரவதை, கொடூரமாக நடத்துதல், பாலியல் துஸ்பிரயோகம், தாக்குதல், அடித்தல், உரத்துக் கத்துதல், அவர்கள் சொல்வதை செவிமடுக்காமை, முறையற்ற உடற் தொடுகை, கல்விக்கு ஆதரவு வழங் காமை, ஆபாசப் படங்களைக் காட்டுதல், பாலியல் பேச்சுக்கள், பாலியல் புகைப் படம் - வீடியோக்களில் தோன்றச் செய்தல், பிச்சை எடுக்கப் பணித்தல், அடிமைக ளாக நடத்துதல், கடத்துதல், உணர்வுகளை மதிக்காமை, ஒளிவு மறைவின்றிப் பேசவி டாமை, விருப்பங்களை வெளிப்படுத்த தடுத்தல், சுயசிந்தித்தலுக்கு முட்டுக்கட்டை யாக இருத்தல், வார்த்தைத் துஸ்பிரயோ கம், தனிமைப்படுத்தல், அவமானப்படுத் தல், பயமுறுத்துதல், தண்டனையளித்தல், கண்டித்தல், உணவு, உடை, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம் என்பன மறுக்கப்படுதல் உள்ளடக்கப்பட்டுள்ளன,

தொடுவதுடனான, தொடுவதற்ற பாலியல் துஸ்பிரயோகங்களில் உற்றார், உறவினர் கள், அயலவர்கள், நன்றாகப் பழகுபவர் கள் ஈடுபடுகிறார்கள். ஆனால் எல்லோரை யும் குறிப்பட முடியாது. துர்க்குணம் உள் ளவர்கள் மட்டும் இவ் இழிசெயலில் ஈடு படுகிறார்கள். உடல், உள, பாலியல், உணர்ச்சி, புறக்கணிப்பு ரீதியிலான துஸ் பிரயோகத்தில் ஈடுபட்டு, மாறும் உலகில் வாழவேண்டிய திறனுடன்கூடிய அறிவு டைய சிறுவர்கள் மழுங்கடிக்கப்படுகிறார் கள், 'சமூகம் குற்றங்களை தயாரித்து வைக் கிறது குற்றவாளிகள் அவற்றை செய்து முடிக்கின்றனர்' என வின்சன்ற் சேர்ச்சில் கூறியதிலும் உண்மை இருக்கின்றது.

இலங்கையில், 2017இல் 10 வயதுக்கு உட் பட்டவர்களில் 15.9% சிறுவர்களும், 11 வயது முதல் 15 வயது வரையானவர்களில் 36.5% சிறுவர்களும், 16 வயதுக்கு மேற் பட்டவர்களில் 47.6% சிறுவர்களும் துஸ் பிரயோகத்தால் பாதிக்கப்பட்டனர். இணை யத்தளத்தைப் பயன்படுத்தும் சிறுவர்களில் 11 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட வர்களில் 53%, முகநூலைப் பயன்படுத்தி யவர்களுள் 61.7 வீதமானவர்கள் துஸ்பிர யோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். 2018ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் 532 சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர். சிறுவர் துஸ் பிரயோகம் தொடர்பாக 3,000 முறைப்பாடு கள் அதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்றன. இவர்களில் 2,413 சிறுவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானார்கள். இவர் களில் 555 பேர் பாலியல் துன்புறுத்தல்க ளுக்கும், 375 பேர் கடுமையான முறையில் பாலியல் வல்லுறவுக்கும், 311 பேர் கற்ப ழிப்புக்கும், 15 பேர் ஆபாச வெளியீடுக ளுக்கும், 125 பேர் கடத்தலுக்கும், 265 பேர் வேலைக்கும் பயன்படுத்தப்பட்டனர். 2019இல் களனிப் பிரதேசத்தில் இரண்டரை வயது சிறுமி மிருகத்தனமாக துஸ்பிரயோ கம் செய்யப்பட்டார். சிறுவர் துஸ்பிரயோ கத்தில் இரத்தினபுரி மாவட்டம் இரண்டாம் இடத்தில் உள்ளது. பொதுவாக 10 இலட் சம் சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். ஒரு இலட்சம் சிறுவர் தெரு வில் நிர்க்கதியாகியுள்ளனர். ஒவ்வொரு நாளும் 3 - 5 சிறுவர்கள் பாலியல் வன்பு ணர்வுக்கு உட்படுவதாக புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

2020 மாசி மாதம் ஒன்லையின் மூலம் இடம் பெறும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக 21 வயதான சந்தேக நபர் கணினித் துறை யில் பணியாற்றுபவர் என்றும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இணையத் தளம் மூலம் கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பிரபலமான பாடசாலைக ளிலுள்ள சிறுவர்களை ஏமாற்றி, அச்சுறுத்தி அவர்களின் நிர்வாணப் படங்கள், விடி யோக்களை உள்ளூர், வெளிநாட்டு ஆபாச இணையத்தளங்களுக்கு வழங்குவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தந் தையால் வன்புணர்வுக்கு உட்பட்டதாக 14 வயது சிறுமியின் தாயார் செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார். மாங்குளத்தைச் சேர்ந்த 17 வயதுப் பிள்ளை கர்ப்பமான நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். அவரது தந்தையே அதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைவாக 39 வயதான தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார் என பத்திரிகை வாயிலாக அறியப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து இலங்கை யில் 15 நாட்களில் 54 சிறுவர் துஸ்பிர யோக வழக்குகள் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 17 சிறுவர் துஸ்பிர யோக வழக்குகள் மட்டக்களப்பில் பதிவா கியுள்ளன. 2012 முதல் 2020 தொடக்கம் வரை 5,891 சிறுவர் துஸ்பிரயோக வழக்கு கள் பதிவாகியுள்ளன என 2020 பெப்பிர வரி மாதம் 09 ஆம் திகதிய பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது.

சிறுவர் துஸ்பிரயோகத்துக்கு பெற்றோரின் கவனயீனம், பெற்றோரின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, விவாகரத்து, பெற்றோர் போதைக்கு அடிமையாதல், செறிவாகக் கூடிவாழுதல், அன்பின்மை, அரவணைப் பின்மை, அக்கறையின்மை, சிறுவர் தொடர் பான விழிப்புணரவு இன்மை, பொருளா தாரப் பலவீனம், சிறுவர்களது அப்பாவித் தன்மை, நவீன பொழுதுபோக்குச் சாத னங்கள், அறியாமை, தனிமைப்படுத்தப் படல், பொறுப்பற்ற பெற்றார், வீட்டில் போதிய மேற்பார்வையின்மை, பிள்ளையின் மன இறுக்கம், உணர்ச்சி வசப்படல், உள ரீதியான தாக்கம், மகிழ்ச்சியற்ர மனநிலை, வெகுளித்தனம், எதற்கும் இசைந்துபோகும் தன்மை, அன்புக்காக ஏங்குதல், எதையும் விளையாட்டாக எடுக்கும் மனநிலை ஆகி யன காரணங்களாக அமைகின்றன.

சிறுவர் துஸ்பிரயோகத்தால் பல்வேறு பிரச் சினைகளை சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற னர். சிறுவர்கள் பாடசாலைகளில் அல்லது வீட்டில் சரீர தண்டனைக்கு உட்படுவதால் உலவியல் ரீதியாக பொய் சொல்லப் பழ கிவிடுவார்கள். வேதனை, அவமானம், பத களிப்பு, ஆத்திரம் போன்றவற்றால் பழி வாங்கும் எண்ணம் மனதில் ஏற்படும். இவர் கள் பிற்காலத்தில் வன்முறையாளர்களாக மாறுவார்கள். உளநெருக்கீட்டுக்கும் ஆளா வார்கள். சிறுபராயத்தின் எதிர்பார்ப்புக் களையும், மகிழ்ச்சியையும் சிதைக்கும். சமூகக் கட்டுமானம் சிதைவடையும். மன அழுத்தம் ஏற்படும். உடலியல் ரீதியாக உடல் நிறை குறைவடையும். தூக்கம் பாதிக்கப்படும். அடிக்கடி தலைவலி ஏற் படும். பதற்றம் ஏற்படும். உளவியல் ரீதி யாக பயந்த கனவுகள், வழமைக்கு மாறான கோபம், வன்முறை எண்ணம், வெட்கம், பயம், மனச்சோர்வு, சமூகத்திலிருந்து ஒதுக் குதல், முடிவெடுக்கும் திறன் குறைவடை யும். நடத்தை ரீதியாக பாடசாலை வகுப் பறையில் சக மாணவர்களுடன் ஆரோக் கியமான நட்புறவு கொள்ளமாட்டார்கள்.

இணக்கப்பாடற்ற நடத்தைக் கோலங்கள் ஏற்படும். சிறுவயதிலேயே புகைத்தல், மதுப் பழக்கத்துக்கு ஆளாவார்கள்.

சிறுவர்கள் பெற்றோரால் புறக்கணிக்கப்ப டுவதால் சிறுவர்களுக்கான உணவு, உடை, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு, மருத் துவம், கல்வி என்பன மறுக்கப்படும். இத னால் மனதால் பாதிக்கப்படும் உளத்தாக் கத்துக்கு உட்பட்டு, உளம் ஆரோக்கி யம் அற்றதாகவும், சமநிலையற்றதாகவும் காணப்படும். உளத்தாக்கம் உடையோர் தம்மை பறிகொடுத்தவர்போல் காணப்படு வர். தனிமையை விரும்புவர். தமது செயல் களில் ஒழுங்காக ஈடுபடமாட்டார்கள். குழப் பமான சிந்தனை, முரண்படல் ஆகிய தன் மைகள் காணப்படும். சிலருக்கு தற்கொலை மனப்பாங்கு, பாலியல் உறவில் வெறுப்பு போன்றனவும் எதிர்காலத்தில் அதிகரிக்க வும் வாய்ப்புண்டு.

சிறுவர் துஸ்பிரயோகம் நிறுத்தப்படவேண் டிய ஒன்றாகும். இதனை அரசுடன், பொது மக்களும், பெற்றோரும், பாடசாலையும் இணைந்தே ஒழிக்க முடியும். சிறுவர்களை முதன்மைப்படுத்தி ஒக்ரோபர் முதலாம் திகதி 'உலக சிறுவர் தினம்' ஐ.நா. சபை யால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் களை வேலைக்கு அமர்த்துதலை இல்லா தொழிக்க ஆனி 12 ஆம் திகதி 'சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான தினமாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 'சிறுவர் மற் றும் பெண்களுக்கான முறைப்பாடுகளை பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு' 36 பாதுகாப்புப் பிரிவுகள் அமைக்கப்பட் டுள்ளன. 'சிறுவர் வன்முறையை ஆராய்ந்து தீர்ப்புக்கூற' சிறப்பு நீதிமன்றங்கள் கொழும் பிலும் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப் பட்டுள்ளன. 1995ஆம் ஆண்டுக்குரிய இலங்கை சட்டக்கோவைத் திருத்தமானது 'சிறுவர்களை தண்டிப்பது தண்டனைக் குரிய குற்றம் எனக் கூறுகிறது'. சிறுவர் துஸ்பிரயோகம் குறித்து முறைப்பாடு செய்ய 'தேசிய பாதுகாப்பு அதிகார சபை' நிறு வப்பட்டுள்ளது. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக '1929 என்ற அவசர தொலை பேசி இலக்கம்' உருவாக்கப்பட்டுள்ளது. இதனைத் தடுக்க 'மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு' உள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இதன் முறைப் பாடுகளை ஏற்கவென 'சிறுவர் நன்னடத் தைப் பிரிவு' உள்ளன. இவை தவிர யுனி செப், யுனெஸ்கோ, சேவ்த சில்றன் அமைப் புக்கள் சிறுவர் நலனில் அக்கறை செலுத்தி வருகின்றன. இவைகளை ஊடறுத்து சிறுவர் துஸ்பிரயோகங்கள் நடந்தவண்ணம் இருப் பது கவலைக்குரிய விடயமாகும். ஒன்று பட்டால் உண்டு சிறுவர் துஸ்பிரயோக ஒழிப்பு

natkunalingam@thaiveedu.com






# வீட்டுக்கடன், வியாபாரக்கடன், தனிப்பட்டகடன்
# தேவைகளுக்கு என்னை முதலில் அழையுங்கள்
## வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்




**Mortgage for:**

- Self Employed
- New Immigrant
- Investment
- Transfer between family
- Bad Credit
- Second Mortgages

**Business Mortgage & Loan :**

**Personal Line of Credit & Loan**



* some conditions apply

KAPITAL CARE
MORTGAGE INC. Lic:-12623

**416.873.5780**

**கேதீஸ்**

**சிவசுப்பிரமணியம்**

*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

# பேசாப் பொருள்

## சுற்றும் உலகமும் சுற்றமும்:

உலகம் என்பது கிராமங்கள், நகரங்கள், தீவுகள், நாடுகள் கொண்ட கண்டங்கள் இணைந்ததே ஆகும். இவ்வாறு இணைந்த உலகத்தில் மக்கள் வெவ்வேறு அடையாளங்களுடன் வெவ்வேறு திசையில் வாழ்கின்றனர். ஆகவே, உலகம் என்பது ஒரு இனத்திற்கு, ஒரு மொழிக்கு, ஒரு மதத்திற்கு, ஒரு கொள்கைக்கு உரித்தானது என்று - ஆப்பிரிக்காவின் கறுப்பும், ஐரோப்பியரின் வெள்ளையும், சீனரின் மஞ்சளும், தமிழனின் நிறமும் அடங்கிய பல நிறங்களே உலகம் ஆகின்றன.

தனிமரம் தோப்பாகாது. தோப்பில் மாமரங்கள் மட்டும் இருந்தால் அது மாந்தோப்பாகும். அதனை மாந்தோட்டம் என்றும் அழைக்கலாம். தோட்டம் என்பது பல்வேறு மரங்களை உள்ளடக்கியது ஆகும். மல்லிகை மட்டும் இருக்கும் நிலத்தை நந்தவனம் என்றோ பூங்கா என்றோ அழைக்க முடியாது. மல்லிகைத் தோட்டம் என அழைக்கலாம். நந்தவனத்தில் பலநிறப் பூக்கள் சிரிக்கும். அது போன்று உலகத்தில் பல்வேறு வகையான மக்கள் வாழ்கிறார்கள். அவ்வாறு வாழ்கிற மக்கள் இருக்கின்ற உருண்டை வடிவமான இந்த பூமியைத்தான் உலகம் என அழைக்க முடியும். ஆனால், அறிவியல் பெருகியிருக்கிற இன்றைக்கு உலகம் என்றால் அது எமக்கு மட்டுமே சொந்தம் என்று சொல்கிற உணர்வைப் பார்க்க முடிகிறது. சிறிய தேசத்தை, சிறிய மக்கள் கூட்டத்தை மிரட்டிப் பார்க்கிற பெரிய குரல் உலகமே நாம் என ஓங்கி ஒலிக்கக் காணப்படுகிறது. பொருளாதாரம், ராணுவம் ஆகியவற்றால் பலம் பொருந்திய சில நாடுகள் நாங்களே உலகம் என்கின்றனர். மதவாதிகள் சிலரோ நாங்களே உலகம் என்கின்றனர். சுழலும் பூமியில் வாழும் மனிதர்கள் யாவரும் இணைந்தது என்ற கருத்து இன்று வலுவிழந்திருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? யாவற்றிலும் மேலிடும் சுயநலம் தான். இந்தச் சுயநலச் சிந்தனையால், மற்றவர்களும் மற்றத்திக்கிலே வாழ்கிறார்கள் என்பது மறந்தது போல் பலர் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தங்களுகுப் பயன்தரக் கூடியதை உலகமயமாக்க முனைகிறார்கள். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், இன்றைய உலகமயமாக்கலின் அடிப்படைத் தத்துவமே அதுதான்.

உலகமே ஒரே மொழி பேசி, ஒரே மதத்தில் நின்று, ஒரே வகை உணவை உண்டு, ஒரே வகைப் பண்பாட்டோடு ஒரே கொடியின் கீழ் சுழலும் பூமிப்பந்தில் குடிமக்கள் வாழ வேண்டும் என்பது வல்லாதிக்கச் சக்தியின் மேலாதிக்க எண்ணம். அந்த எண்ணத்திற்கு ஜனநாயகப் பூச்சு வேறு போடப்படுகிறது. இதனையே பல ஆண்டுகளுக்கு முன்னர் ஜெர்மனியின் சர்வாதிகாரி கிட்லர் வேறு விதமாய் முன்மொழிந்தான். அதனாலேயே அவன் அழிந்தான். ஆனால், அதனையே ஜனநாயக மொழியில் பரப்புரை செய்கின்றனர்.

இன்று...

உலகமே ஒரு கிராமம் (Global Village), உலகமயமாக்கல், உலக வர்த்தகம், உலகப் பண்பாடு, உலகமொழி, உலக ஜன நாயகம் என்ற பரப்புரைகளில் வெள்ளை ஆதிக்கச் சக்திகளின் நோக்கம் மறைந்திருக்கிறது, ஏழை நாடுகளை வாழ்விப்பதாகச் சொல்லி அந்நாடுகளில் இருக்கிற வாழ்க்கை முறைகளுக்குக் குழி தோண்டுகிற முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன. இன்றைக்கு ஒவ்வொருவர் வீட்டுக் குள்ளேயும் உலக மயமாக்கலின் மாயக் கரங்கள் ஏதோ ஒரு வழியில் நுழைந்திருக்கின்றன. அதன் வினோதங்களுக்கு அடிமையாகிவிடக்கூடாது. இன்றைக்குத் தொலைகாட்சிகளை நம்புகிறவர் நல்ல புத்தகங்களை நம்புவதில்லை. ஒவ்வொரு தொலைக்காட்சிக்குப் பின்னும் அரசியலும் கட்சியும் இருக்கின்றது. இன்று புத்தக வாசிப்பு என்பது கல்லூரியோடு முடிந்து போகிறது. அதன் பிறகு இளைய தலை முறையினர் புத்தகம் வாசிப்பதில்லை. தொலைக்காட்சிகளை பார்க்கத் தொடங்குகின்றனர். பார்ப்பதால் இல்லாமல் போகிறது. பார்ப்பதால் வாசிப்பதில் கிடைக்கிற பலன் கிட்டாது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது. ஆனால் 'தமிழ்', 'தமிழர்' என்ற வார்த்தைகளோ எக்குறளிலும் இல்லை. முதற்குறளிலேயே உலகத்தை முன்வைக்கிற குரலை வள்ளுவனிடம் பார்க்கிறோம். ஆனால் அந்த உலகத்தைத் தமிழ் உலகமாக அவன் முன்வைக்கவில்லை. மாறாக உலகில் வாழ்கிற மனித சமூகத்திற்கான மானுட நேயத்தை முன்வைத்தான். சங்க காலப் புலவர்களும் அவ்வாறே மனித சமுதாயம் நோக்கியே பாடினர். தமிழின் முதன் நூலான 'தொல்காப்பியம்' எனும் நூலில் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என எழுதப்பட்டுள்ளது. இவ்வாறான உயர்ந்தோர் தமிழர் என்று அர்த்தமன்று. மனிதர் என்பதே அர்த்தமாகும். இது சங்கத் தமிழரின் பரந்த அறிவிற்குச் சான்றாகும். கணியன் பூங்குன்றனார் என்ற புறநானூற்றுப் புலவன் சொன்ன 'யாதும் ஊர்' என்றதும், 'யாவரும் கேளிர்' என்றதும் அந்தப் பரந்த அறிவிற்கான சாட்சி வார்த்தைகளாகும். சங்ககாலத் தமிழரின் தொலை தூரப்பார்வை ஒரு வட்டத்துக்குள் அடங்கி கொட்டம் அடிப்பதன்று - மாறாக, உலகில் வாழ்கிற யாவரும் ஒன்றே என எண்ணி ஓங்கி ஒலிப்பதாகும்.

மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டியவன் எனச் சொன்னது திருக்குறள். மனிதன் உடலையும் உள்ளத்தையும் தாலாட்டிப் பாராட்டி வாழவேண்டியவன் என்றது திருமந்திரம். நல்லவர்களால் அன்பானவர்களால், இரக்கமானவர்களால் பணம் தருவதாகச் சொல்லியும் அநியாயத்துக்குத் துணை போக மறுப்பவர்களால், நல்லதை நினைப்பவர்களால் இந்த உலகம் இயங்குகிறது என்கிறது புறநானூறு. ஆகவே தான் சங்க இலக்கியத் தமிழர்கள் கண்டது தமிழர் உலகமன்று சொல்லமுடியும். அது மனிதர்கள் சார்ந்த உலகம். பொருள் இல்லாமயக்கத்தில், பொருள் இல்லாப் பண்பாட்டைத் திணிக்கிற சர்வதேச முயற்சியல்ல அது! மற்றவர்களின் தாய்மொழியை, அடையாளத்தை நசுக்கிற நோக்கமன்று. சுழலும் உலகப்பந்தில் வாழ்கிற மனிதர்களை ஆதரிக்கிற குரல். அதனை முதலில் தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தமிழரும் தாய்மொழியை படிக்கவேண்டும். திருவள்ளுவனை அறிவுத் தூதுவனாக நீ எண்ண வேண்டும். தாய் மொழி தமிழைக்கற்று வள்ளுவன் வழியின் நீ நின்றால் இந்த உலகமயமாக்கலைக் கண்டு பயப்பட வேண்டியதே இல்லை. எரிகிற தீயை அடக்க வல்லமை வேண்டும். தீயில் விளக்குத்தீ, அடுப்புத்தீ, யாகத்தீ என இருந்தாலும் அவை நமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பவையே. நமது பண்பாடும் அவ்வாறே. தாய்மொழி யும் பண்பாடும் உன் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் உலகமயமாக்கலின் மயக்கம் உன்னை எதுவும் செய்யாது. நூறு மொழி வாய்மொழியானாலும் உன் தாய்மொழி மட்டுமே உன் உயிரையும் உன் மரபணுவையும் சொல்லும் மொழியாகும். அதனைப் புரிந்து கொண்டால் உலகம் என்பது பல மொழியும் பல இனமும் பல பண்பாடும் கொண்ட பூமியென்பது தெரிந்துவிடும்.

## ஓடும் உலகோடு ஒட்டல்:

தன்னைத்தானே சுற்றி, சூரியனையும் சுற்றுகிற இந்தப் பூமியின் உருவத்தை மேல் நாட்டவர் 'தட்டை' வடிவம் என 1439ஆம் ஆண்டு வரை நம்பினார்கள். 1440ஆம் ஆண்டு போலந்து நாட்டு வானியல் அறிஞர் நிக்கலொஸ் கிரப்ஸ் (NIKOLAUS KREBS) என்பவர் உலகம் தட்டை அல்ல உருண்டையானது என்று முதன் முதலில் சொன்னார். ஆனால் அதனை மேல்நாட்டு மக்கள் நம்பவில்லை. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ என்ற வானியல் விஞ்ஞானி உலகம் உருண்டை என விளக்கி அதற்கான காரணங்களை அடுக்கினார். அதன் பிறகே மேல்நாட்டவர் உலகம் உருண்டை என நம்பினர். ஆனால் 2043(2012) ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தமிழ்க்குரல் 'உலகம் உருண்டை வடிவம் அது சுழலும்' எனப் பதிவு செய்திருக்கிறது. அந்தக் குரலுக்கு உரியவர் திருவள்ளுவர். அவர்

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை*

- குறள்: 1031

என்ற திருக்குறளில் அதனைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். உருண்டை வடிவமான பொருள்தானே சுழல முடியும்? இத்தகைய சுழலும் உலகமோ உழவுத் தொழிலால் தான் உய்ய முடியும் என்பது அந்தக்குறளின் கருத்தாகும். அதன் தொடர்ச்சியாக 10ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர்

*'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்*

## - மாத்தளை சோமு -

*அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி'*

என்ற பாடலில் பூமி உருண்டை வடிவம் (உண்டை என்றால் கோயிலில் சுவாமிக்கு வைக்கிற உண்டைக்கட்டி வடிவம்) எனத் தெளிவாகச் சொல்கிறார். இது மட்டுமன்று இந்தப் பூமியாகிய உலகம் நிலம், தீ, நீர், காற்று வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது என்ற விஞ்ஞானக் கருத்தை திருக்குறளுக்கு முன்பு எழுதப்பட்ட தொல் காப்பியம்...

*நிலம், நீர், தீ, வளி வீசும் போடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் ஆதலின்*

- தொல்: 635 பொருள்

என்ற பாடலில் சொல்கிறது. இதே கருத்தை சங்க இலக்கிய நூலான புறநானூறு

*'மண்திணிந்த நிலனும்*
*நிலன் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்'*

என்ற பாடலில் சொல்கிறது. இவையெல்லாம் இன்றைய விஞ்ஞானக் கருத்தோடு ஒட்டியவைதான். ஆனால் இவை எல்லாம் மேல்நாட்டினருக்கு எட்டியிருக்காது. ஏன், தமிழ் உலகத்திற்கே போய்ச் சேர்ந்திருக்காது. இதற்கான காரணம் என்ன? அறிவியல் என்றால் அது மேல்நாட்டினர் வடிவம் என்ற நம்பிக்கைதான். ஆனால் அது தவறானது.

அறிவியல், உலகில் எல்லா இனங்களுக்கும் உரித்தானது. காலத்திற்கு காலம் அறிவியல் பல்வேறு இனங்களினால் பல்வேறு நிலைகளில் அறிமுகம் செய்யப்பட்டது. பாலைவனத்தில் வாழ்ந்தவர்களுக்கும், பனிப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்களுக்கும் அறிவியல் உண்டு. தமிழர்களுக்கும் அறிவியல் உண்டு. ஆனால், அந்தத் தமிழர்களின் அறிவியல் விரிவுபடுத்தப்படவில்லை. தமிழர்கள் அறிவியலோடு வாழ்க்கையை நடத்தியவர்கள். ஆகவேதான், சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் இன்றைய விஞ்ஞானம் சொல்கிற கருத்துகளை அன்றே சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் அறிவியல் உலகத்தோடு ஒட்டியவையாகும். விற்பனைச் சதிருக்குள் விதியானவை அல்ல. மனித குல நன்மைக்காகப் பொழிந்தவை. அதனால் தமிழரின் சங்க இலக்கியங்கள் தமது மண்ணோடு எல்லையைக் குறுக்காமல் 'உலகம்' என்ற விரிவான பார்வைக்குள் ஆழமாய் அகலமாய்ச் சிந்தித்தன. இன்று கணினியும் கணினிக்குள்ள இணையமும் வந்தபிறகுதான் உலகம் வீட்டுக்குள் என்கிறார்கள். அது உண்மைதான். உலகம் வீட்டுக்குள் வந்ததில் மேலை நாட்டுச் சிந்தனை, பண்பாடு, உலகமயத்தின் மயக்கங்கள் போன்றவை தடையற்று இறக்கு மதியாய் வந்தன. மேலும் இவற்றில் மறை முகமாக வர்த்தகம் விரிந்து கிடக்கிறது.

***தொடர்தல் 40ம் பக்கம்***



# பேசாப் பொருள்...

**39ம் பக்கத் தொடர்ச்சி...**

இவற்றின் பின்னல்களில் சிக்கி சிதைவு-றாமல் நமது அடையாளத்தைக் காக்க, ஒரு யாகமே செய்ய வேண்டியது தமிழைச் சார்ந்தவர்களின் வாழ்வுக் கடமையாக இருக்கிறது.

பழந்தமிழர் எண்ணத்தில், மொழியில், காவி யங்களின் கருத்தில் உலகம் என்பது உறவுகளின் வீடாக, உற்றவர்களின் கூடா கத் தெளிவாகத் தெரிகிறது. திசை எட் டும் இருக்கின்ற யாதும் ஊர்களை நம் ஊராக பிரகடனப்படுத்தியவன் சங்கத்தமி ழன். இதில் ஆக்ரமிப்பு எண்ணம் இல்லை. ஆலிங்கனமே இருந்தது. அவன் உல கத்தை தன் வீடாக மனிதர்களின் வீடாக எண்ணினான். ஆகவே தான் சங்கத்தமி ழன் இலக்கியம் படைக்கிறபோது கூடு உலகம் என்ற சொல்லை முன்னிலைப் படுத்தி எழுதியிருக்கிறான். அவனுக்கு உலகக் கண்ணோட்டம் இருந்திருக்கிறது. அதனைத் தெளிவாக நிரூபிப்பது போன்று சங்ககாலப் புலவர்கள் தாங்கள் படைத்த இலக்கியங்களின் முதல் பாடலிலேயே முதல் சொல்லாக 'உலகம்' என்ற சொல்லை வைத்திருக்கிறார்கள். சில புல வர்கள் முதல்பாடலில் 'உலகம்' என்ற சொல் வருமாப்போல் பாடியிருக்கிறார்கள்.

- கம்பர் தனது ராமாயணத்தில் 'உலகம் யாவையும்' என்று முதல் பாடலில் முழங்குகிறார்.
- கபிலர் என்ற புலவர் அகவலை 'உல கத்தீரே, உலகத்தீரே' என்று தொடங்கு கிறார்.
- நக்கீரர் திருமுருகாற்றுப்படையை 'உல கம் உவப்ப' என உவந்தளிக்கிறார்.
- மணிமேகலையில் 'உலகம் திரியா' எனச் சீத்தலைச்சாத்தனார் பகிர்கின்றார்.
- சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் 'அங்கண் உலகளித்தலால்' எனச் சொல் கிறார்.
- மதுரைக் காஞ்சியில் வியன் ஞாலத்து (ஞாலம் - உலகம்) என்ற சொற்கள் வரு கின்றன.
- அகப்பொருளில் நாற்கவிராசநம்பி 'மலர் தலை உலகத்து' எனத் தொடங்குகி றார்.
- திருக்குறளில் முதல் குறளிலேயே 'உலகு' என்ற சொல் வருகிறது.

இந்தப் புலவர்கள் யாவரும் தங்களின் இலக்கியப் படைப்புகளில் முதல் பாடலி லேயே 'உலகம்' என்ற சொல்லைப் பொருத்தமாக பொருத்தியிருக்கிறார்கள்.

இவ்வாறு உலகத்தை முன்னிறுத்தியது உயர்வானப் பொதுமை நோக்கில் என்றால் அது மிகையானதில்லை.

உலகத்தை விடுத்து எந்த அறிவும் தனி யாக இருக்க முடியாது என்பது பழந் தமிழர் நம்பிக்கை. அறிவும் உலகமும் இணைந்தே இருக்க வேண்டும். உலகத் தோடு ஒட்டாத அறிவு ஊரிலும் ஒட்டாது. அறிவு உலகம் சார்ந்தது. அந்த அறிவு உலகத்தோடு ஒட்ட வேண்டும் என்று திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே...

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்*

- குறள்: 140

என்ற திருக்குறளில் சொல்லிவைத்துள்ளார். இன்னொரு குறளில் உலகத்தார் (850) என உலக மனிதர்களை அழைக்கிறார் அவர். தமிழில் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் 1330 திருக்குறளில் 40 இடங்களுக்கு மேல் 'உலகம்' என்ற வார்த்தையை முன் வைக்கிறார். ஆனால் அவற்றில் வர்த்தக தந்திரம் இல்லை. எவரையும், எந்த நாட்டையும் மேலாண்மை செய்யும் நோக்கமே அவருக்கு கிடை யாது. ஆனால், இன்றைக்கு முன்வைக் கப்படுகிற 'உலகமே ஒரு கிராமம்' (GLOBAL VILLAGE) என்பதன் பின்னே வல்லாதிக்கச் சக்திகளின் ரகசியங்கள் மறைந்து கிடக்கின்றன. இன்று உலகமய மாக்கலினால் எத்தனையோ மொழிகள் அழிந்து வருகின்றன. எத்தனையோ இனங் களின் பண்பாடு கரைந்து போகின்றது. இவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பவர் களுக்கு மட்டுமே சங்கத் தமிழரின் 'உலகம்' குறித்த சிந்தனை புரியும். நல்ல எண்ணங்களையும் மனிதாபிமானத்தையும் கலந்தே சங்கத் தமிழன் உலகம் பற்றிப் பேசுகிறான். அணுகுண்டுகளையும் பயங் கர ஆயுதங்களின் எண்ணிக்கைகளை உள் ளடக்கி அவன் 'உலகம்' பற்றிப் பேச வில்லை. அவன் வாழ்ந்தது தமிழகத்தில் கிராமமோ அல்லது நகரமோ என்றாலும் அவன் எண்ணங்களில் தாய்மொழி பண் பாடு சிதையாத உலகத்தோடு ஒட்டிய உலகப் பார்வை இருந்தது. அதனை நாம் புரிந்துகொள்வது நமது எதிர்காலத் திற்கு நல்லது.



somu@thaiveedu.com

'கற்க கணிதம் கசடற'

மாணவர்களின்
வீட்டுக்கு வருகைதந்து
தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

**CALCULUS, VECTORS, ADVANCED FUNCTION, TRIGONOMETRY Etc. Etc.**

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.

Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.

C: 416-819-7923

1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
*Certified Insolvency Counsellor*
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# அன்பின் அடையாளம் அன்னை தெரெசா

- எஸ். பத்மநாதன் -

மணிக்கூடு கட்டுகின்ற பௌதிகவியல் தத்துவமே நேரம் அல்லது காலம்தான். கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என வரையறுக்க முடியாத ஒரு சுழற்சி அதற்கு உண்டு. இக்காலத்திற்குள் தான் எத்தனையோ நிகழ்வுகள், மாற்றங்கள், பரிணாமங்கள் எல்லாம் வந்து சென்று விடுகின்றன. விநாடிகளில் தொடங்கிய நேரம் நிமிடங்கள், மணித்தியாலங்சகள், நாட்கள், கிழமைகள், மாதங்கள், வருடங்கள் என பல பிறவிகளை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானி ஜேன்சன் 'காலம் என்பது ஒரு மாயை' என்று கூறியுள்ளார். நேரம் அல்லது காலம் என்பதின் பெறுமதி மிகவும் அதிகமாகும். இந்த மாயைக்குள் வந்துபோன மனித பொக்கிஷங்கள் எவ்வளவோ உள. இவர்களுக்குள் மிகவும் உன்னதமான ஒரு புனித தேவதையே அன்னை தெரேசா. அவரை உலகம் தொடர்ந்தும் உன்னதமான நிலையில் வைத்துப்பார்க்கிறது. ஞான வாழ்வின் சுரங்கம் என்று கூறக்கூடிய அவர் உலகிற்கு கிடைத்த அருங்கொடை. காலம் அவரை படைத்தது என்பதனைவிட அவர் காலத்தை படைத்துள்ளார் என்றே கூற முடிகிறது.

உலகில் உள்ள நோயாளிகளையும் வறுமையில் வாடுபவர்களையும் தனது அன்புக் கரங்களால் அரவணைத்து 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற இரமலிங்க சுவாமிகளின் வாக்கியத்திற்கிணங்கி நின்று தனது தாய்ப்பாசத்தை வெளிப்படுத்தியவர் அன்னை தெரேசா. 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மாபெரும் மனிதாபிமானி என்று பல அறிஞர்களாலும் கருதப்பட்டவர். எல்லாவற்றிற்கும் 'நன்றி, நன்றி' என்ற அந்தச் சொல்லையே கூறிக்கொண்டிருப்பார். நன்றியின் வித்தான அன்னையின் முகத்தில் உள்ள வரிகள் அவ்வளவும் அவரது மனவலியின் சுவடுகள், உலகத் துயரத்தின் படிவுகள். விண்மீன்களைப்போல் மின்னித் தெறிக்கும் அவரது கண்ணில் பாசம் பொங்கி வழியும். சமாதனத்தைக் காட்டும் வெள்ளை நிற ஆடையை அணிந்துள்ள அவரது மனமும் வெள்ளையானது தான். நிறை வைப்பேசும் கொள்ளாத மனம் அவரிடம் இருந்தது. நாடெங்கிலும் நடந்து திரிந்து வெய்யில் சூட்டில் தவித்த கால்களும் அதனை தாங்கி கொள்ளும் பாத அணிகளுமே அவரிடம் இருந்தன. இவையே அவரின் சொத்துக்கள். சாவின் விளிம்பில் நின்றவர்களை உச்சிமோந்து அன்பால் அரவணைத்து நின்ற இவ் அன்னையைப் போல் இனிமேல் ஒருவர் பிறப்பெடுப்பது என்பது சந்தேகமே.

தெரெசா வடக்கு மகிடோனியாவில் உள்ள ஸ்கொப்ஜே (Skopje) என்ற இடத்தில் 1910 ஆகஸ்ட் 26ம் திகதி பிறந்தார். அவரது அப்போதைய இயற்பெயர் அக்னெஸ் கொஞ்சா பெரஜாகியூ (Agnes Gonxha Bojahiu). இவரது தந்தையின் பெயர் நிகோலே போஜாக்ஷியு (Nikollë Bojaxhiu). தாயாரின் பெயர் டிரானாபில் போஜாக்ஷியு (Dranafile Bojaxhiu). குடும்பத்தில் உள்ள மூன்று பிள்ளைகளில் இவரே இளையவர். இவரது 8வது வயதில் தகப்பனார் இறந்துவிட்டார்.

தெரெசா தனது ஆரம்பக் கல்வியை ஸ்கா பஜேயில் உள்ள கத்தோலிக்க கல்லூரியில் கற்றார். அவருக்கு 12 வயது நிறைந்திருந்த போதிலேயே ஏழைகளுக்கு உதவும் மனம் பெற்றிருந்தார். அறப்பணி செய்வதிலேயே தனது முழுநேரத்தையும் செலவு செய்தார். 8வது வயதில் வீட்டை விட்டு வெளியேறி லொரேட்டா சகோதரிகளின் சாலையில் மறைப்பணியாளராக தன்னைச் சேர்த்துக் கொண்டார். அதன் பின்பு தாயையும் சகோதரியையும் மீண்டும் அவரைப் பார்க்கவில்லை என்று அறியமுடிகின்றது.

ஆங்கில மொழியின் முக்கியத்துவம் காரணமாக அயர்லாந்தில் உள்ள ரத்பான் காமில் உள்ள லொரொட்டடா கன்னியர் மடத்திற்கு சென்றார். 1929ம் ஆண்டில் கன்னியாஸ்திரியாக தனது முதல் துறவற புகு நிலையினருக்கான சங்கற்பம் பெற்று அவரது பெயரை சகோதரி மேரி தெரசா என்று மாற்றினார். அவர் நிகழ்த்திய உறுதி மொழியில் பிரான்சில் பிசியே நகரின் மிஷனரிகளின் புரவலர் துறவியான லிசியுக்ஸின் செயிண்ட் தெரசா என்பதால் அவருக்கு பிடித்த துறவி தெரசா என்ற பெயரைத்தேர்ந்தெடுத்தார். அந்த பெயரை தனக்கும் சூட்டி கொண்டார், 1931 மே மாதம் 24ம் திகதி இது நடைபெற்றது. கல்வி கற்பிப்பதில் அவர் நாட்டங் கொண்டாலும் கல்கத்தா நகரில் உள்ள வறுமைநிலை அவரை கதிகலங்க செய்தது. 1943ல் பஞ்சம் ஏற்பட்டது. 1946ல் இந்து முஸ்லிம் வன்முறை ஏற்பட்டது.

நீலக்கரையிட்ட வெள்ளைநிற ஆடை அணிந்தவராய், 1948 முதல் ஏழைகளுக்



கான சேவையையும் ஆரம்பித்தார். 1950 ஒக்ரோபர் 7ல் பிறர் அன்பின் பணியாளர் சபையை (The Mission of Charity) ஆரம்பிக்க கத்தோலிக்க சபை அனுமதி வழங்கியது. இதனால் அவரது குறிக்கோள்களை நிறைவேற்ற முயன்றார். உணவு அற்றவர்கள், உடையற்றவர்கள், வீடற்றவர்கள், முடமானவர்கள், பார்வை இழந்தவர்கள், தொழுநோயாளிகள் என அனைவரையும் அரவணைத்துக் கொண்டார். கல்கத்தாவில் 13 உறுப்பினர்களுடன் இச் சபை ஆரம்பமாயிற்று. படிப்படியாக ஆதரவற்றோர் இல்லங்கள், எயிட்ஸ் நல்வாழ்வு மையங்கள் என்பவற்றையும் இணைத்துக் கொண்டார். படிப்படியாக தொற்றுநோய், பஞ்சம் என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் இணைத்துக் கொண்டார். மனிதகுலத்தின் சகலவிதமான குறைபாடுகளுக்கும் தீர்வு காண்பதே அவரது நோக்கமாக இருந்துள்ளது.

1952ல் கல்கத்தா நகரில் ஒதுக்கப்பட்ட இடத்தில் இறப்பின் வாயிலில் இருப்போருக்கான இல்லத்தை நிறுவினார். இதனால் தொழு நோயாளிகளையும் அவரால் கவனிக்க முடிந்தது. காணாமல் போன குழந்தைகளையும் பராமரிக்க முயன்று தனி இல்லம் அமைத்தார். 1955ல் நிர்மலா சிசு பவன் இதனால் ஏற்பட்டது. 1960ல் இந்தியா முழுவதும் நல்வாழ்வு மையங்கள் நிறுவப்பட்டன. 1968ல் இத்தாலி, தன்னனியா, ஆஸ்திரியா நாடுகளிலும் இம்மையங்கள் உருவாகின. படிப்படியாக விரிவடைந்து 1970களில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் எண்ணற்ற இல்லங்கள் உருவாகின. இவை எல்லாம் கருணை இல்லங்களாகவே ஆரம்பிக்கப்பட்டன.

1963 முதல் பிறர் அன்பின் பணியாளர் சபை சகோதரர்கள் என்ற அமைப்பு ஆண்களுக்காக உருவாக்கப்பட்டது. கத்தோலிக்க மதத்தினர் மட்டுமின்றி அல்லாத வர்களும் இதில் இணைய வழி செய்யப்பட்டது. 1984ல் தந்தை ஜோசேப் லாஸ் பேகருடன் சேர்ந்து பிறர் அன்பின் பணியாளர் குழுக்கள் துறவற சபையையும் நிறுவினார். 2007ல் 450 அருட் சகோதரர்களைக்கொண்ட சபையானது. 120 நாடுகளில் 600 சேவை மையங்கள் கொண்டதாக மாறியது. அந்த சந்தர்ப்பத்தில் 5,000 அருட் சகோதரிகள் சேவையில் ஈடுபட்டு வந்தனர்.

தொழுநோய்(Leprosy) மிகவும் கவனத்திற்கு உட்பட்டமையால் இதற்குரிய நலவாழ்வு அமைப்பு இவரால் உருவானதாகும். பிறர் அன்பின் பணியாளர் சபை கல்கத்தா முழுவதும் மேலும் பல தொழுநோய் மையங்களை நிறுவியது. அதன் மூலம் மருந்து பொருட்களும் உணவு பொருட்களும் வழங்கப்பெற்றன. இந்தியாவுக்கு வெளியே இவரது அமைப்பு 1995ல் வெனிசுலாவில் அமையபெற்றது குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

படிப்படியாக செஞ்சிலுவை சங்கத்தினூடாகவும் தனது சேவையை விஸ்தரித்தார். மருத்துவமனைகளில் சிக்கிய போர்க்கால குழந்தைகளை மீட்டெடுத்தார். இந்த வேளையில் கருக்கலைப்பு, விவாகரத்து என்பவற்றினையும் எதிர்த்து பிரசாரம் செய்தார். இவர் செய்த பிரசாரங்களால் இவருக்கு எதிராகவும் பல விமர்சனங்கள் எழுந்தன. எனினும் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. எல்லாவற்றையும் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார். இந்த வேளையில் எதியோப்பியாவில் பசியல் வாடியவர்களையும், சேர்னோவிலின் அனுசக்தியால் பாதிக்கப்பட்டவர்களையும் ஆர்மீனியாவில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதில் ஊழியம் செய்தார். இதன் தொடர்ச்சியாக அப்பேனியாவில் பிறர் அன்பின் பணியாளர் சபையையும் நிறுவியதுடன் நியூயோட்கிலும் சபையை நிறுவினார்.

இவ்வளவு மகத்தான உலக சேவைகளை செய்த அன்னை தெரெசா 1983ல் திருத்தந்தை இரண்டாம் அருளப்பரை ரோமில் சந்தித்தவேளை மாரடைப்பு ஏற்பட்டது. 1989லும் இரண்டாவது தடவையாக அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டமையால் செயற்கை இதயமுடுக்கி (pacemaker) பொருத்திக் கொண்டார்.

1996ல் தெரெசா கீழேவிழுந்தமையால் அவரது கால் எலும்பு முறிவடைந்தது. ஆகஸ்ட் மாதம் மலேரியா பாதிப்பு ஏற்பட்டதுடன் இதயகீழறையில் கோளாறு ஏற்பட்டு அறுவைச்சிகிச்சையும் செய்யப்பட்டது. கலிபோர்னியாவில் இதற்காக சிகிச்சை பெற்றார். 1997 மார்ச் 13ல் அன்பின் பணியாளர் சபையிலிருந்து விலகினார். 1997 செப்டெம்பர் 5ம் திகதி மரணத்தை தழுவிக்கொண்டார்.

இவர் இறக்கும்போது 123 நாடுகளில் 610 சேவை மையங்கள் இருந்தன. 4000க்கும் மேற்பட்ட அருள் சகோதரிகள் பணியில் இருந்தனர். 300 உறுப்பினர் கொண்ட அருட்சகோதர அமைப்பு இருந்துள்ளது. 10,000க்கு மேற்பட்ட சேவை நிலையங்கள் இருந்துள்ளார் இதில் HIV/AIDS, தொழுநோய், காசநோய் என்பனவற்றாலும் குழந்தைகளுக்கான மையங்களும் அநாதை இல்லங்களும் இருந்தன. அன்பின் நங்கையாகவும் ஞானவாழ்வின் சுரங்கமாகவும் திகழ்ந்த அன்னை தெரெசாவுக்கு காலம் காலமாக எத்தனையோ விருதுகளும் பட்டங்களும் கிடைத்தன. அவற்றில் முக்கியமான சிலவற்றை குறிப்பிட முடியும்.

- பத்மஸ்ரீ விருது (1962) இந்திய அரசு.
- Ramon Magsasay award - 1962 பிலிப்பைன்ஸ்
- கெனடி விருது - 1971 அமெரிக்கா
- சமாதான விருது - 1972 Pope John XXIII
- நேரு விருது - 1972 இந்திய அரசு
- Templeton Award - 1973 பிரித்தானியா
- Albent Schweitzer International Prise - 1975 அமெரிக்கா
- Balzan Prize for Humanity - 1979 சுவிஸ்
- Patronal Medal - 1979
- பாரதரத்னா - 1980 இந்திய அரசு.
- Order T Merit - 1982 அவுஸ்திரேலியா
- கௌரவ டாக்டர் பட்டம் - 1982 பெல்ஜியம் பல்கலைக்கழகம்
- Presidential Medal of Freedom - 1985 அமெரிக்கா
- Golden Honour of the Nation - 1994 இந்தியா அரசு
- அல்பேனியாவின் தங்க விருது - 1994 அல்பேனியா
- அமெரிக்காவின் கௌரவ பிரசை - 1996 அமெரிக்க
- Grand urde of Queen Jelena - 1997 குளேசியா

அன்னை தெரெசா செய்த சாதனைகள் அளப்பரியன. தனது வாழ்நாள் முழுவதனையும் வறியவர்களுக்காக அர்ப்பணித்தும் சர்வதேச ரீதியில் அன்பின் பணியாளர் சபைகளை நிறுவியும் இறப்பவர்களுக்காக காலிகாட் (Kalighat) மன்ற இடத்தில் மனைகள் அமைத்தும் வீடற்ற பிள்ளைகளுக்காக நிர்மலா சிசு பவனை நிறுவியும், யுத்ததில் பாதிப்புற்றவர்களை காப்பாற்றியும் தொழு நோயாளிக்கு சாந்தி நிலையம் நிறுவியும் அதியுயர்ந்த மானிட பணி புரிந்துள்ளார். 20ம் நூற்றாண்டின் வியப்பூட்டிய ஒரு அன்னையாக பல தடவை தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரின் பெயரால் பல திரைப்படங்களும் நூல்களும் வெளிவந்தன. 'Mother Teresa: with name of God's Poor' என்பது சிறந்த படமாகும். 'Somethings Beautiful for God' என்பது ஆவண படமாகும். இவரின் பெயரால் பாடசாலைகள், சமூக நிலையங்கள் பல எழுந்தன.

அன்னையின் அமுத மொழிகளில் சில:

- 'அமைதி புன்னகையுடன் ஆரம்பமாகிறது'. (Peace Begins with smile),
- 'அமைதியைக் கொண்டுவர எங்களுக்கு துப்பாக்கிகள் மற்றும் குண்டுகள் தேவையில்லை, எங்களுக்கு அன்பும் இரக்கமும் தேவை'. (We don't need guns and Bombs to brig peace, We need love and compassion),
- 'நேற்று போய்விட்டது, நாளை இன்னும் வரவில்லை இன்றுமட்டுமே உள்ளது நாம் ஆரம்பிப்போம்'. (Yesterday is gone, tomorrow has not to yet come, we have only today let its begin),
- 'மக்களை தீர்மானிக்க ஆரம்பித்தால் அவர்களை நேசிக்க நேரம் வராது'. (If you judge people, You have no time to love them),
- எமக்கு 'தலைவர்கள் தேவையில்லை நாங்களே சேவை செய்யலாம்'. (Don't want for leaders don't alone person to person)

என்பன அவற்றில் சிலவாகும்.

*pathmanathan.s@thaiveedu.com*



# நினைவகலாத வண்ணக்கலவை ஆசை இராசையா

- திருச்செல்வம் -

எங்களது மாணவப் பருவம் மிகச் சுவையான அனுப வங்களைக் கொண்டது. 1965ம் ஆண்டளவில் நானும் ஆசை இராசையா வும் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தோம். இயற்கைக் காட்சிகளை ரசிப்பதில் அதிக பிரியமுள் ளவர்கள் நாங்கள். மாலை வேளையில் வல்லைவெளி, கடற்கரை, பூங்கா, வயல் வெளிகள் என்று அலைந்து திரிந்து இயற் கையை ரசிப்போம்.

எனக்கு இயற்கைக்காட்சிகளை படம் எடுக் கும் ஆசையிருந்ததினால் சூரியன் உத யமாகும் முன்பு - அதிகாலை 5 மணிக்கே சென்று சூரியன் உதயமாகும் காட்சியை படம் எடுப்போம். மீனவர்கள் சென்மின் கூட்டுடன் கண்டிகட்டி மீன் பிடிக்கும் காட்சிகளைப் படமாக்குவோம். அதே நேரம் அக்காட்சிகளை இராசையா ஓவி யமாக வரைவார். வல்லைவெளியிலுள்ள பனை, தாழங்கூடல்களைக்கூட ஓவியமாக வரைவார். அதிகமான ஓவியங்களுக்கு மாதிரி (model) ஆக என்னை வைத்தும் வரைந்துள்ளார்.

கூச்ச சுபாவம், நல்ல குணம், களங்கமற்ற மனம் கொண்டவர் ஆசை இராசையா.

கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் பயிற்சி பெற்றுத் திறமை சித்தி பெற்றார். எனக்கும் அங்கு படிப்பதற்கு அனுமதி (admission) எடுத்துத் தந்தார். ஆனால், எனது வசதியின்மை காரணங்களினால் என்னால் அப்படிப்பைத் தொடர முடிய வில்லை.


ஆசை இராசையா ஓவியங்கள் வரைந்து கொழும்பில் ஓவியக் கண்காட்சிக் கூடத் தில் காட்சிக்கு வைப்பார். அதிகமான ஓவியங்களை சுற்றுலாவில் வரும் வெளி நாட்டவர் வாங்குவார்கள். அதில், எனது மனதில் இன்றும் நிலைத்திருக்கும் ஓவி யம் ஒன்று உள்ளது. பல வர்ண 'சோக்'கை துகள்களாக்கி, அவற்றின் கலவையை கொண்டு, சிறிய பேனாக்கத்தியினால் - எமது பார்வைக்கு கிறுக்கி வரைந்தது போல் இருந்தது, அது. மான் நீர் ஓடையில் தண்ணீர் குடிப்பதை மிக அற்புதமாக வரைந்திருந்தார். அந்நாட்களில் பத்தாயி ரம் ரூபாவிற்குக் அந்த ஓவியம் விற்பனை யானது. இவ் ஓவியத்தை வாங்கிய கொழும்பு யானைமார்க் சோடாக் கம்பனி யினர் தங்களது மாதக் கலண்டரில் பிர-சுரித்தார்கள்.

நுண்கலைக் கல்லூரியில் சித்தி பெற்ற ஆசை இராசையா வேலணை மாகாவித் தியாலத்தில் ஓவிய ஆசிரியராக பணியைத் தொடங்கினார். அந்நாட்களில், வேலணை மகா வித்தியாலத்தில் நடக்கும் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச் சிகளுக்கு என்னையும் அழைத்து செல் வார். தென்னை ஓலையில் நிறங்களை மாற்றி மாற்றி முகப்பு அலங்காரம் செய் வோம். சிங்களப் பாணியில் வரவேற்புச் சிற்பம் வைத்து தென்னை ஓலையினால் அலங்காரம் செய்வோம்.

வேலணை மகா வித்தியால கல்லூரிச் சின்னம் (logo) வடிவமைத்துக் கொடுத்த திலும் ஆசை இராசையாவின் பங்கு கணிசமாக இருந்தது.

பின்பு, பலாலி ஆசிரியர் கலாசாலையில் படிக்கும்போது விழாக்கள், விளையாட்டுப் போட்டிகளுக்கு புதிய புதிய பாணியில் அலங்காரம் செய்வோம். அப்போதைய அதிபரின் உருவத்தை எண்ணெய் வர்ணக் கலவையில் ஓவியம் தீட்டி அவருக்கு அன்பளிப்பு செய்தார்.

ஆசை இராசையா தனது சித்திரக் கண் காட்சி, புகைப்படக் கண்காட்சிகளை அச்சு





வேலி சென் திரேசா பாடசாலை, சுண் டுக்குளி மகளிர் கல்லூரிகளில் நடத்தி னார்.
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றபின் இவருக்கு 1975ல் கொழும்பு நோயல் கல்லூரியில் ஒவிய ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

நோயல் கல்லூரியில் பணிபுரியும் போது, அப்போது மந்திரியாக இருந்த குமார சூரியரின் மகன் வகுப்பில் குழப்படி செய்ததைத் தண்டிக்க நேர்ந்தது. சக ஆசிரியர்கள் 'மந்திரியின் மகனை அடித்து விட்டாய், என்ன விபரீதம் நடக்கப் போகி றதோ' என்று பயமுறுத்தி விட்டார்கள். அடுத்த நாள் குமாரசூரியர் தனது வீட் டிற்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். மிகவும் இக்கட்டான நிலையில் தன் உற வினர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு அவ ரின் வீட்டுக்குச் சென்றிருந்தார் ஆசை இராசையா. குமாரசூரியரோ, அவரது மகளுக்கும் மகனுக்கும் விடுமுறை நாட் களில் பிரத்தியேக வகுப்புகள் எடுக்கும் படி கேட்டார். அப்போதுதான் இராசை யாவின் மனம் ஆறியது. இராசையாவின் திருமணத்திற்கு மந்திரி குமாரசூரியர் வந்து வாழ்த்தினார்.

இலங்கை அரசின் முத்திரைப் பணியகத் தில் முத்திரைகளை வடிவமைக்கும் ஓவியர் கள் குழுவில் ஆசை இராசையா அவர் களும் இணைந்திருந்தார் என்பது பெரு மைக்குரிய விடயமாகும். சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம், சிறிமாவோ முதலான பல ஆளுமைகளின் முத்திரைகள் வடிவமைத்தார். முதல் முத் திரைக்கு சேர். பொன் ராமநாதனால் கட் டப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி, இராம நாதன் மகளிர் பாடசாலை, கொழும்பு சிவன் கோவில் ஆகியவற்றைப் பின்ன ணியாக வரைந்து வடிவமைத்தார்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்துடன் ஊர் வந்து சேர்ந்து விட்டார். இச்சம்பவத்தால் மிகவும் மனமுடைந்ததால் பின்பு நோயல் கல்லூரியில் இருந்து அழைப்பு வந்தபோ தும் வேலையே வேண்டாம் என்று ஊரு டன் இருந்துவிட்டார்.

சில காலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் சித்திரமும் வடிவமைப்பும் என்ற துறையில் வருகைதரு விரிவுரையாளரா கப் பணிபுரிந்தார்.

வேலையின்றி வீட்டில் இருக்கும்போது ஓவியங்களை வரைந்து சிரித்திரன் ஆசி ரியர் சுந்தரைக் கொண்டு ஓவியங்களின் தன்மைக்கேற்ற பெயர்களைச் சூட்டி சித் திரக் கண்காட்சிக்கு வைப்பார்.

இவர் ஓவியர் மட்டுமல்ல சிறிந்த புகைப் படக்கலைஞராக, சித்திரத்தேர் வடிமைப் பாளராக, கவிஞராக, அட்டைப்பட வடிவ மைப்பாளராக என்று பன்முகம் கொண்ட கலைஞர் அவர். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு அட்டை ஓவியங்களும் வரைந்துள்ளார்.

தனக்குத் தேவையான ஆடைகளை தானே வடிவமைத்து, தைத்து அணிவார். நான் சிங்கப்பூருக்கு வேலையாகச் செல்லும் போது 2 சோடி நீளக் காற்சட்டைகளை அவரே தைத்துத் தந்தார்.

அச்சுவேலி முருகன் ஆலயத் சித்திரத் தேர் வடிவத்தை வில்லுப்பாட்டு கலாவி-னோதன் சின்னமணியின் மைத்துனருடன் சேர்ந்து உருவாக்கினார். அதன் யாழிக்கு பச்சை வர்ணத்தில் நிறந்தீட்டி புதுமை செய்தார்.

தேர் வெள்ளோட்டத்தின் போது பலாலி ஆசிரியர் கல்லூரி - நாட்டிய ஆசிரியர் வீரமணி ஐயர், விழா மேடையில் இராசை யாவின் கையை குலுக்கி இது 'உலக்கை அல்ல கலைக்கை' என்று வாழ்த்தினார்.

உறவினர் ஒருவரின் தகப்பனின் கல்வெட் டிற்கு வாழ்க்கை வரலாற்றை கவிதை யாக எழுதி கலாவினோதன் சின்னமணி யின் குரலில் ஒலிப்பதிவு செய்து ஆவ ணப்படமாக்கி அந்நாட்களில் ஒளிபரப்புச் செய்தார்.
அச்சுவேலி அந்தோனியார் கோவில் பீடம் செய்வதற்குரிய வரைபடத்தை வரைந்து கொடுத்தார். மில்க்வைற் சோப் ஸ்தாபக அதிபர் பனை நடும் இயக்கத்துக்கு விளம்பரத்திற்கு பாவிப்பதற்காக பனங் கூடல் சித்திரம் ஒன்றை வரைந்து கொடுத் தார்.

சித்திரக்கலையை விளக்கும் புத்தகம் ஒன்றை அதிக நாட்களாக முயற்சி செய்து உருவாக்கிச் சென்ற வருடம் வெளியிட் டிருந்தார். அதில் அவரது படைப்புக்கள் பலவும் சேர்த்திருந்தார். தான் கற்றவை மற்றவர்களுக்கும் பயன்பெற வேண்டும் என்ற கனவை நனவாக்கி 'விம்பம்' என் னும் இச்சித்திரநூலை வெளியிட்டிருந்தார். அவரது கலை வாழ்க்கைக்கு அந்தப் புத்தகமும் சான்று.

ஓவியக் கண்காட்சிக்கூடம் ஒன்று யாழ்ப் பாணத்தில் நிறுவவேண்டும் என்பதே அவ ரது ஆசை. தனது வீட்டை உடைத்து புதியவீட்டின் மேல்மாடியில் கண்காட்சிக் கூடம் கட்டுவதற்கான திட்டத்தை வரைந்து, கட்டி முடிப்பதற்குள் காலன் அழைத்து விட்டான்.

*thiruchelvam@thaiveedu.com*



# Commercial Mortgages
# Business Loans
# Business Line of Credit

*for*

Buying new business

Improve your business

Operating capital

Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623



**Rambo Tharmalingam**
Mortgage Agent Licence # M08008479
**647-290-3416**

**Kethes Sivasubramaniyam**
Licence # M08006105 Mortgage Agent
**416-873-5780**

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

# தொல்காப்பியக் கடல் வித்துவசிரோமணி சி. கணேசையர்

- வே. விவேகானந்தன் -

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல், இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை வாழ்ந்தவர், தமிழ் மூதறிஞர் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள்.


இவர், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்தாபகர், பரம்பரை வழிவந்த சின்னையா ஐயர், வருத்தலைவிளானைச் சேர்ந்த பொன்னம்மை இணையருக்கு மகனாக, 1878ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை, அவரது பெரிய தந்தையார், கதிர்காம ஐயாரால் நடத்தப்பட்டு வந்த சைவத் தமிழ் பாடசாலையில் கற்றார். அப்பாட சாலையில் இலக்கணம், இலக்கியம், சரித்திரம், சமயம், கணிதம் ஆகிய பாடங்களில் முதன்மை பெற்றார். பெரிய தந்தையரிடம் தனிப்பட்ட முறையிலும் கல்விகற்று, தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தெளிவு பெற்றார். பின்னர் வண்ணார்பண்ணையில் வசித்து வந்த, ந.ச பொன்னம்பலபிள்ளையிடமும் அவருக்குப்பின், சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களுடன் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றார். இணுவில் நடேசையரிடம் சைவ சித்தாந்தத்தைத் தெளிவுறக் கற்றார். அத்துடன் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றக் கூடிய, ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.

கணேசையர், வண்ணார்பண்ணை வேலுப் பிள்ளை வித்தியாசாலையில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். பின்னர் அங்குள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், வயாவிளான், கீரிமலை, தையிட்டி, நயினாதீவு ஆகிய இடங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்க நிறுவனர் சதாசிவ ஐயரால் நிறுவப்பட்ட, சுன்னாகம் பராசீன பாடசாலையின் தலைமை ஆசிரியராக 1921ம் ஆண்டு முதல் 1932ம் ஆண்டு வரை பணியாற்றினர். இப்பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர், தனது மனைவியாரின் பிறந்தகமான வருத்தலைவிளானில், தமிழ்க் குடில் அமைத்து தனிப்பட்ட முறையிலான கற்பித்தலில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலிருந்தும் தமிழ் ஆசிரியர்களும் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளுக்குத் தயார் செய்பவர்களும் வந்து, இவரிடம் பாடம் கேட்டனர்.

கணேசையர் அவர்கள் சிறந்த ஆசிரியர் மட்டுமின்றி, உரையாசிரியர், இலக்கணப் பேரறிஞர், இலங்கை இலக்கிய வரலாற்று ஆசிரியர், மரபுவழிப் போதனாசிரியர், சோதிட அறிஞர், சமூகப் பணியாளர், கவிஞர் என்று பன்முக ஆளுமை கொண்டவர்.

கணேசையர், பாரம்பரிய மரபுவழி உரையாசிரியராகவும் இருபதாம் நூற்றாண்டுக்குரிய இலகுவான உரைநடையினைக் கையாண்ட உரையாசிரியராகவும் புகழ் பெற்றவர். 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழிவந்த உரையாசிரியர்களுள் ஒருவராவர். அவரது திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தும் உரை நூல்களாக 'இரகுவம்ச உரை', 'மகாபாரதம்', 'சூது போர்ச்சருக்க உரை', 'ஒருதுறைக் கோவை உரை', 'அகநாநூறு - முதல் நூறு செய்யுள்களுக்கான உரை' என்பன விளங்குகின்றன. இவற்றுள் அக நாநூறு முதல் நூறு செய்யுள்களும் உரையுடன் ஈழகேசரிப் பத்திரிகையில் 1956, 1957ம் ஆண்டுகளில் வெளிவந்தன. அக்காலத்தில் ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடத்தும் பண்டிதர் பரீட்சைக்கு அகநானூறு பாடநூலாக இருந்தது. எனவே, பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் கணேசையர் அதனைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

ஈழகேசரிப் பத்திரிகை ஆசிரியர் நா.பொன்னையா அவர்கள், கணேசையரின் எழுத்து முயற்சிகளை 'கணேசையர் பதிப்பு' என்ற தலைப்பில் மகிழ்ச்சியுடன் ஈழகேசரியில் பிரசுரித்து வந்தார். கணேசையர் வசன நடையில் எழுதிய நூல்களான 'குமாரசாமிப் புலவர் சரிதம்' 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்', 'குசேலர் சரிதம்' ஆகிய நூல்களுள், குசேலர் சரிதத்தை 1931ம் ஆண்டிலும், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதத்தை 1939ம் ஆண்டிலும் பதிப்பித்து வெளியிட்டார்.



ஈழத்து இலக்கண மரபுத் துறையில், கணேசையரின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவரது தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகளே, முன்னையவர்களின் இலக்கண முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அமைந்தது. அவரது தொல்காப்பியப் பதிப்புக்களான எழுத்ததிகாரம் 1937ம் ஆண்டிலும், சொல்லதிகாரம் 1938ம் ஆண்டிலும், பொருளதிகாரம் இரண்டாம் பகுதி 1943ம் ஆண்டிலும், பொருளதிகாரம் முதலாம் பகுதி 1948ம் ஆண்டிலும் வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து, ஐயரின் ஆற்றலும் புகழும் ஈழத்தில் மட்டுமின்றித் தமிழ் நாட்டிலும் பரவியது. 'தொல்காப்பியக் கடல்' எனவும், 'ஈழத்து இலக்கண ஞாயிறு' எனவும் பலவாறாகப் போற்றப்பட்டார். அவரது பல இலக்கணக் கட்டுரைகளை, மதுரை தமிழ் சங்க வெளியீடான 'செந்தமிழ்' விரும்பிக் கேட்டு, பிரசுரித்து வந்தது. 'நீண்ட காலமாக ஈழத்துத் தமிழ் அறிஞர்களை, அங்கீகரிக்க மறுத்த பல தமிழ்நாட்டு அறிஞர்கள் கணேசையருக்குத் தலை சாய்த்து மதிப்பளித்தனர்' என, பதிப்புத் துறையில் பெயர்போன உ,வே சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். கணேசையரின் முதன் மாணாக்கராகிய இலக்கண வித்தகர், பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள் 'தொல்காப்பியமாகிய பெருங்கடலில் புகுவோருக்கு ஐயரவர்களின் குறிப்புகள் மரக்கலம் போல் உதவுவன' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கணேசையர் அவர்கள் பெருமளவிலான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சிறு குறிப்புகளையும் எழுதியுள்ளார். அவை இலக்கணம், இலக்கியம் தொடர்பானவையாகவும், பொதுவானவையாகவும் காணப்படுகின்றன. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை ஒப்பிட்டு, மொழியின் வளர்ச்சிக் கட்டங்களைக் காட்டும் வகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பொருளிலக்கணம் தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் களவியல், நம்பி அகப்பொருள் போன்ற பொருளிலக்கண நூல்களை ஆதாரம் காட்டி, எழுதிய 'இயற்கை நவிற்சியும் செயற்கைப் புனைவும்' என்ற கட்டுரை அவரது இலக்கண நுண்ணறிவையும் இலக்கிய ஆளுமையினையும் எடுத்துக்காட்டுகிறது. இவர் எழுதிய 'சிறுபொழுதாராய்ச்சி', 'மதுரைக் காஞ்சியிற் கூறிய யாமப்பிரிவு', 'மெய்ப்பாடு', 'சிறுபொழுது' ஆகிய கட்டுரைகளில் சங்க இலக்கியங்களின் தொடர்புகளை அவதானிக்கலாம். 'கம்பனும் உவமையலங்காரமும்', 'சீவகசிந்தாமணி உரைநயம்', 'திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கம்', 'பெரியபுராண முதற் செய்யுளுரை' என்பன இவரது ஏனைய சில இலக்கியக் கட்டுரைகளாகும். 'கவியின்பம்' என்ற தலைப்பிலே கம்பராமாயணம், மகாபாரதம், திருமுருகாற்றுப்படை, நற்றினை, புறநானூறு ஆகிய நூல்களிலிருந்து பாடல்களை எடுத்து அவற்றின் இலக்கிய ரசனையை விளக்கி எழுதியுள்ளார். அவரது பொதுவான கட்டுரைகளுக்கு 'முன்னைத் தமிழ்நாட்டு பெண்களின் நிலை', 'வசிட்டரும் வள்ளுவரும் கூறிய அரசியல்' ஆகிய கட்டுரைகளை உதாரணமாகக் கூறலாம்.

கணேசையர் செய்யுள்கள் இயற்றுவதிலும் கவிதைகள் புனைவதிலும் வல்லவர். இவரது ஆசிரியரான சுன்னாகம் குமார சாமிப் புலவர், இவரை 'கவிபாடும் புல மிக்கோன்' எனப் பாராடியுள்ளார். அக்காலத்தில் செய்யுள் இயற்றும் அல்லது கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர்கள் தான் தமிழறிஞர்கள் எனக் கருதப்பட்டனர். பாரம்பரிய மரபுசார் கல்வி முறையில், யாப்பிலக்கணம் தவறாது போதிக்கப்பட்டமைக்கு, செய்யுள் இயற்றும் சமூக அங்கீகாரமே காரணமாயிருந்தது. ஐந்திலக்கணமும் நன்கு அறிந்திருந்த கணேசையருக்கு, செய்யுள் இயற்றுவது கைவந்த கலையாய் அமைந்தது.

வெண்பா, விருத்தம், அகவல், கட்டளைக் கலித்துறை போன்ற பல்வேறு யாப்பு வடிவங்களையும் இவர் கையாண்டார். 'திருச்செல்வச்சந்நிதி நான்மணிமாலை', 'புன்னை மும்மணிமாலை', 'வருத்தலை விளான் மருதடி விநாயகர் பிரபந்தம்', 'வருத்தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன் ஊஞ்சல், 'ஆயாக்கடவை சித்திவிநாயகர் திருவூஞ்சல்' 'மேலைக் கரம்பொன் சண்முகநாதன் திருவிரட்டை மணிமாலை' என்பன கணேசையரின் ஏனைய சில செய்யுள் நூல்களாகும். இவர் பல தனிப்பாடல்களை, நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆண்டுமலர்கள் போன்றவற்றிலும் எழுதியுள்ளார்.

அக்காலத்துத் தமிழறிஞர்கள் சமூகத்துடன் இணைந்தவர்களாக, வாழ்த்துப் பாக்கள், இரங்கற்பாக்கள் என்பவற்றை எழுதுவதும் உண்டு. இரங்கற்பாக்கள் காலப் போக்கில், கல்வெட்டுகள் என அழைக்கப்பட்டன. கணேசையர் அவர்கள் இரங்கற்பாக்களை உறவினர்கள், நண்பர்கள், தனது ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு மாத்திரம் எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

கணேசையர் அவர்கள் தனக்குப் பின் தமிழ் கூறும் நல்லுலகுக்கு, அரும்பணியாற்ற மாணாக்கர் பரம்பரையினை உருவாக்கியமை சிறப்புக்குரியதாகும். இவரிடம் கற்றுப் பண்டிதர்களாக வெளியேறியோர் பலர். அவர்களுள் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா, முதன் மாணாக்கராக விளங்கினார். கணேசையர் முதுமையடைந்து நோய்வாய்ப்பட்ட போது, அவரது வகுப்புகளை, பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயாவே நடத்தி வந்தார். கணேசையரிடம் பயின்ற ஏனைய தமிழறிஞர்களாக பண்டிதர் க.கி நடராஜன், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் இளமுருகனார், பண்டிதர் ஆர்.கே. முருகேசன், பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

1938ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் எட்டாம் திகதி கணேசையரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில், அப்போதைய அரசாங்க சபைத் தலைவர் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி தலைமையில், கோலாகலமாக நடைபெற்றது. அவ்விழாவின் போது, ஐயரின் சேவையைப் பாராட்டி, இரண்டாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழி வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். 1951ம் ஆண்டு சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால், யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் நடத்தப்பட்ட தமிழ் விழாவில் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதை கே.எஸ் கிருஷ்ணன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 1952ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் தனது ஆண்டு விழாவில் 'வித்துவசிரோமணி' பட்டத்தை வழங்கிப் பெருமை கொண்டது.

கணேசையர், தனது வாழ்க்கைத் துணையாரை இழந்த பின்னர், அவரது நினைவாக வருத்தலைவிளானில் ஒரு காணி வாங்கி, அதில் ஒரு கிணறு வெட்டி, அதற்கு 'அன்னலட்சுமி கூபம்' எனப் பெயரிட்டு, வருத்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு காணிக்கையாகக் கொடுத்தார். பின்னர் அங்கேயே தமிழ் குடில் அமைத்து, ஒரு துறவி போல் தமிழை போதித்தும், தமிழையே மூச்சாகவும் வாழ்வாகவும் கொண்ட அவர், 1958ம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார். அவரது நினைவாக வருத்தலைவிளானில் மணிமண்டபம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் ஆயாகடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் உருவச்சிலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அவரது பெயரில் கணேசா சனசமூக நிலையம், கணேசா முன்பள்ளி என்பனவும் செயற்பட்டு வருகின்றன. இவையனைத்தும் அவர் மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்து வருகிறார் என்பதனை நினைவுறுத்தி நிற்கின்றன.

vivekananthan.v@thaiveedu.com



# மக்கள் கலைஞர் லோகாநந்தன்

மலையகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மகத்தான கலைஞன். கலை மக்களுக்கானது என இயங்கும் ஒரு சமூகப் போராளி. நாடகமே தன் வாழ்வாகக்கொள்ள வல்லமையும் வாலாயமும் பெற்றவர். தமிழிலும் சிங்களத்திலும் ஆற்றுகைகளை நிகழ்த்தவல்ல பாண்டித்தியம் மிக்கவர். புகழ்பெற்ற சிங்கள நாடகப்பரப்பில் பரிசு பெற்ற முதல் தமிழ் நாடகன். எழுத்து, மொழிபெயர்ப்பு, நடிப்பு, நெறியாள்கை, பாடல், இசை எனப் பன்முக ஆற்றல் படைத்தவர். எந்தப் பாத்திரமும் பொருந்தி வரும் வசீகரக் கலைஞன். பழகுவதற்கு இனிமையான பண்பாளன். மேலாக, நல்ல மனிதர். இவர்தான் எமது இம்மாதக் கலைஞன் லோகாநந்தன்.

பொகவந்தலாவ என்பது நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அழகிய நகரம். தேயிலைத் தோட்டங்களும் நீர் வீழ்ச்சிகளும் இயற்கை வனப்பும் மிக்கது. 1958ல் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த வீரமறவர் ஐயாவு, பிரான்சிஸ் தோன்றிய புண்ணிய பூமி. பொப் பிசை சக்கரவர்த்தி A.E.மனோகரன் மற்றும் பிரபலமான பல காமன் கூத்துக் கலைஞர்கள் பிறந்த மண். இந்நகரிலுள்ள கொட்டியாகலை என்ற ஊரில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களான இராசையா - சந்திராணி இணையரின் மகனாகப் பிறந்தவர் கலைஞர் லோகாநந்தன். இவரது தாயார் சந்திராணி நாட்டுப்புறப் பாடல்கள் பாடுவதிலும் கிராமிய நடனங்கள் ஆடுவதிலும் ஆற்றல் பெற்றவர். தந்தையார் நாடகங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

கல்லூரி நாட்களில் லோகாநந்தனின் கலையீடுபாட்டுக்கு உந்துதல் அளித்த வகுப் பாசிரியை ரேணுகாதேவி அவர்களின் வழிகாட்டலில் 'மக்கள் களரி' என்ற நாடக அமைப்பில் ஒரு முழுநேர ஊழியராக 2006ல் இவர் இணைந்து கொண்டார். பிரபல நாடகக்கலைஞர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் மறைந்த மூத்த கலைஞர் எச்.ஏ. பெரேரா ஆகியோர் இணைந்து 'மக்கள் களரி' என்ற நாடக அமைப்பை 2002ல் உருவாக்கியதோடு, சர்வதேச தரத்திலான நாடகப்பயிற்சிகளும் இவர்களால் அளிக்கப்பட்டன. சிங்களம், தமிழ் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் பராக்கிரம நிரியெல்ல எழுதிய 'செக்குவ' என்ற சிங்கள நாடகத்தைத் தமிழுக்கு மொழிபெயர்த்தார். 1996ல் எழுதப்பட்ட இந்நாடகம் செக்கிழுக்கும் மாடு ஒன்றை மையமாக வைத்து இலங்கையின் அரசியல் வரலாற்றைச் சொல்லியது. 2008ல் தமிழில் மேடையேறிய 'செக்கு' என்ற இந்நாடகத்தின் பிரதான பாத்திரமான மாடாக வேடமேற்று லோகாநந்தன் சிறப்புச் செய்தார்.

2008ன் பிற்பகுதியில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகத்தை மக்கள் களரிக்காக இவர் சிங்களத்தில் மொழிபெயர்த்தார். 'ஹிரு நெகனதுரு' என்ற இந்த சிங்கள நாடகத்தில் தமிழ்க் கலைஞர்களும் 'எந்தையும் தாயும்' என்ற தமிழ் மேடையேற்றத்தில் சிங்களக் கலைஞர்களும் நடித்துப் புதுமை செய்தனர். இதில் ஆரம்பத்தில் கண்ணனாகவும் பின்னர் பெரிய ஐயாவாகவும் லோகாநந்தன் நடித்திருந்தார்.

சுத்திரக என்ற நாடகாசிரியர் எழுதிய 'விருட்சகட்டிக' எனும் வடமொழி நாடகத்தை 'மெட்டிக்கரத்தைய' என்ற பெயரில் சிங்களத்தில் மக்கள் களரியினர் மேடையேற்றினர். இதில் விதூசகன் பாத்திரத்தில் நடித்த இவர், 2010 நடைபெற்ற தேசிய சிங்கள நாடக விழாவில் சிறந்த துணை நடிகராகப் பரிந்துரை செய்யப்பட்டார். இதன் பினனர், லோகாநந்தன் தமிழில் மொழிபெயர்த்த இந்நாடகத்தை மக்கள் களரியும் மட்டக்களப்பு விபுலானந்த கற்கை நிறுவனமும் இணைந்து 'விருட்ச கடிதம்' என்ற தலைப்பில் மேடையேற்றினர். பராக்கிரம நிரியெல்ல நெறியாள்கை செய்த இந்நாடகத்துக்கு நிர்வாக இயக்குனராக பேராசிரியர் சி. மௌனகுரு பணியாற்றினார். லோகாநந்தன் நடிகர்களுக்கான பயிற்சியையும் சுமுது மல்லவராய்ச்சி நாடகத்தின் இசையையும் வழங்கியிருந்தனர்.

ஈழத்துத் திரைப்படமான 'பொன்மணி'யை இயக்கிய கலாநிதி தர்மசேன பத்திராஜ எழுபதுகளில் எழுதிய 'கொற சக அந்தைய' என்ற சிங்கள நாடகத்தை இவர் தமிழுக்கு மொழிபெயர்த்தார். முடவன் வழிகாட்ட, முடவனை முதுகில் சுமந்த படி அரசகுமாரியைக் காணச் செல்லும் பார்வையற்றவரின் கதை. அபத்தபாணியில் எழுதப்பட்ட பிரபலமான நாடகம் அது.



'பயணிகள்' என்ற பெயரில் தமிழில் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தில் முடவனாக லோகாநந்தன் நடித்திருந்தார். மக்கள் களரியைச் சேர்ந்த கலைஞர்கள் லீலாவதி, ரொனிக்கா, சாமலி ஆகியோர் இணைந்து இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தனர். 2011ல் இடம்பெற்ற மத்திய மாகாண இளைஞர் நாடக விழாவில் சிறந்த நடிகர், சிறந்த பிரதியாக்கம் ஆகிய பரிசுகள் கலைஞர் லோகாநந்தனுக்குக் கிடைத்தன. அவ்வருடம் நடைபெற்ற தேசிய நாடக விழாவில் மேடையேற்றப் பட்ட போது சிறந்த நடிகருக்கான பரிசை பார்வையற்றவராக நடித்த சிவனேசன் பெற்றுக்கொண்டார். 'பயணிகள்' நாடகம் 2012ல் டெல்லியில் நடைபெற்ற சர்வதேச நாடக விழாவிலும் மேடையேற்றப்பட்டு பாராட்டுப் பெற்றது குறிப்பிடத்தக்கது.


மக்கள் களரியினர் மேடையேற்றிய மேலும் பல சிங்கள நாடகங்களை இவர் தமிழுக்கு மொழிபெயர்த்தார். சுரங்கம், இருளைத் துளைத்து, திருடன் வந்தான், இருட்டும் வெளிச்சமும், கல்யாணக்கதை, அப்பா, நான் அரைக்கம்பன் என்பன அவற்றுள் சிலவாகும். இவை தவிர, மக்கள் களரியினர் வெளியிட்ட 'சிங்கள நாடக கலை ஆளுமைகள்' என்ற நூலின் உதவி ஆசிரியராகவும் இவர் பணியாற்றினார்.

நாடகப் பிரதியாக்கத்திலும் புதிய சிந்தனைகளைப் புகுத்திய இவர், வகுப்பு, இரும்பில் பொருத்திய இதயம், மெல்ல விடிகிறது, லயத்துக் கோழிகள், அடகுக் கடை அபூன் ஆகிய நாடகங்களை எழுதி, இயக்கி, மேடையேற்றினார். 2015ல் தேசிய தமிழ் நாடக விழாவில் 'இரும்பில் பொருத்திய இதயம்' நாடகத்துக்கான சிறந்த பிரதி, சிறந்த இயக்குனர் விருதும் 2016ல் 'வகுப்பு' நாடகத்துக்கான சிறந்த இயக்குனர் விருதும் அஜந்தன் சாந்தகுமார் இயக்கிய 'கல்யாணக்கதை' நாடகத்துக்கான சிறந்த நடிகர் விருதும் இவருக்குக் கிடைத்தன.

மேலும் 2014ல் இடம்பெற்ற தேசிய இளைஞர் நாடக விழாவில் மேடையேறிய லீலாவதியின் 'பறையன்' நாடகத்துக்காக சிறந்த நடிகர் விருது கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

பிரெக்டின் 'Round heads and pointed heads' என்ற நாடகத்தை மக்கள் களரியினர் சிங்களத்தில் மேடையேற்றினர். ஒரு அரச அதிகாரம் எவ்வாறு செயற்படும் என்பதை விளக்கும் இந்நாடகத்தை லோகாநந்தனும் சுமுது மல்லவராய்ச்சியும் இணைந்து இயக்கினர். இதில் நடித்த தன் மூலம் 2016ல் நடைபெற்ற தேசிய சிங்கள நாடக விழாவில் சிறந்த துணை நடிகராகத் தெரிவான முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றார்.

2016ல் மக்கள் களரியினர் 'சரண்தாஸ்', 'வெண்கட்டி வட்டம்' என்ற இரு சீரிய முழுநீள நாடகங்களைத் தயாரித்தளித்தனர். இவ்விரு நாடகங்களையும் பராக்கிரம நிரியெல்ல நெறியாள்கை செய்திருந்தார். பிரபல உருது நாடகாசிரியர் ஹபீப் தன்வீர் எழுதிய 'சரண்தாஸ்' நாடகத்தின் சிங்கள, தமிழ் மூல மேடையேற்றங்கள் இரண்டிலும் சரண்தாஸாக பிரதான வேட மேற்று லோகாநந்தன் நடித்திருந்தமை அவரது புலமைக்குச் சான்று பகர்வதாகும். இந்நாடகம் டெல்லியில் நடைபெற்ற சர்வதேச நாடக விழாவிலும், புரிசை கண்ணப்பன் தம்பிரான் கூத்து விழாவிலும் மேடையேற்றம் கண்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கிரிகிஸ்தான், கல்கத்தா, கேரளா, மைசூர், அசாம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அரங்கியல் விழாக்களில் லோகாநந்தன் பங்குபற்றியுள்ளார்.



பிரெக்டின் 'The Caucasian Chalk Circle' நாடகத்தை குழந்தை ம. சண்முகலிங்கம் தமிழுக்கு மொழிபெயர்த்திருந்தார். இந்நாடகத்தை 'வெண்கட்டி வட்டம்', 'ஹுணு வட்டய' என தமிழிலும் சிங்களத்திலும் மக்கள் களரியினர் மேடையேற்றினர். கலைஞர் லோகாநந்தன் இவற்றின் உதவி இயக்குனராக இயங்கியதுடன் பிரதான பாத்திரமான நீதிபதியாக இருமொழிகளிலும் நடித்திருந்தார். குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களைக் கௌரவிக்கும் நோக்கில் 'வெண்கட்டி வட்டம்' என்ற இந்நாடகப் பிரதியை மக்கள் களரியினர் நூலாக வெளியிட்டிருந்தனர்.

2017ல் மக்கள் களரியினர் நல்லூர் சாதனா பாடசாலை மைதானத்தில் பத்து நாட்கள் நடத்திய நாடக விழாவில் மேடையேறிய வெண்கட்டி வட்டம், சரண்தாஸ், பயணிகள், எருக்கலம்பூ, கல்யாணக்கதை ஆகிய நாடகங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சர்க்கஸ் கூடாரம் அமைத்து, பார்வையாளர்கள் சுற்றி அமர்ந்திருக்க, நடுவில் வட்டக்களரி மேடையில் நாடகங்களை மேடையேற்றி




**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

னர். நினைவூட்டுகை இல்லை. எல்லோருக்கும் எல்லா நாடகங்களும் இரு மொழிகளிலும் மனப்பாடம். ஒலி, ஒளி, இசை, நடிப்பு என அவர்கள் மேடையில் சாக சங்களை நிகழ்த்தினர்.

மலையக மக்களின் பிரச்சினைகளைச் சொல்லும் 'பித்தக ஹட்ட' என்ற சிங்கள நாடகத்தை லோகாநந்தன் இயக்கினார். கலைஞர்கள் சேர்ந்து புதிதளித்தல் முறையில் எழுதப்பட்ட இந்நாடகம் 2019ல் நடைபெற்ற கேரளா நாடக விழாவின் ஆரம்ப நாடகமாக மேடையேறியது. இது சிங்கள இளைஞர்கள் மத்தியில் மலையக மக்களின் பிரச்சினைகளைப் புரிய வைத்த நாடகமாகக் கொள்ளப்படுகிறது.

மக்கள் களரியினர் தமது நாடக மேடையேற்றங்களோடு நின்று விடாது, ஏனைய நாடக அமைப்புகளையும் உற்சாகப்படுத்தி, பயிற்சிகள் கொடுத்து, அவர்களின் அரங்க ஆற்றுகைகளுக்கு உற்சாகம் கொடுத்து வந்துள்ளனர். அந்த வகையில், செம்முகம் கலையாற்றுக் குழு, அளவெட்டி ஆரோகண நாடக மன்றம் ஆகியவற்றின் கலைஞர்களை இணைத்து ரஷ்ய மொழி மூல 'அன்பமுதூறும் அயலார்' என்ற நாடகத்தை லோகாநந்தன் இயக்கியிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

மேடை நாடகங்கள் தவிர, வானொலி நாடகங்கள் பலவற்றிலும் பங்குபற்றியுள்ள இவர், சுமதி சிவமோகனின் 'இங்கிருந்து' மற்றும் 'ஒற்றை தம்ளர்' ஆகிய திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஊர் ஊராகச் சென்று மக்களோடு தங்கியிருந்து, பாலிய விவாகம், பாலியல் வன்புணர்வு, இனப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, கல்வியைத் தொடராமை, முதியோர் பிரச்சினை, போதைவஸ்து பாவனை போன்ற சமூகத்தில் புரையோடிப்போயுள்ள பிரச்சினைகளை அறிந்து, அவர்களுடன் கலந்துரையாடி, விவாத அரங்கினூடாக அவற்றுக்கான தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளை இவர்கள் செய்து வருகின்றனர். இவ்வாறு 2009ல் யுத்தம் முடிவுற்றதும் கருணாநிலையத்துக்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளின் மனோநிலையை ஆற்றுப்படுத்த இவர்கள் நடத்திய பயிற்சிப் பட்டறைகள் முக்கியமானவை.

தற்போது கலைஞர் லோகாநந்தனின் வழிகாட்டலில் 'அரங்காடிகள் நாடகக் கூடம்' என்ற அமைப்பு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. அண்மையில் அரங்காடிகள் நடத்திய நாடக விழாவில் 'இப்படி ஒரு நாள்' என்ற நாடகத்தை இவர் எழுதி இயக்கியிருந்தார்.

நாடகக் கலைக்கும் அதனூடாக சமூகத்துக்கும் ஆற்றி வரும் பணிக்காக கலைஞர் லோகாநந்தன் அவர்களுக்கு ஜப்பான் - ஸ்ரீலங்கா நட்புறவு அமைப்பினர் 'Bulka' விருது வழங்கி கௌரவித்துள்ளனர். அவர் மென்மேலும் கலைப்பணியாற்ற தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com



"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

# அநீதிகளைக் கண்டிக்க மேடையேறிய வேதவல்லியின் நூற்றாண்டு!

- பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ் -

இலங்கை 1948ல் சுதந்திர மடைந்தபோது தமிழ் மாதர் மத்தியிலிருந்து மேடைப் பேச்சாளர்கள் தோன்றும் சூழல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்பட வில்லை. ஒரு சில பெண்கள் மேடையே றியிருப்பின், அவர்கள் ஆன்மிக விடயங் களுக்கு மாத்திரமே தமது சொற்பொழிவு களை மட்டுப்படுத்தியிருப்பர். பொது வாக, சமூக நீதி அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விடயமாகவே விளங்கியது. இதற்கு முக்கிய காரணம், அன்றைய தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்திய பெரும் பான்மையான ஆண்களின் சிந்தனையில் தெளிவில்லாமையாகும். குறுகிய சிந்தனை காரணமாக, இந்த ஆண்கள், தாம் வாழும் சூழலில் காணப்பட்ட அக்கிரமங்களையும், அநீதிகளையும் கண்டிக்க முன்வரவில்லை. இந்நிலையில், அன்றைய தமிழ் மாதர் தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் உரிமை முதலிய விடயங் களுக்குக் குரல் எழுப்பப் பின்வாங்கியமை ஓர் அதிசயமாகப் பார்க்கப்படவில்லை இத்தகைய நிலைக்கு விதிவிலக்காக விளங்கியவர் வேதவல்லி. இவர் வட்டுக் கோட்டையில் 1920ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 19ம் திகதி பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் அழகரத்தினம். தாயார் இராசலட்சுமி. வேதவல்லி பிறந்த ஊர் கல்விக்குப் பிரசித்தி பெற்றபோதும், இவர் சிறுமியாக இருந்த காலத்தில், மாண விகள் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப்பின் தமது பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வழக்கம் நிலவியது. கல்வியை இடையில் கைவிட்ட இம்மாண விகள் தமது வீடுகளில் இருந்துகொண்டு இல்வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்படுத் தினர். எனினும் வேதவல்லி, முற்போக்கான எண்ணம் படைத்த அவரது சிறிய தந் தையின் ஊக்குவிப்புக் காரணமாகக் கல் வியை இடையில் நிறுத்தாமல் தொடரக் கூடியதாக இருந்தது. இச்செயல் மூலம் தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றுவ தற்கான கல்வித்தகைமையைப் பெற்றார்.

வேதவல்லி நீர்வேலி என்னும் ஊரில் உள்ள அத்தியார் இந்துக்கல்லூரியில் தனது ஆசிரியச் சேவையைத் தொடங்கி னார். இவர் இக்கல்லூரியில் தமது கட மையை ஏற்ற காலத்தில், இரண்டாம் உல கப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவரது பாடசாலைச் சூழலில் இருந்த வயல்வெளிகள், வாழைத்தோட்டம், காய் கறித்தோட்டம் என்பனவும் இவருடன் நெருங் கிப் பழகிய அவ்வூர்ப் பெண்களின் களங் கமற்ற மனங்களும், நீர்வேலி மீது இவ ருக்கோர் பிணைப்பை ஏற்படுத்தியது.

## திருமணமும் கம்யூனிஸ்ட் கட்சியும்:

வேதவல்லி, நீர்வேலியில் பணியாற்றிய காலத்தில், அதே ஊரைச் சேர்ந்த திரு. எஸ்.கே. கந்தையா என்ற அறிவுஜீவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஊரில் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. கந்தையா, திருமணத்தைத் தொடர்ந்து மனைவியுடன் நீர்வேலியில் கடமையாற்றி னார்.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கணவர் இடைநிறுத்தியிருந்த இலண்டன் பல்கலைக்கழகத்திற்கான பட்டதாரிப் படிப்பைத் தொடர்வதற்கான சூழலை வேதவல்லி இல்லத்தில் உருவாக்கிக் கொடுத்தார். இதன் விளைவாக, நீர்வேலி யின் முதலாவது இலண்டன் பல்கலைக்க ழகப் பட்டதாரி என்ற பெருமை இவருக் குக் கிட்டியது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'கேசரி' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த கந்தையாவின் கட்டுரை கள், தலைநகரிலிருந்து வெளியான பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. இவர் மார்க்சியச் சித்தாந்தத்தில் பரந்த அறிவு படைத்தவராகக் கருதப்பட்டார். திரு.



எஸ்.கே. கந்தையா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையொன்றை யாழ்ப்பாணத் தில் தொடங்க, மற்றையோருடன் இணைந்து செயல்பட்டவர். 1848ம் ஆண்டு ஐரோப்பாவில் வெளிவந்த கம்யூனிஸ்ட் அறிக்கையை, தோழர் இராமசாமி ஐய ருடன் இணைந்து 1948ம் ஆண்டு தமிழில் மொழியாக்கம் செய்தவர்.

மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் வாழ்ந்த வேதவல்லிக்கு, பல்துறை வல்லுநர் திரு.கந்தையா கண வராகக் கிடைத்ததை ஓர் அதிர்ஷ்டமாகவே கருத வேண்டும். சிறிது காலத்தில் வேத வல்லியும் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத் துவம் பெற்றார்.

தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றிய வேதவல்லி அம்மையார், சங்க இலக்கி யங்கள், சங்கம் மருவிய கால நீதி இலக் கியங்கள் என்பனவற்றில் ஆழ்ந்த அறிவு படைத்தவராக விளங்கினார். இருப்பினும் அம்மையாரின் இதயத்தில் நிரந்தர இடம் பிடித்த கவிஞன் பாரதி என்பதில் எள்ள ளவு சந்தேகமுமில்லை. தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை முதலிய விடயங்களைப் பற்றி வேதவல்லி மேடையேறிப் பேசும் போது, பாரதியார் பாடல்களிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டுவது ஒரு வழமையான செயல்.

அறிவை வளர்ப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டிய வேதவல்லி அம்மையார், கணவ ரிடம் ஆங்கிலம் பயின்று அம்மொழியில் போதிய புலமை பெற்றார். இலங்கையில் தமிழ்ப்பெண்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்திருக்கத் தயங்கிய காலத்தில் வேதவல்லி அக்கட் சியில் அங்கத்துவம் வகித்தமை ஒரு புரட்சிகரச் செயலாகும்.

மார்க்சியச் சிந்தனை பற்றிய அரிய நூல் களையும், வெளிநாட்டு இலக்கியங்களை யும் வேதவல்லிக்கு திரு. கந்தையா அறி முகம் செய்து வைத்தார். புத்தகப் பிரிய ரான எஸ்.கே.கந்தையா, தனது இல்லத்தில் ஆயிரக்கணக்கான நூல்களைச் சேமித்து வைத்திருந்தார். இச்சேகரிப்பிலிருந்து லியோ டால்ஸ்டாய், மார்க்சிம் கார்க்கி, அன்டன் செகோவ் உட்படப் பல ரஷ்ய

எழுத்தாளர்களின் ஆக்கங்களை வேத வல்லி விரும்பி வாசித்தார். இவர், தான் வாசித்த நூல்களில் காணப்பட்ட சிந்தனை யைத் தூண்டும் விடயங்களைப் பற்றிக் கணவருடன் கலந்துரையாடவும் தவற வில்லை.

யாழ் மாவட்டக் கம்யூனிஸ்ட் மகளிர் அமைப்பின் முக்கிய அங்கத்தவராகச் செயலாற்றிய வேதவல்லி, ஒரு போதும் இப்பணி தனது பாடசாலைக் கடமைக ளுடன் மோத இடமளிக்கவில்லை. அதே போன்று எச்சந்தர்ப்பத்திலும் தனது அர சியல் சிந்தனைகளை மாணவர்கள்மீது திணிக்கவும் முயலவில்லை. அரசியல் மேடைகளில் எவ்வளவு தெளிவாகச் சொற் பொழிவாற்றினாரோ, அதேபோன்று வகுப் பறையிலும் எடுத்த விடயத்தை மாணவர் களுக்கு விளக்கும் ஆற்றல் அம்மையா ருக்கு அமைந்திருந்தது.

தனது மாணாக்கர்களைப் பேச்சுப் போட்டி, நாடகம் முதலியவற்றில் ஈடுபடுமாறு ஊக் கப்படுத்துவதுடன், சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அவசியப் பயிற்சியும் வழங் கினார். மாணாக்கர்களுக்கு ஏட்டுக் கல் வியை மாத்திரம் வழங்கும் நிலையமாகப் பாடசாலை இருக்கக்கூடாது என்ற நிலைப் பாட்டில் வேதவல்லி உறுதியாக இருந்தார்.

ஆசிரியப்பணி ஒரு புனிதமானது என்பது வும் வேதவல்லியின் நிலைப்பாடு. இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரை ஒருங்கி ணைத்த அகில இலங்கை ஆசிரியர் சங் கத்தில் இவர் அங்கத்துவம் வகித்தார். அச்சங்கத்தின் முக்கியக் கிளைகளில் ஒன் றான வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தில் அம்மையார் பல பதவிகளை வகித்தார். அக்காலகட்டத்தில் அங்கத்த வரின் நலன் கருதி வேதவல்லி எடுத்த நடவடிக்கைகள், அவர் மறைந்த பின்னரும் பல ஆசிரியர்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றன.

## சமூக சேவை:

ஒரு சமூக சேவகியென்ற அடிப்படையில் தனது ஊரிலும், அதற்கு அண்மையிலும் வாழ்ந்த விவசாயிகளின் நலன்களில் அக் கறை செலுத்தினார். விவசாயிகள் தமது விளைச்சலைப் பெருக்குவதற்கான ஆலோசனைகளை, உரிய நிபுணர்களைக் கிராமத்திற்கு வரவழைத்து, அவர்கள் மூலம் வழங்கினார். அத்துடன், விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்ப டுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் அக் கறை செலுத்தினார்.

தான் வாழும் சூழலிலும், தேசிய மட்டத்தி லும் பெண்கள் முன்னேற வேண்டுமென் பது வேதவல்லியின் சிந்தனையின் ஒரு வெளிப்பாடு. பெண்கள் தனியாக இயங் குவதிலும் பார்க்க, கூட்டாக இயங்குவதன் மூலம் ஒரு பாரிய சக்தியாக உருவெடுக் கலாம் என்பது இவரது கருத்து. இதன் மூலம் பல கருமங்களைப் பெண்கள் சாதிக்கலாம் என்பதை இவர் வலியுறுத்தி னார்.

இதன் முதற்படியாக, பெண்களை மையப் படுத்தி, கூட்டுறவுக் குழுக்கள் நிறுவப்ப டுவதின் அவசியத்தை இவர் சுட்டிக்காட் டினார். ஏற்கனவே வடமாகாணத்தில் கூட்

*தொடர்தல் 48ம் பக்கம்*

# அநீதிகளைக்...

**47ம் பக்கத் தொடர்ச்சி...**

டுறவு இயக்கங்களின் முக்கியத்துவம் பரவலாக அறிமுகமாயிகிருந்தமை வேத வல்லியின் முயற்சிக்கு அனுகூலமாக அமைந்தது.

இவரால் பல சிற்றூர்களில் மகளிர் குழுக் கள் தொடங்கப்பட்டன. இங்கு மகளிர் தமது ஆக்க சக்தியை முன்னெடுப்பதற்கு அம்மையார், ஜனநாயக அடிப்படையில் அவர்களைத் தொடக்க காலங்களில் நெறிப்படுத்தினார். இம்மகளிர் குழுக்கள், தரமான கைப்பணிப் பொருள்கள், உணவு வகைகள் என்பவற்றை நியாயமான விலை யில் நுகர்வோர் பெறுவதற்கு ஆவன செய்தன.

1955ம் ஆண்டு நீர்வேலியில் பாலர் பகல் விடுதி (CRECHE) ஒன்றை, தொழில் புரி யும் பெற்றோரின் நலன் கருதி நடத்துவ தற்குச் சமூக சேவைகள் அமைச்சு முதல் ஒதுக்கீடு செய்தது. அந்நாட்களில் பாலர் பகல் விடுதிகள் ரஷ்யா உட்படப் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்பட் டன.

நீர்வேலியில் பாலர் பகல் விடுதியைச் செயற்படுத்த, ஏற்கனவே வெளிநாடுகளில் இவை செயற்பட்ட முறையை அறிந்தி ருந்த வேதவல்லியின் உதவியை அரசு அதிகாரிகளும், உள்ளூர்வாசிகளும் நாடி னர். நீர்வேலியில் தொடங்கப்பட்ட பாலர் பகல் விடுதி, அவ்வூரைச் சேர்ந்த தொழில் புரியும் பெண்களுக்குப் பெருமளவில் ஆதரவாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை தொடங்கப்பட்ட சில நாட்களில் அதனுடன் தன்னை இணைத்துக்கொண்ட வேதவல்லி, கட்சியின் வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பை வெவ்வேறு வகையில் வழங் கினார். அன்றைய யாழ்ப்பாண சமூகத் தில் காணப்பட்ட அநீதிகளையும், அக்கி ரமங்களையும் கண்டிக்க அம்மையார் தயங்கவில்லை. இந்த அநீதிகளுக்கெதி ராக நடத்தப்பட்ட போராட்டங்களில் தவ- றாமல் பங்கு பற்றினார்.

தோழர் எம்.சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கிய அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், அவர் முக்கிய அங்கத்தவராகச் செயற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும் இப்போராட்டங்களை வழிநடத் தின. கோவில்கள், உணவகங்கள், ஏனைய பொது இடங்கள் என்பவற்றில் யாவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்பது இப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் முன் வைத்த முக்கியக் கோரிக்கைகளாகும். இப்போராட்டங்கள், பிற்காலத்தில் சமூகத் தில் பல மாற்றங்கள் தோன்றுவதற்கு வித்திட்டன.

## வெளிநாட்டுப் பயணம்:

மக்களுக்குத் தொண்டாற்றுவதை வேத வல்லி ஒருபோதும் சுமையாகக் கருத வில்லை. தனிப்பட்ட வகையில் பல துன் பங்களுக்கு இவர் முகம் கொடுக்க நேரிட்டபோதும், சமூகத்திற்குத் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை உதாசீனம் செய்ய வில்லை. நீண்ட காலம் நோய்வாய்ப்பட் டிருந்த கணவர் 1970ம் ஆண்டு காலமான போது, ஆழ்ந்த துயரத்தில் மூழ்கினார்.

வேதவல்லி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆற்றிய ஆசிரியப்பணி மூலம் பண்பும், சமூக உணர்வும் கொண்ட ஒரு மாணவப் பரம்பரையை உருவாக்கினார். 1977ம் ஆண்டு அம்மையார் ஓய்வு பெற்றபோது, இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதம (பகுதி) தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். அரசாங்கப் பணியிலி ருந்து ஓய்வு பெற்ற வேதவல்லி, சமூகத் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுப டுத்திக் கொண்டார்.

1978ம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை இவரை ரஷ்ய நாட்டிற்கு அனுப்பி வைத்தது. அங்கு செல்லும் வேளையில் அம்மையாரின் உடல்நிலை யில் தளர்ச்சி காணப்பட்டது. ரஷ்யாவில் இருந்தபோது மருத்துவர்களால் பரிசோ திக்கப்பட்டதுடன், சிகிச்சையும் இவருக்கு வழங்கப்பட்டது.

உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ரஷ்யப் புரட்சியின் பின் அந்த நாட்டில் நிகழ்ந்த மாற்றங்களை நேரடி யாகப் பார்க்கும் வாய்ப்பு அம்மையா ருக்குக் கிட்டியது. முக்கியமாக, மாதர் நலன் கருதி அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும், பாலர் பகல் விடுதி இயங்கும் முறையையும் அறிந்து கொள் வதில் ஆர்வம் காட்டினார். ரஷ்யாவில் இருந்த நாட்களில் அந்த நாட்டின் வர லாறு, கலை, இலக்கியம் என்பனவற்றுடன் தொடர்புடைய இடங்களுக்கும் இவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

வேதவல்லி அம்மையார் தனது ஊரிலும், அண்மை ஊர்களிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி வைத்ததுடன், அவற்றில் பெண்களை உற் சாகத்துடன் ஈடுபட வைத்தார். அம்மை யாரின் கடும் உழைப்புக் காரணமாக, ஒரு கட்டத்தில் அவர் கொழும்பில் இயங் கிய கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சம் மேளனத்தின் உப தலைவியாக நியமிக் கப்பட்டார். 1980களின் தொடக்கப் பகுதி களில் இலண்டன் மாநகரில் சிறப்பாக நடைபெற்ற அகில உலக கூட்டுறவு மக ளிர் மாநாட்டில் வேதவல்லி இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதன் மூலம் நீர்வேலிக்குப் பெருமை தேடித்தந் தார்.

கந்தையா - வேதவல்லி இணையருக்கு இரு பிள்ளைகள். மகள் சுகுணா தன பாலசிங்கம் சமூகப்பணி, கல்வி, நடனம் என்பவற்றில் சிறு வயது முதல் ஆர்வம் செலுத்தியவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில், கிராமியக் கலைகளை வெளிப்படுத்தும் நோக்குடன், பேராசிரியர் வித்தியானந்தன் நெறிப்படுத் திய நாடகங்களில் நடித்தவர். மகன் சுகு மார், பெற்றோர் அங்கத்துவம் வகித்த கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தவர். 1978ம் ஆண்டு கியூபாவில் நடைபெற்ற இளைஞர் விழாவில் இலங் கையிலிருந்து கலந்து கொண்டவரில் சுகுமாரும் ஒருவர். தற்போது இவர் பிரான்ஸ் நாட்டில் வசிக்கின்றார்.

இறுதி நாட்களில் வேதவல்லி அம்மையார், உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில், சில்லு இணைக்கப்பட்ட ஆசனத்தில் அமர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அந்நிலையிலும், இயன்றவரை தனது பணிகளைத் தொடர்ந்த இவர், 1988ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி கால மானார். இவர் மறைந்தபோதும், இவரால் தொடங்கப்பட்ட கழகங்கள், சங்கங்கள், குழுக்கள் என்பன மேலும் வளர்ச்சிய டைந்த நிலையில், மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றுகின்றன.

வேதவல்லி அம்மையார் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்ட போதும், மக்கள் இதயங்களில் அவர் வாழ்கின்றார் என் பதை உறுதி செய்கின்றது, 2019ம் ஆண்டு நீர்வேலியில் அவருக்கு அமைக்கப்பட்ட உருவச்சிலை.

நன்றி: வீரகேசரி வாரவெளியீடு (ஒக்ரோபர் 27, 2020)



*sriskandadas@thaiveedu.com*



# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

1850கள் முதல் 1920 வரையான காலம் - அறிமுகமாக

- 1921லிருந்து - 1948ல் இலங்கை சுதந் திரமடையும் வரையான காலம்.
- (1948)சுதந்திரமடைந்தது முதல் 1960 களின் நடுப்பகுதி வரையான காலம்.
- 1961 முதல் 1985 வரையான காலம்.
- 1986 முதல் 2005 வரையான காலம்.
- 2006க்குப்பின் இன்றுவரை (2020 வரை யான காலம்).

என கால ஒழுங்கில் மலையகக் கவிதை இலக்கிய செல்நெறியை எழுதிச்செல்லும் கட்டுரையின் ஆறாவது பாகம் இது.

அந்த ஒழுங்கில் சென்றால் இந்தமாதம் 1965 - 1985 காலத்துக்குள் சென்றிருக்க வேண்டிய இந்த கட்டுரை, மீண்டும் 1921 - 1948 காலப்பகுதியில் விடுபட்ட ஒரு விடயத்தை மீட்டிப்பார்த்து திரும்புவதாக இந்த மாத கட்டுரை அமைகிறது.

தேடல் மிகுந்த இந்தத் தொடரில் தேட லில் கிடைத்த இந்த கவிதை இலக்கிய செல்நெறியின் இன்னுமொரு வரலாற்றைப் பதிவு செய்வதே சரியானதாக அமையும்.

1921முதல் 1948 வரையான சுதந்திரத்துக்கு முன்னான காலப்பகுதியில் அருள்வாக்கி அப்துல்காதிர்புலவர், திருமதி மீனாட்-சியம்மை போன்றோரையே எழுத்துவழி கவிஞர்களாக அடையாளம் காணும் இந்

## பாகம்: 5

தக் கவிதைச்செல்நெறியில் 1928ம் ஆண்டு வெளிவந்த ஒரு கவிதை நூல் குறித்த ஆய்வுக்கட்டுரை ஒன்றை சமர்ப்பித்துள்ள முனைவர் பேராசிரியர் பா. ஆனந்தகு மார் (திண்டுக்கல் காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகம்), 'தேசமக்களை நாசப் படுத்தும் தேயிலைத் தோட்டப் பாட்டு 'எனும் சிறுபிரசுரம் குறித்து குறிப்பிடுகின் றார். இதில் குஜிலிப் பதிப்பு: கண்டி சிலோன் காப்பித்தோட்டப்பாட்டு என்னும் துணைத்தலைப்பையும்கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறார் முனைவர் பா.ஆனந்தகு-மார்.

இந்த நூலை மீள் அறிமுகம் செய்யும் அவர் தனது பதிப்புரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' தமிழ கத்தில் திருநெல்வேலி மாவட்டக் கிராமம் ஒன்றிலிருந்து புலம்பெயர்ந்து, இலங்கைத் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்று கடும் இன்னல்களுக்குள்ளான, 'மருதி' என்ற பெண்ணின் சோக வாழ்வைச் சித்திரிக்கி றது. இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை, துன் பம் நிறைந்த கேணியாக சித்திரித்த, புது மைப்பித்தனின் ஏட்டிலக்கியப்பதிவிற்கு முன்பே, நாட்டார் இலக்கிய மரபில் இயற் றப்பட்ட சிந்துப்பாடல்களின் தொகுப்புத் தான் 'தேச மக்களை நாசப்படுத்தும் தேயிலைத் தோட்டப்பாட்டு'.

முனைவர் பா. ஆனந்தகுமார் அறிமுகம் செய்யும் இந்த கவிதைகள் திரிசிரபுரம் டி.எம். ஜனாப்பா புலவர், திருவீரமாநகர் செந்தமிழ் சேகர யாசீன்தாஸ் ஆகியோர் இயற்றியது. சங்கீத சரபம் டி. சபாபதி முதலியார் பதிப்பித்தது. (ஸ்ரீ மயில்வாக னன் பிரஸ், சென்னை, 1928) எனக் குறிப் பிடுகின்றார்.

ஏற்கனவே இந்த கட்டுரைத்தொடரில் குறிப்பிட்டவாறு வாய்மொழி நாட்டார் பாடல் வடிவங்களில் ஆரம்பிக்கும் மலை யகக் கவிதை இலக்கிய செல்நெறியில் தனிமனித கவிஞர் அடையாளத்துடன் வெளிப்படவராக 1866ம் ஆண்டு கண்டி யில் பிறந்த அருள் வாக்கி அப்துல் காதிர்ப்புலவர் அடையாளங்காட்டப்பட்ட துடன், 1916ல் அச்சேற்றம் பெற்ற 'தங்கப் பாட்டமாலை' எழுதிய கொட்டாற பாவா புலவர், இந்தியாவில் பிறந்து இங்கு வந்த சதக்கத்தம்பி புலவர் ஆகியோருக்கு அடுத்ததாக 1928ல் வெளிவந்த மேற்படி நூலையும் கவிஞர்களையும் கவனத்தில் கொள்வது சிறந்தது.

திருமதி. மீனாட்சி அம்மையாரின் 'இந்தி




யர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' எனும் கவிதை நூல் 1940-05-23ம் திகதி வெளிவரும் வரை (கணேஷ் பிறஸ், டிம்புல ரோட், ஹட்டன்) மலைய கக் கவிதைச் செல்நெறியில் தெளிவான நிலைப்பாட்டுடன் கூடிய கவிதை நூல் ஒன்று இலங்கையில் வெளிவந்ததாகப் பதிவுகள் இல்லை.

தனது நூலுக்கு முகவுரை எழுதியுள்ள மீனாட்சியம்மை மிகத் தெளிவாகவே இத னைக்குறிப்பிடுகிறார்.

'இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிக் கொண்டே போகிறது. இலங்கை வாழ் இந்திய வம் சாவளி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்காக தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வர விருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்க ளிடையே, அதிலும் முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடையே பிரசா ரம் செய்ய வேண்டியது மிகவும் அவசிய மாகும். அத்தகைய பிரசாரம் பாட்டுகள் மூலம் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை இந் தியர்களின் நிலைமையைப் பாட்டுக்கள் மூலம் எடுத்துக்கூற முன்வந்துள்ளேன். இந்தியர்களை தூக்கத்தில் ஆழ்ந்துவி டாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டி எழுப்ப வேண்டும் என்பதே என் அவா'.

மீனாட்சியம்மை போன்று இத்தனைத் தெளிவான முன்வைப்புகளுடன் மேற்படி கவிஞர்கள் எழுதினார்களா? இயங்கினார் களா? என்னும், பதிவுகள் ஏதும் கிடைப் பதாக இல்லை. அந்த வகையில் அம் மையாரின் பாடல்கள் அரசியல் இலக் குகளைக் கொண்டவை. அதுவே அவர் ஈழத்தின் முதலாவது பெண் கவிதை ஆளுமையாக அடையாளம் காணப்படு கிறார்.

முனைவர் பா. ஆனந்தகுமார் மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ள இந்த நூலைப் பதிப்பித்த சங்கீதச் சரபம் டி. சபாபதி முதலியார் பதிப்புரையை பாடலாகவே எழுதி உள்ளார். அதில் ஒரு பகுதி இவ் வாறு அமைகிறது.

*திருவாரூர் தென்தீவில் தேயிலையின்*
*தோட்டமதில்*
*பெருவாரு நமதன்பர் பேதமையால்*
*- ஒருவாரு*

## - மல்லியப்புசந்தி திலகர் -

*பட்டதுயர் பாட்டாக பாடவருள்*
*மாமுகனே*
*திட்டமுடனே பதிப்பித்தேன்.*

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் படும் துயரைப் பதிவு செய்ய வேண்டும் என்ற திட்டத்துடன் இந்த நூல் பதிப்பிக் கப்பட்டமை தெளிவு.

*பாரத தேவியே நீ ஏழை*
*பக்கத் துணைவந்து தக்க வழி தேடு*
*மீறியவர் நடந்தால் இந்த*
*மேதியினிலே வொரே*
*பேதியில் கொண்டுபோ*

துயரத்துக்கு காரணமானவர்கள் 'பேதி யில் போகவேண்டும்' எனப்பேச்சு வழக் கில் வசைபாடும் புலவர், பாடலின் இறு தியில் தேயிலைத் தோட்டத்தை, 'மூதேவி தோட்டமென பழிக்கின்றார். பாடலாசிரி யர் இசுலாமியர் என்றாலும் விநாயகருக் குத் துதிபாடுகின்றார். மாரி, மகமாயியி டம் குறை தீர்க்க வேண்டுகிறார் என்றும் பதிப்புரையில் எழுதுகிறார் பா. ஆனந்த-குமார்.
இந்தக் கவிஞர்கள் மாத்திரமல்ல அப்துல் காதிருப்புலவர் (1866-1916), கொட்டாறப் பாவா, சதக்கத்தம்பி (1916), ஆகியோ ரும் இஸ்லாமியர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறெனினும் இந்த டி.எம். ஜனாப்பா புலவர், யாசீன்தாஸ் புலவர் ஆகிய இருவரும் எழுதியுள்ள இந்த கவிதைநூல் இந்தியாவில் இருந்து வெளி வந்திருந்தாலும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை பற்றிய பாடல் கள் என்ற அடிப்படையில் மலையகக் கவிதை இலக்கிய செல்நெறியில் இணைத் துக் கொள்ள வேண்டியதன் அவசியம் உள்ளது.

தெம்மாங்கு மெட்டில் அமைந்த டி.எம். ஜன்னாப்பு புலவர் இயற்றிய கண்ணிக-ளில் ஒன்று இவ்வாறு அமைகிறது.

*சிங்கப்பூர், பினாங்கு, கண்டி*
*செழிப்பான தேசமென*
*எங்கும்யிந்துகளைப்பார் கனகரத்தினமே*
*கங்காணி*
*ஏமாற்றிக்கொண்டு போரான்*
*திலகரத்தினமே*

இந்த வரிகள் மூலம் இலங்கைக்கு (கண்டி) மட்டுமல்ல சிங்கப்பூர், பினாங்கு (மலேஷியா), ஆகிய நாடுகளுக்கு அழைத் துச் செல்லப்பட்ட இந்தியர்கள் (யிந்துக் களை - என பாடலில் வருகிறது) பற்றி யும் எழுதியுள்ளார்.

மேலும்,

*தாயிதகப்பனைப்போல் தயாளமாய்ப்*
*பேசி அந்த*
*தேயிலைத் தோட்டத்திற்கு*
*தங்கப்பதுமையே கங்காணி*
*திருட்டுத்தனமாய் கொண்டுபோரா*
*ரங்கு வெறுமையே*

*வாயில்லா ஜீவனைப்போல் தேயிலைத்*
*தோட்டத்திலே*
*நாயினுங்கீழ்படிந்து கனகரத்தினமே*
*கங்காணி*
*நடுங்கச்செய்யுரானேவங்கு*
*திலகரத்தினமே.*

*நண்பர்படுந்துயரை நாடறியவே ணுமென*
*அன்பன் டி.எம். ஜன்னாப்பா தங்கப்*
*பதுமையே*
*கலங்காரம் பாடப்பாட யின்னும்*
*புதுமையே*

**தொடர்தல் 50ம் பக்கம்**

# மலையகக் கவிதை...

53ம் பக்கத் தொடர்ச்சி...

என தான் பாடவந்த நோக்கத்தையும் பாட்டிலேயே எழுதிச் செல்கின்றார் ஜனாப்பாபுலவர்.

காருண்ய சாதுமகான் என்ற மெட்டில் பாடல்களை எழுதியுள்ள புலவர் யாசீன் தாஸ் இவ்வாறு எழுதுகிறார்.

*கடலைக்கடந்து கப்பலில்போகலாமா*
*கண்ராவி சும்மா*
*கண்ணிய விரதத் திண்ணிய ரோஷன்*
*எண்ணிய பரத இந்துசு தேசன் (கட)*

*கரும்புத் தேயிலை*
*காப்பிக் கொட்டைத் தோட்டம்*
*கங்காணியர் பாட்டம்*
*கஞ்சி கொடுத்திட கூலிஜனமிட*
*மிஞ்சி வருமுத லாளி செயுமடங் (கட)*

*பிரதேச சஞ்சாரஞ் செய்வதா லிந்தியர்*
*பெருமை பெறுவதுண்டா*
*திரிமேவு மேனியை நம்மவர் பாழாக்கி*
*சிந்திப்ப தாகுமன்றோ*

*சிங்கையில் ரப்பரு கூலிவேலைசும்மா*
*செட்டில்லை யம்மா*
*தெருவைச் சுற்றி யலைவதுசோடி*
*உரவமுற்றிக் குலைவது தேடி (கட)*

*சிங்களதேச லங்கைவிட்டுமீட்டு*
*செய்தமிழ்ப் பாட்டு*
*தித்திக்குமுத்தமிழ் வித்துவ்வாழி*
*பத்திக்கு யாசன் தத்துவ ஆழி (கட)*

சிங்களத் தேசத்தில் இருந்து இவர்களை மீட்க வேண்டும் எனும் அவா புலவர் யாசீன்தாஸின் குரல் ஒலிப்பதைக் கேட்கலாம்.

இந்த இரண்டு கவிஞர்களின் கவிதைகளில் உள்ள பாடுபொருள்களைவிட அதனைப் பதிப்பித்த டி.சபாபதி எழுதிய பதிப்புரைப்பா பல வேறுபட்ட நோக்கத்தில் அமைவதனைக் காணலாம்.




*நல்ல மழையானாலும் ஏழை*
*நண்பர் வேலைசெய்ய வம்பர்*
*துரத்துரார்*
*சூதர் கங்காணிசெய் வாதனையாலங்கு*
*அல்லல் படுவதைப்பார் அந்த*
*ஆதிசேடனாலும் வோதிடலாகாது.*

*வல்லவர் வெள்ளையர் மேல் குற்றம்*
*வராது சொன்னாலும் யேராது புவியில்*
*சொல்லவே நாவுவல்லை - பெரும்*

எனும், வரிகளில் வெள்ளையர்களைவிட கொடுமையானவர்களாக கங்காணிமாரை காணுகிறார்.

மேலும்,

*இந்திய நாடதிலே தொழி*
*லில்லாமல் சென்றாரோ*
*பொல்லாதவ்வூர்களை*
*முந்திவினையின்படி அந்த*
*மூதேவி தோட்டத்தை*
*ஆதாரமாய்க் கொண்டு*
*அந்திப்பகல் தெரியா காட்டில்*
*அன்பர்படும்மகா துன்பத்தைப்போக்க*
*சந்ததம் செந்தமிழால் கவி*
*சாற்றி சபாபதி தூற்றிப் பதிப்பித்தான்.*

என, இந்தப் பாடல்களை தான் பதிப்பிக்கக் காரணம் என்னவென எழுதிச்செல்கிறார். பதிப்பாளர் சபாபதியும் ஒரு கவிஞர் என்ற வகையில், அவரது ஆதங்கங்களும் ஆர்வமும் கூட இந்த நூலில் வெளிப்பட்டு மலையகக்கவிதை இலக்கிய செல் நெறியில் இந்தியாவில் இருந்தவாறே எழுதிய மூன்று கவிஞர்களையும் இந்த நூல் வெளிக்கொண்டு வந்துள்ளது.

மலையக சிறுகதை வரலாற்றை எடுத்து நோக்கும்கோது 'துன்பக்கேணியை' முன் வைத்து எவ்வாறு புதுமைப்பித்தனையும் இணைத்துக் கொள்ளப்படுகிறதோ அதே போல கவிதை வரலாற்றை எடுத்து நோக்கும் போது இந்த மூன்று கவிஞர்களையும் அவர்களது 'தேசமக்களை நாசப்படுத்தும் தேயிலைத்தோட்டப் பாட்டு' கவிதை நூலையும் இணைத்துக் கொள்வதே பொருத்தமானது

(தொடரும்...)



thilagar@thaiveedu.com



# அருச்சுனன் தபசு கூத்து நிகழ்த்து முறை

அருச்சுனன் தபசு கூத்து சமய நம்பிக்கையும், சடங்குகளும் நிறைந்த ஒன்று. இது திரௌபதி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. பல்லாயிரமாண்டுகளாகப் பக்தர்கள் திரௌபதியை ஆதிக் கடவுளான காளியின் மறு அவதாரமாக மட்டுமல்ல, தங்கள் கலாச்சாரம், சடங்குகள், சமூகக்கட்டமைப்பு, சட்டம், அதிகாரம், ஒழுங்கு, சாதிய அமைப்பு, கலை ஆகிய வற்றை ஒழுங்கமைப்பவைகளாகவும் கருதுகின்றனர்.

திரௌபதி வழிபாடு தமிழ்நாட்டின் தொண்டை மாவடங்களில் கி.பி.560-910 ஆகிய காலப் பகுதிக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

கி.பி. 670-700 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டை ஆண்ட பல்லவ மன்னனான முதலாம் பரமேஸ்வரவர்மன் பாரதக் கதையை நாட்டு மக்களுக்குப் படித்துக்காட்ட, தனக்குக் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியைச் செலவிட்டதாகச் செப்பேடுகள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் திரௌபதி அம்மன் திரு விழாவையொட்டி பாரதச் சொற்பொழிவுகள் பதினெட்டு நாட்கள் நடைபெற்று வந்தன.

## மலையகக் கூத்துகள்: 3

ஆனால் மாறுபட்ட சமூகச் சூழ்நிலை காரணமாய் தற்போது எட்டு நாட்கள் பாரதச் சொற்பொழிவும் பத்து நாட்கள் பாரதக் கூத்துகளும் நடைபெறுகின்றன. சில இடங்கள் கூத்துகள் மட்டுமே இடம்பெறுகின்றன. எல்லாக் கூத்துகளும் சமயம் சார்ந்த சடங்குகளைக் கொண்டே அமைந்துள்ளன.

வீமன்வதை, வில்வளைப்பும் திரௌபதி திருமணமும், சுபத்திரை திருமணம், திரௌபதி துகில் உரிதல், அருச்சுனன் தபசு, விராடபருவத்தில் மாடுபிடி சண்டை, கிருஷ்ணன் தூது, அரவான் களபலி, கர்ண மோட்சம் (கர்ணனின் இறப்பு), பதினெட்டாம் நாள் போர் ஆகிய கூத்துகள் நாளுக்கு ஒன்றாக முறையே பத்து நாட்கள் நடைபெறும்.

மலையகத்தில் அருச்சுன்ன தபசு கூத்து ஒருநாள் அல்லது மூன்று நாள் கூத்தாக நடைபெறுகிறது. மாசி மாதத்தில் பொக வந்தலாவ, மஸ்கெலிய, கொட்டைகல, கெக்கல, நிலாவத்தை ஆகிய இடங்களில் இக் கூத்து நடைபெறுகின்றது.


இதற்கென அமைக்கப்படும் ஆடுகளம் வட்டக் களரி அமைப்பை ஒத்திருக்கும். ஆடுகளத்தைச் சுற்றி எல்லாத் திசைகளிலிருந்தும் பார்வையாளர்கள் இக்கூத்தைப் பார்வையிடலாம்.

ஆடுகளம் இருபிரிவுகளைக் கொண்டிருக்கும். கூத்து நடைபெறும் பிரதான களம் இருபது அடி நீளமும், இருபது அடி அகலமும் கொண்டதாய் சாணம் கொண்டு மெழுகப்பட்டிருக்கும். இதன் காப்பரணாக மூன்று பக்கங்களும் கயிற்றினால் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும்.

இதற்கு அருகாமையில் பத்து அடி நீளமும், பத்து அடி அகலமும் கொண்ட, சாணத்தினால் மெழுகப்பட்ட இன்னுமொரு மேடை அமைக்கப்பட்டிருக்கும். இம்மேடையில் அண்ணாவியார், பிற்பாட்டுக்காரர், வாத்தியக் கருவிகள் வாசிப்போர் இருப்பர். நடிகர்கள் இச்சிறிய களத்திலிருந்தே ஆடுகளம் போய் கூத்தாடுவர்.

இக்கூத்திற்கு மத்தளம், தப்பு, உடுக்கு ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப் படும். இவற்றுடன், நடிகர்களின் கால்களில் சலங்கை கட்டப்பட்டிருக்கும். கூத்து நடைபெறும் நாளுக்கு முதல் நாள் ஒருவர் ஊர் வீதிகளில் தப்படித்துச் சென்று கூத்து நடக்க இருப்பதை அறிவிப்பார்.

ஒரு நாள் கூத்து நடைபெற இருக்கும் நாள் அன்று காலையில் நல்ல நேரம் பார்த்து, அருச்சுனன் தபசு செய்வதற்காச் சிறப்பாகத் தயார் செய்யப்பட்ட 30 தொடக்கம் 40 அடி நீளமான ஒரு மரத்



தின் நுனியில் சிறிய மேடை அமைக்கப்பட்டு, அதற்கெனத் தயாரிக்கப்பட்ட குழியில் நடப்படும். மரம் நடப்பட்ட இடத்தைச் சுற்றி மாட்டுச் சாணம் கொண்டு மெழுகப்பட்டிருக்கும்.

மூன்று நாள் கூத்தில் இம்மரம் மூன்றாம் நாள் காலையில் நடப்படும். மரம் நடுவதற்கு முன்னர் இலைகள், பூக்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அன்று காலை நடைபெறும் விசேட ஆராதனையின் பின்னர் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட இடத்தில் நடப்படும்.

கூத்து நடைபெறும் மூன்று நாட்களும் கூத்தில் பங்குகொள்ளும் அனைவரும் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கு விசேட ஆராதனையின் பின்னர் நடிகர்களுக்கு காப்புக் கட்டி நிகழ்வு நடைபெறும். கூத்து பிழைகள் எதுவுமின்றி சிறப்பாக நடைபெற பூசை நடத்தப்படும். அதன் பின்னர் நடிகர்கள் கூத்து நடைபெறும் ஆடுகளத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவர்.

பெரும்பான்மையான கூத்துகளுக்கு, கோயிலில் காப்புக் கட்டு நிறைவேற்றப்பட்டு அங்கிருந்து நிகழ்களத்திற்கு அழைத்து வரப்படுவது வழக்கமான சடங்காகும். இச் சடங்கு நடிகர்களை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றுதலை அடையாளப்படுத்தும். இச்சடங்கு மூன்று நோக்கங்களுக்காகச் செய்யப்படுகிறது.

## - ஞானம் லெம்பட் -

- கூத்து ஆடப்படும் நோக்கமான - 'ஒன்றைப் பெறுதலு'க்கான வேண்டுதல்.
- தவறு ஏதும் இல்லாமல், கூத்து ஒழுங்காக நடைபெறுவதற்கான வேண்டுதல்.
- குறிப்பாக அருச்சுனன் தபசுவில், தபம் முடிந்ததும் அருச்சுனன் கடவுளாக மதிக்கப்படுகிறான். தபம் முடிந்ததும் தபசு மரத்திலிருந்து வீசப்படும் மலர்கள், பழங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கச் செய்யப்படும் வேண்டுதல்.

கோயிற் சடங்குகளினால் நடிகர்களிடையே ஏற்படும் நிலை மாற்றம் - இயல்பு நிலையிலிருந்து மீவியல் (Liminal) நிலை எனப்படும். இதனைச் 'சடங்குகளினால் அவர்களது சிந்தனையில் தானாகத் தூண்டும்

*தொடர்தல் 52ம் பக்கம்*

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# அருச்சுனன் தபசு...

**55ம் பக்கத் தொடர்ச்சி...**

உணர்வு நிலை' என்கிறார் விக்டர் ரேணர் (Victor Turner - 'The Forest of Sympols. Aspects of Ndembu Ritual'). இதை 'இயல்பு நிலையிலிருந்து மீவியல் நிலை அடையும் போது மனிதர்கள் பல புதிய அனுபவங்க ளைப் பெறுகின்றனர். இந்நிலையின் அனு பவங்களை நாவல் வாசித்தல், திரைப்ப டம் பார்த்தல், புராணக்கதைகளை வாசித் தல் போன்றவற்றிலிருந்தும் பெறுவர்... சடங் குகளின் பொது நடைபெறும் சடங்குகள், அங்கு சொல்லப்படும் மந்திரங்கள், வேண் டுதல்கள் முலமாகவும் இயல்புநிலை மாற் றம் நடைபெறும்' என விக்டர் ரேணர் தமது Images of Apt - Temporality என்ற கட்டு ரையில் கூறகிறார்.

கோயிலிலிருந்து நிலைமாற்றம் (உரு) அடைந்த நடிகர்கள் ஆடுகளம் வந்ததும், வியாசருடைய உபதேசத்தைத் தொடர்ந்து தருமர், அருச்சுனனை வாழ்த்தி தவம் செய்ய அனுப்புவதோடு அன்றைய கூத்து நிறைவு பெறும்.

இரண்டாம் நாள் கூத்தும், முதல் நாள் போலவே நடிகர்களுக்காகக் கோயிலிலே பூசை நடத்தப்பட்டு கோயிலிருந்து நடி கர்கள் ஆடுகளத்திற்கு அழைத்து வரப்ப டுவர். இன்றைய நாளில் அருச்சுனன் ஏழு வனங்களைக் கடந்து தவம் செய்ய வரு-கையில் ஏற்படும் இடையூறுகள், சோதனை கள் என்பன நடித்துக் காண்பிக்கப்படும்.

மூன்றாம் நாளும் நடிகர்கள், அவர்களுக் காக நடத்தப்படும் பூசை முடிந்தவுடன் ஆடு களத்திற்கு அழைத்து வரப்படுவர். கூத்து தொடங்க முதல் 'தபசு மரம்' நடும் சடங்கு நடைபெறும் இக்கூத்துக்கென 40 தொடக் கம் 60 அடி நீளமான மரம் வெட்டப்பட்டு, மரத்தின் நுனியில், மரப்பலகையினால் மேடை ஒன்று தயாரிக்கப்பட்டு, பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகளினால் பொருத் தப்பட்டிருக்கும். அடிமரத்திலிருந்து, மரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையை சென்றடைவதற்காக, மரத்தின் அடியிலி ருந்து நுனி வரை பலம் வாய்ந்த மரக் கட்டைகளை மரத்தின் இரண்டு பக்கங் களிலும் உட்செலுத்தி படிக்கட்டுகள் போன்று அமைத்திருப்பர். சோடனை செய்யப்பட்ட இம்மரம் மூன்றாம் நாள் காலை காப்புக் கட்டப்பட்டு, பூசையுடன் 'தபசு மரம்' அதற்கெனத் தயாரிக்கப்பட்ட இடத்தில் நடப்படும். மரம் நடப்பட்ட குழியைச் சுற்றி மாட்டுச் சாணத்தில் மெழுகியிருப் பர். சாணத்தினால் மெழுகுவது, தபசுமர மும் நடப்பட்ட இடமும் புனிதமானது என்பதைக் குறிப்பிடுவதற்காகவே.

இதன் பின்னர், மாலையில் கூத்து ஆரம் பமாகும்.

கூத்தின் ஆரம்ப நிகழ்வாக பேரண்டச்சி அருச்சுனனின் அழகில் மயங்கி அவனை வழிமறித்து தன்னுடன் வர அழைப்பதும், இதனைத் தொடர்ந்து பேரண்டனுடன் நடக்கும் போரும், போரில் மாண்டுபோன பேரண்டனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த லும் நடைபெறும். பின்னர், அருச்சுனன் தபம் செய்ய தபசு மரத்தில் ஏறத் தயா ராகும் போது பூசகர் அருச்சுனனுக்குப் பூசை செய்து, தபசு மரத்திற்குக் கற்பூர வணக்கம் செய்தபின் அருச்சுனன் மரத் தில் தவம் செய்ய ஏறுவார்.

மரத்தில் செய்யப்பட்ட படிக்கட்டுகளில் ஒவ்வொரு படியாக ஏறும் போது அருச் சுனனும் பிற்பாட்டுக்காரரும் பாட்டுகளை மாறி மாறிப்பாடுவர். அருச்சுனன் மேடையை அடைந்ததும் 15 - 20 நிமி டங்கள் வரை தபம் செய்து பின்னர் கீழே இறங்கி வருவார். தபம் செய்யும் போது பறவை ஒன்று வருவதாகவும் அத னைக் கண்டதும் அருச்சுனன் தபத்தை முடிவுக்குக் கொண்டு வருவார் எனவும் கூறப்படுகிறது. அருச்சுனன் மரத்தின் அடியை அடையும் போது சிவனும் பார் வதியும் வந்து அருச்சுனனை ஆசிர்வ தித்து பாசுபதாஸ்திரத்தைக் கொடுப்பது டன் கூத்து நிறைவு பெறும்.

தமிழ்நாட்டில் நடைபெறும் அருச்சுனன் தபசு கூத்தில், அருச்சுனன் பேரண்டனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தபின் இசைக்கரு விகளின் இசையுடன் (சிறப்பாக பம்பை) கோயிலுக்குப் போய் அம்மனை வழி பட்டு ஆசீர் பெற்று, தபசு மரம் நடப் பட்டிருக்கும் இடத்தை வந்தடைவார். இதே வேளை குழந்தைப்பேறு வேண்டும் பெண்கள் தபசு மரத்தைச் சுற்றி, தேங் காய், கற்பூரம், பூக்கள், மாலைகள் சகி தம் நிற்பர். தபசு மரத்தைச் சுற்றிவந் தால் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும் என்பது அவர்களது நம்பிக்கை.

கோயில் வழிபாட்டின்பின் தபசு மரத்தை வந்தடைந்த அருச்சுனன், தபசு மரத்தை மூன்று முறைகள் சுற்றியபின், மரத்தில் ஒவ்வொரு படியாகப் பாடிக்கொண்டு உச்சியை அடைவார். மர உச்சிக்குத் தவம் செய்யச் செல்கையில் சிறிய பை ஒன்றில் தேங்காய், எலுமிச்சம் பழம், வெற்றிலை, பாக்கு, பூக்கள், வில்வம் இலை, கற்பூரம், நெருப்புப் பெட்டி என் பவற்றை எடுத்துச் செல்வார். மர உச் சியில் உள்ள மேடையில் தபம் செய்து கொண்டிருக்கையில் வேட உருவெடுத்த சிவபெருமான் நிலத்தில் நின்று கொண்டு பன்றியைக் கொன்றது நீயல்ல, நானே என்று வாதிட்டுச் சண்டை செய்வார். இச் சண்டையின்போது அருச்சுனன் மர உச் சியில் உள்ள மேடையிலும் வேட உரு விலுள்ள சிவபெருமான் மரத்தின் அடியி லும் நிற்பர். வேட உருவில் நிற்பது சிவ-பெருமான் என்பதை அருச்சுனன் உணர்ந் ததும் தேங்காய் உடைத்துக் கற்பூரம் எரித்துப் பூசை செய்து, தான் கொண்டு சென்ற பூக்கள், பழங்கள் என்பவற்றைக் கீழே உள்ள மக்களை நோக்கி எறிந்த பின் மரத்திலிருந்து கீழிறங்கி வந்து, சிவன் - பார்வதி ஆகியோரிடம் மன்னிப் புக் கோரி அவர்களை வணங்கி அவர் களிடமிருந்து பாசுபதால்திரத்தைப் பெறு வதுடன் கூத்து நிறைவு பெறும்.

மட்டக்களப்பு பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில் திருவிழாவில் நடை-பெறும் அருச்சுனன் தபசுக்கூத்தில், காவி உடை அணிந்த அருச்சுனன் கோயி லில் இருந்து, பூசாரிமார் பாட வெளியே வந்து சந்தன மண்டபத்தினுள் இருக்கும் தருமரை மூன்றுமுறை வணங்கித் தருமரி டம் ஆசி பெற்றுத் தவம் செய்யப் புறப் படுவார். அருச்சுனன் கோயில் வீதியை அடைந்ததும் பேரண்டச்சி அருச்சுனனை வழிமறித்து ஆடுவாள். அருச்சுனன் அவளை மறுத்துத் தவம் செய்யப் போகையில் பன்றி ஒன்று அருச்சுன னுக்கு முன்னால் அங்கும் இங்கும் ஓடும். இறுதியாக பன்றி மீது அருச்சுனன் அம்பை எய்துவிட்டு ஏணியில் ஏறி தவ நிலையை அடைவார். தபம் முடிந்ததும் மக்களை நோக்கி வாழைப் பழங்களை எறிந்து விட்டு, சங்கை ஊதிய பின் மரத் திலிருந்து கீழ் இறங்கி வருவார். வந்து, வசந்த மண்டபத்திலுள்ள தருமரிடம் போய் நடந்தவற்றைக் கூறுவதுடன் அருச்சுனன் தபசு கூத்து முடிவுறும் எனக் கலாநிதி மௌனகுரு கூறுகி-றார்.

(தொடரும்)



gnanam.lambert@thaiveedu.com

OUR FREE SERVICES

WHY? REALTOR KATHIR

For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

LOW Commission

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

SELL WITH KATHIR
& GET MAX. PRICE

Buy with Kathir & Get Dream Home

HomeLife/Future Realty Inc.,
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462



# FOR SALE/ LEASE

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

கனவு இல்லம்

கைகளில் வர...

உங்கள் வீடு விற்பனை முகவர்...



Outstanding Agent for Outstanding Results.

RE/MAX Excel Realty Ltd., Brokerage*

Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave, Suite 120, Markham, ON L3R 0B3

*Independently Owned And Operated

Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.

RAJ NADARAJAH

SALES REPRESENTATIVE

DIR: 416.333.6115

nanohomes@gmail.com



# மலைகளும் அதை வரைய முற்படும் திலகரும்

- க. பத்திநாதன் -

இந்திய வம்சாவழியினராக பதிதல்.

**தோழர் திலகரின் கோரோனாக் கால அறுவடையான ‘மலைகளை வரைதல்’ நூலின் மீதான பார்வை:**

மலையகத்தின் ஆழமான ஆளுகைகளுள் ஒருவரான திலகர் தான் வாசித்த 21 ஆங்கில நூல்களின் அறிமுகக் குறிப்பே இந்நூல்.

இலக்கியவாதியாகவும் அரசியல் வாதியாகவும் காணப்படும் இலக்கிய அரசியல் வாதிக்கான அத்துணை நற்திறத்தன்மைகளையும் தப்ப விடாது வடித்தாக்கப்பட்டுள்ள முற்போக்கு இலக்கியமாகப் படைத்துள்ளார் தோழர் திலக்.

அரசியல் என்பதனை வெறுமனே வரலாற்றுக்கான நகர்வாகப் பார்ப்பதை விட வரலாறு, மானுடவியல், தொல்லியல், ஒளிப்படம், ஓவியம், நாட்டார் வாய்மொழிப் பாடல்கள், அரங்கு, சட்ட வரைபுகள் போன்ற பல பரந்துபட்ட வியாக்கியானிப்புக்கு ஊடாக இவர் அனுகியிருப்பதானது ஆசிரியரின் இலக்கிய, மொழி, சமூகப் புலமைகளை நன்குணர்த்தி நிற்கின்றது.

இவற்றை எல்லாம் காலனீய நீக்கச் சிந்தனையுடன் அணுகியிருப்பதே இப்படைப்பின் உச்சச் சிறப்பு.

நூலுக்கான முன்னுரையிலேயே ‘ஆசியாவின் கண்ணீர்ச் சொட்டான இலங்கையானது சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் விளையாட்டுத்திடலாகக் காணப்படுகின்றது...’ என்னும் வரிகளே உதாரணம்.

பலதரப்பட்ட இலக்கிய வகைகள், பாணிகள் என்று இன்று இலக்கிய உலகம் சென்று கொண்டிருப்பதற்கு உதாரணமாக இந்நூலில் வரும் The indo - lankans எனும் (coffee table book) நூலின் வடிவத்தைக் கூறலாம்.

அதாவது இந்நூலானது கிட்டத்தட்ட 200 வருட கால வரலாற்றுப் புகைப்படங்களைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.

அதிலே மலையக மக்களின் மானிடவியல் பார்வையூடாக அரசியல் பேசப்பட்டுள்ளது.

இது போன்றே ‘நினைவுக்காப்பகம்’ எனும் நூல் பற்றியும் சொல்ல வேண்டியுள்ளது. அதாவது இந்நூல் பிரபலமான எழுபது நபர்களின் நினைவுச் சின்னங்களை வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளது.

இதிலே 1958 காலத்தில் இடம் பெற்ற இனமோதல் காலத்தில் தென்னிலங்கையில் தமிழர்களை சிங்களவர்கள் தாக்கும் வண்ணம் ஒவ்வொருவரது வீடுகளிலும் தமிழர்கள் உண்டா என அதட்டலாக கேட்பார்களாம். இவ்வேளை ஆண் இல்லாத குடும்பப் பெண் தனது வாயிலில் ‘அ(ப்)பி சிங்கள’ என பதாகை தொங்க விட, பின்னாளில் அவ்வீடு அப்பி சிங்கள வீடென்றெ அடையளம் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதுபோன்ற நிலைமைகள் தான் உள்ளூர் அரசியல் வீரியத்தைக் ஆழ்ந்துரைக்கத் தக்கன.

இவ்வாறே மலையகத்தின் கவிதைத் தாயான சி. வேலுப்பிள்ளையின் கவிதைகளை வைத்தும் இவர் அரசியல் பேசுகிறார்.

*‘...களத்தில் அவர்கள் இறங்கையிலே*
*கலையும் தேனிக்கூடுகளில்*
*துளிகளாய் சொட்டும் தேனதுவே*
*கலக்கும் அவர்தம் வேர்வைத்துளிகளுடன்*
*...வாழ்க்கை இரத்தம் ஓடுவது*
*அந்த நிலத்தை அழகாய் ஆக்கிடவே*
*யாருக்கோ சொர்க்கம் ஆகிடவே.’*

இவ்வரிகளே போதும் அவற்றிக்குச் சான்று பகிர.

இவ்வாறெ வாய்மொழி இலக்கியம் பற்றிய ‘கருகிய தாலாட்டு’ எனும் இ. வெலண்டைன் டேனியலின் நூலிலே திலகர் கண்டெடுத்த அரசியல் நோக்கிற்கு பின்வரும் வாய்மொழி இலக்கிய வரிகள் அடையாளமே.

*‘அடியோடு வெட்டினான் ஆசாமி*
*வெள்ளையன் முடியோட சாஞ்சானா*
*- ஏஞ்சாமி*
*தொண்டையனும் தாய்வாதும் வளரட்டும்*
*- மாமி*
*போட்டு புதைஞ்ச வரலாற்ற சொல்லுது*
*- கச்சாமி.’*

எனும் வாய்மொழிப் பாடலானது அன்றைய காலத்தில் வி.கே. வெள்ளையன், எஸ். தொண்டமான் போன்றோரின் அரசியல் முறுகல் மற்றும் வி.கே. வெள்ளையனின் மரணம் என்பவற்றை எள்ளி நகையாடும் வாக்கரசியல் பொதிந்த வாய்மொழிப் பாடலாகும்.

அடுத்து யனுசியா எனும் பெண்ணின் ஓவியச் சிந்தனையைக் கொண்ட ஓவியத்தை வைத்தும் அரசியல் பேசப் படுகின்றது.

அதாவது அப்பெண் சீகிரிய ஓவியப் பெண்களை மலையகப் பெண்களோடு ஒப்பிட்டு வரைந்தாக்கி இருப்பது மிக நுணுக்கமான, மக்களின் வாழ்க்கை அரசியலைப் பேசுகின்றது. அதாவது ‘வேலை முடித்து வேலைக்குப் போகும் பெண்கள்...’

அடுத்து அரங்கக்காரரான சி. ஜெயசங்கரின் ‘ஒரு கட்டியக்காரனின் பேரிகை’ எனும் நூலிற் பொதிந்துள்ள காலனீய அரசியல் பார்வையும் கூறுதற்கரியதே. இதற்கு அவரின் மலையகத்தின் பல்கலைக்கழக உரையாடலும், பின்வரும் கவி எழுத்துக்களும் சான்றாகும்.

*‘நமது அறிவினில் தங்கியிருப்போம்*
*நமது திறமையில் தங்கியிருப்போம்*
*நமது நிலத்தினில் விதைப்போம்*
*நமது அறுவடையில் வாழ்வோம்....’*

இது போல் இன்னுமுள நூலில்.

இன்று வரைக்கும் மலையகம் என்றவுடன் ஒழுக்கு வீடும், குளவிக் கொட்டும், 1000 ரூபாய் சம்பள உயர்வுப் போராட்டமுமே ஊடகங்கள் உட்பட ஊரவர்கள் அறிந்து வைத்திருக்கும் பொறித்த விடயத்தகவல்கள்.

ஆனால்...

1931 ஆம் ஆண்டில் இருந்தே பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமை,

உளூராட்சி சபைகளின் சாதாரண பாதை வேலைகள் தொடக்கம் மறுக்கப்பட்டுள்ள சட்ட வரைபு.

40 ரூபாயில் இருந்து 1000 வரையான சம்பள உயர்வுப் போராட்டம்.

இன்று வரை பிறப்புச் சான்றிதழிலே இந்திய வம்சாவழியினராக பதிதல்.

வெள்ளையர்கள் நாட்டை கொடுத்துச் சென்றவுடன் இலங்கையர்கள் தமக்குள்ளே தேடிய அடிமைகளாக மலையக மக்களைப் பதம் பார்த்தமை.

சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்த வெடிப்புக் காலத்தில் போலித் தமிழ் தேசிய வாதிகள் பாதுகாப்புக் கொடுப்பதாக மலையக மக்களை தமது பிரதேசங்களில் அன்றைய கால மிருகங்களின் காப்பரனாகவும் பின்னைய கால யுத்த காப்பரனாகவும் பலியாக்கப்பட்டமை.

போன்ற பல உண்மைகளைச் சுமந்து வரைந்துள்ளது ‘மலைகளை வரைதல்’ பனுவல்.


அது மட்டுமல்லாமல் தோட்டத்தமிழர்கள், பெருந்தோட்டத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், மலையகத்தின் பல்கலைக்கழம் போன்ற பெறுங்கதையாடல் சொற்தெளிவுகளையும் வரைந்தே விடுகின்றது இப்பிரதி.

தோழர் திலகர் அவர்கள் இந்நூலை இன்னும் பரந்துபட்ட வியாக்கியானிப்புடன் விரித்தளிப்பது அவர் சமுகம் சார்ந்தும், மானுட சமூகம் சார்ந்தும் மீளாத பயனைத் தரும்.



pathinathan@thaiveedu.com





# 1ST MORTGAGE SPECIALS

5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details



# 2ND MORTGAGE SPECIALS

Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust · Scotiabank · Street Capital Bank of Canada · First National Financial LP · MCAP · ICICI Bank · MERIX

## Suren Nathan AMP

Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



-digi Media Creations-

# இளவாலை எஸ். ஜெகதீசனின் 'தகவலில் தெரிந்தவை'

**- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் -**

உலகத்துறையில் தன் காத்திரமான பங்களிப்பினூடே ஐந்து தசாப்தங்களாகத் தொடர்ந்து எழுத்துலகில் பயணித்து வருபவர் இளவாலை எஸ். ஜெகதீசன் அவர்கள். ஆர்ப்பரிக்கும் தம் தமிழை ஆர்ப்பாட்டமின்றி எமக்குத் தரும் எஸ்.ஜெகதீசனின் அண்மைய மின்னூலான தகவலில் தெரிந்தவை நம் பண்புறு தேசமாம் கனடாவின் 153வது பிறந்த நாளில் (2020.07.01) வெளியிடப்பெற்றமை குறித்ததோர் பகிர்வும் பதிவும் இது.

'செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்' என்ற பேரறிஞர் பெர்னார்ட் ஷாவின் வார்த்தைகள் எத்துணை சாஸ்வதமானவை என்பதை 'தெரிந்தவை' தெளிவாக்கியிருக்கின்றது.

'இதுவரை கட்டுரையாளனாகவும், நூலாசிரியராகவும் இருந்துள்ளேன். இந்நூல் மூலம் வடிவமைப்பாளராகவும், வெளியீட்டாளராகவும் புதிய அவதாரம் எடுத்துள்ளேன். முன் அட்டையில் இருந்து பின் அட்டைவரை இருக்கும் எனது உழைப்பு கர்வம் ஊட்டவில்லை. மாறாக, முதல் அடி எடுத்துவைக்கும் குழந்தையின் மகிழ்வைப் போல... சொல்லமுடியாதது.' இளவாலை ஜெகதீசனார் மொழி தரு தெளிவிது.

எஸ்.ஜெகதீசன் அவர்கள் 1971ல் யாழ்ப்பாணம் ஈழநாடு பண்ணையில் இணைந்து நான்காண்டுகள் பணியாற்றியதோடு ஆரம்பித்த அவர்தம் ஊடக வேட்கை இலண்டனில் இலண்டன் முரசு பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று தம் எட்டாண்டு அயரா உழைப்பினூடு அதன் உச்சம் தொடவைத்துத் தொடர்ந்தது.

தேடலே ஆசிரியரின் நோக்காக, London School of Journalism இவர் ஆற்றலைப் புடம் போட்டு மெருகேற்றியது. லண்டன் முரசு பத்திரிகை உதவி ஆசிரியராக இருந்தவாறே, The Evening News நாளேட்டில் பல்வேறு ஆக்கங்களைப் படைத்த வாறு, சம காலத்திலேயே சிங்கப்பூர் தமிழ் நேசன், தமிழகத்து சாவி என்பனவற்றின் லண்டன் பிரதிநிதியாக தமது ஆற்றலை வியாபகப்படுத்திக்கொண்டார்.


எஸ். ஜெகதீசன் அவர்கள் 1986-87 கால இடையில் மீண்டும் தாயகம் திரும்பிய போது யாழ் உதயன், அதன் ஞாயிறு வெளியீடான சஞ்சீவி ஆகிய பத்திரிகைகள் இவரைத் தக்கவாறு பயன்படுத்திச் சிறப்புப் பெற்றுக்கொண்டன.

1987ல் இவர் நோர்வே வந்தபோது, 'கதிரவன்' உதயமாகினான். UNHCR வெளியீடான Refuge பன்மொழிக் காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றிருந்தார். 'Tidens Krav' என்ற நோர்வேஜியப் பத்திரிகை இவரது ஆளுமையை மேலும் வலுவாக்கியது. இப்பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தில், மொழிமாற்றுப் பகுதிப் பொறுப்பாளராய் செயற்பட்டு அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பெற்றமை இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய தொன்று.

கனடா வந்த ஜெகதீசன், 1993ல் பொதிகை என்ற கலை, இலக்கிய மாசிகையை சிறப்புற தொடங்கி நடத்திவந்தார். பொதிகை முதலாவது இதழும், இதன் பின்னான கருத்துப் பரிமாறலும் ஜெகதீசனின் நண்பனாய் என்னை மாற்றியது. எனது சிறுகதையான இலையுதிர் காலம் எங்களின் நட்பை நிரந்தரமாக்கியது.

நம்நாடு பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்ட வேளை, எனது பெயரைச் சிபாரிசு செய்தும், எனது மதிப்பிற்குரிய ஆசான் இளவாலையூர். எஸ். இராசநாயகம் அவர்கள் தமது அடிச்சுவடுகள் நூலுக்கு அறிமுகவுரை எழுத வேண்டி எஸ். ஜெகதீசன் அவர்களை நாடியபோது, 'உங்களை, என்னைவிட மேலாக நேசிப்பவர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன். அவரிடம் கேட்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்' என தனக்கு வாய்த்த சந்தர்ப்பத்தை எனக்காக விதந்துரைத்து விட்டுக்கொடுத்தவர்.

அரிக்கன் லாம்(Hurricane Lamp)பின் திரி எரிந்து அணையும் தறுவாயில் திரிதூண்டியினால் திரியைக் கொஞ்சம் உயர்த்தி



விடும்போதுதான் மீண்டும் திரி எரிந்து வெளிச்சம் கொடுக்கும். திரியாய் இருக்கும் என்னை திரிதூண்டியாய் இருந்து இயக்குபவர் 'தேன்தமிழ் தென்றல்' ஜெகதீசனாரே. இலக்கிய உலகில் நடைமுறை வாழ்வும், எழுத்தும் வேறுவேறாகிப்போன இன்றைய பொருண்மிய உலகில், மிக எளிமையான வாழ்வினையும், அருமையான கோட்பாடுகளையும் கொண்ட ஒரு மனிதத்தை நட்பாகப் பெற்றது என் பாக்கியமே.

ஊடகராய்த் தம் பணியை ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகளை எட்டும் இன்றைய நிலையிலும் மிகுந்த தன்னடக்கத்துடனும், தன்னைத் தாழ்த்தி ஏனையோரை உயர்த்திப் போற்றுவதிலும் அன்றும், இன்றும் மாறாமலேயிருக்கும் இவரது மானுடப் பண்பு, இவர் கைவரப்பெற்ற தமிழினும் சிறப்புடைத்தே என்பது என் முடிபு.

கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக இவர் பாஞ்சாலனாக மறைந்திருந்து நடத்திய ஓர் எழுத்து, ஈர் எழுத்து புதிர் போட்டிகள் மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப்பெற்று விளங்கியதோடு, இவரது தமிழ்ப் புலமையையும் பறைசாற்றியது.

இளவாலை சென்.ஹெண்ட்ரீஸ், தெல்லிப்பளை மகாஜன கல்லூரிகளில் கல்வி கற்ற இவர் தாம் பிறந்த மண்ணையும், பயின்ற கல்லூரிகளையும் அபரிமிதமாக நேசிப்பவர். அட்டமட்டை சந்திப்பில் ஆண்டாண்டு காலமாய் நிழல் பரப்பி நின்ற ஆலமரம் அண்மையில் வெட்டிச்சாய்க்கப்பட்டபோது, கொலை செய்யப்பட்ட ஆலமரம் என்ற தலைப்பிலே தம் மனக்கொதிப்பை வெளிப்படுத்திய ஈரமானசுக்காரர் இந்த இளவாலை ஜெகதீசன்.

நன்கு அறியப்பெற்ற எழுத்தாளர் அந்தனி ஜீவா தென்றலார் எஸ்.ஜெகதீசனின் அர்த்தங்கள் ஆயிரம் நூல் குறித்து மல்லிகையில் குறிப்பிடும்போது, 'பொருள் புதிது, முறை புதிது, நடை புதிது என்று படித்தவுடன் மனதில் தோன்றியது. சந்திப்பு இலக்கியம் என்ற புதினத்தை - புதுமை இலக்கியத்தை சிருஷ்டித்துத் தந்துள்ளார் லண்டனில் இருந்து விடுமுறையைக்கழிக்க வந்த நம்மவர்' என்று வியப்பு மேலோங்க குறிப்பிடுகிறார்.

'கனடாவில் வெளியான சஞ்சிகைகளில் இளவாலை எஸ்.ஜெகதீசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பொதிகைக்கு குறிப்பிடத்தக்கதோர் இடமுண்டு. ஜெகதீசனை நினைத்தால் என் நினைவுக்கு வருபவை ஈழநாடு வாரமலரில் அவர் எழுதிய நேர்காணல்களே. அவரது நேர்காணல்கள் தனித்துவம் வாய்ந்தவை.' என்கிறார் நமக்கு நன்கு பரிச்சயமான எழுத்தாளர் வ.ந. கிரிதரன் அவர்கள்.

இவ்வெழுத்தாளரின் பல்வேறு முயற்சிகளில்




சிறுகதைத் தொகுப்பான பிராயச்சித்தம், வாழ்க்கை வரலாறான கவிநாயகர் கந்தவனம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. பாஞ்சாலன், சரமாவதி பத்மவியூகன், பொன்னம்மா தங்கப்பன், வாஞ்சிநாதன், பூவாத்தா, சிவபுரன், ஜெகமலர் எனப் பல்வேறு பெயர்களில் பத்திரிகைகளில் ஒளிந்திருந்து களமாடியிருக்கிறார்.

'ஜெகதீசனார் பிரபலங்களைப் பேட்டி காண்பதில் சமர்த்தர். இலண்டன் முரசில் பணியாற்றிய காலத்தில் அவரது செவ்விகள் சந்திப்பு இலக்கியங்களாகவே பரிணமித்தன. முதல்வர் எம்.ஜி.ஆர்., நாஞ்சிலார், போன்ற பிரபல அரசியல்வாதிகள், கிருபானந்தவாரியார் போன்ற ஆன்மீக வாதிகள், டி.எம். சௌந்திரராஜன் போன்ற பின்னணிப்பாடகர்கள் யாபேரையும் சிறப்புப் பேட்டிகண்ட பெருமை இவருக்கு உண்டென்று மகாஜன கல்லூரியின் முன்னாள் அதிபர் மதிப்பிற்குரிய பொ. கனகசபாபதி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

'ஜெகதீசனின் எழுத்துக்களைப் படிக்கிற போது நெஞ்சு நிறையும். ஜெகதீசனை எனக்குப் பிடிக்கிறது. எதை எழுதினாலும் எப்படி எழுதினாலும் எனக்குப் பிடிக்கிறது. எடுத்த விஷயத்தை மட்டும் விபரமாக எழுதுகிறார். எளிமையாக, அளவாக, நிறைவாக எழுதுகிறார். வாசித்து நேசிக்க வைத்தவர் திருச்செல்வம். நேசித்து வாசிக்க வைத்தவர் ஜெகதீசன்.' நிதர்சனமான இந்த வார்த்தைகளால் நினைவில் நிலைக்கும் இதயவுரையை நிலை பெறச் செய்தவர் முதுபெரும் பத்திரிகையாளர் திரு. ஈ.கே. ராஜகோபால்.

மூபத்து ஆண்டுகளாய், முறையாய் தரம் பேணி, நிறைவாய், குறித்த தேதியில் வாசகர்களைச் சென்றடையும் தமிழர் தகவல் மாசிகையின் முதன்மை ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் அவர்கள், ஆழ அகலம் கொண்ட ஊடக உலகையும், வாச மல்லித் தமிழ் தரு ஊடக உருவையும் அறுசிறு பக்கலில் அடைத்துக்கொண்டவர். முன்மூன்று தசாப்த வளர்ச்சி, அடுத்த தசாப்த எழுச்சி, நிகழ் தசாப்த முதிர்ச்சி என அளவான வார்த்தைகளால் வாசகரையும், வாசமல்லியையும் நிறைத்து நிற்கும் வரமாகப் பெற்ற வாழ்த்துரை.

'மேன்மையுறும் மேடைகள்' ஆக்கத்தின் வளமான வார்த்தைகளின் வண்ணத்தில் வசப்பட்டு 'காதோடு காதாக' அரவணைத்து அறி முகத்துக்கு உரை செய்துள்ளார் டாக்டர். கதிர் துரைசிங்கம் அவர்கள். இருபத்தைந்து ஆண்டு இதய நிறை நட்பின் இறுக்கத்தையும், தமிழர் தகவலின் பத்தாம் பக்கத்து இலகு நடை, அழகு தமிழ், அடுக்கு மொழி பற்றிய ஆச்சரியத்தையும், தாம் சார்ந்த வட்டம் சிறிதெனினும், அதன் மட்டம் மிகப் பெரிதென நிரூபணம் செய்தமை சிறப்புடைத்தே.

தமிழர் தகவலுக்கான இவரது மொத்தப் படைப்புக்கள் 139. இவற்றுள் 'கனடாவின் சுவை' முதல் 'கனடாவில் கல்யாண வைபோகம்' ஈறாக இருபத்தைந்து ஆக்கங்கள் இந்நூலில் இடம்பிடித்துள்ளன. 'தொட்டுவிட வேண்டியவற்றை விட்டுவிடாமலும், விட்டுவிட வேண்டியவற்றை தொட்டுவிடாமலும்' என்ற அவரது சொல்லாடலாலேயே அவரது சொல்லாளும் ஆற்றலைச் சுட்டப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

தகவலில் தெரிந்தவை இதயவுரை, வாழ்த்துரை, அறிமுகவுரை, ஆசிரியருரை நீங்கலாக 306 பக்கங்களில் கனடாவின் சுவை தொட்டு கல்யாண வைபோகம் ஈறாக இருபத்தைந்து தகவற் கட்டுகள் கொண்ட பொக்கிஷமாய் பொலிந்திருக்கிறது. தமிழர் தகவல் மாசிகையில் ஏலவே வந்த போது, வாசித்து நேசித்தவற்றை மீண்டும் நேசித்து வாசிக்குமாறு நேயமாய்க் கையளித்திருக்கும் எஸ். ஜெகதீசனாரை எல்லோரும் இறுக்கியே தழுவிக்கொண்டனர். கொண்டாடி வருகின்றனர்.

'கனடாவின் சுவை' கொள்ளுதற்கு நல் அவல். சர்வதேச உணவுதினம் பற்றிப் பேசுபவர் Taste of India, Taste of Danforth, street fest, kottu fest எல்லாம் பேசி உடல் ஆரோக்கியத்தோடு நிறைவு செய்கிறார்.

'தேன் நிலவின் தலை நகரம்' தேன் தமிழ் ஊற்று. அனைத்து நீர் வீழ்ச்சிகளும் அண்ணாந்து பார்க்கவைத்தாலும், நயாகரா மட்டுமே குனிந்து பார்க்க வைக்கிறதென்பார். நிர்மலமான ரகசியமாய், அம்பலமான அதிசயமாய் வீழுகின்ற அருவிக்கு வார்த்தைகளின் வர்ணத்தில் நிறமூட்டும் வித்தைக்காரரிவர்.

'தீபாவளி' தமிழில் முழ்கியே கொண்டாடத் தந்திருப்பது. தீபாவளிக்கென விசேட நாணயமும், தபால் தலையும் வெளியிட்ட கனடாவையும், முதன்முதலில் விசேட தபால்தலை வெளியிட்ட சிங்கப்பூரையும் எமக்கு எடுத்துச்சொல்லி மனசினில் ஒட்டிக் கொள்கிறார். தாமாய் மூழ்கி எடுக்கும் முத்துக்கள் மேலும் தம் மனங்களை மெருகூட்டும் என்பதனால் உங்களை இடைமறிக்க இதற்கு மேலும் மனமொப்பாததால் இத்துடன் நிறுத்துகிறேன்.

தேன் கலந்து, பால் கலந்து திரட்டித்த தந்த படையல். தேன்தமிழ் தென்றலாரின் தகவலில் தெரிந்தவை எங்களுக்கோர் அகவல். இளவாலை எஸ். ஜெகதீசன் தம் தமிழால் என்றும் எம் இளவல். இளவாலை ஜெகதீசன் மின்னூலகம் இன்னுமின்னும் பன்னூல்கள் படைக்க வேண்டும். நாம் அவற்றைப் படித்துக் களிப்புற வேண்டும். இவையாவும் சாத்தியமாக. இயற்கை அன்னையே எங்களுக்கு கரம் தருவாய்.

jegatheesan@thaiveedu.com



# Move on with REON

RE/ON

**Homes Realty Inc.**
**Brokerage**

*Living in your Own Home.*
*It's a gift.™*

- ☑ FREE MARKET EVALUATION
- ☑ 24 HRS MLS LISTING
- ☑ PROFESSIONAL PHOTOGRAPHY & VIRTUAL TOUR
- ☑ HIGHEST VALUE FOR YOUR PROPERTY
- ☑ COMPETITIVE COMMISSION STRUCTURE
- ☑ OPEN HOUSES
- ☑ PROFESSIONAL HOME STAGING

## FOR SALE







## FOR SALE







## COVID-19 MORTGAGE PAYMENT TOOLS

$$$-Short-term mortgage payment deferral:
Your lender may agree to pause or suspend your mortgage payments for a certain amount of time.

$$$-Extending the original repayment period (amortization):
An extension to your original amortization period can lower your monthly mortgage payments.

$$$-Adding any missed payments (arrears) to the mortgage balance:Your lender may be able to add missed payments to your mortgage balance and spread them over the remaining mortgage repayment period.

$$$-Moving from a variable to a fixed interest rate mortgage:
Converting a variable interest rate mortgage to a fixed interest rate mortgage in order to protect you from a sudden interest rate increase, should one occur.
Special payment arrangement:

$$$-There may be a special payment arrangement unique to your particular financial situation.



**Uthayan Aiyadurai**
Sales Representative
**416.999.3555**



**Jeyanthe Sritharan**
Broker
**416.918.5872**



**Seelan Siva Aiyadurai**
Broker
**416.451.0271**

வீடு விற்க வாங்க

**BUY. SELL. INVEST**

25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 **905.209.8080** **www.reon.ca**

# சார்லஸ் புக்கோவ்ஸ்கியின் அஞ்சல் நிலையம்


- தெளிவத்தை ஜோசப் -

ஆறு நாவல்கள் எழுதியுள்ள அமேரிக்க எழுத்தாளரான சார்லஸ் புக்கோவ்ஸ்கிக்கு தேசியப்புகழை பெற்றுத்தந்த நாவல் அஞ்சல் நிலையம் (Charles Bukowski Post office). இந்தப் போஸ்ட் ஆபீஸ் என்னும் நாவலை புக்கோவ்ஸ்கி, மூன்றே வாரங்களில் மூச்சைப் பிடித்துக் கொண்டு எழுதி முடித்துள்ளார் என்னும் குறிப்பு ஆச்சர்யத்தை மட்டுமல் மன நடுக்கத்தையும் தருகின்றது.

ஹென்றி சார்லஸ் புக்கோவ்ஸ்கி என்பது இவருடைய முழுப் பெயர். ஜெர்மனியில் பிறந்து தனது முழுவாழ்நாளையும் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கழித்தவர். அவர் வாழ்ந்த லொஸ் ஏங்சுல்ஸின் சமூக காலசார மற்றும் பொருளாதார சூழ்விளைவுகளின் பாதிப்பு அவரது படைப்புக்களில் பொதிந்திருக்கும். இவருடைய 'ஏழை மக்களின் எளிய வாழ்வு', 'அடிமைத்தொழில்', 'குடி', 'பெண்களுடனான தொடர்புகள்' போன்றவை ஒரு கூர்மையுடன் பேசும் எழுத்துக்கள். 74 ஆண்டுகள் வாழ்ந்த இவர் (1920 - 1994) ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துடன் வாழ்ந்திருக்கின்றார். இவருடைய படைப்புக்கள் நாவல் - சிறுகதை - கவிதை - என்னும் இலக்கிய வடிவங்களின் 60க்கும் மேலான நூல்களாக வெளி வந்திருக்கின்றன.


'அமெரிக்க கீழ்நிலை வாழ்வின் அரச வைக் கவிஞன்' என்று புகோவ்ஸ்கிக்கு புகழாரம் சூட்டியிருக்கிறது 'ரைம்' பத்திரிகை.

அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர் என்று இவரை புகழ்ந்துள்ளார் ழீன் பால் சார்த்தர். ஒரு தலை சிறந்த நாவலாசிரியராக நாம் அறிமுகம் செய்ய முனையும் சார்லஸ் புக்கோவ்ஸ்கி ஒரு கவிஞராகவும் புகழ் மகுடங்கள் சுட்டப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தரும் ஆச்சர்யமே.




சார்லஸ் புக்கோவ்ஸ்கி

ஆயிரக்கணக்கான கவிதைகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் ஆறு நாவல்களும் படைத்துள்ளாவர் இவர்.




1971ல் வெளிவந்த போஸ்ட் ஆபீஸ் 45 ஆண்டுகளின்பின் 2016ல் 'அஞ்சல் நிலையம்' என்று தமிழில் மொழிமாற்றம் பெற்றிருக்கிறது. பொள்ளாச்சி 'எதிர்' வெளியீடு பதிப்பித்திருக்கும் புக்கோவ்ஸ்கியின் Post Office நாவலை தமிழில் தந்திருப்பவர் மதுரையைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி இளைஞரான பாலகுமார் விஜயராமன்.

மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் பொறியியல் பட்டமும் மேலாண்மைத்துறையில் பட்ட மேற்படிப்பும் முடித்துள்ள பாலகுமார் விஜயராமன் மத்திய அரசு நிறுவனத்தில் தொலைத் தொடர்பு பொறியாளராக பணியாற்றுகிறார். 28 வயது இளைஞரான இவர் சிறுகதை, கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். மொழிபெயர்ப்புப் பணிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றார்.




250 பக்கங்களில் அழகிய வடிவமைப்புடன் வெளிவந்திருக்கும் இந்த நாவல் (வடிவமைப்பு - ரவீந்திரன் என்றிருக்கிறது - பாராட்டுக்கள்) சின்னச்சின்ன அத்தியாயங்கள் கொண்டதான 6 பெரும் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இப்படைப்பு ஒரு புனைவு. இது யாருக்கும் சமர்ப்பணம் செய்யப்படவில்லை என்னும் குறிப்பும் இருக்கிறது! ஆனாலும் இது புனைவு என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் இப்பு தினம் ஹென்றி சார்ள்ஸ் புகோவ்ஸ்கியின் சுயசரிதையாகவே கருதப்படுகின்றது.

புகோவ்ஸ்கி பல ஆண்டுகள் அஞ்சல் நிலையத்தில் தபாற்காரராகவே உத்தியோகம் வகித்திருக்கின்றார்.

இந்த நாவலின் ஆரம்பமே ஹென்றி சின்னாஸ்கி என்னும் நாவல் நாயகன் ஒரு தபால் பட்டுவாடா செய்பவனாகப் பதவியில் இணைவதுடனேயே தொடங்குகிறது. 'அது கிருஸ்துமஸ் பண்டிகைக் காலம். அக்காலங்களில் தற்காலிகப் பணிகளுக்காக அருகிலுள்ள யாரையாவது கூலிக்கு அழைத்துக் கொள்வார்கள் என்பதை ஒரு குடிகாரன் மூலம் அறிந்து கொண்டு, அங்கே ஆஜரானேன். அடுத்த நிமிடம் இந்தத் தோற்பையை முதுகில் சுமந்து கொண்டு மலை ஏறிக்கொண்டிருந்தேன். கிருஸ்த்துமஸ் அட்டைகளை அவற்றின் முகவரியிலுள்ள அஞ்சல் பெட்டிகளில் சேர்ப்பிப்பதே வேலை. என்ன வொரு மென்மையான வேலை என ஆரம்பித்த சின்னாஸ்கி மெது மெதுவாக அந்தத் தொழிலின் அசுரங்களை உணரத் தொடங்குகின்றான்.

அங்கு ஜோன்ஸ்டோன் என்ற மேற்பார்வையாளன் இருந்தான். சரியான முரடன். எப்போதும் கருஞ்சிவப்பு சட்டைகளையே அணிவான். அவை அபாயம், இரத்தம் ஆகியவைகளின் குறியீடுகளாம். அடிமழை நாட்களிலும் வெப்ப அலை உச்சத்தில் நிற்கும் காலங்களிலும் அஞ்சல் சுமை இரண்டு மடங்காக இருக்கும். பாரவண்டியில் அனுப்பவேண்டிய பொதிகளை முதுகில் சுமந்து கொண்டு மலை-யேறவேண்டும்.

நாங்கள் வழித்தடங்களில் எத்தனை சிரமங்கள் மேற்கொண்டாலும், உணவு உட்கொள்ள நேரம் கிடைக்காவிட்டாலும், சாலையில் செத்துச் சுண்ணாம்பாகிக் கிடந்தாலும் ஜோன்ஸ்டோனுக்கு எந்தக் கவலையுமில்லை. சுழல் நாற்காலியில் சுற்றியபடி, இரவுப் பணிக்கும் ஆர்டர் இடுவான். நிரந்தரப் பணியாளர்களும், அவர்கள் சங்கமும் எதற்கும் லாயக்கில்லை. நாங்கள் அவனை ஸ்டோன் என்றே எங்களுக்குள் பேசிக்கொள்வோம்' என்றெழுதுகின்றார் புகோவ்ஸ்கி.

எனது விடுமுறை தினமொன்றில் முப்பது பக்கப் 'புகார்' ஒன்றைத் தயார் செய்து எடுத்துக் கொண்டு மத்திய அலுவலகம் சென்றேன்.

'3 வாரம் வேலை செய்யும் நீ 30 வருடம் அஞ்சல் துறையில் பணியாற்றும் ஜோன்ஸ்டோன் பற்றி புகாரளிக்கின்றாயோ' என்று புகார் கடிதங்களை முகத்தில் வீசுகின்றார் மத்திய அதிகாரி. 'இவரும் அவனும் ஒன்றாகப் படுத்துக்கிடந்தான்களோ தெரியவில்லை' என முனகியபடி வெளியேறுகிறான் சின்னஸ்கி.

புகோவ்ஸ்கியின் உருவே கதாநாயகன் சின்னஸ்கியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் பல இன்னல்களுக்கு மத்தியில் பணியாற்றி ராஜினாமா செய்து மீண்டும், தபால் சேவையில் இணைந்து பத்து வருடம் போல் பணியாற்றி ஓய்வுக்காக ராஜினாமா செய்வதுடன் நாவல் முடிகிறது.

1965 டிசம்பரில் பிளக் ஸ்பேரோ பிரஸ் என்னும் பதிப்பகத்தை ஆரம்பித்த ஜோன் மார்டின் என்பவர் 1969ல் புகோவ்ஸ்கியின் படைப்புக்களை பதிப்பிக்க விரும்புவதாகவும் அதற்காக அவருக்கு வாழும் வரைக்கும் மாதம் 100 டொலர் சன்மானம் தருவதாகவும் உறுதியளித்தார். ஆனால் அஞ்சல் துறையிலிருந்து ராஜினாமா செய்து விட்டு தன்னுடன் முழுநேர எழுத்தாளராக வேண்டும். என்பது நிபந்தனை. அதற்கு ஒப்புக்கொண்ட புக்கோவ்ஸ்கி வேலையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

ஜோன் மார்டினின் பதிப்பகத்துக்காக இவர் எழுதிய முதல் நாவல்தான் அவரது வாழ்க்கைச் சரிதமான அஞ்சன் நிலையம்.

வாசித்துப் பார்க்கவேண்டிய ஒரு அருமையான புனைவு இது.



theliwathai.joseph@thaiveedu.com

# BUYERS

## If Yathavann Doesn't Negotiate at Least

## $10,000 Off The List Price,

## He'll Give You $2000 Cash on Closing.

**FREE Home Inspection When You Buy With Us.**

# Sellers

## Your Home SOLD in 60 Days Guaranteed!

## OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My
**Exclusive Guaranteed** Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

**Free Home Evaluation.**
**No Cost. No Obligations**

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474



# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மத்தியகால இலங்கையில் பௌத்த மடாலங்களும் சொத்துடமை உறவுகளும்

- பேராசிரியர் அமரதாச லியனகமகே -
தமிழில் க. சண்முகலிங்கம்

பேராசிரியர் குணவர்த்தன அவர்கள் 'இலங்கை வரலாற்றின் முந்து மத்திய காலத்தில் மடாலயங்களும் பொருளாதார நலன்களும்' (Monasticism and Economic Interest in Early Medieval SriLanka) என்றும் விடயப்பொருள் பற்றிய ஆய்வு நூலை எழுதியுள்ளார். இந்நூலுக்கு அவர் 'உழவும் துறவும்' (Robe and the plough) என்னும் கவர்ச்சியானதும், சுவாரசியமானதுமான தலைப்பை வைத்துக் கொண்டார். லண்டன் பல்கலைக்கழகத்திற்கு கலாநிதி பட்டத்திற்காக சமர்ப்பித்த ஆய்வேட்டை அவர் திருத்தியும் விரிவாக்கியும் மேற்குறிப்பிட்ட நூலாக வெளியிட்டார். 377 பக்கங்களுடைய இந்நூல் அறிவாளுமை மிக்க பண்பட்ட ஆய்வாளர் ஒருவரின் அரும் படைப்பாகும். இலங்கையின் பௌத்த சமய வரலாற்றின் முக்கிய விடயம் ஒன்றினைப் பற்றிய இந்நூல் பெறுமதிமிக்கது. அதன் சிறப்பினை எடுத்துக் கூறும் வகையில் இவ்விமர்சனக் கட்டுரை அமைந்துள்ளது.


குணவர்த்தன அவர்கள் 'இலங்கையில் பௌத்த சமயத்தின் வரலாறு' என்ற பொதுப்பட்ட விரிந்த தலைப்பைத் தவிர்த்துள்ளார். இவருக்கு முந்திய ஆய்வாளர் சிலர் இவ்விரிந்த தலைப்பில் ஆய்வுகளை எழுதினர். ஆயினும், குணவர்த்தன அவர்களின் நூலின் உள்ளடக்கமும் அணுகுமுறையும் விரிந்ததாகவே அமைந்துள்ளது. இவருடைய ஆய்வுக்குரிய காலப்பகுதியாக கி.பி.833 தொடக்கம் 1215 வரை என வரையறை செய்துள்ளார். இக்காலம் முதலாம் சேன மன்னன் ஆட்சி பீடம் ஏறியது முதல் மாகனின் படையெடுப்பு வரையான காலமாகும். இவ்வகையில் 'அனுராதபுர காலம்' என்பதன் கடைசி நூற்றாண்டையும் 'பொலன்நறுவ காலம் என்பதனையும் ஒன்றிணைத்துள்ளார். 'அனுராதபுர காலம்', 'பொலன்றுவ காலம்' என்ற பிரிப்பை அனுசரிக்காது இருகாலப்பகுதிகளையும் அவர் இணைத்துப் பார்க்கிறார். உண்மையில் பௌத்த சமய வரலாற்றில் இருகாலப் பகுதிகளிற்கும் இடையில் தொடர்ச்சி உள்ளதே அன்றி இடைவெளி இருக்கவில்லை. ஆதலால் அவரது ஆய்வுக்காலப்பகுதி பற்றிய தெரிவில் தவறு ஏதும் இல்லை. மாகனின் படையெடுப்பு நிகழ்ந்த ஆண்டாகிய 1215ஐ தன் ஆய்வுக்கான காலப்பகுதயின் மேல் எல்லையாக குணவர்த்தன வகுத்துக் கொண்டார். இவ்வாண்டு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. வரலாற்று வளர்ச்சியில் இது ஒரு தெளிவான பிரிகோடு ஆகும். தொடக்க ஆண்டான கி.பி.833 இவ்வாறு தெளிவான ஒரு எல்லைக்கோடு எனக்கூற முடியாது. ஆயினும் அவ்வாண்டைத் தேர்ந்து கொண்டமைக்குச் சில காரணங்களை குணவர்த்தன கூறுகிறார்.

## பௌத்த மடாலயங்கள் சொத்துடமை நிறுவனங்களாதல்:

கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே, கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் பௌத்த மடாலயங்கள் சொத்துடமை நிறுவனங்களாக வளர்ச்சியடைந்திருந்தன. காணிகளை விற்றல், கொள்வனவு செய்தல், குத்தகைக்கு நெற்காணிகளை கொடுத்தலும் குத்தகைக்காரர்களுடனான உறவுகளும், உரிமைகள் கடப்பாடுகள் என்பனவும் உள்ளடங்கிய சொத்துடமை உறவுகளின் சிக்கலான வலையமைப்பு கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதலே இலங்கையில் வளர்ச்சியுற்றிருந்தது. விநயபிடகத்தின் உரைநூலான 'சமன்தபாசாதிக'வில் இருந்து குணவர்த்தன அவர்கள் எடுத்துக்காட்டும் இரண்டு மேற்கோள் பந்திகள் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகின்றன. இம் மேற்கோள்களின் உள்ளடக்கத்தை தமிழில் பின்வருமாறு எளிமைப்படுத்திய மொழி பெயர்ப்பாகக் கூறலாம்.

**முதலாவது மேற்கோள்:**

இம்மேற்கோள் மடாலயத்திற்கு சொந்தமான தென்னந்தோட்டம் பற்றியது. இத்தோட்டம் மடாலயத்திற்கு மிகவும் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் இருந்தது. அதைப் பராமரிக்க நியமிக்கப்பட்ட பணியாள் (கப்பியாக்காரக) தோட்டத்தில் கிடைக்கும் விளைபொருட்களில் பெரும்பங்கை தாமே




நுகர்வுத் தேவைக்கு எடுத்துவந்தார். அவரது தேவைக்கு மிகையானவற்றை அவர் மடாலயத்திற்கு ஒப்படைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஒப்படைப்பதற்கு ஆகும் வண்டிக்கூலி போக எஞ்சுவது மிக அற்பமானதாகவே இருக்கும். தென்னந் தோட்டம் அமைந்துள்ள பகுதியைச் சேர்ந்த கிராமவாசிகள் சிலர் மடாலயத்திற்கு கிட்டிய இடத்தில் ஒரு தென்னந் தோட்டத்தை தமது உடைமையாக வைத்திருக்கிறார்கள். தூரத்தில் உள்ள தென்னந் தோட்டத்தினை இவர்களுக்கு கொடுத்து விட்டு, அவர்களின் தென்னந்தோட்டத்தை மடாலயம் பதிலீடாக பெற்றுக்கொள்வது மடாலயத்திற்கு நன்மையானது என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்ளலாமா? மடாலயத்தின் சொத்தை இவ்வாறு பரிமாற்றம் செய்து கொள்வதற்கான நடைமுறை விதிகள் பற்றி 'விநய' என்ன கூறுகிறது? 'சங்க' அமைப்பு இந்த பரிமாற்றத்தை ஏற்றுக்கொள்ளுமாயின் இது ஏற்புடையது என்பதே இதற்கான விடையாகும்.

**இரண்டாவது மேற்கோள்:**

சங்கவிற்கு சொந்தமான காணி ஒன்றில், 'சங்க'விற்கு உதவ முன்வந்த மக்கள் அங்கே ஒரு குளத்தைக் கட்டினார்கள். அக் குளத்தில் இருந்து நீர்ப்பாசனம் செய்து பயிர்களைப் பயிரிட்டார்கள். அதன் விளைவில் 'உரிய பங்கினை' மடாலயத்திற்கு அம்மக்கள் கொடுத்துவந்தனர். இதனை மடாலயம் ஏற்றுக்கொண்டது முறையானதே. இந்த விடயங்களை பரிபாலிப்பதற்கு ஒரு பணியாளரை நியமிக்கும்படி கேட்டபோது மடாலயம் பணியாளரை நியமனம் செய்தது. சில ஆண்டுகள் கடந்தபின் அரச வரியை அறவிடுவோரின் வரி அறவிடுதல் தொல்லை காரணமாக வரிகட்ட முடியாதவர்களாய் குறித்த பகுதியின் மக்கள் காணியைக் கைவிட்டு வெளியேறி வேறிடம் சென்றுவிட்டனர். கைவிடப்பட்ட அக்காணியில் புதிய ஆட்கள் வந்து அக்காணிகளைப் பிடித்து பயிர் விளைவிக்கத் தொடங்கினர். ஆனால் புதியவர்கள் மடாலயத்தின் துறவிகளுக்கு தமது விளைபொருளில் உரிய பங்கை செலுத்தமறுத்து வந்தவர்கள் இந்நிலையில் மடாலயத்திற்குச் சொந்தமான காணியில் கட்டப்பட்ட குளத்தின் நீரை திறந்துவிடாமல் தடுக்க முடியுமா? ஆம். தடுத்து நிறுத்தலாம். இதனை உழவு நடைபெறும் காலத்திலேயே தடுத்துவிடவேண்டும். ஆனால் காணிக்காரர்கள் விதைத்துப் பயிராக்கிய போது தண்ணீரைக் கொடுக்காமல் தடைசெய்யக்கூடாது. இப்பிணக்கு எழுந்த போது காணிக்காரர்கள் கூறினார்கள். 'ஐயன்மீர்' எமக்கு முந்தி இக்காணியைப் பயிரிட்டவர்கள் குளத்தில் இருந்து நீரைப் பெற்றார்கள் அல்லவா? ஏன் இப்போது எம்மைத் தடுக்கின்றீர்கள்? அவர்கள் இவ்வாறு முறையிட்டபோது, 'முன்பு பயிரிட்டவர்கள் இன்னவாறு பௌத்த பிக்குகளுக்கு பொருட்களைக் கொடுத்து உதவினார்கள்' என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள் 'ஐயன்மீர் நாமும்' அவ்வாறே தருகின்றோம் என்றனர். அதன்படி நீர்ப்பாசனம் அனுமதிக்கப்பட்டது.

விநய பிடகத்தின் விளக்கவுரையான 'சமன்தபாசாதிகா'வின் மேற்குறித்த இரு எடுத்துக்காட்டுக்கள் சொத்துடமை உறவுகள் மிகுந்த வளர்ச்சியைப் பெற்றிருந்த நிலையை எடுத்துக் காட்டுகின்றன. கி.பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மேற் குறித்த நூலில் உள்ள இவ்விளக்கம் அக்காலத்திலேயே மடாலயங்கள் பெரும் சொத்துடமை நிறுவனங்களாக வளர்ச்சியடைந்திருந்தன. என்பதை எடுத்துக்காட்டுகின்றன. 'சங்கவும் மடாலயச் சொத்துக்களும்' என்ற தலைப்பில் 41 பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ள சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும் போது கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் சங்கவின் சொத்துடமை எவ்வளவுக்கு வளர்ந்திருந்திருந்தது என்பதைக் காணலாம். குணவர்த்தன அவர்கள் இத் தலைப்பில் உள்ள அத்தியாயத்தின் பிற் பகுதியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் மடாலய நில உடைமைமுறை மிகவும் உச்ச நிலைக்கு வளர்ச்சியுற்றிருந்ததை எடுத்துக் காட்டுகிறார். முதலாம் சேனன் காலத்தின் பிந்திய வளர்ச்சிகளை கல்வெட்டுச் சான்றுகள் கொண்டும் குணவர்த்தன ஆதாரப் படுத்துகிறார். பௌத்த துறவிகளுக்காக சொத்துக்களை தானமாகக் கொடுத்தலை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலக் கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. அனுராதபுர அரசுக் காலத்தில் பயிர்ச்செய்கைக் காணிகள், நீர்ப்பாய்ச்சல் குளங்கள், ஏனயை வகைச் சொத்துக்கள் என்பனவற்றை மடாலயங்களுக்குத் தானமாக வழங்கியதைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்டுத்துகின்றன.

இலங்கையில் நீர்ப்பாசன அபிவிருத்தி ஏற்பட்டு வந்த போது, சமாந்தரமாக மடாலயங்களின் காணிகளும், வயல்களும் ஆகிய சொத்துக்கள் அதிகரித்து சென்றதைக் காணலாம். அவை மிகப்பெரும் சொத்துடமை நிறுவனங்களாக வளர்ச்சியுற்றன. இவ்வளர்ச்சிகள் காரணமாக சங்க அமைப்பு முகாமைத்துவ நிபுணத்துவத்தைப் பெற்ற நிறுவனமாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 1000 ஆண்டுகளின் வளர்ச்சியை இக்காலப்பகுதியின் இடையில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'சமந்தபாசாதிக' தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் பிற்கால வளர்ச்சிகளை எடுத்துக்கூறும் சான்றுகளோடு ஒப்பிடும்போது முற்பகுதிக்குரிய சான்றுகள் குறைவாகவே உள்ளன. குணவர்த்தன அவர்கள் தாம் வகுத்துக் கொண்ட கால எல்லைக்கு முற்பட்ட கி.பி. 5ஆம் நூற்றாண்டு நூலாகிய சமந்தபாசாதிகவுடன் தான் தொடக்க விசாரணைகளை ஆரம்பிப்பது பொருத்தமானதாகவே படுகிறது.

## 'உழவும் துறவும்' நூலின் உள்ளடக்கம்:

'உழவும் துறவும்' (Robe and the Plough) நூலை பத்து அத்தியாயங்களைக் கொண்

*தொடர்தல் 62ம் பக்கம்*

# மத்தியகால...

61ம் பக்கத் தொடர்ச்சி...

டுள்ளது. அவை வருமாறு:

1 சங்கவின் கட்டமைப்பு.

2 சங்கவும் மடாலயச் சொத்துக்களும்.

3 மடாலயச் சொத்துக்களின் முகாமை.

4 மடாலயங்களின் துறவிகளின் வாழ்க்கையும், சமயிகளுடன் (Laity) அவர்களுக்கு இருந்த உறவுகளும்.

5 சங்கவும் அரசனும்.

6 வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்.

7 வெளிநாட்டுப் பௌத்த சமய நிறுவனங்களுடன் சங்க கொண்டிருந்த உறவுகள்.

8 சங்க அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் - எட்டு நிகாயக்ககளின் தோற்றம்.

9 சங்கவை ஒன்றிணைத்தல் - அதன் முக்கியத்துவம்.

10 முடிவுரை.

மேற்குறித்த உள்ளடக்கத்தை நோக்கும் போது இலங்கையின் பௌத்த சமயத்தின் வளர்ச்சியும் வரலாறும் குறித்த ஏறக்குறைய அனைத்து விடயங்களையும் இந்நூல் உள்ளடக்கியிருப்பதைக் காணலாம். கலைகள், கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் என்பன மட்டுமே உள்ளடக்கப்படாத விடயங்களாகும். பத்து அத்தியாயங்களில். 2, 3, 5 ஆம் அத்தியாயங்கள் பொருளாதார உறவுகள் பற்றியவை, 1, 4, 6, 7, 8, 9 ஆம் அத்தியாயங்கள் மடாலயங்கள் பற்றியவை. நூலின் மூன்றில் ஒரு பகுதி பொருளாதாரம் பற்றியதாகவும், மூன்றில் இரண்டுபகுதி மடாலயங்கள் பற்றியதாகவும் உள்ளன. ஆகவே உழவு, துறவு என்ற இரண்டில் துறவு குறித்தே கூடிய பக்கங்களை நூலாசிரியர் ஒதுக்கியுள்ளார் எனலாம். இதனை நாம் நூலின் குறையாக கருதமுடியாது. உழவு பற்றிய மூன்று அதிகாரங்களும் ஆய்வின் தரத்தால் மிக உயர்ந்தனவாக அமைந்து, எமது வரலாற்றறிவை மேம்படுத்தியுள்ளது. ஆகவே நூலில் ஒரு சமநிலை பேணப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

## சங்கவின் கட்டமைப்பு:

முதலாவது அத்தியாயம் சங்கவின் கட்டமைப்பை விளக்குகிறது. சங்கவில் மகாவிகாரை, அபயகிரி விகாரை, யேதவன விகாரை என்ற மூன்று பிரிவுகள் இருந்தன. கல்வெட்டுக்களும், பிற சான்றுகளும் சங்க மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றனவேனும், நாட்டின் பல பாகங்களிலும் வதிந்த பிக்குகள் இம் மூன்று சங்க பிரிவுகளில் ஏதோ ஒன்றில் இணைந்திருந்தார்கள் என்று கொள்ளத் தேவையில்லை என நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அனுராதபுரத்தில் அமைந்திருந்த இந்த மூன்று மடாலயங்களில் மகாவிகரையில், பிக்குகளின் பெரும்பங்கினர் இணைந்திருந்தனர். புவியியல் ரீதியான பரம்பலிலும் மகாவிகாரையே முதலிடம் பெற்றிருந்தது அபயகிரி, யேதவன என்பனவற்றிற்கு தூர இடங்களின் துறவிகளுடனான தொடர்பு மகாவிகாரையோடு ஒப்பிடுமிடத்துக் குறைவாகவே காணப்பட்டது. இம்மூன்று விகாரைகளுள் மகாவிகாரையும், அபயகிரியும் விசேடமான தனித்துவ இயல்புகளை உடையவை. துறவிகளுள் பெரும்பான்மையினர் மகாவிகாரையைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். அபயகிரி விகாரையின் போதனைகள் எவ்வாறு மகாவிகாரையினது போதனைகளில் இருந்து வேறுபடுகின்றன என்பதையும் குணவர்த்தன முதலாவது அத்தியாயத்தில் விளக்குகிறார். இவ்விரு விகாரைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் பெரும்பங்கு ஒழுக்கவிதிகள் (விநய) தொடர்பானவையே, பௌத்த தத்துவம் சார்ந்தனவல்ல என்பதையும் நூலாசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

அபயகிரிவிகாரை தேரவாதம் அல்லாத பிறபௌத்த சமயப் பிரிவுகள் தொடர்பாக சகிப்புத்தன்மை கொண்டதாக இருந்தது. அபயகிரி விகாரையில் மகாயான பிரிவின் 'வேதுவவாத'க் கொள்கைப் பிரிவினர் கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் தங்கியிருந்தனர், அங்கு மகாயான, தேரவாத ஆகிய இருபிரிவுகளையும் சேர்ந்தோர் தங்கியிருந்து கல்வி கற்றனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் அபயகிரி விகாரையில் தாந்திரிக நடைமுறைகள் பின்பற்றப்பட்டமைக்கும் ஆதாரம் உள்ளது. மகாவிகாரைப் பிக்குகள் தாந்திரிக நடைமுறைகளை வெறுத்தொதுக்கினர்.

**அபயகிரி விகாரை:**

அபயகிரி விகாரை பற்றி குணவர்த்தன அவர்களின் கூற்றை கீழே மேற்கோளாகத் தருகின்றோம்.

'அபயகிரி விகாரையில் மகாயான, தாந்திரிக ஆகிய கொள்கைப் பிரிவினரான பிக்குகளும் வாழ்ந்து வந்தனர். ஆயினும் இவ்விகாரை தேரவாத பௌத்த நிகாயவில் ஒன்றாகவே விளங்கியது. இதனை அவ்வாறே இந்தியாவின் சமகால பௌத்த நூலாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். அபயகிரி விகாரைப் பிக்குகள் தேரவாதம் அல்லாத பிற பிரிவினரைப் புறமொதுக்காது அனுசரித்து வந்தனர். ஏனைய பிரிவினரை தமது விகாரையில் கல்வி கற்பதற்கு அனுமதித்தனர். மகாயான, தாந்திரிகம் ஆகிய பிரிவினரை தமது விகாரையில் தங்கியிருப்பதற்கும் அவர்கள் அனுமதித்திருந்தனர். அபயகிரி விகாரைப் பிக்குகள் தத்துவம், புலமைசார் ஆய்வுகள் என்பன தொடர்பான பல்வேறு போக்குகளையும் கருத்துக்களையும் ஆதரித்து ஊக்கம் கொடுத்தனர் ஆகையால் அத்தகைய ஒரு விகாரையில் திட்டவட்டமான ஒரு கொள்கைக்கு யாவரும் கட்டுப்படவேண்டும் என்ற நிபந்தனை இருந்திருக்க முடியாது. கருத்துச் சுதந்திரம் அங்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் அபயகிரி விகாரையினர் மகாவிகாரையில் இருந்து தாம் வேறானர்வர்கள் என்ற தனித்துவ அடையாளத்தை உருவாக்கிக் கொண்டிருந்தனர். (பக் 32)

அபயகிரி விகாரையின் இயல்புகளை மேற் குறித்தவாறு தொகுத்துரைக்கும் நூலாசிரியர் தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறார்.

'அபயகிரி விகாரையில் இணைந்திருந்த மகாயான, தாந்திரிக பிக்குகள் சிறுபான்மையான ஒரு குழுவாகவே இருந்திருக்க வேண்டும். ஆகையால் இவர்கள் முக்கியத்துவமற்ற சிறுகுழுவாகவே இருந்தனர் என்றும் கருதலாம். மகாவிகாரைக்கு எதிரான அறைகூவல், அபயகிரி விகாரையின் தேரவாதப் பிரிவினரிடமிருந்தே எழுந்தது. மகாவிகாரை பிக்குகள் தமது ஆதாரமாகக் கொண்ட பௌத்த சமய நூல்களுக்கு அபயகிரி விகாரையினர் வேறுபட்ட விளக்கங்களை கூறினர். ஆகையால் மகாவிகாரையினர் அபயகிரி பிக்குகளின் 'திரிபுவாத'க் கருத்துக்களை எதிர்த்து வந்ததோடு, அவர்களின் கருத்துக்கள் தமக்கு ஆபத்தானவை யெனவும் கருதலாயினர்' (பக் 32)

## சங்கவும் மடாலயச் சொத்துக்களும்:

மடாலயச் சொத்துக்களின் நிர்வாகம் தொடர்பான சிக்கலான பிரச்சினைகளை அத்தியாயம் 2, 3, 5 என்பனவற்றில் குணவர்த்தன ஆராய்கிறார். இம்மூன்று அத்தியாயங்களும் நூலின் பிரதான பகுதிகளாகும். சொத்துக்களின் நிர்வாகம் பற்றிய முக்கிய கூறுகளை அடுத்து நோக்குவோம்.

**புரவலர்களான அரசர்கள்:**

பௌத்தசமயம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு அறிமுகமான காலம் தொட்டு இலங்கையின் அரசர்கள் சங்க அமைப்பின் புரவலர்களாக இருந்து வந்தனர். இவ்வாறு மடாலயங்களை அரசர்கள், பல நூற்றாண்டுகளாகப் போஷித்து வந்தமையால் மடாலயங்களின் இயல்பில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. மடாலயங்களுக்கு கிராமங்கள் பல நிவந்தமாகக் கொடுக்கப்பட்டன. வயல் நிலங்களும், குளங்களும், ஏனைய உற்பத்திச் சாதனங்களான சொத்துக்களும் மடாலயங்களுக்கு வழங்கப்பட்டன. மடாலயங்கள் பெரும் சொத்துடமை நிறுவனங்களாயின.

> **"மடாலயங்களிற்கு வழங்கப்பட்ட காணிகளில் அரச அதிகாரிகள் அனுமதியின்றி நுழைய முடியாது. வரி அறவிட முடியாது போன்ற காப்புரிமைகளும் அரசர்களால் வழங்கப்பட்டன. இக்காரணத்தால் மடாலயங்கள் அரசு ஒன்றின் எல்லைக்குள் அமைந்த ஒரு சிற்றரசின் நிலையை ஒத்தனவாய் இருந்தன."**

**முரண்பாடு:**

பௌத்த பிக்குகள் சமூக பொருளாதார பிணைப்புகளின் இருந்து விடுதலை பெற்றவர்களாகவும், உலகியல் விடயங்களில் கருத்துச் செலுத்தாது ஆன்ம விடுதலையை இலட்சியமாகக் கொண்டு துறவு மார்க்கத்தில் ஈடுபடுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் இத்துறவிகள் சொத்து டமை நிறுவனங்களின் தலைவர்களாகவும், நிர்வாகிகளாகவும் செயற்பட்டு வந்த நிலையில் கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையிலான முரண்பாடு இருந்துள்ளதைக் காணலாம்.

**துறவிகளின் அதிகாரம்:**

மடாலயங்களிற்கு வழங்கப்பட்ட காணிகளில் அரச அதிகாரிகள் அனுமதியின்றி நுழைய முடியாது. வரி அறவிட முடியாது போன்ற காப்புரிமைகளும் அரசர்களால் வழங்கப்பட்டன. இக்காரணத்தால் மடாலயங்கள் அரசு ஒன்றின் எல்லைக்குள் அமைந்த ஒரு சிற்றரசின் நிலையை (A mini-state within the state) ஒத்தனவாய் இருந்தன.

**நிர்வாகக் கட்டமைப்பு:**

மடாலயங்கள் விரிவான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்தன. 'கமதன்' என அழைக்கப்படும் நிர்வாகக் குழு ஒன்றின் கீழ் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாக இயந்திரம் இயங்கியது. 'கமதன்' நிர்வாகக் குழுவில் எட்டு முக்கிய உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களின் பதவிப் பெயர்களை விரிவஞ்சி (இம்மொழி பெயர்ப்பில்) தவிர்த்துள்ளோம். அப்பதவிப் பெயர்கள் சில குறிந்த பதவிகளின் கடமைகளைச் சுட்டுவனவாய் அமைந்தன. எட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவின் தலைவராக மடாலயத்தின் தலைமைப்பிக்கு விளங்கினார் என ஊகிக்க முடிகிறது. இவர் மேற்பார்வை அதிகாரமுடைய உயர் அதிகாரியாவர். ஏனைய ஏழு உறுப்பினர்களும் துறவிகளல்லாத உத்தியோகத்தர்களாவர். இவர்களுள் தலைமைப் பிக்குவிற்கு அடுத்த நிலையில் இருந்தவர் பிரதம நிர்வாகியாகச் செயற்பட்டார். மூன்றாம் நிலையில் இருந்தவர் சட்டங்கள், விதிகள் நடைமுறைகள் பற்றிய நிபுணத்துவம் உடையவராய் இருந்தனர். நான்காவதாக வருமானத்தை அறவிடுபவரும், ஐந்தாவதாக கணக்காளரும் இருந்தனர். ஏனைய மூவரதும் கடமைப் பொறுப்புகள் தெளிவற்றனவாக உள்ளன.

**உத்தியோகத்தர்களின் ஊதியம்:**

நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களான உத்தியோகத்தர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு நிலங்கள் தானமாக வழங்கப்பட்டது. நெல், பொன் என்பனவும் ஊதியமாக வழங்கப்பட்டன.

**மடாலயங்களின் ஆளணி:**

பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்கள் பெரிய மடாலயங்களில் வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்தனர். உதாரணமாக சேதிய கிரி மடாலயத்தில் 170க்கு மேற்பட்ட பணியாளர்கள் வேலைசெய்தனர். சிற்பக் கலைஞர்கள், வர்ணம் பூசுவோர், குயவர்கள், தச்சர்கள், சமையல் காரர்கள், துணிவெளுப்போர் எனப் பல்வகைத் தொழில்களைச் செய்வோர் - மடாலயங்களில் பணி செய்தனர். இப்பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்காக காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. சில கிராமங்களும் இத்தேவைக்காகத் தானமாக வழங்கப்பட்டிருந்தன.

**கணக்கு வைப்பு முறை:**

மடாலயத்திற்கு வருவாய்தரும் சொத்துகள் உடைமைகள் என்பன பற்றியும், வாடகை வரி போன்றவை பற்றியும் முறையான பதிவேடுகள் பேணப்பட்டன. வரவு செலவு பற்றிய கணக்கு வைப்புமுறை நடைமுறையில் இருந்து வந்தது.

மத்திய கால இலங்கையில் மடாலயங்களின் நிர்வாகக் கட்டமைப்பும், முகாமைத்துவ ஒழுங்கமைப்பும் வியப்பையும் பிரமிப்பையும் தருவனவாக இருந்தன.

## குறிப்பு:

(பேராசிரியர் குணவர்த்தன அவர்களின் Robe and The Plough: Monasticism and Economic Interest in Early Medieval Sri Lanka என்னும் நூல் 1979 இல் University of Arizona Press வெளியீடாகப் பிரசுரிக்கப்பட்டது. பௌத்த துறவிகள் தமது துறவு வாழ்க்கையுடன், மடாலயச் சொத்துக்களினை நிர்வகிக்கும் நிலப் பிரபுக்களாகவும், அரசின் மீது செல்வாக்கை செலுத்தும் பலம் மிக்க குழுவினராகவும் இருந்தனர் என்பதை இந்நூல் விளக்கிக் கூறியுள்ளது. மடாலய நிலப்பிரபுத்துவம். (Monastic Landlordism), அரசும் சமயமும் என்னும் இருவிடயங்களையும் விரிவாக ஆராயும் இந்நூல் பற்றிய மதிப்புரையை எழுதிய காலஞ்சென்ற அமரதாச லியனகமகே, வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியராகப் பதவி வகித்தவர். Society State and religion in premodern Srilanka என்ற அவரது நூலின் 7 ஆவது அத்தியாயமாக இடம் பெறும் மதிப்புரைக் கட்டுரையின் முதற் 10 பக்கங்களின் சுருக்கிய தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.



shanmugalingam@thaiveedu.com

# FOR ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS

RESIDETIAL & COMMERCIAL INVESTMENT

## Nobody in the world sells more real estate than RE/MAX

### FOR SELLERS

- Free Home Market Evaluation
- Professional Home Staging
- Professional Photos & Virtual Tour
- Best Value for Your Property
- Weekly Open House Until Sold
- Social Media Marketing
- Newspaper & Flyer Advertisement
- Competitive Commission Structure

### FOR BUYERS

- Top Negotiator
- Desired Property For Less Price
- Professional Advice
- Assist with Mortgage, Inspection & Lawyers

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE REALTY INC., BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

ArunDavidBala@gmail.com
416.270.1111 416.270.7000
3-1286 KENNEDY ROAD, TORONTO, ON M1P 2L5



**For All Your Real Estate & Mortgage Needs**

MORTGAGE ALLIANCE Access Inc.
Lic:#11404 Independently Owned and Operated
www.mortgagealliance.com/arunbala
209-8130 Sheppard Ave E., Toronto ON. M1B 3W3

## Arun David Bala

M.Sc, B.Sc (Hons) Sales Representative & Mortgage Agent

**416 834 2854**

# Oshawa - Affordable Investments

## ஒஷாவா நகரில் குறைந்த விலையில் தரமான முதலீடு!

### Oshawa பகல்கலைக் கழகத்துக்கு அருகாமையில்

U.C. uptowns




**New Town Homes From $400s**
**Easy Deposit Structure**

### Modern Free Hold Town Homes




**From $500s - Freehold**
**Flexible Deposit Structure**



முற்பதிவுக்கு இன்றே அழையுங்கள்:

2018 100% Club Award | 2018 100% Club Award | 2017 Diamond Club Award | 2016 Diamond Club Award | 2015 Platinum Club Award | 2015 Rookie of the Year

## கமல் நவரட்ணம்

## KAMAL NAVARATNAM

Sales Representative

KAMAL NAVARATNAM REAL ESTATE

*Trusted and reliable services*

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

Direct:
**416-450-2424**
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

Independently Owned and Operated

# நினைக்கின்றோம்;.

# பேராசிரியர் செல்வா கனகநாயகம் (1952-2014)

**‘மறக்கப்படாதவர் இறந்தவர் அல்லர்’**

- சாமுவேல் பட்லர்

ரொறன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலத் துறைப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் அமரத்துவமடைந்து நவம்பர் 22ம் திகதியுடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றன. இவ்வமையத்தில் இலங்கையர்களின் ஆங்கிலப் படைப்புகளின் மீதான விமர்சனங்கள் தொடர்பில் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இக்கட்டுரையை நான் தேர்ந்தெடுத்தமைக்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவது, காலனித்துவ காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த ஒப்பீட்டு மொழி, இலக்கிய, பண்பாட்டு ஆய்வுகள் காலப்போக்கில் முக்கியத்துவமிழந்துவிட்டன. குறிப்பிட்ட மொழி பேசுவோர் தமது மொழி, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளில் மட்டும் ஆழமான அறிவை வளர்த்துக் கொண்டால் போதுமானது என்று எண்ணுகின்றனர். இத்தகைய ‘குறுகிய’ உளப்பாங்கினைத் தமது இனப்பற்று, மொழிப்பற்று என்பவற்றின் அடையாளம் என்றும் கருதுகின்றனர். இந்த மனநிலையானது வேற்று மொழிகள் கற்று அவை பற்றி எழுதுவோர்களைத் தவறாக மதிப்பிடவும் வழி கோலுகின்றது. பிற மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிப் படித்தல் அனாவசியம் என்று கருதுவது அறிவினை விசாலித்தல் அல்லது விருத்தி செய்தல் என்ற நோக்கத்திற்கு முற்றிலும் முரணானது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் சைவ மறுமலர்ச்சி பற்றிப் பேசும் பொழுது, அதே நூற்றாண்டில் தோன்றிய பௌத்த மறுமலர்ச்சியுடன் அதனை ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும். இரண்டுமே காலனித்துவப் பண்பாட்டாதிக்கத்திற்கு எதிரான முயற்சிகள். மறைமலையடிகளின் (1876-1950) தனித்தமிழ் இயக்கத்தைப் பற்றி ஆராயும்போது, முனிதாச குமார துங்க அவர்களின் (1887-1944) தூய சிங்கள இயக்கத்தையும் நோக்குதல் அவசியம். இவையிரண்டுமே இருபதாம் நூற்றாண்டில் மொழிகளை அரசியல் மயப்படுத்தலுக்கு முன்னோடியான இயக்கங்களாகும். இது போன்று இலங்கையின் தமிழிலக்கிய வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் சமகால ஆங்கில இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளல் பயனுடையது எனும் நோக்கில் பேராசிரியரின் கட்டுரையை அறிமுகம் செய்கின்றேன்.

இரண்டாவது, பேராசிரியரின் கட்டுரை சமகால ஆங்கில இலக்கிய விமர்சனம் பற்றியது என்ற வகையில் தமிழிலக்கிய ஆர்வலர்களுக்கு முக்கியமானது. இலங்கையில் தமிழிலக்கிய விமர்சனத்துறை பல்வேறு தடங்கள் கண்டது என்பது அறிவோம். பண்டிதமணி கணபதிபிள்ளை பரம்பரையினரால் வளர்த்தெடுக்கப்பட்ட இலக்கிய இரசனையை அடிப்படையாகக் கொண்ட விமர்சனமுறை, ஈழத்துத் திறனாய்வியலின் முன்னோடியான பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி. செல்வநாயகம் அறிமுகம் செய்த செய்ம்முறைத்திறனாய்வு, 1950களில் முன்வைக்கப்பட்ட தேசிய இலக்கியக் கோட்பாடு, 1960களில் மேலோங்கிய முற்போக்குவாதக் கொள்கை, இதற்கு எதிராகத் தோன்றிய இலக்கியத்தில் அழகியலை அழுத்தும் குரல்கள், எஸ்.பொ.வின் நற்போக்கிலக்கியம், மு.தளையசிங்கத்தின் பிரபஞ்ச யதார்த்தவாதம் என இருபதாம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழிலக்கிய விமர்சனத்துறை விரிந்தது. பேராசிரியரின் கட்டுரை படைப்பிலக்கியம் குறித்து விமர்சிப்பவரின் பொறுப்புகள் யாவை? எவ்வகையில் விமர்சனம் அமைதல் வேண்டும் என்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைந்துள்ளமையால் விமர்சனத் துறையில் ஈடுபாடு கொண்ட அனைவர்க்கும் பயனுடையது.

பிறமொழிக்கட்டுரை ஒன்றினைத் தமிழ்



வாசகர்கள் அறியுமாறு செய்ய விரும்பினால், ஒன்று அக்கட்டுரையைத் தமிழில் மொழிபெயர்க்கலாம் அல்லது அக்கட்டுரையிலுள்ள பிரதான விடயங்களைத் தெரிந்தெடுத்து அவற்றை விளக்கலாம். இரண்டு முறைகளிலுமே புலமையாளருக்கும், வாசகர்களுக்குமிடையே தமிழ்க் கட்டுரையாளர் ஓர் இடையீட்டாளராகத் தொழிற்படுவார். நான் இங்கு பேராசிரியரின் ஆங்கிலக் கட்டுரையின் சாராம்சத்தைத் தமிழில் தர முயன்றிருக்கிறேன். இடையிடையே தமிழிலக்கிய வரலாற்றுடன் ஒப்பிடுகிறேன். எனினும், பேராசிரியரின் நீண்ட கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள நுட்பமான வாதங்களை எல்லாம் எடுத்துக் கூறுதல் என்பது இக்கட்டுரையில் சாத்தியமில்லை.

இத்தமிழ்க்கட்டுரை பேராசிரியர் எழுதிய ‘Dancing in the Rarefied Air: Reading Contemporary Sri Lankan Literature’ எனும் கட்டுரையின் பிரதான விடயங்களை மட்டும் விளக்குகின்றது. இவ்வாங்கிலக் கட்டுரை A Review of International English Literature எனும் ஆய்விதழில் 1998 ஜனவரி மாதம் வெளிவந்ததாகும். பழைய கட்டுரை எனினும் அதன் சமகாலப் பொருத்தப்பாட்டின் முக்கியத்துவம் எள்ளளவேனும் குறையவில்லை.

‘Dancing in the Rarefied Air’ என்ற கட்டுரைத்தலைப்பின் முதற்பகுதியானது ரியன்சி குரூஸ் (Rienzi Crusz, 1925-2017) எனும் இலங்கை-கனடிய கவிஞரின் கவிதை வரியை (how to dance in this rarefied air) அடியொற்றியது. ரியன்சி குரூஸ் எனும் எழுத்தாளரின் படைப்புகள் தொடர்பாக, Dark Antonyms and Paradise எனும் ஆய்வு நூலை பேராசிரியர் வெளியிட்டமை ஈண்டு நினைவுகூரத்தக்கது.

மேலும் பேராசிரியரின் கட்டுரையில் சமகால இலங்கையின் இலக்கியம் என்பது, இலங்கையில் படைக்கப்படும் இலக்கியத்தை மட்டுமன்றி, இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் குறிக்கும். எடுத்துக்காட்டாக, மைக்கல் ஒண்டாச்சி, ரியன்சி குரூஸ் போன்றவர்கள் இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்கள் எனினும், கனடாவையே தமது வாழிடமாகக் கொண்டவர்கள்.

**- மைதிலி தயாநிதி -**

பேராசிரியர் இக்கட்டுரையை எழுதியதன் நோக்கம், கட்டுரை முழுவதையும் நுனித்து நோக்கும்போது புலனாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட படைப்புகளையும், அதற்கெழுந்த விமர்சனங்களையும் நோக்கும் இக்கட்டுரை, குறுகிய சிங்கள-பௌத்த தேசியவாதம் எனும் கருத்தியல் நிலையிலிருந்து ஆங்கிலப் படைப்புகள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களின் போதாமையையும், பலவீனங்களையும் உணர்த்துவதுடன், பன்மைத்துவ நோக்கில் படைப்புகளைத் திறனாய்வுக்குட்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

பேராசிரியர் தனது கட்டுரையில் கூறும் விடயங்களை மூன்று பகுதிகளாக வகுக்கலாம். முதலாவது, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் படைக்கப்பட்ட ஆங்கில இலக்கியத்தின் பண்புகள். இரண்டாவது, ஆங்கில இலக்கியத்தின் மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள். மூன்றாவது, இந்த விமர்சனங்கள் குறித்த பேராசிரியரின் கருத்துகள். இக்கட்டுரையில் தனியாக இலக்கியம் என்று சொல்லப்படும்போது அது ஆங்கில இலக்கியத்தையே குறிக்கும்.

## 1948 ஆண்டிற்குப் பிற்பட்ட ஆங்கில இலக்கியம்:

1948ல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் படைக்கப்பட்ட ஆங்கில இலக்கியம் 1971ம் ஆண்டு வரை இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகளின் பாதிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை என்று பேராசிரியர் கூறுவது, தமிழிலக்கிய வரலாற்று மாணவர்களுக்குப் பெரும் வியப்பளிக்கக் கூடியது. எவ்வாறு 1956ம் ஆண்டினை ஆங்கிலப்படைப்பாளிகள் தவற விட்டனர் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் இவ்வாண்டின் முக்கியத்துவம் குறித்து மு. தளையசிங்கம் தனது ஏழாண்டுகால இலக்கிய வளர்ச்சி எனும் நூலின் ஆரம்பத்தில் ‘பலருக்கு 1956ம் ஆண்டு நம் நாட்டுச் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பலவித சரித்திர ஓட்டங்களை அவிழ்த்து விட்ட ஆண்டு அது. பல பல அச்சங்கள், பல பல இலட்சியங்கள், அப்படிப்பல ரகம் அவை. அந்த ஓட்டங்களின் வகைகளையும், ஒன்றையொன்று முட்டிய அவற்றின் தாக்கங்களையும் தன்மைகளையும் பின்பு ஆராயலாம். இப்போதைக்கு நம் ஈழத் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட புதியதோர் ஊற்றும், சலசலப்பும், பிரவாக வேகமும் அவற்றுள் ஒன்று என்பதைக் கவனித்துக் கொண்டால் போதும்’ என்று கூறுகின்றார்.

ஏறத்தாழ 150 ஆண்டுகாலம் இலங்கையின் ஆட்சிமொழியாக விளங்கிய ஆங்கிலத்தைப் புறந்தள்ளி, 1956ம் ஆண்டில் சிங்களம் மாத்திரம் அரசகருமமொழியாகப்

*தொடர்தல் 65ம் பக்கம்*

# நினைக்கின்றோம்...

**64ம் பக்கத் தொடர்ச்சி...**

பிரகடனப்படுத்தப்பட்டமையோ, அல்லது 1958ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரமோ அன்றி 1960 களில் பறங்கியர் இலங்கையை விட்டு வெளியேறியமையோ ஆங்கிலப் படைப்பாளிகளின் கவனத்தைச் சற்றேனும் ஈர்க்கவில்லை. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் சிறிதும் அக்கறை காட்டாத அவ்வெழுத்தாளர்கள், பெரும்பாலும் கிராமம் - நகரம் என்ற சிக்கலில்லாத இருமையை அடிப்படையாகக் கொண்டு, அப்பழுக்கற்ற 'உண்மையான' கிராம வாழ்க்கை குறித்ததோர் ஏக்கத்தை அக்காலகட்டத்தில் பதிவு செய்து கொண்டிருந்தனர். இவர்களின் எழுத்துகள் அக்காலத்தில் மலர்ந்து கொண்டிருந்த தேசிய உணர்விற்கு உந்துதல் அளித்திருக்கக் கூடும் எனும் கருத்தை மறுதலித்து, காலனிய எழுத்துகளின் தொடர்ச்சியாகவே இவற்றைப் பார்க்க முடியும் என்கிறார் பேராசிரியர்.

இத்தகைய 'உறங்கு நிலையில்' உள்ள ஆங்கில எழுத்தாளர்களை, அவர்களின் கனவுலகிலிருந்து உலுப்பி, எழுப்பி, சமகால அரசியல், சமூக நிலைமைகளைக் கண் திறந்து பார்க்க வைத்தது 1971 ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சி ஆகும். இது குறித்து ஆங்கிலம் கற்ற உயர்வகுப்பினர் எழுதிய நாவல்கள் அடுத்த பத்தாண்டுக் காலத்தில் பெருமளவில் வெளிவந்தன. இவற்றுள் ஜேம்ஸ் குணவர்த்தனவின் Acid Bomb Explosion (1978), எதிரிவீர சரத்சந்திரரின் Curfew and a Full Moon (1978), ராஜா ப்ரொக்டரின் Waiting for Surabiel (1981) என்பன குறிப்பிடத்தக்கவை. நாட்டில் நிலவும் அரசியல், சமூக அமைதியின்மையை அசட்டை செய்வது பயனற்றது என்பதை எழுத்தாளர்கள் உணரத் தலைப்பட்டமையை இந்நாவல்கள் காட்டுகின்றன. அதன் விளைவான இவ்வாக்கங்கள், நாட்டின் அரசியற்குழப்பங்கள் தொடர்பான விழிப்புணர்வினை வெளிப்படுத்துகின்றன.

1970களில் ஜே.வி.பி. கிளர்ச்சியானது எழுத்தாளர் கவனத்தை ஈர்த்தது போன்று 1980களில் அவர்களின் கவனத்தைப் பெற்றது 1983ம் ஆண்டு இனக் கலவரமாகும். 1971ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கு சிங்கள இனத்திற்குள்ளே காணப்பட்ட வர்க்கபேதம் காரணமாகும். ஆனால், 1980களில் வீறு கொண்ட அரசியற் பிரச்சினை இரு இனங்களுக்கிடையிலானது. ஒன்று சிங்கள - பௌத்த தேசம் எனும் தேசிய வாதத்தை முன்னிறுத்தியது. மற்றையது, சமயச்சார்பற்ற தமிழ்ப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனால் 1980களில் எழுந்த ஆங்கிலப் படைப்புகள் வெளிப்படையாகவோ அல்லது, குறிப்பாகவோ இன முரண்பாடுகள் பற்றிப் பேசின. டெரக் டி. சில்வாவின் 'Tormented between two noises' எனும் கவிதை சிங்களவர்களின் ஆழ்மனதில் உறைந்திருக்கும் பயங்களும், வரலாற்று ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட போட்டிகளும் கட்டுக்கதைகள் மூலம் நியாயப்படுத்தப்படுவதைக் காட்டுகின்றது. தமிழிலே சிங்கள-பௌத்த தேசிய வாதத்திற்கு எதிரான குரல்களின் தொகுப்பாக 'மரணத்துள் வாழ்வோம்' (1985) எனும் நூல் இக்கால கட்டத்தில் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1977ம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம், உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்சி, புலப்பெயர்வு என்பன மூலம் ஆங்கில மொழியின் செல்வாக்கு நாட்டில் அதிகரித்து. உள்ளூர் படைப்பாளிகளான ஆஷ்லி ஹல்பே, ராஜீவ விஜேசிங்க, ஜீன் அரசநாயகம் போன்றோரும், புலம்பெயர் படைப்பாளிகளான யஸ்மின் குணரத்ன, சித்ரா பெர்ணான்டோ, சியாம் செல்வதுரை, ரொமேஷ் குணசேகர, ரியன்சி குரூஸ், மைக்கல் ஒண்டாச்சி, அம்பலவாணர் சிவானந்தன் முதலானோரும் பெருமளவில் இலக்கியங்களைப் படைத்தனர்.

ஆயினும். சர்வதேச ஆங்கில இலக்கியத்தைப் பொறுத்தமட்டில், இலங்கையின் ஆங்கில இலக்கியமானது இந்திய ஆங்கில இலக்கியத்தின் அடிக்குறிப்பாகவே 1990 வரை இருந்து வந்தது என்று பேராசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். இதற்கு அவர் உதாரணமாகக் காட்டுவது பீஜி (Fiji) நாட்டு ஆங்கில இலக்கியத்தை ஆகும். பீஜி இலக்கியம் அவுஸ்திரேலியா, நியூ சிலாந்து நாட்டு இலக்கியங்களுடன் இணைத்துப் பேசப்படினும், ஏனைய இரண்டு நாட்டிலக்கியங்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அதற்கு அளிக்கப்படுவதில்லை. அந்நிலையே இன்றும் தொடர்கிறது. ஆனால், 1990களில் இலங்கையின் ஆங்கில இலக்கியத்திற்குக் கிடைத்த சர்வதேசக் கவனிப்பு இந்திய இலக்கியத்திலிருந்து தனித்ததோர் இலக்கியமாக இலங்கை இலக்கியத்தைப் புலமையாளர் நோக்க வழி சமைத்தது. இக்காலத்தில் எழுதப்பட்ட மைக்கல் ஒண்டாச்சியின் The English Patient (1992) ரொமேஷ் குணசேகரவின் Reef (1994), கார்ள் முல்லரின் The Jam Fruit Tree (1993), சியாம் செல்வதுரையின் Funny Boy (1994), யஸ்மின் குணரத்னவின் Pleasures of Conquest (1995) மற்றும் அம்பலவாணர் சிவானந்தனின் When Memory Dies (1997) எனும் நாவல்கள் இலங்கை இலக்கியம் செழுமை மிக்க நிலையை அடைந்து விட்டதைக் காட்டுகின்றன. வெவ்வேறு நிறுவனங்கள் இலக்கிய முயற்சிகளில் காட்டிய அக்கறை, எழுத்தாளர்களினதும், விமர்சகர்களினதும் பங்களிப்பு, நவசிலு, சனல்ஸ் எனும் இதழ்கள் அளித்த வாய்ப்புகள், புலம்பெயர் எழுத்துகள் தொடர்பில் பிரதான சர்வதேச நூல் வெளியீட்டாளர்கள் காட்டிய ஆதரவு என்பன இலங்கையின் ஆங்கில இலக்கியம் சர்வதேசக் கவனிப்பை எய்துவதற்கு உதவின. சுதேச மொழிகளை இலங்கை அரசியல் நிலைமைகள் முன்னிறுத்திய காலகட்டத்தில் ஆங்கில இலக்கியத்தில் இவ்வளர்ச்சி ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கையில் இலக்கியச் செயற்பாடு என்பது அரசியல் அச்சுறுத்தல்களுக்குள்ளாகாது இருக்கவில்லை என்பதையும் குறிப்பிடல் வேண்டும். ராஜீவ விஜேசிங்கவின் அரசியல் சார்ந்த இலக்கிய எழுத்துகளுக்குப் பிரச்சினை இல்லாமலிருப்பினும், ரிச்சாட் டி சொய்சா தனது அரசியல் கருத்துகளுக்காகவே 1990ல் கொலை செய்யப்பட்டார் என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். இக்கால கட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களும் இதற்கு விதி விலக்காக இருக்கவில்லை.

## விமர்சனங்கள்:

இலக்கிய கர்த்தாவும், அவரின் ஆக்கங்களும் எவ்வாறு வெவ்வேறு கோணங்களில் விமர்சகர்களால் நோக்கப்பட்டுள்ளன என்பதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றார். முதலில் புகழ்பெற்ற இலங்கை - கனடிய எழுத்தாளர் மைக்கல் ஒண்டாச்சி, ரியன்சி குரூஸ் என்போரின் ஆக்கங்கள் மீதும், பின்னர் இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள் மீதும் வைக்கப்பட்ட விமர்சனங்கள் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

அருண் முகேர்ஜி எனும் விமர்சகர் தனது 'The Sri Lankan Poets in Canada:An Alternative View' எனும் கட்டுரையில், கனடியப் பல்கலைக்கழகப் புலமையாளர் மத்தியில் செல்வாக்குற்றுத் திகழ்ந்த மைக்கல் ஒண்டாச்சியின் படைப்புகள் சமகால சமூகவியற் சூழலிலிருந்து விலகி நிற்பன எனும் விமர்சனத்தை முன் வைக்கின்றார். பிரதான நீரோட்டத்துடன் உரிமை கொண்டாட முடியாத குடியேற்றவாசிகளின் பிரச்சினைகள் குறித்து, மைக்கல் ஒண்டாச்சியின் படைப்புகள் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என்பதே முகேர்ஜி, மைக்கல் ஒண்டாச்சி மீது வைத்த விமர்சனங்களில் முக்கியமானது. இலக்கியமானது படைப்பாளிக்குச் சமூகச்சூழலில் இருக்கும் அக்கறையை வெளிப்படுத்த வேண்டும் எனும் நிலைப்பாட்டினை முகேர்ஜி கொண்டிருப்பதால், கனடிய குடிவரவாளர் குறித்த நிலைமைகளையும், தான் விட்டு வந்த இலங்கை நிலைமையையும் கருத்திற் கொண்டு இலக்கியம் படைத்த ரியன்சி குரூஸ் முகேர்ஜியின் மதிப்பீட்டில் உயர்கிறார்.

எனினும், 1992ம் ஆண்டில் Canadian Literature எனும் இதழில் ஏச்.ஜெ. சுவந்த சுகுணசிறி என்பவர் எழுதிய 'Sri Lankan Canadian Poets: the Bourgeoise that fled the revolution' எனும் கட்டுரை இப்படைப்பாளிகள் மீது வைக்கும் விமர்சனம் வேறுபட்டது. காலனித்துவப் பண்பாட்டுப் பிடியிலிருந்து விடுபடும் நோக்கொடு 1956ல் இலங்கையில் நிகழ்ந்த மாற்றத்தை 'அரசியல் புரட்சி' என்று வர்ணிக்கும் சுகுணசிறி, இதிற் கலந்துகொள்ளாது வெளிநாடு சென்றவர்களை 'பூஷ்வா வர்க்கத்தினர்' என்றழைக்கின்றார். 'ஸ்ரீலங்காவின் வரலாற்றுண்மைப் பண்பு, உணர்திறன், உலகப்பார்வை குறித்து ஏன் இலங்கைக் கவிஞர்கள் வெட்கப்படல் வேண்டும்?' என்ற வினாவை எழுப்பும் அவர், 'இலங்கையில் காணப்படுவது சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, ஆன்மிக ரீதியிலான 2500 ஆண்டு காலப் பழமை வாய்ந்த பௌத்த கலாசாரமாகும்' என்று கூறுகின்றார். மேலும், 'ரியன்சி குரூஸ் கனடிய குடியேற்றவாசிகள் குறித்துப் பேசியிருக்கலாம், கருமையுடன் தன்னை அடையாளப்படுத்தியிருக்கலாம். ஆனால் அடிப்படையில், அவரது இலக்கியப் பார்வை மைக்கல் ஒண்டாச்சிலிருந்து வேறுபட்டது அன்று' என்று சுகுணசிறி கணிக்கின்றார். மொத்தத்தில் 1956ல் நிகழ்ந்த 'அரசியற்புரட்சியை' கண்டு கொள்ளாத எழுத்தாளர்களை அவர் நிராகரிக்கின்றார். இவ்வாறு இனம் சார்ந்த (ethnic), இனப்பாகுபாடான (racial), நாட்டுப்பற்றாளர் ரீதியில் (nationalist) இலக்கியத்தை அணுகுவது பிரச்சினைக்குரியது என்பதைப் பேராசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

மேலும், 1971 ஜே.வி.பி கிளர்ச்சியை மையமாகக் கொண்டு புனையப்பட்ட நாவல்கள் தொடர்பாக டி.சி.ஆர்.ஏ. குணதிலக எழுதிய கட்டுரைகளில் அவை பற்றி நேர்மறையான (positive) கருத்துகளையே கூறியுள்ளார். 'எளிமையான இருமைகளிலிருந்து விடுபட்டு, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைக் கையாள்வதில் இந்நாவல்கள் வெற்றி பெற்றுள்ளன' என்று குணதிலக கருதுகிறார். ஆனால், 'காலம், இடம் என்பவற்றைக் கடந்த தாராளமய மதிப்பீடுகளுக்கான அர்ப்பணிப்பு என்ற போர்வையில், பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இந்த எழுத்தாளர்கள், 1971ம் ஆண்டுக் கிளர்ச்சி பற்றி எழுதும்போது அதற்குரிய நியாயப்பாட்டுடன் எழுதுவதையும், முதலில், இத்தகைய நிலைமைகளைச் சாத்தியமாக்கிய தாம் சார்ந்திருக்கும் வர்க்கத்தின் பங்களிப்புக் குறித்த தீவிர சிந்தனைகளைப் பதிவுசெய்வதையும் முற்றிலுமாகத் தவிர்த்து விட்டனர்' என்று திரு.கந்தையா கூறுகின்றமை கவனத்திற்குரியது.

இலங்கை எழுத்தாளர்களில் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு கவிதைகள் புனைந்தவரும், Trial by Terror (1987) Reddened Water Flows Clear (1991) எனும் நூல்களின் ஆசிரியருமான ஜீன் அரசநாயகத்தின் கவிதைகளை ஹல்பே மெச்சி எழுதுகின்றார். 'அவரது கவிதைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கான இரக்கவுணர்ச்சி நிறைந்தது. அத்துடன் தாக்குதல் நடத்துபவர்களிடத்துக் காணப்படாத, மற்றையவர்களும் மனிதர்களே என்ற உணர்வும் மேலோங்கியுள்ளது' என்று கூறுகின்றார். ஆனால் குணதிலக அரசநாயகத்தின் கவித்திறன்களை அங்கீகரிக்கவில்லை. 'அரசநாயகம் ஒரு பறங்கியர். தமிழரை மணந்தவர். ஆதலால், தனது கணவரின் சமூகத்திற்குச் சார்பான விதத்தில், அதாவது பக்கச்சார்பாக, இனப்பிரச்சினை பற்றிய கவிதைகளைப் புனைந்துள்ளார்' என்று குணதிலக கருதுகின்றார். ஆனால் அரசநாயகம் பற்றிய குணதிலகவின் குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் சரியானது என்பது ஐயத்திற்குரியது. ரெஜி சிறிவர்த்தன எனும் விமர்சகர், அரசநாயகம் இந்துமத நம்பிக்கை, கிரியை முதலானவற்றை அனுதாபத்துடன் நோக்கும் அதே வேளை, யாழ்ப்பாணப் பழைமைவாத சமூகத்தின் சர்வாதிகாரவாதம், சொத்துகளுடனான பிணைப்பு என்பவற்றுக்கெதிராகக் கலகக்குரல் எழுப்புகிறார் என்று கூறுகின்றார். அத்துடன், சமீபத்திய படைப்பொன்றில் 1983ம் ஆண்டு இனக் கலவரத்திலும், தன் கணவனின் தமிழ்க் குடும்பத்திலும் தான் சந்தித்த அவமானங்கள் குறித்தும் எழுதியுள்ளார் என்று ரெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு வெவ்வேறு கண்ணோட்டங்களில் எழுதப்பட்டுள்ள விமர்சனங்களை எடுத்துக்காட்டும் பேராசிரியர், தனது கட்டுரையின் பிற்பகுதியில் விமர்சனத்தின் முக்கியத்துவம், அது எவ்வாறிருக்கவேண்டும் என்பது பற்றி விரிவாகத் தனது கருத்துகளை விளக்குகின்றார். விமர்சகர் கருத்தானது நல்ல படைப்புகள் எவை என்பதை அடையாளம் காணவும், அங்கீரிக்கப்பட்ட நல்ல படைப்புகள் (canon) என்ற கருத்துருவை உருவாக்கவும் அடித்தளம் இடுகின்றது. வாசகர் குழுமத்தைத் தீர்மானிக்கின்றது. தமக்கே உரிய பாணியில் எழுத்தாளர்கள் மீது செல்வாக்கும் செலுத்துகிறது. ஆகையால் விமர்சகர்களுக்குப் பெரும் சமூகப் பொறுப்புண்டு. இலக்கியப் பிரதிகளுக்கும், சமூக-அரசியல் நிலைச் சிக்கல்களுக்கும் இடையிலான உறவைக் கவனத்தில் கொள்ளாது, சமகால அரசியல் நிலைமைகளுக்கான தனிப்பட்ட நம்பிக்கைகள், உணர்ச்சிகள் என்பவற்றின் அடிப்படையில் (subjective responses to the political climate of the day) விமர்சனம் எழுதப்படுமாயின், அது தொலை நோக்கில் பெரும் தீங்கினையே ஏற்படுத்தும் என்று பேராசிரியர் எச்சரிக்கிறார். குறுகிய கருத்தியல் நிலைப்பாடுகளை எடுப்பதும் விமர்சகர் தேசத்தை (nation) அர்த்தப்படுத்தும் முறைக்கும், அவரது விமர்சனத்திற்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்பினை உணராது இருக்கின்றமையும் இலக்கியத்திற்கும், நாட்டிற்கும் தீமையையே விளைவிக்கும் என்பது அவர் கருத்து.

பேராசிரியரின் இக்கட்டுரையிலிருந்து நான் புரிந்து கொண்ட முக்கிய விடயம் குறுகிய கருத்தியற் கண்ணோட்டங்களுடன் விமர்சகர்கள் இலக்கியத்தை அணுகுதல் பிரச்சினைக்குரியது என்பதாகும். இருபதாம் நூற்றாண்டில் அரசியற் கொள்கைச் சார்புடைய முற்போக்கிலக்கியக் கொள்கை இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் பல வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்தது என்பதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். 'பழைய தமிழ் இலக்கிய அறிவு மட்டுமல்ல, மற்ற நாட்டு இலக்கியங்களைப் பற்றித் தெரிந்திருக்கும் ஓர் ஒப்பிலக்கியப் பார்வையும் தேவை என்ற நல்ல கொள்கையும் இதனால் தேயத் தொடங்கி விட்டது' என்று தளைய சிங்கம் கூறுகிறார். தமிழகமும் இத்தகையதொரு நிலைக்கு விதி விலக்கன்று. குறுகிய 'அரசியற்' கண்ணோட்டங்களினால் சங்க காலத்திலும், இருபதாம் நூற்றாண்டிலும் எழுந்தவைதாம் 'தமிழ்' இலக்கியம் என்று கருதி, இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கிய நூல்களைத் தமிழகத்தில் ஒரு சாரார் புறக்கணித்தமை பற்றிப் பேராசிரியர் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

maithilithayanithy@thaiveedu.com






# தொலைக்காட்சி நாடகத்தின் சில தயாரிப்பு நுணுக்கங்கள்

நான் ரூபவாஹினியின் பிரதான தமிழ் நிகழ்ச்சியான கலையரங்கம் தயாரிக்கத் தொடங்கி ஐந்து மாதங்களில் நான் தயாரித்த முதல்த் தொலைக்காட்சி நாடகம் கலையரங்கத்தில் ஒளிபரப்பப்பட்டது. அந்த நாடகத்தின் பெயர் கற்பனைகள் கலையவில்லை. இதுதான் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல்த் தொலைக்காட்சி நாடகம். இலங்கையில் சரியான வரலாற்றுப் பதிவுகள் பேணப்படாததாலும் அங்கு குறைந்தளவில் பதியப்படும் வரலாறும் பெரும்பான்மைச் சமூத்தினருடையதாகவே இருப்பதனாலும் இதை நான் வலியுறுத்திச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாடகம் முதல்முதலில் செய்யப்பட்டதென்பதால் எல்லோரது பாராட்டையும் பெற்றாலும் ஒரு முதல் முயற்சிக்குரிய சிறுசிறு குறைகள் அதில் இருந்தன. எனது அந்த நாடகத்திலுள்ள குறைகளை ஒரு சுயவிமர்சனமாக இங்கு நான் சுட்டிக்காட்டுவது, புதிதாக வரும் தொலைக்காட்சி மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு உதவியாக இருக்குமென்று நினைக்கிறேன். இங்கு நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது, ஏற்கனவே நடந்தவை பற்றிய வரலாறு தெரிந்தால்தான் அதிலிருந்து கற்றுக்கொண்டவை எமது புதிய முயற்சிகளின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். வரலாற்றைப் புறக்கணித்துவிட்டு அல்லது தெரியாமல் நாம் ஒவ்வொன்றையும் புதிதாகத் தொடங்குவோமானால் நாம் பெரும்பாலும் செய்த தவறுகளை மீண்டும் மீண்டும் செய்து நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருப்போம்.

இலங்கையில் ரூபவாஹினி ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் மிகமுக்கியமான ஒன்று இலங்கையிலுள்ளவர்களைத் தொலைக்காட்சியின் சகல துறைகளிலும் பயிற்றுவித்த நடவடிக்கை. வெளிநாடுகளிலும் வெளிநாட்டு விற்பன்னர்களைக் கொண்டு இலங்கையிலும் நடத்தப்பட்ட பயிற்சிகளை ரூபவாஹினியின் ஆரம்பத்தில் இணைந்த அனைவருமே பெற்றிருந்தோம். என்னைப்போன்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளிலும் காட்சி ஊடகத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்குவேண்டிய முக்கிய விடயங்களான ஒளியமைப்பு, ஒலியமைப்பு, கமராக் கோணங்கள் (camera angles), கமரா அசைவுகள் (camera movements), கமரா நிலைகள் (camera positions) போன்றவற்றில் விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன. நாம் எல்லோருமே மிக ஆர்வத்துடன் அவற்றைக் கற்றுக்கொண்டோம். குறிப்பாக, நான் எனது மிக நீண்டநாள் விருப்பம் நிறைவேறப்போகும் மனநிறைவில் திழைத்திருந்தேன். அதுவரை சினிமா ஆர்வம் காரணமாகப் பல புத்தகங்களை வாங்கி நானாகவே அறிந்துகொள்ள முயன்ற விடயங்கள் செய்முறைப் பயிற்சியாக எனக்கு வழங்கப்பட்டபோது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். ரூபவாஹினியில் நிகழ்ச்சிகள் செய்ய ஆரம்பித்த போது புதிதாக ஒரு துறைக்குள் நுழைகின்றோமென்ற பயமோ தயக்கமோ எனக்கு ஏற்படவில்லை. நான் பாண்டித்தியம் பெற்றிருக்கும் ஒரு தொழிலைச் செய்யப்போவதுபோலவே உணர்ந்தேன். அத்தகைய மனநிலையை நான் பெற்ற பயிற்சிகள் என்னுள் வளர்த்திருந்தன.

ஆனால் நாம் எவ்வளவுதான் பயிற்சிபெற்றாலும், நாமாக ஒரு தயாரிப்பை மேற்கொள்ளும்போதுதான், நாம் பயிற்சியில் கற்றவற்றை நடைமுறைப்படுத்தித் தொழில்முறை விற்பன்னர்களாகுவதற்கு, மிகுந்தளவில் செய்முறைப் பயிற்சி வேண்டுமென்பது புரியவரும். நாம் காட்டும் ஆர்வத்தைப்பொறுத்து நாமே தயாரிப்பில் ஈடுபடஈடுபட எமது தயாரிப்பின் தொழில்த்தரம் மெருகேறுவதை உணரமுடியும். ஆரம்பப் பயிற்சிகளின்போதும் பின்னர் நடைமுறையில் தயாரிப்புகளை மேற்கொண்டு செய்முறைப் பயிற்சியைப் பெறும்போதும் தயாரிப்பு நுட்பங்களைச் சரிவரக் கவனிக்காது அல்லது பின்பற்றாது தயாரிப்புகளை மேற்கொள்பவர்கள் பூரணமான தொழில்த்தரம் வாய்ந்த படைப்புகளைப் படைக்கமுடியாது.

கற்பனைகள் கலையவில்லை நாடகத்தில் படப்பிடிப்பு முடிந்து படத்தொகுப்பை (editing) மேற்கொண்டபோதுதான் சில இடங்களில் கமரா வைக்கப்பட்ட இடங்கள் பிழையாக இருந்ததை உணரமுடிந்தது. இவ்வளவுக்கும் இந்த விடயம் எமது பயிற்சிகளின்போது வலியுறுத்திக் கூறப்பட்டதுதான். நானும் மிகத்தெளிவாக அவற்றைப் புரிந்துதான் வைத்திருந்தேன். ஆனால் நாமே படப்பிடிப்பை மேற்கொள்ளும்போது, நாம் கற்றவற்றைச் சரிவரப் பிரயோகிக்கமுடியாது அவசரம், பதற்றம், தடுமாற்றம், குழப்பம் முதலியன தடுத்து விடுகின்றன.

சினிமாத்தொழில்நுட்பம் தெரியாத பொது மக்கள், ஒரு திரைப்படத்தைப் பார்க்கும்போது நான் இப்போது கூறப்போவனவற்றைக் கவனிக்கமாட்டார்கள். ஆனால் தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் அப்படிப் பிழையான முறைகளில் படமாக்கப்பட்டிருப்பவற்றைப் பார்க்கும்போது மிகுந்த சினமடைவார்கள். அனேகமாக நாம் பார்க்கும் திரைப்படங்களில் கமரா நிலைகளில் மற்றும் கோணங்களில் விதிகள் சரியாகப் பின்பற்றப்படாது நினைத்தபடியெல்லாம் கமராவை வைத்துப் படம் பிடிக்கப்படுவதால் எமக்கு அந்தப் பிழைகள் பெரிதாகத் தெரிவதில்லை. ஆனால் வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களில் அனேகமாகத் தொழில் நெறிமுறைகள் மிகவும் கண்டிப்புடன் பின்பற்றப்படுவதால் தவறுகள் அனேகமாக இடம் பெறுவதில்லை அல்லது மிகக் குறைவாகவே இடம்பெறுகின்றன.

இங்கே நான் குறிப்பிடுகின்ற கற்பனைகள் கலையவில்லை நாடகத்தில் சில இடங்களில் ஏற்பட்ட பிரதான தவறென்பது, கமராவை வைக்கும் இடங்கள் (positions) க்றொஸிங் த லைன் (crossing the line) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற கோட்டைத் தாண்டுவது பற்றியது.

## கோட்டைத் தாண்டுதல் (crossing the line):

இந்தத் தவறு அனேகமாக இந்தியத் திரைப்படங்களில் இடம்பெறுகிறது. இதைச் சரியாக விளங்கிக்கொள்வதற்கு வாசகர்கள் நான் கூறப்போவனவற்றைச் சற்றுக் கவனச்செறிவுடன் வாசிக்கவேண்டும்.

நாம் படம்பிடிக்கும்போது ஒரு காட்சி, ஒரு நேர்கோட்டில் நடைபெறுவதாகப் பாவித்து, அந்த நேர்கோட்டைத் தாண்டிக் கமராவை வைத்துப் படம்பிடிக்கக்கூடாதென்பது விதி. இந்த விதி மீறப்படும்போது, ஒரு காட்சியில் இரண்டு பாத்திரங்கள் உரையாடினால் அந்தப் பாத்திரங்கள் யாரை, எந்தத் திசையில் பார்த்துப் பேசுகிறார்கள் என்பதில் குழப்பம் ஏற்படும். இந்த விதியை மீறி ஒரு விளையாட்டுப்போட்டியைப் படம்பிடித்தால் எந்த அணி, எந்தப் பக்கத்திலிருந்து எந்தப் பக்கம் நோக்கி விளையாடுகிறது என்பதில் குழப்பம் ஏற்படும். மிக அவதானமாக இந்தக் கோட்டைத் தாண்டாத விதியைப் பின்பற்றிப் படம்பிடிக்கும்போதுதான் பார்வையாளர்கள் எந்தவித குழப்பமுமில்லாமல் திரையில் நடப்பனவற்றில் மனமொன்றமுடியும். திரையில் இரண்டு பாத்திரங்களுக்கிடையே நடைபெறும் உரையாடலை, அல்லது நகர்வுகளை, மற்றும் இயக்கங்களைக் கமராக்கள் இருக்கவேண்டிய எல்லைக்கோட்டைத் தாண்டிப் படமாக்கினாலும், வசனங்களைப் புரிந்துகொள்ளலாமென்றாலும், இந்தப் பாத்திரங்கள் பார்க்கும் அல்லது நகரும் திசைகளில் ஏற்படுகின்ற குழப்பம் பார்வையாளர்கள் அறியாமலே அவர்களுக்கு ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்திக் காட்சியில் மனமொன்றுவதற்குத் தடையாக அமைந்துவிடுகிறது. இப்படியான குழப்பகரமான படப்பிடிப்புகள் பார்வையாளர்களுக்குக் காரணம் புரியாவிட்டாலும் திரைப்படங்களை மனம்லயித்து இரசிப்பதற்குத் தடையாக இருக்குமென்பது உளவியல் ரீதியான உண்மை. சிறந்த இயக்குனர்களும் படப்பிடிப்பாளர்களும் இதில் மிகுந்த கவனமாக இருப்பார்கள்.

ஒரு காட்சியில் இரண்டுபேர் பேசும்போதோ அல்லது ஒரு விளையாட்டுப்போட்டியில் இரண்டு அணிகள் மைதானத்தில் விளையாடும்போதோ கோடு தாண்டாது கமராவைக் கையாள்வதில் பிரச்சினை அவ்வளவாக இருக்காது. ஆனால் திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் காட்சிகள் துண்டுதுண்டாகப் பிரிக்கப்பட்டு (shots) படமாக்கப்படுகின்றன. அப்படிப் படமாக்கப்படும் ஒரு காட்சியில் பாத்திரங்கள் தொடர்ந்து இயங்கி, நடமாடி, நடித்துக்கொண்டிருப்பதாக அமைந்து விட்டால் அந்தத் காட்சியை ஷொட் பிரித்துப் படமாக்கும்போது இந்தக் கோடு தாண்டா விதியைக் கடைப்பிடிப்பது மிகுந்த சிரமமான செயல். இத்தகைய காட்சிகளைப் படமாக்கும்போது நன்கு திட்டமிட்டு, மிகுந்த அவதானத்துடன் படப்பிடிப்பை மேற்கொள்ளவேண்டும். மிகவும் கைதேர்ந்த படப்பிடிப்பாளர்களாலும் இயக்குனர்களாலும் மட்டுமே திசைமாறும் குளறுபடிகள் ஏற்படாமல் காட்சிகளைப் படமாக்கமுடியும். இவற்றையெல்லாம் நாம் பயிற்சியில் சரியாகப் படித்திருந்த போதிலும் கற்பனைகள் கலையவில்லை நாடகத்தைப் படமாக்கியபோது அதில் அனேகமாக இரண்டுபேர் மட்டுமே பேசுவது போன்ற சுலபமான காட்சிகளைப் படமாக்கியபோதிலும் இந்தக் கோடுதாண்டும் தவறுகள் ஏற்பட்டன.

இதை விரிவாக விளக்குவதாயின் இப்போது ஒரு காட்சியில் A - B என்ற இருவர் ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதைப் படமாக்குகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அவர்களுக்கெதிரே அவர்களைப் பார்த்தபடி கமரா வைக்கப்பட்டிருக்கிறது. கமரா அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் கமராவின் இடதுபுறத்தில் (camera left) இருக்கும் A கமராவின் வலதுபுறத்திலிருக்கும் (camera right) Bயைப் பார்த்துப் பேசுகிறார். அதேபோல கமராவின் வலதுபுறத்தில் நிற்கும் B கமராவின் இடதுபுறத்தில் நிற்கும் Aயைப் பார்த்துப் பேசுகிறார். இப்போது A-யும் B-யும் நிற்பது இருப்பது அல்லது படுத்திருப்பது என்று என்ன செய்தாலும் அவர்கள் ஒரு நேர்கோட்டிலேயே அவற்றைச் செய்கிறார்கள். அந்த நேர்கோடு நூற்றியெண்பது பாகைக் கோணம். நன்றாக நினைவில் வைத்திருங்கள், பாத்திரம் A கமராவின் இடதுபுறத்தில் நின்று கமராவின் வலது புறத்தைப் பார்க்கிறது. பாத்திரம் B கமராவின் வலதுபுறத்திலிருந்து கமராவின் இடதுபுறத்தைப் பார்க்கிறது. அவர்கள் நிற்கும் நேர்கோடு நூற்றியெண்பது பாகை. இந்த நூற்றியெண்பது பாகைக் கோணத்தில் கமராவை எங்குவைத்து இந்த இருவரையும் படமாக்கினாலும் A கமராவின் இடதுபுறத்தில் நின்று வலதுபுறத்தைப் பார்ப்பார், B கமராவின் வலதுபுறத்தில் நின்று இடதுபுறத்தைப் பார்ப்பார். இவர்கள் பார்க்கும் திசைகளில் மாற்றம் ஏற்படாது. இப்போது, இந்த நூற்றியெண்பது பாகைக் கோட்டைக் கடந்து மறுபக்கம் சென்று A-யையும் B-யையும் நோக்கிக் கமராவை வைத்தால் இப்போது A கமராவின் வலதுபுறத்திலிருந்து கமராவின் இடதுபுறத்தைப் பார்ப்பார். B கமராவின் இடதுபுறத்திலிருந்து வலதுபுறத்தைப் பார்ப்பார். முதலில் படமாக்கப்பட்டபோது A-யும் B-யும் பார்த்த திசைகளும் கோட்டைத் தாண்டி எடுக்கப்பட்ட படத்தில் A-யும் B-யும் பார்க்கும் திசைகளும் முற்றாக மாறி யிருப்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகவே, ஒரு காட்சியைப் படமாக்கும்போது இவ்வாறு கமராவை இந்த நூற்றியெண்பது பாகைக் கோட்டைத்தாண்டிச்சென்று படமாக்கிவிட்டு இந்தத் துண்டுக் காட்சிகளை (shots) எடிற்றிங்கில் அடுத்தடுத்துத்தொகுக்கும்போது A-யும் B-யும் பார்க்கும் திசைகள் முற்றாக மாறி மாறித் தெரியும். இது பார்வையாளர்கள் மனதில் ஒருவித இடைஞ்சலையும் குழப்பத்தையும் உண்டாக்கும்.

இந்தக் காரணத்தினால்தான் விளையாட்டுப்போட்டிகளைப் படமாக்கும்போது நூற்றியெண்பது பாகைக் கோட்டைத் தாண்டாமல் கமராக்களை ஒருபக்கத்திலேயே வைத்துப் படமாக்குகின்றார்கள். அந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காது கமராவை எதிரெதிரே வைத்துப் படமாக்கினால் எந்த அணி எந்தப்பக்கத்திலிருந்து எந்தப்பக்கத்தைநோக்கி விளையாடுகிறதென்பதைப் புரிந்துகொள்வதில் மிகுந்த குழப்பமேற்படும். நாடகங்களில் பல பாத்திரங்கள் குறுக்கும் நெடுக்கும் நடந்து திரிந்து, சண்டையிட்டு, வாக்குவாதப்படும் பரபரப்பான காட்சிகளை ஒரு கமராகொண்டு ஷொட் பை ஷொட்டாகப் படமாக்குவதற்கு (single camera shooting) மிகுந்த திட்டமிடல் தேவை.

அதேபோல் பல கமராக்களைக்கொண்டு படமாக்கும்போது (multi camera shooting) கமராக்களை எங்கெங்கு வைக்கவேண்டுமென்பதில் மிகுந்த அவதானம் வேண்டும். கோடுதாண்டி மறுபக்கம்போய்ப் படம்பிடித்தேயாகவேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் படம்பிடித்துக் கொண்டிருக்கும் போதே கமராவை நகர்த்தி ட்ரொலி ஷொட்டில் (trolley shot) மறுபக்கம் கொண்டுசென்றால் அந்த நகர்வைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளர்கள் காட்சியில் பாத்திரங்களின் நிலை மாறுவதை நேரடியாகப் பார்ப்பார்கள். அதனால் அவர்களுக்குக் குழப்பமெதுவும் ஏற்படாது.

இப்போது ஒரு கார் ஓடுவதை வெளியே இருந்து படமாக்குவதாக வைத்துக்கொண்டால் ஒரு பக்கத்தில் வைத்துப் படமாக்கும்போது கார்போகும் திசையும் மறுபக்கத்தில் வைத்துப் படமாக்கும்போது கார் போகும் திசையும் எதிரெதிராகத் தெரியும். இந்த இரண்டு ஷொட்டுகளையும் அடுத்தடுத்துத் தொகுத்தால் கார் எந்தப்

*தொடர்தல் 67ம் பக்கம்*

# தொலைக்காட்சி...

66ம் பக்கத் தொடர்ச்சி...

பக்கம் போகிறதென்பதில் குழப்பமேற்பட்டும். ஆனால் கார் போய் ஒரு வளைவில் எதிர்ப்பக்கமாகத் திரும்புவதாக ஒரு ஷொட்டை எடுத்து நான் மேலே சொன்ன இரண்டு ஷொட்டுகளுக்குமிடையே புகுத்தினால் பார்வையாளர்களுக்கு எந்தவித குழப்பமும் ஏற்படாது.

இந்தத் திசைமாறும் நிகழ்ச்சியை நீங்கள் கமரா இல்லாமலேயே பரீட்சித்துப் பார்க்கலாம். உங்கள் இரண்டு கைகளிலும் பெருவிரலையும் ஆட்காட்டி விரலையும் தொண்ணூறுபாகை கோணத்தில் ஆங்கில எழுத்தான எல் (L) வடிவத்தில் பிடித்துக் கொண்டு இரண்டு பெருவிரல்களின் நுனியையும் ஒன்றையொன்று தொடுவதுபோலப் பிடித்தால் ஒரு ப எழுத்து வடிவத்திலான சட்டகம் (frame) உருவாகும். இப்போது இரண்டு பொருட்களை அருகருகே வைத்துவிட்டு உங்கள் விரல்களைக் கொண்டு உருவாக்கியுள்ள சட்டகத்தினூடாக அந்தப் பொருட்களைப் பாருங்கள். இப்போது அந்த சட்டகத்தினூடே இடம் வலமாகத் தெரியும் பொருட்கள், நீங்கள் அப்படியே நகர்ந்து மறுபக்கம் செல்லும்போது சட்டகத்தில் வலமிடமாகத் தெரிவதை அவதானிக்கலாம். இந்தத் தவறே கற்பனை கலையவில்லை நாடகத்தில் ஏற்பட்டது.

கற்பனைகள் கலையவில்லை நாடகத்தில் இரண்டு பாத்திரங்கள் பேசுவதுபோன்ற காட்சிகளென்பதால் ஒரு பாத்திரத்தின் தோளுக்கு மேலால் மற்றைய பாத்திரத்தின் முகத்தைக் காட்டும் ஓவர் த ஷோல்டர் ஷொட்டுகளாக அவை எடுக்கப்பட்டன. அப்படி எடுக்கும்போது இந்த நூற்றியெண்பது பாகைக் கோடு சில இடங்களில் மீறப்பட்டுவிட்டது. குறிப்பாக, படுக்கையில் படுத்திருக்கும் விஜயாள் பீற்றருக்கருகே அமர்ந்து நடராஜசிவம் பேசும் காட்சியைப் படம்பிடிக்கும்போது, நடராஜசிவத்தின் பக்கத்திலிருந்து விஜயாள் பீற்றர் வசனம் பேசும் காட்சிகளைப் படமாக்கிவிட்டு, பின்னர் விஜயாள் பீற்றரின் பக்கத்தில் கமராவை வைத்து நடராஜசிவம் பேசுவதைப் படம் பிடித்தோம். விஜயாள் பீற்றரின் பக்கத்தில் கமராவை வைப்பதற்கு இடமில்லாததால் நாம் பார்வையாளர்களை ஏமாற்றவேண்டியிருந்தது. அதற்கு ச்சீற் ஷொட் (cheat shot) எடுக்க வேண்டும். ச்சீற் ஷொட் என்பது, நடராஜசிவத்தின் பக்கத்திலிருந்து படமெடுக்கும்போது கட்டில் சுவருடன் ஒட்டியிருப்பதைப் பார்வையாளர்கள் பார்த்திருப்பார்கள். இப்போது கட்டிலில் படுத்திருக்கும் விஜயாள் பீற்றரின் தலைப்பக்கமாக நின்று படம்பிடிப்பதற்கு இடமில்லாததால் கட்டிலை நகர்த்திப் போதிய இடத்தை எடுத்து அங்கே கமராவை வைத்துப் படமாக்கவேண்டும். இதைப்பார்வையாளர்கள் பார்க்கமுடியாதென்பதால் இது பார்வையாளர்களை ஏமாற்றும் ஷொட் என்று அழைக்கப்படுகிறது. அவ்வாறு கமராவை வைக்கும்போது விஜயாள் பீற்றரின் தலைமாட்டில் இடப்புறத்திலிருக்க வேண்டிய கமரா வலப்புறத்திற்குச் சென்றுவிட்டது. இதை நான் கவனிக்கவில்லை. இதனால் அவர்கள் இருவரும் பார்த்துப் பேசும் திசைகளில் குழப்பமேற்பட்டது. இந்தக் குழப்பத்தை எடிற்றிங் செய்யும் போதுதான் அவதானித்தேன். இதை விளக்குவதற்கு இரண்டு படங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. உற்றுக் கவனித்தால் இந்தத் திசைமாற்றம் புரியும்.

படப்பிடிப்புமுறை பற்றி நன்றாக அறிந்திருந்தும் இப்படி நேர்ந்துவிட்டதேயென்று மிகுந்த மனச்சஞ்சலமும் அதிருப்தியுடைந்தேன். ஆனால் இப்படியான தவறுகள் சிலசமயங்களில் தவிர்க்கமுடியாத வையாகிவிடுகின்றன. இதற்கான பிரதான காரணம், நாம் படப்பிடிப்புத் தளத்திலேயே நின்று நேரடியாகவே காட்சியைப் பார்த்துக்கொண்டிருப்பதால், எமது மூளையில் திசை மாறுகின்ற நினைவு ஏற்படாது. படம்பிடிக்கும்போது முதலில் அந்த நினைவுதான் எமது ஒவ்வொரு கமரா நகர்வின்போதும் ஏற்படவேண்டும். அனுபவம்தான் அத்தகைய அவதான மனநிலையை ஏற்படுத்தும். இதுவரை நான் தந்த நேர்கோடு தாண்டுவதுபற்றிய விளக்கங்கள் உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைத்துக்கொண்டு, அந்த நாடகத்தில் இடம்பெற்ற ஒலிப்பதிவுக் குறைபாடு பற்றி இப்போது பார்ப்போம்.

## ஒலியமைப்பு:

வானொலியை ஒலி ஊடகமென்று சொல்வதுபோல் சினிமா, தொலைக்காட்சி என்பவற்றைக் காட்சி ஊடகங்களென்று பொதுவாகச்சொன்னாலும் அவை ஒலியும் காட்சியும் சேர்ந்த ஊடகங்கள் (audio visual media). ஒலி மிகமிக முக்கியமானது. ஒலியில்லாத காட்சிகள், அவை ஏற்படுத்தவேண்டிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. காட்சிகள் தெளிவில்லாத சினிமாவையோ தொலைக்காட்சிப் படைப்பையோ பார்க்கலாம். ஆனால் ஒலித்தெளிவற்ற சினிமாவையோ தொலைக்காட்சி நிகழ்ச்சியையோ பார்க்கலாமென்றாலும் இரசிக்கமுடியாது. திரையில் கொந்தளிக்கும் கடலையோ வெடிக்கும் எரிமலையையோ திகிலை ஏற்படுத்தும் பேய்ப் படங்களையோ ஒலியில்லாமல் பார்த்தால் அவை பார்வையாளர்களிடையே ஏற்படுத்தவேண்டிய உணர்ச்சிகளை ஏற்படுத்தமாட்டா. இதனால்த்தான் திரைப்படத் தயாரிப்பில் பின்னணி இசை மற்றும் காட்சிகளுக்கேற்ற ஒலிகளின் (sound effects) சேர்க்கை முதலியன மிக முக்கிய பங்கு வகிக்கிறன. இதை விரிவாக ஆராய்ந்தால் ஒலியின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலாம்.

ரூபவாஹினியில் நான் கற்பனைகள் கலையவில்லையென்ற முதல்த் தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்தபோது அக்கால கட்டத்தில் நவீனமாகவிருந்த ஒளியமைப்புக்கும் படப்பிடிப்புக்கும் வேண்டிய உபகரணங்கள் இருந்தாலும் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்புகளின்போது ஒலிப்பதிவுக்குப் பயன்படுத்துவதற்கேற்ற ஒலி உபகரணங்கள் இருக்கவில்லை. ஒலிப்பதிவுக்கு வேண்டிய பிரதான ஒலி உபகரணம் ஒலிவாங்கிகள் (microphones). இவைபற்றி அறிந்துகொள்ள நிறையவே இருக்கின்றன. ஒவ்வொருவகையான நிகழ்ச்சிகளுக்கும், அந்நிகழ்ச்சிகளுக்கேற்ற ஒலிவாங்கிகளை உபயோகிக்கும்போதுதான் ஒலிப்பதிவு சிறப்பாக இருக்கும். தொலைக்காட்சி நாடகம், சினிமா போன்றவற்றின் வெளிப்புறப்படப்பிடிப்புக்கு ஷொட் கண்(shot gun) என்றவகை ஒலிவாங்கியையே பயன்படுத்துவார்கள். ஹொலிவூட் படப்பிடிப்புகள் அனைத்திலும் இவ்வகையான ஒலிவாங்கியே உபயோகிக்கப்படுகிறது. இதை boom mick என்றும் சொல்வார்கள். இந்த வகை ஒலிவாங்கி ஒரு புல்லாங்குழல் போல் நீளமானது. இதைப் பாதுகாப்பாகவும் வேண்டியவாறும் கையாள்வதற்குப்பல துணைக்கருவிகள் இருக்கின்றன. அவற்றைச் சரிவரப்பொருத்தி அந்த மைக்கை நாம் ஒலிப்பதிவுசெய்யவேண்டிய ஒலி வரும் திசையில் மிக நேராகப் பிடித்தால் அந்தத் திசையில் முப்பதுபாகைக் கோணத்திலிருந்து வரும் ஒலியை மிகத் துல்லியமாகப் பதிவுசெய்ய வல்லது இந்த ஒலிவாங்கி. எமக்கு வேண்டிய ஒலியை மிகத்துல்லியமாகப் பதிவுசெய்யும். உதாரணமாக, இரண்டு நடிகர்கள் பேசுகிறார்களென்று வைத்துக்கொண்டால், அவர்களுக்கு நேராக மைக்கைப் பிடிக்கும்போது அவர்கள் பேசுவது மிகத் தெளிவாகவும் புறச்சத்தங்கள் மிகவும் சிறியளவிலும் கேட்கும் வகையில் பதிவாகும். நவீன ஒலித்தொகுப்பு உபகரணங்களில் அந்தச் சிறிய ஒலிகளை அகற்றக்கூடிய வசதி இருக்கிறது. ஷொட் கண் மைக்குகள் மிகக்குறிபார்த்து (highly directinol) ஒலியை வாங்குவதால் அவற்றுக்கு அந்தப் பெயரிடப்பட்டுள்ளது. ஒலிப்பதிவு செய்பவர் ஒலிவாங்கியைச் சரியாகக் குறி பார்த்துப் பிடிக்கவேண்டும். நடிகர்கள் பேசுவதை நிறுத்தினால் அந்தத் திசையிலிருந்துவரும் வேறு ஒலிகளை அது நன்றாக ஏற்றுக்கொள்ளும். ஹொலிவூட்டிலும் மேலைநாடுகளிலும் இந்த ஒலிவாங்கியைப் பயன்படுத்துவதால் அவர்களின் தயாரிப்புகளில் ஒலித்துல்லியம் மிகவும் உயர்ந்ததாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கிறது.

படப்பிடிப்பின் ஒலிப்பதிவில் சவுண்ட் பெர்ஸ்பெக்ரிவ் (sound perspective) என்றொரு அம்சமிருக்கிறது. ஒரு ஒலியை எவ்வளவு தூரத்தில், எந்தச் சூழலில், எந்த நிலையில் கேட்கிறோமோ அதை அப்படியே யதார்த்தமாகப் பார்வையாளர்களை உணரவைப்பதுதான் சவுண்ட்



நடராஜசிவம் கமராவின் இடதுபுறத்திலிருந்து வலதுபுறத்திலிருக்கும் விஜயாள் பீற்றரைப் பார்த்துப் பேசுகிறார்.



இப்போது கோடுதாண்டியதால் நடராஜசிவம் கமராவின் வலதுபுறத்திலிருந்து இடதுபுறத்திலிருக்கும் விஜயாள் பீற்றரைப் பார்க்கின்றார்.

தொடர்தல் 68ம் பக்கம்

# தொலைக்காட்சி...

**67ம் பக்கத் தொடர்ச்சி...**

பெர்ஸ்பெக்ரிவ். ஷொட் கண் ஒலிவாங்கியைப் பாவித்துப் படம்பிடித்தால் அந்த யதார்த்தத்தைப் பெறலாம். தூரக்காட்சியில் நின்று பேசுவதற்கும் அண்மைக்காட்சியில் நின்று பேசுவதற்குமிடையேயான வித்தியாசத்தை உணரலாம். இது பார்வையாளர்களைத் திரைக்காட்சியில் ஒன்றச்செய்கிறது. படம்பிடிக்கும்போதே ஒலியையும் பதிவுசெய்வதை நேரடி ஒலிப்பதிவு (live recording) என்று சொல்வார்கள். துரதிஷ்டவசமாக எமக்குப் பரிச்சயமான இந்தியப் படங்களில் இத்தகைய ஒலிப்பதிவு இடம்பெறுவதில்லை. விரைவாகப் படம்பிடிப்பதற்காகவும் அனேகமான நடிகர்கள் குறிப்பாக, நடிகைகள் சரியாகத் தமிழ் பேசத் தெரியாதவர்கள் என்பதாலும் படப்பிடிப்பின்போது பாத்திரங்கள் பேசுவதைச் சரியாக ஒலிப்பதிவுசெய்யாது, ஒரு ஒலிவாங்கியை வைத்து மேலோட்டமாக ஒலிப்பதிவு செய்வார்கள். பின்னர் டப்பிங்கின்போது (dubbing), படப்பிடிப்பின்போது பதிவுசெய்யப்பட்ட ஒலியைக்கேட்டு, வசனங்களைச் சரியாக எழுதி, அவற்றை நடிகர்கள் உரிய உணர்ச்சிகளுடன் பேசி, இறுதி ஒலியைப் பதிவுசெய்கிறார்கள். இது படப்பிடிப்பைத் துரிதமாகச் செய்வதற்கான ஒரு வழியாகும். ஏனெனில், முகபாவங்களுடன் நடிப்பது எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியம் அல்லது அதைவிட முக்கியமென்று கூடச் சொல்லலாம், குரலால் நடிப்பது. ஒரு வெளிப்புறப் படப்பிடிப்பில் வைத்து நடிகர்களுக்கு அந்தக் குரல்நடிப்பைச் சொல்லிக்கொடுத்துச் சரியாக அவர்களிடமிருந்து நடிப்பைப்பெறமுடியாது. ஒரு டப்பிங் கலையகத்தில்வைத்துப் போதிய பயிற்சிவழங்கியோ அல்லது குரலால் நடிக்கக்கூடிய கலைஞர்களின் குரலைப் பாவித்தோ இந்த ஒலிப்பதிவு நடைபெறுகிறது. கலையக ஒலிப்பதிவில் நான் குறிப்பிட்ட சவுண்ட் பெர்ஸ்பெற்ரிவ் - ஒலிவேறுபாடுகளைப் பெறமுடியாது. மிகத் தொலைவுக் காட்சியில், ஒரு மலை உச்சியில் நின்று பேசுபவரின் குரலும் அருகே நின்று பேசுபவரின் குரலும் ஒரேயளவிலேயே கேட்கும். ஒலி யதார்த்தத்தை இந்திய திரைப்படங்களிலே நாம் அவ்வளவாகக் கேட்கமுடியாது. இப்போது ஒலிப்பதிவுத் தொழில்நுட்பத் துறையில் அங்கும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இனி, எனது முதல்நாடகத் தயாரிப்பின் ஒலிப்பதிவுபற்றிப் பார்ப்போம். அதைத் தயாரித்தபோது ஷொட் கண் மைக் இல்லாததால் கலையகங்களில் நேர்முக நிகழ்ச்சிகளுக்குப் பாவிக்கும் லவலியர் (lavalier) ஒலிவாங்கிகளையே பாவித்தோம். தொலைக்காட்சிச் செவ்வி நிகழ்ச்சிகளின்போதும் செய்தி வாசிக்கும் போதும் ஆடைகளில் பொருத்தப்பட்டிருக்கும் சிறிய ஒலிவாங்கியே லவலியர் மைக். ஒரு நீண்ட கம்பியில் (boom pole) அதைக் கட்டி எடுக்கப்படும் காட்சியில் சட்டகத்திற்குள் தெரியாதவாறு ஒலிப்பதிவாளர் மேலே பிடித்துக்கொள்வார். அந்த ஒலிவாங்கியைப் பாவித்தே கற்பனைகள் கலையவில்லை நாடகத்தின் ஒலிப்பதிவு மேற்கொள்ளப்பட்டது. இந்தவகை லவலியர் மைக்குகள் வாய்க்கு மிக அருகிலிருந்தால்தான் தரமான ஒலியைப் பெறமுடியும். எமது படப்பிடிப்பில் இந்த மைக்கைத் தூரப்பிடித்ததாலும் படப்பிடிப்பு நடந்த இடம் கலையகங்கள்போன்று முறைப்படி ஒலித்தெறிப்புக் கட்டுப்பாடு (acoustic)செய்யப்படாததாலும் எமது ஒலிப்பதிவு தரமற்றதாக அமைந்தது.


அந்த நாடகத்தில் பாத்திரங்களின் உரையாடல்கள் மட்டுமல்ல, நான் அவசரத்தில் இசையமைப்பாளர் கண்ணனைக் கொண்டு ஒரு சிறிய இசைக்கருவிமூலம் இசைப்பித்துப் பின்னணியிசை சேர்த்தால் அந்தப் பின்னணியிசையின் ஒலித்தரமும் நன்றாக இருக்கவில்லை. இது அந்த நாடகத்தில் இருந்த பிரதான குறைகளுள் ஒன்று. நாடகம் ஒளிபரப்பப்பட்டுச் சில நாட்களுக்குள்ளேயே தரமான வெளிப்புறப் படப்பிடிப்புக்கான ஒலிப்பதிவுக்கருவிகளான ஷொட் கண் மைக் மற்றும் சிறிய ஓடியோ மிக்ஸர் (audio mixer)முதலியன வாங்கப்பட்டன. அதன் பின்னர் ரூபவாஹினியில் தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் தரமான ஒலியமைப்பைக்கொண்டிருந்தன. ரூபவாஹினி நாடகங்கள் டப் செய்யப்படுவதில்லை. மேலைநாட்டுப் படப்பிடிப்பு முறையிலேயே தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஒளியமைப்பு:

சினிமா, தொலைக்காட்சி நாடகங்களில் காட்சிகளுக்கு யதார்த்தத்தைக் கொண்டுவரும் மற்றுமொரு முக்கிய அம்சம் ஒளியமைப்பு. சாதாரணமாகக் கலையகங்களில் தயாரிக்கப்படும் சகல நிகழ்ச்சிகளுக்கும் அரங்கத்திலுள்ள அனைத்தும் மிகத் தெளிவாகத் தெரியும்வகையில் பிரகாசமாக ஒளியமைப்புச் செய்யப்படுகிறது. ஆனால் சினிமா, நாடகம் போன்றவற்றில் ஒளிப்பதிவுசெய்யப்படும் காட்சி நடைபெறும் நேரம் இரவா, பகலா? பகலாயின் காலையிலா மத்தியானத்திலா மாலையிலா? வீட்டினுள்ளேயா வெளிப்புறத்திலா? எனப் பலவற்றைக் கருத்திற்கொண்டே ஒளியமைப்புச் செய்யப்படுகிறது. இத்தகைய ஒளியமைப்பைச் செய்வதற்குக் கலைத்துவமான பார்வையும் ஒளியமைப்புப்பற்றிய ஆழ்ந்த அறிவும் அந்த அறிவைச் செயலில்செய்து சிறந்த பெறுபேற்றைப் பெறக்கூடிய திறமையுமிருக்க வேண்டும்.

தொலைக்காட்சி நாடகம், சினிமா ஆகியவற்றில் ஒளியமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு இயற்கைத் தன்மையுடனிருக்கிறதோ அதுதான் சிறந்த ஒளியமைப்பாகும். இயற்கையான வெளிச்சத்தை கலைத்துவமாக மெருகேற்றுவது போர்ட்றெயிற் லைற்றிங் (portrait lighting) வகையைச் சேர்ந்தது. அத்தகைய ஒளியமைப்புக்குத்தான் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஒளியமைப்பைச் செய்வதற்கு தத்ரூபமான ஓவியங்களை வரையக்கூடிய ஓவியர்களுக்குரிய பார்வை வேண்டும். ஒளியையும் நிழலையும் மிகச்சரியாகத் தமது ஓவியங்களில் காட்டும் ஓவியர்கள் மிகப் புகழ்பெறுகிறார்கள். பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய தத்ரூபமான ஓவியங்களைத் தீட்டும் ஓவியர்கள் மிகப் பிரசித்திபெற்று விளங்கினார்கள். அவர்களுள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த றெம்ப்றான்ட் (Rembrandt) என்ற டச்சு ஓவியர் தனது ஓவியங்களில் இந்த ஒளியையும் நிழலையும் சரிவரக் கையாள்வதில் மேதையென்று போற்றப்பட்டவர். இப்போதும் போற்றப்படுகிறார். நவீன ஒளியமைப்பில் றெம்பிறாண்ட் லைற்றிங் என்ற ஒளியமைப்பு வகை இருக்கிறது. கலையகத்தில் ஒருவருக்குச் சரியான வகையில் போர்ட்றெயிற் ஒளியமைப்புச் செய்தால் அவரின் ஒருபக்கக் கன்னத்தில் முக்கோண வடிவத்தில் ஒளி தெரியும். அதை றெம்ப்றான்ட் முக்கோணம் (Rembrandt triangle) என்று சொல்வார்கள். ஒளியமைப்பென்பது ஒளிப்பதிவின் உயிர்நாடி. இந்த ஒளியமைப்பைப் பெரும்பாலும் படப்பிடிப்பாளர்களே (cinematographer) செய்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான் தன்னை ஒளி ஓவியர் என்று குறிப்பிடுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் தொலைக்காட்சி நிலையங்களில் ஒளியமைப்பு இயக்குனர் (lighting director)ஒருவரும் படப்பிடிப்பாளரென்று இன்னொருவரும் பணியாற்றுகிறார்கள். ரூபவாஹினியில் அவ்வாறுதானிருந்தது. ஆனால் ஒளியமைப்பு இயக்குனரும் படப்பிடிப்பாளரும் ஒன்றிணைந்து தமது பணிகளைச் செய்வார்கள்.

கலையகத்தில் அரங்குகளுக்கோ அல்லது மேடை நிகழ்ச்சிகளுக்கோ ஒளியமைப்புச் செய்வது சினிமா, நாடகங்களுக்கு ஒளியமைப்புச் செய்வதோடு ஒப்பிடும்போது இலகுவானது. அதில் கமராவை எந்த இடத்தில் பிடித்தாலும் பளிச்சென்று அனைத்தும் தெரியவேண்டுமென்பதே பிரதானம். இந்தவகை ஒளியமைப்பே ஆரம்பகால இந்திய வர்ணத்திரைப்படங்



இடதுபக்கக் கன்னத்தில் றெம்ப்றான்ட் ஒளிமுக்கோணம் தெரிகிறது.

களில் மேற்கொள்ளப்பட்டது. ஹொலிவூட் திரைப்படங்களில் நகைச்சுவை மற்றும் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதற்கெனத் (entertainment)தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு இத்தகைய ஒளியமைப்பே பிரதானமாகச் செய்யப்படுகின்றது. எனக்குப் பயிற்சியளித்த ஒரு வெளிநாட்டவர் இத்தகைய ஒளியமைப்பை ஒளியமைப்பு (lighting) என்று சொல்லமாட்டார். வெளிச்சம்போடுதல் (illuminating) என்று சொல்வார்.

சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் கதையில் நடைபெறும் சம்பவங்களுக்கேற்ப இயற்கைத் தன்மையோடு ஒளிப்பதிவு செய்யப்படுகிறது. இந்த வகை ஒளிப்பதிவில் ஒளியும் நிழலும் கலந்திருக்கும். இந்த ஒளி - இருட்டுக் கலவை நான் முன்பு குறிப்பிட்ட இரவா பகலா, பகலென்றால் எந்த நேரத்தில் போன்ற விடயங்களைப்பொறுத்து வேறுபடும். இந்த ஒளியமைப்பைச் செய்யும் ஒளியமைப்பாளர் பிரதானமாகக் கவனிப்பது ஒளியின் மூலத்தை (light source). காட்சி நடைபெறுமிடத்துக்கு எந்தப்பக்கத்திலிருந்து பிரதான ஒளி கிடைக்கிறதென்பதே ஒளியின் மூலம். உதாரணத்திற்கு, ஒரு அறையில் காட்சி நடைபெறுகிறதென்றால் அது பகல்நேரமாக இருப்பின் அவ்வறையின் யன்னலினூடாகப் பிரதான ஒளி கிடைக்கும். எனவே கீ லைட் எனப்படும் பிரதான விளக்கை அந்த யன்னலின் பக்கத்திலே வைக்கவேண்டும். அப்படி வரும் ஒளி ஒருவரது முகத்திலோ பொருளிலோ விழும்போது எதிர்ப்புறத்தில் ஏற்படுத்தும் இருளின் செறிவு, படமாக்கப்படும் காட்சியில் இடம்பெறும் நிகழ்ச்சி ஒருநாளில் எந்தநேரத்தில் நிகழ்கிறது என்பதைப்பொறுத்து வேறுபடும். உதாரணத்திற்கு, ஒரு வீட்டிற்குள் காலைநேரத்தில் யன்னலருகே இருப்பவரைப் படம்பிடிப்பதென்றால் காலைநேர வெய்யிலில் சிறிதளவு மஞ்சள்நிறம் கலந்திருக்குமாகையால் அத்தகைய வெளிச்சம் யன்னல்ப்பக்கத்திலிருந்து அவரின் மீது விழும்படி பாய்ச்சப்படும். காலைநேரத்தில் வீட்டிற்குள் பிரகாசம் குறைவாக இருக்குமென்பதால் அவரது அடுத்தபக்கத்தில் ஏற்படும் இருள் சற்றுக் கூடுதலாக இருக்கும். அதேபோல் அவர் மதியவேளையில் அதேயிடத்தில் இருந்தால் பரவலாக எல்லா இடமுமே பிரகாசமாக இருக்கும். யன்னல்ப்பக்கத்திலிருந்து பாய்ச்சப்படும் ஒளி நீலநிறம் கலந்ததாக இருக்கும். அத்தோடு அதன் செறிவும் குறைந்து பரவலாகத் தெரியும். அவரது முகத்தின் மறுபக்கத்தில் ஏற்படும் இருள் மிகவும் மென்மையாக இருக்கும். இந்த அடிப்படையிலேயே முழுக்காட்சிக்கும் ஒளியமைப்புச் செய்யப்படும். அவ்வாறு செய்யும்போது அந்தக் காட்சியில் யதார்த்தத் தன்மை மேம்பட்டிருக்கும். இப்படியான ஒளியமைப்பைச் சரியாகச் செய்வதற்கு நீண்டநேரமெடுக்கும். நீண்டநேரமென்னும்போது தயாரிப்புச் செலவும் அதிகரிக்கும். எனவேதான் இந்தியத் திரைப்படங்களிலே ஹொலிவூட் திரைப்படங்களிலோ அல்லது மேலைநாட்டுத் திரைப்படங்களிலோ காணப்படும் ஒளியமைப்பு நேர்த்தி இருப்பதில்லை. மேலைநாட்டுத் திரைப் படங்களில் மிகவும் யதார்த்தமாக இந்த ஒளி - இருள் கலவை இருப்பதைக் காணலாம். கண்ணை உறுத்தாதவிதத்தில் திரைப்படத்தின் வர்ணமிருக்கும்.

எந்தக் கலையையும் மிகைப்படுத்தி வழங்குதல்தான் கீழைத்தேய குறிப்பாக, இந்தியக் கலாச்சார வழக்கம். அந்த இரசனை ஒளியமைப்புக் கலையிலும் பிரதிபலிக்கிறது. இந்தியாவில் சிறந்த ஒளியமைப்பாளர்கள் மற்றும் கமராக் கலைஞர்கள் என்று போற்றப்படுபவர்களும் சற்று மிகைப்படுத்தியே ஒளியமைப்புச் செய்கிறார்கள். இதைக் குற்றமென்று சொல்லவில்லை. எமது இரசனைக்கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு என்று சொல்கிறேன்.

எனது முதல்த் தொலைக்காட்சி நாடகத்திற்கு ரன்டோல்ஃப் பெரேரா ஒளியமைப்புச் செய்திருந்தார். இவர் என்னுடன் மலேஷியாவுக்கு வந்து பயிற்சிபெற்றவர். இந்த நாடகத்தை நான் மிகவும் துரித கதியில் தயாரித்ததால் நேரம் கருதி யதார்த்தமான ஒளியமைப்பைச் செய்யாது, மிகப் பிரகாசமான ஒளியமைப்பையே செய்திருந்தார்.

ஒளியமைப்பென்பது மிக நுட்பமான கலை. அதற்கு இரசனையும் அறிவும் அனுபவமும் தேவையென்பதோடு, அதைச் சரியாகச் செய்வதற்குத் தேவையான ஒளி உபகரணங்களான ஒளிவிளக்குகள், ஒளியின் தன்மையை மாற்றும் ஃபில்ற்றேர்ஸ் (filters), ஒளியின் செறிவைக் கட்டுப்படுத்தும் டிஃபியூஸர் (defiuser), ஒளியைச் சீர்செய்யும் (reflector), ஒளியின் அளவை அளக்கும் கருவியென்று பல கருவிகள் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அதனை நுட்பமாகச் செய்வதற்கான கால அவகாசமும் பணமும் வேண்டும்.

தற்காலத்தில் சினிமா, தொலைக்காட்சி

*தொடர்தல் 69ம் பக்கம்*



# தொலைக்காட்சி...

68ம் பக்கத் தொடர்ச்சி...

நாடகங்கள் தயாரிப்பவர்கள் அதிகம் சிரமப்படவேண்டியதில்லை. கிடைக்கும் இயற்கையான வெளிச்சத்தை மட்டுமே பயன்படுத்தி, அவற்றை மேலும் மெருகு படுத்தி சிறப்பாகப் படம்பிடிக்கக்கூடிய படப்பிடிப்புக் கருவிகள் (cameras) பாவ னைக்கு வந்துவிட்டன. கைத்தொலைபே சியிலேயே எந்தச் சூழ்நிலையிலும் சிறந்த ஒளியமைப்புடன்கூடிய படங்களைப் பிடிக் கக்கூடிய நிலை வந்துவிட்டது. இவை யெல்லாம் தாமாகவே (automatic) நடை-பெறுகின்றன. இருந்தபோதிலும் நான் ஒளியமைப்புப்பற்றி மேலே கூறிய அடிப் படைகளைத் தெரிந்து வைத்திருப்பது எமக்கு எமது துறையில் ஆளுமையை ஏற்படுத்தும். எனது முதல்ப் படைப்பின் போது நாம் பாடமாகவும் பயிற்சியாகவும் கற்றுக்கொண்டபடி நான் மட்டுமல்ல, அதில் பங்குபற்றிய அனைத்துத் தொழில் நுட்பக் கலைஞர்களும் தமது பங்களிப் பைச் செய்தார்களா என்றால் இல்லை யென்பதே எனது பதில். பாடமாகக் கற் றுக்கொள்வதைச் செயலில் செய்வதற்கு மிகுந்த அனுபவம் வேண்டும்.

அனுபவம் கூடக்கூட எமக்குச் சாத்திய மாகக்கூடிய கால அளவுக்குள்ளேயே படப்பிடிப்பில் நேர்த்தியைக்கொண்டு வரக் கூடிய திறமை அதிகரிக்கும். ஒரு தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பின் போது அதில்ப் பங்குபற்றும் அனைவ ருமே தொழில்முறைக் கலைஞர்களாக இருந்துவிட்டால் அந்தத் தயாரிப்பில் மிகுந்த சிரமமிருக்காது. துரதிஷ்டவசமாகத் தமிழில் வேண்டிய அளவு தொழில் முறைக்கலைஞர்கள் குறிப்பாக, நடிகர் கள் இல்லாத காரணத்தினால் எனது தயாரிப்புப் பணிகளின் போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கினேன்.

மேலும் ஒரு நாடகத்தை வெளிப்புறப்ப டப்பிடிப்பாகத் தயாரிப்பது மிகுந்த சிரம மானது. எப்படித்தான் திட்டமிட்டாலும் நாம் எதிர்பாராத பல தடைகள் படப்பிடிப்பை திட்டமிட்டவாறு மேற்கொள்ள இயலாத வாறு செய்துவிடுகின்றன. நான் மலை-யோரம் வீசும் காற்று தொடர் நாடகத்தை மலையகத்தில் தயாரித்தபோது சிலசம யங்களில் மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்த மழைகாரணமாகப் படப்பிடிப் புத் தடைப்பட்டிருக்கிறது. பல தடவைகள் படப்பிடிப்பின்போது படத்தில் சீரான ஒளியமைப்பைப்பேணுவதில் சிரமமேற் பட்டது. உதாரணத்திற்கு, நாம் படப்பி டிப்பை ஆரம்பிக்கும்போது வானம் சீரா கப் பிரகாசமாக இருக்கும். அந்த ஒளிக் கேற்றவாறு கமராவில் வைற் பலன்ஸ் (white balance)வைத்து ஒளிப்பதிவைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கும்போது திடீரெனப் பெரும் முகிற்கூட்டம் சூரியனை மறைத்து ஒளி மங்கிவிடும். இப்போது நாம் அந்த முகிற்கூட்டம் விலகும்வரை காத்திருக்கவேண்டும். சிலவேளைகளில் அந்த முகிற்கூட்டம் விரைவில் விலகா-தென்று தெரியவரும்போது, அந்த வெளிச் சத்திற்கேற்றவாறு கமராவைத் தயார் செய்து எடுத்த காட்சிகளை மீண்டும் எடுத்துப் படப்பிடிப்பைத் தொடரவேண் டும். சீரான ஒளிநேர்த்தியைக் கருத்திற் கொள்ளாது படப்பிடிப்பை நடத்துவதென் றால் இவற்றைப் பொருட்படுத்தவேண்டி யதில்லை. அதேபோல் ஒலித்தொடர்ச்சி யைப் (sound continuity) பேணுவதிலும் பிரச்சினைகள் ஏற்படும். ஷொட் கண் மைக் நடிகர்கள் பேசுவதைத்தான் பிரதா னமாக எடுத்துக்கொள்ளுமென்றாலும் சுற்றுச்சூழல் சத்தத்தையும் சிறிதளவில் எடுத்துக்கொள்ளும். இதை அம்பியன்ற் சவுண்ட் (ambient sound) என்று ஆங்கிலத் தில் கூறுவார்கள். இந்தச் சுற்றுச்சூழல் ஒலி குறிப்பிட்ட காட்சி முடியும்வரை ஒரே தன்மையுடையதாக இருக்கவேண்டும். இந்த ஒலியில் மாறாத் தன்மையைப் பேணுவதில் சிலவேளைகளில் மிகுந்த சிரமமேற்படும். உதாரணமாக ஒரு காட் சியை ஒரு கோணத்தில் வைத்துப் பட மாக்கும்போது அந்தக் கோணத்திலிருந்து வரும் ஒலியைப் பதிவுசெய்கிறோம். அப் போது தூரத்தில் ஒரு கோவிலில் திடீ-ரென்று சினிமாப்பாடல்களை ஒலிபெருக் கியில் ஒலிபெருக்கினால் அந்தப் பாடல் களும் தூரத்திலிருந்து கேட்பதுபோலப் பதிவாகும். பின்னர் அந்தக் காட்சியை மறுகோணத்தில் வைத்துப் படமாக்கும் போது அந்தக் கோணத்தில் அந்தப் பாடல் ஒலிப்பதிவாகமாட்டாது. பின்னர் எடிற்றிங் கில் இவை ஷொட் பை ஷொட் முறை யாகத் தொகுக்கப்படும்போது, ஒரு ஷொட்டில் கேட்கும் ஒலி மறு ஷொட்டில் கேட்காமல் ஒலியமைப்பின் சீரற்ற தன்மை தெளிவாகத் தெரியும்.

## ஸும் ஷொட் (zoom shot):

இந்த இடத்தில் படப்பிடிப்புப்பற்றி எமக் குக் கற்பித்தவற்றில் மிக முக்கியமான ஒன்றைக் கூறுவது அவசியமென்று நினைக் கிறேன். இதை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரண்டு விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஸும் இன் (zoom in) என்பது, ஒரு காட்சியை அல்லது பொருளை அண்மையில் பார்த்தல். ஸும் அவுட் (zoom out) என்பது ஒரு காட்சியை விரி வாகவும் தூரமாகவும் பார்த்தல்.

காட்சிகளைப் படம்பிடிப்பதற்குப் பலவித ஷொட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை எவரும் மிக இலகுவாகப் புத் தகங்களிலோ அல்லது கூகிளிலோ பார்த்து அறிந்துகொள்ளலாம். எப்படித் தான் இவற்றைத் தெரிந்துகொண்டாலும் அவற்றை எவ்வாறு பாவிப்பதென்பது தனிப்பட்டவர்களின் திறமையையும் இரச னையையும் பொறுத்தவிடயம். ஷொட்க ளைப் பிரிப்பதற்குக் காரணாகாரிய (logic)அறிவும் காட்சிகள் ஏற்படுத்த வேண்டிய உணர்வுகளைப் புரிந்துகொள் ளக்கூடிய மனமும் முக்கியம். இதனால் தான் ஒவ்வொரு படைப்பும் வேறுபடுகிறது.

நாம் கமராவைக் கையாள்வதில் சோம்பே றிகளாக இருக்கிறோமென்று எமக்குப் பயிற்சியளித்த மேலைநாட்டு விற்பன்னர் கள் அடிக்கடி கூறுவார்கள். குறிப்பாக, இந்தியத்திரைப்படங்களில் படப்பிடிப்பாளர் கள் ஸூமை (zoom) அனாவசியமாகப் பயன்படுத்துகிறார்களென்பது மேலை நாட்டு விற்பன்னர்களின் கருத்து. (zoom) என்பது காட்டுவிலங்குகளை அல்லது விளையாட்டுப்போட்டிகளை மற்றும் வெகு தூரத்தில் நடப்பவற்றைப் படமாக்குவதற் காக ஏற்படுத்தப்பட்ட ஒரு படப்பிடிப்புத் தொழில்நுட்பம். ஸும் ஷொட்களினால் (zoom shot) நாம் ஒன்றைக் கிட்டவாகப் பார்க்கலாமேயன்றி, ஒரு காட்சிக்குத் தேவையான பரிமாணம் மற்றும் தூரவே றுபாடுகளை (depth of field) உணரமுடி யாது. மேலும், நடைமுறையில் நாம் ஒன் றைக் கிட்டவாகப் பார்க்கவேண்டுமானால் அதனருகேசென்று பார்க்கவேண்டும். இதைத்தான் டொலி ஷொட் (dolly shot) எனப்படும், கமராவை முன்னோக்கியோ அல்லது பினோக்கியோ நகர்த்திப் படம் பிடிக்கும் முறை செய்கிறது. இது இயற் கையானது. மாறாக, ஸும் ஷொட் காட் சிகளை எம்மைநோக்கி இழுத்துவருகின் றது அல்லது தள்ளிப்போகச் செய்கிறது. இது இயற்கைக்கு மாறானது. எனவே, ஸும் ஷொட்களைப் பாவிப்பது சினிமா, நாடகம் போன்றவற்றில் தவிர்க்கப்பட வேண்டுமென்று எமக்குக் கற்றுத்தரப்பட் டது.

எமக்குக் கற்பித்த விற்பன்னர், தான் ஒருமுறை கீழைத்தேய நாடொன்றிற்குப் பயிற்சியளிப்பதற்கெனச் சென்றிருந்த போது, கலையகப் படப்பிடிப்பாளர்கள் கலையகத்திலிருக்கும் பெரிய கமராக்க ளினருகே கதிரைகளைப்போட்டு அதில் அமர்ந்துகொண்டு, கமராக்களை அங் கிங்கு நகர்த்திப் படம்பிடிக்காது, ஸூமைப் பாவித்துப் படம்பிடித்துக்கொண்டிருந்ததை அவதானித்ததாகவும் உடனேயே தான் கலையகத்திலுள்ள கதிரைகளை அகற் றுமாறு பணித்ததாகவும் சொன்னார்.

அவர் ஸூமைப்பற்றிக் கூறியபின்னர் நான் மேலைநாட்டுப் படங்களை உன்னிப்பாகப் பார்த்தபோது அவற்றில் ஸும் காட்சிகள் பெரும்பாலும் இடம்பெறுவதில்லையென் பதையும் போர்க்காட்சிகளையும் காட்டில் இடம்பெறும் கதைகளையும் கொண்ட சினிமாக்களில் தேவையான இடங்களில் ஸும் காட்சிகள் இடம்பெறுவதையும் அவ தானித்தேன். மிகவும் அவசியமான இடங்க ளில் ஸூமைப் பாவிக்கலாம். நான் எனது நாடகங்களில் சில ஆரம்பக் காட்சிகளில் (establishing shot)ஸும் பாவித்திருக்கிறேன். அப்படிப் பாவிக்கும்போது, பார்வையா ளர்களிடையே ஒருவித வியப்பை உண் டாக்கலாம். உதாரணமாக, ஆரம்பச் சட்ட கத்தில் (frame) ஒரு தனி வீட்டைமட்டும் காட்டிவிட்டுப் பின்னர் மெல்லமெல்ல ஸும் அவுட் செய்யும்போது அந்த வீடு மிகவும் அழகான ஒரு மலைப்பிரதேசத் தில் அமைந்திருப்பது நேயர்களுக்குத் தெரியவரும். அந்த ஸும் அவுட் ஷொட் அதற்கேற்ற இசையுடன் திரையில் விரி யும்போது பார்வையாளர்களிடையே ஒரு வித வியப்பை உண்டாக்கும். இந்தவகை ஷொட்களை, தெரியப்படுத்தும் ஷொட்கள் (revealing shot) என்றும் அழைப்பார்கள். தெரியாதிருப்பதைத் தெரியப்படுத்துவ தென்பது இதன் அர்த்தம். இத்தகைய ஷொட்கள்மூலம் காட்சிகளுக்கு சுவாரஸ் யம்கூட்டிப் பார்வையாளர்களிடையே பிர மிப்பு, திகைப்பு, மகிழ்ச்சி முதலிய உணர் வுகளை ஏற்படுத்தலாம். கமரா ஓரிடத் தில் நிலைத்துநிற்க அதன் தலைப்பாகத் தைமட்டும் இடம்வலமாக அசைத்துப் படம்பிடிக்கும் பானிங் ஷொட் (panning shot)களும் இந்தவகையைச்சேர்ந்தவையே. பானிங் ஷொட்டை ஒரு பிரதேசத்தை முழுமையாகக் காட்டுவதற்கும் பயன்ப டுத்தலாம். அதேநேரம் நாடகங்களில் திகிலை உண்டாக்குவதற்கும் பயன்படுத்த லாம். உதாரணமாக, ஒரு பூந்தோட்டத்தில் ஒரு அழகிய பெண் சுற்றுச்சூழலில் இல யித்திருப்பதைக் காட்டும் கமரா அப்ப டியே பான்செய்து, பான்செய்யும்போதே ஸும் இனனும் செய்து, மிக அருகேதெரி யக்கூடியதாக ஒரு புதரில் அந்தப் பெண் ணைக் கொலைசெய்ய வந்திருக்கும் வில் லன் துப்பாக்கியினால் குறிபார்த்துக் கொண்டிருக்கும் காட்சியில் முடிக்கும் போது இரசிகர்களுக்குப் திகில் ஏற்படுகி றது. பான் செய்யும்போதே ஸும்செய்து ஒரு குறித்த இடத்திற்கு க்ளோஸ் அப் போகும் ஷொட்டை எடுப்பது இலகுவான செயலல்ல. படப்பிடிப்பாளர் பலமுறை ஒத்திகைபார்த்தே அதைச் செய்வார். இப்படி எந்தக் கமரா ஷொட்களையும் மிகவும் அர்த்தத்துடன் பயன்படுத்தும் போதுதான் இயக்குனரின் திறமை வெளிப் படுகிறது.

நான் கூறும் இவையாவும் மிக விரிவாகக் கற்கவேண்டியவை. எனினும், நான் இங்கு மேலோட்டமாகக் கூறுபவற்றை அடிப்ப டையாகக்கொண்டு ஆர்வமுள்ளவர்கள் மிக விரிவாகச்சிந்தித்தால் இந்தத் தொழில் நுட்பங்களை விளங்கிக்கொள்வதோடு, ஒரு தொலைக்காட்சி நாடகம் அல்லது சினிமாத் தயாரிப்பிலுள்ள கஷ்டங்களை யும் உணரமுடியும். அதுமட்டுமல்ல, தயா ரிப்பு நுணுக்கங்களைத் தெரிந்துகொள் வது தொலைக்காட்சி நாடகங்களையோ திரைப்படங்களையோ மேலும் ஆழமாக இரசிப்பதற்கும் உதவும்.

எமது முதல் நாடகம் நான் இங்கு தெரி வித்துள்ள ஒரு தொலைக்காட்சி நாடகத் தயாரிப்புக்கு வேண்டிய சகல தயாரிப்பு நுணுக்கங்களையும் பரிபூரணமாகக் கொண் டிருக்கவில்லைத்தான். இருந்தாலும் இலங் கையின் முதல்த் தொலைக்காட்சி நாட கமாக மக்களின் மிகுந்த பாராட்டைப்பெ றுமளவுக்கு அதன் தரம் இருந்தது.

அது முதல்த் தயாரிப்புத்தானே, பாராட் டுவதுதான் நாகரீகமென்ற மனநிலையிலோ எமது படைப்புகளை நாம் ஆதரிக்க வேண்டுமென்ற அரசியல்த்தனமான கோணத்திலோ அல்லாமல் எம்மவர்கள் அதனை மனப்பூர்வமாக இரசித்தார்க ளென்பதை என்னால் உணரமுடிந்தது.

எந்தவொரு கலைப்படைப்பையும் அதன் பூரணமான படைப்புத்தரத்தைக்கொண்டு தான் அளவிடவேண்டுமென்பது கட்டாய விதி மட்டுமல்ல, அப்படியான படைப்பு கள்தான் பார்வையாளர்களால் வரவேற் கப்படுகின்றன. ஒரு படைப்பின் சகல அம்சங்களிலும் பூரணநேர்த்தி (perfec-tion)பேணப்படவேண்டும். நேர்த்தியென் பது படைப்பாளிகளின் தாரகமந்திரமாக இருக்கவேண்டும். ஒரு படைப்பை நேர்த் தியாகச் செய்வதற்குத் திறமையும் போது மான பணமும் வேண்டும். ஒரு தயாரிப்பை நன்கு திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு அதற்குரிய பணம் இல்லாவிட்டால் இருப் பதைக்கொண்டு ஒப்பேற்றுகின்ற படைப் பாக மாத்திரமே அது பெரும்பாலும் அமைந்துவிடும். அத்தகைய படைப்புகளை வைத்துக்கொண்டு மக்கள் அவற்றை ஆதரிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதும் எமது படைப்புகளை எமது மக்கள்தான் ஆதரிக்கவேண்டுமென்ற கோஷத்தை வைத்து மக்களை வற்புறுத்துவதும் ஒரு போதும் வெற்றியளிக்காது.

இலங்கையில் எமது காலத்தில் வானொலி நாடகங்களும் பின்னர் ரூபவாஹினியில் தயாரிக்கப்பட்ட தமிழ் நாடகங்களும் மக்களிடையே பெரும் வரவேற்றைப்பெற் றன. அதேவேளை, கிட்டத்தட்ட அறுபது வருடங்களாக இலங்கையில் தனிப்பட்ட வர்களால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்க ளில் சிலவற்றைத்தவிர மற்றையவை மக் களிடையே வரவேற்பைப்பெறவில்லை. இவ்வளவற்றிற்கும் வானொலி நாடகங் களோ ரூபவாஹினித் தமிழ்த் தொலைக் காட்சி நாடகங்களோ, சினிமாப் பாணி யில் கவர்ச்சியம்சங்களைக் கொண்டன வாகவோ அல்லது இந்தியப் பேச்சுவழக் கிலிருந்தால்தான் மக்கள் இரசிப்பார்க ளென்ற நம்பிக்கையின் அடிப்படையிலோ தயாரிக்கப்படாத, மிக யதார்த்தமான நாடகங்கள். அத்தகைய நாடகங்கள் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டு, அவற்றுக் குரிய இரசனை இலங்கையில் வளர்க்கப் பட்டிருந்தால், அதைப் பின்பற்றி ஒரு தனித்துவமான ஈழத்தமிழ் சினிமாத்துறை உருவாகியிருக்கக்கூடும். இவற்றைப் பற் றிய ஆழ்ந்த, விரிவான ஆராய்ச்சி செய் வது, கலைப்படைப்புகளை வெற்றிகரமாக ஈழத்தமிழர்கள் மேற்கொள்வதற்கு வழி வகுக்குமென்று நான் கருதுகிறேன்.

நான் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயா ரிப்பில் போதுமான பயிற்சிபெற்றுப் பூரண அறிவோடு, தயாரிப்புகளை மேற்கொள்ளத் தொடங்கியமையும் எனது தயாரிப்பிலுள்ள குறைகளை இனம்கண்டு, அவை எனது அடுத்த படைப்புகளில் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டமையும் எல்லாவற்றுக் கும் மேலாக, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிபோன்ற பலம்வாய்ந்த கலை நிறுவனங்களின் படைப்புகளாக அவை தயாரிக்கப்பட்டமையும், மக்களிடையே வரவேற்பைப்பெறக்கூடிய தயாரிப்புகளை மேற்கொள்வதற்கும் குறிப்பிடத்தக்க வெற் றிகளைப் பெறுவதற்கும் காரணமாக அமைந்தன.

ஆம், அடுத்த ஆண்டு 1983ல் நான் தயாரித்த எனது இரண்டாவது தொலைக் காட்சி நாடகம் தயாரிப்பில் மிகுந்த முன்னேற்றம் கண்டிருந்தது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிறிய நாடகங்கள் வரி சையில் மொழிபேதமற்றமுறையில் சிறந்த நாடகத்திற்கான பரிசைப்பெற்றமை அதற்கான சாட்சி. அந்த நாடகம் பற்றி யும் மேலும் பல தொலைக்காட்சி நாட கங்கள்பற்றியும் அடுத்துவரும் கட்டுரை களில் பார்ப்போம்.

தொடரும்....



wikneswaran.p@thaiveedu.com

Mega Financial Group

WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION

SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET

OUR PRODUCTS AND SERVICES

- Life Insurance products
- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- RRSP's Investments
- RESP-Education Saving Plan
- Final Expense Products
(Through Funeral Homes)



INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES
Canada Protection Plan
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial

www.megafinancial.ca

RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# திருவள்ளுவர் பெண்ணியவாதியா?

- குமார் புனிதவேல் -

பொதுவாகவே பலரும் திருவள்ளுவர் பாடிய ஐம்பத்து ஐந்தாவது குறளை மேற்கோள் காட்டி அவரை ஒரு ஆண் ஆதிக்கவாதி என குறிப்பிடுவார்கள். அந்தக் குறளில் வானில் வதியும் தெய்வங்களை தொழும் செயற்பாட்டைத் தவிர்த்து அவளுக்கு ஆதாரமாய் இருக்கும் கணவனைத் தொழுதால் அவள் 'பெய்' என்றவுடன் மழை பொழியும் ஆற்றல் பெறுவாள் என அறிவிக்கின்றார். இந்தக் குறள் வாழ்க்கைத்துணை நலம் அதிகாரத்திலுள்ளது. அந்தக் குறள்.

*தெய்வம் தொழாஅள் கொழுநன்*
*தொழுதொழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை*

- குறள்: 55

இவ்வதிகாரத்தில் பத்துக் குறள்களும் ஆடவரை விளித்து அவரது துணை பற்றி மேலும் கூறுவதாக அமைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. முதல் குறளில் தெய்வமாக மதிக்கப்பட்ட ஆடவன் பெறக்கூடிய மிகச்சிறந்தது ஒரு கற்புடைய பெண் என்பதுடன், அவரிலும் சிறந்தவர் எவருமில்லை எனத் தெரிவிக்கின்றார். அந்தக் குறளில் கற்புள்ள பெண்ணிலும் சிறந்தது யாது உண்டு எனக் கேட்கின்றார். அப்படியானால் ஆண்களிலும் பெண்ணை உயர்த்திப் பாடுகிறார் என்பதில் சந்தேகத்திற்கு இடம் ஏதுமில்லை அவர் கூறும் குறள்.

*பெண்ணின் பெருந்தக்க யாவுள*
*கற்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்*

- குறள்: 54

அப்படியான பெண்ணிற்கு கூறப்படும் கற்பு பற்றி சற்று கவனமாக பார்க்க வேண்டியுள்ளது. கற்பெனப்படுவது சொல் தவறாமை என்று ஔவைப்பாட்டி அழகாக கூறியுள்ளார். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதுதான் கற்பு எனக்கூறினால் அது ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவாகவல்லவா வரவேண்டும். ஏன் அது பெண்களுக்கு மட்டும் வலியுறுத்தப்பட்டது என்பது சிந்தனைக்குரிய விடயமே.

பழங்காலச் சமுதாயம் பொதுவுடமை உடையதாயிருந்தது. அக்காலகட்டத்தில் பாலியல் உயர்ச்சி தாழ்ச்சி இருக்கவில்லை. அக்காலத் தமிழர் தம் இளமை வாழ்க்கையை களவியலிலும் அதனைத் தொடர்ந்து தாம் இஷ்டப்பட்டவருடன் இணைந்து வாழத் தலைப்பட்டனர்.

என்று சமுதாயத்தில் நிலவுடமை என்ற நிலைப்பாடு தோன்றியதோ, அப்போதே நிலைமை சிக்கலடைந்தது. எவருக்கும் தம்மிலும் தம்மக்கள் உயர்வடைவது மகிழ்ச்சியே. எனவே தாம் சேர்த்த செல்வத்தை தம்-மக்களுக்கு (வாரிசுகளுக்கு) கொடுக்க விழைந்தமையும் இயல்பான ஒரு விடயமாகும். உலகளாவிய விதத்தில் ஆண்களே உழைப்பில் பெரும் பங்கெடுத்தார்கள். பெண்கள் பெரும்பாலும் வீட்டை மேற்பார்வை செய்தார்கள். இதனால்தான் 'இல்லாள்' என்றால் இல்லத்திற்கு உரியவள் என பொருள்பட்டது. 'இல்லான்' என்றால் இல்லாதவன் என விளக்கம் தரப்பட்டது.

எமது மனதிலே இன்னுமொரு ஐயப்பாடு தோன்றலாம். உலகளாவிய ரீதியில் இது பொதுவானதா? என்பதே. ஆம், அதுவும் உண்மையே. இரு உலகப் போர்கள் இடம் பெறுமுன் உலகளாவிய விதத்தில் ஆண்களே பொருள் தேடவும் பெண்கள் அதை கொண்டு இல்லத்தை காக்கவும் செய்தார்கள். ஆனால் உலக யுத்தம் நீடித்தவேளை ஆண்களுக்கு போர் முனைக்குச் செல்ல வேண்டிய நிலை வரவே, உள்நாட்டு ஆலைகளும் ஆயுதத் தயாரிப்புக்குமாக பெண்கள் வேலைக்குச் செல்லத் தொடங்கினார்கள். போர் முடிந்து ஆண்கள் திரும்பிய பின்பும் அவர்கள் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட்டதால் பொருளாதார அமைப்பு மாறப்பெற்று ஆண், பெண் இருவரும் வேலை செய்யும் சமுதாய மாற்றம் இடம் பெற்றுள்ளது.

ஆண்கள் மட்டும் உழைப்பில் பங்கெடுத்த வள்ளுவர் காலத்தில், தாம் பெற்ற ஊதியம் தமக்குப்பின் தம் மக்களுக்கு செல்ல வேண்டும் என்று விரும்பியது இயல்பு அல்லவா? தம்மக்கள் தம்மிலும் சிறந்து இருப்பது மண்ணுயிர் யாவர்க்கும் இனியதே.

அக்கால கட்டத்தில் குழந்தை பிறக்கும் வேளை தாய் யார் என்பது அனைவருக்கும் இயல்பாய்த் தெரியும். ஆனால், தந்தை யாரென்பதை தாயின் கூற்றில் தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. மேலும் திருவள்ளுவர் காலத்தில் சந்தேகம் வரும் வேளைகளில் மரபணு பரிசோதனையால் அறிந்து கொள்ளவும் முடியாத நிலை. அன்னை சொல்லித்தான் அந்த பிள்ளை யின் தந்தை யார் என்பதை அறிய முடிந்தது. யாரோ ஒருவருடைய பிள்ளைக்கு. தான் தேடிய செல்வம் செல்வதை விரும்பாத ஆண்கள், கற்பில் மிகவும் அக்கறையுடையவராய் இருந்தார்கள்.

எதையும் முன்னோக்கி சிந்திக்கும் திருவள்ளுவர் ஏன் கற்பினை ஆண்களுக்கும் அவசியம் என்பதை குறிப்பிடவில்லை என எண்ணத் தோன்றியது. அதுவும் அவரது திருமண வாழ்வு நிறைவானது.

திருவள்ளுவர் ஆயிரத்து முன்னூற்று முப்பது ஈரடி குறட்பாக்கள் பாடியவர். ஒரே ஒரு நாலடி பாடல் மட்டுமே பாடியுள்ளார். அதுவும் தனது மனைவிக்குத்தான் பாடியுள்ளார். அவர்கள் குடும்ப வாழ்க்கையில் அவர் மனைவி வாசுகி, அவரது அடிவருடி துயிலவைத்துப் பின் தூங்குவாள். ஆனால் அவள் அவருக்கு முன்பே இறந்த போது, மணம் முடிந்த நாள் முதலாய் பின் தூங்கிய நீ இன்று இந்த மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாயே. இனி நான் எங்ஙனம் துயிலுவேன் என்று ஒரு நாலடிப்பாட்டை பாடியுள்ளார். இதோ அந்தப் பாட்டு.

*அடிசிற் கினியாயே! அன்புடையாளே!*
*படிசொற்றவறாத பாவாய்! அடிவருடிப்*
*பின்றூங்கி முன்னெழுந்த பேதையே!*
*போதியோ?*
*என்றூங்கும் என்கண் இரா!*

திருவள்ளுவரும் வாசுகியும் உண்மையாகவே ஒருவரை ஒருவர் நேசித்தார்கள் என்பதுடன் திருவள்ளுவர் நிச்சயமாக ஒரு ஏக பத்தினி விரதனாக இருந்திருப்பார். எனவே அவர் பெண்களுக்கு கூறிய கற்பு நெறியை தானும் கைப்பிடித்தார் என்பதுடன் கட்டாயமாக அதை குறிப்பிட்டிருப்பார், எனத் தோன்றவே கோவிட் நேரத்தில் திருக்குறளை கவனித்து படித்தேன்.



எனது முயற்சி வீண் போகவில்லை. திருக்குறளின் தொண்ணூற்று எட்டாவது அதிகாரம் 'பெருமை' எனும் தலைப்பில் அமைந்துள்ளது. ஐம்பத்து நாலாவது குறளில் பெண்ணிலும் பெரியது என்ன என்று கேட்ட வள்ளுவநாயனார், தொள்ளாயிரத்து எழுபத்து நாலாவது குறளில் உண்மையான பெருமை வேண்டின் கூறுகிறார்.

*ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு*

- குறள்: 974

இதோ அந்தக் குறளுக்கு கி.வா. ஜகந்நாதன் எழுதிய ஆராய்ச்சிப் பதிப்பில் பக்கம் 515 இல் பரிப்பெருமாள் தந்த உரை:

தன்னை பிறர் விரும்பும் காலத்திலும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்திலும் வேண்டியவாறு ஒழுகாத கற்புடைய மகளிரைப் போல (குறள் 54) பாதுகாத்து ஒருவன் ஒழுகுவானாயின் பெருமை உண்டாம் அல்லது இல்லையாம்.

என்னே திருவள்ளுவரின் சாமர்த்தியம். இந்தக் குறளின் இரண்டாவது அடியில் உள்ள 'தன்னைத்தான் கொண்டொழுகின் என்ற நிலைப்பாடு. மற்றவர்களுக்காக ஒழுகுவதல்ல, தன் சொந்த நிலையில் ஒழுகவேண்டும். இதே கருத்தை பெண்களுக்கு ஐம்பத்தாறாவது குறளில் வலியுறுத்துகிறார். அந்தக் குறள்.

*தற்காத்து தற்கொண்டாற் பேணித்*
*தகைசான்ற*
*சொற்காத்து சோர்விலாள் பெண்*

- குறள்: 56

தற்காத்துத் தன்கொண்டாற் பேணி - தன்னை கற்பினின்றும் வழுவாமல் காத்துத் தன்னை கொண்டவனையும் உண்டி முதலியவற்றால் பேணி, தகைசான்ற சொல்காத்து - இருவர் மாட்டும் நன்மை அமைந்த புகழ் நீங்காமல் காத்து, சோர்விலாள் பெண் - மேற் சொல்லிய நற்குண நற்செய்கைகளிலும் கடைப்பிடிப்பு உடையவளே பெண்ணாவாள் என்கிறார் திருவள்ளுவர்.

ஐம்பத்து ஆறாவது குறளை தொள்ளாயிரத்து எழுபத்து நாலாவது குறளுடன் இணைத்து நோக்குகையில் ஆண், பெண் இருவருமே தாமாக தம்மை ஒழுக்க நெறியில் வழிப்படுத்தி வாழ்வதே வாழ்க்கைக்கு அவசியம் என்பதை திருவள்ளுவர் தெரிவித்து ஆணும் பெண்ணும் குடும்பம் எனும் நாணயத்தின் இருபக்கங்கள் என்கிறார். இதில் எது குறையிருந்தாலும் நாணயம், நாணயம் இல்லாது போய்விடும் என்பதை உணர்த்திச் செல்கிறார். எனவே நாம் வள்ளுவர், ஆணியம் மலிந்த காலத்தில் பெண்ணியத்திற்கு உரிய மதிப்பை கொடுத்தவர் என்பதை மனதில் கொள்வது தகும்.

kumar.punithavel@thaiveedu.com



# AJAX CREMATORIUM & VISITATION CENTRE

THE SYMBOL OF PEACE

உங்கள் உறவுகளின் இழப்பில்
உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக
உங்களுக்காக சேவைபுரிய



Easy Access to all Major Highways
250முதல் 500 பேர் வரை அமரக்கூடிய 5 மண்டபங்கள்
தாராளமான வாகன தரிப்பிடங்கள்
அனுபவம் மிக்க தமிழர்களின் சேவை
இறுதிச்சடங்கு முதல் அந்தியேட்டி வரையான ஒழுங்குகள்
இறுதிச் சடங்கை நேரடியாகப் பார்க்கும் வசதிகள்
இறுதிச்சடங்கு முதல் ஈமைக்கிரியை வரை ஒரே இடத்தில்
இந்து, கிறிஸ்தவ அந்திமச் சடங்குகளுக்கான ஒழுங்குகள்
Funeral Church arrangements with choir

Scarborough, Markham, Stouffville பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக 10-20 நிமிட தூரத்தில்
Ajax, Pickering, Whitby, Oshawa பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக சில நிமிட தூரத்தில்

**AJAX CREMATORIUM & VISITATION CENTRE**
384 Finley Avenue
Ajax, ON

**BRAMPTON CREMATORIUM & VISITATION CENTRE INC**
30 Bramwin Ct,
Brampton, ON L6T 5G2



**Tharma Stanislaus**.BCom
Funeral Counselor
**416-655-6164**

"Saying Goodbye is so hard
Let us make it easy for you "

# மனவியலும் முக்கூடற்பள்ளும்

- சண்முகம் வெற்றிவேல் -

முக்கூடற்பள்ளு சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. நாயக்கர் காலத்தது வாழ்வியல், உலகியல், இறையியல் என்பவற்றை இரத்தினச் சுருக்கமாகப் பேசுவது. சைவம், வைணவம் என்னும் தோழமைச் சமயங்களை ஒப்புநோக்கி உரையாடுவது. நாடகப் பாங்கானது. பண்ணை வேளாண் முறைமையையும், பாட்டாளி வர்க்கப் பண்பாட்டையும் பறைசாற்றுவது. ஒழுக்கப் பிறழ்வைப் பழிப்பது. இரு பள்ளியர்களின் பேச்சுத் திறனைத் தரிசனப்படுத்துவது. இத்தனை சிறப்புகளும் இதன்கண் உண்டு. இந்த முக்கூடலின் இடக்கிடப்பியலையும் புரிந்துகொண்டு அதனை உளவியல் ரீதியாக ஊடுருவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். (தவிர, பள்ளில் வரும் பாத்திரச் சுட்டுப் பெயர்களான பள்ளன், பள்ளிகள் என்பது கூலி விவசாயியையே குறிக்கும். பின்வந்த சாதியப் பெயர்களை அல்ல என்பது மனங்கொளல் தகும்)

## முக்கூடலும் இடக்கிடப்பியலும்:

முக்கூடல் என்பது மூன்று நதிகள் முட்டி மோதும் இடமாகும். ஈழத்தமிழர்களுக்கு இது சிறுப்பிட்டி குறிகாட்டுவான் என ஏழு தீவுகளை ஊடறுத்து ஓடி வரும் ஏழ்தி சைக் கடல்கள் எதிர்த்து மோதும் ஏழாற்றுப் பிரிவைப் போன்றது. எனினும் வேறுபாடு உண்டு. அது கடல், இது நதி. இலங்கையில் ஏழாற்றுப் பிரிவு ஒன்றே ஒன்று. இங்கே முக்கூடல் மூன்றுண்டு. அவை முறையே, திரிவேணி சங்கமம், திருமுக்கூடல், சீவலப்பேரி என்னும் பெயர்களுடன் தமிழகத்தைத் தீம்பொழிலாக்குகின்றன.

கங்கை, யமுனை, சரசுவதி கலக்குமிடம் திரிவேணி சங்கமம். இது அலகபாத்தில் உண்டு. கம்பா நதியும் வேகவதி ஆறும் சேயாறும் சேருமிடம் திருமுக்கூடல். இது காஞ்சிபுரத்துக்கு அருகாமையில் உண்டு. பொருநையும் கோதண்டராம நதியும் சிற்றாறும் சேருமிடம் சீவலப்பேரி. இது திருநெல்வேலிச் சீமையிலே சலசலத்து ஓடுகிறது. இந்தக் கண்கொள்ளாக் காட்சிகளையே 'தர்மத்தின் தலைவன்' திரைப்படத்தில், 'தென்மதுரை வைகைநதி தினம் பாடும் தமிழ்ப் பாட்டு..' என்ற பாடலால் நதிகளின் சிறப்பை சுகாசினியும், சுகாசினியின் நளினத்தை நானிலமும் மனதார ரசித்தது. தவிர, பாடுநிலாவே படத்திலும் நதியா, நதிகளின் சிறப்பைக் காட்சிப் படுத்துகிறார். அக்காலத்தில் பாரதப் பெண்களின் பாதணிகளும் நதியாவின் பெயரால் பெருமதிப்பைத் தட்டிக்கொண்டதெனின் நதிசார்ந்த உளவியலின் களிப் பார்வத்தைத் தெற்றெனைத் தெளியலாம்.

## மனவியல் நோக்கில் முக்கூடல்:

பஞ்சவர்ணக் கிளிபோல ஒரு பாரியார் இருப்பினும், காகம் போன்றதொரு வைப்பாடிச்சியும் தேவை எனும் ஆண்களின் சீர்கெட்ட குணவியல்பைச் சித்திரிக்கும் சொல்லாடல் ஒன்றுண்டு. அதுபோலவே எந்தவொரு கதை ஓட்டத்திற்கும் மாறுந் தன்மை, மாறாத்தன்மை கொண்ட பாத்திரங்களும் (Round characters & Flat characters ) தேவை. முக்கூடலிலே மூன்று பாத்திரங்கள் காவிய அழகுடன் வினையாற்றுகின்றன. மூத்தபள்ளி, இளையபள்ளி இரண்டுமே மாறுந்தன்மை உடைய பாத்திரங்கள். பள்ளனோ மாறாத்தன்மை கொண்ட பாத்திரம். இவனுக்கு இறுதிவரை இரண்டு தாரங்கள். போதாக்குறைக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரிப் பள்ளியர்கள் இருவரும் அக்கா தங்கை போல் வாழ இணங்குவதுடன் பள்ளு நிறைவுபெறுகிறது. எனினும் இம்முடிவு எளிதில் எட்டப்பட்டதல்ல. நீண்டதொரு மயிர்பிடி மற்றும் வாய்ச் சண்டைகளின் பின் கிடைத்த சமாதானமாகும். பள்ளனுக்கோ கொண்டாட்டம். மூத்த பள்ளிக்கோ திண்டாட்டம். மூத்தபள்ளியின் உள்ளத்தின் ஆழத்தில் விழுந்த இந்த நுள்ளு, உளவியலின் தொடக்கப் புள்ளியைத் தொட்டாருக்கும் தெற்றெனத் தெரியும்.

## மூத்தபள்ளி:

சொந்த இடம் திருமுக்கூடல். பள்ளனால் முறைப்படி திருமணம் செய்து கொள்ளப்பட்ட மனைவி. பெண்ணியப் பார்வையில் பாதிக்கப்பட்டவள். நிலவுடமைப் பொருளாதாரத்தில் இயங்கியல் பொருள்முதல்வாத கோட்பாட்டின் இழுவிசைக்குள் மூழ்கிய குடும்பம். பள்ளன் பண்ணையாரின் கால்நடைப் பாதுகாப்புக்காக இரவிலும் பண்ணையிலேயே பள்ளிகொள்கிறான். இத்தொழிலை மாட்டுக்கிடை என்றும், ஆட்டுக்கிடை என்றும் முக்கூடல் மொழிகிறது. கனடாவில் ஆலைகளில் தொழில் புரியும் ஆண்கள் தங்களுக்கான உணவைத் தாங்களே ஆக்கி எடுத்துச் செல்வது பலரின் பழக்கம். ஆனால் முக்கூடலிலே மூத்தபள்ளி புளியோதரை போன்ற பலவகைப் பண்டங்களைச் சுவையாகச் சமைத்துக் கட்டுண் கட்டிக் கொடுத்துனுப்புகிறாள். அறுசுவை உணவை ஊட்டச் சத்துடன் உண்ட பள்ளன் இரவின்பத்துக்காக இளைய பள்ளியை இன்பராணியாகத் தேடிக்கொள்கிறான். பள்ளிகளுக்கிடையே சண்டை ஆரம்பிக்கிறது.

## இளையபள்ளி:

சொந்த இடம் மருதூர். இவளையும் முதலில் தொட்ட ஆண் பள்ளனே என்பது பள்ளிகளின் வாய்ச்சண்டை வெளிக்கொணரும் உண்மையாகும். புது உறவு, இளம் வயது, கட்டான உடல். ஊடலுக்கும் கூடலுக்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இளையபள்ளி. இந்த மருதூர் பள்ளியையே பள்ளன் அவாவி நிற்பது முக் கூடல் தரும் செய்தியாகும். திருமண ஆவணப்பத்திரம் இல்லெனினும், ஆபாசத்திற்கும் அதைத் தீர்ப்பதற்கும் உகந்த இடம் இளையபள்ளியே என்பது பள்ளனின் முடிந்த முடிபாகும். இனி இக்கதையில் வரும் மூத்த பள்ளியின் மனநிலை, அவள் பண்ணையாரிடம் முறையிடும் மனப்பாங்கு, இரு பள்ளியர்களின் வாய்ச் சண்டைவழி வரும் உளநுட்பச் செயற்பாடு, என்பவற்றை நோக்குவோம்.

## பள்ளனின் பணியும் பணிமாற்றமும்:

பள்ளனின் பணி ஆடுகளுக்குக் காவலாகக் குறிக்கப்பட்ட கொட்டிலில் இரவு பூராவும் படுக்க வேண்டியது. விடியும் போது மாற்றுக் கடமை புரியக் கோனார் என்பவர் வந்து பள்ளனிடம் பதவியைப் பொறுப்பேற்பார். ஒரு நாள் காலை கோனார் மாற்றுக் கடமைக்கு வந்தபோது, பள்ளன் அங்கில்லை. புலன்விசாரணை மேற்கொண்ட பொழுது, பள்ளன் இளையவளின் குடிலில் இரவு முழுவதும் சல்லாபம் பொழிந்தது வெளிச்சத்திற்கு வந்தது. விடயம் மூத்தபள்ளிக்கும் கடுகதி வேகத்தில் எட்டியது. அதன்பின் சம்பவ இடத்தைச் சல்லடைபோட்டுத் தேடும் முயற்சியில் சதா ஈடுபட்டிருந்த மூத்தபள்ளியின் முயற்சி வீண்போகவில்லை. கையும் மெய்யுமாகப் பிடிபட்டான் பள்ளன்.

## மூத்தபள்ளி பண்ணையாருக்கு முறையிடல்:

'இடையர்களைக் கூட்டிவந்து, அவர்களைக் கிடைமறிக்குமாறு ஏவிவிட்டு, இந்தப் பள்ளன், இளையாளின் குடிலிலே படுப்பதே நன்றெனக் கருதிப் போய்விடுகிறான். பலநாள் பிடிபட்டுமுள்ளான். இவனுக்குக் கடமை ஆட்டுக்கிடையோ? அல்லது இளையாள் வீட்டினில் கிடையோ? எதுவெனப் பள்ளனைக் கேளுங்கள் பண்ணையாரே' அழகரும் கேளாத இந்தக் கேள்வியை, நீங்களாவது கேட்டுத் தண்டனை வழங்குங்கள் ஆண்டகையே! இளையவளின் பக்கத்து வீட்டாரும் இந்த ஆட்டங்களைக் கண்டிக்கிறார்களில்லை, ஆண்டகையே!

## சிந்து:

*அடுத்திடும் வீட்டார்*
*சொல்லிக், கொடுத்திடமாட்டார்*
*கிடைதான் ஆட்டினிற் கிடையோ*
*இளையவள் வீட்டினிற் கிடையோ?*
*படுத்திடும் பள்ளன்*
*வேலையைக் கெடுத்திடும் கள்ளன்*
*எனைக் கண்டு பதறியே விழுந்தான்*
*கைகால் உதறியே எழுந்தான்*
*தடுத்தெனை யாளார்*
*அழகரும், நடுத்தனைக் கேளார்*
*கடுஞ்சிறைச் சாலையிற் போட்டால்*
*வளைவான் வேலையில் ஆண்டே!*

*- முக்கூடற்பள்ளு: 86*

தொடர்ந்து முறையிடும் பள்ளி, பள்ளனின் பழக்க வழக்கங்களையும், சொத்தழிப்பையும் தெளிவாக்குகிறாள்.

## சொத்தழிப்பு வழக்கு

*'வரத்தினை மீறுஞ்... செலவுக்குத்*
*தரித்திரம் ஏறும்... பேய்க்கொடை*
*மட்டுக் கட்டில்லான்... கூத்துக்கும்*
*கொட்டுக்கும் நல்லான்.*
*உரத்திடுங் காளை... சுழியன்*
*நரைத்தலை மோழை... புதியவள்*
*ஊட்டுக்குக் குறித்தான் வில்லடிப்*
*பாட்டுக்குப் பொறித்தான்.*

## நடத்தைசார் நடு

*பரத்திகைச் சுள்ளும்... அக்கரைத்*
*திருத்தினிற் கள்ளும்... கொண்டஞ்சு*
*பசுவையும் விற்றான்... மனந்தனில்*
*அசுவையும் அற்றான்.*
*கரத்தொடு மரமும்... பசும்புரை*
*மரத்தொடு காலும்... சேர்த்திரு*
*காலினில் விலங்கும் பருக்கவே*
*கோலுவீர்*
*ஆண்டே!*

*- முக்கூடற்பள்ளு: 87*

திறனாய்வுப் பார்வையுடன் அந்தச் சிந்துப்பாடலை உள்ளுவார்க்குப் பல்வேறு உளவியல் ஊடாட்டங்கள் புலனாகும். இளையாளுடன் சேர்ந்து வில்லடிப் பாட்டு நடத்துவதற்காகப் பலவகையான பசுவினங்களையே மொய் எழுதியிருக்கிறார் பள்ளன். இங்கே சிலம்பில் கோவலனுக்கு மாதவியுடனான சதுராட்டங்கள் எல்லாம் சறுக்கிய நிலையில் 'குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும் என' (9-69-71) எண்ணும் காலங்கடந்த ஞானம் கூடப் பள்ளனுக்கு இன்னமும் வரவில்லை, பள்ளிக்கு வந்து விட்டது.

மேலும் முக்கூடற்பள்ளு முகிழ்த்த காலத்திலும் கூட நல்ல கூட்டுச்சேர்த்துச் சுவையாகவும், சத்தாகவும் சாப்பிட்ட சமுதாயம் ஒன்று பார்வைக்கு வருகிறது. இதனைப் பள்ளன் எவ்வாறெல்லாம் இளையபள்ளியுடன் சாப்பிட்டானென மூத்தபள்ளி போசன நிரல் ஒன்றைப் பண்ணையார் முன் வைக்கிறாள்.

கள்ளுக்குச் சுள்ளுக் கருவாடு நல்ல கூட்டு (very Good combination). நம்மவர்கள் கூறுவதுபோல, மயிலிட்டிச் சுறாவறைக்குக் கூவலில் கள்ளும், பனங்கிழங்கைப் பச்சடியில் தொட்டுக்கொண்டு சாப்பிட்டதைப் போலவும் ஒன்பான் சுவையும் ஒருங்குதிரண்ட மாதிரி என எண்ணுவதில் தவறிருக்க முடியாது. ஆனால் இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில் மூத்த பள்ளியும் முக்கூடலின் நறவத்தில் (ஒரு பைக்ட்) கொஞ்சம் மாந்திவிட்டுத்தான் இத்தனை நடுக்கட்டுகிறாள் என்பது, முக்கூடலின் நம்பகரமான வட்டாரங்களின் வழி அறியக் கிடைக்கிறது. அது எப்படியோ இளையபள்ளி பள்ளனுக்கு ஏற்றாற் போல ஈடுகொடுத்து வாழ்வை முன்னெடுத்துள்ளாள் என மனங்கொள்ளலாம்.

*தேனுக்குட் பாலாய்... அவள் மஞ்சள்*
*மேனிக்கு மாலாய்... பணமெல்லாம்*
*சிந்தியே கெட்டான்... எனையின்று*
*சந்தியில் விட்டான்.*
*ஈனத்துக் கிவளாம்... தன்வெகு*

*தொடர்தல் 74ம் பக்கம்*


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# மனவியலும்...

**73ம் பக்கத் தொடர்ச்சி...**

*மானத்துக் கவளாம்... காலவன்*
*இங்கே தரியான்... கனவிலும்*
*அங்கே பிரியான்.*

- முக்கூடற்பள்ளு: 88

இங்கே இரத்தக்கண்ணீர் ராதாவையும், சிலம்புக் கோவலனையும் பள்ளனின் உளவியலோடு ஒப்பிட்டு நோக்க முடிய வில்லை. முன்னையவர்கள் வைப்பாடிச்சி களை வாழ்வின் இறுதிக்கு முன் கை-கழுவியவர்கள். பள்ளன் பாத்திரம் புறந டையானது. இது இறுதிவரை இருவருக் கும் துணை இருக்கும் மனவியலைக் கொண்டது. இதற்கு இன்னுமொரு உள வியல் காரணமும் உண்டு. தொடர்ச்சியாக அழுமூஞ்சிகளாக மூத்த மனைவிமார் இருந்துள்ளமையும் காரணமாகிறது. 'கண் ணகியானாலும் கலியாணத்துக்காவது கண்ணுக்கு மைபூச வேண்டும்' என்பது தானே பழமொழி.

**பள்ளியர்களின் வாய்ச் சண்டை:**

வீடுகளின் சுவர் ஓரமாக ஒட்டி நிற்கும் சாய்வுக் கூரைபோல, எங்கள் குடும்ப வாழ்விலே வந்து ஒட்டிக் கொண்டவள் நீ என்றாள் மூத்தவள்.

'மாமன் மகள், இவளைத்தான் கட்ட வேண்டும், என்று வழக்கிட்டும், அதனால் இன்னின்ன இலாபமெனக் கணக்கிட்டுமா நான் வந்தேன்? நீ தான் அப்படி வந்த வள், உனக்குப் பள்ளன் மேல் ஆசை கிடையாது என்று பழித்தாள் இளையவள்'

இது இவ்வாறிருக்கப் பள்ளனைப் பண் ணையார் அவனது கைகளையும் கால்க ளையும் மரத்தோடு சேர்த்துக் கட்டிவைத் துள்ளார். மூத்தபள்ளி தனக்கு ஒன்றும் தெரியாததைப் போன்று பவனி பார்க்கச் சென்றுள்ளாள். பள்ளனைக் கண்டதும் மேல்வருமாறு பேசுகிறாள். 'வசிய மருந் திட்டு உன்னை மயக்கிவிட்ட கள்ளி அந்த மருதூர்ப்பள்ளி, அவள் வடகரையை விட்டு வந்த பிறகு நீ அவள் தொடர்பை விட்டுத் திருந்த வேண்டுமென்று நான் பேசின பேச்சுக்களை எல்லாம் கேளாமற் போய்விட்டாய். நான் தெற்கே பார்த்தால், நீ வடக்கே பார்ப்பாய். அப்படி எல்லாம் என்னைப் பருந்தாட்டம் ஆட்டிவிட்டாய். இப்போ நீ கட்டுண்டு கிடக்கிறாய். மருதூர்ப்பள்ளி ஜாமீன் தருவாளோ?

**பள்ளன் கெஞ்சுதல்:**

பழைய நிகழ்ச்சிகளை மீட்காதே! பஞ் சிலே பற்றும் நெருப்பைப் போல உன் நெஞ்சிலே இன்னமும் பழைய பகைமை-களை எல்லாம் பற்ற வைக்காதே.! பண்ணை நயினாரைக் கெஞ்சி, என்னை மன்னிக்கும்படி கேட்டுப்பாரடீ!

மூத்தபள்ளி மறுநாள் ஆட்டுப் பிரியாணி யுடன் பள்ளனைப் பிணையெடுக்கப் பண்ணையாரிடம் போகின்றாள்.

*தாரமிரண் டானாலுந்*
*தன் கணவன் வாஞ்சையினால்*
*வாரமுடன் முக்கூடல்*
*வந்தபள்ளி தந்திரமாய்க்*
*காரணம்வே றொன்று பண்ணைக்*
*காரனுக்குச் சொல்லிமனச்*
*சோரமுடன் பள்ளனுக்குச்*
*சோறுகொண்டு வந்தாளே!*

- முக்கூடற்பள்ளு: 98

மூத்தபள்ளியின் திறமை யாதெனில், 'நக் கினார் நாவிழுவார்' என்பதை நன்கறிந்து ஆட்டுப்பிரியாணியைப் பண்ணையாரு டன் பங்கிட்டுப் பள்ளனுக்கும் கொடுத்து தானும் சுவைத்துள்ளாள். பள்ளனும் விடு பட்டான். ஆனால், பள்ளிகளின் சண்டை மறுபுறத்தில் தொடர்ந்த வண்ணமுள்ளது. இப்போது இருவரும் வழிபடும் தெய்வங் களான, அழகரையும் அம்மை அப்ப னையும் பழித்து வசை பாடுகின்றனர்.

*'ஏறவொரு வாகனமும்*
*இல்லாமையினால்... மாட்டில்*
*ஏறியே திரிந்தானுங்கள்*
*ஈசன் அல்லோடி?*
*வீறு சொன்ன தென்னமாடு*
*தானுமில்லாமல்... பட்சி*
*மீதிலேறிக் கொண்டானுங்கள்*
*கீதன் அல்லோடி?*

- முக்கூடற்பள்ளு: 171

**முடிவாக:**

இறைவனையே சிறுதெய்வம் பெருந்தெய் வம் எனக் கூறுபோட்டுக் கும்பிட்ட சைவ, வைணவ வரலாற்றில் ஒற்றுமையுடன் உட்பூசலும் இருந்தமை தெளிவு. எனவே சிவனுக்கு ஏற வாகனமில்லாமல் மாட் டிலே ஏறினானென்றும், பரந்தாமன் பற வையில் பாய்ந்தாரென்றும் பள்ளிகள் சண்டை புரிவது ஒன்றும் தற்செயல் நிகழ்ச்சிகள் அல்ல. தவிர, இந்த முக் கூடலின் உளநுட்பச் செயற்பாடு யாது? முக்கூடலின் கதாமாந்தர்களான, குறிப்பாக மூத்த, இளைய பள்ளிகளின் மெய்ப்பா டுகளை வாசக வட்டம் எவ்வாறு வடி கட்டும். வாசகனின் மெய்ப்பாடுதான் என்ன? பெயர் குறிப்பிடப்பெறாத முக்கூடற்பள் ளுப் படைப்பாளியின் மெய்ப்பாடுதான் என்ன? அக்காலச் சமுதாயப் பட்டறிவா கவும், பரிகாரநீதியாகவும் பார்வைக்கு வைக்க விழைந்த விழுமிய பொருள்தான் யாது?

சைவமும் வைணவமும் ஈருடலும் ஒருயி ருமாக இணைந்து வாழவேண்டுமென ஆசிரியர் அவாவுவது பாலில் வெண்ணை யாகக் கிளம்புகின்றது தெளிவு. இன்றும் றிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவில் கட்டடத்தினுள் கள்ளழகரும் உமையொ ருபாகனும் உடன் எழுந்தருளல் புரிவது பக்தகோடிகள் பார்வையில் பவனிவரு கின்றது. எனவே சமயப்பொறையைப் படைப்பாளி பள்ளிகளூடாக முன்னகர்த் துகிறார்.

மேலும் நிலவுடமைப் பொருளாதாரத்தில் பெண்ணுரிமை கேள்விக்குறியாவதைப் பகிடிவதை வழியாகத் தொட்டுக் காட்டு கிறார். ஒருவனுக்கு ஒருத்தியா அல்லது இருவருக்கு ஒருத்தனா என்னும் கேள்வி-களைத் தோன்றா வினாவாக வாசக வட்டத்தை நோக்கி வீசியுள்ளார். நாட்டுப் பாடல்கள் பாணியிலான சிந்து மற்றும் கொச்சகக் கலிப்பாப் பாடல்களைக் காம்போதி தொடக்கம் புன்னாகவராளி வரையான இராகங்களை உபயோகித்து எந்த வாசகரும் எளிதில் புரிந்துகொள்ளு மாறு உளநுட்பச் செயற்பாட்டை முன் னெடுத்துள்ளார். இது வாசகருக்கு வாசிப் பதற்கோ, நடிப்பதற்கோ விசாலமான பாதைகளை உவந்தளிக்கின்றது. உள் அடர் பரிமாணம் ஒன்று கதைக்குள் கதை யாகக் கிளைபிரித்தெழுகிறது. இவ்வாறாக முக்கூடலின் மனவியல் என்பது காலம் கடந்தும் வாழவல்ல மொழிஅமைப்பு, கவித்துவம், இடப்படுத்துதல், பொருள் நுட்பம், சொல்லாமல் சொல்லுதல் என்ற பல பரிமாணங்களையும், பரிணாமங்களை யும் புதைபொருளாகப் பொதிந்து வைத் திருக்கும் தங்கப் பெட்டகம் என்பதை இலக்கிய நேயர்கள் ஆதரிப்பர் என நம் பலாம்.



vettivelu.s@thaiveedu.com



# Insurance & Investments

*"Life insurance is the most tangible form of security devised by man"*

## For all your insurance and investment needs:

- ✓ Guaranteed Investments
- ✓ Annuities and Pensions
- ✓ Registered Retirement Savings Plan (RRSP)
- ✓ RRSP Loan
- ✓ Registered Education Savings Plan (RESP)
- ✓ Life Insurance
- ✓ Disability Insurance
- ✓ Mortgage Insurance
- ✓ Travel Insurance
- ✓ Group Insurance
- ✓ Critical Illness Insurance
- ✓ Health Insurance



**Santhakumar Subramaniam**
**Financial Advisor**

Tif: 437.771.1086
Fax: 905.470.4045
santhan16win@gmail.com

4168 Finch Ave. East, PH 28, Scarborough, ON M1S 5H6

# சித்தர்களின் சீனத்தொடர்பு பற்றிய செய்திகளின் நம்பகத்தன்மை

- பால. சிவகடாட்சம் -

இரும்பு, செம்பு ஆகிய உலோகங்கள் வெள்ளி, தங்கம் என்பவற்றின் மாற்றுக் குறைந்த உருவங்களே என்பதும் இரசமருந்துகள் மூலம் அவ்வுலோகங்களின் குற்றத்தை நீக்கி அவற்றின் அப்பழுக்கற்ற உருவங்களான வெள்ளியாகவோ தங்கமாகவோ மாற்றமுடியும் என்பது இரசவாதக் கொள்கையின் (Alchemy) அடிப்படையான நம்பிக்கையாகும்.

இந்தியா, சீனா போன்ற நாடுகளைப் பொறுத்தமட்டில் இரசவாதம் பற்றிய இவர்களது கருத்துக்கள் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் பற்றிய நம்பிக்கையுடன் தொடர்புடையனவாகவே இருந்து வந்துள்ளன. ஆயுளை நீடிக்கக்கூடிய மருந்துகளே இரசவாதத்திலும் பயன்படக் கூடியன என்னும் நம்பிக்கை இவ்விரு நாட்டு இரசவாதிகளுக்கும் பொதுவானதாக இருந்தது. இந்திய இரசவாதிகள் ஆயுளை நீடிக்கச் செய்யும் மூலிகைகளுக்கு செம்பைப் பொன்னாக்கும் சக்தியும் இருப்பதாக நம்பினர். சீன இரசவாதிகள் இவ்விடயத்தில் சற்று மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தனர்.

சீன இரசவாதத்தின் தந்தை எனக் குறிப்பிடப்பெறும் சீனத்துச் சித்தர் கோ-ஹங் (Ko-Hung கிபி: 283-343) என்பாரின் கருத்துப்படி மூலிகைகள் நீண்ட ஆயுளைத் தரக்கூடியனவாக இருப்பினும் உலோகம் மற்றும் கனியுப்புக்கள் சேர்க்கப் பெற்ற இரசங்களே என்றுமே அழியாத உடலைத் தரக்கூடியன. கோஹங் கூறும் இத்தகைய இரசமொன்று சாதிலிங்கம் (Cinnabar), கெந்தகம் (Sulphur), அரிதாரம் (Arsenic sulphide), சீனக்காரம் (Alum), துரிசு (Copper sulphate), அப்பிரகம் (Mica), ஈயம், வெள்ளைப்பாஷாணம் (White Arsenic), சுண்ணாம்பு, நத்தை ஓடு என்பவற்றுடன் மற்றும் பல பொருட்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டின் முதன்மைச் சித்தராக அறியப்படும் திருமூலர் செம்பைப் பொன்னாக்கும் இரசவாதம் மற்றும் ஆயுளை நீடிக்கச் செய்யும் காயகல்பம் பற்றிய நம்பிக்கைகள் குறித்து நன்கு அறிந்திருந்தார் என்பதற்கு அவரது திருமந்திர நூலிலேயே ஆதாரங்கள் கிடைக்கின்றன.

*செம்பு பொன்னாகும் சிவாய நமவென்னில்*
*செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்*
*செம்பு பொன்னாகும் சிறீயும் கிரீயுமென*
*செம்பு பொன்னாய திரு வம்பலமே.*

திருமந்திரம்: தந்திரம் 4: பாடல் 903

*உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞானம் தேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே*

திருமந்திரம்: தந்திரம் 3: பாடல் 724



திருமூலர் வழிவந்த தமிழகச் சித்தர்கள் இரசவாதம், காயகல்பம் ஆகிய இரண்டையும் பற்றிய இரகசியங்களை அறிந்தவர்கள் என்பது மக்கள் மத்தியில் மிக நீண்டகாலமாக இருந்துவரும் ஒரு நம்பிக்கை.

இரசவாதத்தில் பிரதானமான மூலப்பொருளாக இடம்பெறும் பாதரசம் (Mercury) இந்தியாவில் கிடைப்பதில்லை. எனவே பாதரசம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுத் தமிழக இரசவாதிகளுக்கு அறிமுகமாயிருத்தல் வேண்டும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

செம்பைப் பொன்னாக்கும் இரசவாதக் குளிகை தொடர்பான நம்பிக்கைகள் சீன இரசவாதிகள் மூலமாகத் தமிழ்நாட்டு யோகிகளுக்கு அறிமுகமாயிருத்தல் கூடும் என்று கருதுவதற்கான ஆதாரங்கள் உள்ளன.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த நா. கதிரவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி என்னும் நூலில் போகர் என்னும் சித்தர் பற்றிக் கூறப்படும் செய்தி இது.

'போகர் ஒரு சித்தர். சாதியிற் சீனர், புத்தசமயத்தவர், ஆசிரமத்தால் துறவி, இற்றைக்கு ஆயிரத்தறுநூறு வருஷங்களுக்கு முன்னே சீன தேயத்தில் இருந்து பாரதவருஷத்துக்கு வந்து பாடலிபுரம், கயா முதலிய இடங்களைத் தரிசித்துக் கொண்டு, தட்சணதேசத்திலும் சோழ பாண்டி நாடுகளுக்குச் சென்று அங்கே நெடுங்காலம் வசித்து ஆங்காங்குள்ள பண்டிதர்களிடத்தில் தாமறியாதவற்றைக் கற்றும் அவரறியாதவைகளை அவருக்குக் கற்பித்தும் மீண்டும் சீனதேசத்தை அடைந்தவர்.'

போகர் சீனாவில் இருந்து தமிழகம் வந்தவர் என்று கதிரவேற்பிள்ளை போன்ற சிலரும் போகர் தமிழகத்தில் இருந்து சீனாவுக்குப் போய்வந்தவர் என்று வேறு சிலரும் கூறிக்கொள்ளுகின்றனர். எனினும் போகருக்கும் சீனதேசத்துக்கும் உள்ள தொடர்பு பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சித்தர்கள் பெயரில் இன்று கிடைக்கப் பெறும் நூல்கள் சிலவற்றில் போகரின் குருவாகக் காலாங்கி எனபவர் கூறப்படுகின்றார். இந்தக் காலாங்கி திருமூலரின் சீடர்களுள் ஒருவராக அறியப்படுபவர்.

*மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்*
*இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்*
*கந்துருக் காலாங்கி கஞ்சமலையனோடு*
*இந்த எழுவரும் என்வழியாமே*

திருமந்திரம்: தந்திரம் 1: பாடல் 8

திருமூலர் தனது குருவாக நந்தி என்பவரைக் குறிப்பிடுகின்றார். நந்தி என்னும் பெயருடைய துறவி ஒருவர் பற்றிய தகவல்கள் சில சீனக்குறிப்புகளில் காணப்படுகின்றன. இந்த நந்தி ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மத்திய இந்தியாவில் இருந்து புறப்பட்டுக் கடல் மார்க்கமாக இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு கிபி: 655ம் ஆண்டில் சீனா வந்தடைந்ததாகவும் ஒரு வருடத்தின் பின்னர் சீன அரசர் இவரை மருந்து மூலிகைகளைச் சேகரித்து வரும் படி மீண்டும் கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்ததாகவும் கிபி: 663ல் இவர் சீனா திரும்பியதாகவும் பதிவுகள் உள்ளன (David Gordon White 1996).

சித்தர்களுள் நந்தி, போகர், காலாங்கி, யூகி ஆகியோர் ஏதோ ஒருவகையில் சீனதேசத்துடன் தொடர்புடையவர்களாகக் கூறப்படும் பாரம்பரியச் செய்திகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை.

*தொடர்தல் 77ம் பக்கம்*

# சித்தர்களின் சீனத்...

76ம் பக்கத் தொடர்ச்சி...

ஆயுளை நீடிக்கச்செய்யும் மருந்துகள் பற்றிய அறிவு இந்திய யோகிகளுக்கு இருப்பதாகச் சீனர்கள் நம்பினர். இது குறித்துத் தெரிந்துகொள்ள சீனப் பேரரசர்களுள் ஒருசிலர் இந்திய யோகிகளைச் சீனாவுக்கு வரவழைத்தமை குறித்த வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திலிருந்து சீனா சென்றதாகக் கூறப்படும் பௌத்த துறவியான போதிதர்மர் பற்றிய வரலாற்றுக்குறிப்புக்கள் பல உண்டு. 'லுவாயங்ஜீ (Luoyangil) யில் உள்ள மடாலயங்களின் வரலாறு' என்னும் நூலை கிபி: 547ம் ஆண்டில் எழுதிய யான் சுவன்ஷே (Yaan Xuanshi) என்பவர் யோங் நீங் (Yong Ning) என்ற கோவிலுக்கு தான் சென்றபோது அந்நியரான போதிதர்மரைச் சந்தித்ததாகவும் அவர் தமக்கு 150 வயதாகிவிட்டதாகக் கூறியதாகவும் எழுதிவைத்துள்ளார்.

ஏழாம் நூற்றாண்டில் இன்று உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப்பெறும் மாநிலத்தில் அமைந்திருந்த கன்னோஜ் என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த மன்னன் ஹர்ஷவர்த்தனன் (Harshavardhana கிபி: 606-647). இம்மன்னனது ஆட்சிக்காலத்தில் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு வந்திருந்த பௌத்த துறவியான ஹியூன்-சாங் (Hiuen-Tsang கிபி: 602-664 இந்தியாவில் தாம் கண்டதும் கேட்டதும் பற்றி விரிவாக எழுதிவைத்துள்ளார்.

போதிசத்துவ நாகார்ஜுனர் என்னும் ஒருவர் ஆயுளை நீடிக்கும் மருந்து செய்வதில் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தார் என்றும் இந்த மருந்தின் மூலம் பலநூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என்றும் தாம் கேள்விப்பட்டதாக ஹியூன்-சாங் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த நாகார்ஜுனர் தாம் தயாரித்த இரசவாத மருந்தின் சில துளிகளைக் கற்களில் தெளித்து அக்கற்களைப் பொன்னாக மாற்றித் தமது சமகால அரசனின் நிதிப்பற்றாக்குறையைத் தீர்த்துவைத்தார் என்னும் செவிவழிச்செய்தி ஒன்றையும் இவர் குறிப்பிட்டுள்ளர். மேலும் பஞ்சாப் மாநிலத்தின் வடகிழக்குப் பிரதேசத்தில் நாகார்ஜுனரின் சீடன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிராமணர் ஒருவரைச் சந்திக்க நேரிட்டதாகவும் பலநூறு வருடங்கள் வயதாகிவிட்ட அந்த மனிதர் முப்பது வயது இளைஞனைப்போல் காட்சியளித்ததாகவும் ஹியூன்-சாங் எழுதிவைத்துள்ளார்.

பாதரச மருந்துகள் பற்றி ஹியூன்-சாங் எதுவும் குறிப்பிடாதபோதிலும் இவரைத் தொடர்ந்து கடல்மார்க்கமாக இந்தியா வந்த யிஜ்ஜிங் (I-tsing கிபி: 671-695) என்னும் சீன யாத்திரிகர் இந்தியாவில் பாதரசம் பொறுப்பற்ற முறையிலும் தவறான நோக்கங்களுக்காகவும் அளவுக்கு மீறிப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

கிபி: 648ல் ராங் (Tang) அரசவம்சத்தைச் சேர்ந்த ரைசோங் (Tai Zong) என்னும் சீனச்சக்கரவர்த்தி ஆயுளை நீடிக்கச்செய்யும் மருந்துகள் செய்வதில் தேர்ச்சி பெற்ற மருத்துவர் ஒருவரை இந்தியாவில் தேடிக் கண்டு பிடித்து சீனாவுக்குக் கூட்டி வரும்படி வங்சுவான் (Wang Xuance) என்னும் பெயருடைய தனது தளபதிக்கு உத்தரவிட்டதாகவும் அரசனின் ஆணைப்படி இந்த நாராயணசாமி (Naluoershapo [mei]) என்னும் பெயருடைய பிராமண மருத்துவர் ஒருவரை சீனத்தளபதி சீனாவுக்குக் கூட்டிச் சென்றதாகவும் சீன வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சீனாவில் தங்கியிருந்தபோது இந்த நாராயணசாமி தனக்கு 200 வயது ஆகிவிட்டதாகக் கூறியதாகவும் அறியமுடிகின்றது.

'நீண்ட வாழ்நாளைத் தேடி அலைவோர் முட்டாள்கள்' என்று முன்னர் ஒருமுறை கூறிய ரைசோங் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட மருத்துவர் நாராயணசாமி மேல் ஏனோ நம்பிக்கை வைத்தார். அவருக்கு மதிப்புமிக்க உலோகங்களுக்கான அலுவலகத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. மருத்துவர் கேட்ட பொருள்களெல்லாம் தடையின்றிக் கிடைக்க ஆவன செய்யப்பட்டது. அவர் கேட்ட அபூர்வமான மூலிகைகளையும் கற்களையும் தேடிக் கொண்டுவர நாற்திசையும் தூதுவர்கள் அனுப்பட்டனர். இருந்தும் என்ன பயன். இந்திய மருத்துவர் நாராயணசாமியின் மருந்துகள் சீனப்பேரரசரைக் காப்பாற்ற முடியவில்லை. கிபி: 649 மேமாதம் தனது நாற்பத்தொன்பதாவது வயதில் பேரரசர் ரைசோங் இறந்துவிட்டார். அரசரது இறப்புக்கு இந்திய மருத்துவரின் மருந்துகள் தாம் காரணம் என்று சீன அதிகாரிகள் பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். மருத்துவர் நாரயணசாமியைத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது. எனினும் ஊர் திரும்பும் பயணத்தைத் தொடங்கு முன்னரே மருத்துவர் இறந்துவிட்டார்.

ரைசோங்கின் மகனாகிய பேரரசர் கவ்சோங் (Gao Zong கிபி: 664-666) காஷ்மீரில் இருந்து லோகாதித்யர் (Lokaditya) என்னும் ஒரு பிராமண மருத்துவரை சீனாவுக்கு வரவழைத்து ஆயுளை நீடிக்கும் மருந்துகள் செய்யும் வேலையை அவரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார். அந்த வேளையில் நம்பிக்கைக்குரிய அதிகாரியொருவர் அரசனிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். 'தங்களுடைய தந்தையின் உயிரை நாராயணசாமியால் காப்பாற்றமுடியவில்லை. ஒருவருடைய ஆயுள் என்பது விதியினால் தீர்மானிக்கப்படுவது. மருந்துகளால் அதனை நீடிக்கமுடியாது. இது குறித்து தாங்கள் தீவிரமாகச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும்' இதுவே அவரது விண்ணப்பம். இந்த வேண்டுகோளை அடுத்து அரசர் தமது முடிபை மாற்றிக்கொண்டார்.

கிபி: 716ல் அப்போதிருந்த சீனப்பேரரசர் சுவன் சோங்கிடம் (Xuan zong) அந்நிய நாட்டு வியாபாரி ஒருவர் இலங்கையில் அற்புதமான மருந்துகளைச் செய்யும் திறமையுடைய ஒரு வயது முதிர்ந்த பெண்மணி ஒருவர் இருப்பதாகக் கூறியுள்ளார். இதனைக்கேட்டவுடன் அரசர் தமது அதிகாரியொருவரை அழைத்து அந்த வியாபாரியுடன் கூடவே சென்று அந்தப் பெண்மணியை அழைத்து வருமாறு உத்தரவிட்டுள்ளார். ஆனால் அந்த அதிகாரியோ அரசருக்கு ஒரு முறையீட்டுக்கடிதம் எழுதினார். 'அரசே! அந்நியநாட்டு மருந்துகள் சீனாவில் வேலை செய்யும் என்பதை எப்படித் உறுதியாகக் கூறமுடியும். மேலும் அரண்மனை வளாகத்தில் அந்நிய நாட்டு மூதாட்டிக்கு எவ்வாறு இடம் ஒதுக்கிக் கொடுக்கமுடியும்.' என்று அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து சீனப்பேரரசர் தமது முயற்சியைக் கைவிட்டார்.

எனினும் நீண்ட ஆயுளைத் தரும் மருந்துகள் மீதிலான சீனப்பேரரசர்களின் ஆசை தொடர்ந்தது. பாதரசம் சேர்க்கப்பட்ட ஆயுள்நீடிப்பு மருந்துகளினால் உயிரிழந்த மன்னர்களின் பட்டியலில் டிசோங் (De zong கிபி: 780-805), ஷியன்சோங் (Xian zong கிபி: 806-821), ஆகியோர் அடங்குவர்.

இத்தகைய தகவல்களை நோக்குமிடத்து திருமூலர் வாழ்ந்த காலப்பகுதியாகக் கருதப்படும் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சீனதேசத்து மருத்துவர்களுக்கும் இந்தியாவின் மருத்துவர்களுக்கும் இடையில் தொடர்புகள் இருந்துவந்துள்ளமை உறுதியாகின்றது. இந்த வரலாற்றுப்பின்னணியில் போகர், புலிப்பாணி ஆகியோரின் சீனப்பின்னணி குறித்த மரபுவழிக் கதைகள் ஓரளவு நம்பகத் தன்மை பெறுகின்றன.

சீனத்தொடர்பு உடையவர்களாகக் கற்பிக்கப்படும் போகர், புலிப்பாணி ஆகிய சித்தர்களின் பெயரில் இன்று கிடைக்கப் பெறும் வைத்திய நூல்கள் பற்றி நா.கதிரவேற்பிள்ளை அவர்கள் கூறுவதையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்வோம்.

'போகரிடத்தில் வைத்தியம் கற்ற மாணவர் ஒருவர் அவர் கூறிய முறைகளைச் செய்யுளுருவாகப் பாடிப் போகர் நூலெனப் பெயர் புனைந்தார். பிற்காலத்து வைத்திய பண்டிதர்களும் தாம் அநுபவத்தால் கண்டறிந்த முறைகளைப் பாடிக் காலந் தோறும் அந்த நூலில் நுழைத்தும் விட்டார்கள். பிறகு அச்சிடப் புகுந்தோரும் கூட்டியும் திருத்தியும் மாற்றியும் அதனை அடியோடு பிறழ வைத்தார்கள். புலிப் பாணியென்பவர் போகரோடு சீனதேசத்திலிருந்து வந்து அவர் மீளும்போது அவருடனே போகாமல் தமிழ் நாட்டிலேயே தங்கிவிட்டவர். அவர் பாடலென்று உள்ளன யாவும் அவரால் பாடப்பட்டனவன்று, அதுவும் புரட்டு நூலேயாம். தமிழ் நாட்டுக்கு ஆதியிலேயே வைத்திய நூல்களை உபகரித்தவர்கள், அகஸ்தியர், தேரையர் முதலியோர்களே. அவர்களுள்ளே பெரும் பாலானவை அழிந்தனவேனும் எஞ்சி நின்ற சில நூல்களை நோக்குமிடத்து அவை யாவும் வட நூல்களுக்கு இணக்கமாய் இருப்பது பிரத்தியட்சமாகும், போகர் புலிப்பாணி நூல்களோடு சிறிதுமொவ்வா.'

கதிரவேற்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் போகர் முதலான சித்தர்கள் பெயர்களில் இன்று கிடைக்கப்பெறும் நூல்கள் எதுவுமே அவர்களால் எழுதப்படவில்லை. அகத்தியர், தன்வந்தரி, திருமூலர், போகர், புலிப்பாணி முதலான பண்டைக்காலத்து முனிவர்களினதும் சித்தர்களினதும் பெயர்களில் பிற்காலத்தவர்கள் பலரும் எழுதிவைத்துள்ள மருத்துவம் யோகம் ஞானம் இரசவாதம் போன்ற விடயங்கள் தொடர்பான நூல்களே இன்று எமக்குக் கிடைப்பவை. இவற்றை உறுதிப்படுத்துவதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன.

சித்தர் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் கண்டறிந்த மருத்துவம் தொடர்பான விடயங்கள் உட்படப் பல்வேறு தகவல்கள் பல தலைமுறைகளாகக் குருசீட பாரம்பரிய முறையில் செவிவழிச் செய்திகளாகவே (oral tradition) பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றைத் தமிழில் நூலுருவில் எழுதிப்பேணும் வழக்கம் மிகவும் பிற்காலத்திலேயே ஆரம்பமானது. இத்தகைய எழுத்துருவாக்கல் முயற்சிகள் பெரும்பாலும் பதினேழாம் நூற்றாண்டில் அல்லது அதற்கும் பின்னர் தொடங்கப்பெற்றனவாகும். இவற்றை எழுதிவைத்தோர் காலத்துக்குக்காலம் தாம் புதிதாக அறிந்து கொண்ட மருத்துவ நுட்பங்களையும் மருந்துகளையும் தம்முன்னோரான சித்தர்கள் பெயரிலேயே எழுதியும் வைத்தனர். இத்தகைய நூல்களை இனங்கண்டு கொள்வது கடினமான விடயம் அன்று.

பீங்கான், குப்பி, சீஸா, பக்கிரி போன்று பிற்காலத்தில் தமிழர் மத்தியில் அறியப்பட்ட சொற்கள் சித்தர் நூல்கள் பல வற்றிலும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். சித்தர்கள் ஆக்கியதாகக் கூறப்படும் நூல்களுள் மிகப் பெரும்பாலானவற்றில் 'பறங்கிப்பட்டை' அல்லது 'பறங்கிச்சக்கை' என்னும் மூலிகை மருந்து இடம்பெற்றிருப்பதைக் காணமுடியும். இந்திய மருத்துவர்கள் 16ம் நூற்றாண்டுக்கு முன்னதாகப் 'பறங்கிப்பட்டை' பற்றி அறிந்திருக்க முடியாது.

சீனாவில் இருந்து தருவிக்கப்படும் சீனப்பட்டை (chobchini) என்னும் மூலிகை தமிழ் மருத்துவரால் 'பறங்கிப்பட்டை' என்றும் அறியப்படுவதுண்டு. 'ஸிபிலிஸ்' (syphilis) எனப்படும் பால்வினை நோயை இந்தியாவுக்குக் கொண்டு வந்தவர்கள் போர்த்துக்கேயர். பறங்கியரால் கொண்டுவரப்பட்ட நோய் என்ற காரணத்தால் இந்த நோய்க்குப் 'பறங்கி ரோகம்' என்று பெயரிட்டனர் நம்மவர்கள்.

கிபி: 1542க்கும் 1545க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கோவாவின் ஆளுநராக இருந்தவர் மார்ட்டிம் அபொன்ஸொ டி சூசா (Martim Afonso de Sousa). இவரது நண்பரும் மருத்துவருமான கார்ஸியா டி ஓட்டா (Garcia de Orta) இந்தியாவில் கிடைக்கப்பெறும் விசேடமான மருந்துப் பொருள்கள், தாவரங்கள், விலங்குகள் மற்றும் கனிமங்கள் பற்றி ஆய்வு நூல் ஒன்றை எழுதிய முதலாவது ஐரோப்பியர் என்ற பெருமைக்கு உரியவர். இவர் தமது நூலில் சீனாவில் இருந்து தருவிக்கப்படும் 'சொப்சீனி' (chobchini) எனப்படும் ஒருவகைச் சீனப்பட்டை பறங்கிரோகத்துக்கு மருந்தாகலாம் என்ற செய்தி 1535ம் ஆண்டில் அறியப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சீனப்பாகு அல்லது சீனவேர் (china root-Smilax china L.) என்று முன்னர் அறியப்பட்ட ஒரு மூலிகை பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பறங்கி நோய்க்கு மருந்தாகப் பிரசித்தி பெற்றதன் மூலம் 'பறங்கிப்பட்டை' என்னும் பெயரைப் பெற்றது. இந்த வரலாற்றுப் பின்னணியில் பறங்கிப்பட்டை என்னும் மூலிகை இடம் பெற்றுள்ள எந்த ஒரு தமிழ் நூலும் பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கமுடியாது.

இதுபோலவே 1617ம் ஆண்டில் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட புகையிலையும் மேற்படி நூல்களில் மருந்துப்பொருள்களுள் ஒன்றாகக் கூறப்படுவதையும் கவனிக்கலாம். இத்தகைய நூல்கள் இவற்றின் தற்போதைய வடிவில் பதினேழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை எனக் கருத முடியாதுள்ளது.

போகர் ஏழாயிரம் (போகர் 7000) என்னும் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் ஒரு பெருநூலில் சித்தர்கள் பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. சித்தர்கள் ஒவ்வொருவரினதும் வயது, சாதி, பிறந்த நட்சத்திரம் மற்றும் அவர்கள் செய்து காட்டிய அற்புதங்கள் பற்றிய பல தகவல்களை இந்நூலில் காணமுடிகின்றது. ஆயினும் இந்நூல் காலத்தால் மிகவும் பிற்பட்டது. பெரும்பாலும் போகர் 7000 என்னும் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கமுடியாது. இந்நூலில் போகர் உள்ளிட்ட சித்தர்கள் பற்றிக் கூறப்படுள்ள செய்திகள் அனைத்துமே நம்பகத்தன்மை அற்றவை. எனினும் போகர் ஏழாயிரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தையும் உண்மை என்று நம்புவோரும் இருக்கின்றார்கள்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கப்பெற்ற பிரபுலிங்கலீலை என்னும் நூல் பற்றி போகர் ஏழாயிரம் பேசுகின்றது. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலை பற்றிய குறிப்பையும் போகர் ஏழாயிரத்தில் காணமுடிகின்றது. நீராவிக்கப்பல். புகையிரதம், பரசூட் போன்ற கண்டுபிடிப்புக்கள் பற்றிய விளக்கங்கள் போகர் ஏழாயிரத்தில் தரப்பட்டுள்ளன. உலகின் முதலாவது பயணிகள் புகையிரதம் இங்கிலாந்தில் 1825ம் ஆண்டிலேயே முதன்முதலாக ஓடியது என்பதை இவ்விடத்தில் நினைவு கூரலாம். இவைபற்றியெல்லாம் போகர் முன்னரேயே அறிந்து வைத்திருந்தார் என்றால் இவற்றுள் ஏதாவது ஒன்று பற்றிய ஒரு சிறுகுறிப்புதானும் ஏனைய சித்தர்நூல்கள் ஒன்றில் கூடக் காணப்படாமைக்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு

*தொடர்தல் 78ம் பக்கம்*

# சித்தர்களின் சீனத்...

77ம் பக்கத் தொடர்ச்சி...

முன்னர் தமிழ் மருத்துவர்கள் தமது மருந்துத் தயாரிப்புகளுக்குப் பயன்படுத்தி வந்த மூலிகைகள், உலோகங்கள் மற்றும் கனியுப்புக்கள் பற்றி மிகவிரிவாக ஆராய்ந்து இருபெரும் நூல்களை வெளியிட்டவர் ஆங்கிலேய மருத்துவரும் தஞ்சை சரபோஜி மகாராஜாவின் நண்பருமான வைற்லோ ஐன்ஸ்லி (Whitelaw Ainslie). இவ்வறிஞர் 1813ம் ஆண்டிலும் 1826ம் ஆண்டிலும் தாம் வெளியிட்ட இரு நூல்களிலும் தமது சமகாலத் தமிழ் வைத்தியர்கள் வைத்திருந்த மருத்துவ நூல்களையும் பட்டியலிட்டுள்ளார். இவற்றுட் போகர் பெயரில் காணப்படும் நூல்கள் போகர் 700, போகர் நிகண்டு, போகர் திருமந்திரம், போகர் யோகமார்க்க மூலிகை ஆகிய நான்குமாகும். இவற்றுள் போகர் 7000 என்னும் நூல் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது

### சித்தர்களுள் பெரும்பாலானோர் சாதி வேறுபாடுகளைக் கண்டித்தவர்கள்:

இவர்களுக்கு சாதி கற்பிக்கின்றார் போகர் 7000 என்னும் நூலை ஆக்கியவர். தேரையர் என்னும் ஆயுள்வேத நூலாசிரியரைப் பிராமணன் என்றும் புலிப்பாணியை வேடர் என்றும் கமலமுனியைக் குறவர் என்றும் குதம்பைச்சித்தரை இடையர் என்றும் சுந்தரானந்தரை அகமுடையார் என்றும் சாதி அடையாளம் காட்டுகின்றார். மச்சமுனியையும் சட்டை முனியையும் சிங்களவர் என்றும் கோரக்கரை மராட்டியர் என்றும் கூறுகின்றார்.

*மலையான சட்டமுனி சாதிபேதம்*
*மகத்தான சிங்களவன் என்னலாகும்*
*சிலையான கோத்திரங்கள்*
*பதினான்காகும்*
*சிற்பரனே கண்ட நூல் அறிந்தமட்டே.*

சித்தர்கள் பற்றிய செய்திகளைத் தாம் சித்தர் நூல்களில் கண்டறிந்ததாகக் கூறுகின்றார். எனினும் சித்தர்களின் சாதி மற்றும் பிறந்த நட்சத்திரங்கள் பற்றிப் போகர் 7000 தவிர்ந்த வேறு எந்த நூலும் கூறியதில்லை.

சித்தர்கள் ஒவ்வொருவரினதும் வயதை மிகமிக நீண்டதாகக் காட்ட போகர் 7000 முனைகின்றது. உதாரணமாகப்புலிப்பாணிச் சித்தரின் வயது 600 என்றும், காலாங்கி நாதரின் வயது 3000 என்றும் என்றும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*புரிகுவார் வயதினுட மார்க்கந்தன்னை*
*புகலுவேன் காலாங்கி நாதருக்கு*
*சரியுடனே மூவாயிரஞ் சொச்சமப்பா*
*சங்கமுடன் வயதுதான் என்னலாகும்*

சித்திரை மாதம் அஸ்வினி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் காலாங்கி நாதர் பிறந்தார் என்கிறது போகர் ஏழாயிரம்.

*நூலான நூலதுதான் நுணுக்கம் மெத்த*
*நுட்பமுடன் காலாங்கி பிறந்த வண்ணம்*
*பாலான சித்திரையாம் மாதம் அப்பா*
*பாங்கான அசுவினியாம் நாலாம்காலாம்*

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த சித்தர் ஒருவர் சித்திரை மாதத்தில் அஸ்வினி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் பிறந்தார் என்னும் செய்தியை போகர் ஏழாயிரத்தின் ஆசிரியர் எவ்வாறு அறிந்திருக்க முடியும் என்னும் கேள்வி எழாமல் இருக்க முடியாது. சித்தர்களின் சாதி, வயது, பிறந்த நாள் என்பவை பற்றிப் போகர் ஏழாயிரம் என்னும் நூல் தரும் தகவல்கள் அனைத்தும் ஆதாரமற்ற வெறும் கற்பனைச் செய்திகளாகவே காணப்படுகின்றன.

பழனி முருகன் கோவிலின் கருவறையில் உள்ள மூலவர் சிலையை ஒன்பது வகையான பாஷாணங்களைக் கொண்டு வடிவமைத்துப் பிரதிட்டை செய்தவர் போகர் என்னும் சித்தரேயாவர் என்பது நீண்ட காலமாகப் பேசப்பட்டுவரும் ஒரு மரபு. இந்தப் போகரின் சமாதியும் பழனியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் கதிரவேற்பிள்ளை குறிப்பிடும் சீனத்துப் பௌத்த துறவியான போகரும் பழனி முருகன் கோவில் மூலவரை நவபாஷாணத்தால் உருவாக்கிய போகரும் ஒருவராக இருக்கமுடியாது. போகர் என்னும் பெயருடன் பிற்காலத்தில் உலவிய சித்தர் ஒருவரே பழனிமுருகன் சிலையை உருவாக்கியிருத்தல் கூடும்.

பாமரமக்கள் மத்தியில் தம்மை சித்தர் என்று அடையாளப்படுத்திக்கொண்ட துறவிகளுள் ஒரு சிலர் தாம் அகத்தியர், நந்தி, போகர், புலிப்பாணி போன்ற பண்டைய சித்தர்களுள் ஒருவரின் சீடராகக் கூறிக்கொண்டனர். இவர்களுட் சிலர் பண்டைய முனிவர்கள் மற்றும் சித்தர்கள் பெயர்களில் நூல்கள் பலவற்றை மிக எளிமையான தமிழில் எழுதியும் வைத்தனர். இன்று அகஸ்தியர் பெயரில் கிடைக்கப்பெறும் ஏராளமான மருத்துவ நூல்கள் இவ்வாறு தோற்றம் பெற்றனவாகும். இவற்றுடன் கூடவே ஆயுள்வேத்தின் பிதாமகர் என்று அறியப்படும் தன்வந்தரி பெயரிலும் வள்ளுவர் மற்றும் ஔவையின் பெயரிலும் கூட வைத்திய நூல்களைக் காண முடியும்.

காலாங்கிநாதரின் சீடரான போகர் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒருவர் போகர் மூலிகை நிகண்டு என்னும் நூலை ஆக்கித் தந்துள்ளார். இந்நூலில் வரும் ஒரு பாடலைப் பார்ப்போம்.

*ஆமப்பா மூலிகையின் சாதியெல்லாம்*
*அறிந்தமட்டும் ஆராய்ந்து ஆயியைத்*
*தான் கேட்டு*
*ஓமப்பா நந்திசொல்லக் கேட்டுக்கேட்டு*
*உவப்பான காலாங்கி நாதர் சொல்லக்*
*கேட்டு*
*சேமப்பா வடமொழியின்*
*திரட்டையெல்லாம் பார்த்து*
*சிரசான சித்தர்களைத் தொழுதுகேட்டு*
*நாமப்பா நிகண்டுக்குள்*
*பெயரையெல்லாம்*
*நழுவாமல் அறிந்தமட்டும் சொன்னோம்*
*பாரே.*

திருமூலரின் காலத்துக்குச் சமீபமாக வாழ்ந்த ஒரு சித்தர் இதுபோன்றதொரு கவிதையை எழுதியுள்ளார் என்பதை நம்பமுடியவில்லை. மேலும் திவாகரம், பிங்கலம் போன்ற பல்பெயர்த் தொகுதிகளைத் தமிழில் 'நிகண்டு' என்று குறிப்பிடும் வழக்கம் 16ம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிற்று என்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

**உசாத்துணை:**

- *Ainslie, Whitelaw (1813) Materia Medica of Hindustan and Artisan;s Agriculturist's Nomenclature, Madras 1813*
- *Ainslie, Whitelaw 1826 Materia Indica Vol I & II, London 1826*
- *Sen, Tansen (2003) Buddhism, Diplomacy, and Trade: the realignment of sino-indian relations, 600-1400, Association for Asian Studies and University of Hawai'I Press, Homolulu. p.45-47*
- *Stapleton H.E. et al (1922-1929) Indian Alchemy (கிபி: 500-1000) Memoirs of Bengal Asiatic Research Vol. VII, p.343*
- *White, David Gordon (1996), The Alchemical Body: Siddha Traditions in Medieval India, (The University of Chicago Press / Chicago and London) p.60*
- *கதிரவேற்பிள்ளை, நா. தமிழ்மொழி அகராதி செம்பதிப்பு, சாரதா பதிப்பகம், சென்னை 2003 பக்கம் 1104*



*Sivakadadcham@thaiveedu.com*

*Bringing Your Dreams To Life!*

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

RE/MAX REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Mahesan Subramaniam
BROKER



**Free Home Evaluation with No Obligation**

**416-816-0141**

141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC



- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
*Residential & Commercial*

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட



**Raj Subrayam** AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
**Tel: 416 298 1700**
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

- நா. சுப்பிரமணியன் -

1920கள் முதல் 1950-60கள் வரையான காலப்பகுதியில் 'தமிழ் இலக்கிய - இலக்கணக் கல்வியின் இயங்குநிலைகள்' பற்றி நோக்கி வருகிறோம். இவ்வகையில் கடந்த கட்டுரையிலே பேராசிரியர் வி.செல்வநாயகமவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூல் பற்றிய பொது அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டன. அது வரலாற்று முக்கியத்துவமுடைய ஆக்கமென்பது அங்கு சான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டது. அவ்வாறான சிறப்புகளுடன் அவ்வாக்கம் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் தொடர்பான சில மேலதிகக் குறிப்புகளுடன் இக்கட்டுரை தொடர்கின்றது.

மேற்படி நூலுருவாக்கம் சிறப்பாக அமைவதற்குத் துணைநின்ற முக்கிய காரணிகள் என்ற வகையில் இரு விடயங்களை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். இவற்றுள் ஒன்று, தமிழிலக்கியங்களின் காலக் கணிப்பிலும் அவ்வாக்கங்களை வரலாற்று முறையில் வரிசைப்படுத்தி நோக்குவதிலும் 1950வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகள் ஆகும். இவ்வகையில் குறிப்பாக, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் (1891-1956) முன்வைத்திருந்த ஆய்வு முடிபுகள் செல்வநாயகமவர்களுக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளன. வையாபுரிப்பிள்ளையவர்கள் அகராதியியலாளராகவும் பதிப்பாளராகவும் இயங்கியதோடு பண்டைத்தமிழ் இலக்கியங்களின் கால ஆய்

## தமிழியல் ஆய்வுகள்: 08

வினும் தமிழிலக்கிய வரலாற்றைக் கட்டமைக்கும் நோக்கிலான எழுத்தாக்க முயற்சிகளிலும் கூட தீவிரமாக ஈடுபட்டு நின்றவர். இலக்கியச் சிந்தனைகள், History of Tamil Language & Literature முதலிய அவருடைய பல ஆக்கங்களில் தமிழிலக்கிய வரலாறு தொடர்பான அவருடைய பேரீடுபாட்டை நோக்கியுணரலாம். (இத் தொடர்பிலான அவரது இயங்கு நிலைகள் பற்றி ஏற்கெனவே இத் தொடரின் 4வது கட்டுரையிலே(ஜூலை 2020) நோக்கியுள்ளோம்.)

இவ்வாறு வையாபுரிப்பிள்ளையவர்கள் தமது ஆய்வுகளின் ஊடாக முன்வைத்திருந்த கால ஆய்வு முடிபுகள் மற்றும் இலக்கிய வரலாற்றின் இயங்குநிலைகள் பற்றிய கருத்துநிலைகள் ஆகியவற்றைச் சார்ந்த ஒரு ஆக்கமுயற்சியாகவே பேராசிரியர் வி. செல்வநாயகமவர்களின் மேற்படி தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஆக்கம் திகழ்கிறது.

இந்நூலுருவாக்கத்திற்குத் துணைநின்ற மற்றொரு காரணி செல்வநாயகமவர்களின் 'இலக்கியத்திறனாய்வுத் திறன்' ஆகும். இலக்கியத்திறனாய்வு என்பது இலக்கியங்களின் இயல்புகள், தகைமைகள் ஆகியவற்றை இனங்காண்பது மற்றும் இலக்கிய ஆக்கங்களின் ஊடாகத் தொடரும் படைப்பாக்க வளர்ச்சிநிலைகளை வரலாற்றுமுறையில் இயைபுபடுத்தி நுனித்து நோக்குவதுமான செயற்பாங்குகளை மையப்படுத்திய ஆய்வுமுறையாகும். இலக்கிய விமர்சனம் என்ற தொடராலும் நாம் இதனைக் குறிப்பிட்டுவருகிறோம். ஆங்கிலத்திலே வழக்கிலிருக்கும் Literary criticism என்ற தொடரின் தமிழாக்கங்களாக இத்தொடர்கள் திகழ்கின்றன.

இலக்கிய வரலாற்றைக் கற்பிக்கவும் எழுதவும் முற்படும் ஒருவருக்கு மேற்படி திறனாய்வு ஆளுமையானது இன்றியமையாத ஒன்றாகும். செல்வநாயகமவர்களுக்கு அவ்வாளுமை இருந்ததென்பதே இங்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தியாகும். இத்தொடர்பிலே திறனாய்வு என்ற செயன்முறை மற்றும் அம்முறைமை தொடர்பான ஆளுமையை பேராசிரியர் செல்வநாயகமவர்கள் வளர்த்துக்கொண்ட சூழல் ஆகியன தொடர்பான வரலாற்றுக் குறிப்பொன்றையும் முன்வைப்பது அவசியமாகிறது.

தமிழிலே பண்டைக்காலம் முதலே திறனாய்வுசார் எண்ணக்கருக்களும் செயன்முறைகளும் நிலவி வந்துள்ளனவெனினும் அவை கடந்த நூற்றாண்டுவரை திறனாய்வு அல்லது விமர்சனம் ஆகிய பெயர்களிலான ஒரு முறையியலாக உருவாக்கம் பெற்றிருக்கவில்லை. கடந்த ஒரு நூற்றாண்டுக்குட்பட்ட காலப்பகுதியிலேயே அவை 'திறனாய்வியல்' என்பதான திட்டப்பாங்கான ஒரு ஆய்வுமுறைமையாக உருவாகி வந்துள்ளன என்பதே வரலாறு.

தமிழகத்தவர்களான திருமணம் செல்வக்கேசவராய முதலியார் (1864 - 1921) மற்றும் வரகனேரி வேங்கடசுப்பிரமணிய ஐயர் (1881 - 1925) ஆகியோருடைய எழுத்துகளிலிருந்தே இவ்வாறன ஆய்வுமுறைமை தமிழ்ச் சூழலில் அறிமுகமாகத் தொடங்கியது. இவ்வாறான முதல் முயற்சிகளின் தொடர்ச்சிகளான இலக்கியசிந்தனைப் போக்குகளின் அடுத்த கட்டத்திலே சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1941ம் ஆண்டு பி.ஓ.எல். ஆனர்சு என்ற பட்டப்படிப்புக்கான பாடங்களிலொன்றாக திறனாய்வியல் இடம்பெறத் தொடங்கியது. பேராசிரியர்கள் மு. வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோர் இப்பாடப்பரப்பைக் கற்பிக்கத் தொடங்கினர். அக்காலப்பகுதிவரை ஆங்கில மொழியில் வெளிவந்திருந்த திறனாய்வு நூல்களின் பொருட்பரப்பை ஒட்டி இவர்களது பாடத்திட்டப்பரப்பும் கற்பித்தல் அணுகுமுறைகளும் அமைந்திருந்தன.

மேற்கண்டவாறு தமிழக உயர்கல்விச் சூழலில் பாடத்திட்ட நிலையில் கவனத்தைப் பெறத் தொடங்கிய திறனாய்வியலை ஈழத்தில் 1950களில் காலூன்றச் செய்தவர் என்ற சிறப்பு பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களுக்கு உரியதாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் அவர் தமது மாணவர்களுக்கு Practical Criticism (செயன்முறைத் திறனாய்வு) என்ற ஒரு தலைப்பிலே 'இலக்கியநயம்' காண்பதான பயிற்சியை அளித்து வந்துள்ளார்.W. H. Hudson (1841-1922) ) எழுதிய Introduction to the Study of Literature , A.C. Bradly(1851 - 1935)யின் Oxford Lectures in Poetry, L. Abercrombie (1881 - 1938)யின் Theory of Poetry, I.A. Richards(1893 - 1979) எழுதிய Principles in Literary Criticism முதலிய பல நூல்களின் உள்ளடக்க அம்சங்களை அடியொற்றியே இவரது இக்கல்விமுறை அமைந்திருந்தது.

மேலும் இவர், இம்முறைமைசார் கல்வியாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்த ஆங்கிலப் பேராசிரியரான E.F.C. Ludowyk (1906 - 1985) என்பார் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் பணிபுரிந்த காலகட்டத்தில்(1940களில்) அவரிடம் பாடங்கேட்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் என்பதும் இங்கு நாம் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய தகவல் ஆகும். (பார்க்க: பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பேராசிரியர் வி. செல்வநாயகம் கட்டுரைகள் - 2004 ப.xv)

மேலே நோக்கியவாறு பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் இலக்கியத்திறனாய்வு என்ற துறையில் வளர்த்து வந்த புலமைத்திறனே தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலைச் சிறப்பான வகையில் கட்டமைப்பதற்கான முக்கிய காரணிகளுள் ஒன்றாகத் திகழ்ந்திருக்கும் என்பது உய்த்துணரக்கூடிய ஒன்றாகும். இத்திறன், இந்த இலக்கிய வரலாற்று நூலுருவாக்கத்துக்கு மட்டுமன்றி அவருடைய பின்னைய ஆக்கமான தமிழ் உரைநடை வரலாறு (1957) நூலினது உருவாக்கத்துக்கும் முக்கிய காரணியாக அமைந்தது என்பதை அவ்வாக்கத்தை வாசிப்போர் உணர்வர்.

செல்வநாயகமவர்களுடைய தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலின் முதலாவது பதிப்பு 1951ல் வெளிவந்தது என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். அதன் பின்னர் இது பல பதிப்புகளைக் கண்டது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்க முயல்வோருக்கு புகுமுகத்தேர்வுக்கான பாடநூலாக இது அமைந்த காரணத்தால் சிற்சில ஆண்டுகள் இடை-வெளியில் இந்நூலுக்குப் பல பதிப்புகள் வெளிவருவதற்கான தேவை ஏற்பட்டது என்பதும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தியாகும்.

செல்வநாயகமவர்களின் மேற்படி நூலாக்கம் தொடர்பாக தமிழ் ஆய்வுலகிலே விமர்சனங்களும் உள்ளன. அவற்றுள் முக்கியமான ஒன்று, 'நூல்களின் காலம் பற்றிய அவருடைய கணிப்புகள்' சார்ந்ததுமாகும். குறிப்பாகத் தொல்காப்பியம் என்ற தொல்லிலக்கணநூலை சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்டதாக சங்கமருவிய காலத்ததாக அவர் கொள்ளும் நிலையைப் பல ஆய்வாளர்கள் ஒப்புவதில்லை. சங்க இலக்கியங்களுக்கு முற்பட்ட ஒரு நூலாக்கமாகவே அதனைப் பலர் கருதுகின்றனர். ஆய்வாளர்களுள் இன்னொரு சாரார் தொல்காப்பியத்தின் சிலபகுதிகள் சங்க நூல்களுக்கு முற்பட்டவை எனவும் வேறுசில பகுதிகள் சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்டவை எனவும் கருதுவர். இவ்வகை விவாதங்கள் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயுள்ளன.

(அண்மைக்கால தொல்லியல் ஆய்வுச் சூழலில் - குறிப்பாக கீழடி முதலிய ஆய்வுத்தளங்களின் தொல்பொருட்களின் கால நிர்ணயச்சூழலில் தொல்காப்பியத்தின் காலகட்டமானது கி.மு.9ம் நூற்றாண்டு வரை கொண்டு செல்லப்படுகின்றது - அதாவது அவ்வாறு ஊகிக்கப்படுகின்றது என்பது இங்கு நினைவில் இருத்த வேண்டிய செய்தியாகும். இவ்வாறான ஊகங்கள் வரலாற்றாய்வு முடிபுகளாக வலியுறுத்தப்படும் சூழலில் சங்க இலக்கியப் பரப்பின் காலமும்கூட முன்கொண்டு செல்லப்படும் என்பது வெளிப்படை.)

இவ்வாறான ஆய்வுநிலைசார் கருத்தாக்கங்கள் உருப்பெற்றிராத ஒரு காலகட்டத்திலேயே - அதாவது 70 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியிலேயே வி.செல்வநாயகமவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூல் உருவாக்கம் பெற்றது என்பதையும் இங்கு கவனத்தில் இருத்திக்கொள்வது அவசியமாகிறது. மேலும், பேராசிரியர் செல்வநாயகமவர்கள் மேற் குறித்தவாறான பலருடை விமர்சனங்களைக் கருத்துள் கொண்டு தனது அந்நூலின் பிந்திய பதிப்புகளில் இயன்றவரை குறிப்பிடத்தக்க சில மாற்றங்களையும் மேற் கொண்டுவந்துள்ளார் என்பதும்கூட இங்கு நமது கவனத்துக்குரிய தகவல் ஆகும்.

அடுத்து பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களின், தமிழ் இலக்கியத்தில் கால மும் கருத்தும் என்ற நூலாக்கம் பற்றி நோக்கலாம்.

### பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களின் 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்':

இந்நூலானது 'இலக்கிய வரலாறு' என்ற நோக்கில் எழுதப்பட்டதன்று என்பதை இங்கு முதலிற் குறிப்பிடுவது அவசியமாகிறது. மாறாக இது, தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கை முறையில் நிகழ்ந்து வந்த மாற்றங்களையும் அவற்றுக்கு அடிப்படைகளாகத் திகழ்ந்துள்ள சிந்தனை மாற்றங்களையும் இனங்கண்டு காட்டும் நோக்கிலேயே உருவானதாகும். இதனை, பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்கள் இந்நூலின் முகவுரையிலே பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

'காலத்திற்கேற்ற முறையில் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கை முறையும் மாறி-மாறி வந்திருக்க வேண்டும் என்ற கருத்து தமிழிலக்கிய வரலாற்றை நான் பல்கலைக்கழகத்தில் படிக்கநேர்ந்த காலத்தும் படிப்பிக்க நேர்ந்த காலத்தும் உறுதிப்பட்டு வந்திருக்கிறது.

அல்பேர்ட் சுவையிட்சர் என்ற மேனாட்டறிஞர் எழுதிய,'இந்தியச்சிந்தனையும் அதன் வளர்ச்சி நிலையும்' (Albert Shcweitzer - 1875 - 1965 ) - Indian Thought and Its Devolopment Engkish Edition(1936) என்ற ஆங்கில நூல் தமிழுக்கு அதைப்போல ஒரு நூல் எழுதவேண்டும் என்ற எண்ணத்தை எனக்குத் தேற்றுவித்தது. …' (ப.V)

இவ்வாறு தமிழர் வாழ்வியலின் வரலாற்றைப் பேசும் நோக்கில் உருவான இந்நூலை இலக்கிய வரலாறு என்ற நோக்கில் நாம் அணுகுவது பொருத்தமானதா? என்பது நம்முள் எழுவது இயல்பே. 'இந்நூல் இலக்கிய வரலாறு என்ற நோக்கில் உருவானதன்று' என்பது உண்மைதான். ஆனால் இலக்கிய வரலாற்றுப் பார்வையை மேலும் ஆழப்படுத்தி அதனூடாக வாழ்வியல் வரலாற்றின் - அதாவது வாழ்வியற் சிந்தனை வரலாற்றின் இயங்கு நிலையை இனங்கண வேண்டுமென்பதான ஆய்வியல் ஆர்வத்தின்வழி உருவானது இது என்பதே இங்கு நாம் கருத்துள் கொள்ளவேண்டிய விடயமாகும். அவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாறுசார் கல்வியின் ஒரு தனி வளர்ச்சிநிலையாக இதனை நாம் அடையாளங்காணவும் இடமுளது என்பதை மறுப்பதற்கில்லை.

மேலும், பேராசிரியர் செல்வநாயகமவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலின் வரலாற்றுக் காலகட்டப்பார்வைகள் சார்ந்து உருவான ஓராக்கமாகவும் கூட இது காட்சி தருகிறது என்பதை இங்கு சுட்டுவது அவசியமாகும். அதாவது இலக்கிய ஆக்கங்களின் காலங்கள் பற்றிய கணிப்புகள் மற்றும் வரலாற்றுக் கட்டங்கள் பற்றிய வரையறைகள் ஆகியவற்றில் செல்வநாயகமவர்கள் புலப்படுத்தி நின்ற பார்வைகளைப் பெரிதும் அடியொற்றியே வேலுப்பிள்ளையவர்களின் இந்நூல் செல்கிறது என்பதை இரு நூல்களையும் ஒப்பு நோக்குவோர் புரிந்து கொள்வர். இத்தொடர்பில் ஒப்பீட்டுநிலையிலான மேலதிக சிறுவிளக்கமொன்று வருமாறு:

செல்வநாயகமவர்களின் நூலிலே 'காலகட்ட வகுப்பு' என்பது பெரிதும் சமூகவரலாற்றுச் சூழல்களை - அதாவது அரசியல் ஆதிக்க நிலைச்சூழல்களை மையப்படுத்தியதாக அமைந்ததாகும். வரலாற்றின் முதலிரு கட்டங்களையும் சங்ககாலம், சங்கமருவியகாலம் எனச் சுட்டிய அவர் அடுத்து, வரும் ஐந்து காலகட்டங்களில் நான்கை பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம் என வகைப்படுத்தினார் எனக்கண்டோம். இறுதிக்கட்டம் மட்டும் இருபதாம் நூற்றாண்டு என நூற்றாண்டு அடையாளத்தைப் பெற்றமைந்தது. அதாவது செல்வநாயகமவர்கள், பெரிதும் அரசியலாதிக்க வரலாற்றுச் சூழல்களை மையப்படுத்தியே இலக்கிய

*தொடர்தல் 81ம் பக்கம்*

# தமிழியல் ஆய்வுகள்...

**80ம் பக்கத் தொடர்ச்சி...**

வரலாற்றின் இயங்குநிலைகளைத் தரிசிக்க முற்பட்டவராவார். ஆனால் வேலுப்பிள்ளையவர்களின் இந்நூலின் வரலாற்றுக் கட்டங்கள் பற்றிய பகுப்பு முறையானது ஒவ்வாரு காலகட்டத்திலும் இலக்கியங்களின் உருவாக்கங்களுக்கு உந்துசக்திகளாக அமைந்திருந்த கருத்துநிலைகளை மையப்படுத்தி அமைந்ததாகும்.

அதாவது செல்வநாயகமவர்கள் புறநிலையாக நின்று சமூக அரசியற் சூழல்களை மையப்படுத்தி இலக்கிய வரலாற்றியக்கத்தை அணுகியவர். வேலுப்பிள்ளையவர்கள் அகநிலைகளான கருத்தியல்களை மையப்படுத்தி தமிழர் வாழ்வியலின் வரலாற்றியக்கத்தை அடையாளங்காட்ட முற்பட்டவர்.

இவரது இந்நூல் இயற்கை நெறிக்காலம், அறநெறிக்காலம், சமயநெறிக்காலம், தத்துவநெறிக்காலம் அறிவியல்நெறிக்காலம் என ஐந்து இயல்களைக் கொண்டமைந்ததாகும். செல்வநாயகமவர்கள் சங்ககாலம், சங்கமருவிய காலம் என்பனவாகச் சுட்டிய காலப்பகுதிகளை அடையாளங்காட்டும் வகையிலேயே வேலுப்பிள்ளையவர்கள் இயற்கைநெறிக்காலம், அறநெறிக்காலம் ஆகிய தலைப்புகளிலான முதலிரு இயல்களையும் அமைத்துக்கொண்டுள்ளார்.

சங்ககால இலக்கியங்கள் புலப்படுத்தி நிற்கும் வாழ்வியலானது அக்கால இயற்கைச் சூழல்கள் மற்றும் அவைசார் உலகியல் ஈடுபாடுகள் ஆகியவற்றை மையப்படுத்தி அமைந்தவையாகும். அவ்வகையில் அக்கால இலக்கியங்கள் அவ்வாழ்வியலின் இயல்பான உணர்வுகளின் வெளிப்பாடுகளாகவே உருவாயின் என்பதும் வெளிப்படை. இதனை உணர்த்தும் வகையிலேயே அக்காலப்பகுதியை இயற்கைநெறிக்காலம் என அவர் அடையாளப்படுத்தியுள்ளார்.

செல்வநாயகமவர்களால் சங்கமருவிய காலம் எனச் சுட்டப்பட்ட பகுதியின் இலக்கிய ஆக்கங்கள் காட்டும் வாழ்வியலானது அறம் மற்றும் ஒழுக்கம் ஆகிவற்றுடன் கூடிய கட்டுப்பாடான சமூக வாழ்வை அவாவி நின்றதாகும். அதாவது சமூகத்தின் பல்வகைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நாடிநின்ற ஒரு சமுதாயச் சூழலையே திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான அக்கால முக்கிய ஆக்கங்கள் உணர்த்துகின்றன. குறிப்பாகச் சமணம், பௌத்தம் மற்றும் வைதிகச் சிந்தனைகள் ஆகியனசார் அறவியல் சிந்தனைகளை மையப்படுத்தியே இக்கால வாழ்வியல் வழிநடத்தப்பட்டது. இவ்வம்சங்களைக் கருத்துள் கொண்டே அக்காலகட்டத்துக்கு வேலுப்பிள்ளையவர்கள் அறநெறிக்காலம் என்ற பெயரைச் சூட்டியுள்ளார்.

செல்வநாயகமவர்களால் பல்லவர்காலம் எனப்பட்ட காலப்பகுதியும் 'சோழர்காலம்' எனப்பட்ட காலப்பகுதியின் பெரும்பாலான பகுதிகளும் வேலுப்பிள்ளையவர்களால் சமயநெறிக்காலம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பல்லவராட்சிக் காலத்தில் சைவம் வைணவம் ஆகிய சமயங்கள் சார்ந்து உருவான பக்தியியக்கங்களின் தளத்தில் முகிழ்த்த பக்திப்பாடல்கள் - அதாவது தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தம் ஆகிய வகைகளிலான இலக்கிய ஆக்கங்கள் அக்காலத் தமிழகத்த வர்களிற் பெரும்பாலானோரின் வாழ்வியலில் இறையுணர்வு என்ற அம்சத்தை அழுத்தமாகப் பதிவுசெய்தன.

இவ்வாறு பதிவான இறையுணர்வானது தமிழர் வாழ்வியலின் பல்வேறு துறைகளிலும் - குறிப்பாக அரசியல், இலக்கியம், கல்வி, கலைகள் முதலியவற்றில் - தன்னை முன்னிறுத்தி நின்ற ஒரு முக்கிய வரலாற்றுக் கட்டமாகவே சோழப் பெருமன்னர் காலம் கணிக்கப்படுகிறது. மேற்சுட்டிய சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்கள் சார்ந்த பேரிலக்கியங்களான பெரிய புராணம், கம்பராமாயணம் ஆகியன சோழர்காலத்திலேயே எழுந்தன என்பதை இங்கு நாம் நினைவிற் கொள்ளலாம். அவை முறையே சைவம் வைணவம் ஆகியனசார்ந்த பக்திப்பாடல் மரபுகளின் தொடர்ச்சிகளும் வளர்ச்சிகளுமாகவே கணிக்கப்படுகின்றமை வெளிப்படை. வேலுப்பிள்ளையவர்கள் இக்காலப்பகுதியை சமயநெறிக்காலம் என ஒரே காலகட்டமாகக் கருதியதன் அடிப்படை அம்சங்கள் இவையே.

வேலுப்பிள்ளையவர்கள் தத்துவநெறிக்காலம் எனச்சுட்டிய காலப்பகுதியானது ஒருவகையில் சமயநெறிக்கால சிந்தனையின் தொடர்ச்சியும் நீட்சியுமாகவே திகழ்வதாகும். தமிழகத்தில் சைவம் வைணவம் ஆகிய சமயங்களுடன் தொடர்பான தத்துவசிந்தனைகள் பல்லவர் காலப்பகுதியிலேயே முளைகொள்ளத் தொடங்கிவிட்டன. ஆயினும் அவற்றுட் சில விவாத நிலைகளில் வளர்ச்சியெய்தி நூல்வடிவங்களாக வெளிப்படத் தொடங்கிய காலப்பகுதி சோழர்காலத்தின் பிற்பகுதியேயாகும். குறிப்பாக இராமானுச வேதாந்தம், மத்துவ வேதாந்தம், சைவ சித்தாந்தம், வீர சைவம் முதலிய முக்கிய தத்துவப் பிரிவுகள் தமிழகத்திலும் அதைச்சார்ந்த கன்னட நாட்டை மையப்படுத்திய தென்னகப் பகுதிகளிலும் தம்மை வடிவமைத்துக் கொண்ட காலப்பகுதி 12,13ம் நூற்றாண்டுகளேயாகும்.

இவ்வாறான இக்காலகட்டத்தை மையப்படுத்தி அடுத்துவரும் நான்கைந்து நூற்றாண்டுக்காலப் பகுதியையே வேலுப்பிள்ளையவர்கள் தத்துவநெறிக்காலம் என்கிறார். அவ்வகையில் இக்காலப் பகுதியானது நாயக்கர்காலத்தை உள்ளடக்கி ஐரோப்பியர் காலத்தின் முற்பகுதி வரை தொடர்வதாகும். குறிப்பாகச் சைவசித்தாந்த நூல்கள் தாயுமானவர் பாடல்கள் சித்தர் பாடல்கள் ஆகியன எழுந்த காலப் பகுதி வரையான வரலாற்றுப்போக்கை உள்ளடக்கிய காலகட்டமாக இக்காலப் பகுதி அமைவது தெரிகிறது.

பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்களால் அறிவியல்நெறிக்காலம் எனப்பட்ட காலப் பகுதியானது பொதுவாகப் 18ம் நூற்றாண்டுமுதல் 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையான காலப்பகுதியாகும். ஐரோப்பியர் செல்வாக்கு தமிழகத்தில் மேலோங்கி நின்ற காலப்பகுதி இது என்பதை அறிவோம். 15ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் நிகழ்ந்த மறுமலர்ச்சிச் சிந்தனைகளின் தொடர்ச்சிகளாகவும் விளைபொருட்களாகவும் உருவான சமூகசிந்தனைகள் மற்றும் வாழ்வியல் நோக்குகள் ஆகியன தமிழகச் சூழலில் அறிமுகமான காலப்பகுதியே, இது. இப்புது வரவுகள் தமிழகத்தின் பாரம்பரியமான வாழ்வியல் நோக்குகளில் எத்தகைய மாற்றங்களை விளைவித்தன என்பதை இவ்வியலில் அவர் அடையாளங்காட்ட முற்பட்டுள்ளார்.

மேற்படி விடயங்கள் இவ்வியலில் சுருக்கமாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இவ்வியலானது, இத்தலைப்பிலான ஒரு தொடக்கநிலை முயற்சியேயாகும். இதனை அவரே உணர்ந்துள்ளார். அவர் தமது முகவுரையிலே தந்துள்ள, 'அறிவியல்நெறிக்காலம் இன்று நிகழுங்காலமாகும். எதிர்காலத்திலேயே, இக்காலத்தைப் பற்றிச் சிறப்பாக மதிப்பீடு செய்ய இயலும்'என்ற குறிப்பு(ப.V1) இதனைத் தெளிவுறுத்துகிறது.

மேற்கண்டவை, பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்களின் தமிழ் இலக்கியத்திற் காலமுங் கருத்தும் என்ற நூலாக்கம் பற்றிய மிகச் சுருக்கமான அறிமுகக் குறிப்புகள் மட்டுமே. இந்நூலை வாசிப்பவர்கள் செல்வநாயகமவர்கள் தொடக்கி வைத்த 'இலக்கிய வரலாற்றுப் பார்வை'யை இவர் (வேலுப்பிள்ளையவர்கள்) 'வாழ்வியற் சிந்தனைப் பின்புல வரலாறு என்ற வகையில் எந்த அளவுக்கு ஆழப்படுத்திச் சென்றுள்ளார் என்பதைத் தெளிவாகவே தெரிந்துகொள்வர்.

1920கள் முதல் 50 - 60கள் வரையான காலப்பகுதியில், 'தமிழ் இலக்கிய - இலக்கணக் கல்வியின் இயங்குநிலைகள்' பற்றிய பார்வையிலே தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஆய்வுத்துறை வளர்ந்து வந்த முறைமை பற்றி நோக்கி வந்தோம். அடுத்து, தமிழ் இலக்கணக் கல்வியின் இயங்குநிலை என்ற வகையில் குறிப்பாக,'தமிழ் இலக்கண வரலாறு'என்ற ஆய்வுத்துறையின் இயங்குநிலை பற்றி நோக்குவோம்.

## 1920கள் முதல் 50 - 60கள் வரையான காலப்பகுதியில் தமிழ் இலக்கண வரலாற்று ஆய்வுகள்:

மேற்படி காலப்பகுதியில் தமிழ் இலக்கணக் கல்வியிலே ஒரு துறையாக வளர்ந்த இலக்கண வரலாறு என்ற பாடத்துறையானது பொதுவாக இரு வகைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகும். இவற்றுள் முதலாவதும் பொதுவானதுமான வகைமையானது தமிழிலக்கண நூலாக்கங்களின் உள்ளடக்க அம்சங்கள், கட்டமைப்புநிலை மற்றும் அவை எழுவதற்குப் பின்புலங்களாக அமைந்த காலச் சூழல்கள் ஆகிய தகவல்களுடன் அவற்றுக்கெழுந்த உரையாக்கங்களைப் பற்றிய தகவல்களையும் திரட்டி வரலாற்று முறையில் வரிசைப்படுத்தும் செயன்முறையாக அமைவதாகும். இதற்குச் சான்றாக ஆய்வாளர் சோம. இளவரசு என்பார் 1963ம் ஆண்டில் எழுதி வெளியிட்ட தமிழ் இலக்கண வரலாறு என்ற ஆக்கத்தைச் சுட்டலாம். இது இலக்கண வரலாற்றுப் பரப்பை அடையாளங்காட்டும் பொது நோக்கிலான ஆய்வு முயற்சியாகும்.

இன்னொரு வகைமையானது நுண்ணாய்வு என்ற முறைமையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகும். 'இலக்கணக் கூறுகளில் காலந்தோறும் நிகழ்ந்து வந்துள்ள வளர்ச்சிகள் மற்றும் மாற்றங்கள் தொடர்பான விடயங்களை நுனித்து நோக்கும் ஆய்வு முறையே, இது. இலக்கணக்கூறுகளின் இயங்குநிலைகளை ஒப்பீட்டுநிலையிலும் வரலாற்று நிலையிலும் அடையாளங்காண்பதும் அவற்றுக்கான காரணிகளை விளக்கியுரைப்பதுமான அணுகுமுறை சார் ஆய்வு முயற்சியாக இது அமையும்.

மேற்சுட்டிய முதலாவது வகை நோக்கு சார் அணுகுமுறைகள் தமிழில் இலக்கண நூல்களாகப் பேணப்பட்டுள்ளவற்றை மட்டுமே கவனத்திற் கொண்டனவாக அமைவனவாகும். மாறாக, இரண்டாவது வகைசார் அணுகுமுறைகள் தமிழ் இலக்கண நூற்பரப்பை உள்ளடக்கி அதற்கப்பாலான மொழிசார் இயங்குநிலைகளையும் கருத்துள் கொண்டு மேற்கொள்ளப்படுவனவாகும். குறிப்பாக, 'பேச்சுவழக்கு மொழி, சாசன மொழிநடை மற்றும் தொடர்புடைய பிறமொழிகளின் இயங்குநிலைகள்' ஆகியவற்றையும் கவனத்துள் கொண்ட விரிந்த பார்வையாக இது அமையும்.

இவ்வகையில் இந்த இரண்டாவது நோக்கு சார் செயன்முறையானது இலக்கண வரலாறுசார் கல்வி என்ற தளத்துடன் எல்லைப்பட்டு நிற்காமல் மொழி வரலாற்றுக் கல்வியென்ற பரிமாணத்தை நோக்கிய பயணமாகவும் திகழ்வதாகும். அவ்வகையில் இந்த நோக்குசார் அணுகுமுறையானது ஆழமும் அகலமும் கொண்டதென்பதோடு சமூக - பண்பாட்டு வரலாற்றுடன் மிக நெருக்கமாக நடைபயில்வதென்பதையுங்கூட உய்த்துணர முடியும்.

இங்கு நாம் நோக்கவுள்ள தமிழ் இலக்கண வரலாற்று ஆய்வுகள் பற்றிய இப்பகுதியில் மேற்படி இரண்டாவது வகை நோக்குசார் செயன்முறைகளே கவனத்துள் கொள்ளப்படுகின்றன.

தமிழ் இலக்கண ஆய்வியல் வரலாற்றிலே இந்த இரண்டாவது வகை ஆய்வுநோக்கானது 1930களிலே கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதை இங்கு சுட்டுவது அவசியமாகிறது. தமிழின் முதல் மூன்று Ph.D பட்ட ஆய்வேடுகளான டாக்டர். பி.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களின் 'History of Gramatical Theories in Tamil and their relation to grammatical literature in Sanskrit' (1930)மற்றும் டாக்டர் க.கணபதிப்பிள்ளையவர்களின்' A Study of the Language of the Tamil Inscriptions of the 7th and 8th Centuries A.D'.(1935), டாக்டர் அ.சிதம்பரநாதச்செட்டியார் அவர்களின் 'Advanced Studies in Tamil Prosody'(1943)ஆகியவற்றில் இவ்வாறான நுண்ணாய்வு முறையின் ஆரம்பநிலைகளை நோக்கியுணர முடியும். முதலாவது ஆய்வேடு தமிழிலக்கணக் கூறுகளுள் ஒருசாரானவற்றை வடமொழி இலக்கண முறைமைகளுடன் ஒப்பிட்டது. இரண்டாவதிலே சாசனமொழி நுனித்து நோக்கப்பட்டது. மூன்றாவதிலே செய்யுள் வடிவங்கள் மற்றும் அவற்றின் ஆக்கக் கூறுகள் என்பன வரலாற்று நோக்கில் அணுகப்பட்டன. இவையெல்லாவற்றையும் நாங்கள் இத்தொடரின் ஐந்தாவது இயலில் (தாய்வீடு 2020 ஜூலை இதழ்) நோக்கியுள்ளோம்.

1930களிலேயே இவ்வாறான ஆய்வுநோக்கானது கருக்கொள்ளத் தொடங்கிவிட்டதெனினும் தமிழ் மொழிசார் இலக்கணப் பரப்பு முழுவதையும் உள்ளடக்கியதாக இது விரிவும் ஆழமும் பெற்றது 1950கள் 1960கள் காலப் பகுதியிலேயேயாகும். குறிப்பாக 1960களின் நடுப்பகுதியில் வெளிவந்த இரு ஆய்வு நூல்களே மேற்படி ஆய்வுநோக்கின் தெளிவான பரிமாணங்களை நம் முன்வைத்தன. அவற்றுள் முதலாவது நூல் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரால் எழுதப்பட்டதான A History of Tamil Language (1965)ஆகும். இரண்டாவது ஆக்கம் பேரசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்களால் எழுதப்பட்ட தமிழ் வரலாற்றிலக்கணம் (1966) ஆகும்.

இவர்களுள் ஈழத்தவரான பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்களின் ஆளுமையம்சங்கள் பற்றி முன்னரே நோக்கியுள்ளோம். தமிழகத்தவரான பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் ஆளுமையம்சங்கள் தொடர்பான சில முக்கிய குறிப்புகளை மட்டும் இங்கு நோக்கலாம்.

தெ.பொ.மீ அவர்கள்(1901 - 1980) தமிழ் இலக்கிய இலக்கணப்பரப்பிலும் தமிழரின் சமூக - பண்பாட்டு வரலாற்றிலும் ஆழமாகக் கவனம் செலுத்தி நின்ற மிகச்சிறந்த கல்வியாளராவார். 1940கள் முதல் 60களின் நடுப் பகுதிவரையான காலப்பகுதியில் சென்னை மாநிலக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவரான இவர், பின்னர் 1966ல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது அதன் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்ற வருமாவார். அப்பணியில் அவர் 1971வரை தொடர்ந்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் பணியாற்றிய காலகட்டத்தில் - 1950-60களில் அங்கு மொழியியல் தொடர்பான ஆய்வுகளில் சிறப்பாக ஈடுபட்டவர். அங்கு மொழியியல் துறையை உருவாக்கிய முன்னோடி என்ற சிறப்பு இவருக்குரியது.

அனைத்திந்தியப் பின்புலத்தில் தமிழை நோக்கிய பேரறிஞரான இவர், ஒப்பிலக்கண ஆய்வில் தனிக்கவனம் செலுத்தி நின்றவராவார். 1950களில் மத்திய இந்தி

*தொடர்தல் 82ம் பக்கம்*

# தமிழியல் ஆய்வுகள்...

**81ம் பக்கத் தொடர்ச்சி...**

யாவின் புனே நகரிலுள்ள டெக்கான் கல்லூரியில் மொழியியற் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்றவர்.இவ்வாறு அவர் பெற்றிருந்த மொழியியற்பயிற்சியானது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையை உருவாக்க அவருக்குத் துணை நின்ற முக்கிய பின்புல அம்சமாகும்.

இவ்வாறான அவருடைய ஆளுமையம் சங்களின் பேறாக உருவான ஒரு முக்கிய இலக்கண வரலாற்று நூலாகவே அவருடைய A History of Tamil Language என்ற ஆங்கில நூலை நாம் தரிசிக்கிறோம். அந்நூலைப் பற்றி விரிவாக இங்கு நோக்குவது சாத்தியமில்லை. அதனுடைய தலைப்பு மற்றும் பொருளடக்கம் ஆகியன பற்றி நோக்கினாலே தெ.பொ.மீ அவர்களுடைய இலக்கண வரலாற்று நோக்கின் சிறப்பை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நூலின் தலைப்பானது தமிழ் இலக்கண வரலாறு என்று அமையாமல் தமிழ் மொழி வரலாறு என அமைந்தமை ஒரு முக்கிய செய்தியை நமக்குச் சுட்டுகிறது. அதாவது தமிழ் இலக்கணக் கல்வியானது அக்காலகட்டத்தில் - 1960களில் - மொழியமைப்பு தொடர்பான கல்வியாகப் பரிணாமம் எய்திக்கொண்டிருந்த நிலையை அடையாளப்படுத்தி நின்ற தலைப்பு இது எனலாம்.

South Dravidian and Tamil, Language of the Cave Inscription, Language of Tolkappiyam, Language of the Cankam Age, Language of the pallava,Cholaand Nayaka ages, External history of Tamil முதலியனவாக அதன் இயல்கள் அமைந்திருந்தன. தொல்லிலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் உள்ளடக்கி அதற்கப்பாலான மொழி மரபுகளின் இயங்குநிலைகளையும் கவனத்துள் கொண்டு தமிழ் இலக்கண வரலாற்றை மொழிவரலாறாக நோக்கமுற்பட்ட அவரது அணுகுமுறைச் சிறப்பை மேற்படி இயல்கள் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன.

அடுத்து, பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்களின் தமிழ் வரலாற்றிலக்கணம் என்ற ஆக்கம் நமது கவனத்துக்கு வருகிறது.

இந்நூலின், தமிழ்மொழி பிறமொழி, எழுத்தியல், சொல்லியல், பெயரியல் வினையியல், இடையியல், தொடரியல் முதலிய தலைப்புகளிலமைந்த பொருளடக்க வரிசையை மேலோட்டமாக நோக்கும் ஒருவருக்கு இது,'1950 - 60கள் காலகட்ட இலக்கணப் பாடநூல் வகைசார் ஆக்கங்களில் ஒன்று' என்ற எண்ணமே ஏற்படும்.ஆனால் அவர் இந்நூலைக் கருத்தூன்றி வாசிப்பாரானால் இது 'அன்றைய பொதுவான பாடநூல் வகைசார்ந்த ஆக்கமென்பதற்கு மேலாக ஆழமான நுண்ணாய்வு நூல்' என்பததை உணர்ந்து கொள்வார். இவ்வாறான நுண்ணாய்வுநூல் என்ற தகைமையை அந்நூலுக்கு அளித்தது அதிலமைந்துள்ள 'வரலாற்றுப் பார்வை' சார் அணுகுமுறையேயாகும்.

இப்பார்வைசார் இவ்வணுகுமுறையின் குறிப்பிடத்தக்க அம்சம் ஒவ்வொரு காலகட்ட இலக்கண இயங்குநிலைகளுக்கும் இடையிலான 'பொருண்மை வேறுபாடுகள்', 'பயன்பாட்டு நிலை வேறுபாடுகள்" மற்றும் 'வளர்ச்சிநிலைகள்' ஆகியவற்றை நுட்பமாக எடுத்துப் பேசியமையேயாகும். குறிப்பாக, 'ஒவ்வொரு இலக்கண அம்சத்தைப் பற்றியும் தொல்காப்பியர் கருதியவை யாவை?'என்பது பற்றியும் 'அவை தொடர்பில் நன்னூலார் முதலிய பிற்கால இலக்கணக்காரர் கொண்டிருந்த கருத்துகள் யாவை?' என்பது பற்றியும் இவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றியும் பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்கள் நுனித்து நோக்கி எடுத்துரைத்துள்ளார். இவ்வேறுபாடுகளுக்கான மொழி நிலை மற்றும் சமூகநிலை சார் காரணிகளையும் அவர் எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளார். இவ்வாறான அணுகுமுறை அம்சமே இந்நூலுக்கான தனி அடையாளமொன்றைத் தருவதாக அமைந்துளது என்பது எனது கணிப்பாகும்.

இவ்வாறான வரலாற்றணுகுமுறையின் மற்றொரு சிறப்பம்சம், இலக்கணக் கூறுகளுக்கான எடுத்துக்காட்டுகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் சாசனமொழி சார் சான்றுகளையும் பயன்படுத்தியுள்ளமையாகும். இலக்கண நூலெழுதுவோர் இலக்கணக் கூறுகளுக்கான உதாரணங்களை முன்வைக்கும்போது பொதுவாக பண்டைய இக்கியங்களில் இடம்பெற்ற சொற்கள் தொடர்கள் மற்றும் இலக்கண உரைகாரர்கள் கையாண்ட சான்றுகள் ஆகியவற்றையே பதிவுசெய்வது வழமை. ஆனால் வேலுப்பிள்ளையவர்கள் தனது மேற்படி நூலில் முற்கூறியவகைச் சான்றுகளுடன் சாசனமொழிச் சொற்கள் மற்றும் தொடர்கள் ஆகியவற்றையும்கூட உதாரணங்களாகக் காட்டியுள்ளார். இவர் தமது Ph.D பட்டங்களுக்கு இரு வேறு காலகட்டச் சாசனங்களின் மொழிநிலைகளை ஆராய்ந்தவர் என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். அவ்வாறான முயற்சிகளின் போது அவர் திரட்டிக்கொண்ட சாசனச் சொற்களஞ்சியமானது இவ்வகையில் அவருக்கு மிகவும் பயன்பட்டுள்ளது என்பதை உய்த்துணர முடிகிறது.

'சாசன மொழி'யைப் பொறுத்தவரை இங்குநாம் கருத்துள் கொள்ள வேண்டிய செய்தி அது இலக்கியமொழி எனப்படும் செந்தமிழ் மொழியினின்று வேறுபட்டது என்பதாகும். அது, அவ்வக்கால மக்கள் வழக்குடன் - அதாவது சராசரி மாந்தரின் பொது உரையாடல்களுக்கான பேச்சு மொழியுடன் மிக நெருக்கமானதாகும். பேச்சுமொழி என்பது இலக்கிய - இலக்கணக்காரரின் பார்வைக்குள் உரிய கவனத்தைப் பெற்றிராத ஒன்று என்பது இங்கு நாம் மனங்கொள்ள வேண்டிய ஒரு 'வரலாற்றுச்சோக'மாகும்.

தொல்காப்பியம், நன்னூல் முதலிய பெரும்பாலான இலக்கண நூல்கள் 'வழக்கு', 'திசைச்சொல்' முதலிய இலக்கணக் குறியீடுகளின் ஊடாக பேச்சு மொழியை அடையாளப்படுத்தியுள்ளன. எனினும் அவற்றுக்கு உரிய முக்கியத்துவத்தை அவை வழங்கியிருக்கவில்லை. அதனால் அம்மொழியின் பெரும்பகுதி பண்டைய இலக்கிய இலக்கணப்பரப்பில் உரியவாறு பேணப்படா நிலையில் அழிந்துபட்டது என்பதே மேலே சுட்டிய வரலாற்றுச் சோகம் ஆகும். (கி.பி.11ம் நூற்றாண்டில எழுந்த வீரசோழியம் என்ற இலக்கண நூல்மட்டுமே தனதுகால பேச்சு மொழியையும் கவனத்திற்கொண்டு இலக்கணம் கூறியுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகுகிறது.)

மேலே நோக்கியவாறு பெரும்பாலான இலக்கணகாரர்களின் கவனத்தைப் பெறாத நிலையில் பேணப்படாது மறைந்து வந்த பேச்சுவழக்கு மொழியமைப்பின் சில பகுதிகளை நமது காலச்சூழலில் அடையாளங்காணத் தக்கவகையில் பேணித் தந்தவை என்ற சிறப்பு பண்டைய தமிழ்ச் சாசனங்களுக்கு உரியது. சாசனவியல் ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையவர்கள் இதனை நன்குணர்ந்திருந்தவர் என்பதால் தமது 'இலக்கண வரலாற்றுப்பார்வை'யில் - அதாவது தமிழ் வரலாற்று இலக்கணம் என்ற நூலில் - சாசன மொழிக்கும் உரிய இடத்தை வழங்க முற்பட்டுள்ளார் என்பதே இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com





# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☞ தரமான வீடு தவறிப்போகாது
- ☞ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☞ வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- ☞ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☞ இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☞ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☞ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☞ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals




**For Sellers**

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!

Pickering

**www.vela4homes.com**




## Estate Home

App 9,000 sft
5+ Bedrooms, 1.34 Acres
6 WR + 6 Fire Places
Fully Renovated
Nanny Suite







## Detached.

3 Bedrooms,
4 WR
Fully Upgraded
Finished Bsmt

Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner 2016
HOMELIFE HIGHER STANDARDS

**Vela Subramaniam**

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Opereated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# தொன்மையைத் தேடி - தமிழ் நாட்டு மன்னர்கள்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ் -

தமிழ் மக்களாகிய நாம் தொன்மையை அறிந்து கொள்வதில் இன்று ஆர்வம் மிக்கவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு மனிதருக்கும் தனது அடையாளம் என் பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இக்கருத்தை மறுப்பவர்களும் இருக்கலாம். ஏதோ ஒரு மோகத்தில் இன்று பழமை பேசுபவர்களை, பழமையை அறிவதில் ஆர்வம் காட்டுபவர்களை எள்ளி நகை யாடுவதை நாம் நாளாந்தம் காண்கிறோம். கனடிய பல்கலாச்சார மண்ணில் வாழும் போது தான் அதனுடைய முக்கியத்துவ மும் அருமையும் நன்றாகவே புரிகிறது. நான் கனடாவுக்கு 33 ஆண்டுகளுக்கு முன் வந்தபோது எம்மை யாரும் கண்டுகொள்ள வில்லை. எம்மை அன்று விசித்திரமாகப் பார்த்தவர்கள் இன்று நிமிர்ந்து பார்க்கும் படியாக நாம் நிரூபித்திருக்கிறோம். தமி ழர்கள் மிகுந்த உழைப்பாளிகள், திறமை சாலிகள் என்னும் பெயரை, அபிப்பிரா யத்தை நாம் ஈட்டுவதற்கு, எமது சந்ததி யினரது திறமையும் அயராத உழைப் புமே காரணமாகும். தன் அடியை உதறி விட்டு வாழ நினைக்கும் ஒவ்வொரு மனி தரும் பெற்றார் அற்ற அநாதை போன்ற தொரு நிலையை உணரவேண்டிய நிலை ஒன்று வரும்.

தமிழரின் தொன்மையை உலகிற்கு உரத் துச் சொல்வது மட்டுமல்ல எம் மக்களுக் கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டா யமும் எமக்கு இருக்கிறது. ஆதிச்சநல் லூர், பொருந்தல், கொடுமணல், அழகன் குழம், கீழடி இன்னும் இவை போன்ற பல தொல்லியல் தளங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வுகள் செய்யப் படுகின்றன. இது தொடர்பாக உலகளா விய அங்கீகாரமும், ஏற்பும் கிட்டியது. தமிழரின் தொன்மை தற்போதைக்கு விஞ் ஞான ஆய்வின்படி கி.மு. 905ம் ஆண்டு என்றும் உறுதிசெய்யப்பட்டது. தமிழனுக்கு வெற்றி அத்துணை இலகுவில் கிடைத்து விடாது.

## ஆதிச்சநல்லூரின் ஆதிக் குடிகள் யார்?

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் எடுக்கப் பட்ட 24 எலும்புக்கூடுகள் உடல்சார் மானுடவியல் (physical anthropology) ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவைகள், மங்கலாய்டுகள் உள்ளிட்ட குறைந்தது மூன்று இனக் குழுக்களைச் சார்ந்தவர்க ளாகவும் தற்காலத்தில் உள்ள இனக் குழுவினர் மிகக் குறைவு என்றும் (அதா வது தமிழர் மிகக்குறைவு) சொல்லப்பட் டது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டறி யப்பட்ட மண்டை ஓடுகளில் திராவிட இனத்தின் அடி மிகக் குறைவான விகி தாரசாரமே காணப்படுவதாகக் கூறப்ப டுகிறது. இந்த முகத் தாடைகள், தென் தமிழக மக்களை விடவும், ஆஸ்திரேலிய மற்றும் ஆப்ரிக்க கறுப்பினத்தை ஒட்டிய-தாகக் கூறப்படுகிறது. முக எலும்புகளில் கண் குழிகள் போன்றவை கிழக்கு ஆப் ரிக்க மக்களை ஒத்துப்போவதாகவும், அதுபோலவே நெற்றியும் வெளிநாட்டைச் சேர்தவர்களுடன் ஒத்துபோவதாகவும் சில மானுடவியலாளர்கள் கூறுகின்றனர். இது தொடர்பான ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையிலேயே காணப்படுகின்றன. ஆனால் இவை 3,000 முதல் 4,000 ஆண்டுகள் தொன்மையானவை என்பது மட்டும் உறுதி செய்யப்படுகிறது.

மனிதர் பற்றிய அறிவியல் ஆய்வே மானி டவியல். 'மானிடவியல் என்னும் அறிவுத் துறை மனித இனம், அதன் பண்பாடு, சமூகங்களின் அமைப்புக்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், உறவுமுறை கள், மொழிக்கூறுபாடுகள் ஆகியவற்றை யெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு முழு மனிதரை அடையாளம் காண முயல் கிறது. காலத்தாலும் அதன் எல்லைகள் மிக விரிந்தவை' என்ற ப. மருதநாயகத் தின் விளக்கம் மானிடவியல் துறையின் நோக்கம் மற்றும் அதன் பரப்பை விளக் குகிறது. எமது ஆய்வு பற்றி விளங்கிக் கொள்வதற்கு மானிடவியல் பற்றிய புரிதல் அவசியம்.

இவ் எலும்புக் கூடுகளின் ஆய்வின் முடிவு எம்மை எப்படியெல்லாம் சிந்திக்க வைக் கிறது:

- தமிழனின் தொன்மை பற்றிய ஆய்வில் எத்தனை பின்னடைவுகள், முட்டுக்கட் டைகள்,
- தமிழரை ஒரு இனக்கலப்புச் சமூகமா கச் சித்தரிப்பதற்கு வலிந்து எடுக்கப் படும் முயற்சிகள்,
- 'சிந்து வெளி, ஹரப்பா நாகரிகம் தமி ழரது நாகரிகம்' என்பதை உறுதி செய் வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவின் மையுடன் தடைகளும் ஏராளம்.
- சிந்து வெளி, ஹரப்பா நாகரிகம் திரா விட நாகரிகம் அல்ல என்பதையும் சிந்துவெளி நாகரிகத்தை விட ஆதிச்ச நல்லூர் நாகரிகம் பிந்தியது என்ப தையும் உறுதிப்படுத்துவதற்காக எடுக் கப்படும் மறைமுக நகர்வுகள் பல.

இவற்றை எல்லாம் தாண்டி சிந்து வெளி பற்றிய ஆய்வு வேறொரு திசையில் ஆமை வேகத்திலாவது நடந்து கொண்டு தான் இருக்கிறது. இன்றைய தலைமுறை இப்போது தானே உயிர்த்திருக்கிறது. காலம் கடந்தும் உண்மை வெளிவரத்தான் செய்யும்.

பி. ராகவன் போன்ற மானுடவியல் ஆய் வாளர்கள் எலும்புக் கூடுகள் பற்றிய இந் தக் கருத்தைத் திட்டவட்டமாக மறுக்கின் றனர். இங்கு கிடைக்கப்பெற்ற மண்டை ஓடுகள் திராவிடர் அல்லாதவர்களதாக இருக்கிறது என்றால், அது வெளி நாட்ட வர்களுடையது என்பதில் சந்தேகம் இருக்கவேண்டியதில்லை. ஆனால், அவர் களுடைய மண்டையோடுகள் இந்த மண் ணில் கண்டெடுக்கப்பட்ட காரணத்தினால் இவர்களே இம் மண்ணுக்குச் சொந்தக் காரர் என்று சொல்லப் பார்ப்பது தான் வேடிக்கையாக இருக்கிறது.

தென்னகம் உலகின் மையப்பகுதியில், பூமத்திய ரேகைக்கு அண்மையில் அமைந் திருப்பதால் மேற்கிலிருந்து கிழக்கேயும் கிழக்கிலிருந்து மேற்கேயும் செல்லும் வணிகக் கப்பல்கள் இங்கு தங்கித் தம் தேவைகளைப் பார்த்துச் செல்வதற்கு அதன் அமைவிடம் வாய்ப்பாக இருந்தி ருக்கிறது. பண்டைக் காலம் முதல் தென் னிந்தியா ஒரு வர்த்தக மையமாக விளங்கி இருக்கிறது. இதனை வெளிநாட்டார் சான்றுகள் உறுதி செய்கின்றன என்பதை ஓகஸ்ட் மாதத்துத் தாய்வீட்டில் வெளி யான எனது 'தொல் தமிழகத்தில் இரும் பின் தடம்' என்னும் கட்டுரை விளக்குகிறது.

வணிகத்திற்காக வந்தவர்கள் தென்னகத் தில் தங்கி பெரிய மாளிகைகளில் வாழ்ந் திருந்ததைப் பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி முதலிய சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. கீழ்க் காணும் முல் லைப்பாட்டு அடிகள் வேறொரு கதையை யும் கூறுகின்றன.

*'மெய்ப்பை புக்க வெருவு அரும்*
*தோற்றத்து*
*வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்'*

என்றும்,

*'... திண் ஞாண்*
*எழினி வாங்கிய ஈர் அறைப் பள்ளியுள்*
*உடம்பின் உரைக்கும் உரையா நாவிற்*
*படம்புகு மிலேச்சர் உழையர் ஆக'*

- முல்லைப்பாட்டு, அடி 60-66

என்றும் யவனர், மிலேச்சர் முதலிய பிற நாட்டார் மன்னர் மாளிகையில் அகப்பணி செய்பவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும், அதுவும் உடம்பால் பேசும், அதாவது வாயால் பேசமுடியாதவர்கள் அவனது மெய்க்காவலராக இருந்திருக்கி றார்கள் என்றும் கொள்ளக்கிடக்கிறது. திரு, பொ.வே. சோமசுந்தரனார் அவர்களது உரையில் பெலுச்சிஸ்தானில் இருந்து வந்தவர்கள், பெலூச்சர், பெலூச்சர் என் பது மருவி மிலேச்சர் எனத் திரிந்து வழங்கி இருக்கலாம் என்பார்.

இப்பாடற் பகுதியிலிருந்து பல தகவல் கள் அறியப்படுகின்றன.

- யவனர், மிலேச்சர் என இரு வேறு இனத்தவர் இங்கு பேசப்படுகிறார்கள்
- வாய்பேசமுடியாத மிலேச்சர்கள் மன் னனுக்கு மெய்க்காப்பாளர்களாகப் பணி புரிந்திருக்கிறார்கள்.
- வணிகத்தின் பொருட்டு வந்த அன்னி யர் நாக்கு எதற்காக அறுக்கப்பட்டது? அவர்கள் எப்படி மன்னன் மாளிகையில் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

வணிகத்தின் பொருட்டு வந்தவர்கள் குற் றவாளிகளாக மன்னனால் தண்டிக்கப் பட்டிருக்கலாம். மன்னர், அவர்களைதம் மெய்க் காவலராக அமர்த்திக் கொண்டி ருக்கலாம். *'அடியோர் பாங்கினும் வினை வலர் பாங்கினும்'* (தொல். பொருள். அகத்திணையியல் நூ. 25) என்று அடி மைகள் குறித்த தொல்காப்பிய நூற்பா வையும் இத்துடன் இணைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

வெளிநாட்டவர் இங்கு வாழ்ந்திருக்கிறார் கள் என்பதும், உள்நாட்டில் தொழில் புரிந்திருக்கிறார்கள் என்பதும் ஐயத்திற்கு இடமில்லாத உண்மை. தமிழ் நாட்டில் இன்றுள்ள வந்தேறு குடிகளை எண்ணிப் பார்த்தால் இந்நிலை புரியும். வணிகத் தின் பொருட்டு வடநாட்டிலிருந்து வந்த வடநாட்டாரில் பலர் தமிழகத்திலேயே தங்கிவிட்டார்கள். அதே போலக் கடல் வழியாக மேற்கேயிருந்து வந்தவர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை மறுப்ப தற்கில்லை.

- இம் மண்டை ஓடுகள் அப்படித் தங் கியிருந்த வணிகர்களின் எச்சங்களாக இருக்கலாம்.
- கடலில் நீண்ட பயணம் மேற்கொண்ட மாலுமிகள் கொடிய நோய்களால் பீடிக்கப்படுவது கடற்பயணத்தில் வெகு சாதாரணம். அப்படி நோய்வாய்ப்பட்ட வர்கள் தென்னகக் கரைகளை வந்த டைந்திருக்கலாம். இப்படிப் பல்வேறு காரணங்களுக்காகத் தமிழகத்தில் தங் கியிருந்திருக்கலாம்.

வெளிநாட்டார் எலும்புக் கூடுகளைக் கொண்டு அவர்களே இம் மண்ணின் மைந்தர்கள் என்று முடிவு கட்டிவிட முடி யாது. முடிவு காலத்தின் கையில்.

## இந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் தொன்மை:

வரலாற்றுக் காலத்திற்கு முன் மனித இனத் தின் தொடக்கம், வளர்ச்சி பற்றிப் பன் நாட்டு ஆய்வாளர்களும் உலகளாவிய ரீதியில் ஆய்வு மேற்கொண்டிருக்கிறார்கள். எமது தேவைக்காக, இது பற்றிய மிகச் சிறியதொரு அறிமுகத்தை இங்கு முன் வைக்கிறேன்.

மனிதரின் வளர்ச்சிப் பாதை பல படி முறைகளைத் தாண்டித்தான் இன்றைய நிலைக்கு வந்திருக்கிறது. மனிதர் ஆதி யில் உணவுக்காகவும் தற்பாதுகாப்பிற் காகவும் கூட்டம் கூட்டமாகத் திரிந்த காலத்தில் அவர்களுக்குக் கிடைத்த முதல் ஆயுதம் கல். கல் ஆயுதங்களைப் பயன்படுத்தி வாழ்ந்த காலம் கற்காலம் எனப்படுகிறது. காலக்கிரமத்தில் கல் லைக் கொண்டு அதிபயனுள்ள நுட்பமான கருவிகளை வடிவமைத்துப் பயன்படுத் தப் பழகிக் கொண்டனர். ஆயுதங்களின் வளர்ச்சியுடன் மனித நாகரிக வளர்ச்சியும் பின்னிப் பிணைந்தது. கல் ஆயுதங்க ளைப் பயன்படுத்திய காலப்பகுதியைப் பொதுவாக பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதியகற்காலம் என்று மூன்று காலப்பகுதிகளாகப் பிரிப்பர். இந்தக் காலப்பகுதிகள் ஒவ்வொன்றினிடையேயும் பல்லாயிரக் கணக்கான ஆண்டு கால இடைவெளி இருந்திருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது.

தென் இந்தியாவில் கற்காலத்தில் மக்கள் வாழ்ந்திருந்தார்களா என்பதே இப்போ எமது முக்கியமான கேள்வி. அதாவது

*தொடர்தல் 85ம் பக்கம்*



# தொன்மையைத்...

84ம் பக்கத் தொடர்ச்சி...

நாம் இந்நாட்டின் தொல் பழங்குடிகளா அல்லது வந்தேறு குடிகளா?

தென்னாட்டவர், கடல்கோள் காரணமாக இந்து மாகடலுள் மூழ்கிப்போன நிலப் பரப்பிலும், கடலுள் மூழ்காது தப்பிய நிலப்பரப்பிலும் தொன்மை தொட்டு வாழ்ந்து வந்தவர்கள் என்பதை ஆய்வு கள் பலவும் தெளிவாக வெளிப்படுத்து கின்றன.

பழைய கற்காலம் பற்றிய அகழ்வாய்வு கள், தமிழகத்தில் திருவள்ளூர் மாவட் டத்தில் கொற்றலை ஆற்றுப் பகுதியான பூண்டியைச் சுற்றியுள்ள இடங்களில்தான் அதிக அளவில் நடைபெற்றுள்ளன. திரு வள்ளூர் மாவட்டத்தில், சென்னையில் இருந்து சத்தியவேடு செல்லும் சாலையில் கொற்றலை ஆற்றின் அருகே குன்றுகளும் காடுகளும் நிறைந்த பகுதியின் நடுவே, வரலாற்றுச் சிறப்புமிக்க அத்திரம்பாக்கம் அமைந்துள்ளது. இங்கு பழைய கற்காலக் கற்கருவிகளை, 1863ம் ஆண்டில் பிரித் தானிய நிலவியல் வல்லுனரும், தொல் பொருள் ஆய்வாளருமான இராபர்ட் புரூஸ் புட் கண்டறிந்தார். இவர், 'வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியா' பற்றிய ஆய்வுகளின் தந்தை எனப் போற்றப்படுகிறார். தமிழ் நாட்டில் இந்திய நிலப்பொதியியல் மதிப் பீட்டுக்காகப் பல கற்காலத் தொல்லியல் ஆய்வுகளைச் செய்தவர். மேலும், இங்கு காணப்படும் மேட்டுப்பகுதியில் உள்ள கூழாங்கற்கள் படிவடுக்கில், கைக் கோடா ரிகளும், அவற்றுடன் மனித எலும்புப் பகுதியின் தொல்லுயிர்ப் படிமம் (fossil) ஒன்றையும் அவர் கண்டெடுத்தார்.

இங்குதான், பழைய கற்காலத்தைச் சார்ந்த கற்கருவிகள் கிடைத்துள்ளன. உலகப் புகழ்பெற்ற பழைய கற்காலத் தடயங்க ளைக் கொண்ட பகுதியாக இப்பகுதி திகழ்ந்தது. இங்குதான், 1964-65-ல் இந் தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை யினர் ஆய்வு மேற்கொண்டு, நான்கு மண்ணடுக்குகள் இருப்பதைக் கண்டறிந் தனர். இப்பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில், பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான எச்சங்கள் காணப்ப டுவதைக் கண்டறிந்தனர். அகழாய்வில், முதல், இடை, கடைப் பழைய கற்காலப் பண்பாடுகள் தொடர்ச்சியாக நிலவியி ருந்ததை மண்ணடுக்குகளின் ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும், மாட்டினுடைய நீள்வட்ட வடிவ மான 17 காலடித் தடங்கள் (Bovid Hoof Impression), மூன்று மீட்டர் ஆழத்தில் பழைய கற்கருவிகளுடன் காணப்பட்டன. பழைய கற்கால மனிதருடன் வாழ்ந்த விலங்கினுடைய காலடித் தடங்கள், இந் தியாவிலேயே இங்குதான் முதன்முறை யாக அகழாய்வின் மூலம் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. 3.6 மீட்டர் ஆழத்தில், அச்சூலியன் கால தரைப்பகுதியும், அங்கு பழைய கற்காலக் கைக் கோடாரிக- ளுடன், பெரிய பெரிய கூழாங்கற்களும் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். விலங்குகளின் தொல்லுயிர்ப் படிமங்களாக, எருமை, கொம்புகளற்ற மான், குதிரை போன்றவற்றின் பற்கள் இங்கு கிடைத் துள்ளன.

பழைய கற்காலம் பற்றி ஆராய்ந்த அர சுத் தொல்லியல் துறையின் ஓய்வு பெற்ற உதவி இயக்குனர், து. துளசிராமன் என் பவர் குடியம், அத்திரம்பாக்கம் முதலிய தொல்பழங்கால இடங்களில் கள ஆய்வு மேற்கொண்டார். அத்துடன் திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களில் ஏறக்குறைய 107 இடங்களில் பழைய கற்காலக் கரு விகள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட் டார். அது மட்டுமல்லாது பரிக்குளம் என்ற இடத்தில் தமிழ்நாடு தொல்லியல் துறை செய்த அகழாய்வின் முடிவில் இப்பகுதியில் பழைய கற்காலக் கற்கரு விகள் தயாரிக்கும் தொழிற்பட்டறை இயங்கி வந்தது கண்டறியப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டம் அத்திரம்பாக்கம் அகழாய்வில் கண்டறியப்பட்ட முதற்கட்ட பழையகற்கால (Lower Palaeolithic) கரு விகள் 15 இலட்சம் ஆண்டுகள் என்றும், இரண்டாம் கட்ட பழையகற்கால (Middle Palaeolithic) கருவிகள் 3,85,000 ஆண்டு கள் பழமையானது என்றும், கற்கருவி- களை காசுமோசெனிக்-நியூக்லைட் எனப் படும் இயலுலக புவிபரப்பியல் ஒளி ஆய்வு (Cosmogenic-Nuclide Burial Dating Method) செய்ததில் இக்கால முடி வுகள் பெறப்பட்டன எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதே போன்று நுண்கற் காலத்தைச் (Microlithic / Mesolithic Period) சேர்ந்த கற்காலக் கருவிகள் திரு நெல்வேலிப் பகுதியிலும், வைகை மற் றும் குண்டாறு ஆற்று படுகைகளிலும், புதிய கற்காலப் பண்பாடுகளின் கருவி கள் தமிழகத்தின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் குறிப்பாக தருமபுரி, கிருஷ் ணகிரி, திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் கிடைத்துள்ளன. அதன் அடுத்த காலக்கட்டமான இரும்புக் காலத் தைச் சார்ந்த சேலம் வட்டாரத்திலுள்ள மாங்காடு மற்றும் தெலுங்கனூர் ஊரிக- ளிலுள்ள பெருங்கற்படை ஈமச் சின்னங்க ளில் கண்டறியப்பட்ட மாதிரிகளிலிருந்து இரும்புக் காலம் கி.மு. 2000 என காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது (தினமணி செப்டெம்பர் 26, 2020).

## பழைய கற்காலத்திலிருந்து பெருங்கற்படைக் காலத்திற்கு:

தமிழகத்தில், பழைய கற்காலம் முத லாக தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஆய்வாளர் சான்றுகள் சிலவற்றின் மூலமாகப் பார்த் தோம்.

பெருங்கற்படைக் காலம் என்பது பெருங் கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னங்களை அமைத்த காலப் பகுதியாகும். தொல் தமிழர் பண்பாட் டின் சிறந்த அம்சங்களில் முக்கியமானது இறந்தவர்கள் நினைவாக அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது. இறந்த வீரரின் உடலை மூடிய கற்குவியல்கள் 'பதுக்கை, கல்பதுக்கை, கல்திட்டை' என்று அழைக்கப்பட்டன. இவை தவிர இப் பதுக்கைகளின் மேல் அல்லது அரு கில் அமைக்கப்பட்ட நடுகற்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நடு கல் அமைக்கும் முறை பற்றித் தொல் காப்பியம்(கி.மு. 711) விளக்கமாகக் கூறு கிறது.

*'காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்*
*சீர்த்தகு மரபில் கல்லொடு புணர'*

- புறத்திணையியல் நூ. 5

போர்க்களத்தில் இறந்த வீரரின் நினை வாகக் கல்நிறுத்துவதற்காக உரிய கல் லைத் தேடிக் காணல், கண்ட கல்லைக் கொள்ளுதல், அக்கல்லை நீராட்டிச் சுத் தம் செய்தல், அதன் பின் அக்கல்லை நட்டுப் பள்ளிப்படை அமைத்தல் முத லிய அக்காலத்தில் இருந்த வழக்காறு- களைத் தொல்காப்பியர் பதிவு செய்தி ருக்கிறார்.

பெருங்கற்படைச் சின்னங்களான திட் டைகள், கற்பதுக்கைகள், குத்துக் கற்கள், நடுகற்கள், கற்குவைகள் முதலியன தமிழ் நாட்டின் மலையும் மலை சார்ந்த நில முமாகிய குறிஞ்சி நிலப்பகுதியிலும் அதனை அடுத்த முல்லை நிலப்பகுதிக- ளிலும் அதிகம் காணப்படுகின்றன. இவை அதிகம் காணப்படும் இடங்களாகத் தொண்டை நாட்டுப்பகுதிகளும் கொங்கு நாட்டுப் பகுதிகளும் பாண்டி நாட்டின் மேற்குப் பகுதிகளும் இருக்கின்றன. பெருங்கற்படைச் சின்னங்கள் உருவாகு வதற்குக் கற்கள் அதிகம் தேவை. எனவே பண்டைக் கால மக்கள் குறிஞ்சி முல்லை நிலங்களில் நீண்ட காலம் வாழ்ந்தபடியால் இச்சின்னங்கள் இப்ப குதியிலேயே அதிகம் கிடைக்கின்றன. பெருங்கற்படைக் காலம் கி.மு. 1000 முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை நீண்டு காணப்பட்டிருக்கலாம் என்கிறார் முனைவர் கா. ராஜன்.

வடமேற்கு அல்லது மத்திய தமிழகத்தில் அமைந்துள்ள பகுதிகளான பையம் பள்ளி, அப்புக்கல், மயிலாடும்பாறை போன்ற பகுதிகளில் செய்யப்பட்ட அக ழாய்வுகள் வடதமிழகம் புதிய கற்காலத் தில் இருந்து (கி.மு. 3000-1000) பெருங் கற் காலத்திற்கு (கி.மு. 1000-300) மாறி யதைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கரு துகின்றனர்.

## பெருங்கற்படைக் காலமும் தாழிக் காலமும்:

தமிழகத்தின் மருத நிலப் பகுதிகளான தென் பெண்ணை, காவிரி, வைகை, தாமி ரபரணி ஆகிய ஆற்றுப் படுகைகளிலும் நெய்தல் பகுதிகளான காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் அதிகமாக முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. மருதமும் நெய்தலும் மண் வளமிக்கவை என்பதால் இவற்றில் தாழிகள் செய்வதற்கான மூலப் பொருட்கள் அதிகம் கிடைத்திருக்கும்.

வடமேற்குத் தமிழகத்துக்கு கூறப்பட்டது போல் புதிய கற்காலத்தில் (கி.மு. 3000-1000) இருந்து பெருங்கற் காலத்திற்குத் தென்தமிழகம் வளர்ச்சி அடையவில்லை. மாறாக தென்தமிழக மற்றும் தமிழக நெய்தக் பகுதிகளில் நடத்தப்பட்ட அக ழாய்வுகள், அப்பகுதிகள், குறுனிக் கற் காலத்திலிருந்து (கி.மு. 10,000 முதல் கி.மு. 2,000) நேரடியாகத் தாழிக் காலத் திற்கே வளர்ச்சி அடைந்ததைச் சுட்டு கின்றன என்பது ஆய்வாளர் கருத்து.

பெருங்கற்படைச் சின்னங்களின் காலமும் தாழிகளின் காலமும் ஒன்றென ஆராய்ச் சியாளர்கள் கொள்வதற்கான காரணங்கள்:

- பெருங்கற்படைச் சின்னங்களில் காணப் படும் கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் இத்தாழிகளின் ஊடே காணப்படுகின் றன.
- தாழிகளினுள் கிடைக்கும் இரும்புப் பொருட்கள் பெருங்கற்படைச் சின்னங் களிலும் காணப்படுகின்றன.

பெருங்கற்படைச் சின்னங்களின் கால மும் தாழிகளின் காலமும் ஒன்று என்னும் கருத்துக்கு எதிராக ஆய்வாளர்கள் முன் வைக்கும் சான்றுகள்,

- முதுமக்கள் தாழிகளுடன் பெருங்கற் படைச்சின்னங்கள் இணைந்து காணப் படாமை.
- அகழாய்வில் கிடைக்கும் தரவுகளின் படி தாழிகள் பெருங்கற்படைச் சின் னங்களுக்கு காலத்தால் முந்தியனவா கவும் இருக்கலாம் என்பது.
- பெருங்கற்படை சமூகத்தை அதிகம் சார்ந்த வடதமிழகம் புதிய கற்காலத் தில் இருந்து பெருங்கற் சமூகத்துக்கு நிலையான வளர்ச்சி அடைந்ததும், மாறாக தாழிகளை அதிகம் சார்ந்தி ருந்த மத்திய மற்றும் தென் தமிழக கடற்கரைக்கு நெருக்கமான இடங்கள் இடைக்கற்காலத்தில் இருந்து நேரடி யாக தாழிகளின் காலத்திற்கு வளர்ச்சி அடைந்த தன்மையும்.
- மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் அமைந்துள்ள தேனி-கம்பம் பள்ளத் தாக்குகளில் கிடைத்தவை அனைத்தும் தாழிகளாகவே உள்ளன. இப்பகுதி குறிஞ்சி மற்றும் மருதம் நிலப்பகுதிகள் இணைந்த இடமாகும்.
- தமிழ் இலக்கியங்களில் வரும் சான்று களின் படி பாண்டியர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த சான்றுகளே கிடைத்துள்ளமை.

## இவற்றை ஆராய்ந்த சில அறிஞர்களின் முடிவுகள்:

'பெருங்கற்படைச் சின்னங்களை உரு வாக்கும் பழக்கம் வடதமிழகத்தில் ஊடு ருவும் முன்னரே இரும்பின் பயன்பாடும், கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளின் பண் பாடும் தமிழகத்தின் தெற்குப் பகுதியில் ஊடுருவி விட்டன எனலாம். அதனால் முதுமக்கள் தாழிகளைத் தமிழகத்தில் பயன்படுத்தியவர்கள் பெருங்கற்படைச் சின்னங்களை பயன்படுத்திய மக்களைக் காட்டிலும் காலத்தால் முந்தியவர்கள் ஆவர். எனவே பெருங்கற்படைகளைக் கொண்டு நினைவுச் சின்னங்களை உரு வாக்காமல் தாழிகளை மட்டுமே பயன் படுத்திய மக்களின் பண்பாட்டை பெருங் கற்காலத்துக்குள் உள்ளடக்கி கால நிர் ணயம் செய்வதை தவிர்க்கலாம்' என்கி றார் முனைவர் கா. ராஜன்

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுக்குத்தலைமை தாங்கிய சத்தியமூர்த்தி அவர்கள் 'நாங் கள் செய்த ஆதிச்சநல்லூர் அகழாய்வில் பெருங்கற்காலத்திற்கு (கி.மு. 1000க்கு முன்) முற்பட்ட பண்பாட்டைக் கண்டோம். இங்கு கண்டது நல்ல அடுக்கு நிலைச் சமூகமாகும். இங்கு காணப்படும் பானை யோடுகள் பெருங்கற்கால பானையோடு களில் இருந்து மிகவும் வேறுபட்டவை' என்கிறார்.

'காஞ்சிபுர அகழாய்வில் கிடைத்த தாழி களில் பெருங்கற்கால குறிகள் காணப் படவில்லை. மேலும் இத்தளம் ஆதிச்ச நல்லூரைவிட பழமையானது எனவும் கருத முடியும். தாழிகளோடு பெருங்கற்கால சின்னங்கள் காணப்பட்டிருந்தால் இவை பெருங்கற்காலத்தாழிகள் ஆகும். ஆனால், இத்தாழிகளில் அப்படிக் காணப்படாத லால் இது பெருங்கற்காலத்துக்கும் முற் பட்ட தாழிகளாகும். அதனால் ஆய்வா ளர்கள் தாழிகளின் தோற்றத்தை பெருங் கற்காலத்துக்குள் அடக்கிப் பார்ப்பதை தவிர்க்கலாம்' என்பர் சத்தியமூர்த்தி மற் றும் இளங்கோ.

## தொகுப்புரை:

- தென்நாட்டில் பழைய கற்காலம் முத லாக மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது உறுதியா கியது,
- பண்டைக் காலம் முதலாக தமிழ் நாட் டவர் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந் தார்கள்.
- தென்னகம் உலகின் கேந்திர தானத்தில் அமைந்திருப்பதால் யவனர், மிலேச்சர் முதலாய அயல் நாட்டார் வணிகத் தின் பொருட்டு இங்கு வந்து தங்கியி ருந்திருக்கிறார்கள்.
- வடதமிழகம் புதிய கற்காலத்தில் இருந்து (கி.மு. 3000-1000) பெருங்கற் காலத்திற்கு (கி.மு. 1000-300) மாறி யதைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
- அதே வேளையில், தென்தமிழகத்தின் மருத நிலப் பகுதிகளான தென் பெண்ணை, காவிரி, வைகை, தாமிரப ரணி ஆகிய ஆற்றுப் படுகைகளிலும் நெய்தல் பகுதிகளான காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் அதிகமாக முதுமக்கள் தாழிகள் காணப்படுகின் றன. அப்பகுதிகள், குறுனிக் கற்கா லத்திலிருந்து (கி.மு. 10,000 முதல் கி.மு. 2,000) நேரடியாகத்தாழிக்காலத் திற்கே வளர்ச்சி அடைந்ததைச் சுட்டு கின்றன என்பது ஆய்வாளர் கருத்து.
- காஞ்சிபுர அகழாய்வில் கிடைத்த தாழிகளில் பெருங்கற்கால குறிகள் காணப்படவில்லை. மேலும் இத்தளம் ஆதிச்சநல்லூரைவிட பழமையானது எனவும் கருத முடியும்.
- ஆதிச்சநல்லூரின் காலம் தற்போதைக்கு கி.மு. 905 எனக் கரிமப்பரிசோதனை யில் தீர்மானமாயிற்று.

*தொடர்தல் 86ம் பக்கம்*

# தொன்மையைத்...

**85ம் பக்கத் தொடர்ச்சி...**

- பழனியிலிருந்து 12 கி.மீ தொலைவில் அமைந்திருந்த பொருந்தல் அகழ்வாய்வில், தாழி ஒன்றில் அடைக்கப்பட்ட பானை ஒன்றில் 2 கிலோ நெல் கெட்டுப்போகாத நிலையில் கண்டு எடுக்கப்பட்டது. அதனை 'Accelerator Mass Spectrometry (AMS) by the Bata Analytic Lab, USA' என்னும் தாபனத்தால் கரிமப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டு அதன் காலம் கி.மு. 490 என்று உறுதிப்படுத்தப்பட்டது.
- அவ்வாறே கீழடியின் காலம் கி.மு. 6ம் நூற்றாண்டு என்று கணிக்கப்பட்டது.

இந்தக் கட்டுரைத் தொடரின் அத்திவாரம் இடப்பட்டாயிற்று. தமிழ் நாட்டு மக்களின் தொன்மை நிறுவப்பட்ட நிலையில் அடுத்த கட்டத்திற்குள் நாம் நுழைகிறோம்.

## இம் மண்ணின் மன்னர்கள் யார்?

ஆதிச்சநல்லூர், கீழடி, கொடுமணல், பொருந்தல், அழகன்குழம் இன்னும் இவை போன்ற பல ஆய்வுக் களங்கள் தமிழர் தொன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டும் முயற்சியில் வெற்றி நடை போடுகின்றன. மேலே கூறப்பட்ட ஆய்விடங்கள் எதிலும் குழுத் தலைவர்கள், மன்னர் போன்றவர்களின் இருப்புப் பற்றிய எவ்வித தகவல்களும் இன்றுவரை கிடைக்கவில்லை.

தொல்காப்பியம் அரச விரிவாக்க காலத்தில் பாடப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தொல்காப்பியத்தில் மன்னர்கள் பேசப்படுகிறார்கள், மன்னர்களிடையே நடைபெற்ற போர் பற்றிப் பேசப்படுகிறது.

குறிஞ்சி நிலத்து வெட்சித் திணைப் போர் பற்றிக் கூறும் தொல்காப்பியர்

*'வேந்து விடு முனைஞர் வேற்றுப்*
*புலக் களவின்*
*ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்'*

- தொல். புறத்திணையியல் நூ. 2

என்று வேந்தனின் ஆணையைக் குறிப்பிடுகிறார்.

அவ்வாறே முல்லை நிலத்து வஞ்சித் திணைப் போர் பற்றிக் கூறும் தொல் காப்பியர்

*'வஞ்சி தானே முல்லையது புறனே*
*எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைச் சென்று*
*அடல் குறித்து அன்றே'*

- தொல். புறம். நூ.6.

என்கிறார். அதற்கு உரை கண்ட நச்சினார்க்கினியர், 'ஒருவன் மண்ணசையால் மேற்சென்றால் அவனும் அம் மண் அழியாமல் காத்தற்கு எதிரே வருதலின் இருவர்க்கும் மண்ணசையால் மேற் சேறல் உளதாகலின் அவ்விருவரும் வஞ்சி வேந்தர் என்றுணர்க' என்றார்.

உழிஞைப் போர் பற்றிக் கூறும் தொல் காப்பியர்,

*'உழிஞை தானே மருதத்துப் புறனே*
*முழுமுதல் அரணம் முற்றலும்*
*கோடலும்'*

- தொல். புறத்திணையியல் நூ.8

என்கிறார். 'முதல் அரணம்' என்றதால் 'அரண்' தலையும் இடையும் கடையும் என மூவகைப்படும். அவற்றுள், இங்கு குறிப்பிடப்படுவது தலையரண். இயற்கை அரண் அற்ற மருத நில மன்னர்கள் கோட்டை அமைத்து அரசோச்சினர்.

தொல்காப்பியத்தில் வலுவான அரசுகள் பேசப்பட்ட போதும் மன்னர் பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தொல் காப்பியத்தில் ஒரே ஒரு இடத்தில் மூவேந்தர்கள் அவரவர் அடையாளப் பூவால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

*'... உறுபகை*
*வேந்திடை தெரிதல் வேண்டி*
*ஏந்துபுகழ்ப்*
*போந்தை வேம்பே ஆர் என வரூஉம்*
*மாபெரும் தானையர் மலைந்த பூவும்'*

- தொல். புறம். நூ. 5

இங்கு சேரன் (போந்தை), பாண்டியன் (வேம்பு), சோழன் (ஆர்) என்னும் மூவேந்தரும் அவரவர் அடையாள மாலையால் அறியப்பட்டார்கள்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே நடுகல் நாட்டும் வழக்கம் இருந்திருப்பதைத் தொல்காப்பியர் பதிவு செய்திருப்பதைக் கண்டோம். சங்க இலக்கியங்கள் நடுகற்கள் பற்றித் தரும் தகவல்கள் பொதுவானவை. எந்த ஒரு தனி மன்னனையும் குறிப்பனவாகக் காணப்பட வில்லை.

தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 711) அரசுக்கள் உருவாகிவிட்டன என்றும் அரச விரிவாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் கண்டோம். கீழ்க் காணும் தகவல்களையும் உறுதி செய்து கொள்வோம்

ஆதிச்சநல்லூர் கி.மு. 905,
தொல்காப்பியம் கி.மு. 711,
பொருந்தல் கி. மு. 490,
கீழடி கி. மு. 6ம் நூற்றாண்டு.

சங்க காலம் கி.மு. 3-1ம் நூற்றாண்டு வரை என்று கூறப்பட்டு வந்த காலக் கணிப்பை, இன்று கி.மு. 6ம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்லவேண்டியிருக்குமோ என்று ஆய்வாளர்கள் கருதும்படியாகக் கீழடியின் கரிம ஆய்வு முடிவுகள் அமைந்திருக்கின்றன.

## தொல் பழங்காலத்து அரசியல் சமூகப் பொருளாதாரம்:

தொல்காப்பியம், சங்கத் தொகை நூல்கள் காட்டும் பண்டைக்கால அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைச் சிறிது கணிக்கலாம்.

## சங்க காலப் பொருளாதாரம்:

அரச வருமானம், வணிக வருமானம், செய்தொழில் வருமானம் என்னும் முப் பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

### அரச வருமானம்:

1. வாணிபம், 2. வரிகள் (சுங்கவரி முதலியன), 3. திறை, 4. வென்ற நாடுகளிலிருந்து கொண்டு வரும் செல்வம் என்னும் பெரும் பிரிவுகளுள் அடங்கும்.

இவை தவிர, உள்நாட்டு உற்பத்தியும் சங்க காலப் பொருளாதாரத்தில் பெரும் பங்கு கொண்டிருந்தது:

- வேளாண்மை, தோட்டப்பயிர்ச் செய்கை.
- குயவத் தொழில், தச்சுத் தொழில், சிற்பத் தொழில், இரும்புத் தொழில், மீன்பிடித் தொழில்.
- அணிகலன்கள் செய்தல், ஆடை நெய்தல்.
- கருப்பட்டி காய்ச்சுதல், கயிறு திரித்தல், கூடை பின்னுதல்.
- கப்பல் கட்டுதல், முத்துக் குளித்தல், உப்பு வாணிபம்.

பெருந் தெருக்களில் விற்படை வீரர் காவல் பற்றிச் சங்க இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

- வண்டிகள் செல்வதற்கு ஏற்ற நெடுஞ் சாலைகள் அமைத்து வாணிபப் பொருட்களின் பாதுகாப்பிற்காகப் பெருவழிகளில் மட்டுமல்லாமல் கவர் வழிகளிலும் விற்படை வீரர்களை நிறுத்திக் காவல் காத்தமையைப் பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்கிறது.
- சுங்க வரி: நெடுஞ் சாலைகளில் செல்லும் வணிகப் பொருட்களுக்கு உல்கு (வரி) வரி வசூலிக்கும் சுங்கச்சாவடிகள் பற்றி மதுரைக்காஞ்சி (அடி 621-623) கூறுகிறது.
- உள்நாட்டு வணிகப் பெருவழிகள் தமிழ்நாட்டில் வடக்கிலிருந்து தெற்காகவும் (தேனீ முதல் கடலோடு கலக்கும் வரை) கிழக்கிலிருந்து மேற்காகவும் (முசிறி முதலிய துறைமுகப் பட்டினங்களை உள்ளடக்கியதாகவும்) அமைந்திருந்தன.
- கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். தென்இந்தியா கேந்திரத்தானத்தில் இருப்பதுடன் முசிறி, தொண்டி, கொற்கை, எயிற்பட்டினம், பட்டினம் (மாமல்லபுரம்), காவிரிப்பூம் பட்டினம் முதலிய வாய்ப்பான துறை முகங்களும் கடல் வாணிவத்தை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தன.

## சங்க காலச் சமூகம்:

### வாழ்விடங்கள்:

குடிமக்கள் வாழும் இடங்கள், சிற்றூர், சிறுகுடி, சேரி, ஊர், குடி என்றும்; அரசர், குறுநில மன்னர்களின் அரச தொழிற்பாடுகள் நடைபெறும் இடங்கள் மதுரை, காஞ்சி, உறையூர் போன்ற தலைநகர்கள் என்றும்; தொழிற்கூடங்கள் கொண்ட வர்த்தக நகரங்கள், பேரூர், மூதூர் என்றும் அறியப்பட்டன.

ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் அமைந்த துறைமுகப் பட்டினங்கள் தொண்டித் துறைமுகப் பட்டினத்து விண்ணுயர் மாளிகைகள் (பெரும்பாணாற்றுப் படை); காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமாளிகைகள் (பட்டினப்பாலை).

### சங்க கால அரசியல்:

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்னும் எல்லைகளுக்குட்பட்ட தமிழ் நாட்டைச் சங்ககாலத்தில் 25 சேர மன்னர்களும்; 21 சோழ மன்னர்களும்; 25 பாண்டிய மன்னர்களும்; 9 வள்ளல்களும்; குறுநில மன்னர்களும்; வேளிர் முதலாய 7 குடிகளும் சிறப்புற ஆட்சி புரிந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் சங்க இலக்கியத்தில் ஆதிச்சநல்லூர் பற்றி தகவல்கள் எதும் இல்லை.

'சங்க இலக்கியத்தில் ஆதிச்சநல்லூர் பற்றிய எவ்வித குறிப்பும் அறிய முடியாத நிலையில் சங்க காலத்திற்கு முந்திய செழுமையான நாகரீகமாக இந்நாகரீகத்தை மதிப்பிடலாம் என்கிறார் முனைவர் சி. இளங்கோ.'

இத்தனையும் கூறியதன் மேல் பண்டைய தமிழகத்தை, அதாவது ஆதிச்சநல்லூர் போன்ற பழம் பெரும் வர்த்தக நகரங்களில் மன்னர், குறுநில மன்னர், தலைவர்கள் எவரும் ஆண்டதற்கான தகவல்கள் எதுவும் கிடைக்காத நிலையில், இத்தகையதொரு கட்டுமானத்தை நிச்சயமாக சிறந்த கட்டமைக்குட்பட்ட ஆட்சியின் கீழ் தான் இந்நகர்கள் இயங்கியிருக்க முடியும். அப்படியாயின் அத்தலைவர்கள் யாராக இருக்கும் என்ற ஒரு சிறு கருத்தாடல் தான் இக்கட்டுரையின் தொடக்கம்.

ஏதாவது ஒரு இடத்தில் தொடங்கியாக வேண்டும். கபிலர், சங்க காலம் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் எவரும் கபிலரைக் கடந்து செல்ல முடியாது. அந்த அளவுக்குச் சங்க இலக்கியத்திற்குக் கபிலருடன் நெருங்கிய தொடர்பு உண்டு. கபிலர் சங்க இலக்கியத்தில் அகத்திணையும் புறத்திணையுமாக 235 செய்யுட்கள் இயற்றியுள்ளார். இவற்றுள் குறிஞ்சிப்பாட்டு என்பது தமிழ் நாட்டு வரலாற்றை எழுதும் வரலாற்று ஆசிரியர்களுக்கு அரிய வரலாற்றுத் தகவல்கள் நிறைந்த நெடும் பாடலாகும். 'புலன் அழுக்கற்ற அந்தணாளன்' (புறம் 126), 'பொய்யா நாவின் கபிலன்' (புறம் 174) எனப் பிற சங்கச் சான்றோரால் பாடப்பட்ட பெருமைக்கு உரியவர் கபிலர்.

கபிலர், புறநானூறு 201ம் பாடலில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு தகவலைப் பதிவு செய்திருக்கிறார். இத்தகவலே எனது ஆய்வின் தொடக்கம். இருங்கோவேள் என்னும் மன்னன் பதினெண்குடி வேளிருள் ஒருவன். தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியாகிய எருமை (மைசூர்) நாட்டை ஆண்டுவந்த மன்னர் வழியினன். இருங்கோவேள் அந்த மன்னர் குடியில் 49வது தலைமுறையினன் என்னும் தகவலைக் கபிலர் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

*'நீயே, வடபான் முனிவன்*
*தடவினுள் தோன்றிச்*
*செம்பு புனைந்தியற்றிய சேண்*
*நெடும் புரிசை*
*உவரா ஈகைத் துவரை ஆண்டு*
*நாற்பத்தொன்பது வழிமுறை வந்த*
*வேளிருள் வேளே விறற் போர்*
*அண்ணல்*
*தார் அணி யானைச் சேடு*
*இருங்கோவே'*

- புறநானூறு 201, அடி 8-13.

வேளிர் வள்ளன்மை மிக்கவர்கள், வீரர்கள், இளங்கோவேள் வன்மையான நெடிய மதிலால் சூழப்பட்ட நாட்டை ஆள்பவன் என்று அவனதும் அவனது மூதாதையரதும் பெருமை பாராட்டப்படுகிறது.

இச்சிறப்பான பாடலின் பாட்டுடைத் தலைவன் மிகப் பழங்குடி வந்த மன்னனாகக் கூறப்படுகிறான். நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முழைத்த காளான் என்று சொல்வார்களே, அப்படியான புதிதாக முளைத்த மன்னன் அல்ல. அவனுடைய நீண்ட குடிப்பிறப்பும் அக் குடிப்பிறப்பின் உயரிய பண்புகளும் இப்பாடலில் கூறப்படுகிறது.

பண்டைய மன்னரது சராசரி ஆட்சிக்காலம் 15 ஆண்டுகள் என்று கொண்டாலே இருங்கோவேளின் மூதாதையரான வேளிரின் ஆட்சிக் காலம் ஏறக்குறைய 700 ஆண்டுகள் (15x49=735) ஆகலாம். சங்க காலத்தின் கீழ் எல்லையை கி.மு. 3ம் நூற்றாண்டு என்று கொண்டால் கி.மு. 1000ம் ஆண்டளவில் வேளிர் ஆட்சி ஏதோ ஒரு வடிவத்தில் நடந்திருக்க வாய்ப் புண்டு.

கபிலர், கபிலரோடு சம காலத்தில் வாழ்ந்த புலவர்கள், கபிலரது சமகாலப் புலவர்களால் பாடப்பட்ட மன்னர்கள், கபிலரால் பாடப்பட்ட மன்னர்கள், கபிலரால் பாடப்பட்ட மன்னர்களின் சமகால மன்னர்கள், அவர்களைப் பாடிய புலவர்கள் என்ற ஒரு வட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் போது எமது ஆய்வின் பரப்பு விரியும்.

மீண்டும் சந்திக்கலாம்.

*selvanayaki.s@thaiveedu.com*



***தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
**4164 Sheppard Ave E,**
**Scarborough, ON M1S 1T3.**
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
**121 City View Dr,**
**Etobicoke, ON M9W 5A8.**
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# கனடாவில் தமிழர் பண்பாடு

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா -

## பகுதி 1:

கனடாவில் வாழும் தமிழ் மக்களிடையே தமது தாய் மொழியையும் தமிழர் பண் பாட்டைபும் பேணிக்காப்பதிலும் எதிர் காலத் தலைமுறைக்கு அவற்றை எடுத் துச் செல்வதிலும் உள்ள பல சவால்கள் பற்றியும், அவற்றிற்கான தீர்வுகள் என்ன என்பதுபற்றியும் ஒரு கரிசனை தொடர்ந்து காணப்படுகின்றது. நமது தாய்மொழியின் இருப்பை இந்த நாட்டிலே நாம் தக்க வைத்துக் கொள்வோமா? எமது இன அடையாளத்தை இழந்துவிடாமல் பாது காத்துக் கொள்வோமா? பண்பாட்டு விழு மியங்கள் வளர்த்தெடுக்கப்படுமா? என்று பல்வேறு கவலைகளும் கேள்விகளும் அக்கறையும் நமது நெஞ்சங்களில் எழு கின்றன. அந்த அக்கறையுடனேயே கனடா வில் தமிழர்பண்பாட்டின் இன்றைய நிலை எதிர்காலம் பற்றிய நோக்கோடு இக்கட் டுரை படைக்கப்படுகின்றது.

## பண்பாடு என்ற சொல் உருவாகிய முறையும் அதன் பொருளும்:

பண்பாடு, மரபு, நாகரிகம், கலாசாரம், போன்ற சொற்களை நாம் பல வேளை களில் ஒரே கருத்தில் பயன்படத்துகின் றோம். 'Culture' என்ற ஆங்கிலப் பதம்

**பகுதி: 01**

பண்பாடு என்பதைக் குறிக்கின்றது. ஓவ் வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண் பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழ் கின்ற மக்களின் ஒருமித்த வாழ்க்கை நடைமுறைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு என்று கூற லாம். பண்பாடு என்ற தமிழ்ச் சொல்லின் தோற்றத்தையும் அதன் பொருளையும் நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். 'பண் படு' என்ற வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியதே பண்பாடாகும். பண்படு என் பதற்குச் சீர்ப்படுத்துதல், செம்மைப் படுத் துதல் என்பது பொருள்.

பயிர் செழிக்க உழவன் நிலத்தைப் செம்மைப் படுத்துவதை நாம் நிலத்தைப் பண்படுத்துதல் என்போம். பண்பட்ட மனி தர், பண்பட்ட சமுகம், பண்பட்ட மொழி, பண்பட்ட நிலம் என்றவாறெல்லாம் செம் மைப் படுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, சீரமைக்கப்பட்ட விடயங்களைக் குறிப்பிடு கின்றோம். சீராக ஒழுங்கமைத்துப் பாடு கின்ற தமிழிசைக்கும் கூட நாம் பண் என்றுதானே பெயர் வைத்திருக்கின்றோம்.

நிலத்தை உழுது பண்படுத்துதல் போல மனித வாழ்வையும் பண்படுத்த உயர்ந்த எண்ணங்களால் மனித மனங்கள் செம் மைப்படுத்தப் பட வேண்டும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்கிறது தொல்காப்பியம். உயர்ந்தோர் என்று பண் பாடு உடையவர்களை தொல்காப்பியர் குறிக்கின்றார். இவ்வுலகம் பண்புடைய வர்களால் மட்டுமே வாழ்ந்துகொண்டிருக் கின்றது என்பதைப் 'பண்புடையார்ப் பட் டுண்டு உலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்கிறது திருக்குறள். பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, செய்யும் தொழில், எண்ணங்கள் ஆகியவை பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன.

'பண்பாடு' என்ற சொல்லை முதன் முத லில் அறிமுகப்படுத்தியவர் இரசிகமணி டி.கே. சிதம்பரநாதனார். அவர் அறிமுகப் படுத்திய பண்பாடு என்ற சொல்லுக்குச் சங்கத்தமிழ் இலக்கியமான கலித்தொகை யில் உள்ள ஒரு பாடல் அடிவேராக அமைந்திருக்கலாம். நெய்தற் திணையில் அமைந்துள்ள 19 அடிகளையுடைய அந் தப் பாடலில் 'போற்றுதல் என்பது புணர்ந் தோரைப் பிரியாமை, பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல், அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை' என்ற அடிகள் வருகின்றன. பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல் என்ற பாடல் அடியைப் பார்த் தால் பண்பாடு என்ற சொல் பிறந்த வித மும் அதன் பொருளும் புலப்படும். பாடு என்பதற்குப் பெருமை, வளர்ச்சி, பயன் என்பனவாகப் பல பொருள்கள் உள்ளன. பாடறிந்து அதற்கேற்ப ஒழுகுதல் பண்பு எனப்பட்டது. நல்ல வழிகளைப் பின்பற்றி

> **மக்கள் பிறநாடுகளுக்கப் புலம் பெயர்ந்தாலும் தமது பண்பாட்டு விழுமியங்களைத் தம்முடன் எடுத்துச்செல்லத் தவறுவதில்லை. ஆனால் காலப்போக்கில் பெரும்பான்மைச் சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களுள் அவை கரைந்து போகின்றன என்பதும் உண்மைதான்.**

வாழ்வதே சிறந்தது என்பதைப் பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கலித் தொகை கூறுகிறது. பண்பாடு என்பது மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிக்கின்றது. அருள், ஈகை, இரக்கம், பக்குவம், வீரம், தீரம், ஊக்கம், உணர்வு, மானம், மரியாதை, பற்று, பணிவு, பிறர் நலம் பேணுதல், ஆகியன அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டின்பாற் பட்டதாகும். ஒரு சமு தாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அதன் பண்பாடு துணைபுரியும்.

நாகரிகம் என்பது மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மைகளைக் குறிப்பது. உணவு, உடை, உறையுள், வளம் மிகுந்த நாடு, நலம் மிகுந்த நகரங்கள், கல்விச் சாலைகள் கலைக் கூடங்கள், கூத்து, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம், விளையாட்டு, வளர்ச்சியுற்ற வாணிபம், தொழிற்சாலைகள், அழகான சாலைகள், வனப்பான பூஞ்சோலைகள் இவையெல் லாம் புறத்தோற்றப் பொலிவுகளைக் குறிக் கும் நாகரிகத்தின்பாற் பட்டவையாகும்.

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழி யாகவும், தாயகப் பிணைப்பின் வழியாக வும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமி யங்கள் கலைகள் ஊடாகவும், சமூகப் பொருளாதார அரசியல் தளங்கள் ஊடாக வும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும். தமிழர் பண்பாடு பலகாலமாகப் பேணப்பட்டுத் திருத்தப் பட்டு, மேம்படுத்தப்பட்டுத் தொடர் மாற் றத்துக்கு உட்பட்டு வருகின்றது.

## பண்பாட்டில் மரபு:

பண்பாட்டில் பல கூறுகள் காணப்படுகின் றன. சமூகக் கட்டமைப்பு, மரபுகள் பழக்க வழக்கங்கள், பாரம்பரியம், மொழி, கலை இலக்கியங்கள், மதம், ஆட்சியமைப்பு, பொருளாதாரப் பொறிமுறை என்பவை எல்லாமே ஒரு பண்பாட்டின் பல கூறு களாக இருக்கின்றன. மரபுகள், கலை கலாசாரம், நாகரிகம் எல்லாம் பண்பாட்டுக் குள் அடங்குவன. மரபு என்ற சொல் தொல்காப்பியத்தில் பெருமளவு ஆளுமை செலுத்துகின்றது. தொல்காப்பியர் காலத் துக்கு முன்பே மரபுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தொல்காப்பிய நூற்பாக்களால் அறிகி றோம். பன்னெடுங்காலமாக ஒரு இனத் தின் பண்பாட்டு அடிப்படையில் தலை முறை தலைமுறையாக எடுத்து வரப்படு கின்ற வாழ்வியல் நடைமுறைகளை வழி வழியாக வந்த மரபு என்று கூறிக்கொள் கிறோம். ஒரு சமூகத்தின் மரபு என்பதாக அச்சமூகத்தின் பழக்க வழக்கங்கள், கோட்பாடுகள், சமய சமூகச் சடங்குகள், மொழியிற் பயன்படுத்தும் சொற்கள், கலை இலக்கிய வடிவங்கள் என்று பலவற்றைக் குறிப்பிடலாம்.

## தமிழர் பண்பாடு:

தமிழர் பண்பாட்டு விழுமியங்கள், மரபுகள், நாகரிகம், கலை கலாசாரம் எல்லாம் மிகப் பழமையானவை. பண்டைத் தமிழரின் பண் பாட்டு விழுமியங்களுக்கு இதுவரை ஒரே ஆதாரமாக இருந்தவை பழந்தமிழ் இலக் கியங்கள் மட்டுமே. பலர் அவை வெறும் புனைவுகளேயன்றி வரலாறு இல்லை எனப் புறந்தள்ளி வைத்தார்கள். ஆனால் இன் றைய அகழ்வாராய்ச்சிகளிலே நிலத்தைத் தோண்டத் தோண்டப் பழந்தமிழ் இலக் கியங்களில் கூறப்பட்டவை வெறும் புனை வுகளல்ல வரலாற்று ஆதாரங்கள் என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. பண்பாடு என்பது நிரந்தரமான ஒன்றல்ல. கால நீரோட்டத்தில் தொடர்ந்து மாற்றமடைந்து வருவது. களமும் காலமும் பண்பாட்டில் பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இக்காலத்தில் சமய, சமூக, இன, அரசி யல், பொருளாதாரச் சிக்கல்கள் மக்களைத் தமது பாரம்பரிய நிலங்களிலிருந்து குடி பெயரச் செய்கின்றன. பிற தேசங்களுக் கான புலப்பெயர்வு இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் பெருமளவு நடந்து வருகிறது. மக்கள் பிற நாடுகளுக்கப் புலம் பெயர்ந்தாலும் தமது பண்பாட்டு விழுமியங்களைத் தம்முடன் எடுத்துச்செல் லத் தவறுவதில்லை. ஆனால் காலப்போக் கில் பெரும்பான்மைச் சமூகத்தின் பண் பாட்டு விழுமியங்களுள் அவை கரைந்து போகின்றன என்பதும் உண்மைதான்

## கனடியப் பண்பாடு:

கனடாவில் ஐரோப்பியக் குடியேற்றம் நிகழ் வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்ன தாக தற்போதைய கனடா நிலப்பரப்புக் குள் அடங்கிய பகுதிகள் பூர்வீகக் குடி மக்கள் வாழும் பகுதிகளாக இருந்தன. அவர்கள் தனித்துவமான மொழி, வணிக வலையமைப்பு, ஆன்மிக நம்பிக்கை, சமூகக் கட்டமைப்பு அகியவை கொண்ட சமுதாயமாக இருந்திருக்கின்றார்கள். அந்த சமுதாயத்தின் பண்பாட்டு விழுமியங்கள் ஐரோப்பியரின் குடியேற்றத்துக்குப் பின்பு படிப்படியாக மறைந்து போயின. 15ஆம் நூற்றண்டளவில் பிரெஞ்சுக்காரர்கள், பிரி டிஷ்காரர்கள் ஆகியோரின் வரவும் அத னைத் தொடர்ந்து ஏற்பட்ட குடியேற்றங் களும் கனடா உள்ளிட்ட வட அமெரிக்க பிராந்தியங்களில இடம் பெறலாயிற்று. பிரெஞ்சுக்காரரின் குடியேற்றம் 15ஆம் நூற்றண்டிலும் அதனைத் தொடர்ந்து 16ஆம் நூற்றாண்டில் நிரந்தரக் குடியமர் வும் நிகழ்ந்தது. பின்னர் பிரித்தானியர் வருகையைத் தெடர்ந்து 7 ஆண்டுகளாக நடந்த போருக்குப் பின்னர் 1763இல் இந்நிலத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் ஐக்கிய இராச்சியத்தின் கைக்குள் வீழ்ந்தது. 1867 இல் கனடா மாகாணம் New Brunswick, Nova Scotia ஆகிய மற்றைய பிரித்தானி யக் குடியேற்றங்கள் கொண்ட பகுதிக ளுடன் இணைக்கப்பட்டு கனடா என்று பெயரிடப்பட்டுச் சுய நிர்வாக ஆட்சியுடைய நிலமாக மாற்றப்பட்டது. 1949 இல் பிரித் தானியரின் ஆதிக்கத்திலிருந்த வட அமெ-ரிக்கப் பகுதிகளோடு New Foundlad and Labrador ஆகியன இணைக்கப்பட்டு விரி வாக்கப்பட்டது. 1848 லிருந்து பொறுப்பு வாய்ந்த அரசு இருந்த போதிலும் முத லாவது உலகப் போர் முடிவுக்கு வரும் வரையில் வெளியுறவு, பாதுகாப்பு விடயங் களைப் பிரித்தானியா தனது வசம் வைத் திருந்தது. Westminister Statue ஐக்கிய இராச்சியத்தடன் கனடாவை இணைந்த நாடாக வைத்திருந்தது. 1983இல் ஏற்படுத் தப்பட்ட அரசியலமைப்பு மாற்றம் இறுதி யான சட்ட முடிவுகளுக்கு பிரித்தானியப் பாராளுமன்றத்தில் தங்கியிருக்கும் நிலைப் பாட்டை நீக்கியது. இப்போது 10 மாகா ணங்களையும் 3 பிரதேசங்களையும் உள் ளடக்கி மக்களாட்சி முறையிலுள்ள அர சாட்சி நடைபெறுகிறது. எலிசபெத் மகா ராணியாரை முடியாட்சி அமைப்பின் மர புப்படி நாட்டின் தலைவராகக் கொண் டுள்ளது. ஆங்கிலமும் பிரெஞ்சு மொழி யும் அரச கரும மொழிகளாக உள்ளன.

கனடியப் பண்பாடு கலாசாரம் ஆகியவை பல நூற்றாண்டு மாற்றங்களுடன் பூர்விகக் குடிகள், பிரஞ்சு, பிரிட்டிஷ் குடிகளின் தாக்கம், மற்றும் அண்மைக்காலத்தில் குடியேறுபவர்களின் தாக்கம், அண்மை நாடான அமெரிக்காவினது தாக்கம் ஆகி யன கொண்ட பல்லினப் பண்பாட்டு விழு மியங்கள் கொண்ட நாடாக விளங்குகிறது. எனினும் பெரும்பான்மை சமூகமாக விளங் கும் பிரஞ்சு பிரித்தானிய வழிவந்த ஐரோப்-பிய நாகரிகரிகமும் பண்பாடும் மேலோங்

*தொடர்தல் 89ம் பக்கம்*

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

# கனடாவில் தமிழர்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

கிய சமூகமாகக் கனடா இருப்பதைக் காணலாம். வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டுடன் பல்லின மக்களும் இணைந்து வாழும் இனிய நாடாக, சமா தானமும் அமைதியும் நிலவுகின்ற நாடாக, மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை யும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் நாடா கக் கனடா திகழ்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் 1952ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அகதிகளைப் பொறுப்பேற்று அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நற்பணியில் கனடா தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அதனால் பல்வேறு நாடுகளிலிருந்தும் அகதிகளும், குடிவரவாளர்களும் இந்நாட் டிற்கு வந்து வளமாக வாழ்வதற்குரிய வாய்ப்பு அமைந்துள்ளது. அதனாலேயே கனடாவை வாய்ப்பு வழங்கும் நாடு (country of opportunity) என்று கூறுவார்கள்.

The Canidian Charter of Rights and Freedom என்னும் கனடிய அரசினது மனித உரிமைச் சாசனத்தின்படி பல்லினப் பண்பாடுகள் கொண்ட மக்கள் ஒன்றிணைந்து கனேடியர் என்ற அடையாளத்துடனும் ஒருமைப்பாட்டு டனும் வாழக்கூடிய அதேவேளை தமது இனத்தின் அடையாளத்தோடும் வாழுகின்ற உரிமையையும் சலுகையையும் புதிய குடிவரவாளருக்குக் கனடா வழங்கியுள்ளது. 1871ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி குறைந்த அளவிலான சுமார் 20 வகையான வெவ்வேறு இனப் பூர்வீகமு டைய மக்களே கனடாவில் வாழ்ந்து வந் திருக்கிறார்கள். அதில் 60.5 விழுக்காடு பிரித்தானிய இனத்தவர், 31.1 விழுக்காடு பிரஞ்சு இனத்தவர், 1 விழுக்காட்டுக்கும் குறைவாகப் பூர்வீகக் குடிகள் என்று புள்ளி விபரம் கூறுகிறது. 2019 ஆம் ஆண்டில் கனடாவின் மக்கள் தொகை 37. 59 மில் லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு கனடாவில் 250க்கும் அதிகமான வெவ்வேறு இனச் சமூகம் கனடாவில் வாழ்வதாக குறிப்பிடு கின்றது. 20 மில்லியன் பேர் ஐரோப்பிய பூர்வீகத்தினரும், 1.8 மில்லியன் சீன இனத் தவர்களும், சுமார் 1.4 மில்லியன் கிழக்கு இந்திய இனமும் வாழ்வதாகக் கூறுகின்றது.

2001ஆம் ஆண்டு மக்கள் தொகை மதிப் பீட்டின்படிக் கனடாவில் பெரும்பான்மை யினரான காக்கேசியன் (Caucasean) எனப் படும் வெள்ளை இனத்தவர் அல்லாத புலனாகும் சிறுபான்மையினர் (Visiblae minority) சுமார் 4 மில்லியனுக்கும் மேற் பட்டவர்கள் (13.4 விழுக்காடு) வாழ்கின் றார்கள். மொத்த மக்கள் தொகையில் மாகாண ரீதியாக அதிக அளவிலான புலனாகும் சிறுபான்மையினரைக் கொண்ட மாகாணமாக பிரிடிஷ் கொலம்பியா (21.6 % ) மாகாணமும், அதற்கடுத்ததாக ஒன்ராரியோ மாகாணமும் (19.1%) இருக் கின்றன.

எனினும் கனடாவிலுள்ள புலப்படும் சிறு பான்மையினரில் 54 வீதமானவர்களைக் கொண்ட மகாணமாக ஒன்ராரியோ மாகா ணம் இருக்கின்றது. அதில் தென்கிழக் காசிய நாட்டவர்கள் 26% (இதில் தமி ழரும் அடங்குவர்), சீன இனத்தவர் 22% ஆகவும், கறுப்பினத்தவர் 19% ஆகவும் இருக்கின்றார்கள். அதிலும் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 1.7 million (36.8% ) புலப்படும் சிறுபான்மையினர் வாழ்கின்றார் கள். இப்போது கனடாவில் சுமார் 4 லட்சம் தமிழர்கள் வாழ்வதாகக் கூறப்படு கின்றது. ஆனால் 2016 ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பீடு 140, 720 பேர் தமிழர்கள் (0.4 விழுக்காடு) வாழ்வதாகக் குறிப்பிடுகின்றது.

## கனடாவுக்குத் தமிழர்களின் குடிப்பெயர்வு:

1980களுக்கு முன்னர் கல்வி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் மிகச் சிறிய எண் ணிக்கையில் தமிழர்கள் இலங்கையிலி ருந்தும் தமிழகத்திலிருந்தும் வந்து கனடா வில் தங்கிக் குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

1980களின் பின்னர் குறிப்பாக 1983 ஜுலை மாதம் இலங்கையில் ஏற்பட்ட இனக்கல வரத்தின்போது வரலாறு காணாத வகை யில் தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன்பின்னரும் அங்கு தமிழ் மக்களுக்கெதிரான அரசி யல் கெடுபிடிகள், இராணுவச் செயற் பாடுகள், கைது, சித்திரவதை, காணாமல் போதல் போன்ற மனித அவலங்கள் எல்லாம் அதிகரித்தபோது பெருமளவிலே ஈழத்தமிழர்கள் பிறநாடுகளுக்கு இடம் பெயரத் தொடங்கினார்கள்.

அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் கன- டாவின் குடிவரவுச் சட்ட திட்டங்களும் மறுவாழ்வுக்குக் கொடுக்கப்பட்ட ஆதரவும் பெருமளவு ஈழத்தமிழர்களைக் கனடாவை நோக்கிக் குடிபெயர வைத்தது. அப்போது புலம்பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் இளை ஞர்களாகவே இருந்தார்கள். தாம் வாழ்ந்த மண்ணை விட்டு, உறவுகளைப் பிரிந்து, எதிர்காலக் கனவுகளைத் துறந்து, தமது உயிரையும் பணயம் வைத்துத் தங்களது பயணத்துக்குப் பெரிய விலை கொடுத்துத் தான் புலம் பெயர்ந்து பிற நாடுகளுக்கு அனேகமாக வெறுங்கையோடுதான் வந்து சேர்ந்தார்கள். அன்று கனடாவுக்கு வந் திறங்கியவர்கள் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெரி தும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். முற்றிலும் மாறுபட்ட இயற்கைச் சூழல், மொழிப் பிரச்சனை, குளிர் மிகுந்த புதிய காலநிலை, மன ஆறுதலுக்குப் பேசிப் பழகுவதற்கும் அறிந்தவர் தெரிந்தவர் என்று பக்கத்தில் யாருமில்லாத நிலை போன்ற பல சவால்களை அவர்கள் எதிர் நோக்க வேண்டியிருந்தது. கனடாப் பய ணத்துக்காகத் தாம் பட்ட கடனைத் தீர்ப் பதற்கும் தாயகத்தில் தம்மை நம்பியுள்ள குடும்ப உறவுகளை ஆதரிப்பதற்கும் தமது வாழ்க்கையை நிலைநிறுத்திக் கொள்வதற் கும் என்று அவர்கள் இரவு பகலாக உழைத்துத் தம்மை உருக்கிக் கொண்டார் கள். ஆனால் விரைவாகவே அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிய டைந்த ஒரு சமுதாயமாக இன்று மூன்று தலைமுறைகளைக் கடந்து ஈழத்தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கைப் பயணம் போய்க்கொண்டிருக்கின்றது.

இப்போது அவர்கள் அகதிகள் அல்ல. இந்நாட்டுக் குடியுரிமை பெற்ற குடிமக்கள். தங்களது அயராத உழைப்பினால் இன்று தங்களது இருப்பை நேரிய முறையில் நிலைநிறுத்திக் கொண்டதுடன் கல்வியில், பொருளாதாரத்தில், அரசியலில், கலை கலாசார மேம்பாட்டில் இந்த நாட்டுக் குடி மக்களுக்கு இணையாகத் தம்மை நிலை நிறுத்தி வருகின்றார்கள் என்பது பெருமை தருகிறது. அவர்களுடைய பொறுப்புணர் வையும், கடுமையான உழைப்பையும், தம்மை ஆதரித்து ஏற்றுக்கொண்டு தம்மை வளர்த்தெடுத்த நாட்டுக்காக அவர்கள் ஆற்றுகின்ற பெரும் பங்களிப்பையும் கனடிய ஆட்சியாளர்களும், குடிமக்களும் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். இந்த நிலையில் தம்மை, தமது இருப்பை நிலை நிறுத்திக் கொண்ட தமிழர்கள் தமது பண் பாட்டை, கலை கலாசாரத்தைப் பேணிக் காப்பதில், எதிர்காலத் தலை முறைக்கு எடுத்து வழங்குவதில் எவ்வாறான பங்கு வகிக்கின்றார்கள் என்ற கேள்வி எழுந்து நிற்கிறது.

(வளரும்)

shanmugarajah@thaiveedu.com



Income Tax
Augustine & Associates
25 Years Canadian Experience
" Rapid,Accurate & Affordable Service."
(Quebec, Ontario & Other Provinces)
Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31
EFILE
SUCCESS
Wimal Augustine
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048

YOUR CHOICE IN
REAL ESTATE
Jesmine J Wimalendran
647.871.1921
Wimal Augustine
416.617.6735
www.propertyrealtors.ca
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977



# இலெமூறியா அல்லது குமரிக்கண்டம்

## பகுதி: 7

- அ. கணபதிப்பிள்ளை -

வரலாற்றை மக்கள் தளத்துக்கு எடுத்துச் செல்லுவதில் முக்கியமாயிருப்பவை இலக்கியம், கல்வெட்டு, அகழ்வாய்வு ஆகிய மூன்றும் எனலாம். இதில் இலக்கியம். பலதரப்பு மக்களினதும் வாழ்வியலுடன் மிகநெருக்கமாக இருப்பதனால் அதனைக் காலத்தின் கண்ணாடி என்றும் குறிப்பிடுகிறார்கள். இலக்கியங்கள் சமகாலத்தினைப் பிரதிபலிப்பதனையும் சில கடந்த காலத்தைக் காட்டமுனைவதையும் எதிர்காலத்தைக் கற்பனைப்படுத்திக் காட்டுவதனையும் காணமுடிகிறது. இதனால் அவற்றில் மிகைப்படுத்தும் தன்மை மிகுந்திருத்தலை அவதானிக்கலாம். இந்த மிகைப்படுத்தல் கற்பனை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வரலாற்றாய்வாளர்கள் அவற்றின் நம்பகத்தன்மையில் சந்தேகங்கொண்டிருப்பதுடன் உண்மையான செய்திகளைத் தரும் இலக்கியங்களைக்கூடச் சந்தேகக் கண்ணுடன் பார்ப்பவர்களாகவுமிருக்கிறார்கள்.


குமரிக்கண்டம் பற்றிய செய்திகள் தமிழிலக்கியமெங்கும் விரவிக்கிடந்திருக்கவேண்டும். கடல் கோளினால் முதற்சங்க நூல்கள் பல காணாமற் போனமை பற்றிய ஆதாரங்கள் தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இலக்கிய நூல்கள் அதிகம் காணப்பட்டிருத்தல் வேண்டும். கடைசிக் கடல்கோள்களுக்குப் பின்னால் கிடைக்கப்பெற்ற தமிழ் இலக்கியங்களே தமிழர்களின் சமகால வாழ்வியல் பற்றியும் முன்னைய குமரிக்கண்டம் பற்றிய செய்திகளையும் கொண்டிருக்கின்றன. தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றில் காணப்பட்ட செய்திகள் குமரிக்கண்டம் இருந்தது, அது எவ்வாறு கடலுள் மூழ்கடிக்கப்பட்டது போன்ற உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளன.

கா. இராசமாணிக்கனாரினால் எழுதி 2003ல் வெளியிடப்பட்ட காலஆராய்ச்சி என்ற நூலில் புறநானூற்றின் காலம் கி.மு 10ம் நூற்றாண்டுக்கும் (1000 ஆண்டுக்கும்) கி.பி. 4ஆம் நுற்றாண்டுக்கும் (300 ஆண்டுக்கும்) இடைப்பட்ட காலத்தை உள்ளடக்கியதாகக் குறிப்பிடுவார். இத்தகைய பரந்த கால இடைவெளி ஒரே பெயர் கொண்ட பல புலவர்களையும் அவர்களது பாடல்களையும் கொண்டிருந்ததால் புலவர்களது பெயர் தொடர்பிலும் அவர்களியற்றிய பாடல்கள் தொடர்பிலும் குழப்பத்தை உருவாக்கியிருக்கிறதென்பது உண்மையே.

தென்னாட்டுக்குச் சமஸ்கிருத மொழிவழி ஆரியர்வருகை கி.மு. 7ஆம் நூற்றாண்டென வி. அரங்காச்சாரியாரை மேற்கோளாகக் காட்டியும் இலக்கண நூலான பாணினியத்துக்கு முந்தியது என்பதாலும் தொல்காப்பியம் கி.மு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும் குறிப்பிட்டிருந்தார். சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரு தமிழ் நூல்களும் கி.பி 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும், எனவும் நிறுவியுள்ளார்.

கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க வரலாற்றாசிரியர் தூசிடியஸ் (Thucydides) பக்கசார்பற்றுத் தேடிய ஆதாரத்தைக் கொண்டு காரணகாரியத்தை முன்னிலைப்படுத்தி வரலாற்றைப்பதி விட்டு, 'விஞஞான வரலாற்றின்' தந்தையாகப் போற்றப்படுபவர். படிப்பினை பயக்கத்தக்க வரலாறு என்ற அவரது பாணியிலே சிலப்பதிகாரமும் எழுதப்பட்டதாக இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரம், புறநானூறு ஆகியவற்றின் பாடல்களில் நம்பத்தகாத செய்திகளிருப்பது அருமையிலும் அருமை எனப் பதிவிட்டிருக்கிறார். கிரேக்க, உரோமப் பேரரசுகளின் பெரிப்பளுஸ் என்ற கடல்வழிப்பிரயாணப் பதிவேட்டுக் குறிப்பும் கிரேக்கப் புவியியலாளர்களான பிளினி தொலமி போன்றோர் குறிப்பிட்டருந்த தென்னிந்தியப் பாண்டிய ருடனான வாணிபச் செய்திகளும் உண்மை என்பதனைப் புறநானூற்றுப்பாடல்கள் நிரூபிக்கின்றன.

குமரிக்கண்டம் கடல்கொண்ட தன்மை இயற்கை அனர்த்தம் என்பதாகச் சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரக் காவியத்தினை இலக்கிய ஆதாரமாக முதலில் எடுத்துக் கொள்ளலாம். தமிழின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் அதன் கதையூடாக மூவேந்தர் பற்றிய குறிப்புகளையும் தமிழ்நாட்டின் சமகால வாழ்வியலையும் தமிழர்களின் கடந்தகாலத் தொழில்நுட்ப வளமான நாகரிகம் பற்றியும் எடுத்தியம்பியிருக்கிறது.




இரண்டு கருவிகள் மூலமாகக் கடற்சீற்றமானது ஏற்படக் கூடிய புவியியற் பின்னணி காணப்படுகிறது. அகச்செயற்பாட்டு இயற்கை அனர்த்தம் என்பது பூமியின் கல்லியல்மண்டலம் வளிமண்டலம் உட்கோள மண்டலம் உயிரின மண்டலம் ஆகியவற்றின் செயற்பாடுகளால் நிகழ்பவை. புறச்செயற்பாட்டு இயற்கை அனர்த்தங்கள் என்பவை சூரியனிலிருந்துவரும் வெப்ப மற்றும் காந்த அலைகள் ஏனைய கோள்களிலிருந்து வெளிவரும் தெறிப்பொளித்தாக்கம் வானில்மிதக்கும் வானக்கற்கள் அல்லது வளிஉராய்வால் எரியக்கூடிய எரிகற்கள் புவிமேற்பரப்பில் மோதுதல் வால்நட்சத்திரங்களின் தாக்கம் போன்ற வைகளாகவிருக்கும். உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் இவைபற்றித் தெரிந்துவைத்துக்கொள்வதில் ஆர்வமாயிருந்திருக்கிறார்கள். தமிழர்களின் இலக்கியங்களில் இவை பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

*'அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி வடி வேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசையாண்ட தென்னவன் வாழி'* என்ற சிலப்பதிகாரப்பாடல் அரசனை வாழ்த்திப் பாடும் பொழுது முன்னோர் வாழ்ந்த நிலப்பரப்பானது தெற்கேயிருந்து கடல் கோளால் அழிந்துபோக வடக்கேயிருந்த கங்கையும் இமயமும் வரை தமிழர் பரந்து வாழும் பகுதியாக மாறியது என்பதனைக் குறிப்பாக இப்பாடல் விளக்கி நிற்கிறது.

புறச்செயற்பாட்டு அனர்த்தமான வான்பகையான வானக்கல் மோதியதால் ஏற்பட்ட கடல்எழுச்சிதான் குமரிக்கண்டமான தென்னாடு அழியக்காரணமாக இருந்ததாக அந்தப்பாடல் குறிப்படுகிறது. இந்தப் பெரிய அழிவானது மெசோசோயிக் என்ற நடுயுகத்தில் டைனசோர்கள் என்ற முட்டையிடும் ஊர்வன அழியக் காரணமாயிருந்த 66 மில்லியன் வருடத்தைய வானக்கல்லைக் குறித்து நிற்கிறதா என்ற கேள்வி எழுகிறது. 20 மைல் அகலமான ஒரு வானக்கல் மெச்சிக்கோவில் விழுந்ததாக அய்வு குறிப்பிடுகிறது. மேலும் பல வானக் கற்களின் மோதுகையால் கொண்டுவானா பலசிராய்ப்புகளாக உடைந்து நகர்வுக் குட்பட்டது என்பது தெளிவாகிறது. இத்துடன் டைனசோர்கள் இருந்ததற்கான ஆதாரங்களாக அவற்றின் முட்டைகள் தென்னிந்தியாவில் பரவலாகக் கிடைத்திருக்கிறது. இலங்கையிலும் தெற்கேயும் கடல் கோள்களினதும் எரிமலை, புவிநடுக்கம், பாறைத்தொடர்களின் பிளவுத்தன்மையாலும் டைனசோர்களின் உடல்கள் மண்ணுள் ஆழமாகப் புதைந்துவிட்டன. அவுஸ்திரேலியாவின் புவியியற் தனித்துவத் தன்மையினையும் கொண்டுவானாவிலிருந்து கிழக்கு நோக்கிய நகர்வையும் அவதானித்த ஆய்வாளர்கள் அக்கண்டம் வானக்கல்லின் மோதுகையாலும் உருவாகியிருக்கலாமெனக் குறிப்பிடுகின்றனர்.

இலங்கைக்குத் தெற்காக மத்தியமலை நாட்டின் தொடர்ச்சியாக இருந்த மலைத் தொடரை மேருமலை அல்லது குமரிமலை எனக் குமரிக்கண்ட ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தார்கள். இம்மலைத்தொடர் பூமத்தியகோட்டுக்குத் தெற்கே விரிந்திருந்தமையால் அடுக்கு மலைத்தொடராக இருந்தது அதற்கு மேற்காகப் பல குன்றுகள் காணப்பட்டிருந்தன. ஆய்வாளர்கள் குறிப்பிட்டபடி அந்தக்கண்டம் இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. அல்பிறட் ரசல் வாலஸ் (Alfred Russel Wallace) கிழக்கிந்திய தீவுகளூடாக அத்தகைய பிளவு நிகழ்ந்ததாகவும் அதற்கேற்ப ஆசிய, அவுஸ்திரேலிய உயிரினங்கள் வேறுபடுவதாகக் காட்டி இதனை உறுதிப்படுத்துகிறார்.

இத்தகைய பிளவு ஏற்பட்ட காலமே பஃறுளியாறும் மலையும் கடல் கொண்ட காலமாக இருக்கவேண்டும். இக்காலத்தை ஸ்கொட் எலியட் (W.S. Scott Elliott) 200,000க்கும் 50,000க்கும் இடைப்பட்டதென ஊகித்துக் கொள்ளுகிறார். 82,000 75,000 50,000 ஆண்டுகளில் நிலம் கடலுள் மூழ்கிப் போனதான குறிப்புகளும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் வானக்கற்தாக்கம் நிலநடுக்கப்பாறைப்பிளவு ஆகிய இரு நிகழ்வுகளையும் ஒன்றாகப் பாடலாக்கப்பட்டிருந்ததால் அவற்றின் நம்பகத்தன்மையினை ஐயங்கொள்ள முடியாது.

குமரிக்கண்ட கடலாய்வாளர் ஒரிசா பாலு குறிப்பிடுவதுபோல குமரிக்கண்டப் பெருநிலமானது முக்கோணமான பரந்த நிலப்பரப்பாக இருந்ததற்கான சாத்தியம் குறைவென்றும் மேற்கு மற்றும் தெற்குத் தீவுத்தொடர்கள் பெரிதாகவிருந்தனவென்றும் அத்தீவுகளில் வாழ்ந்த மக்கள் குமரிக்கண்ட மக்களாயிருந்தார்கள் என்ற கருத்தோட்டமானது நம்பகத்தன்மை கொண்டதாக இருப்பினும் அது பிந்திய காலக் குமரிக்கண்டத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகவே கொள்ளவேண்டும். தொடர்ந்து ஏற்பட்ட கடல்மட்ட உயர்வினாலும் ஆழிப்பேரலை நிலஅரிப்பினாலும் எஞ்சிய நிலவுருவமே அவர் முன்வைத்திருந்த தீவுத் தொடர்களாகும். கடல் நீர்மட்டம் தாழ்வாயிருந்த காலங்களில் அத்தீவுகள் இணைந்து காணப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மையை மறுக்கமுடியாது.

மேருவின் வடமலை அடுக்கிலிருந்தும் கிளைகளுடன் இன்றைய இலங்கைக்குத் தெற்காகக் கிளை பரப்பி கிழக்கு நோக்கி ஓடிக் கடலுட் சங்கமமானது குமரியாறு. குமரிக்குத் தெற்கேயிருந்த பஃறுளியாறும் மேருவின் தெற்கில் ஊற்றெடுத்துக் கிழக்காகப் பாய்ந்து சுமாத்திரா யாவாத்தீவுகட்குத் தென்கிழக்காக இந்து சமுத்திரத்தில் கலந்தது. குமரிநாடு இரண்டாகப் பிளவுபட்டபொழுது பஃறுளியும் அதன் கழிமுகத்திலிருந்த தொன்மதுரையும் (புராதன மதுரை) கடலுள் மூழ்கிப் போயிற்று. இக்காலப்பகுதியின் பின்பாகவே குமரியாறு குமரியின் தென் எல்லையாக மாற்றம் பெற்றது. குமரியாற்றின் கழிமுகத்தில் முதற்சங்ககாலத்தில் அழிவுக்குள்ளான தென்மதுரையும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதனை ஒட்டியே *'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'* என்ற தொல்காப்பிய பாடல் வரியானது முக்கியம் பெறுகிறது. இதே எல்லை வரையறை சிலப்பதிகாரத்திலுமுள்ளது. ஆயினும் உரை எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களினூடாகக் கடல்கொண்ட குமரிக்கண்டம் பற்றியும் ஆதித் தமிழ்ச்சங்கத்தினைப் பற்றிய செய்திகளும் ஆங்கு உட்புகுத்தப்பட்டுள்ளன.

*'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ்வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு'* என்ற சிலப்பதிகார அடிக்கு உரை எழுதிய அடியார்க்குநல்லார் என்பவரால் இளம்பூரணனார் இறையனார் உரைகளையும் மேற்கோள்காட்டி தொடியோள் பௌவமென்று சொன்னது குமரிக்கடலன்று என்றும் பஃறுளி ஆறும் அதனுடனினைந்த குமரிக்கண்ட நாடுகளும் தென்மதுரையும் கடலுள் மூழ்கிப்போக குமரியாறு எல்லையானதால் குமரிக் கடல் எனக் குறிப்பிடப்பட்டது என்ற விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இதில் 'தண்புனல் நன்நாட்டு' என்ற சொல்லானது புவியியலடிப்படையில் மத்திய கோட்டுக்கு அருகாயிருக்கும் ஈரவலயப் பகுதிக்கே பொருந்தும் என்பதனால் அவ்வாறு ஆய்வுக்குட்படுத்தியிருக்கவேண்டும்.

பஃறுளி என்று அழைக்கப்படும் ஆறுக்கும் குமரி என்றழைக்கப்படும் ஆற்றுக்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த 49 நாடும் குமரி கொல்லம் என்ற மலை நாடுகளையும் குமரியென்ற நதி ஊற்றெடுக்கும் வடபெரும் மலை வரையில் கடல் கொண்டது என்பதனை இங்கு குறிப்பிடப்பட்டிருந்தது. பல குமரிக்கண்ட ஆய்வாளர்களினால் குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்குமிடையில் 700 காத தூரமென்றும் ஒருகாதம் 5 முதல் 10 கி.மீ என்பதால் குமரியாற்றிலிருந்து 7,000 கிமீ அப்பாலும் குமரிக்கண்டம் நீண்டிருந்தது என்ற துணிபுக்குக் காரணமாயிருந்தது. ஆத்துடன் அவுஸ்திரேலியா மடகஸ்கார் தென்இந்தியா என பெருமுக்கோண வடிவத்தில் குமரிக்கண்டத்தின் வரைபடம் வரையப்பட்டு அதில் 49 நாடுகளும் மலைகளும் தென்பாலி கொல்லம் மாவலந்தண்பொழில் ஆகிய தென்னாடுகளும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இலக்கிய ஆதாரங்களைப் போலக் கடல் சார்ந்த ஆதாரங்களும் குமரிக்கண்ட ஆய்வுகளுக்கு இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

(தொடரும்)



kanapathipillai.a@thaiveedu.com

# BUY & SELL HOMES, BUSINESS, LANDS..

PROFIT FROM MY EXPERIENCE, LISITNG.. 1% COMMISSION



**Pat Pushpakanthan**

Full Time Broker

**416.894.1187**

Century 21 Brokerage

AFFILIATE REALTY INC
80 Corporate Dr #208
Toronto
416-290-1200

nhome2025@gmail.com VISIT.. PATPUSH.COM
















Brand new from builder
Oshawa. $764K

- Call for FREE Market Evaluation!
- FREE Home Staging*
- Spectacular Video
- Extensive Advertising
- Elaborate Marketing Professional Photography




CALL PAT for professional service
We helped many buyers and sellers to buy and sell homes in your area

- Sell in 10 days Program
- 100% Satisfaction.
- Pat Will Beat Any Deal
- Pat Help For Mortgages from 1.99%,
- New Home build & Home Renovation




Warden/
st.clair
3 Bedroom
3 Washroom
steps to
subway




CALL PAT FOR
VVIP
Platinum
ACCESS

RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1800.00, $2150
HOUSES RENTAL 2 bm 2wsrm $1700/-
Lee Centre Dr. 1+den 1950/-
CALL ME
416-894-1187

Each office individually owned & operated *individual performance Not intended to solicit existing listing

# கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

## நல்ல செய்தி

### எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

## இலவச ஆலோசனை பெற

**JANNET FINANCIAL SERVICES INC.**

**Ms. Jennet Sam & Mr. Stalin Dominic**

Tel: **647-894-3876**

FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க



# கண்ணகி காற்சிலம்புக்காகக் காவு கொள்ளப்பட்ட ஈழப் பேரரசு!

- மா. சித்திவிநாயகம் -

புனிதம் நிறை பூம்புகார்த் திருநகராம் சோழ நாட்டிலே பிறந்து, பாண்டிய நாட்டிலே அரசியல்புரட்சி செய்து, சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித் தெய்யோ என்றும், தமிழர் மத்தியில் கண்ணகி அம்மனாகவும் மிளிர்பவள். ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றுள் அதி உன்னத காவியமாக சர்வமதங்களின் சமரச இலக்கியமாக விளங்குகின்ற சிலப்பதிகாரத்தின் பாட்டுடைத் தலைவி அவள். சமணர்களுக்கும், இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் பத்தினிக்கடவுளாக நிற்கின்ற அருளுடைச் சக்திதான் கண்ணகி. இந்தப் பெருமைக்குரிய நாயகியின் கதை துயரம் நிறைந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் மரபில் உதித்த கண்ணகியும் கோவலனும் மணம்புரிகின்றார்கள். பின் கோவலனுக்கு மாதவியிடம் காதல் ஏற்படுகிறது. செல்வத்தை இழந்தான். பிறகு கோவலனும் கண்ணகியும் மதுரை சென்றார்கள். அங்கு திருடனென பொய்ப்பழி சுமத்தப்பட்டு கோவலன் கொலையுண்டான். அதனால் சினம் கொண்ட அவன் மனைவி கண்ணகி நீதிதவறிய பாண்டியமன்னனிடம் நீதி கேட்டுப்போராடி மன்னனை அழித்து மதுரையை தீக்கிரையாக்கி பின் சேர நாட்டில் வானுலகடைந்த வரலாற்றைப் பேசுகிற காப்பியம் அது.

சேர நாட்டு எல்லையிலே தேவர்கள் புடைசூழ இறந்த கோவலன் வானின்று இறங்கி மாதரசி கண்ணகியை மறுபடி மணம் செய்து வானுலகு அழைத்துச் சென்றதனைக் கண்டவர்கள் குன்றக்குறவர்கள். அவர்கள் கண்ணால் கண்டதை மன்னன் சேரன் செங்குட்டுவனுக்குச் சொன்னார்கள். குன்றக்குறவர்கள் சொன்ன செய்தியை மன்னனுடன் கூட இருந்து கேட்டஅவனது தம்பி முத்தமிழ்ப் புலமையுடைய வித்தகப் பெருமானாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட காப்பியம் தான் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பல்லோராலும் பாராட்டப்படுகிறது.

‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’

‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்’

‘ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்’

என்னும் அறநெறிக் கருத்துக்களை அப்படியே மெய்பித்துக் காட்டிய அற்புதம் இது. சேரன்செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து, கங்கையில் நீராட்டி, அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து, தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான். இந்த விழாவிற்கு ‘குடகக்கொங்கரும், மாளுவவேந்தனும் கடல் சூழிலங்கைக் கஜவாகு வேந்தனும்’ வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது. மகாவம்சம் கஜவாகு காலத்தை கி.பி 2.ம் நூற்றாண்டு என வரையறுக்கிறது. அதாவது கி.பி. 2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி பல சிங்கள இலக்கிய நூல்கள் அதனைப் பதிவிட முனைகின்றன. ராஜாவலிய, ராஜரத்தினாகார, பத்தினிக்கத்தாவ முதலிய சிங்கள நூல்கள் சொல்ல வருவது கஜபாகுவால் பத்தினி தெய்யோ வழிபாடு கொண்டுவரப்பட்டது என்கின்ற செய்தியைத்தான். இன்று கிழக்கிலும் வடக்கிலுமாக பல நூற்றுக்கணக்கான கண்ணகை அம்மன் ஆலயங்கள் இருக்கின்ற போதிலும் ஆதி முதல் ஆலயம் எங்கு எப்போது கஜபாகுவால் கட்டப்பட்டது என்பது தொடர்பில் இன்னமும் தெளிவில்லை.

கஜபாகு வேந்தன்தான் இலங்கையில் முதன் முதலில் கண்ணகிக்கு கோயில் எழுப்பினான் என்பதில் மிகுந்த ஐயப்பாடு இருப்பதாக அறிவியலாளர்கள் கூறிவருகின்றார்கள். இதனை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் ‘வன்னிப்பிரதேச நாட்டாரிசையில் கண்ணகி வழிபாடு’ என்கின்ற ஆய்வொன்றில் (தமிழோசை) பின்வருமாறு பதிவு செய்திருந்தார். ‘ஈழத்தில் கண்ணகி வழிபாட்டை கஜபாகு மன்னன் சிறப்புச் செய்தானேயன்றி அறிமுகப்படுத்தியவனாகான்’ என்கின்ற அவரின் ஆணித்தரமான கருத்து முக்கியமானதொன்று. பல ஆதாரங்களை முன்வைத்து கஜபாகுவிற்கு முன்னரே கண்ணகி வழிபாடிருந்தது என்பதை அதில் அவர் மெய்ப்பித்திருந்தார்

சாதாரண குடிப்பிறந்த கண்ணகி என்ற வணிகர் குலப்பெண் ஒட்டுமொத்தத் தமிழ்ப் பெண் இனத்தின் அடையாளமாகி, வீரக் குடியினைச்சேர்ந்த பாண்டிய மன்னனின் ஆட்சியையே வீழ்த்துகிறாள். மற்றொரு சேரப் பேரரசனால் கோயில் எடுத்து வழிபடத்தக்க பத்தினித் தெய்வமாக உயர்கிறாள். கடல்சூழிலங்கை கஜபாகு மன்னனால் ‘பத்தினித்தெய்யோ’ என்று பெரகரா விழா எடுத்துப் பரவசம் ஆக்கப்படுகின்றாள் என்கின்ற செய்திகள் உன்னதமானது. இரண்டாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த கண்ணகி கோயிலைக் கண்டு பிடித்து, இவ்வுலகிற்கு அறிவித்த பெருமைக்கு உரியவர் தஞ்சையின் கரந்தை தமிழ்ப் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்களாவார். சிலப்பதிகாரம் கூறும் அடிச்சுவட்டில் கண்ணகி பயணித்த பாதை வழியே பயணித்து, கடும் முயற்சியின் பயனாக மங்கலாதேவி கண்ணகி கோயிலை இடிபாடுகளுக்கடையே கண்டு பிடித்த ஆய்வாளர் இவர். இவரது ஆய்வின் மூலம் கண்ணகி பயணித்த பாதை சிலப்பதிகாரம் பேசுவதைப் போன்று பூம்புகாரில் தொடங்கி சேர நாட்டோடு நின்றுவிட்டதென்றே கருத இடமளிக்கிறது.



ஆனால், இலங்கையின் கண்ணகி பக்தர்கள் அவள் இலங்கைக்கு வந்தாளென்றும், கந்தரோடைக்கருகில் அங்கணாமைக் கடவையில் தொடங்கிய இவளது கதிர்காம யாத்திரை பத்தாவது தரிப்பிடமான பத்தாம்பளை அதாவது இன்றைய வற்றாப்பளையில் தரித்து ஓய்வெடுத்த பின் தொடர்ந்தாளென்றும், அவள் தங்கிய இடமெங்கும் கண்ணகிக்கு கோவில் எழுப்பினார்களென்றும் சொல்லி வருகின்றார்கள். இன்னும் சிலர், மதுரையை எரித்த கண்ணகி சினத்துடன் தென்பகுதியூடாக இலங்கை வந்து வன்னியின் முல்லைத் தீவிலுள்ள வற்றாப்பளை எனுமிடத்தில் குளிர்ந்து சீற்றம் தணிந்ததாக கூறுகின்றார்கள். அவள் ஐந்து தலை நாகமாக உருமாறி வந்ததாகவும் பல கதைகள் உண்டு.

சிலம்புக்காதை பற்றிய பாடல்களை மட்டக்களப்பிலே கண்ணகி வழக்குரை என்றும், திருமலையிலே கோவலன் காதை என்றும், வவுனியாவிலே சிலம்பு கூறல் என்றும் பாடிவருகின்றார்கள். கிழக்கில் காலங்காலமாக வணங்கப்பட்டுவரும் காளி, துர்க்கை, மாரி, பேச்சி முதலிய பெண் தெய்வ வழிபாடுகளில் இறுதியாக வந்து உதித்த தெய்வமாக கண்ணகி எனும் கண்ணகை அம்மன் போற்றப்படுகின்றாள். வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டி தொட்டியெல்லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசையெழுப்ப கண்ணகிக்கான வைகாசிப் பொங்கல் நடைபெறுவது பெருவழக்காய் நிலைத்துவிட்டது.

கண்ணகி பற்றியதான இத்தேடலை தாய் வீட்டில் ஏற்படுத்தியுள்ளமைக்கு அடிப்படைக் காரணம் இலங்கையின் கண்ணகி வழக்குரையில் போற்றப்படுகிற பல பாத்திரங்கள் சிலப்பதிகாரத்தில் இல்லை என்கின்ற ஆதங்கம் தான்.

கண்ணகியின் காற்சிலம்பிற்காக நாக மணிகளை பெறுவதற்காக சோழ நாட்டிலிருந்து அனுப்பப்படுகிறது பெரும் கப்பல் படை. இதன் தலைவனாக மீகாமன் விளங்குகின்றான். இவ்வேளை ஈழ நாட்டின் வட

*தொடர்தல் 93ம் பக்கம்*

# கண்ணகி காற்சிலம்...

92ம் பக்கத் தொடர்ச்சி...

பகுதியை மாவீரன் வெடியரசனும் அவனது தம்பியர்களும் அரசாளுகின்றார்கள். நெடுந்தீவு, நயினாதீவு, காரைதீவு, தொல்புரம். ஆனக்கோட்டை, திருவடிநிலை, கீரிமலை, மயிலிட்டி, என அவர்களது நிர்வாகக் கோட்டைகளும் அரண்களும் பரந்து விரிந்தது. விஷ்ணுவின் மறு அவதாரமாக 'விஷ்ணு புத்ர வெடியரசன்' என்று போற்றப்பட்டவன் வெடியரசன்.

வெடியரசனது ஆட்சிப்பரப்பு, நெடுந்தீவிலிருந்த அவனது அற்புதக் கோட்டை, அவனது வீரதீரப்பிரதாபங்கள், படை வலிமை முதலிய விடயங்களை, கண்ணகி வழக்குரைப் பாடல்கள் மிக அழகாகப் பேசுகின்றன. வெடியரசனுக்காக தங்கள் உயிரையும் கொடுக்கின்ற பாசமும் வீரமும்பொருந்திய தம்பிகளான வீர நாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் ஆகியோர் கண்ணகியின் பொருட்டு மாணிக்கம் பெற வந்த மீகாமனுடன் நடத்திய கடற்போர்கள் பற்றிய முழு விபரங்களையும் கண்ணகி வழக்குரை காலம்காலமாக மட்டக்களப்பு மண்ணில் போதித்தபடியே உள்ளது.

*'தோன்றுமிந்தக் கனகிரிமேற்*
*துய்யநவ ரெத்தினமும்*
*வான்றோயும் மண்டபமும்*
*மாஞ்சோலைப் பூங்காவும்*
*விண்ணுயரந்த கோட்டைகளும்*
*இரண்டருகு கிடங்குகளும்'*

மூன்றுலகும் புகழ்படைத்த மிகப்புகழ் பூத்த பேரரசனாக வெடியரசன் புகழப்படுகின்றான். இப் பெருவீரனுடன் பெரும் கடற்சமரை சோழப் பேரரசு பொன்னும், மணியும், பொருள்களையும் சூறையிடுவதற்காகவே முடுக்கி விட்டிருந்தது. வடக்கின் மிகப் பலம் பொருந்திய கடலரசனாக வர்ணிக்கப் பட்ட வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் இடையே நடந்த போரிலே இறுதிக்கட்டத்தில் வெடியரசன் படையை வெல்லமுடியாத மீகாமன் கண்ணகியின் வரம்பெற்று மாயச்சதி செய்தான் என்கிறது கண்ணகிவழக்குரை. இந்நிலையில் அண்ணனைக் காப்பாற்ற தன் உயிர் கொடுத்து மாய்ந்தான் வெனியரசனின் அன்புத் தம்பியான வீரநாராயணன். தோற்கும் நிலை ஏற்பட்டபோதும் தன்குலப்பெருமை காப்பதற்காக உயிரையும் விடத் துணிந்து போரிடும் வீரனாக வெடியரசன் காட்டப்படுகிறான். இது இராமாயண மகாபாரதப் போர்களுக்கு நிகரான அதிசயிக்கத்தக்க போர். இந்தப்போரில் மீகாமன் சதியால் வெடியரசன் சிறைப்படுத்தப்படுகின்றான். இதைக் கேள்வியுற்ற வெடியரசன் மனைவி நீலகேசி ஆற்றாமையோடு தலைவிரி கோலமாக நெடுந்தீவின் வெட்டுக்கழிக்கப்பால் விரிந்தமணற் திடலில் விழுந்து புலம்புகின்றாள்.

*'வீரமுள்ள செருச்சிங்கமே வெடியரசே*
*யென்கணவா நேராகப் போர்செயாமல்*
*நெட்டுரஞ்செய்தானே'*

என்று வீகாமன் புரிந்த சதியால் வீழ்ந்து கிடக்கிற வெடியரசன் கதி குறித்து விம்மியழுகின்றாள் அந்த ஈழத்துப் பேரரசி. இந்தப் பெருந்துயரை எந்தச் சோழனும் கண்டு கொள்ளவில்லை இவளிற்கான நீதியை எந்த அறம் பேசும் நீதவானும் இதுவரை பேசியதாய் அறியவில்லை. ஏன், நீதி தேவதையான கண்ணகியும் ஆசிரியப் பாக்களில் இரட்டைக்காப்பியங்கள் எழுதவல்ல சீத்தலைச்சாத்தனும், இளங்கோவும் கூடப் பேசாது விட்ட பெருங்கொடுமை. வெடியரசனிடம் போர் செய்து தோற்றுப் போகின்ற ஒவ்வொரு தடவையும் கண்ணகியைப் பிரார்த்தித்துத் தான் வெற்றி கொள்வதாக வீரம் பேசுகின்றான் மீகாமன். நீதிக்குப் புறம்பான இந்தப் போர் வேண்டுமென்றே வலிந்து திணிக்கப்பட்ட போர். நாகமணியை கண்ணகி காற்சிலம்பிற்காக கவர்ந்தெடுக்க நிகழ்த்திய வஞ்சப்போர். அதனால் தான் ஈழத்துப்பேரரசி நீலகேசி 'பாரிலிது திற லோவென்று' பரிதவித்து அழுகின்றாள் (பா.124) பாண்டியன் நெடுஞ்செழியனை நீதி கேட்டு மதுரையை எரித்த வீரக் கண்ணகி தோற்றுப் போய்க்கிடப்பது வெடியரசன் கோட்டை கட்டி ஆண்ட இந்த நெடுந்தீவு மண்ணில்தான்.

சிலப்பதிகாரத்தைக் குடிமக்கள் காப்பிய மென்று தெ.பொ. மீனாட்சிசுந்தரம் போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டதுண்டு. அரச குலத்தவர் அல்லாதவர்களைத் தலைமக்களாகக் கொண்ட காப்பியமாதலால் அதனைக் குடிமக்கள் காப்பியம் என்று வரையறுப்பர். ஆனாலும், சோழப்பேரரசனே பெரும் படை அனுப்பி கண்ணகி காற்சிலம்பிற்கு மணியெடுக்கின்றான் என்றால் இதனை குடிமக்கள் காப்பியம் என்று எவ்வாறு வகைப்படுத்துவது? ஈழத்தின் மணிப்பரலின் சாட்சியால்த்தான் கண்ணகியும் சிலப்பதிகாரமும் மகிமைப்பட்டது என்பது மூடி மறைக்கப்பட்டகதை.

காற்சிலம்பிற்கு மணி எடுக்க வந்தோரால் மாட்சிமை பொருந்திய ஈழ அரசு வஞ்சித் தெறியப்பட்ட இக்கதை பேசப்படாத அல்லது எவரும் பேச விரும்பாத பெருங் கதை. தங்களைக் கொன்ற, கொல்கின்ற, கொலையாளிகளையே கடவுளாக, அரசனாக, ஜனாதிபதிகளாக, தலைவர்களாகக் கொண்டாடி மகிழ்கிற பயபக்தி (பயத்தினால் உருவாகிற பக்தி)தான் நம்முடைய வாழ்வு. ஈழத்து அப்பாவிகளின் வாழ்வை அவலமாக்கி திசையனைத்தும் ஓட வைத்த பெருங் கதை இது. இப்படி ஓடிய வெடியரசன் வாரிசுகள் பழுகாமத்தில் நெடுந்தீவார் என்றே இன்றும் வாழ்கின்றார்கள். இத்தனைக்குப் பிறகும் இன்றளவிலும் பத்தினிப் பெருந்தெய்வமாகப் தமிழர் வாழ்வில் நின்று நிலைத்தவள் கண்ணகி. இன்றைக்கும் பத்தினி யார் என்று கேட்டால் பெற்ற தாயை, கட்டிய மனைவியை, கூட வளர்ந்த சகோதரியை, உதாரணத்திற்கு கூடச்சொல்லுவதில்லை நாம். கற்புக்கு இலக்கணமாக அறிந்த, தெரிந்த, கூடப் படித்த, கூடப்பழகிய, சிநேகிதிகளைக் கூட சொல்வதில்லை நாம். தான் செய்தது தவறென்றுணர்ந்து மதுரை மன்னன் நெடுஞ்செழியனும் கோப்பெருந் தேவியும் இறந்து போன பின்பும் மதுரையை எரித்தழித்த கண்ணகி மட்டுமே நமக்கு கற்புக்கரசி எனில் ஈழத்து வெடியரசனைக் கைதாக்கி அவன் தம்பியைத் தாக்கியழித்த போது அழுது புலம்பிய நீலகேசி பத்தினி இல்லையா? அவளின் கண்ணீர் எந்தச் சோழ மண்டலத்தை எரிக்கும்?? இந்தியப் பெருந்தேசத்தில் தனது வலிமை மிக்க கடற்படையால் தென்னாசியாவையே ஆளுகைக்குட்படுத்தியவர்களாகப் போற்றப்படுகிற சோழ பேரரசிற்கு இணையாக ஈழத்திலும் கடற்படை வைத்து வடபுலத்தை ஆண்ட பெருமன்னனாக வெடியரசன் விளங்கினான் என்பதை கண்ணகி வழக்குரை காட்டி நிற்கிறது. நம்மிடையே உள்ள தொன்மை மீட்கும் சாதனங்களாக வையா பாடல்கள், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை, மட்டக்களப்புமான்மியம், கோணேசர்கல்வெட்டு, கைலாசபுராணம், செகராச சேகர மாலை என்று பலவற்றைகூறலாம். அவற்றில் பல சாதியத்தைப் பேசுமளவிற்கு சரித்திரத்தைப் பேசுவனவாக வில்லை. கண்ணகி வழக்குரையை செய வீரன் எனப்படும் சிங்கை செகராச சேகரன் என்பவர் எழுதியதாகச் சொல்கின்றார்கள்.

எது எப்படியோ சமணக் கன்னிகையான பௌத்த பத்தினி எவ்வாறு சைவக் கண்ணகியானாள் என்பது தான் எவருக்கும் புரியாத பெரும் புதிர்.



*sithivinayagam@thaiveedu.com*


வீடு வாங்க விற்க




South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished




Markham/McNicoll
Commercial Condo



Kuga Raveendrarajah
Real Estate Broker
Dir. 416-843-8585

HOMELIFE HIGHER STANDARDS



Mathan Selvendarakumaran
Sales Representative
Dir: 416-625-2870

MLS MULTIPLE LISTING SERVICE



Shajetha (Suzy) Sabanathan B.Sc.
Sales Representative
Cell: 416-298-3200

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு
Bus: 416-298-3200
*Independently Owned and Operated, Realtor

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான **RE/MAX** முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY
Each office is independently owned and operated.

கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த



2 Story House for Sale
in Jaffna Town
Land Size - 20 Perch
**LKR 29,000,000 CAD $ 204,584**



Commercial property for rent or lease in a prime location
Size - 3,200 sqft
**LKR 450,000 CAD $ 3,257**



House for sale in Kondavil
Land size – 10.6 Perch
**LKR 18,000,000 CAD $ 130,617**



House for sale in Soorawathai Chunnakam
Land Size – 20 Perch
**LKR 4,500,000 CAD $ 32,158**




House For Sale
in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch
**LKR 4,700,000**



House for Sale in walls Lane,
Mattakuliya Colombo 15
Land Size - 1.8 perch House - 400 sqft
**LKR 3,400,000 CAD $ 24,563**



House with land for sale
in Ilavalai
Land size – 35 Perch
**LKR 3,800,000 CAD $ 27,385**



Land for Sale in Irupalai
Junction, Jaffna
Total Land Size - 80 Perch
**LKR 18,500, 000 CAD $ 132,134**



Land for sale in Kanagar village,
Pottuvil
Land Size - 732 Perch
**LKR 10,000,000 CAD $ 70,877**



Land for Sale in Kankesanthurai
Land size - 69.5 Perch
**LKR 27,800,000 CAD $ 195,455**




House For Sale
in Urumpirai West
Land size - 41.9 Perch
**LKR 5,500,000**



Land for sale in Puttur road,
Chunnakam
Land Size - 42.5 Perch
**LKR 5,000,000 CAD $ 36,122**



Land for sale in Thavady,
Kokkuvil West
Land size - 15 Perch 0.5 Kulli
**LKR 6,500,000 CAD $ 46,276**



Land for sale in Kankesanthurai
Land size - 6.7 Perch
**LKR 2,900,000 CAD $ 20,951**



Road facing Land for sale
in Thellipalai
Land size - 60 Perch
**LKR 6,600,000 CAD $ 47,682**



Spacious Land for sale in
Meesalai South, Meesalai.
Total Land Size - 45 Larchams
**LKR 18,900,000 CAD $ 128,540**



House For Sale in Varany,
Kodikamam
Land Size - 20 Perch
**LKR 2,000,000 CAD $ 14,396**



Land for sale in Vasavilan
Land Size - 500 Perch
**LKR 15,000,000 CAD $ 107,038**



Beach Side Land for sale in Pothuvil
(Sangamam Village, Thirukovil)
Land Size - 01 Acre
**LKR 15,000,000 CAD $ 109,025**




Land For Sale in Kaithady
Land Size - 38 Perch
**LKR 1,360,000**



Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk



Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

**+94 77 566 0000 • +94 21 468 0780**
**www.remaxnorth.lk**
**111C Kannathiddy Road,**
**Jaffna, Sri Lanka**



Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk



Thusanth Pooranachandran
Real Estate Representative
+94 77 221 5740
thusanth@remaxnorth.lk

# உலகப் பேரரசுகள்:

# எழுந்த சாதனைகளும் வீழ்ந்த வேதனைகளும்

- நிமால் நாகராஜா -

இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆபிரிக்க காடுகளில் அலைந்து திரிந்த எங்கள் எள்ளுப் பாட்டனின், கொள்ளுப் பாட்டனுக்கு முந்திய ஏதாவதொரு பாட்டனான ஹோமோ ஸேபிய மனிதனுக்கு வேட்டை தான் விருப்பமான விளையாட்டு. அவர்களது மெனு கார்ட்டில் ஏகப்பட்ட மிருகங்கள் இருந்ததால், விருந்துக்கு எந்நாளும் குறைவிருக்கவில்லை. ஆனாலும், பச்சைப் பசேலென்ற ஆபிரிக்க கண்டத்தை பெரும் வரட்சி தாக்கிய போது, நிலைமை மோசமாகிப் போய் விட்டது. உணவு தேடி ஓடுகின்ற மிருகங்களை பின் தொடர்ந்து கொண்டு எங்கள் மூதாதையர்களும் இடம் பெயர வேண்டியதாயிற்று. இது நடந்தது ஏறத்தாழ அறுபதினாயிரம் வருடங்களுக்கு முன்பு.

ஆபிரிக்க கண்டத்திலிருந்து எல்லாத் திசைகளிலும் நடக்கத் தொடங்கிய மனிதனை விசா கேட்டு வழிமறிக்க எந்த ஒரு நாட்டு எல்லையிலும் குடிவரவு அதிகாரியும் இருக்கவில்லை, கோட்டை மதில் சுவர்களும் இருக்கவில்லை. எம் முன்னோர் கைகளை வீசிக்கொண்டு கம்பீரமாக கண்டம், கண்டமாக கால் பதிக்கத் தொடங்கினர்.

நீண்ட நெடுங்காலம் நிலங்களை வெற்றி கொண்டபடி நடந்து கொண்டேயிருந்த மனிதனுக்கு அந்த நேரம் மண் ஆசையும் இருக்கவில்லை, பொன் ஆசையும் இருக்கவில்லை. ஆனாலும் பெண் ஆசை கட்டாயம் இருந்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் அப்போது வெறும் சில ஆயிரங்களாக இருந்த மனித சனத்தொகை இன்று எண்ணூறு கோடிகளாக மாறியிருக்காது.

காலம் ஓடியது.

நாடோடி வாழ்க்கை மனிதனுக்கு அலுத்திருக்க வேண்டும். ஓரிடத்தில் தங்க அவன் யோசித்த காலம் பதினோராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. தங்கிய இடம் தற்போதைய பலஸ்தீனத்திற்கு அண்மை லிருந்த ஜெரீகோ என்ற இடம். அது தான் மனிதக் குடியிருப்பு தொடங்கிய முதல் இடம்.

ஜெரீகோவில் தொடங்கிய குடியிருப்புகளை தொடர்ந்து பூமியின் பல பாகங்களிலும் பெரும் நாகரீகங்கள் தோன்றத் தொடங்கின. கொஞ்ச வேட்டை, கொஞ்ச விவசாயம், கொஞ்ச கால்நடை வளர்ப்பு என்று மனித இனத்தின் வாழ்வு முறை மெதுவாக மாறத் தொடங்கியது.

யூபிரடிஸ், டைகிரிஸ் நதிகளுக்கிடையே பரந்து விரிந்திருந்த மெசப்படோமிய பிரதேசத்தில் (தற்போதைய ஈராக், ஈரான்) அப்போது ஏகப்பட்ட ஊர்கள், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அரசர்கள். மெசப்படோமியாவின் தெற்குப் பகுதியில் சுமேரியா இருந்தது. வடக்குப் பக்கத்தில் தான் பின்னாட்களில் புகழ் பெறப் போகும் பாபிலோனியா இருந்தது.

தற்போதைய ஈராக்கினை சுற்றியுள்ள பிரதேசங்களில் பரவிய சுமேரிய நாகரீகம் சற்று முன்னோக்கி பாயத் தொடங்கியது.

முதன் முதலாக எழுதக் கண்டுபிடித்தவர்கள் சுமேரியர்களே. சக்கரங்களை கண்டுபிடித்தவர்களும் சாட்சாத் அவர்களே தான். மட்பாண்டங்கள் செய்வதற்காகவே சக்கரங்கள் முதலில் பயன்படுத்தப்பட்டன. பின்னர் தான் அவைகளை தேர்ச்சில்லுகளாகவும் பாவிக்கலாம் என்ற யோசனை வந்தது. சக்கரங்கள் இல்லையென்றால் சாதாரண வேலை கூட செய்ய முடியாத நிலமையில் நாம் இப்போது இருக்கிறோம்.

நாலாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னர், சுமேரியாவில் பெரும் வீரன்



ஒருவன் தோன்றினான். அவனது பெயர் ஸர்கான். அவன் ஒன்றும் அரச பரம்பரையில் வந்தவன் கிடையாது. உண்மையை சொல்லப் போனால் அவன் அங்கீகரிக்கப்படாத உறவு ஒன்றில் பிறந்தவன். மகாபாரத கர்ணனைப் போலவே, பழிச்சொல்லுக்கு பயந்த தாயினால், கூடை ஒன்றில் ஆற்றினுள் தள்ளப்பட்டவன். தோட்டக்காரன் ஒருவனால் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவன்.

தனது அளப்பரிய வீரத்தாலும், அற்புதமான நிர்வாக திறமையாலும் 'அக்காட்' என அழைக்கப்பட்ட பெரும் சாம்ராஜ்ஜியத்தை ஸர்கான் ஸ்தாபித்தான். மெசப்படோமிய பிரதேசத்தை தாண்டியும் அவனது ஆட்சி அகல விரிந்தது.

இதுவே மனித வரலாற்றில் முதன் முதல் தோன்றிய சாம்ராஜ்ஜியம். பின்னால் வந்த அலெக்ஸாண்டர், சீசர், அசோகர், ராஜ ராஜ சோழன் போன்ற அத்தனை பேரரசர்களுக்கும் ஸர்கானே முன்னோடி.

ஸர்கானின் ஆட்சியில் கலை, கட்டடக் கலை, விவசாயம் பெரிதும் வளர்ந்தன. களிமண் தட்டுகளில் ஸர்கான் எழுதிய சுய சரிதையை, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தொலைதூர நாடுகளுடனான வணிகமும் நிறையவே வளர்ந்தது. இந்தியா வரை இவனது கப்பல்கள் வந்து சென்றன.

ஸர்கானின் மகள் என்கெடுனா தான் உலகத்தில் இதுவரை அறியப்பட்ட முதலாவது எழுத்தாளர், முதல் கவிதாயினி. சுமேரிய கடவுள்களை போற்றி நிறைய அற்புதமான பாடல்களை இவள் பாடியிருக்கிறாள். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவள் இயற்றிய கவிதைகளின் வடிவிலேயே இன்றும் கவிதைகள் இயற்றப்படுவது ஓர் அதிசயம்.

ஐம்பத்தாறு வருடங்களாக கட்டுக்கோப்பாக ஆட்சி நடத்திய ஸர்கானின் பெருமை, அவனது இறப்புக்கு பின்னர் கூட பல நூற்றாண்டுகளாக பல்வேறு இலக்கியங்களில் பேசப்பட்டது.

ஸர்கான் இறந்த பின்னாடி அவனது மகன்கள் சாம்ராஜ்ஜியத்தினை ஆண்ட போதும், அவனது பேரன் நரம்சின்னின் காலத்தில் தான் 'அக்காட்' தன் உச்சத்தை தொட்டது. நரம்சின் இறப்புக்கு பின்னர், சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகியது.

இருநூறு ஆண்டுகள் நிலைத்திருந்த உலகின் முதலாவது சாம்ராஜ்ஜியம் கி.மு 2154ம் ஆண்டு முற்றாக அழிந்து போயிற்று.

உலகின் முதலாவது சாம்ராஜ்ஜியத்தின் பின்னர், சரித்திரம் மிகப்பெரிய பேரரசுகளை சந்தித்திருக்கிறது. எகிப்திய ராஜ்ஜியம் எல்லைகள் தாண்டி விரிந்தது, ரோமப் பேரரசு இந்தியா வரை வந்தது. மௌரிய சாம்ராஜ்ஜியம் வட இந்தியாவில் வெற்றிக் கொடி நாட்டியது. சோழப் பேரரசு தென்னாசியாவில் கடற்படையோடு கம்பீரம் காட்டியது. மொங்கோலிய ராஜ்ஜியம் மத்திய ஆசியாவை நடு நடுங்க வைத்தது. மொகலாய பேரரசு இந்தியாவை தன் காலடிக்குள் வைத்தது. இறுதியாக சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் உலகத்தையே தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தது.

பேரரசுகள் வெறுமனே உருவாகி விடவில்லை. பெரும் வீரர்கள் அதன் பேரெழுச்சியின் பின் பலமாக இருந்தார்கள். யூலியஸ் சீசரும், அலெக்ஸான்டரும், சந்திரகுப்தனும், ராஜராஜ சோழனும், ஜெங்கிஸ்கானும், மொகலாய பாபரும் பட்டுக் கம்பளத்தில் ஏறி வந்து சிம்மாசனத்தில் அமரவில்லை. கடுமையான வீரப் போராட்டங்களின் பின்பே அவர்கள் புகழின் உச்சியை அடைந்தார்கள்.

வரலாற்றில் வீரப்புருஷர்களை தாண்டியும் விசர் பிடித்த பேரரசர்களும் இருந்தார்கள். காமவெறி பிடித்தலைந்த ரோம பேரரசன் கலிகூலாவும், ரோம் எரியும் நேரத்தில் பிடில் வாசித்தவன் என வரலாற்றில் இகழப்படும் நீரோவும், முட்டாள்தனமாக, இமய மலையை தாண்டி சீனாவை கைப்பற்ற படையனுப்பி சின்னாபின்னமான மொகலாய துக்ளக்கும், கொலைவெறி பிடித்த தைமூரும் மக்களை வாட்டி வதைத்த கதைகளையும் வரலாறு கண்டிருக்கிறது.

வாருங்கள், இந்த தொடரில் மனித வரலாறு கண்ட மகத்தான சாம்ராஜ்ஜியங்களை, அவற்றை கட்டியெழுப்பிய காவிய புருஷர்களை, சரித்திரம் கண்ட பெரும் போர்களை, அதில் வீழ்ந்து போன சாமான்ய போர் வீரர்களை, குருதி சிந்திய குடிமக்களை, விரிந்த பேரரசுகள் வீழ்ந்து நொறுங்கிய வேதனைக் கதைகளை பார்ப்போம். கடந்த நம் சரித்திரத்தின் பக்கங்களில் காலடி வைத்து நடப்போம்.

nimal.nagaraj@thaiveedu.com



# சொல்லில் மறைந்தவள்

**- தேவகாந்தன் -**



யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்திலிருந்து 2000இல் வெளியேறி, அப்போது வெளிநாடுகளில் அகதிகளாகவும் குடியுரிமை பெற்றவர்களாகவும் வசித்தவர்களில் பன்னிரண்டு குடும்பங்கள் தமது ஐந்தாவது ஒன்றுகூடலுக்காக அந்த 2018 ஓகஸ்ற் 11 சனிக்கிழமை மாலை டென்மார்க்கிலுள்ள சிவநேசன் வீட்டில் கூடியிருந்தன. அதன் உறுபயன் அவர்களால் உணரப்பட்டதோ இல்லையோ, அந்த இடம் மட்டும் வெகு கலகலப்பிலும், மகிழ்ச்சியிலும் இருந்துகொண்டிருந்தது. வெடிச் சிரிப்பு, கிணுகிணுச் சிரிப்பென பலவகைச் சிரிப்புகளும் அங்கே பொங்கிக்கொண்டிருந்தன.

இறுதி யுத்தத்தின் உடனடிப் பின்னாக இலங்கை சென்ற சர்வேஸ்வரன், பல்கலைக்கழகத்தில் தன்னுடன் படித்தவனும், அப்போது ஜேர்மனியில் குடியிருந்தவனுமான மூனா. கனகசபையை கொழும்பு செட்டித் தெருவில் எதிர்பாராதவிதமாகச் சந்தித்தபோது நிகழ்த்திய உரையாடலில் தான் அந்த ஒன்றுகூடலுக்கான திட்டம் விழுந்தது. மூனா. கனகசபையும் அதை ஆதரிக்க, செட்டித்தெரு தேநீர்ச்சாலையொன்றில் அதற்கான நடைமுறைத் திட்டங்கள் உடனடியாக இருவரிடத்திலும் விரிவுபெற்றன.

சர்வேஸ்வரன் பிரான்சுக்கும், மூனா. கனகசபை ஜேர்மனிக்கும் திரும்பிய பின்னரும் ஆறு மாதங்களாயிற்று தம்மோடு படித்தவர்களைத் தொடர்புகொண்டு அத்திட்டத்தைக் காரிய சாத்தியமாக்க. அதுவொன்றும் உண்மையில் சுலபமான காரியமாக இருக்கவில்லை. மிகுந்த பிரயாசையில் போன் நம்பர்களை எடுத்துத் தொடர்பு கொண்டபோது, தமக்கெல்லாம் அந்த மாதிரி நேரத்தைச் செலவிட வாய்ப்பில்லையென பலபேர் வெளிப்படையாகவே அவர்களது மனம் சோரும்படி அந்தத் திட்டத்தைத் தட்டிக்கழித்தார்கள். மூனா. கனகசபை முற்றாகச் சோர்ந்துவிட்டபோது, சர்வேஸ்வரனே மூச்சாக நின்று 2011 ஓகஸ்ட் மாதம் பிரான்சில் ஐந்து நண்பர்களின் ஓர் ஒன்றுகூடலை ஏற்பாடுசெய்தான். அவர்களும் மனைவி பிள்ளைகள் சகிதம் வந்து தத்தம் உறவினர்களதோ நண்பர்களதோ வீட்டில் தங்கிக்கொண்டு மாலைகளில் சர்வேஸ்வரன் வீட்டில் நான்கு சந்திப்புகளைச் செய்தனர். மூனா. கனகசபையின் மகள் ரூபிணி பரத நாட்டியமாடி ஒன்றுகூடலின் முதல் கலை நிகழ்ச்சியை நிகழ்த்தியது அப்போதுதான்.

அடுத்த ஆண்டுச் சந்திப்பு மேலும் சில நண்பர்களின் அதிகரிப்போடு நோர்வேயில் நடந்தது. சர்வேஸ்வரன் எவ்வளவுதான் உற்சாகமாக அந்த ஒன்றுகூடல்களை ஒழுங்கமைக்க உழைத்திருந்தாலும் 2013 இல் ஒரு சந்திப்பை ஏற்பாடுசெய்ய முடியாதுபோனான். அதிலிருந்து இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சந்திப்பதென முடிவானது. அதன்படி 2014இல் லண்டனிலும், 2016இல் சுவிஸிலும் அவை நடைபெற்றன. டென்மார்க்கில் அப்போது நடந்து கொண்டிருக்கிற அந்தச் சந்திப்பு ஐந்தாவதாக இருந்தது. சிறியவர்களின் மிருதங்கம், வயலின், வீணையென இசைக் கருவிகளின் தனித்தனி வாசிப்பும் அந்த மாலைகளில் நடைபெற்றன. அடுத்தடுத்த ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக அடுத்த தலைமுறையினரின் கூடுதலான கலைப் பங்களிப்புடன் நடக்குமென்பதற்கு அவர்களிடத்தில் நம்பிக்கையையும் அது ஏற்படுத்தியது.

பிள்ளைகளும் பெண்களும் உள்ளே இரவுச் சாப்பாட்டு மும்முரத்திலிருக்க, ஆறு நண்பர்கள் தனியாக பின்புற புல்தரையில் உற்சாக பானம் அருந்திக்கொண்டு இருந்தனர். மூனா. கனகசபையென்ற பெயரின் விசித்திர அமைவை யாரோ குறிப்பிட, அதற்கான விளக்கத்தின் பின்னால் அங்கே தானா. கனகசபையின் பிரஸ்தாபம் வந்தது. தொடர்ந்து ஆனா. கனகசபையை யாரோ குறிப்பிட்டார்கள். அவன் அப்போது வெள்ளவத்தையில் ட்ரவல்ஸ் நடத்துவதான தகவலை வசீகரன் சொன்னான். பின் அவனே பல்கலை வளாகத்துச் சூழலில் குடியிருந்த அமரசுந்தரி ஆனா. கனகசபையின் ட்ரவல்ஸில் அப்போது வேலைசெய்கிற விபரத்தையும் தெரிவித்தான். உண்மையில், கூடப் படித்த அத்தனை பெண்களைவிடவும் ஓ.எல். படித்துவிட்டு வீட்டிலிருந்த அமரசுந்தரி அப்போது கம்பஸ் மாணவர்களுக்கிடையே பெரும் ஆதர்ஷம் பெற்றிருந்தாள். அதற்கு அவளது கனத்த தனங்களும், தடிப்பமான கீழுதடுமே காரணமென்று அவரவரும் தமக்கிஷ்டப்படி போதையில் வர்ணித்தனர்.

அவர்களது கொச்சையான ரசனை சர்வேஸ்வரனுக்குப் பிடிக்கவில்லை. அமரசுந்தரிக்கு அப்போது முப்பத்தைந்து வயதாவது இருக்கும், கல்யாணமாகி இரண்டொரு பிள்ளைகளுக்கு தாயாகவும் இருக்கக்கூடும், அவர்களது ரசனை அவளது நடத்தைமீதான கேள்வியாகவும் தொனிக்குமென எச்சரித்தும் அவர்களது உற்சாகம் நின்றுவிடவில்லை. அவ்வாறான ஒன்று கூடல்களை பண்பாட்டின் வேர்களைத் தேடுவதற்கும், அவற்றை தம் அடுத்த சந்ததியினரிடத்தில் கடத்துவதற்குமான நடவடிக்கையாக அவன் எப்போதும் கருதி வந்திருந்தான். ஆனாலும் பழைய நண்பர்களின் ஒன்றுகூடல் வேளைகளில் யாரையும் நேரடியாகப் பாதிக்காத அவ்வகைப் பேச்சுக்களை தடைசெய்துவிட முடிவதில்லை என்பதும் அவனுக்குத் தெரியும்.

அவன் தெளிவுகொண்டபோது ராஜலிங்கம் அந்தப் பேச்சுக்களை உதாசீனப்படுத்துவதுபோல் அடிக்கடி அங்காலே போய் சிகரெட் புகைத்தபடி நின்றுகொண்டிருந்தான்.

சர்வேஸ்வரன் அதை ஏற்கனவே கவனித்திருந்தான். அவ்வாறு மூன்றாவது முறை செய்கிறபோது அவனும் பின்னால் எழுந்து சென்றான். 'எல்லாம் கவனிச்சுக்கொண்டுதான் இருக்கிறன்' என்று மெல்ல பேச்சைத் துவக்கினான். 'நீயேன் எழும்பியெழும்பி இஞ்சால வந்து நிக்கிறாய்? அமரசுந்தரிபற்றிப் பேசுறது பிடிக்கேல்லையோ?'

தன் முன்னால் நின்றவனை ராஜலிங்கம் தீர்க்கமாய்ப் பார்த்தான். அந்த ஆர்வம் சிறிது எரிச்சலைக் கொடுத்தாலும், சர்வேஸ்வரனுக்குச் சொல்வதில் எந்தப் பாதிப்பும் வந்துவிடாதென அவனுக்குத் தெரியும். அவன் நீண்ட கால நண்பன் மட்டுமில்லை, தூரத்து உறவினனும். ஆனால் பிரச்சினை என்னவெனில், விஷயம் மிகவும் நுண்மையாக இருந்ததில் அதைப் புரிந்துகொள்ள சர்வேஸ்வரனால் முடியுமா என்பதுதான். ஒரு நுண்மையான மனவுணர்வு ஓர் அபவாதமாக உருமாறக்கூடிய அபாயம் அதில் இருக்கிறது. அது வொரு மனித சபலத்தின் பலஹீனமான ஒரு தருணத்தில் நினைவுகளுள் அடித்த அலைகள் மட்டுமே. அவை சம்பவங்களாக விரிவதன் முன்னால் ஒரு சொல்லில் அவிந்துபோய்விட்ட கனவுகளும், அதனால் அந்த விஷயத்தை மூடிவைத்துவிடுவதே சிலாக்கியமானதென எண்ணினான் ராஜலிங்கம்.

இரவுணவு முடிந்து பத்து மணிக்கு மேல் அவரவரும் தாங்கள் தங்கியிருந்த நண்பர்களதோ உறவினர்களதோ வீடுகளுக்குச் செல்ல, சிவநேசனும் படுக்க உள்ளே போனான். தான் படுக்க நேரமாகுமென்று சொல்லிவிட்டு ராஜலிங்கம் கூடத்துள் வந்த மர்ந்தான்.

அவன் யோசிக்க நிறைய இருந்தது. அமரசுந்தரியை ஒருமுறை யோசிக்கலாம். கூட, ஆனா. கனகசபையையும் கொஞ்சம். சபலத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான வெளி ஒரு விந்தையால்போல் கடக்கப்பட்டதையும் அவன் எண்ணவேண்டும். ஒழுக்கத்திலிருந்து ஆசைக்கும், ஆசையிலிருந்து ஒழுக்கத்திற்கும் சறுக்கிச் செல்லும் தந்திரம் அவன் அறிந்தானாயினும், அதைச் செய்வதில் அறத்தைக் கடந்துசெல்லும் தருணங்களை அவன் எப்போதும் விலக்கியே வந்திருக்கிறான். அதில் அமரசுந்தரி கதை ஒன்று. நேற்றைய அனுபவத்தை அவனுக்கு இன்றும் நாளையும்கூட தேவை. அதற்காக அந்த யோசிப்பு அவனுக்கு அவசியமாகப்பட்டது.

மகரகம ஆஸ்பத்திரியில் இருந்த தனது சின்னம்மாவைப் பார்க்க ராஜலிங்கம் நோர்வேயிலிருந்து கொழும்பு சென்றிருந்த வேளையில், அவனது சின்னம்மாவின் நிலைமை மோசமாகத்தான் இருந்தது.

*தொடர்தல் 97ம் பக்கம்*

# சொல்லில்...

**96ம் பக்கத் தொடர்ச்சி...**

தாய்க்குத் தாயாகவிருந்து வளர்த்தவளின் நிலைமையைப் பார்த்துத்தான் ஊர் வர முடியுமென வீட்டுக்கு அறிவித்துவிட்டு அவன் காத்திருந்தான்.

கொழும்பு செட்டியார் தெருவில் அப்படி யென்ன விஷேசமிருக்கிறதோ? ஒரு முரு கன் கோவில், சற்றுத் தள்ளி ஒரு பிள் ளையார் கோவில், இன்னும் தள்ளி கதி- ரேசன் தெரு வந்து சேருகிற அரசமரச் சந்தியில் ஒரு சிவன் கோவிலும் எதிர்ப் பக்கத்தில் ஒரு பாரும் சமீபமாய் பூபால- சிங்கம் புத்தகசாலையும் இருக்கின்றன. இருந்தும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை யரின் பெரும்பாலான சந்திப்புக்கள் அந் தத் தெருவிலேயே நிகழ்ந்துவிடுகின்றன. ஜேர்மனியிலிருந்து வந்திருந்த ரமணனை செட்டியார் தெருவில்தான் ராஜலிங்கமும் சந்தித்திருந்தான். அவன்தான் ஆனா. கனகசபையென்கிற தன்னூர் நண்பன் ட்ரவல்ஸ் நடத்துகிற விபரம் சொல்லி பயணத் திகதி மாற்றங்களுக்கு, உள்ளூர் வெளியூர் வாகனத் தேவைகளுக்கு அவனை அணுகலாமென்று ஆலோசனை கூறியது.

ஒருநாள் மாலை வெள்ளவத்தை சென்றி ருந்த இடத்தில் ஆனா. கனகசபையின் ட்ரவல்ஸை தேடினான் ராஜலிங்கம். ஒரு நீலக் கட்டடத்தின் முதலாம் மாடியில் கே. அழகரட்னம் ட்ரவல்ஸ் இருப்பதாய் ரமணன் சொன்னது அவனது ஞாபகத்தில் இருந்தது. அவன் மேலே சென்றபோது ட்ரவல்ஸ் திறந்திருந்தது. ஆனா. கனக- சபை ட்ரவல்ஸில் இருந்திருந்தான். அங் கேதான் அமரசுந்தரியையும் ராஜலிங்கம் முதன்முதலாக நேரில் சந்தித்தான்.

'இதுதான் அமரசுந்தரி, ஞாபகமிருக்கெல் லோ?' என்று கேட்டு கண்சிமிட்டினான் ஆனா. கனகசபை.

அதிகமாகப் பேசவோ, கலகலவென வாய் திறந்து சிரிக்கவோ தெரியாத அமரசுந்த- ரியிடத்தில் ஒரு அம்சம் சிறப்பாயிருந்தது. கழுத்தைச் சாய்த்து அவள் வீசுகின்ற பார்வையில் அவளது கண்களில் தோன் றும் வசீகரம் அற்புதமாயிருக்கும். அவள் மூக்குமின்னி அணிந்திருந்தாள். மிகச் சாதாரணமானதாய்த்தான் இருந்திருக்கும். ஆனாலும் அவள் கழுத்தை ஒருக்களித் துச் சாய்த்து நோக்குகையில் அது பளீர் பளீரென முகமே மின்னலடிப்பதுபோல் தோன்றச் செய்தது. அந்த முகத்தில் இயல்பாய்ச் சிவந்திருந்தன இதழ்கள். அதில் கொஞ்சம் பெருத்த கீழுதடு. அது தான் காமத்தை அந்த ஒல்லித்த உடம் பில் அழுத்தமாய் எழுதியிருந்ததோ?

ஒருநாள் அவளது குடும்ப நிலைபற்றி விசாரித்தான் ராஜலிங்கம். சொல்லும்போது ஒரு கணம் கண்கலங்கினாள். 'யாழ்ப்பா- ணம் போட்டு வாறனெண்டு போனவர்தான். என்ன நடந்ததெண்டு தெரியா. இப்ப நாலு வரியமாச்சு. ரண்டு வருஷமா தேடாத இடமில்லை. பிறகு; மூண்டு வாய்க்கு சாப்பாடு தேடுற தேவையிருக்கே, வேலை; அலைச்சல்; இப்பிடியே காலம் போய்க் கொண்டிருக்கு.'

கணவனைக் காணாமல் ஆகியவளென்பது பச்சாத்தாபம் மட்டுமில்லை, ஒருவகைச் சபல எண்ணம் உள்நுழையும் வாசலாகவும் இருந்துவிடுகிறது. ராஜலிங்கமும் அந்தச் சலனத்துக்குத் தப்பவில்லையென்று முதல் பார்வையிலேயே தெரிந்தது. இரவுகளிலே அமரசுந்தரியின் நினைவேற்றிய உடலின் தகிப்புகளினால் அவன் வதங்கத் தொடங் கினான்.

நோர்வே திரும்பி ஓராண்டுக்குள்ளாக மறு படி கொழும்புக்கு வந்தான். வரும் வழி யெங்கும் அமரசுந்தரியின் நினைவுகளே அவனை உடற்றிக்கொண்டிருந்தன. அவ ளின் நினைவுகளே அவனை அங்கே விரட்டினவென்றும் சொல்லலாம். ட்ரவல்ஸ் பூட்டிவிடப் போகிறதேயென்று அந்தரப் பட்டு சென்றான். அங்கே அமரசுந்தரி இருந்திருந்தாள். அப்போதுதான், ஆனா. கனகசபையின் வீட்டிலே தான் தங்கியிருப் பதை அவள் சொன்னாள். அது தனக்கு பாணந்துறையிலிருந்து வந்துபோகும் மூன்று மணி நேரத்தையும் அதன் அலைச்சலை யும் மிச்சப்படுத்துவதாகக் கூறினாள். கொட்டாஞ்சேனை, மருதானைப் பகுதிக ளில் சிறிய வீடொன்றுக்கு ஏஜன்ரிடம் சொல்லிவைத்திருப்பதைச் சொன்னபோது அது நல்லதென்றான் அவன். அவனது அழுத்தத்தின் புள்ளியில் தன் கவனம் பட்டதுபோல் தலையைச் சாய்த்து இயல் பானதும் கவர்ச்சிகரமானதுமான தன் பார் வையை விசிறினாள் அமரசுந்தரி.

ஒருநாள் மாலையில் தன்னோடு விமானத் தில் வந்திருந்த ஒரு நோர்வே வெள்ளைப் பயணக் குழுவினரை ராஜலிங்கம் வீதி யில் சந்தித்தான். போர் நடந்த இட மெல்லாம் சென்று பார்க்க அவர்களுக்கு வேனொன்று வேண்டியிருந்தது. அவர் களைக் கூட்டிவந்து அறிமுகமாக்கியதில் ஆனா. கனகசபை வெகு உற்சாகமாகிப் போனான். அன்று எப்படியும் 'தண்ணி' அடிக்கவேண்டுமென்று ட்ரவல்ஸை பூட்டி விட்டுச் செல்லும்போது அமரசுந்தரியுடன் வீட்டுக்குப் போகும்படி அவனிடம் சொல் லிவிட்டு ஆனா. கனகசபை வேறு வேலை யாகக் கிளம்பிவிட்டான்.

அமரசுந்தரியோடு கூடிக்கொண்டு ராஜ- லிங்கம் கடற்கரைப் பக்கமிருந்த ஆனா. கனகசபையின் வீட்டிற்குச் சென்றான். பழைமை பொருந்திய உயரமான மதில் களுக்குள்ளே இருந்தது அந்த வீடு. பழைய வீடானாலும், பெரிதாக இருந்தது. பெரிய பெரிய காட்டுக் கற்களில் பொழிந் துவைத்த படிகள் தேய்மானத்தின் மினுப் புக் காட்டியபடி இருந்தன.

உள்ளே குமிழ் பல்புகள் இரண்டு முழு வீச்சில் வெளிச்சத்தைப் பிரவாகித்தபோ தும் கூடத்துள் ஈர வாசனையோடு கூடிய இருளே நிறைந்திருந்ததாய்ப் பட்டது ராஜ- லிங்கத்திற்கு. சமையலறைக்கு அப்பாலி ருந்த இரண்டு சின்ன அறைகளுள் ஒன்றி லிருந்து பழைய பாடல்களை ரேப் ரிக் கோடரொன்று சத்தமாக இரைந்துகொண் டிருந்தது. அத்தனையும் பிரிவுச் சோகத்தின் இறுக்கம்கொண்ட சினிமாப் பாடல்களாக இருந்தன.

பாடலொலித்த அறையிலிருந்து அவ்வப் போது வந்து கூடத்துள் காலாற நடக்கும் பாவனையில் எல்லாம் கவனித்துக்கொண் டிருந்தாள் ஒரு முதியவள். அவளை சாந்த குமாரியென்றும், ஆனா. கனகசபையின் உறவினளென்றும் அமரசுந்தரி சொன்னாள்.

ஆனா. கனகசபை பத்து மணிக்கு மேலே வந்தான். அவர்கள் குடித்து, சாப்பிட்டு முடித்தபோது இரவு பன்னிரண்டு மணி ஆகியிருக்க, அந்தநேரத்தில் ஹோட்ட லுக்கு போகவேண்டாமென்று அவனை அங்கேயே படுக்கச்சொல்லிவிட்டான் ஆனா. கனகசபை.

அது பெரும்பாலும் அடிக்கடி நடவடிக்கை யாக ஆகிவந்திருந்தும், அவளோடான அந்தரங்க உரையாடல் ஒன்றுக்கான வசதியை அங்கே ராஜலிங்கம் காண வில்லை. எட்டு மணியளவில் அமரசுந்தரி யோடு ஆனா. கனகசபையின் வீடு செல்கிறான் தொங்கல் அறையிலிருந்து சோகம் திணிந்த சினிமாப் பாட்டொலி கிளர்ந்துகொண்டிருக்கிறது. கேட்கும் மனங் களையும் அது தன் சோகத்துள் இழுத்து ஆழ்த்துகிறது. அவர்கள் கூடத்துள் அமர்ந்ததும் அவ்வப்போது வெளியே வந்து காலாற நடப்பதுபோல் வேவு செய்கிறாள் சாந்தகுமாரி அவளது அறை யிலிருந்து றேடியோப் பாடலும் தன்னிச் சாபூர்வமாய் அவ்வப்போது வெளியே வந்து வேவின் மாயம் புரிகிறது. அது அவனை நினைவெல்லாம் உறைந்து போக வைக்கிறது. அவன் எப்போதும் எதையும் பேச எண்ணியதில்லைப்போல் வெறுமை பூணுகிறான். ஒரு நாளா, இரண்டு நாட்களா; போகிற நாளெல் லாம் நிலைமை அதுவாகவே அவனுக்கு அமைந்துவிடுகிறது.

ஒருநாளிரவு வெகுநேரமாய் ஆனா. கனக- சபைக்காக காத்திருந்துவிட்டு அமரசுந் தரியும் ராஜலிங்கமுமாகச் சாப்பிட்டு முடிய அவன் ஹோட்டலுக்கு கிளம்பினான். 'றோட் டில ஆமியும் பொலிசுமாயிருந்தது பின் னேரம் முழுக்க. வீண் கரைச்சல் என்னத் துக்கு, காலமை போங்கோவன்' என்றாள் அமரசுந்தரி. அவள் சொல்வதன் நியா யம் அவனுக்குப் புரிந்தது.

ஏறுவெய்யில் ஜன்னலூடாய் சுளீரென்று அடித்து எழும்ப, சமையலறையில் ஆனா. கனகசபையும் அமரசுந்தரியும் கதைவழிப் பட்ட சத்தம் கேட்டது. அவன் கதவைத் திறந்து வெளியே வர, சந்தடியில் திரும் பிய ஆனா. கனகசபை அவனைக் கண்டு கொண்டு, 'ரா முழுக்க நித்திரை முழிச்சு வான் ஓடினது. படுக்கப்போறன்' என்று விட்டு போய்ப் படுத்துவிட்டான். ராஜலிங் கம் வெளிக்கிட்டுக்கொண்டு கிளம்பினான்.

மனதின் கனதியில் அவனது நடைகூட வழமையான வேகம் குன்றியிருந்தாய்த் தோன்றியது, பின்னால் அவனையே பார்த் தபடி நின்றிருந்த அமரசுந்தரிக்கு, திரும் பிய அவன் அவளைக் கண்டான். தன் போல் அவளுக்குள்ளும் நினைவின் சுமை களாக அந்த விருப்பங்களின் முடிவின் மைக்கான அவலம் இருந்திருக்குமா? அவன் எண்ணினான்.

ஆனால் ராஜலிங்கத்தின் ஏக்கம் கடைசி வரை தீராமலே இருந்துவிட்டது. அவன் அவசரமாக நோர்வே திரும்ப நேர்ந்தது.

வாரங்கள் சில கழிந்து மனத் தவனத்தின் அருட்டல் மிகுந்த ஒருபொழுதில் கே. அழகரட்னம் ட்ரவல்சுக்கு ராஜலிங்கம் போனெடுத்தான். அமரசுந்தரியே பேசி னாள். 'போனதுக்கு இப்பதான் நினைப்பு வந்துதோ?' என்றாள். பின்னால் கிணுகி ணுப்பைத் தொடர்ந்தாள்.

'நினைப்பு வந்தது. ஆனா என்ன பேசுற தெண்டுதான் தெரியேல்ல;'

'முந்தி நீங்கள் பேசுறதுக்கு கன விஷயம் இருந்தது. இப்ப ஒண்டுமில்லைப்போல.'

அவள் தன்னின் மனத்தை வாசித்திருப் பதைப் புரிந்தான் ராஜலிங்கம். பேச்சில் உற்சாகமும் நம்பிக்கையும் ஏறிற்று. 'மனத் தில எவ்வளவோ விஷயம் இருந்ததுதான். அப்ப நேரில பேசேலாதத, இப்ப;'

'தெரியும். அந்த மனிசி உங்களைப் பேச விடேல்லை. மனசி; பாட்டு; வெளிச்சம் குறைஞ்ச வீடு; எல்லாம் எந்த விஷயத் தைப் பேசுறதுக்கும் ஏற்ற மனநிலையை அங்க தந்திடாது. எனக்கிருந்த அதே தடையள்தான் உங்களுக்கிருந்ததும்.'

அதுபோதுமே! அவள் பேச நினைத்திருந் தாள் என்பதே ஒரு பதில்தானே. அவன் எண்ணிக் களித்திருக்கையில், 'இப்ப நான் மருதானையில வீடெடுத்து இருக்கிறன்' என்றாள் அவள். அவனது மெய் சிலிர்த் தது. அதுவொரு அழைப்பு சிறிதாகவோ, பெரிதாகவோ.

'அது நல்லது. ம்;. இன்னொரு விஷயம் சொல்லவேணும். நான் அங்க பேசுற துக்கு எனக்கு இன்னொரு தடையிருந் தது' என்றான் ராஜலிங்கம். 'ஆனா. கனக- சபை என்னை முழுதுமாய் நம்பியிருந்தான். அது என்னைப் பேசவிடேல்லை. காவ லெண்டா மீறியிருப்பன். ஆனா; அந்த நம்பிக்கை; உங்களுக்கு விளங்குதா?'

சிறிதுநேர மௌனத்தின் பின் அவள் சொன்னாள்: 'எனக்கொண்டும் விளங் கேல்லை. நான் நானாய்த்தான் அங்க இருந்தன். ஆற்றையும் சொத்தாயில்லை. என்னை வைச்சு ஆரும் தங்கட நம்பிக் கையை வளர்த்திருக்கத் தேவையில்லை.'

'இல்லை;. அவன்ர வீட்டில இருக்கிற மட்டும் நீங்கள் அவன்ர பாதுகாப்பில இருக்கிற சொத்துத்தானே? அதை நான் மதிக்கவேணும்.'

'அப்ப; என்னையும் ஒரு ஜடமாய்த்தான் பாத்திருக்கிறியள், இல்லையே? சரி, எப் பிடியெண்டான்ன நினைச்சிட்டுப் போங்கோ. இப்ப என்ன பேச எடுத்தியள்; அதைச் சொல்லுங்கோ;' அவள் சிறிது கோபம் அடைந்திருந்தாள்போல் ராஜலிங்கத்துக் குத் தோன்றியது. நிலைமையை சரி யாகவேதான் அவள் கணித்திருக்கிறாள் என்றும் அவன் எண்ணினான். ஆனால் அவளும் தன்போல் அடங்கிப்போனவள் என்பதையும் அவனால் அப்போது நினைக் காமிலிருக்க முடியவில்லை. அவன் சடு தியில் கேட்டான்: 'அவன்ர நம்பிக்கையை அழிச்சிடக்குடாதெண்ட பயம் உங்களுக்கு இருக்கேல்லையோ, அமரசுந்தரி?'

அவள் சிரித்தாள். 'அது நம்பிக்கை சார்ந்த விஷயமில்லை. உண்மையில அது என்ர அன்றாடச் சீவியம் சம்பந்தமானது. ஒரு வேலை; ஒரு தங்கிற இடம்; இப்ப கொழும்பு இருக்கிற நிலைமையில இதை யெல்லாம் கவனிக்காம இருந்திடேலா தெல்லோ? இப்ப பாருங்கோ;'

சொல்லிவருகையில் புதிய காட்சிக்கான பின்னணியிசை மாற்றம்போல் அவளது பேச்சின் தொனி மாறியது. சொற்கள் இட றுப்பட்டன. 'ஓமண்ணை; ஓமண்ணை; நல் லாயிருக்கிறன்; இஞ்ச; சேரும் வந்திட் டார், குடுக்கிறன், கதையுங்கோ' என்றாள் அமுதசுந்தரி அவசரமாக.

'யாரை அண்ணையென்று விளித்தாள்? என்னையா, முன்னால் நின்ற யாராவது வாடிக்கையாளரையா? அல்லது வேறொரு சொல்தான் அந்தமாதிரி எனக்குக் கேட் டுதோ?' அவன் ஒன்றும் விளங்காமல் போனை காதோடு வைத்தபடி விறைத்து நின்றிருந்தான். சிறிதுநேரத்தில் ஆனா. கனகசபையின் குரல் வந்தது. சுகம் விசா ரித்தான்; அடுத்த கொழும்புப் பயணம் எப்போதென கேட்டான்; பின் அவசரமாய் மட்டக்களிப்பு பயணமாவதாகச் சொல்லி ரிஸீவரை அவளிடம் கொடுத்துவிட்டு போய் விட்டான்.

அவள் தெளிந்து கிணுகிணுத்தபடி எது எதுவோ பேசிக்கொண்டிருந்தாள். அவன் செவித் துளைகளில் அவை விழுந்திருக் கவில்லை. அவள் அவசரத்தில் உதிர்த்த அந்த ஒற்றைச் சொல் இன்னும் அவன் காதுகளில் ஓர் அடைப்பாயிருந்து சப்த வெளியையே தடுத்துக்கொண்டிருந்தது. அது அவனை அவளிலிருந்து வேறாக் கியது. எட்டத்தில் தள்ளியது. ஒரு வார்த் தையே அந்த ரசவாதத்தை நிகழ்த்தியதெ னில் அதுவொரு மந்திரச் சொல்.

தன் உள்ளை ஆனா. கனகசபையிடம் மறைக்க அமரசுந்தரி எடுத்த சொல், அதன் மாயத்தின் வழி அவளையே ராஜலிங்கத் திலிருந்து மறைத்துவிட்டதை அவனது மௌனத்தில் உணராதவள், 'ஹலோ; ஹலோ;!' என்றுகொண்டிருந்தாள்.

ஆண்டுகள் சிலவாய் அமரசுந்தரி அவன் மனத்தில் மறதியாகியிருந்தாள். அன் றைக்கு அந்த ஒன்றுகூடலில் அவளை மறுபடி ஞாபகமாகும் நிலை நேர்ந்துவிட் டது. அதை அவன் அஞ்சவில்லை. அந்தச் சொல் இன்னும் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்து அவளை அணு கக்கூடாதவளாய் அவனிடத்தில் செய்து கொண்டு இருக்கும். ஏனெனில் அச் சொல் பண்பாட்டின் இருசில் வேர் கொண்டிருக் கிறது.

devakanthan@thaiveedu.com



Markham Sheppard
Daniels FirstHome™ at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE HIGHER STANDARDS
*Independently owned & operated
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308
KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59
BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302
OUR AGENTS ACROSS CANADA
Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com
United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com



டி.எச். லோறன்ஸ் 1885-1930. நொட்டிங்ஷயர், இங்கிலாந்தில் பிறந்தவர். தாய் சில காலம் ஆசிரியையாகவும் பின் தொழிற்சாலையிலும் வேலை பார்த்தவர். தந்தை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி. லோறன்சும் சில காலம் சுரங்கத்தில் வேலை பார்த்தவர். பின் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர். சில காலம் ஆசிரியராகவும் பணி புரிந்தார். ஆரம்பத்தில் அவருடைய இளமைக்காலத் தோழியும் அவருக்கு நல்ல நூல்களை அறிமுகம் செய்து, அவை பற்றி உரையாடியவருமான ஜெஸி சேம்பேர்ஸ் அவர் எழுத்துக்களை வெளிவரவும் செய்தார். அவர் ஃப்றீடா என்ற திருமணமான ஜேர்மனியப் பெண்ணை மணம் முடித்தார். அது முதலாம் உலகப் போர் நடந்த காலம். இங்கிலாந்தும் ஜேர்மனியும் எதிரிகள். அவரையும் ஃப்றீடாவையும் ஜேர்மன் உளவாளிகள் என்று சந்தேகப்பட்டார்கள். அவர் சமாதானம் விரும்பி. இங்கிலாந்தில் இருக்க முடியாமல் வெளியேறி ஐரோப்பாவிலுல் வேறு பல நாடுகளிலும் வாழ்ந்தார்கள். அப்போது- 1922- இலங்கைக்கும் சென்று இரண்டு மாதங்கள் கண்டியில் தங்கியிருந்தார். புத்தசமயத்தைப்பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. ஆனால் யானை பற்றி நல்ல இரண்டு கவிதைகள் எழுதியுள்ளார். பின் அவுஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவிற்கும் சென்றார். இறுதியில் 44 வயதில் காச நோயால் பிரான்சில் இறந்தார்.

இவர் பெரும் நாவாலாசிரியர், சிறுகதையாசிரியர், கவிஞர், கட்டுரையாளர். இவர் எழுதிய Sons and Lovers, The Rainbow, The Plumed Serpent, Women in Love, The Lady Chatterly's Lover போன்றவை மிகவும் பிரபல்யமான நாவல்கள். அவை தவிர நல்ல பல சிறுகதைகள், கவிதைகள், விமர்சனங்கள், பிரயாணக் கட்டுரைகள் என்று ஏராளமாக எழுதியவர். இறுதிக் காலத்தில் ஓவியங்களையும் தீட்டிக் காட்சிப் படுத்தியவர். ஆண் பெண் பாலியலையும் சொற்களையும் வெளிப்படையாகவே எழுதியதால் இவருடைய எழுத்துக்கள் பல சர்ச்சைகளை ஏற்படுத்தின. ஆபாச எழுத்தாளர் என்றே சொல்லப்பட்டார். இவருடைய படைப்புக்கள் பல நாடுகளில் தடை செய்யப்பட்டன. ஆபாச எழுத்துக்கள் என்று லண்டனில் வழக்கும் தொடுக்கப் பட்டது. ஆனால் அதில் இவருக்கு வெற்றியும் கிடைத்தது.

பின்னர் இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான ஆங்கில நாவாலாசிரியர் என்று இ.எம். ஃபோஸ்ரர் இவரைப் புகழ்ந்துள்ளார். இவரின் ஆங்கில மொழி நடை அழகானதென்றும் இவரின் நாவல்கள் படைப்பூக்கம் கொண்டவை, உயர்தரமானவை என்றும் விமர்சகர் எஃப். ஆர், லீவிஸ் சொல்கிறார்.

The Christening என்பது இந்தச் சிறுகதையின் தலைப்பு. இதில் மணம் முடிக்காத பெண் ஒரு பெண் குழந்தை பெற்றிருக்கிறாள். அது அக்காலத்தில் குடும்பத்திற்கு இழுக்கு. அச்சிறு பாலகனுக்கு வீட்டில் பெயர் இடும் சமயச் சடங்கு - christening - நடக்கிறது. Baptisim என்பது ஞானக்குளிப்பு அல்லது ஞானஸ்நானம் - பெரிய குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நடக்கும் கிறிஸ்தவ சமயச் சடங்கு.



# பெயரிடு விழா

## - - டி.எச். லோறன்ஸ்

### தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பிரிட்டிஷ் பாடசாலை ஆசிரியை பள்ளியின் வாசலை விட்டு வெளியேறினார். வழக்க மாக இடதுபுறம் திரும்பும் அவர் அன்று வலதுபுறமாகத் திரும்பி நடந்தார். தங்கள் கணவன்மாருக்கு இரவுணவு செய்வ தற்காக அவசரமாகச் சென்ற இரண்டு பெண்கள் அவளைப் பார்ப்பதற்காக ஒரு கணம் நின்றார்கள். அப்போது நாலு மணிக்கு ஐந்து நிமிஷங்கள் இருந்தன. பெண்களுக்குரிய சிறிய முகச்சுளிப்புடன் ஒருவரை ஒருவர் ஒரு மாதிரியாக அவர்கள் பார்த்தார்கள்.

அப்படிப் போகும் அந்த உருவம் நிச்சயமாக இரக்கத்துக்குரியவள் தான்: சிறியதாக, மெலிந்தவளாக. வைக்கோலில் பின்னிய கறுத்த தொப்பி. மங்கிய காஷ்மீர ஆடை முழுப் பாவாடையையும் சுற்றிக் கீழே தொங்கியது. சிறிய, பலவீனமான அவள் மெதுவாக எண்ணிக் காலடி வைத்து நடப்பதும் அபத்தமாகத் தான் தோன்றியது. ஹில்டா றோபொத்தாவுக்கு முப்பது வயதுக்கு மேல் இருக்காது. அவள் அப்படிக் காலடி வைத்து நடந்து போவதற்கு அவளுடைய வயதல்ல காரணம். அவளுக்கு இருதய நோயும் இருந்தது. அதனால் முகம் சிறிதாகி இருந்தது. ஆனால் அது அழகானது. முகத்தை உறுதியாகத் தூக்கி வைத்துக் கொண்டு நடந்தாள். அந்த இளம் பெண் சந்தையைக் கடந்து சென்று கொண்டிருந்தாள், கருமை நிற, சோகமான, நற்பெயரற்ற தோகையுடைய அன்னத்தைப் போல.

பின் பெரிமானுடைய பேக்கரிக்குச் சென்றாள். அந்தக் கடையில் பாண், கேக், மாச் சாக்குகள், ஓட்மீல், பன்றி இறைச்சித் துண்டு, பன்றித் தொடை, பன்றிக் கொழுப்பு, சோசேச் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மணம் மனதுக்கு உகந்ததாக இருக்கவில்லை. பெரிமானைக் காணவில்லை. அதனால் ஹில்டா றோபொத்தாம் மேசையில் கிடந்த பெரிய கத்தி ஒன்றை தள்ளி விரல்களால் சத்தம் வர தட்டினாள். உயரமான பளபளக்கும் பித்தளைத் தராசை பார்த்துக் கொண்டு பதற்றத்துடன் நின்றாள். கடுகடுப்பான முகமுடைய, மணல் நிறத் தாடியுள்ள ஒருத்தன் படிகளில் இறங்கி வந்தான்.

'என்ன வேணும்?' என்றான், தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்காமல்.

'ஆறு பென்னிக்கு கேக்கும் பிஸ்கோத்துக்களும் கலந்து தர முடியுமா? தயவுசெய்து கொஞ்ச மக்கறூன் பிஸ்கோத்துக்களும் சேர்த்து,' என்றாள், அவசரமாக, பதற்றமான குரலில். அவள் இதழ்கள் இரண்டு இலைகள் காற்றில் முணுமுணுப்பது போல இருந்தன. செம்மறி ஆடுகள் வாசலில் கூட்டமாக ஒன்று சேர்வதைப் போல சொற்கள் சேர்ந்திருந்தன.

'எங்களிடம் மக்கறூன் பிஸ்கோத்துக்கள் இல்லை,' என்றான் முரட்டுத்தனமாக.

அவள் சொன்னது அவனுக்குத் தெளிவாகவே தெரியும். ஆனால் ஒன்றும் சொல்லாமல் அப்படியே நின்றான்.

'அப்போ, திரு பெரிமான், எனக்கு கொஞ்சம் கூட அது கிடைக்காதா? கிடைக்காமல் ஏமாந்து போனதாக உணர்கிறேன். அந்த பிஸ்கோத்துக்கள் எனக்குப் பிடிக்கும். அது உங்களுக்குத் தெரியும். அதை நான் அடிக்கடி சாப்பிடுபவள் இல்லை. ஆனால் சிலவேளை அதைச் சாப்பிட்டு என்னைத் திருப்திப்படுத்திக் கொள்வேன். மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதிலும் பார்க்க அது நல்லதல்லவா?' சொல்லி விட்டு, முகத்தில் கையை வைத்துக் கொண்டு சிறிய பதற்றத்துடன் சிரித்தாள்.

'வேறு என்ன வேணும்?' என்று கேட்டான், எந்த புன்முறுவலும் இல்லாமல். அவள் சொன்னது அவனுக்கு உண்மையில் புரியவில்லை. அதனால் அவன் முகம் முன்பிலும் பார்க்க சிடுசிடுப்பாக இருந்தது.

'ஓ, உங்களிடம் எது இருக்கிறதோ, அது,' என்று பதிலளித்தாள் பள்ளி ஆசிரியை, சற்று முகம் சிவக்க. அவன் மெதுவாக அசைந்து சென்று ஒரு கடதாசிப் பைக்குள், பல தட்டுக்களிலிருந்தும் கேக்குகளை எடுத்து ஒவ்வொன்றாக போட்டான்.

'உன்னுடைய சகோதரி எப்படி இருக்கிறாள்?' என்றான், மா அள்ளும் கரண்டியுடன் பேசிக் கொண்டிருப்பது போல.

'யாரைச்சொல்லுகிறீர்கள்?' என்றாள் பள்ளி ஆசிரியை, கடுமையாக.

'உன் இளைய தங்கச்சியை,' கூனலான, வெளிறிய முகமுடைய அவன் ஒருவித கிண்டலுடன் அதற்குப் பதிலளித்தான்.

'எம்மாவா! ஓ, அவள் நன்றாகத்தான் இருக்கிறாள். நன்றி!' பள்ளி ஆசிரியை முகம் சிவந்து போனாள். ஆனால் அவள் கூர்மையாகவும், பரிகாசமான எதிர்ப்புடன் அதைச்சொன்னாள். அவன் முணுமுணுத்துக் கொண்டு அவளிடம் அந்தப் பையைக் கொடுத்தான். பின்மதிய வணக்கம் சொல்லாமல் கடையை விட்டு அவள் செல்வதை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் முன்னால் பிரதான வீதி. அது முழுவதையும் தாண்டி அவள் நடக்க வேண்டியிருந்தது. அவமானம் அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ள அரை மைல் தூரம் வேதனையான மெதுவான நடை.

*தொடர்தல் 100ம் பக்கம்*

# பெயரிடு விழா...

**99ம் பக்கத் தொடர்ச்சி...**

ஆனால் அவள் தன் வெள்ளை நிற பையுடன் எதையும் பொருட்படுத்தாவள் போல் நடந்தாள். வயல் பக்கம் திரும் பியபோது சற்றுக் கூனுவது போலத் தெரிந்தாள். அகன்ற பள்ளத்தாக்கு அவள் முன்னால் திறந்து கிடந்தது. தூரத்தில் காடு, மாலை வெளிச்சத்திற்குள் மறைந்து கொண்டிருந்தது. இன்னும் தூரத்தில் மத்தியில் பெரிய குழி ஒன்று பெரும் சத்தத்துடன் வெண்ணிறப் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. அதற்குள்ளிருந்து ஆண்கள் வெளியேறிக் கொண்டிருந்தார் கள். பூரணமான றோஸா நிறச் சந்திரன், செந்நாரை போல தூர, கிழக்கே, மூடு பனிக்குள்ளிருந்து வெளியேறி பதிவாகப் பறப்பது போலத் தோன்றினான். அழகாக இருந்த அது அவளுடைய எரிச்சலான சோகத்தை பரவச் செய்து மென்மையாக் கியது.

அவள் வீடு வயலுக்கு அப்பால் இருந்தது. அதைப் போய்ச் சேர்ந்தாள். அது புதி தாகக் கட்டிய கணிசமான பெரிய வீடு. முதிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி ஒருத்தன் தன் சேமிப்பிலிருந்து தாராள மாகச் செலவழித்து அதைக் கட்டியிருந் தான். சிறிய குசினிக்குள், நீண்ட வெண் ணிறக் கவுண் அணிந்த கருமை நிறப் பெண் ஒருத்தி குந்தியிருந்து ஒரு குழந் தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். இன்னொரு மொத்தமான இளம் வயது பெண் மேசையடியில் பாணையும் வெண் ணையையும் வெட்டிக்கொண்டு, கீழ் நோக் கிய பணிவான தோற்றத்தில் நின்றாள். அது அவளுடைய இயல்பில்லை. விநோ தமான எரிச்சல் உடையவள், அவள். அவளுடைய சகோதரி உள்ளே வந்த போது அவளைத் திரும்பிக் கூடப் பார்க் கவில்லை. ஹில்டா, கேக் உள்ள பையை கீழே வைத்து விட்டு அறையை விட்டு வெளியேறினாள். எம்மாவிடமோ குழந் தையிடமோ திருமதி காளினடமோ பேச வில்லை. காளின் பின்மதிய வேலையில் உதவ வந்திருந்தாள்.

அந்த நேரத்தில் தந்தை முற்றத்திலிருந்து ஒரு தட்டு நிறைய நிலக்கரியுடன் உள்ளே வந்தார். மிகவும் பெருத்த மனிதர். இப் போது தளர்ந்து போய்க் கொண்டிருந்தார். அவர் உள்ளே போய்க் கொண்டிருந்த போது தன்னை நிலைப்படுத்த ஒரு கையால் கதவைப் பிடித்துக் கொண்டார். பின்னர் திரும்பியபோது தடுமாறி, ஆடி னார். பின் நிலக்கரித் துண்டுகளை ஒவ் வொன்றாய் நெருப்புக்குள் போடத் துவங் கினார். ஒரு நிலக்கரித் துண்டு அவர் கையிலிருந்து விழுந்து வெண்ணிற உலைக்குள் விழுந்து நொருங்கியது. எம்மா றொபொத்தாம் எல்லாப் பக்கமும் திரும்பிப் பார்த்த பின் முரட்டுத்தனமான, கோபமான குரலில் பேசத் துவங்கினாள்: 'பாருங்கள்!' பின் அவள் தன்னிலையை உணர்ந்து குரலைத் தாழ்த்திக் கொண் டாள். 'ஒரு நிமிஷத்தில் அதைக் கூட்டி அள்ளுகிறேன். நீங்க அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். போங்கள். நெருப் புக்குள் உங்கள் தலையை விட்டு விடு வீர்கள்.'

இருந்தும் தகப்பன் தான் ஏற்படுத்திய அசுத்தத்தை துப்புரவாக்கக் குனிந்தார். அவர் எதையோ சொல்ல வெளிக்கிட சொற்கள் ஒழுங்காக வராமல் வாயிலிருந்து எச்சில் வழிந்தது:

'மோசம். என் விரல்கள் ஊடாக மீனைப் போல நிலக்கரி வழுக்கி விழுந்து விட்டது.'

அவர் பேசிக் கொண்டிருந்தபோதே தீயின் பக்கம் சாய்ந்தார். கறுத்த புருவங்கள் உடைய பெண் கத்தினாள்: 'அவர் விழா மல் இருக்க சூட்டு அடுப்பில் கை வைத்து விட்டார்.' எம்மா சுழன்று போய் அவரை இழுத்தெடுத்தாள்.

'நான் சொல்லவில்லையா! இப்போ உங் களைச் சுட்டுக் கொண்டீர்கள்,' என்று முரட்டுத்தனமாகக் கத்தினாள்.

உருவத்தில் பெரிய அவரை இறுக்கிப் பிடித்து, கதிரைக்குத் தள்ளிக் கொண்டு போய் இருக்கச் செய்தாள்.

'என்ன விஷயம்?' அடுத்த அறையில் இருந்து கூரிய குரல் ஒன்று கத்தியது. அதன் பின் பேசியவள் தோன்றினாள். இருபத்தெட்டு வயதுள்ள கவர்ச்சியற்ற ஒரு பெண். 'எம்மா, உன்னுடைய அப் பாவைப் பார்த்து அப்படிப் பேசாதே.' பின் சற்றுத் தணிந்து உணர்ச்சியற்ற ஆனால் கூரான அதே குரலில் 'அப்பா, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்றாள்.

எம்மா கோபத்துடன் தன் மேசைக்குத் திரும்பிச் சென்றாள்.

'ஒன்றுமில்லை,' என்றார் அந்த முதியவர், வீணான எதிர்ப்புக் காட்டிக் கொண்டு. 'ஒன்றுமில்லை. நீங்கள் செய்கிறதைத் தொடர்ந்து செய்யுங்கள்.'

'அவர் தன் கைகளைச் சுட்டுக் கொண் டார் என்று நான் நினைக்கிறேன்,' என் றாள், கறுத்த புருவங்கள் உடைய பெண். அவர் கையாள முடியாத ஒரு குழந்தை என்பது போல, ஒருவகை இரக்கத்துடன். பேர்த்தா முதியவரின் கைகளைத் தூக் கிப் பார்த்து விட்டு, பொறுமையற்று சேச்சே என்று சத்தம் போட்டாள்.

'எம்மா, அந்த துத்தநாக களிம்பையும் ஒரு வெள்ளைத் துணித் துண்டையும் எடுத்துக் கொண்டு வா,' என்று கூர்மை யாகக் கட்டளை இட்டாள். இளைய சகோதரி பாண் துண்டின் மேல் கத்தியை வைத்து விட்டு வெளியேறினாள். உணர்ச் சியுள்ள ஒரு பார்வையாளனுக்கு அந்தக் கீழ்ப்பணிவு, வெறுக்கத்தக்க கருத்து வேறுபாட்டிலும் பார்க்க சகிக்க முடியா மல் இருந்திருக்கும். கறுத்தப் பெண் குழந்தையின் மேல் குனிந்தாள். அதில் தாய்மைக்குரிய அமைதியான, சீரான அசைவுகள் தெரிந்தன. குழந்தை புன்ன கைத்துக் கொண்டு, அவள் தொடையில் அசைந்தது. தொடர்ந்து அசைந்தும் புரண்டும் கொண்டிருந்தது.

'இந்தக் குழந்தைக்குப் பசி என்று நினைக் கிறேன். சாப்பிட்டு எவ்வளவு நேரம் இருக் கும்,' என்று கேட்டாள்.

'இரவுணவுக்கு முன் சாப்பிட்டது,' என் றாள் எம்மா சோர்வுடன்.

'கடவுளே!' என்று விளித்தாள் பேர்த்தா. 'உனக்குக் கிடைத்த இந்தக் குழந்தை யைப் நீ பட்டினி போடத் தேவையில்லை. நான் சொன்ன மாதிரி, ஒவ்வொரு இரண்டு மணி நேரமும் அதற்கு உணவு கொடுக்க வேணும். இப்போ மூன்று மணி. அவ னைக் கொண்டு போ. சின்னச் குழந்தை. நான் பாணை வெட்டுகிறேன்.' அவள் குனிந்து அழகான அக்குழந்தையைப் பார்த்தாள். அவளால் தன்னைக் கட்டுப்ப டுத்த இயலவில்லை. புன்னகைத்தாள். குழந்தையின் கன்னத்தை ஒரு விரலால் தடவினாள். பின் தலையை ஆட்டினாள். சிறுசிறு சத்தங்கள் போட்டாள். அதன் பின்னர் அவளுடைய சகோதரியிடமிருந்து பாணை வாங்கிக் கொண்டாள். அந்தப் பெண் எழுந்து குழந்தையை அதன் தாயிடம் கொடுத்தாள். எம்மா பால்குடிக் குழந்தையிடம் குனிந்தாள். அதைப் பார்த்தபோது அக்குழந்தையை வெறுத் தாள். அதை ஒரு குறியீடாகவே பார்த் தாள். ஆனால் அதைத் தொட்டவுடன் அவள் அன்பு இரத்தத்தைத் தூண்டும் தீ போல அதிகரித்தது.

'அவன் வர மாட்டான் என்றே நினைக்கி றேன்,' என்றார் தந்தை, அமைதியின்றி மேலே மணியைப் பார்த்துக் கொண்டு.

'அப்பா, மணிக்கூடு முந்திப் போகிறது! இப்போ நாலரை மணி! அமைதியாக இருங்கள்! பேர்த்தா பாணையும் வெண் ணையையும் தொடர்ந்து வெட்டிக் கொண் டிருந்தாள்.

'பேரிக்காய் ரின்னைத் திற,' என்று அந் தப் பெண்ணுக்கு அவள் சொன்னாள், மென்மையான தொனியில். பின் அடுத்த அறைக்குச் சென்றாள். அவள் போனவு டனே முதியவர் திரும்பவும் சொன்னார்: 'அவன் வருவதாக இருந்தால் இந்த நேரம் இங்கே வந்திருப்பான்.'

எம்மா வேறு ஏதோ எண்ணத்தில் மூழ்கி இருந்தாள். அதனால் அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவள் தன் குடும்பத் திற்குத் தலைகுனிவை ஏற்படுத்திய பின் அவள் தந்தை அவளைப் பற்றிப் பொருட் படுத்துவதில்லை.

'அவன் வருவான், அவன் வருவான்!' என்றார் தந்தை உறுதியாக.

சில நிமிஷங்களின் பின்னர் பேர்த்தா தான் அணிந்திருந்த மேலங்கியைக் கழற்றிக் கொண்டு குசினிக்குள் அவசரமாக வந் தாள். நாய் கடுமையாகக் குரைத்தது. அவள் கதவைத் திறந்து நாயை அமை தியாக இருக்கும்படி ஆணை இட்டு விட் டுச் சொன்னாள்: திரு கென்டேல் அவர் களே, இப்போது அது அமைதியாகி விடும்.'

'நன்றி,' என்றது ஓர் உரத்த குரல். அதன் பின், சுவரில் சைக்கிள் சாத்தும் சத்தம் கேட்டது. குருவானவர் உள்ளே நுழைந் தார். உயரமான, மெலிந்த, பதற்றமான நடத்தைகள் உள்ள அருவருப்பான மனி தர், அவர். அவர் வந்தவுடன் நேராக தந் தையிடம் சென்றார்.

'ஆ, எப்படி இருக்கிறீர்கள்?' என்று இனி மையாகக் கேட்டார். நரம்புத் தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்ட சுரங்கத் தொழி லாளியின் பெரிய உருவத்தைக் கூர்ந்து அவதானித்தார்.

அவர் குரலில் பண்பு நிரம்பி இருந்தது. அவரால் குறிப்பாக எதையும் காண முடியாது. தெளிவாகப் பொருட்கள் தெரி வதும் இல்லை.

'உங்கள் கைகளைக் காயப்படுத்தி விட் டீர்களா?' வெள்ளைத் துணியைக் கண்டு ஆறுதலளிக்கும் வகையில் அவர் கேட் டார்.

'அப்படி ஒன்றும் இல்லை. கொஞ்ச நிலக் கரி கையில் விழுந்து விட்டது. அப்போது என் கையை அடுப்பில் வைத்து விட்டேன். அது விழும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. முதியவர் வழக்கமாக 'அவர் கள்' என்பார் அல்லது நிந்திப்பார். தன் னுணவர்வற்று பழிக்குப் பழி வாங்கும் இயல்பைச் சார்ந்த வெளிப்பாடுகள் அவை. அரைவாசி துக்கத்துடனும், அரை வாசி விட்டுக்கொடுப்புடனும் மதகுரு புன்னகைத்தார். அதன் பின் இளம் தாயின் பக்கம் திரும்பினார். அப்போது அவள் மார்பு வெளியே தெரிந்தபடியால் தான் அவமதிக்கப்பட்டதாக உணர்ந்த அவள் கடுகடுப்பாக முகம் சிவந்து தோன்றியது.

'எப்படி இருக்கிறாய்?' என்று மதகுரு மிகவும் மென்மையாகவும் கனிவாகவும் கேட்டார், அவள் நோய்வாய்ப் பட்டிருக் கிறாள் என்பது போலவும் அது அவ ருக்குத் தெரியும் என்பது போலவும் இருந் தது.

'நான் நல்லாக இருக்கிறேன்,' என்று பதி லளித்தாள். எழும்பாமல் தடுமாற்றத்துடன் கையை எடுத்து முகக்தை மூடிக் கொண் டாள். உள்ளே கோபம் எகிறிக் கொண்டி ருந்தது.

'ஓம், ஓம்,' என்று சொல்லிக் கொண்டு குழந்தையில் அவர் ஏதோ தேடுவதைப் போல பார்த்தார். குழந்தை அவளுடைய உறுதியான முலையை தன் விரிந்திருந்த வாயை வைத்துச் சூப்பிக் கொண்டிருந் தது. 'ஓம், ஓம்.' அவர் ஏதோ சோர்வான சிந்தனையில் ஆழ்ந்திருப்பது போலக் காணப்பட்டார்.

அவளிடம் வந்து கவனமில்லாமல் கை குலுக்கிக் கொண்டார்.

பின்னர், அவர்கள் எல்லோரும் அடுத்த அறைக்குச் சென்றார்கள். மதகுரு ஊன முற்ற முதியவருக்கு உதவுவதற்காகத் தயங்கி நின்றார்.

'என்னால் போக முடியும், நன்றி,' என்றார் தந்தை எரிச்சலுடன்.

பின் எல்லோரையும் இருக்கச் செய்தார்கள். எல்லோரும் உணர்ச்சிகரமான நிலையில் தனித்தனியாக மேசையில் இருந்தார்கள். மாலையில் நடக்கும் விசேஷ நிகழ்ச்சிக் காக ஒதுக்கப்பட்ட விசாலமான அருவ ருப்பான அறை ஒன்றின் குசினியின் மத்தியில் உணவுகள் பரவி வைக்கப்பட் டிருந்தன.

ஹில்டா கடைசியாக வந்தாள். அருவருப் பான, மெலிந்த மதகுரு அவளை சந் திக்க எழும்பினார். அவர் இந்த குடும் பத்திற்குப் பயந்தார். பணக்காரச் சுரங் கத் தொழிலாளிக்கும் முரட்டுத்தனமான, பிடிவாதம் மிக்க பிள்ளைகளுக்கும் அவர் பயந்தார். ஆனால் அவர்களில் ஹில்டா அரசி. அவள் தான் திறமையானவள். அவள் தான் கல்லூரிக்குப் போனவள். குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் எல் லோருடைய நடத்தையின் உயர்ந்த தரத்தை வைத்திருப்பதற்கு தானே பொறுப்பு என்பது போல உணர்ந்திருந் தாள். றோபொத்தாம் குடும்பத்தினருக்கும் சாதாரண மற்ற சுரங்கத் தொழிலாளிக ளுக்கும் வித்தியாசம் இருந்தது. அவர்க ளின் 'வூட்பைன் குடிசை' விசேஷமான வீடு. முதியவரின் கர்வத்தால் கட்டப்பட் டது. ஹில்டா கல்லூரியில் பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியை. பல பிரச்சினைகள் வந்த போதிலும் அந்த வீட்டின் கௌர வத்தை வைத்திருக்கவே அவள் முயன் றாள்.

இந்த நிகழ்ச்சிக்கு பச்சை நிற வொயில் ஆடையை அணிந்திருந்தாள். மிகவும் மெலிந்தவள். அதனால் அவளுடைய கழுத்து அசௌகரியமாக நீண்டிருந்தது. மதகுரு அவளை மரியாதையுடன் வாழ்த் தினார். அவள் கண்ணியமாக உணவு மேசையில் அமர்ந்தாள். மேசையின் கடைசியில் நொந்து போன பெரிய உரு வமான அவளுடைய தந்தை இருந்தார். அவருக்கு அடுத்ததாக கடைசி மகள் துருதுருத்துக் கொண்டிருந்த குழந்தைக் குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். மதகுரு ஹில்டாவுக்கும் பேர்த்தாவுக்கும் நடுவில் தன் மெலிந்த உருவத்தை அசௌகரிய மாக வைத்துக் கொண்டிருந்தார்.

மேசையில் பலவகை உணவுகள் வைக் கப்பட்டிருந்தன. ரின்னில் அடைக்கப்பட்ட பழங்கள், சமன் மீன், பன்றித் தொடை, கேக்குகள். செல்வி றோபொத்தம் எல்லா வற்றையும் கவனித்துச் செய்திருந்தாள். நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை அவள் உணர்ந்திருந்தாள். இந்தச் சடங்குக்குக் காரணமான அந்த இளம் தாய் அசௌ கரியமாக எரிச்சலுடன் இருந்து கொண்டி ருந்தாள். தன் குழந்தையை அடிக்கடி பார்த்து சிறிதாகப் புன்னகைத்துக் கொண் டாள். அவளின் மடியில் குழந்தை சிறிய கால் கைகளை அடிக்கடி ஆட்டியபோது அவளை அறியாமலே புன்னகைத்தாள். கூர்மையான, திடீரென மாறும் போக்கு டைய பேர்த்தா குழந்தையைப் பற்றியே கவனமாக இருந்தாள். அவள் தன் சகோதரியை வெறுத்தாள். அவளைக் கேவலமாக நடத்தினாள். ஆனால் பச்சைக் குழந்தை அவளுக்கு ஓர் ஒளிக்கீற்று.

*தொடர்தல் 101ம் பக்கம்*

# பெயரிடு விழா...

**100ம் பக்கத் தொடர்ச்சி...**

செல்வி றோபொத்தம் உரையாடலில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தாள். அவள் கைகள் படபடத்தன. பெரும் பதற்றத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். உணவு உண்டு முடிந்தது. முதியவர் சிகப்புக் கைக்குட்டையால் தன் வாயைத் துடைத்தார். அவரின் நீலக் கண்கள் நிலைத்து நின்று உறுத்துப் பார்த்தன. அவர் பேசத் துவங்கினார். வார்த்தைகள் ஒழுங்கில்லாமல், வாயிலிருந்து வழிவது போல வெளிவர மதகுருவைப் பார்த்துப் பேசினார்.

‘நல்லது, திருவாளரே. நாங்கள் உங்களை அழைத்தது இந்தக் குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்கு. அதற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆசீர்வதிக்கப்பட்டதும் இரங்கத்துக்குரியதுமான இந்தக்குழந்தை ஞானக் குளிப்பு பெறாமல் இருப்பதை நான் விரும்பவில்லை. அதற்காக அவர்கள் தேவாலயத்திற்குப் போகவும் முடியாது.’ அந்த நேரம் அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தது விட்டார் போலத் தெரிந்தது. ‘ஆகவே, நாங்கள் உங்களை இங்கே வரவழைத்தோம், இங்கே வந்து அதைச் செய்வதற்கு. அப்படிச் செய்வது எங்களுக்குக் கஷ்டமில்லை என்று சொல்ல வில்லை. எங்களுக்குக் கஷ்டம் தான். என் உடல் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. மனைவி போய் விட்டாள். என்னுடைய மகளில் ஒருத்தியை இந்த நிலையில் விட்டுப் போக நான் விரும்ப வில்லை. ஆனால் ஆண்டவன் செய்ய வேண்டியதைச் செய்து விட்டான். அதைப் பற்றி முணுமுணுத்துப் பயனில்லை.. ஒரு விஷயத்துக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அதாவது அவர்களுக்கு ஒருக்காலும் உணவுக்குப் பஞ்சம் இருக்காது.’

இல்லத்தரசி செல்வி றோபொத்தம் இந்தப் பிரசங்கத்தின்போது விறைப்பாக துன்பப் பட்டுக் கொண்டிருந்தாள். அவள் பல வற்றை பற்றிக் கலக்கமடைந்திருந்தாள். இளைய சகோதரியின் அவமானத்தை உணர்ந்திருந்தாள். குழந்தையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதன் மேல் அன்பு வைத்திருந்தாள். அதில் அதன் தாயின்மேல் உள்ள அன்பும் சேர்ந்திருந்தது. தன் தந்தையின் சமய உணர்ச்சியின் முன்னால் அவள் கலங்கிப் போனாள். குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கடுமையாக வெறுத்தாள். பொது மக்கள் தங்கள் மேல் பழி சுமத்துவதை வெறுத்தாள். தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு அவள் வேதனைப்பட்டாள். அது அவளுக்குத் துன்பமான கடும் சோதனையாக இருந்தது.

‘உங்களுக்குக் கஷ்டம் தான்,’ என்று மதகுரு ஆரம்பித்தார், மென்மையான, தயங்கிய, உலகியல் பற்றற்ற குரலில். ‘இன்று அது கஷ்டம். ஆனால் ஆண்டவர் உங்களுக்கு ஆறுதலைத் தருவார். ஓர் ஆண் குழந்தை எங்களுக்குப் பிறந்திருக்கிறது. அதற்காக நாம் களிப்புறுவோம். மகிழ்வுறுவோம். பாவம் எம்மிடையே நுழைந்தால் ஆண்டவனைத் தொழுது எங்கள் இதயத்தைப் தூயத்தாக்குவோம்...’

அவர் தன்னுடைய பிரசங்கத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். இளம் தாய் தன் கலைந்த தலைமயிருக்குள் தன் முகத்தை வைத்துச் சிணுங்கிக் கொண்டிருந்த சிசுவை தூக்கினாள். அவள் புண்பட்டிருந்தாள். முகத்தில் கோபப் பார்வை தெரிந்தது. அவள் விரல்கள் குழந்தையின் உடலை அழகாகப் பிடித்திருந்தன. தன்னால் அவர்கள் இந்த உணர்ச்சிக்கு ஆளானார்கள என்பதற்காக கோபத்தினால் அதிர்ச்சி அடைந்திருந்தாள்.

செல்வி பேர்த்தா எழுந்து சிறிய குசினிக்குள் சென்று சீனக் கிண்ணம் ஒன்றில் நீர் கொண்டு வந்து தேநீர் பொருட்கள் இருந்த இடத்தில் வைத்தாள்.

‘நல்லது, நாங்கள் இப்போது தயார்,’ என்றார் முதியவர். மதகுரு வழிபாட்டு உரையை ஆரம்பித்தார். செல்வி பேர்த்தா ஞானத்தாய். இரண்டு ஆண்களும் ஞானத் தந்தையர். முதியவர் குனிந்த தலையுடன் இருந்தார். மனதில் ஆழப் பதியத் தக்க காட்சி அது. இறுதியில் செல்வி பேர்த்தா குழந்தையை எடுத்து மதகுருவின் கைகளில் வைத்தாள். பெரிய அருவருப்பான அவர் ஒருவகைப் போலியான அன்பால் பிரகாசித்தார். அவர் ஒருபோதுமே வாழ்க்கையை வாழ்ந்தவர் அல்ல. அவருடைய உலகத்தில் பெண்கள் இல்லை. அவர்கள் அவருக்கு விவிலிய பொருட்கள். குழந்தையின் பெயரை அவர் கேட்டபோது, முதியவர் ஆக்ரோசத்துடன் தன் தலையைத் தூக்கினார். ‘ஜோசெப் வில்லியம்,’ என்றார் மூச்சிரைத்துக் கொண்டு.

‘ஜோசெப் வில்லியம், நான் உமக்கு ஞானஸ்நானம் தருகிறேன்..’ மதகுருவின் விநோதமான, பெரிதாக ஓதும் குரல் எதிரொலித்தது. குழந்தை இன்னும் அமைதியாக இருந்தது.

‘நாங்கள் பிரார்த்திப்போம்,’ என்று அவர் சொன்ன வார்த்தைகள் அனைவருக்கும் நிம்மதியைத் தந்தன. இளம் தாயைத் தவிர மற்றவர்கள் அனைவரும் நாற்காலிகளின் முன்னால் முழங்காலில் இருந்தார்கள். தாய் குழந்தையின் மேல் குனிந்து தன்னை மறைத்துக் கொண்டாள். மதகுரு தயக்கத்துடன் பிரார்த்தனையை ஆரம்பித்தார்.

அப்போது வெளியே உள்ள பாதையில் காலடிகள் கேட்டன. பின் அவை யன்னலடியில் நின்றன. இளம் தாய் மேலே பார்த்தாள். அது அவளின் சகோதரன். குழியில் வேலை செய்த அழுக்குடன் கறுப்பாக இருந்தான். யன்னல் கண்ணாடியால் உள்ளே பார்த்தான். சிவந்த வாய் பரிகாசமான சிரிப்புடன் வளைந்திருந்தது. அழகான தலைமயிர் கறுத்துப் போன தோலின் மேலாகப் பிரகாசித்தது. சகோதரியைக் கண்டவுடன் இளித்தான். பின் அவனுடைய கறுத்த முகம் மறைந்து விட்டது. அவன் குசினிக்குள் போய் விட்டான். குழந்தையுடன் இருந்தவள் நிமிர்ந்து இருந்து கொண்டாள். நெஞ்சில் கோபம் நிரம்பி இருந்தது. பிரார்த்திக்கும் மதகுருவையும் அங்கு நடக்கும் உணர்ச்சிகரமான விஷயங்களையும் அவளும் வெறுத்தாள். அவளுடைய சகோதரனையும் கடுமையாக வெறுத்தாள். கோபத்தில் அங்கிருந்து பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சடுதியாக அவள் தந்தை பிரார்த்தனை செய்யத் துவங்கினார். அவருடைய வழக்கமான பெரிய, ஒழுங்கற்ற குரலைக்கேட்காமல் அவள் தன்னுள் சுருங்கிக் கொண்டு, உணர்ச்சியற்றிருந்தாள். அவர் மனம் பேதலித்துக் கொண்டு போகிறது என்று எல்லோரும் சொன்னார்கள். அது உண்மை என்று அவளும் நம்பினாள். அதனால் அவளும் அவரிடமிருந்து தொடர் புகளைத் துண்டித்தே இருந்தாள்.

‘ஆண்டவரே, குழந்தையைப் பார்த்துக் கொள் என்று உன்னைக் கேட்கிறேன்,’ என்று முதியவர் கத்தினார். ‘குழந்தைக்குத் தந்தையில்லை. ஆனால் உலகாயத தந்தை உன்னை விட பெரிதாக என்ன செய்யப் போகிறான்? குழந்தை உன்னுடையது. அது உன்னுடைய குழந்தை. ஆண்டவரே, உன்னைத் தவிர, அவனுக்கு வேறு என்ன இருக்கிறது? ஆண்டவரே, மனிதன் தான் தந்தை என்று சொல்லும் போது அதன் முதல் வார்த்தையிலிருந்தே அவன் தவறு செய்கிறான். ஏனென்றால் நீ தான் குழந்தையின் தந்தை ஆண்டவரே! ஆண்டவரே, எங்கள் குழந்தைகள் எங்கள் குழந்தைகள் என்று நாங்கள் சொல்லும் அந்த கர்வத்தை எங்களிடம் இருந்து எடுத்துக் கொள். ஆண்டவரே, நீ தான் இந்தக் குழந்தையின் தந்தை. அதற்கு இங்கே தந்தை இல்லை. ஓ, இறைவனே, நீ அவனைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நான் உனக்கும் என்னுடைய குழந்தைகளுக்கு இடையே இதுவரை குறுக்கே இருந்து விட்டேன். உன்னிடமிருந்து அவர்களை நான் துண்டித்து விட்டேன். அவர்கள் என்னுடையவர்கள் என்று நம்பினேன். அதனால் அவர்கள் கோணலாக வளர்ந்து விட்டார்கள். யார் அவர்களுடைய தந்தை ஆண்டவரே, நீங்கள் அல்லவா? ஆனால் நான் உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே நின்று விட்டேன். அவர்கள் கல்லுக்குக் கீழே உள்ள செடி போல வளர்ந்து விட்டார்கள். என்னால். ஆண்டவரே, நான் அப்படிச் செய்திருக்காவிட்டால், அவர்கள் சூரிய ஒளியில் வளரும் மரங்கள் போல வளர்ந்திருப்பார்கள். ஆண்டவரே, நான் செய்த பிழையை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்களுக்கு நான் தீங்கிழைத்து விட்டேன். அவர்களுக்கு தந்தையைத் தெரிந்திருக்காவிட்டால் அது நன்றாக இருந்திருக்கும். எந்தவொரு மனிதனும் தந்தை அல்ல, ஆண்டவரே. நீ மட்டும் தான் தந்தை. அவர்கள் உன்னை விட்டு அப்பால் வளர முடியாது. ஆனால் நான் அவர்களை வளராமல் தடுத்துவிட்டேன். அவர்களைத் திரும்பவும் தூக்கி விடு. என் குழந்தைகளுக்கு நான் செய்த தவற்றை நீக்கி விடு. இந்த இளம் குழந்தையை நீருக்கு அருகில் நிற்கும் வில்லோ மரம் போல வளர விடு. நீ தான் தந்தை, வேறெவரும் இல்லை. ஓ, இறைவனே, ஆம், என்னுடைய குழந்தைகளுக்கும் நான் அப்படியே இருந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவர்களுக்கும் தந்தை என்றொருவர் இல்லாமல் நீயே இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் நான் அவர்களின் மேல் இருந்த கல். அவர்கள் எழுந்து தங்கள் துர்ப்புத்தியால் என்னைச் சாபம் இடுகிறார்கள். என்னைப் போக விடு, ஆண்டவனே அவர்களைத் தூக்கி விடு...

மதகுரு தந்தையின் உணர்ச்சிகளை அறியாமல் முழந்தாளில் இருந்து கொண்டிருந்தார், தந்தமையின் விசேஷ மொழியைப் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டுக் கொண்டு அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். செல்வி றோபொத்தம் மட்டும் உணர்ந்து அதைச் சற்றுப்புரிந்து கொண்டாள். அவள் இதயம் படபடக்கத் துவங்கியது. அவள் வேதனைப்பட்டாள். இரு இளைய மகள்கள் முழந்தாளில் இருந்து கொண்டிருந்தார்கள், எதுவும் கேட்காமல், விறைத்துப் போய், எதுவுமே உள் நுழையாமல் இருந்து கொண்டிருந்தார்கள். பேர்த்தா குழந்தையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். இளம் தாய் அக்குழந்தையின் தந்தையை நினைத்தாள். அவள் அவனை வெறுத்தாள். அடுக்களைப் பகுதியிலிருந்து சடசடக்கும் ஒலி கேட்டது. இளைய மகன் அவனால் முடிந்தளவு சத்தம் செய்து கொண்டிருந்தான். துணிகளைத் துவைப்பதற்காக நீர் கொண்டு போனான். ஆழமான கோபத்தில் முணுமுணுத்துக் கொண்டிருந்தான்:

‘உளறிக் கொட்டும், அடிமைப்படுத்தும் முதிய முட்டாள்.’

தந்தையின் பிரார்த்தனை தொடர்ந்து கொண்டிருந்தபோது, மகனுடைய நெஞ்சம் வெஞ்சினத்தால் குமுறிக் கொண்டிருந்தது. மேசையில் ஒரு காகிதப் பை கிடந்தது. அதை எடுத்து வாசித்தான். ‘ஜோன் பெரிமான்- பாண், கேக் முதலியன.’ பின் முகத்தைச் சுளித்துக் கொண்டு இளித்தான். குழந்தையின் தந்தை பேக்கரிக்காரன் பெரிமானின் கையாள். குசினியில் பிரார்த்தனை போய்க் கொண்டிருந்தது. லோறி றோபொத்தம் காகிதப் பையின் வாயை ஒன்றாக்கி, காற்றை ஊதி, தன் கைமுட்டியால் உடைத்தான். உரத்த சத்தம் கேட்டது. தனக்குள் இளித்துக் கொண்டான். அதேநேரம் அவமானத்தாலும் தந்தைக்குப் பயந்தும் நெளிந்தான்.

பிரார்த்தனையிலிருந்து தந்தை வெளிவந்தார். கூட்டம் சலசலத்து எழுந்தது. இளம் தாய் அடுக்களையின் பின் அறைக்குள் சென்றாள்.

‘முட்டாளே, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?’ என்றாள்.

சுரங்கத் தொழிலாளி இளைஞன் குழந்தையின் மோவாயை கீழே பிடித்து ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டு பாடினான்:

‘கேக் ஒன்று செய், கேக், ஒன்று செய், பேக்கரிக்காரனே. எனக்கொரு கேக் ஒன்றைக் கெதியாய் செய், பேக்கரிக்காரனே...’

தாய் குழந்தையை அவனிடமிருந்து பறித்துக் கொண்டு, ‘வாயை மூடு,’ என்றாள், கன்னம் சிவக்க.

‘குத்தி, நுழைத்து, பி என்று எழுது. எனக்கும் குழந்தைக்கும் உலை அடுப்புள் வை..

கறைபிடித்த, கேவலமான, குமட்டுகிற சிவந்த வாயையும் வெள்ளைப் பற்களையும் காட்டி இளித்தான்.

‘உன் வாயைப் பொத்தி குத்துவேன்,’ என்றாள் குழந்தையின் தாய், கடுமையாக.

அவன் திரும்பவும் பாடத் துவங்கினான். அவள் அவனை அடித்தாள்.

‘இப்போ என்ன செய்வது? என்று சொல்லிக் கொண்டு தந்தை தள்ளாடிக் கொண்டு உள்ளே வந்தார்.

இளைஞன் திரும்பவும் பாடத் துவங்கினான். அவனுடைய சகோதரி சிடுசிடுப்பாகவும் சீற்றத்துடனும் நின்று கொண்டிருந்தாள்.

‘ஏன் அது உன்னை எரிச்சலடைய வைக்கிறது?’ என்றாள் முத்த செல்வி றோபொத்தம். தாய் எம்மாவிடம் கூர்மையாக. ‘ஆண்டவா! உன்னுடைய கோபம் இன்னும் பண்படவில்லையா?’

செல்வி பேர்த்தா உள்ளே வந்து அழகான குழந்தையை வாங்கினாள்.

எதிலும் அக்கறை காட்டாமல் பருமனான தந்தை தன் நாற்காலியில் இருந்து கொண்டார். வெறுமையான கண்கள், சீர் குலைந்த உடல். அவர்கள் என்ன செய்யவும் விட்டு விட்டு, அவர் நொருங்கிக் கொண்டிருந்தார். இருந்தும் சாபம் போல சிறு சக்தி அவரில் இருந்து கொண்டிருந்தது. காந்தக்கல் பிணைத்து வைத்திருப்பது போல அவர் இன்னும் தன் சிதைவில் கூட அவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அழிபாட்டில் கூட இன்னும் வீட்டில் அவர் தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். தன் சிதைவில் கூட அவர் அவர்களின் இருப்பை கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தார். அவர்கள் எக்காலத்திலும் தம் வாழ்க்கையை வாழவில்லை. அவர் வாழ்வு, அவர் ஆணை அவர்கள் மேல் எப்பொழுதும் இருந்து, கட்டுப்படுத்தி வைத்திருந்தது. அவர்கள் அரை மனிதர்கள் மட்டுந்தான்.

பெயர் சூட்டல் சடங்கின் அடுத்த நாள் கதவடியில் தள்ளாடிக் கொண்டு இன்னும் வாழ்வில் மகிழ்ச்சி இருந்து கொண்டிருக்க பெரும் குரலில் அவர் அறிவித்தார்: ‘டெய்சி மலர்கள் பூமியை ஒளிர வைக்கின்றன. எண்ணிறந்த அம்மலர்கள் காலையைப் போற்றி தம் கைகளை தட்டுகின்றன.’ அவருடைய மகள்மார் சிடுசிடுப்புடன் சுருங்கிக் கொண்டார்கள்.



mahalingam.k@thaiveedu.com



வசந்தம் வழங்கும்

சமூகஉளநலம் பேணும் கருத்தாடல் தொடர் 4

# போதையின் பாதையில் எங்கே செல்கிறோம்?
# நினைவை இழந்துவிட்டோரின் நிலைமைகள்...

இவை பற்றி அறிய எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்:

* போதையின் தாக்கம் - காலம் கடக்கின்ற போதைப்பிணியும் குடும்பங்களில் அதன் தாக்கமும்
* போதைவிலக்கின் அறிகுறிகள்: வைத்திய நிவாரணம் உண்டா?
* கட்டிளம் பருவத்தினரின் போதைப்பொருள் பாவனையில் பெற்றாரியம்
* வீடியோ விளையாட்டு வினையும் பெற்றோரின் கரிசனையும்



வசந்தம் - தமிழ் உளவளத்துணை நிலையம்

Join us on Nov. 02, 2020 at 7pm on Zoom

தொகுத்து வழங்குபவர் கலாநிதி பார்வதி கந்தசாமி

Meeting ID: 918 584 6813 Zoom Number : 1 647 374 4685

கேள்விகள் அல்லது கவலைகள் உண்டா? அழையுங்கள்: 416-847-4172

மின்னஞ்சல்: vasanthamwellness@gmail.com

# தமிழ்வலை - 61


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-61 வினா

**இடமிருந்து வலம்**

இடமிருந்து வலம்

1 தனியுரிமை ஆதனம்

3 கவிஞர் உருத்திரமூர்த்தியின் புனைபெயர்

7 பணப்பொதி

8 செலவுக் கணக்கு மடல்

9 குறைத்துக் கூறு

14 ஒரு யாழ்ப்பாண வரலாற்று நூல்

15 நீங்கு

16 நால்வகை யுகங்களுள் ஒன்று

17 தேரிழு

18 துணிவு

**மேலிருந்து கீழ்**

மேலிருந்து கீழ்

1 இஸ்லாமிய திருமணம்

2 தலைவனும் தலைவியும் சந்தித்தல்

4 உமிழும் கலம்

5 நியாயம் கெட்ட வீண்வாதம்

6 கண்டி

10 மேற்காசிய நாடு

11 ஒருவகை ஏவாயுதம்

12 பிடிவாதம் செய்

13 நெடுங்கணக்கு

14 ஓர் இந்திய சமயம்

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல்
அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து
அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.


பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 60க்கான விடைகள்



## தமிழ்வலை-60 பெறுபேறுகள்

தமிழ்வலை 60 இல் யாருமே
சரியான விடை அனுப்பாதமையினால்,
தமிழ்வலை - 61 க்கான பரிசு
இரட்டிப்பாக வழங்கப்படும்.





Real Estate
✓ Residential
✓ Commercial
✓ Investment
✓ Property Management
✓ Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Insurance
✓ Life & Health
✓ Travel
✓ Key Person
✓ Buy & Sell
✓ RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
Tax
✓ Personal
✓ Self Employed
✓ Corporate
✓ Estate
✓ Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
INTEGRITY ★ HONESTY ★ RELIABILITY ★★★★★

# பனி விழும் பனை வனம்

## பகுதி: 6

- செல்வம் அருளானந்தம் -



ஒரு பின்னேரம்... கடற்கரைக்குப் பக்கத்தில இருந்த பெரிய பூவரசு மர நிழலிலை, ஒரு கல்லிலை சாய்ந்தபடி நான் கடலைப் பார்த்துகொண்டிருந்த பொதிலை லூக்காஸ் சம்மாட்டி என்னைத் தேடி வந்தார்.

அந்தி வானத்தைப் பார்த்தபடியிருந்த நான் 'என்ன அழகு... பொன்னை உருக்கி வார்த்து வானத்திலை காய வைச்ச மாதிரியல்லோ கிடக்கு.' எண்டு சொல்ல, அதெல்லாம் அந்தத் தச்சுவேலை செய்யுற பெடியன்ரை விளையாட்டல்லோ! எண்டு அவர் சொல்ல நான் நிமிர்ந்து பார்த்தன். நான் அந்த யேசுகிறித்துவைச் சொன்னன் எண்டவர், 'ஒரு செய்தி கேள்விப்பட்டனியோ' என என்னை உற்று பார்த்தார்.

'இண்டைக்கு நான் வாசிகசாலைக்குப் போகேல்லை. காலையிலையும் வேலை கூட... என்ன செய்தி?' என்று கேட்டன்.

முருக்கன் பக்கத்திலை மூன்று சடலங்கள் எரிஞ்சபடி கிடக்குதாம். ஆரெண்டு தெரியாதாம். நான் பார்க்கப் போனனான்... அதுக்கிடையிலை பொலிஸ்காரர் சடலங்களைக் கொண்டு போய் விட்டாங்கள். உனக்கேதும் தெரியுமோ? எண்டார்.

'எனக்கொண்டும் தெரியாது. ஏதாவது ஊர் பிரச்சினையாலை நடந்த கொலைகளாய் இருக்கும்' எண்டு அவருக்குச் சொன்னாலும் மனம் ஏதோ அந்தரப்பட்டது.

சிமியோனும் 'அந்தப்பக்கந்தான் இருக்கிறன்' எண்டு சொன்னவன். அவனுக்கு ஏதும் தெரிஞ்சு இருக்கும். அவனை இனி எங்க பாக்கிறது? அவங்களுக்குத்தான் ஏதாவது நடந்ததோ?

மனம் சந்தோசமாக இருகிற இந்த நேரத்தில் இந்தக் கதையைத் தொடர நான் விரும்பேல்லை. லூக்காசரும் அதை விட்டு விட்டு கடலையும் வானத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

'அப்பொழுது கடவுள், விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்று சேர, உலர்ந்த தரை தோன்றுக' என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள், உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்று திரண்ட நீருக்குக் கடல் என்று பெயரிட்டார்.' என்று சொல்லி கண்ணைச் செருகிக் கொண்டு என்னைப் பார்த்தார்.

மனுசனுக்குப் பைபிளிலை எல்லாம் மனப்பாடமாய்தான் இருக்கு. இதை இப்ப பாராட்டினால் தொடர்ந்து வேதாகமத்தைச் சொல்லப் போறார் என நினைச்சுக் கொண்டு.

'சம்மாட்டி, நீங்கள் கடவுள் உயிரோடை இருக்கிறார் எண்டு நம்புறியளோ' எண்டன்.

'ஏன்... நீ நம்பேல்லையோ?' எண்டு என்னைப் பார்த்துச் சிரிச்சபடி கேட்டார். நான் ஒண்டும் சொல்லாமல் அவரைப் பார்த்துச் சிரிச்சன்.

கடவுள் இருக்கிறாரோ இல்லையோ எண்டு தான் கதைப்பாங்கள். நீ என்னடாவெண்டால் கடவுள் உயிரோடை இருக்கிறாரோ எண்டு கேக்கிறது ஆச்சரியமாய் இருக்குது எண்டார்.

பிறகு, 'உன்ர கதையின்படி... ஒரு காலத்திலை உயிரோடை இருந்தவர் எண்டு ஒத்துக் கொள்ளுகிறாய்' எண்டு தொண்டையை செருமினார்.

நான் கொஞ்சம் சீரியசாய், அந்த லூயிஸ் மாதா தேவலாயத்தின்ர பென்னம்பெரிய கோபுரத்தைக் காட்டி 'அப்படியிருந்தாலும் வசதிகள் குறைஞ்ச இந்தக் கிராமத்திலை அந்தக் கடவுளுக்கு இப்படி பென்னாம் பெரிய கட்டடமும் வானத்தை முட்டுற கோரபுரங்களும் தேவையா எண்டு கேட்டன்.

'நான் விரலாலை நிலாவை காட்டுறன்... நீ நிலாவை பாராமல் விரலைப் பார்த்து கொண்டு கதைக்கிறாய்... நீ என்ன தி.க. காரனோ..? எனக் கோபமாய்க் கேட்டுப் போட்டு, 'என்ர கடவுள் யேசு. அவர் உந்தக் கோயிலையும் இருக்கலாம். இந்தக் கடல் அடிக்கிற அலைகளிலையும் சத்தம் வைச்சுக்கொண்டிருக்கலாம். நீ நினைக்கிறபடி அவர் இறந்திருக்கலாம் எண்டு வைச்சுக் கொண்டாலும் அவர் எவ்வளவு நல்ல மனிசன் தெரியுமோ?

முதலிலை, கடவுளை நேசி என்று சொன்னாலும், அதுக்கொத்த மாதிரி இன்னொரு கட்டளை... உன்னை நேசிப்பது போல உன் சக மனுசனை நேசி எண்டும், சக மனிசன் உனக்குப் பிழை செய்தால் ஏழு முறையல்ல... ஏழு எழுபது முறை மன்னித்து விடு எண்டு சொன்னவன் அல்லோ!

மாட்டுக் கொட்டிலிலை பிறந்து, இரவல் கல்லறையிலை அடக்கம் செய்யப்பட்டவன். பாம்புகளுக்கு வளைகள் உண்டு, பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. எனக்குத் தலை சாய்க்க இடமில்லை எண்டு சொல்லி அழுதவன் அல்லோ!

மதம் அரசியலாய் மாறிய பிறகு, இவ்வளவு பெரிய கோபுரங்களாலும் பளிங்குக் கற்களாலும் மனுசர் அவனை அடக்கப் பார்க்கிறாங்கள்' எண்டு ஒரு பெரிய பிரசங்கம் செய்து... பெரு மூச்சொண்டு விட்டார்.

நான் அவரை முறிக்காமல், எங்களுக்கு எங்கடை மதம் தெரியும். யேசுவையும் தெரியும். மற்ற மதங்களிலும் இதைவிட நல்ல விசயங்கள் இருக்கலாம். இந்தச் சிலுவையைக் கொண்டு எங்கடை மதம் எவ்வளவு கொடுமைகள் செய்தது எண்டு பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் எழுதியிருக்கிறாங்கள் எண்டன்.

'அதுக்கு நான் என்ன செய்யுறது? எனக்கு தெரிந்ததைத்தான் கதைக்கலாம். உன்னர வயதில் இப்படித்தான் நானும் இருந்தனான். அதுதான் உன்மேல் எனக்கு விரும்பம். உன்னைத் தேடி தேடி வாறதுக்கு அதுதான் காரணம்.

'தி.க புத்தகங்கள் எல்லாம் அப்ப கிடைக்கும். அதைப் படிச்சு அவர்களிலை ஒரு பிரியம் வந்தது உண்மைதான். ஆனா தனிப்பட்ட முறையிலை எனக்குச் சோதனைகள் வந்தபோது குறிப்பாய் அப்பரும் தம்பியும் புயலில் கடலில் காணாமல் போனபோது நான் அநாதையாய் போய் நிண்ட அந்த நாட்களிலைதான் மனம் மாறத் தொடங்கிச்சுது' எண்டார்.

ஆறுதலுக்காகவா கடவுள் மீது நம்பிக்கை வைத்தீர்கள் எண்டன்.

அப்படியெண்டு சொல்லுறத்துக்கு இல்லை. அப்ப எங்கடை ஊர் கோயிலிலை ஒரு தமிழ் தெரிந்த வெள்ளைக்காறச் சுவாமி தான் பங்குத்தந்தையாய் இருந்தவர்.

கோயில் வளவிலை நிண்டு யாரோடையோ கதைத்துக்கொண்டு நிண்ட என்னைக் கூப்பிட்டு இறந்து போன உன்னர அப்பா, தம்பிக்கு ஒரு நினைவுப்பூசை வைக்கேல்லையோ? எண்டார். நான் சட்டெண்டு சொன்னன். எனக்குக் கடவுள் எண்டுறத்துக்கு மேல நம்பிக்கையில்லை எண்டு.

அவர் கேட்டார். உன்ர அப்பா, தம்பிக்கு நம்பிக்கை இருந்ததுதானே, கட்டாயம் அவையின்ர ஆன்ம ஈடேற்றத்துக்காக, நீ பூசை வைக்க வேணும் எண்டார்.

அவரே தொடர்ந்து பேசினார். கடவுள் இருக்கிறார் இல்லை எண்டுறதை சமயம் தாண்டின அறிஞர்கள், விஞ்ஞானிகளாலை கூட வரையறுக்க முடியேல்லை. அதுக்குகளுக்கு ஆறுதலைக் கொடுப்பார். இல்லாவிட்டால் அது காற்றோடை போகட்டும். ஆனால், உனக்கும் உன்ர குடும்பத்துக்கும் அந்த வழிபாடு ஆறுதலாய் இருக்கும். உனக்கும் சொல்லுகிறேன், நீ கடவுளை நம்பு, கடவுள் இருந்தால் சரி, இல்லையெண்டால் எந்த நட்டமும் இல்லை. அப்படியே அவர் இல்லாட்டியும் அந்த நம்பிக்கை உன்னை நல்லவனாக வாழ வழி வகுக்கும்' எண்டார்.

அண்டைக்கு எனக்குள்ள ஒரு சிறிய மாற்றம் வந்தது உண்மைதான். தமிழ் இலக்கியம் வாசிக்கிறதோடை வேதாகமப் புத்தகத்தையும் வாசிக்க தொடங்கினன்.

லுக்காஸ் சம்மட்டி நிப்பாட்டுறமாதிரி இல்ல.

தமிழும் கடவுளும் எண்ட கோணத்திலை கதைக்கத் தொடங்கிட்டார். இந்த விசயங்களைக் கதைக்கிறத்துக்கு வேறை ஆள் உன்னைப்போல என்னைப் போல ஆட்கள் எப்படி முடிவு கட்டிறது?

நான் அவரை முறைச்சுப் பார்த்தன். 'நீ தமிழ் படிச்சனிதானே... இருந்த தமிழ் புலவர்களுக்குள்ள வள்ளுவன் பெரிய ஆள் எண்டு உலகமே சொல்லுது. அவர் கடவுள் பற்றி என்ன சொன்னவர் எண்டு நீ சொல்லு' எண்டார்.

எனக்குக் கோபம் வந்தது. வள்ளுவனை இதுக்கை ஏன் இழுக்கிறார் எண்டு. ஏன் சுவாமியோடை வாதாடுவான் எண்டு நான் மெல்ல விலக வெளிக்கிட்டன்.

சுவாமி விடுற மாதிரியில்லை... 'நீ உன்ர அப்பா, தம்பிக்கு நினைவு வழிபாட்டைச் செய். கடவுள் இருந்தால் அவர் அவர்

*தொடர்தல் 106ம் பக்கம்*

# பனி விழும் பனை...

**105ம் பக்கத் தொடர்ச்சி...**

கிடைக்கிறது கஸ்டம் எண்ட மாதிரி என் னட்டக் கொட்டிக் கொண்டிருந்தார்.

இதுக்குள்ளாலை இவரை இழுத்து வேறை கதைகளைப் பேசி அனுபவங்களை பெற் றுக் கொள்ள விரும்பின நான், கதையை மாத்த வெளிக்கிட்டன்.

அவற்றை தனிப்பட்ட வாழ்க்கையைக் கேள் விக்கு உள்ளாக்கினால் ஆள் திசை மாறும் எண்ட நினைப்போடை 'இப்படியெல்லாம் கதைக்கிற நீங்கள், ஒரு மனைவியிருக்க இன்னொரு பெண்ணை சேர்த்தது பிழை யன்று நினைக்கிறியள் தானே. எண்டன்.

சம்மாட்டியார் கொஞ்சம் சோர்ந்துதான் போனார். என்ன செய்யுறது? எல்லாத்திலை யும் தவறித்தான் போனன் எண்டார்.

அந்தநேரம் பார்த்து மரியகொறற்றியும் இன்னும் சில பெண்களும் அந்த வழியாக கோயிலுக்கு போய் கொண்டிருந்திச்சினம்.

நான் பார்த்துப் போட்டு பார்க்காத மாதிரி நிண்டன். கொறற்றி கூட்டத்தை விட்டுப் பின்னுக்கு விலகி நிண்டு எனக்குக் கை காட்டினா.

லூக்காஸ் சம்மாட்டி கடைக்கண்ணாலை அதைப் பார்த்து கொடுப்புகுள்ள சிரிச்சார். ஆளின்னர கவனத்தை மாத்துவம் எண்டு நினைச்சு, 'தவறித்தான் போனன் எண்டு சொன்னீங்கள். அதைப்பற்றிச் சொல் லுங்கோ' எண்டன்.

இப்ப உனக்கு அந்தப் பெண் கை காட்டி யதைப் பார்த்தியோ!

நீ பயந்து கோழை மாதிரி நிற்க, எப்ப டித் துணிச்சலாய் அந்தப் பெண் நடக் கிறாள். பெண் எண்டா அப்படித்தான். ஆண்களைவிட அற்புதமானவர்கள்' எண்டு சொன்னவர் நிப்பாட்டேல்லை. அதுக்காக அவள் உன்னைக் உயிராய் காதலிக் கிறாள் என்று அர்த்தமில்ல.

அவள் ஒரு கஸ்ரமான குடும்பத்தில் பிறந் தவளாயிருக்கலாம், உன்னக் கல்யாணம் முடிச்சால் ஒரு நல்வாழ்வு கிடைக்கலாம் எண்டு நினைக்கலாம். யாழ்பாணப் பெடி யள் எந்தச் சுத்துமாத்து செய்தெண்டாலும் குடும்பத்தை நல்லாய் வச்சிருப்பாங்கள் என்ற நம்பிக்கையின்ர அடிப்படையிலை யும் இந்தப் பிள்ளை உன்னைக் கலைக் கலாம் எண்டு சொல்லிச் சிரிச்சார்.

'அப்ப சம்மாட்டி, உங்கடை கதையின்படி காதல் எண்ட ஒண்டு இல்லை. எல்லா அன்புக்குப் பின்னாலையும் ஒரு பிளான் இருக்கு... அப்படித்தானே சொல்ல வாறி யள், அதுவும் குறிப்பாய்ப் பெண்கள்' எண்டு நான் சொல்ல,

நீ பிழையாக விளங்கிறாய். இந்த உல கமே பெண்களுக்கானது. ஆண்கள் எல் லாம் சும்மா தகப்பானாயும் கணவனாயும் மகனாயும் உதவி அல்லது உபத்திரவத் துக்காக இருப்பவர்கள்தான். நீ பழைய தமிழ் இலக்கியங்களைப் படி. குறிப்பாய்க் கம்பனைப் படி. எண்டார்.

இந்த மனிசன் இண்டைக்கு ஒரு முடிவோ டைதான் வந்திருக்கு. எப்படியாவது இதி லயிருந்து தப்பிச்சாகவேணும். என்ர உள் உணர்வோட்டங்கள் அவருக்கு விளங்கவும் வாய்ப்பில்லை. அவர் தொடந்து இலக்கி யம், பைபிள் என்று பேசுவது இரண்டு பக்கமும் பிடிகொண்ட வாளால் அறுப்பது போலிருந்தது எனக்கு.

'கம்பன் பெண்கள் என்றால் உருகிப் போய் விடுவான்' எண்டு அவர் சொல்ல, நானும் 'ஓம் ஓம் ஒரு படப் பாடலில் இராமனின் கதையல்ல இது சீதையின் கதையல்லோ இராமாயணம் எண்ட மாதிரி கண்ணதாச னின் பாட்டு ஒன்று. இருக்கு எண்டு எனக் கும் ஏதோ கொஞ்சம் தெரியும் எண்ட மாதிரிக் கதை சொல்ல...,

சீதையை விடு... கம்பனுக்கு மண்டோதரி யிலைதான் பெரிய பிரியம். அவவைப் பற்றி சொல்லேக்கை தன் கணவன் இரா- வணனை, 'நினைத்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்' எண்டு சொல்லுறான் கம்பன். இந்த மாதிரி சீதையைப் பற்றி கம்பன் எங்கையும் சொல்லேல்லை.

இராமன் மனுசனாய் வந்த கடவுள் எண்டு கும்பகர்ணனுக்குத் தெரியாது இந்திரஜித் துக்குத் தெரியாது. ஏன் இராவணக்கே தெரியாது. பெண் முன்னுணர்வு உள்ள வள் எண்டபடியால் 'ஆரா அமுதாய் அலைகடலில் கண்வளரும் நாராயணன் என்று' அவள் முன்னமே உணர்ந்திருந் தாள். ஏன் அகலிகையைப் பற்றி சொல் லேக்கையும் 'நெஞ்சினால் பிழையிலாள்' எண்டுதான் அடைமொழி போட்டு அழைக் கின்றான் கம்பன். உனக்கு ராமாயணம் பிடிக்காவில்லை எண்டால் சிலப்பதிகாரம் மணிமேகலை எண்ட காப்பியங்களைப் படி. மணிமேகலையிலை ஒரு கட்டத்திலை, சாது வன் என்பவன் கொல்லப்பட, அவன்ரை மனைவியும் அவனோடை சாகிறாள். அப்ப அவள்,

*'படுத்து உடன் வைத்த பாயல் பள்ளியும்*
*உடுத்த கூறையும் ஒள் எரி உறா அது*

*ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்*
*சூடிய மாலையும் தொல் நிறம் வழாது'*

எண்டு அவள் சொல்லுறாள்..'

பொறுமையிழந்த நான், 'இதை விடுங்கோ சம்மாட்டி, உங்கடை இரண்டாவதைப் பற்றி சொல்லுங்கோ எண்டு கொஞ்சம் உறுக் கலாய்த்தான் கேட்டன்.

'ஒம் ஒம் அதையும் சொல்லி என்ர பாவத்தை கரைக்கிறன். அதுதானே எங் கடை சமயத்திலை 'பாவமன்னிப்பு கேட் டல்' எண்டு ஒண்டு இருக்கே. அது, செய் ததை எல்லாம் சுவாமிக்குச் சொல்லி அவரை பாவத்திலை விழுத்திற சடங்கு' எண்டு சொல்லி கெக்கட்டமிட்டுச் சிரிச்சார்.

அப்ப நான் இதை விட நல்ல கறுப்பா யும், உயரத்தோடையும் நல்ல எடுப்பாய் இருந்த காலம்.

நான் இடைமறிச்சு, 'இதைவிடக் கறுப்பாய் எப்படி இருக்கிறது' எண்டு கேக்க, நீ இப்ப கதை கேக்கப் போறியோ இல்ல...

இல்ல... இல்ல கதையைச் சொல்லுங்கோ சம்மட்டி எண்டு பதறியபடி சொல்ல, கதையைத் தொடர்ந்தார்.

என்னைக் கேட்கமலே எனக்குக் கல்யா ணம் பேசிச் செய்து வைச்சவை. சொத்துப் பத்து, அடக்க ஒழுக்கம், அழகு எண்டு பேசிச் செய்யுற கல்யாணம் இண்டைக்கும் எங்கட கிராமங்களிலை நடக்குது. இப்பவே இப்படியெண்டால் 45 வருசத்துக்கு முதல்ல யோசிச்சுப் பார்.

நானும் கல்யாணம் முடிச்சன். அப்பாவும் இல்லாதபடியால் எல்லாப் பொறுப்புகளும் பணமும் வசதியும் என்னட்டை வந்திட்டுது.

மீன் பாடு நிறைய இருக்கிற நாட்களிலை எனக்கு வேலை கூட. விடியப்புறம் தொழி லாளர்களை நேரத்தோடை எழுப்பிக் கட லுக்கு அனுப்ப வேணும்.

அப்ப எனக்கு நிறையத் தொழிலாளர்கள் தேவைப்பட்டிச்சினம். அப்படித்தான் அவ னொருவன் எனக்கு அகப்பட்டான். அவன் பெரும் குடிகாரன். ஆனால் நல்லாய்த் தொழில் செய்ய கூடிய இளம் பெடியன். அவன் இரவிலை நல்லாய்க் குடிச்சுப் போட்டுதான் படுப்பான். விடியப்பறம் நான் தான் படலைக்கை நிண்டு கூப்பிட்டு எழும் பிவிட வேணும்.

அப்படி ஒருநாள் அவன்ரை படலைக்கை நிண்டு கூப்பிடேக்கை, அவனை வழிய னுப்பி போட்டு அவன்னர பெண்சாதி 'சம் மாட்டி தேத்தண்ணீ குடிச்சிட்டுப் போங்கோ' எண்டா.

அண்டைக்கு தொடங்கினது தான் அந்தத் தொடர்பு.

அது அப்பிடியே தொடரேக்கை ஒருநாள், 'ஊர் முழுக்கக் கதைக்குது... என்னைக் கூட்டிக்கொண்டு போங்கோ, இல்லாவிட் டால் நான் சாகவேணும்' எண்டு அவள் கேட்கத் தொடங்கினாள்.

பெண்பாவம் பொல்லாதது இல்லையா? இதுக்கு மேலை அவளை ஏமாத்தக் கூடாது எண்டு நினைச்சு என்ர வாழ் வோடை இணைச்சன்' எண்டார். 'அவளின்ர புருசனுக்குக் கொஞ்ச பணம் குடுத்தன். அவன் ஊரைவிட்டு போய் வேறை கல் யாணம் முடிச்சு நல்லாயிருக்கிறான்' எண் டார்.

நான் அவரை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரிப் பார்த்தன்.

அவர், என்ர பார்வையை எதிர்கொள்ளா மல், 'இரத்தம் இளமையாய் இருந்தது, பணம் கிடைச்சது. அப்ப ஊரையோ அல் லது திருச்சபையையோ நான் சட்டை செய்யேல்லை. நினைச்சதைச் செய்தன். அதை இண்டைக்கு உணர்ந்திருக்கிறன்' எண்டு சொல்லேக்கை பேச்சிலை குற்ற வுணர்வு தெரிஞ்சிது.

'யேசுவை உங்கடை ஞானகுரு எண்டு சொன்னீங்கள். கதைக்கேக்கை நல்ல மாதிரி இருந்தது... வாழ்க்கையை பார்க் கேக்கை... எண்டு நான் தொடங்க,

அவர் கொஞ்சம் உரத்த குரலிலை 'தம்பி, நீ வாசிக்கிற குறிஞ்சி மலர், பொன்விலங்கு அல்லது மு. வரதராசனின்ர கரித்துண்டு, இல்ல சாண்டிலியன்ரை கடல்புற மாதி ரியோ வாழ்க்கை இருக்காது' எண்டார்.

போன கிழமை நடந்த ஒரு கதையைச் சொல்லுறன் கேள் எண்டார்.

உன்னட்டை சிலவேளை ஐஸ் அடிக்க மகேந்திரன் எண்டு ஒருவன் வருவான் தெரியுமோ?. 'ஒம் ஒம் இடைக்கிடை வாற வர், அவருக்கு நல்ல வடிவான பெண் சாதி' எண்டு சொன்னன்.

'அவவுக்கும் சலீமுக்கும் தொடர்பு இருக் கெண்டு கதைக்கினம்' எண்டு சொல்லத் தொடங்க, நான் திடுக்கிட்டுப் பார்த்தன்.

'பொறுமையாய் என்னர கதையை கேள்' எண்டு கொஞ்சம் கடுப்போடை சொன்ன சம்மாட்டி, 'எனக்கு மகேந்திரன் முன்னூறு ரூபாய் தர வேணும். அந்தக் காசை வாங்குறத்துக்காக அவன்ரை வீட்டுக்குப் போனன்.

வீட்டுக்குள்ள வெளியிலை கேக்கிற மாதிரி சண்டை. என்ர காதிலை சத்தம் விழுந்தது. சண்டைக்குக் காரணம் சலீம்தான்.

மகேந்திரனுக்கு சாடையான வெறி, அவன் கத்திக்கொண்டு நின்றான். அவவோ... அவனை விட சத்தமாய் 'உன்ரையை கொண்டேபோயிற்றான், அது இஞ்சை தானே கிடக்குது. உதுக்கேன் இவ்வளவு துள்ளல் துள்ளுறாய்' எண்டு அகங்காரத் தோடை சொன்னதைக் கேட்டு நான் திகைச் சுப் போனன். என்றார்.

இதைக் கேட்ட நானும் திகைத்து போனேன்.



*selvam.a@thaiveedu.com*



# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

## $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

## $375 Mo.

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

OPEN HOUSE SAT & SUN 2-4 PM



**19 BINGLEY RD, TORONTO**
FINCH / MORNINGSIDE
4 2

FOR SALE



**TORONTO**
NEILSON RD / SHEPPARD AVE E
1 1

FOR SALE



**TORONTO**
MORNINGSIDE AVE / ELLESMERE RD
2 2

FOR SALE



**TORONTO**
MIDLAND / DANFORTH
2+1 2

FOR SALE



**OSHAWA**
DEAN / WILSON
3+2 2 SEP ENTRANCE

FOR SALE



**OSHAWA**
HARMONY RD / COPPERFIELD DR
3 3

FOR SALE



**OSHAWA**
THORNTON / ADELAIDE
3 3 FINISHED BASEMENT

FOR SALE



**AJAX**
WESTNEY / ROSSLAND / HARDWOOD
3+1 2 FINISHED BASEMENT

FOR SALE



**TORONTO**
MCCOWAN / 401
4 2

FOR SALE



**TORONTO**
MCCOWAN / 401
4 2

FOR SALE



**TORONTO**
MCCOWAN / ELLESMERE
2 2

FOR SALE



**TORONTO**
NEILSON / SHEPPARD
3 3 FINISHED BASEMENT

FOR SALE



**TORONTO**
LAWRENCE / SCARBOROUGH GOLF CL
3+2 2 FINISHED BASEMENT

FOR SALE



**TORONTO**
MARKHAM / LAWRENCE
3+3 2 SEP ENTRANCE

FOR SALE



**TORONTO**
RIVER ST TO RYNARD TO FAIRGROU
5 4

FOR SALE



**TORONTO**
ELLESMERE / SCARB. GOLF CLUB
3+2 2 FINISHED BASEMENT | SEP ENTRANCE

FOR SALE



**TORONTO**
NEILSON RD / SOUTH OF HWY 401
4 3 FINISHED BASEMENT | SEP ENTRANCE

FOR SALE



**TORONTO**
PORT UNION / 401
3 2 FINISHED BASEMENT W/O

FOR SALE



**TORONTO**
MEADOWVALE / ELLESMERE
3 4 FINISHED BASEMENT

FOR SALE



**TORONTO**
PORT UNION / SHEPPARD
4+1 3



POWER BROTHERS REAL ESTATE

**UTHAYAN SIVARAJAH** BROKER
416.301.5555
WWW.PYRAMIDGROUP.COM

SUGAN SIVARAJAH BROKER OF RECORD 416.890.9999
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Independently Owned and Operated

Not intended to solicit properties currently listed for sale currently under contract with a Brokerage.

ஒ

ணினித் திரையில் தோன்றிய ஓலைச்சுவடிகளின் எழுத்துக் களைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. தமிழ்ப்பிராமி யையோ வட்டெழுத்துக்களையோ சிறிதே னும் ஒத்ததாக அல்லாமல் அவையிருந் தன. எனக்கோ மண்டை காய்ந்தது. நீண்ட யோசனையின் பின்னர் அந்தப் படங்களில் காணப்படும் வரிவடிவங்களை முதலில் அடையாளம் காணம் நோக்குடன் பட வகைப்பாடாக்கம் (image classification) செய்வதற்கான செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டினை (Artificial Intelligent processing) செயற்படுத்தினோம்.

இச்செயல்முறையினூடாக முப்பத்தெட்டு (35) வகையான வரிவடிவங்களை அடை யாளங்காணக்கூடியதாக இருந்தது. பின்னர் தொடக்ககால மறைகுறியாக்க உத்தியி னைப் (decryption method) பயன்படுத்தி இவ்வெழுத்துக்கள் இந்தப்படங்களில் காணப்பட்ட எண்ணிக்கைகளையும், தற் காலத்தில் கிடைக்கும் சித்தர் இலக்கியங் களில் காணப்படும் எழுத்துக்களின் நிகழ் தகவோடு (probablity) ஒப்பிட்டும், அதன் பின்னர் அப்படங்களில் அவதானிக்கப்பட்ட ஒவ்வொரு சொற்களின் முதலெழுத்துக் களை ஆராய்ந்தும் ஓரளவிற்கு எம்மால் அவ்வரிவடிவங்களில் பலவற்றை உய்த்து ணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

பெரும்பாலான வரிவடிவங்களை உய்த்து ணர்ந்த பின்னர் ஏனைய வரிவடிவங்களை

## பகுதி: 5

அடையாளங்காண்பது சாதாரணமான புதிர்ப்போட்டியாகவே இருந்தது. கீறிட்ட இடங்களை நிரப்புவதுபோல் ஒவ்வொரு எழுத்தாக இட்டு நிரப்பி, அது கருத்துள்ள ஒரு சொல்லை உருவாக்குகின்றதா என் பதைக் கண்டறிந்து, பின்னர் அவ்வெழுத்து ஏனைய இடங்களிலும் சரிவரப் பொருந்து கின்றதா என்பதனை வாய்ப்புப்பார்த்து உறுதிப்படுத்துவதற்கான நிரலிகளையும் உருவாக்கி முடிக்கவே எமக்கு இருவாரங் களாகி விட்டிருந்தன.

இந்தக்காலத்திற்குள் எனக்கு இந்த வேலை யில் அலுப்புத்தட்டத் தொடங்கிவிட்டிருந் தது. இதனைக் கண்டுபிடித்து நான் என் னத்தைச் சாதிக்கப்போகின்றேன்? அல்லது எனக்குத்தான் இதனால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது? என்கின்ற எண் ணங்கள் எழுந்து ஓர் ஆயாசத்தை எனக் குள் உருவாக்கியது.


இவ்வுலகைப் பொறுத்தவரைக்கும் நான் என்றைக்கோ இறந்து விட்டவன். எனவே இதைக்கண்டுபிடித்தாலும் அந்தப்பெருமை என்னைச் சேரப்போவதில்லை. நானும் ஒரு இயந்திரப்பொறியாக இந்தப்பொறி யினால் கையாளப்படுகின்றேனே தவிர எனக்கென்று தனிப்பட எந்தவொரு ஆதா யமோ அனுகூலமோ விளையப்போவ தில்லை. வேளாவேளைக்கு சாப்பாடும் நீராகாரங்களும் மட்டும் தவறாமல் கிடைத் துவிடுகின்றது. இந்தச்சாப்பாடு சாப்பிட்டு நாக்கிற்கும் அலுத்துப் போய்விட்டது. எனக்கே எனக்கென்றான தனிமையும் இங்கே கிடையாது. இவைபோன்ற கார ணங்களினால் நான் உளச்சோர்விற்கு ஆளாகிக் கொண்டிருப்பது புரிந்தது. ஆயி னும் அதிலிருந்து விடுபட மனமுமின்றி வழியுமின்றி இருந்தேன்.

நான் உளச்சோர்வுற்றிருப்பதை அந்தக் குரங்கும் மனிதப்பொறியும் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அவை வந்து என்னை ஆற்றுப்படுத்துவதற்கான முயற் சிகளில் ஈடுபடுவதை என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

நீ உன் செயல்களின் விழைவுகளைப் பற்றி அதிகம் கவலைப்படுகின்றாய். பகவத்கீதை யில் கிருஷ்ணன் என்ன சொல்கின்றான் என்பது உனக்குத் தெரிந்ததுதானே. பின் எதற்காக உன்உளம் சோர்வடைகின்றது என்று தொடங்கியது அந்தக்குரங்கு.

கீதாவுபதேசம் கேட்ட அருச்சுனனே பதின் மூன்று நாட்களில் அபிமன்யு இறந்ததை யறிந்து சோகத்தில் மூழ்கவில்லையா? வாழ்வில் பிடிப்பிழந்ததாகப் புலம்பவில் லையா? நீங்களானால் என்னை என் குடும் பத்திடமிருந்து வலிந்து பிரித்து வைத்தி ருக்கின்றீர்கள். அருச்சுனனுக்கு மகனை யிழந்தாலும் தன் வீரத்தைப் பறைசாற்றிப் பெருமைசேர்க்கும் பேறிருந்தது. ஆனால் எனக்கு?

நீ நிக்கலஸ் ரெஸ்லா பற்றிக் கேள்விப்



# மனிதன் படைத்த குரங்கு

- வல்லிபுரம் சுகந்தன் -

படவில்லையா? அவர் இருக்கும் காலத் தில் அவரின் பெருமைகள் மறைக்கப்பட் டிருந்தன. அவரின் கண்டுபிடிப்புகளைப் பிறர் உரிமை கோரியிருந்தனர். அவர் இவையெதையுமே கணக்கிலெடுக்காமல் உலகிற்கே இலவச மின்சாரம் வழங்க முயற்சித்ததை நீ அறியவில்லையா? இன்று மின்சாரக் கார்களுக்கு அவரின் பெயரினை வைத்து எலன் மாஸ்க் அழகு பாரப்பதை அறிந்திருப்பாய்தானே? தோமஸ் அல்வா எடிசனின் மோசடிகளும் அம்பலத்திற்கு வருவதை அறிந்திருப்பாய். பின் எதற்காக வருத்தப்படுகின்றாய்? வரலாற்றில் நின் பெயரும் நிலைபெறும். கவலையடையாதே.

நான் எதுவும் பேசாதிருந்தேன்.

வரலாற்றில் வேண்டுமென்றே மறைக்கப் பட்ட வரலாற்று நாயகர்கள் காலம் கடந் தாவது மீண்டும் வெளிக்கொணரப்படுவார் கள். எனவே நீ பலனைப் பற்றி நினைக் காமல் உன் கடமையைச் செய். விளைவு கள் அல்ல வாழ்க்கை. விழைவும் அதை விளைவிக்கச் செய்யும் செயல்களுமே வாழ்க்கை. வாழக்கை என்பது குட்டை போன்று ஓரிடத்தில் தேங்கிக்கிடப்பதல்ல. அது ஒரு நதி போன்று இறப்பெனும் கடலை அடையும் வரை ஓடிக்கொண்டே யிருக்க வேண்டும்.

என்னதான் நீ சொன்னாலும் என்மனம் உற்சாகம் பெறமுடியாமல் உளச்சோர் வடைந்தே இருக்கின்றது.

உன் உளச்சோர்வைப் போக்கும் வழி எனக்குத் தெரியும் என்றவாறே இடை புகுந்து கண்சிமிட்டியது மனிதப்பொறி.

உனக்கொரு துணை தேவைப்படுகின்றது என்று ஊகிக்கின்றேன். அனும பக்தனான இந்தக் குரங்கால் அதை அனுமானிக்க முடியாமல் இருக்கிறது. என்ன? நான் சொல்வது சரிதானே? என்று சொல்லி மீண்டும் கண்ணடித்தது அந்த மானிடப் பொறி.

உனக்கு என்னுடன் தனகாமல் இருக்க முடிவதில்லை. என்ன?

உன்னுடன் தனகாமல் இந்தச் சிடுமூஞ்சி யிடனா தனக முடியும் என என்னையும் இழுத்தது அந்த மானிடப்பொறி.

ஏனோ தெரியவில்லை. எனக்கு அந்தக் குரங்கையும் மானிடப்பொறியையும் பார்க் கும் போது ஒரு தாத்தாவையும் அவரின் பேரனையும் பார்ப்பதாகவே இப்போ தெல்லாம் தோன்றத் தொடங்கியிருந்தது. தாத்தாவிடம் பேரனுக்கில்லாத உரிமையா என்பதுபோல் அம்மானிடப்பொறியும் அந் தக்குரங்கை எந்நேரமும் சீண்டிக்கொண் டேயிருக்கும். அந்தக்குரங்கும் அம்மானி டப்பொறி செய்யும் அனைத்துக் சேட்டை களையும் இரசித்தவாறே எதுவும் பேசா மல் இருக்கும். அவையிரண்டும் தங்களுக் குள் ஐக்கியமாகியிருப்பது போன்று என் னுடன் நெருங்கிப் பழகுவதில்லை. எனக் கும் அவற்றுடன் அதிக நெருக்கம் காட் டுவதில் ஆர்வமும் இருக்கவில்லை.

உனக்கு ஒரு துணைக்கு நாங்கள் ஏற் பாடு செய்கின்றோம் என்றது அம்மானி டப்பொறி.

இல்லைத் தேவையில்லை. எனனைப்போல் இன்னுமொருவரை அவரது குடும்பத்திட மிருந்து பிரித்து விடாதீர்கள். எனக்கு அந்தப் பாவம் வேண்டாம் என்றேன்.

நீ புத்திசாலிதான். பாராட்டுகின்றேன். என் றவாறே என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தது அம்மானிடப்பொறி.

எதற்காக இப்போது சிரிக்கின்றாய் என் றேன் கொஞ்சம் சினத்துடன்.

உன் மொழி ஆழுமையைப் பார்த்து நான் வியக்கின்றேன்.

அப்படி என்ன மொழியாழுமையைக் கண் டுவிட்டாய் என் பதிலில்?

இன்னுமொருவனை என்றோ ஒருத்தியை என்றோ நேரடியாகச் சொல்லாமல் ஒரு வரை என்று பொதுப்பாலில் சொல்லி நீ

*தொடர்தல் 110ம் பக்கம்*

# மனிதன் படைத்த...

**109ம் பக்கத் தொடர்ச்சி...**

எம்மை ஆழம் பார்ப்பதை இத்தனைநாட்கள் உன்னுடன் பழகிய பின்னர் அறிய முடியாமல் இருப்பேனா?

அறப்படிச்ச மூஞ்சூறு கழனிப்பானைக் குள்ள விழுந்துதாம். அறப்படிச்சால் உப்பிடித்தான் கண்டதையும் கடியதையும் யோசிக்கத் தோன்றும்.

அது அறப்படிச்ச மூஞ்சூறு இல்லை. அறவடித்த முன்சோறு.

சரி. இது இனி பழமொழிகளை வைத்து அலுப்படிக்கப் போகின்றது. மனதுக்குள் கடுப்பேறியது.

எனது முகம் கடுத்ததை அக்குரங்கும் அவதானித்திருக்க வேண்டும். இப்போது அது இடையே புகுந்து, வேண்டுமானால் பேச்சுத் துணைக்கு ஒரு ரோபோவை உனக்கு ஒழுங்குபடுத்தித் தருவதற்கு ஆவன செய்கின்றேன் என்றது.

என்ன கிழவா உளறுகிறாய்? இவனுக்கும் உன்னைப்போல் வெறும் பேச்சுத்துணைக் குத்தான் ஆள் தேவை என்று நினைத்தாயா? நான் இவனுக்கு அதற்கும் மேலாக எல்லா வகையிலும் துணையாக இருக்கத் தக்கதான ஒரு துணையையே அளிக்க விரும்புகின்றேன். இவனையும் கடவுளாக்குவதாகக் கூறிவிட்டு அவனது தேவைகளைக் கூடக் கவனிக்காவிட்டால் எப்படி?

ஏதோ புரிந்தது போலவும் எதுவுமே புரியாதது போலவும் நான் திரிசங்கு நிலையில் விழித்தேன்.

அப்படியானால் இன்னுமோர் மானிட உயிரியை எம்முடன் இணைக்கப் போகின்றாயா? என்று அம்மானிடப் பொறியை விளித்தது அக்குரங்கு.

இல்லை. நாங்கள் மூவர் மட்டுமே இந்த இலக்கின் பயணத்தில் இணைந்து பயணிக்கப் போகின்றோம். இவ்வுலகை ஆண்ட, ஆளும், ஆளப்போகும் மூன்று வகை இனங்களையும் நாம் ஒவ்வொரு வரும் பிரதிநிதித்துவம் செய்வதால் இன்னொரு மானிடரை எம்முடன் இணைத்துக்கொள்ள முடியாது.

ஓ! அப்ப அதற்கும் ரோபோவா?

ஓம்! இம்மானிடனுக்காக இன்னொரு மானிட உயிரியை எம்முடன் இணைப்பது எமது நோக்கிற்கே ஆபத்தாக முடியலாம். இவனுக்கு ஒரு மானிடப்பெண் துணையினை எம்மால் ஏற்படுத்தித் தர முடியாது. ஆனால் மானிடப் பெண்ணிலும் மேம்பட்டதான ஒரு பெண் துணையினை வேண்டுமானால் எங்களால் உருவாக்கித்தர முடியும். இவனுக்குப் பிடித்த வடிவில் அவ்வாறான பொம்மைகளை நாங்கள் யப்பானிலிருந்தோ இங்கிலாந்திலிருந்தோ தருவித்துக்கொள்ள முடியும். செயற்கை நுண்ணறிவின் மூலமாக இவன் தனக்கான மிகப்பொருத்தமான துணையாக அதிலொன்றைப் பயிற்றுவித்து விட்டால், பின் அந்த மாதிரியை ஏனைய பொம்மைகளிலும் இவனால் பயன்படுத்தமுடியும்.

ச்சே! என்ன கதை கதைக்கிறீர்கள் நீங்கள் இருவரும்?

உனக்குப் பிடிக்காத மாதிரி நீ எங்களுடன் உரையாடலாம். ஆனால் உனக்குத் தேவையான அனைத்தையும் செய்து தர வேண்டியது எங்களது கடமை. விரையிலேயே அவை உன்னை வந்தடைந்துவிடும். அவற்றைப் பயன்படுத்துவதும் பயன்படுத்தாமல் இருப்பதும் உன்னைப் பொறுத்தது. இனி உங்கள் இருவரையும் தொந்தரவு செய்யாமல் நான் விலகிக் கொள்கின்றேன். உங்கள் வேலையினை நீங்கள் தொடரலாம். கூறிவிட்டு விலகிச் சென்றது மானிடப்பொறி.

மானிடவுயிரியைப் படைத்ததே உங்கள் உயிரினம் தான் என்று நீ கூறினாயே. பின் எப்படி நீ அம்மானிட உயிரிகளில் உருவான சித்தர்களின் சிந்தனைகளையோ அவற்றின் கருத்துகளையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றாய்? அப்படியானால் உங்கள் உயிரினத்திலும் பார்க்க எமது உயிரினம் மேம்பட்ட அறிவைக் கொண்டிருக்கின்றது என்பதை இப்போதாவது ஏற்றுக் கொள்கின்றாயா?

நீ என்னுடன் ஒப்பிடுகின்றாய் அப்பனே. என்னிலும் எத்தனையோ மடங்கு அறிவில் சிறந்து விளங்கிய எம்மவர்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்களுடன் உங்கள் சித்தர்களையெல்லாம் ஒப்பிடவே முடியாது. அதுமட்டுமல்ல. நாங்கள் உங்கள் உடலில் உள்ள நரம்பு மண்டலங்களில் ஒரு வித சக்தி அலைகளை உருவாக்கிவிட்டிருக்கின்றோம். அவற்றைக் குவியப்படுத்திப் பயிற்சிகளை மேற்கொண்டால் உங்களின் மூலாதாரத்திலிருந்து முதல் சக்தி மையம் உருவாகும். அது படிப்படியாக மேலேறி;

தெரியும்.

குண்டலினி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலை
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே

என்று ஔவையாரும் பாடியிருக்கின்றார்.

அதே தான். எப்போது உச்சந்தலையில் உள்ள சக்திமண்டலம் திறக்கின்றதோ அப்போது நீங்கள் அளவிலா பேரானந்தத்தை அடைவீர்கள். அதுகூட எம்மால் உருவாக்கப்பட்டதே. அதே சக்தியை நீங்கள் கீழே விட்டாலும் இன்பத்தை அடைவீர்கள். அதையே சிற்றின்பம் என்கின்றீர்கள்.

அட என்ன விந்தை! விந்தை விரயமாக்காமல் மேலனுப்பினால் பேரின்பம். அதையே கீழே விட்டால் சிற்றின்பம்!

இந்த உரையாடல்களின் பின்னர் என் மனச்சோர்வு அகன்று மனம் புத்துணர்ச்சி பெற்றிருப்பதை என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

மேலும் இரு வாரங்களில் இயந்திரக் கற்கை நிரலிகளின் உதவியுடன் எம்மால் அச்சுவடிகளை வாசிக்கக் கூடியதாவிருந்தது. ஆயினும் அவற்றின் உட்பொருட்களை விளங்கிக் கொள்வது மிகவும் சவால் நிறைந்ததாக விளங்கியது. அவற்றைப் புரிந்து கொள்வதற்கு இயந்திரக்கற் கையின் செயற்கை நுண்ணறிவால் முடியாது என்பதும் புரிந்தது.

கடவுளைப் பற்றிப் போதிக்கும் வேதம், அதன் முடிவில் கடவுள் இல்லை என்று கூறுவதுபோல் இச்சுவடிகளின் ஆழ்பொருட்களும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு ஒரு வித அயர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

அதில் ஒரு பாடல்த் தொகுப்பு என் கவனத்தை அதிகம் ஈர்த்தது. கடவுளைக் கண் முன்னே உறுதியாய்க் காட்டுவதாய் சத்தியம் செய்தது. அதில் ஆழ்ந்து மூழ்கத் தொடங்கினேன்.

அது உபநிடதங்களில் வரும் கேள்வி பதில் போன்று அமைந்திருந்தது.

நீ தான் கடவுள். இவ்வுலகைப் படைத்தவனும் நீதான். அதைக் காப்பவனும் நீதான். அதை அழிப்பவனும் நீதான்.

நான் எப்படிக் கடவுளாவேன்? எப்படி நான் இவ்வுலகைப் படைத்தவனாவேன்? அதைக் காத்து அழிப்பவனாவேன்? நீ என்னை வெறும் மாயைக்குள் தள்கின்றாய்?

அப்படியானால் எல்லாமே மாயை. நீ மாயை. இவ்வுலகம் மாயை.

நீ என்னைக் குழப்புகின்றாய்.

எப்படி நீ இவ்வுலகை உணருகின்றாய்?

என் ஐம்புலன்களால்.

நன்றாகச் சிந்தித்துப்பார். நீ உன் கண்கள் வழியே பார்த்தாலும் அதைக் கண்கள் பார்ப்பதில்லை. அவை வெறும் கருவிகளே. கனவினில் எப்படிக் காட்சிகளைக் காண்கின்றாய்? ஏனைய புலன்களையும் எவ்வாறு அறிகின்றாய்?

என் ஐம்புலன்களும் என் சிந்தையில் அவற்றை உணர வைக்கின்றனவா?

அதேதான். நீ காணும் இவ்வுலகு உன் கண்களெனும் கருவிகொண்டு உன் சிந்தை படைத்தது. உன் உற்றார் உறவினர் சுற்றம் எல்லாம் அவ்வாறே?

அது எப்படி? என்னை உருவாக்கியது என்பெற்றோர்கள் அல்லவா?

அது வெறும் மாயை. நீ மட்டுமே அதுவும் இக்கணத்தில் மட்டுமே நிஜம். ஏனையவை எல்லாம் உன் மனம் உருவாக்கிய மாயைகளே.

அப்படியானால் காலம்? என் கடந்தகால ஞாபகங்கள்?

காலம் என்பது ஒரு மாபெரும் மாயநதியே. உன் மனம் உருவாக்கிய மாயையே இந்தக் காலம். இதோ இந்தக்குரங்கு, அந்த மானிடப்பொறி, இந்தக் கொரோனா வைரஸ், உன் தாய், தந்தை, பாட்டன், பாட்டி, பூட்டன், பூட்டி, குழந்தை, குட்டி, உன் தாரம், இந்தத் தாய்வீடுப் பத்திரிகை, அதை வாசிக்கும் வாசகர்கள் எல்லாமே வெறும் தோற்ற மயக்கங்களே. இவையெல்லாவற்றையும் படைத்தவன் நீயே. அதைக் காப்பவனும் நீயே அதை அழிக்கப் போகின்றவனும் நீயே. ஆம் உன்னைப் பொறுத்தவரை நீ அழிந்தவுடன் உன்னால் படைக்கப்பட்ட இவ்வுலகும் அழிந்துவிடும். எனவே நீயே உன் இவ்வுலகின் கடவுளானவன்.



மாயைகள் விட்டு விடுதலையாகி நான் கடவுளாளேன்.

(முற்றும்)


suganthan.v@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players, Telephone-Computers
அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும்,
திருத்த வேலைகளுக்கும்...

416 264 6400

2641 Eglinton Avenue East
( Brimley & Eglinton)



# DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION



**Real Estate**
**HST**
**Tax Law**
**Family law**
**Immigration**
**Business law**
**Employment Law**
**Estate Planning and Last Wills**



**Vasuki Devadas**
***Barrister, Solicitor & Notary Public***
vasuki@vdlaw.ca

**Vina**yagamoorthy **Devadas CPA, CMA, MBA**
***Barrister & Solicitor***
devadas@vdlaw.ca

**1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6**
Next to RBC @ Kennedy & Ellesmere

**Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca**
**Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"**

# விசேட சலுகை விலையில்




SMART
HOME
MONITORING

UNLIMITED
**INTERNET**
TV - HOME PHONE



**தமிழில் உரையாட அழையுங்கள்**
**சுந்தர் சின்னத்தம்பி**
Rogers Local Area Advisor
**416.908.6845**
puvanendran.sinnatha@rci.rogers.com

ROGERS™

# நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

# உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.


அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

## வருமுன் காப்பதே சிறந்தது

**தயா PK கந்தையா** BAS, LLB (Hons)
வழக்கறிஞர்

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

**416-333-1001**
(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திருப்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)



COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN: [redacted] Plaintiff

- AND - [redacted] Defendant

**STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)**

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages:

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

SPECIMEN

**NOTICE OF SALE UNDER CHARGE**

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] PT BLK 43 66M2131, PTS 15, 16, 17, 18 & 19 66R15502 AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION D203234 SCARBOROUGH , CITY OF TORONTO

PIN [redacted], Toronto, Ontario

Municipally known as: [redacted] M1V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

| | |
|---|---|
| Principal Balance | $70,000.00 |
| Interest to October 22, 2019 | $6,928.00 |
| Pre-Payment Interest Penalty | $2,598.00 |
| NSF Fee | $1,200.00 |
| Administration Fee | $1,500.00 |
| Statement Preparation Fee | $475.00 |
| Legal Fees and Disbursements to the date of this notice | $2,500.00 |
| TOTAL | **$85,201.00** |

SPECIMEN

(such amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be proper), together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

**AND UNLESS** the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

**THIS NOTICE** is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

**DATED** at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]
By its solicitors

[redacted]
Barrister & Solicitor

# KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law
Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting



**Thaya PK Kandiah** BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public

# NO MEDICAL
# UP TO $500,000

- ✓ $0 first month's premium
- ✓ No medical exams
- ✓ Simple and straightforward
- ✓ 18-80 years can apply

**MEDICAL INUSRANCE FOR SUPER VISA**

**100% REFUND IF VISA DENIED**






**Sritharan Thurairajah**

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale · iA Financial Group · Canada Protection Plan Simply Peace of Mind

Are you getting Million Dollar advice

- digi Media -

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation

Call me more details...




வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623

**Rambo Tharmalingam**

Mortgage Agent Licence # M08008479

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

**647-290-3416 / 416-543-1111**

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526) www.lifeplaninvestments.ca 416-894-2009
Download Free MyLIFEPLAN App
App Store Google Play

COURTYARDS DENTAL CENTRE
Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்
Dr. Annahvathany Sivakumaran, DMD
Dr. வதனி சிவகுமாரன்
Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com
அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
All Procedures including:
• Braces • Cosmetic Dentistry • Root Canal Treatment
• Implants • Wisdom Tooth Extraction • Oral Diseases
2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan,
(Keele & Major Mackenzie) Parking available

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E. Scarborough, ONM1S 5H6

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

CUSTOM BUILT HOMES COMING SOON
2019 SUMMER CLOSING • DETACHED HOMES
MEADOWVALE RD AND ELLESMERE RD
2 CAR GARAGE • 4 BEDROOMS • 4 WASHROOMS
NO HOMES AT THE BACK • 4 CAR PARKING
30 MINS WALK TO U OF TORONTO SCARBOROUGH
MORE INFO CALL 416-670-6467

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

உங்கள் இல்லக் கனவுகளை நிஜமாக்கிட ...
GAJAN MAHAKANAPATHY
SALES REPRESENTATIVE B.Sc. MBA
416.999.2777
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Realtorgajan.com
905.239.9222 Info@realtorgajan.com

DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan BDS, MFDS, FAGD
3150 Eglinton Ave E, Unit -5
Scarborough
Markham & Eglinton
416.264.3232
3351 Markham Rd, Unit-129
Scarborough
Markham & Steeles(Red Building)
416.609.2022

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir: 416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Prograss Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk